ஊழியம் மற்றும் தலைமைத்துவ பயிற்சி பாட திட்டங்கள்

நிலை : **ஊழியர்**

பாட புததகம் எண் : 15



நிலைகள்:

5. **ஊழியர்**
4. **தலைவர் / போதகர்**
3. **குழு அல்லது பராமரிப்புத் தலைவர்**
2. **சீஷர்கள்**
1. **ஆரம்ப நிலையில் உள்ளவர்**

வேத பாட திட்டங்கள் கிறிஸ்துவுக்குள் ஒவ்வொரு விசுவாசியும் ஆவிக்குரிய முதிர்ச்சியில் வளர்ந்த ஊழியராகவும் மற்றும் செயல்பாட்டு திறமையில் உயரவும், செயல்பாட்டு திறமையுள்ள ஊழியத்தை பெறவும் !!!

தன்னில் தானே படித்துக்கொள்ளவும், அதே வேளையில் மற்றவர்களுக்கு போதிப்பதற்கும் எளிதானது !!!

ஊழியம் மற்றும் தலைமைத்துவ பயிற்சி பாட திட்டங்கள்

நோக்கம்:

→ ஒன்றான மெய்தேவனாகிய அவரை அறிந்துக் கொள்ளுதல்
(வளருதல் / முதிர்ச்சியடைதல்)

- யோசுவா1:8, ''இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடத்துகொள்ளுவாய்."

- 2 பேதுரு 3:18, "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்."

- 2 தீமோ. 2:15, "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு."

- கொலோ. 1: 27b-28, "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்."

→ பிறர் அவரை அறிந்துக் கொள்ள செய்தல்
(பெருகுதல் / இனப்பெருக்கமடைதல்)

- 2 தீமோ. 2:2, "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி."

- 2 தீமோ. 3:16,17, "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது."

- எபே.2:10,"ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்."

- 2 பேதுரு. 1:8, "இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது."

கொள்கை: ''சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது!'' (ரோமர்.11:36)

(அறிவிலே அதிகரித்தல்; குணாதிசயத்தில் முதிர்ச்சியடைதல்; ஆவிக்குரிய வரங்களை உபயோகித்தல்)

அட்டவணை / பாட புததகம் எண் : 15

எண்		பகக.
•	ஊழியம எப் படி பெருக முடியும் (4 அதிகாரங் கள்) (அதிகாரம் 1: சபை வளர்ச்சியும், சபை நிறுவுதலும், அதிகாரம் 2: சிறு குழுக்கள் பற்றிய வேதாகம கருத்து, அதிகாரம் 3: இயேசு எவ்வாறு சீஷர்களை உருவாக்கினார், அதிகாரம் 4: சபை நிறுவுவோர்களுக்கான பயிற்சி வகுப்புகள்)	4
•	செய்தி தொடர்பு: ஆக்கப்பூர்வமான விளைவு மற்றும் தெளிவு தேவை	26
•	தரிசனத்தின் முக்கியத்துவம்: உந்தும் சக்தி	41
•	திறமையுள்ளவர்களாக இருப்பதற்கு நேரத்தை நிர்வகித்தல்	60
•	மூன்று வித தலைமைத்துவ அமைப்பு மதிப்பீடு செய்தல்: நீங்கள் எதில் பொருந்துவீர்கள்?	67
•	ஆர்வமூட்டுதலின் (ஊக்கமூட்டுதலின்) தத்துவங்கள்	70
•	முன்னேறுவதற்கும், வெற்றியடைவதற்கும் தெய்வீக ஆர்வமூட்டுதல் தேவை	88
•	கிறிஸ்துவின் கீழ் தலைவனென்னும் அதிகாரம்	106
•	ஆக்கப்பூர்வமான, வலுவான, ஐக்கியமுள்ள ஊழியக் குழுவை எப்படிக் கட்டுவது?	124
•	குழு ஊழியம் : கருத்தும், வல்லமையும்	132
•	புதிய ஏற்பாட்டில் குழு ஊழியம்	137
•	வெற்றிக்கு பன்னிரண்டு அடிப்படை குழு தத்துவங்கள்	149
•	பகிர்ந்தளிக்கும் கலையும், கணக்கொப்புவித்தலும்	154
•	கிருபை மற்றும் அபிஷேகம் - இரண்டும் தேவை	172
•	ஒருவருடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம்	186
•	வேலைக்காரத்துவம்: தலைவர்கள் வாழ்நாள் முழுவதும் பின்பற்றக்கூடிய மாதிரி	202
•	பிரச்சனைகள் மற்றும் அழுத்தங்களை கையாளுதல்	205
•	எதிர்மறைகளை வேதாகம நோக்கில் கையாளுதல்	213
•	மன்னிக்கும் ஆவி தலைமைத்துவத்தில் தேவைப்படுகிறது	221
•	முரண்பாடுகளை தீர்க்கக்கூடிய சில வேதவசன திறவுகோல்கள்	224
•	சபை ஒழுங்குமுறைப்படுத்துதல்: எப்போது? ஏன்? எப்படி?	229
•	மாறுதல் என்னும் சவாலை எதிர்கொள்ளுதல்	246
•	மாறுதலை சரிபார்க்கும் பட்டியல்	262

ஊழியம் எப்படி பெருக முடியும்

அதிகாரம் ஒன்று – சபை வளர்ச்சியும், சபை நிறுவுதலும்

இந்த இரண்டு பாடங்களும் மிக நெருங்கிய தொடர்புள்ளவைகளும், தேவனுடைய இருதயத்தில் மிக விசேஷமான இடத்தை பெற்றுள்ளவைகளாகும். இவை இரண்டும் இயேசுவின் இரட்சிக்கும் அறிவின் இடத்தில் மக்களை கொண்டு வருவதில் கருத்துடையவைகள். சபை வளர்ச்சியும், சபை நிறுவுதலும், ஜனங்களை தேவனிடத்தில் கொண்டு வருவதிலும், அவர்களை கிறிஸ்துவின் சரீரத்தில் சேர்ப்பதிலும் கருத்துடையவைகள். வலுவான, வளம்பெற்ற சபைகள் சிறிய போராடும் ஒன்றாக இல்லாமல், புதிய சபை கூடுகைகளை நிறுவக்கூடிய திறமையுள்ளவைகள் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். அவைகள் பொதுவாக மிகவும் அதிகமான மனிதஆற்றல் மற்றும் நிதி ஆதாரங்களை அளிப்பவைகளும், தேவனுடைய இராஜ்ஜியம் விரிவடைய தரிசனமும், விருப்பமும் கொண்டவைகளும், அப்படி செய்ய வலுவான நிலையில் உள்ளவைகளுமாகும்.

எனவே, தங்களுடைய சபையார் எண்ணிக்கையிலும், ஆவிக்குரிய ரீதியிலும் வளர்ச்சியடைவதை பார்க்க மற்றும் புதிய சபைகூடுகைகள் உருவாக்க தங்களுடைய அங்கத்தினர்களையும், ஆதாரங்களையும் உபயோகப்படுத்த ஒவ்வொரு போதகரும், சபையும் தேவனுக்கு கீழ் விருப்பமும், நோக்கமும் உடையவர்களாக இருக்க வேண்டும். ஒரு சபை வளர்ச்சியடைந்துள்ளது என்பதை சுட்டிக்காட்ட சிறந்த முறைகளில் ஒன்று எதுவென்றால் எப்போது அந்த சபை தன்னில் தானே இனப்பெருக்கமடைந்து, புதிய சபைகூடுகையை நிறுவி, நிறுவப்பட்ட சபை முதிர்ச்சி நிலையை அடைந்து தன்னைத் தானே கவனித்துக் கொள்ளும் நிலை வரும்போதாகும்.

1. <u>போதகர்களும், தலைவர்களும் வளர்ச்சியின் திறவுகோல்கள்</u>

நான் இந்த உண்மையை அதிகப்படியாக வலியுறுத்த முடியாது. எழுப்புதலுக்கும், சபை வளர்ச்சிக்கும் மற்றும் சபை நிறுவுதலுக்கும் மறுக்கமுடியாத காரணர் தேவன் என்பது தெளிவு. அவருடைய உதவியும், ஆசிர்வாதமும் இல்லாமல் நம்முடைய எல்லா முயற்சியும் வீணாகி விடும். விதைக்கிறவன் ஒருவன், நீர் பாய்ச்சுகிறவன் ஒருவன், ஆனால் விளையச் செய்கிறவரோ தேவன் (1கொரி 3:6). சுவிசேஷ வேலையில், மனித கருவிகள் மூலமாகவே கிரியைச் செய்ய தேவன் தெரிந்துக் கொண்டார். இந்த முக்கியமான காரியத்தில் அவரோடு இணைந்து வேலை செய்யும் படி அவர் நம்மையே சார்ந்துள்ளார். ஒருவர் இவ்வாறு சிறப்பாக சொல்லியுள்ளார், "தேவன் இல்லாமல் நம்மால் முடியாது, நாம் இல்லாவிட்டால் தேவனாலும் முடியாது."

<u>எனவே, ஒவ்வொரு சபை தலைவரும் சீரிய பொறுப்புகளை அளிக்ககூடிய தலைமைத்துவத்தை உடையவர்களாகவும், சபையானது சாட்சிபகர்வதிலும், நற்செய்தியை பரப்புவதிலும் செயல்பாடும், விளைவும் உடையவர்களாக மாற உற்சாகப்படுத்தி தூண்டி விடுகிறவராக இருக்கவேண்டும்.</u> இந்த உண்மையை நாம் கருத்தில் கொள்ளும்போது, தேவன் ஒவ்வொரு போதகர் மற்றும் தலைவருக்கு எப்படிப்பட்ட உன்னத சிலாக்கியத்தையும், எப்படிப்பட்ட சிறந்த பொறுப்புகளையும் தந்திருக்கிறார் என்பதை உணர்ந்துக் கொள்கிறோம். நாம் பொறுப்புகளை தொடங்கி நிறைவேற்றுவதற்கு, நாம் முழுவதும் சார்ந்துக்கொள்ளுவதற்கான பெலத்தையும், தூண்டுதலையும் தேவன் ஒருவர் மாத்திரமே நமக்கு அளிக்கமுடியும்.

நாம் நெருக்கடியான காலத்தில் வாழ்ந்துக் கொண்டு இருக்கிறோம். அது மனிதகுலத்தை எரிச்சலுண்டாக்க சோதிக்கிறது. மிக கொடிய மற்றும் குறுகிய காலத்தில் அனைத்தும் நிறைவேற்றும் அழுத்தமுள்ள நாட்களாகிய இவைகளில் ஆணும், பெண்ணும் முழு உலகத்திலும் தன்னை மிஞ்சிய பதில்கள் மற்றும் தீர்வுகளை தேடுகிறார்கள். அதே வேளையில், தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு இது அறுவடை காலமாகும். இதுவரை சுவிசேஷத்திற்கு கதவை திறக்காத அநேக நாடுகள் கதவை திறக்கின்றது. அநேக நாடுகளில் இயேசு கிறிஸ்துவின் சபையானது அசூர வேகத்தில் விரிவாக்கமடைகிறது விசேஷமாக சில ஆசியா நாடுகளில். தேவன் ஊழிய சால்வையை ஆண், பெண் மீது வைத்து, அவர்களை வல்லமையாக உபயோகித்து, இந்த சந்ததியை, இயேசு கிறிஸ்து இரட்சகர், ஆண்டவர், இராஜா என்ற செய்தியால் சந்திக்கிறார்.

2. தலைவர் தன்னுடைய உடன் ஊழியரை உற்சாகப்படுத்த வேண்டும்

ஒரு தலைவர் தன்னை சுற்றி தலைமைத்துவ நபர்களை எழுப்பி, அவர்களை குழுவாக செயல்படுவதற்கு எல்லா வழிமுறைகளையும் ஆயத்தப்படுத்துவது மிக முக்கியமானதும், ஆக்கப்பூர்வமானதும் என்பதில் நான் தனிப்பட்ட விதத்தில் உறுதிப்படுத்தப்பட்டவனாக இருக்கிறேன். ஊழியத்திலுள்ள எல்லா பொறுப்புகளையும் தனிப்பட்ட ஒருவரால் போதுமான முறையில் சமாளிக்கமுடியாது. அதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் தேவைப்படுகிறார்கள். எனவே எந்த ஒரு தலைவனின் முதன்மையான பொறுப்பு என்னவென்றால், ஜெபத்துடன் உண்மையான உடன் ஊழியர்களை கூட்டிச்சேர்ப்பதாகும். அந்த ஊழியர்களுக்கு போதகராக பணியாற்றுவது தலைவனின் மிக முக்கியமான செயல்பாடாகும். தலைவன் அவர்களை தேர்வு செய்து, உபதேசித்து, பயிற்சியளித்து, உற்சாகப்படுத்தி, சில பொறுப்புகளை அவர்களுக்கு பகிர்ந்தளித்து அவர்களை செயல்பட வைக்க வேண்டும். இப்படி ஊழிய குழுவை திறம்பட மேய்த்தால், அவர்கள் தங்கள் தருணத்தில் சபை கூடுகைக்கு போதகராக இருக்க முடியும். இந்த வழியாக தலைமைப் போதகர் தன்னுடைய சொந்த திறமைகளை பெருக்கி, தனிப்பட்ட முறையில் சந்திக்கக்கூடிய நபர்களை காட்டிலும் அநேக ஆயிரம் ஜனங்களை சந்தித்து ஊழியம் செய்ய முடியும். கூடுதலாக, அவருக்கு கீழ் இருக்கும் மேய்ப்பர்கள் ஊழியத்தின் பல்வேறு பகுதியிலும் விலையேறபெற்ற அனுபவங்களை பெற்று, தாங்களாகவே ஊழியப் பொறுப்புகளை எடுக்கவேண்டிய தருணம் வருகின்ற போது, அவர்கள் சிறந்த முறையில் உருவாக்கப்பட்டவர்களாகவும், அனுபவம் வாய்ந்தவர்களாகவும் இருப்பார்கள். எவ்வளவு சீக்கரத்தில் இப்படிப்பட்ட ஊழிய குழுவை கட்ட தொடங்குகிறமோ அவ்வளவு நல்லது. சபை கூடுகை நிறுவப்பட்ட உடனே இப்படிப்பட்ட செயலாக்கத்தை தொடங்குவது மிக பொருத்தமாக இருக்கும். ஒரு போதகரால் எல்லா பணிகளையும் கவனிக்கக்கூடிய அளவில் அங்கத்தினர்களின் எண்ணிக்கைக் குறைவாக இருந்தாலும், ஒரு தலைவர் தன்னை சுற்றி ஒரு குழுவை கட்ட ஆரம்பிக்க திட்டமிட வேண்டும். அந்த பயன்படுத்தக்கூடிய தலைவர்களிடம் சில பொறுப்புகளை பகிர்ந்துக் கொள்ள ஆரம்பிக்க வேண்டும். தலைவரின் முதன்மையான கவனம் அந்த குழுவை வலிமையான உண்மையுள்ள ஊழியக் குழுவாக கட்டுவதில் இருக்க வேண்டும். அவர்கள் விசுவாசிகளின் கூடுகையை திறம்பட மேய்ப்பார்கள் என்று விசுவாசிக்க வேண்டும்.

பொறுப்புகளை பகிர்ந்தளிப்பது மற்றும் வேலைப்பளுவை பகிர்ந்து கொள்ளுதல் என்பது நல்ல விளைவுகளை உண்டாக்ககூடியது என மோசே கண்டான். மோசேயின் மாமனாகிய எத்திரோ அவர்கள் வனாந்திரத்தில் அலைந்த ஆரம்ப நாட்களில் இப்படிப்பட்ட ஞானமிக்க திட்டத்தை மோசேக்குத் தெளிவுபடுத்தினான். இப்படி மோசே ஊழியத்திலுள்ள சில கடின பாடங்களை கற்றுக்கொள்ள ஆரம்பித்தான். விவேகம் மற்றும் திறமையாக பொறுப்புகளை பகிர்ந்து கொள்ளுதல் மூலம் தனிப்பட்ட முறையில் தான் கவனிப்பதைக் காட்டிலும் அதிகமான ஜனங்களை பராமரிக்க முடியும் என்பதை மோசே கண்டுபிடித்தான்.

3. சாட்சிபகர்தலின் முக்கியத்துவத்தை தொடர்ந்து வலியுறுத்துதல்

சகல விதமான வலியுறுத்தல்கள் மற்றும் பொறுப்புகளினால் மிக முக்கியமான காரியங்கள் புறக்கணிக்கப்படுதல் என்ற இடத்திற்கு ஊழியத்தில் வருவது மிக இலகுவானது. இயேசு கிறிஸ்து இழந்துப் போனவர்களை தேடவும் இரட்சிக்கவுமே உலகத்திற்கு வந்தார். இதுவே அவருடைய முதன்மையான பணி. உயிரோடு இருக்கிறவர்களுக்கும் மரித்துக் கொண்டு இருக்கிறவர்களுக்கும் இதுவே அவருடைய பிரதான நோக்கமாயிருந்தது. அவர் செய்த எல்லாம் இந்த முடிவை நோக்கியே இருந்தது. இதே போன்ற முறையில் இன்று எல்லா விசுவாசிகளுக்கும் இதுவே மிக முக்கியமான பணியாக இருக்க வேண்டும். சபையானது தேவனுடைய அன்பையும் அவருடைய அற்புதமான இரட்சிப்பின் திட்டத்தையும், வெளியே வந்து உலகத்திற்கு சொல்ல வேண்டும்.

நாம் மற்ற காரியங்களை மிக முக்கியமென்று கருதினாலும் கோடிட்டு காட்டப்படுவதும், அஸ்திபாரமானதும், எல்லாவற்றிலும் மிக முக்கியமானதும் எதுவென்றால் எல்லா மனித குலத்திற்கும் தேவனுடைய அன்பையும், அவர்களுடைய நித்திய வாழ்விற்கு அவர் ஏற்படுத்தியுள்ள திட்டத்தை சொல்லுவதாகும். துரதிஷ்டவசமாக, அநேக சபைகள் உள்நோக்க பார்வையுடையவைகளாகவும், தன்னை குறித்தே எண்ணமுடையவைகளாகவும் மாறிவிட்டன. அவர்களுடைய சபை நிகழ்ச்சிகளும்,

செயல்பாடுகளும், உலகத்திற்கு கிறிஸ்துவை பறைசாற்றுவதை விட மிக முக்கியமானதாக மாறிவிட்டது. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து உலகத்திற்கு வந்தார் என்ற அடிப்படை தரிசனத்தை ஒருபோதும் நாம் இழந்துப் போகக் கூடாது. அவர் பேதுருவிடம் இவ்வாறு சொன்னார் அவன் உண்மையாக இயேசுவை பின்பற்றினால் மனிதரை பிடிக்கிறவர்களாக மாற முடியும். லூக்கா 5:10.

இந்த நோக்கத்தை ஆக்கப்பூர்வமாக அடைவதற்கு, போதகர் பிரசங்கிப்பதோடும் மற்றும் போதிப்பதோடும் நின்று விடாமல் அவைகளை செயல்முறைப் படுத்திக் காட்டுபவராக இருக்க வேண்டும். போதகர் குதூகலமாய் உற்சாகமூட்டும் மாதிரியாக மாறி, கிறிஸ்துவை உலகத்திற்கு கொண்டு வர அர்ப்பணித்தவராக இருக்க வேண்டும். ஊழியத்தின் இந்த கருத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்த, சில முக்கியமானவற்றை நினைவில் கொள்ள தருகிறேன். " உலகத்தை கிறிஸ்துவிடம் கொண்டு வருவதைக் காட்டிலும் கிறிஸ்துவை உலகத்திற்கு கொண்டு வருவதே மிக முக்கியமானதாகும்". ஆரம்பத்தில் இந்த இரண்டு கருத்துகளுக்கிடையே சிறிய வித்தியாசமே இருப்பது போல தெரிந்தாலும் உண்மையிலே மிக பெரிய வித்தியாசம் உண்டு.

கிறிஸ்துவை உலகத்திற்கு கொண்டு வருவதில் நமது எண்ணம் கிறிஸ்துவில் ஆரம்பிக்கிறது. நம்முடைய எண்ணங்களையும் கவனங்களையும் அவரில் நாம் ஒருமுகப்படுத்துகிறோம். அவரோடு நேரம் செலவழிக்கிறோம். அவருடைய முக்கியத்துவத்தை நம் வாழ்வில் வலியுறுத்துகிறோம். நாம் முற்றிலும் அவரை சார்ந்துள்ளோம் என்பதை அங்கிகரிக்கிறோம். எதிலும் எல்லாவற்றிலும் அவரை வெளிக்கொண்டு வரும் காரியங்களை ஆரம்பிக்க முயற்சிக்கிறோம். நமது வாழ்வின் மையம் அவரே, நம்முடைய வாழ்வு அவரை சுற்றியே அமைந்திருக்கிறது. நம்முடைய இருதயம், மனது, நம்முடைய வாழ்க்கை, பெலன் எல்லாம் அவரை நோக்கியே இருக்கிறது. நம்முடைய எல்லா முயற்சிகளிலும் அவரே ஆரம்பமாயிருக்கிறார். அவர் தொடங்காத ஒன்றையுமே முயற்சிப்பதில்லை.

உலகத்தை கிறிஸ்துவிடம் கொண்டு வருதல் என்ற கருத்து சற்று வித்தியாசமானது. இந்த முயற்சிகளின் மையம் நமது சிந்தனையை இயேசுவின் மேல் இல்லாமல், உலகத்தின் மேல் இருக்க செய்யும். ஆரம்பம் முதலே நமது நினைவு உலகத்தின் மேலும் அதனுடைய பிரச்சனைகள், பெருந்துயரங்கள் மேலும் இருக்கும். நமது ஆரம்பமும், உடனடியான கவனமும் இதன் மேலே இருக்கும். நமது எண்ணங்களின் முழுமையும் உலகத்தின் மேலிருந்து, கிறிஸ்துவின் மேலிருப்பதற்கு பதிலாக திரளான மக்கள் மேலிருக்கும். பழங்கால பேச்சு வழக்கத்தின் படி, நாம் 'குதிரைக்கு முன்பாக வண்டியை கட்டுகிறோம்". நாம் பின்னான காரியங்களை முன்பாக போடுகிறோம். இயேசுவுக்கு உலகத்தை பற்றித் தெரியும். அவர் மனித குலத்திற்காக வாழ்ந்து மரிப்பதற்காக வந்தார். எல்லா ஜனங்களின் இரட்சிப்பிற்காக விலை கிரயம் செலுத்தினார். நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் போது, தினமும் அவருடன் ஐக்கியத்தை அனுபவிக்கிறோம். அவருடைய பெலத்தையும், வல்லமையையும் பெற்று, அவர் ஊழியம் செய்ய விரும்புகிற ஒவ்வொருவருக்கு நேராக நம்மை நடத்துகிறார். இந்த வழிகளில் நம்முடைய எல்லா முயற்சிகளும் அவரில் ஆரம்பித்து முடிவாக அவரை நம்மிலும் நம்மை சுற்றியிருக்கிற உலகத்திற்கும் கொண்டு வருகிறது.

4. ஒவ்வொரு சபை ஆராதனையிலும் இரட்சிப்பை வலியுறுத்துதல்

ஆத்தும ஆதாயம் செய்யும் மையமாக மாற வேண்டும் என்பதே ஒவ்வொரு சபையின் குறிக்கோளாக இருக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் நாம் கூடி வரும்போது நாம் உயிரோடு இருப்பதற்கு இதுவே உண்மையான காரணம் என்பதை உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும். நாம் மற்றவர்களை கொண்டு வரவேண்டும் என்பதற்காக நம்மை தம்முடைய இராஜ்ஜியத்திற்கு கொண்டு வந்தார். இது என்ன நாள், என்ன நோக்கத்திற்காக கூடி வந்துள்ளோம் என்பதை மறந்துவிட்டு, தருணத்திற்காக எப்பொழுதும் விழிப்புடன் இருந்து, ஜனங்கள் இயேசுவை அறிந்து இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ள தருணத்தை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். ஒவ்வொரு ஆராதனையிலும் கட்டாயம் சுவிசேஷ பிரசங்கத்தை பிரசங்கித்து, முழு கூட்டமும் இரட்சிக்கப்படாதவர்களுக்காக நடத்தப்பட வேண்டும் என்பதை இது குறிக்கவில்லை. நாம் கூடிவருகின்ற நோக்கம் எதுவாக இருந்தாலும், இயேசுவை இரட்சகராக அறிவிக்க சிறிய நேரத்தை செலவழித்து,

சில நபர்கள் அழைப்பிற்கு செவிசாய்த்து இயேசுவின் மேல் விசுவாசம் வைத்து தேவனோடு சமாதானமுள்ளவர்களாக மாற சிறிய தருணத்தை எப்பொழுதும் தரலாம் என்பதே இது குறிக்கிறது.

இது ஜெபக்கூட்டங்களிலும் அல்லது கர்த்தருடைய பந்தியிலும் நடைபெறலாம். இது விவாக ஆராதனையிலும் அல்லது அடக்க ஆராதனையிலும் நடைபெறலாம். கிறிஸ்துவண்டை ஆத்துமாக்களை ஆதாயம் செய்தல் என்ற கருத்தை பழக்கப்படுத்தி (இசைந்து) விடும்போது, நமது வழியில் எத்தனை விதமான தருணங்கள் வரும் என்பது ஆச்சரியப்படத்தக்கதாக இருக்கும்.

5. ஒவ்வொரு சபை அங்கத்தினர்களும் சாட்சிபகர்கின்றவராக இருக்க வேண்டும்

ஒரு போதகர் ஒரு சமுதாயத்தை ஒரு போதும் தனியாக ஆதாயப்படுத்தி விட முடியாது. அந்த சமுதாயத்தை பயனுள்ள முறையில் சந்திக்க அவருக்கு உதவியாட்களும், உடன் ஊழியர்களும் தேவை. கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களை குறித்து ஒவ்வொரு சபை அங்கத்தினர்களும் விழிப்புள்ளவர்களாக, உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர்களுக்கு இன்னும் இயேசுவிடம் திரும்பாதவர்களிடம் தொடர்பு கொள்வதற்கு போதிக்கப்பட்டு, பயிற்சியளிக்கப்பட வேண்டும். இரட்சிக்கபடாத நபர்களை உணர்வோடும் இரக்கத்தோடும் சந்திப்பதற்கு எல்லாவிதத்திலும் நாம் உற்சாகப்படுத்தியாக வேண்டும். நம்முடைய கிறிஸ்துவுக்காக சாட்சிபகர்தல் என்பது வெறுமனே அவர்களுக்கு பிரசங்கிப்பது என்பதை விட சிறந்ததாக இருக்கவேண்டும். பாவிகளை நேசிக்கும் அன்பை தேவன் நமது இருதயத்தில் தருவார் என்பதை உண்மையாக விசுவாசிக்க வேண்டும். இன்னும் கிறிஸ்துவுக்கு வெளியே இருப்பவர்களை அன்பாலும் இரக்கத்தினாலும் சந்திப்பதற்கு ஒவ்வொரு விசுவாசியும் போதிக்கப்பட்டு உற்சாகப்படுத்தப் பட வேண்டும். சரீரத்தின் ஒவ்வொரு இணைப்பும், ஒவ்வொரு உறுப்பும் பயனுள்ள முறையில் ஒன்றாக வேலை செய்து, சரீரம் பக்தி விருத்தியடையவும், முழு நிறைவுடையதாகவும் வளர வேண்டும். (எபே.4:16)

6. ஒவ்வொரு சபை ஆராதனையையும் எவ்வளவு கவர்ச்சிகரமானதாக மாற்ற முடியுமோ அவ்வளவு மாற்றுங்கள்.

கம்பியூட்டர் உலகம் நமக்கு சில சிறந்த வார்த்தை பதங்களை தந்துள்ளது. அதில் ஒன்று "உபயோகிக்க நண்பரானவர்"(user friendly), அது எதை குறிக்கிறதென்றால், கம்பியூட்டரும் அதனுடைய நிகழ்ச்சிகளும் (மென்பொருள்களும்) அதனுடன் இணைந்து கொள்வதற்கு எளிதானது. புதியவர்கள் பயப்பட தேவையில்லை, எளிதாக புரிந்துக் கொண்டு, எளிதாக உபயோகிக்கலாம். இந்த உதவியான வார்த்தை பதம் நமது சபைகளில் கொண்டு வரப்பட்டு, நமது சபை ஆராதனைகளும், செயல்பாடுகளும் இணைந்துக் கொள்ளுவதற்கு எவ்வளவு எளியதாக மாற்ற முடியுமோ அவ்வளவு எளிதாக்க நம்மாலான எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். அவர்களை நண்பர்களாக்கி, ஆரம்பிக்காத அவர்களை எவ்வளவு தூரம் அழைக்க முடியுமோ அவ்வளவு தூரம் அழைக்க வேண்டும்.

நாம் சில சமயங்களில் நம்மை அறியாமலே நமது வாழ்க்கை முறையில் மிகவும் மத சம்பந்தப்பட்டவர்களாக மாறி விடுகிறோம் என்பதை எப்போதும் உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும். இந்த குணாசதிசயம் நமது சபை செயல்பாடுகளில் எடுத்து செல்லப்பட்டு, மத சம்பந்தமான கலாச்சாரத்தை உருவாக்கி விடுகிறோம். அது கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்கு புதிதாகவும், புரிந்துக்கொள்ளுவதற்கு கடினமாயிருக்கிறது. இப்படிபட்ட கலாச்சார பெருமைக்குரியவைகளை பரிசுத்தம், தூய்மை என்று பல சபைகள் தவறாக புரிந்துள்ளன. மதம் மற்றும் மதம் சம்பந்தமான அன்றாட காரியங்கள் தான் தேவனின் விருப்பமும், கனம் பண்ணுகிறதுமாயிருக்கிறது என்ற தவறான கருத்தை விரிவாக்கி உள்ளனர். எப்படியிருந்தாலும், அப்படிபட்ட காரியங்கள் தேவனிடமோ, இரட்சிக்கப்படாத ஜனங்களிடமோ விரும்பதக்க கருத்து பதிவை உண்டாக்காது. இப்படிபட்ட மத சம்பந்தமான செயல்பாடுகள் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களை குழப்பமடைய செய்கிறது. நாம் இயற்கையான முறையில் தோன்றினால் அதிகமான ஜனங்களை மிக எளிதாக பயனுள்ள விதத்தில் தொடர்பு கொண்டு சம்பாஷனை செய்யலாம்.

சபை ஆராதனைகள் நேர் மறையானதும், மகிழ்ச்சிகரமானதும், பழகுவதற்கு இனிமையானதும், புரிந்துக்கொள்வதற்கு எளிமையாகவும் இருக்க வேண்டும். சபையும், அதன் ஆராதனையும், கொண்டாட்டங்களும் பட்டணத்திலே சந்தோஷமான கூடுகைகளாக இருக்க வேண்டும். ஜனங்களுக்கு எப்பொழுது எல்லாம் ஆறுதல், உற்சாகப்படுத்துதல், உறுதிபடுத்துதல் தேவைப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் வந்து செல்கிற இடமாக இருக்க வேண்டும். பாரங்கள் மாறிப்போகிற, துக்கக்கரமான இருதயம் சந்தோஷத்தினால் நிரப்பப்படுகின்ற இடமாக இருக்க வேண்டும். இயேசுவின் இரக்கத்தினால் நிரப்பப்பட்டு, அதை நிரூபித்துக் காட்டும் ஒரு கூட்ட ஜனங்கள் நடுவில் உடைக்கப்பட்ட இருதயங்கள் வந்து சுகத்தையும், பூரணத்தையும் பெற்றுக் கொள்ளும் பரிசுத்த ஸ்தலமாயிருக்க வேண்டும்.

7. உங்கள் அங்கத்தினர்களை ஆத்துமா ஆதாயப்படுத்துவதிலும், ஆலோசனை கூறுவதிலும் பயிற்றுவியுங்கள்

கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் ஏதாவது தேவனுக்காக செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் திறமையின்மையினாலும், அனுபவமின்மையினாலும், தைரியமின்மையினாலும் பயந்து விருப்பமில்லாமல் இருக்கிறார்கள். நாம் ஏன் பயிற்சி வகுப்புகளை நடத்தத் திட்டமிடக்கூடாது. வருடத்திற்கு இரண்டு முறையோ அல்லது காலாண்டுக்கு ஒரு முறையே நடத்தலாம். அதில் ஜனங்களை எப்படி கிறிஸ்துவண்டை நடத்துவது?, எப்படி ஜெபிப்பது?, எப்படி ஆலோசனை சொல்லுவது?, மற்றும் எப்படி பின் தொடர்பணி செய்வது? புதிதாகத் தெரிந்துகொண்ட விசுவாசத்தில் அவர்களை எப்படி உற்சாசப்படுத்துவது? என்று கற்றுக்கொடுக்க வேண்டும். உங்களுடைய அங்கத்தினரில் எவ்வளவுக்கு அதிகமான ஜனங்கள் இவ்வித செயல்பாடுகளில் பயிற்சி எடுக்கிறார்களோ அவ்வளவுக்கு அதிகமாக சபையானது வளரும். அதிகமாக பயிற்றுவிக்கப்பட்ட வேலையாட்கள் இருப்பதைக் குறித்து பயப்பட வேண்டாம். அதிகம் இருப்பது சிறந்தது. பயிற்சி முடித்தவுடன் அவர்களை அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபாடு கொள்ள எவ்வளவுதூரம் முடியுமோ அவ்வளவு முயற்சிக்க வேண்டும்.

8. சபை எல்லைக்கு வெளியே சுவிசேஷ செயல்பாடுகளை உபயோகியுங்கள்

இதுவரை நமது சபைகளையும், அதன் செயல்பாடுகளையும் எவ்வளவு கவர்ச்சிகரமானதாக, உபயோகிக்க நண்பரனான முறையில் உருவாக்க வேண்டும என்பதை பற்றி பேசினோம். இருந்தபோதிலும் சபை கூடுகின்ற இடத்தின் எல்லைக்கு வெளியே உற்சாகப்படுத்தி, ஒருங்கிணைத்து செய்யப்பட வேண்டிய வெளிப்புற சுவிசேஷ ஊழியத்தையும், அதன் மூலம் சபை அமைந்த சமுதாயத்தை சந்திப்பதின் முக்கியத்துவத்தையும் நான் வலியுறுத்தியாக வேண்டும்.

இதை மிகவும் பயனுள்ள வழியில் செய்வதற்கு வீட்டு கூட்டங்களை ஏற்படுத்தி, சபை அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்பட்ட பகுதியில் முறைசாரா விதத்தில் அதாவது நண்பத்துவ முறையில், விதிமுறை எதுவும் இல்லாமல் அங்கத்தினர் ஒருவருடைய வீட்டில் கூடுதலாகும். இப்படிபட்ட கூடுகைகள் மற்றொரு சபை ஆராதனையாய் மாறிவிடாதபடிக்கு கருத்தாய் இருக்க வேண்டும். சபை ஆராதனைகள் இருப்பது போல் அல்லாமல் வீட்டு கூடுகைகள் மிகவும் அதிகமாய் முறைசாரா விதத்தில் இருக்கலாம். சபை ஆராதனையில் கலந்துகொள்ளாத அநேகர் வீட்டு கூட்டங்களில் கலந்து கொள்வார்கள் என்பதால் முறைசாரா சூழ்நிலையை பாதுகாத்து, சபை ஆராதனையிலிருந்து வீட்டு கூட்டங்கள் வித்தியசமானதாக இருக்க வேண்டும். முறைசாரா, நண்பத்துவ, குடும்ப சூழ்நிலையில் காணப்பட முயற்சியுங்கள். அநேக மத சம்பந்தமான செயல்பாடுகளையும், அநேக சட்டதிட்டங்களையும் தவிர்க்க முயற்சியுங்கள். கூட்டத்தில் கலந்துகொள்கின்ற பல்வேறு ஜனங்களின் உண்மையான தேவைகள் சந்திக்க பட, நீங்கள் யாவரும் உதவி செய்யக்கூடிய வழிமுறை கண்டுபிடிக்க வேண்டும். பக்கத்து வீட்டாரையும், அந்த பகுதியில் அறிமுகமானவர்களையும் கலந்துகொள்ள அழைக்க வேண்டும். ஐக்கிய விருந்து, ஜனங்களை சந்தோஷிப்பிக்கும், மிக எளிதாக தளர்ந்து ஒய்வாக, சம்பாஷணைகளை அனுபவிக்கும், சமுதாய நட்புறவு ஏற்படும் நிகழ்ச்சியாக எப்பொழுதும் திகழும்.

கூடுதலாக வீட்டு கூடுகைகளுடன், இன்னும் அநேகமான பல்வேறு வழிமுறைகளில் கிறிஸ்தவ சாட்சிபகருதல் நடைபெறலாம். எல்லா சபை அங்கத்தினரும் ஜெபத்துடன் சிந்தனையில் புதிய வழிமுறைகளையும், திட்டமிடுதலையும் உடையவராக இருக்கும்படி உற்சாகப்படுத்த வேண்டும். அந்த ஸ்தல சமுதாயத்தில் நற்செய்தி பகர்ந்தளிக்க பல்வேறு வழிமுறைகளை காண்பிக்கும் படி பரிசுத்த ஆவியானவரிடம் கேட்க வேண்டும்.

9. சபை நிறுவுதலின் தரிசனத்தை வலியுறுத்துங்கள்

சபை நிறுவுதலின் தரிசனத்தை வலியுறுத்த ஆரம்பிப்பது வெகு சீக்கிரமானதும், மிக பின்தங்கியதுமல்ல. சபை கூடுகை புதிதாக ஆரம்பிக்கப்பட்டதாக இருந்தாலும், ஒருவேளை சிறியதாக இருந்தாலும், எதிர்காலத்தில் நீங்கள் அநேக சபைகளை ஆரம்பிக்கும் தரிசனம் உடையவராக இருக்கிறீர்கள் என்று ஜனங்கள் அறிவது நல்லது. சபை இப்படிபட்ட கருத்தோடு வளரும்போது தன்னை அறியாமலே அதற்காக ஆயத்தப்பட்டு இருப்பார்கள். தகுதி வாய்ந்த தலைவர்கள் பயிற்சியையும், அனுபவத்தையும் தேடி, அது அந்த தரிசனத்தில் அவர்களை பங்குக்கொள்ள வைத்து, அதன் நிறைவேறுதலுக்கு முக்கிய பங்கு வகிப்பார்கள்.

புதிய கூடுகை ஆரம்பிப்பதற்கு தேவன் ஏதாவது அடையாளத்தை காட்டுகின்றாரா என்று ஜெபத்துடன் விழிப்புடன் இருக்க வேண்டும். சபை இருக்கும் இடத்திலிருந்து சற்று தொலைவில் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள உங்கள் சபை ஜனங்கள் ஒருவருக்கொருவர் அருகாமையில் வாழ்வதை நீங்கள் காணும் போது புதிய கூடுகைகள் ஆரம்பித்தற்கான வாய்ப்புகளை சிந்தித்துப் பார்க்க ஆரம்பிக்க வேண்டும். அல்லது ஒருவேளை சபைக்கு அருகாமையில் மக்கள்தொகை பெருக்கத்தினால் ஏற்பட்ட விரிவாக்க பகுதியில். ஜெபத்துடனே சுவிசேஷம் பகிர்ந்துக்கொள்ளப்படுவதற்கான வழிமுறைகளை சிந்தித்து பார்த்து எப்படி புதிய கூடுகைகள் தொடங்கலாம் என்று சிந்திக்க வேண்டும்.

10. தலைவர்கள் பயிற்சி வகுப்புகளை ஏற்பாடு செய்யுங்கள்

ஒவ்வொரு தலைவனுக்கும் தங்களுடைய தகுதி வாய்ந்த தலைவர்களை உபதேசித்து, பயிற்சியளித்து உருவாக்குவதே மிக முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். முறைப்படுத்தப்பட்ட பயிற்சி வகுப்புகள் உற்சாகப்படுத்துவதற்கும், இதை செயல்படுத்துவதற்கும் சிறந்த வழியாகும். இந்த திட்டத்தை முன்னேற்றுவதற்கு நீங்கள் பொறுப்பு எடுத்துக்கொண்டு நீங்கள் தனிப்பட்ட விதத்தில் தொடர்ந்து ஈடுபாடு காட்ட வேண்டும். இது உங்கள் பயிற்சி தலைவர்களிடம் உங்கள் தரிசனத்தையும், தீராத தாகத்தையும் பகிர்ந்துக் கொள்ள ஒரு வாய்ப்பாகும். உங்கள் வாழ்க்கையை, உங்கள் தலைமைத்துவத்தில் ஊற்றிவிட ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி தருகின்றது. தலைமைத்துவ திறமைகள் ''பிடித்துக் கொள்வதற்கும்'' அதே வேளையில் ''கற்றுக்கொடுப்பதற்குமாகும்''.

இந்த பயிற்சி வகுப்புகள் ''ஆகாயத்தில் சிலம்பம் பண்ணும் இறையியல்'' பாடங்களாய் இராமல், ஆவிக்குரிய, வேதாகம, மற்றும் நடைமுறை பாடங்களாய் இருக்க வேண்டும். அவைகள் அடிப்படை கிறிஸ்தவ தலைமைத்துவ திறமைகளை வலியுறுத்துபவைகளாக இருக்க வேண்டும், குறிப்பாக ஆத்தும ஆதாயம், சபை வளர்ச்சி, சபை நிறுவுதல் இவைகளை வலியுறுத்த வேண்டும். எதை போதிப்பது, எப்படி உங்கள் தலைவர்களை, சவால்கள் நிறைந்த பணியான சுவிசேஷ பிரபல்யத்திற்கும், சபை நிறுவுதலுக்கும் ஆதாயத்தப்படுத்தக்கூடிய சில நடைமுறை யோசனைகளை கொடுக்கக்கூடிய சமநிலை பாடத்திட்டத்தை கண்டுபிடியுங்கள். திறமை வாய்ந்த சபை நிறுவுகின்ற வளர்ந்து வளரக்கூடிய தலைவர்களுக்கும், சபை ஊழியர்களுக்கும் உதவக்கூடிய பல்வேறு மற்ற பாடங்களை பின்பாக தொடர்ந்து சேர்த்துக்கொள்ளலாம். இதை பயனுள்ள விதத்தில் அடைவதற்கு நான் அநேக உதவக்கூடிய குறிப்புகளை கொடுக்கிறேன்.

அதிகாரம் இரண்டு – சிறு குழுக்கள் பற்றிய வேதாகம கருத்து

சபை வளர்ச்சிக்கும், சபை நிறுவுதலுக்கும் உரிய உண்மையான திறவுகோல் எதுவென்றால் சீஷத்துவத்தினால் ஆண்கள், பெண்கள் உள்ளிருக்கும் ஊழிய வரங்களை வளரச்செய்து ஊழியர்களின் எண்ணிக்கையை பெருக்குவது. எந்த ஒரு தனிப்பட்ட நபரும், எவ்வளவு திறமை வாய்ந்தவர் அல்லது வரம்பெற்றவராக இருந்தாலும் உண்மையான வளர்ச்சி, விரிவாக்கம் அடைவதற்கு தேவையான எல்லா பணிகளையும் நிறைவேற்ற முடியாது. போதக, சுவிசேஷக மற்றும் சபை நிறுவுகின்ற ஊழியர்களுக்கு பயனுள்ள விதத்தில் நிறைவேற்ற தேவைபடுகின்ற பல்வேறு வகையான தாலந்துகளும் வரங்களும் ஒரு மனிதன் ஒருங்கே பெற்றிருப்பது கூடாத காரியம். அப்படியே சில தனிப்பட்ட நபர்கள் அப்படிப்பட்ட வரங்களை உடையவர்களாக இருந்தாலும், ஒன்றுக்கு மேற்பட்ட மனிதர்கள் நிறைவேற்றக்கூடிய பணியை நிறைவேற்ற முடியாது. பத்து மனிதர்களின் வேலையை ஒருவர் செய்வதைக் காட்டிலும், பத்து மனிதர்களை தேர்ந்து எடுத்து பயிற்சியளித்து வேலைக்கு அமர்த்துவது சாலச்சிறந்தது.

ஊழிய வரங்கள் வளர்வதற்குரிய தேவைப்படுகிற இந்த விதமான பயிற்சியும், ஆயத்தங்களும் மிக சிறந்த முறையில் சிறு குழுவில் தான் செயல்படுத்த முடியும். அப்படிப்பட்ட சிறு குழுக்கள் அதிக கடத்தும் திறனுள்ளது.

- தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கூட்ட ஜனங்கள்
- உறவுகளை வளர்த்துக்கொள்ள நல்ல தருணத்தை தருகிறது
- தனிப்பட்ட நபர்களை கவனம் செலுத்த அதிக தருணம் தருகிறது
- கலந்து கொள்ளுதலுக்கும் ஒருவருக்கொருவர் செயல்புரிவதற்கும் அதிக தருணம் தருகிறது

ஆண்,பெண்களை சீஷத்துவம் பண்ணுவதிலும், அவர்களை ஊழியத்தில் ஆயத்தப்படுத்துவதிலும் பல அடிப்படை தேவைகள் அடங்கியிருக்கிறது. அவைகளில் சில பின்வருமாறு:

a: வாழ்க்கையை நெறிமுறைப்படுத்தி, குணாதிசயத்தை கட்டுகிறது.

ஊழியத்தை காட்டிலும் வாழ்க்கை மிக அதிகமாக முக்கியத்துவம் வாய்ந்தது. வாழ்க்கையின் தரமும், குணாதிசயமும் மற்றவர்களை கவரக்கூடிய ஆளத்துவத்தைக் காட்டிலும் முக்கியமானது. அவர் என்ன ''செய்வார்'' என்பதைக் காட்டிலும் அவர் ''எப்படிப்பட்டவர்'' என்பது மிக அதிகமான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வரங்களைக் காட்டிலும் குணாதிசயம் நிலைத்து நிற்கும்.

b: ஊழியத்திற்கான ஆயத்தம்

ஊழியத்தின் உள்ளார்ந்த தன்மை தேவன் கொடுத்தது என்றாலும், வெளியே சென்று ஊழியம் செய்யும் திறமையும், பயனுள்ள முறையில் உபயோகப்படுத்துவதும், அவர்களை மேன்மைப்படுத்துவதின் மூலம் விரிவடைய முடியும். ஜனங்களை ஊழியத்தின் பல்வேறு நிலைகளிலும் பயிற்சியளிக்க முடியும். உ.ம். பிரசங்கித்தல், ஆராதனை நடத்துதல், தலைமைத்துவ திறமைகள், குழு மேலாண்மை மற்றும் பல.

c: ஆவியானவரின் ஊக்க மூட்டுதல

பரிசுத்த ஆவியானவர் நம்மை வல்லமைப்படுத்துவதற்கு திறந்த மனதுடையவர்களாக இருக்க வேண்டும். பிரசங்கிப்பதிலும், போதிப்பதிலும், ஆராதனை நடத்துவதிலும் ஒருவர் எவ்வளவு திறமையுள்ளவராக, சாதிக்கக்கூடியவராக இருந்தாலும், ஊழியத்தின் மீது ஆண்டவரின் புதிய தொடுதல் எல்லாவிதமான வித்தியாசத்தையும் உண்டாக்கும். இதை நாம் அடிக்கடி இவ்வாறு அழைக்கிறோம் 'ஆவியானவரின் அபிஷேகம்'. கர்த்தருடைய ஆவியானவர் ஊழியத்தின் வாயிலாக வழிந்தோடி அவனுக்குள் இருக்கும் மனித ஆவியை சென்றடைகிறார். நம்முடைய அறிவுகூர்மையினால் ஊழியம் செய்தால், கேட்பவரின் அறிவை தொடமுடியும். நம்முடைய இருதயத்திலிருந்து ஊழியம் செய்தால், கேட்பவரின் இருதயத்தை தொடமுடியும். ஆனால் நாம் பரிசுத்த ஆவியானவர் மூலம் ஊழியம் செய்தால், மனுஷன், மனுஷியினுடைய ஆவியை சென்றடைய முடியும்.

முதலாவது நாம் சிறு குழுக்களின் ஒழுங்குமுறைப்படுத்துதலின் யுக்தியின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் வரை இந்த விதமான ஒழுங்கை ஒருபோதும் நாம் அடைய முடியாது. இவ்விதமான சிறு குழுக்களில் தான் இந்தவிதமான பயிற்சி மிகவும் பயனுள்ள முறையில் முயற்சி செய்ய முடியும். சிறு குழுக்களின் வேதாகம முக்கியத்துவத்தை பற்றி சுருக்கமாக காண்போம்.

1: தேவன் தம்மில் தான் "சிறு குழுவாக" இருக்கிறார்

"சிறு குழுக்கள்" என்ற கருத்து வேதாகமத்தின் முதல் வசனத்திலே அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. "ஆதியிலே ஏலோகீம் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். ஏலோகீம் என்ற எபிரெய பெயர் ஆதியாகமம் முதல் பதினாறு அதிகாரத்தில் நிலையான விதத்தில் "தேவன்" என்ற பதத்திற்கு உபயோகிக்கப்பட்டுள்ளது. ஒருமையிலே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டு இருந்தாலும், இந்த வார்த்தை உண்மையிலே பன்மையை குறிக்கிறது, முக்கியமாக ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களை குறிக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் "திரித்துவம்" என்ற வார்த்தையை குறிப்பாக தேவனின் அவருடைய ஒன்றுக்கு மேற்பட்ட தன்மையின் உள்ளார்ந்த இணைப்பை விவரிப்பதற்கு எடுத்துக்கொண்ட மிகவும் எளிமையான முயற்சியாகும். உண்மையில் தேவன் தன்னில் தானே "சிறு குழுவாக" இருக்கிறார். ஆனால் அந்த சிறு குழு ஒன்றாக இணைக்கப்பட்டு உண்மையிலே ஒன்றாக இருக்கிறார்கள். இந்த இணைப்பு கிறிஸ்துவின் சரீரம் எதை குறிக்கிறது என்பதை நமக்கு நேர்த்தியான முறையில் காட்டக்கூடிய படமாகும். "அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" (1கொரி.10:17).

2: தேவன் இஸ்ரவேலில் சிறு குழுவை ஆரம்பித்து வைத்தார்

a: தேசம்

இஸ்ரவேல் தேசமானது ஆதி.12:2யில் முன்னறிவிக்கப்பட்டது, யாத்.19:5,6யில் சீனாய் மலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவர்கள் தெரிந்துக்கொள்ளப்பட்ட சந்ததி, பூமியிலுள்ள மற்ற எல்லா தேசங்களிலிருந்தும் தேவனால் பிரித்தெடுக்கப்பட்டவர்கள். உபா.7:6யில் அவர்கள் விசேஷி தேசமாக உருவெடுத்து "இஸ்ரவேல் வம்சத்தார்" என்று அறியப்பட்டார்கள். (யாத்.40:38)

b: கோத்திரங்கள். ஆதி.49.

தேசம் 12 கோத்திரங்களை கொண்டதாக இருந்தது. (ஆதி.49:28) அவர்கள் யாக்கோபின் பன்னிரண்டு குமாரர்களின் வம்ச வழியில் வந்தவர்கள்.

c: குலம். எண் 26:21-49

பன்னிரண்டு கோத்திரங்கள் மேலும் 50க்கு மேற்பட்ட குலங்களாக அல்லது துணை கோத்திரங்களாக பிரிக்கப்பட்டு இஸ்ரவேலில் நிலைத்து யாக்கோபின் உண்மையான பன்னிரண்டு குமாரர்களிலிருந்து வந்த பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டான்களை உடையதாக இருக்கிறது.

d: குடும்பங்கள்

ஒரு தேசத்திற்கும், சமுதாயத்திற்கும் அடிப்படை காரணி குடும்ப அமைப்பாகும். இது மனிதஇனத்தை தேவன் சிருஷ்டிக்கும் போதே ஏற்படுத்தப்பட்டது.(ஆதி.1:26-28) இது இஸ்ரவேல் தேசத்தில் அடிப்படை அமைப்பை ஏற்படுத்தியது. இந்த குடும்பங்கள் உண்மையிலே கூட்டுகுடும்பங்கள் அம்மா, அப்பா, பிள்ளைகள், மற்றும் பேரப்பிள்ளைகள் மற்றும் அவர்களோடு வேலைக்காரர்கள், அவர்களை சார்ந்தவர்களை கொண்டதாக இருந்தது.

3: இயேசு சிறு குழுவின் மீது கவனம் செலுத்தினார்.

தனது ஊழியத்தை ஆரம்பிக்கும் போது இயேசு செய்த முதலாவது காரியம், பன்னிரண்டு சீஷர்களை தம்மிடமாக வரவழைத்தார். அவருடைய மூன்று வருட ஊழியத்தில் தன்னுடைய வாழ்க்கையை அவர்களிடம் ஊற்றி, தன்னுடைய அதிக நேரத்தை அவர்களிடம் செலவழித்தார். சிறு குழு என்ற சூழ்நிலையில் தான் அவர்களுடைய வாழ்வை தன்னுடைய சொந்தமாக உருவாக்கினார்.

சிறு குழுவின் அமைப்பு, அல்லது குழுக்கள் தான் தன்னுடைய சொந்த வாழ்வின் அடிப்படையில் வாழ்க்கைகளை உருவாக்குவதற்கான ஏற்ற சூழ்நிலையையும், காலநிலையையும் தருகிறது. அப்படிப்பட்ட சிறு குழுக்கள் இல்லாவிட்டால் ஜனங்கள் தங்கள் வாழ்க்கையை கிறிஸ்துவின் மேல் உருவாகுவதை பார்ப்பது மிகவும் கடினமானதும், முடியாத காரியமுமாகும். இயேசு பல்வேறு நேரங்களில் அவர்களோடு வேலை செய்ததை காணமுடியும்:

- → உள்வட்ட மூவர், பேதுரு, யாக்கோபு, யோவான் (மத்.7:1)
- → பன்னிரண்டு பேர் (லூக்கா 9:1)
- → எழுபது பேர் (லூக்கா 10:1)

4: அவர் தன்னுடைய அதிகமான நேரத்தை பன்னிருவரோடே செலவழித்தார்.

a: தனிப்பட்ட உறவுமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்
இயேசு உருவாக்கிய சீஷர்கள் என்னும் குழு தனிப்பட்ட மற்றும் அடிப்படையானவற்றிற்கு போதுமானதாக நிலைத்திருந்தது. இது தனிப்பட்ட நபர்களை கொண்ட குழுவினுடைய வாழ்க்கை ஒன்றாக கலக்கப்பட்டு ஐக்கியமுள்ள ஒன்றாக உருவானது.

b: அவர் தன்னுடைய வாழ்க்கையை அவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.
இயேசு பிரசங்க பீடத்தின் முன்பாக நின்று வாரத்திற்கு இருமுறை தன்னுடைய சீஷர்களுக்கு பிரசங்கம் செய்யவில்லை. உண்மையிலே அவர் அவர்களோடு வாழ்ந்தார், தன்னுடைய வாழ்க்கையை எல்லா காரியத்திலும் அவர்களோடு பகிர்ந்து கொண்டார். அவர் அவர்களோடு நடந்தார், பேசினார், போதித்தார், சாப்பிட்டார், இளைப்பாறினார், சிரித்தார், அழுதார். அவர் தனது பாரங்களை பகிர்ந்து கொண்டார் மற்றும் அவர்கள் பாரங்களை சுமந்தார். இன்று அதிகமான போதகர்கள் தன்னுடைய உடன் போதகர்களுக்கு செய்வது போல் அவர்களோடு ஐக்கியப்பட விருப்பமில்லாதவர் போல் தன்னை அவர்களிடமிருந்து தனிமைப்படுத்திக் கொள்ளவில்லை.

c: தன்னுடைய ஊழியத்தின் மாதிரியை அவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.
இயேசு தன்னுடைய சீஷர்கள் என்னும் குழுவோடு தனது பொது மக்கள் மத்தியிலான ஊழியத்தை ஆரம்பித்தார். "இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்." (யோவான் 2:2)இந்த சூழ்நிலையில் தான் இயேசு தனது முதலாவது அற்புதத்தை செய்தார். (யோவான் 2:11) எந்த முறையில் நிறைவேற்றப்படுகிறது என்பதை உற்றுக்கவனிக்க அவருடைய சீஷர்களும் அங்கிருந்தனர்.

d: அவர் உபதேசித்தும், செய்தும் அவர்களுக்கு கற்றுக்கொடுத்தார்.
"அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங்குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டுபண்ணினேன்" (அப்.1:1) இயேசு தனது வேலையையும், ஊழியத்தையும் சீஷர்களின் முனபாகவும், பார்வையிலும் செய்தார். அவர்கள் கவனித்த வண்ணமாக அவர் செய்த எல்லாவற்றிக்கும் சாட்சிகளாக இருக்கிறார்கள். எப்படி செய்ய வேண்டும் என்றும் கற்றுக்கொடுத்தார். இந்த விதமான உபதேச முறை இயேசுவால் தொடர்ந்து உபயோகிக்கப்பட்டது. இதுவே இன்றும் மிகவும் பயனுள்ள விதத்தில் உபதேசிக்க சிறந்த வழி.

e: அவர் ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்தினார்.
மூன்று வருடங்களுக்கு அதிகமாக இயேசு தன்னுடைய சீஷர்களுடன் இணைந்திருந்து, இவ்விதமான நெருக்கமான முறையிலே தனது பிரசன்னத்தால், உபதேசத்தால், மாதிரியால் அவர்களுடைய வாழ்க்கையை உருவாக்கினார். அந்த கால முடிவிலே சபையை ஆரம்பிப்பதற்கும், தேவன் நினைத்திருந்த ஊழியத்தை நிறைவேற்ற ஆயத்தமானார்கள்.

5: ஆரம்ப கால சபை சிறு குழுக்களை உருவாக்கியது.

"வீடுகள் தோறும் அப்பம்பிட்டார்கள்." அப்.2:46.
"தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்." (அப். 5:42)

"பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம் பண்ணி" (அப்.20:20) இவ்விதமான வீட்டு சபைகள் அமைப்பில் தான் அதிகமாக ஆரம்ப கால சபையில் அப்போஸ்தலர்கள் அஸ்திபாரத்தை போட்டார்கள். சபை கட்டிடங்கள் நாம் அறிந்தபடி, சபை பிறந்து, உலக முழுவதும் வளர்ந்த 300 ஆண்டுகள் வரையிலும் நாம் காணமுடியாது.

அப்போஸ்தலர்கள் வலியுறுத்தியது

"நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்." (அப்.2:38)

a. மனந்திரும்பு. கிரேக்க பாஷையில்: "மென்டேனியா"(mentanoia) என்பதற்கு: உங்கள் சிந்தனையில், வாழ்க்கை முறையில் மற்றும் பலவற்றிலும் மாற்றம் செய்.

b. ஞானஸ்நானம் பெற்றுக் கொள்: பழைய வாழ்க்கையை அடக்கம் செய்.

c. பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறு. உங்களது புதிய வாழ்க்கை.

d. கிறிஸ்துவின் கர்த்தத்துவத்திற்கு அர்ப்பணி. அப்.2:36-38. "இயேசுவே ஆண்டவர்"

6: அவர்கள் ஞானஸ்நானம் பெற்று தொடர்ந்து நிலைத்திருந்தார்கள்:

(i) அப்போஸ்தல உபதேசம் - வாழ்க்கை முறை

உபதேசம் என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டு அமைப்பிலே, நம்முடைய நவீனகால அதே கருத்தை தெரிவிக்கவில்லை. இன்று நாம் பொதுவாக நம்முடைய விசுவாச தத்துவங்கள் என்று அர்த்தம் கொள்கிறோம். உபதேசத்தை படிப்பது என்பது அறிவுப்பூர்வமான தேடல் என்று நாம் நினைக்கிறோம். வேதாகமத்திலே இது நடைமுறை பயன்பாட்டையே அதிகமாக தெரிவிக்கிறது வாழ்க்கை வழி அல்லது வாழ்க்கை முறை என்ற அர்த்தத்தில். அப்போஸ்தலர்கள் இந்த வாழ்க்கை முறையை இயேசுவிடமிருந்து பருகினார்கள். அதை அவர்களுடைய சீஷர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள். சீஷர்கள் அதை தங்களுடைய சீஷர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள். நாம் எப்பொழுதும் இயேசுவோடு நெருங்கிய தொடர்பு உடையவர்களாக இருக்க வேண்டும். அவ்விதமான தொடர்பிலிருந்து நம்முடைய சீஷர்களுடைய வாழ்க்கையில் தொடர்பு கொள்ளவேண்டும்.

(ii) அப்போஸ்தல ஐக்கியம். – கிரேக்கம்: "கொய்னோனியா" = உறவுமுறை, கூட்டுப்பங்காண்மை.

உபதேசத்தை போல ஐக்கியத்திற்கும் சமீபகாலங்களில் வித்தியாசமான அர்த்தம் நினைத்துக் கொள்ளப்பட்டது. இணைந்து தேனீர் அருந்துதல், அல்லது உல்லாச பயணம் மேற்கொள்ளுதல் தான் ஐக்கியம் என்ற தவறான அர்த்தம் நினைத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் வேதத்தில் சீரிய கூட்டுப்பங்காண்மை என்ற அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு திருமணம் அல்லது வியாபார கூட்டுபங்காண்மை சரியான மாதிரி வடிவமாகும்.

எனவே அப்போஸ்தலர்கள் கூட்டுப்பங்காண்மை உடையவர்களாக எல்லோரும் ஒருவருக்கொருவர் ஆழமான அர்ப்பணிப்பு உடையவர்களாக இருந்தார்கள். இந்த விதமான உறவுமுறையை புதியதாக மனம்திரும்பியவர்களுக்கும் போதித்தார்கள். அவர்கள் தங்களை அந்த உறவுமுறையில் உட்படுத்திக்கொண்டார்கள்.

(iii) அப்பம் பிட்குதல், உடன்படிக்கை உறவுமுறை, சமூக செயல்பாடுகள்

"வீடுகள்தோறும் அப்பம் பிட்டார்கள்" என்ற குறிப்பு திருவிருந்து எடுத்தல் அல்லது கர்த்தருடைய பந்தியில் பங்கெடுத்தலை மட்டும் குறிக்கவில்லை சாப்பாட்டை பரிமாறிக்கொள்ளுதல், விருந்தோம்பல் என்ற அர்த்தத்தையும் குறிக்கவில்லை. அப்பம் பிட்குதல், இணைந்து பங்கெடுத்தல் என்பது உடன்படிக்கையில் ஒருவருடன் ஒருவர் இணைவதைக் காட்டுகிறது. அவர்கள் "உறுதியான நண்பத்துவ உடன்படிக்கை"யில் இணைந்து நுழைகின்றனர். இந்தவிதமான உடன்படிக்கை உறவுமுறையில் இணைந்து தரமான முறையில் நேரத்தை செலவழித்தார்கள். இதில் இளைப்பாறுதல் நேரமும் உள்ளடங்கியதாக இருந்தது. அது அவர்களுடைய தொடர்புகள் மேன்மைப்படவும், வளமாக்கவும் உதவியது.

(iv) ஜெபம், ஆவிக்குரிய வாழ்க்கை, பரிமாற்றத் தொடர்பு

உபதேசம், ஐக்கியம், உடன்படிக்கையை தொடர்ந்து ஜெபம் வருகின்றது என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உறுதியான உறவுமுறைகளினால் கூட்டு பிரார்த்தனையில் இணைய முடிகிறது. அவர்கள் ஒரே கட்டிடத்தில் இருந்தார்கள் என்பது மாத்திரமல்லாமல் ''ஒரே உடன்பாடுடன்'' இருந்தார்கள்.

7: புதிய ஏற்பாட்டு மாதிரி வடிவம்

பெந்தெகொஸ்தே நாளில் புதிய ஏற்பாட்டு சபை உருவானவுடன் சிறு குழுவாக கூடுதல் என்ற தத்துவம் அடங்கிய மாதிரி வடிவம் ஏற்படுத்தப்பட்டது. ''அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அனுதினமும் தரித்திருந்து,வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி'' (அப்.2:46)

இவ்விதமான சிறு குழுக்கள், தினந்தோறும் வீடுகளில் கூடி, புதிய விசுவாசத்திற்கான அஸ்திபாரம் போடப்பட்டது என்பது தெளிவு. இங்கே தான் சீஷத்துவ செயல்முறைகள் செயல்பட்டு புதிய உடன்படிக்கை உறவுமுறைகள் உருவானது. இவ்விதமான நெருங்கிய ஐக்கியமுறையில் ''கொய்னோனியா'' இணைப்பு உருவாகி, வளர்ந்து அது பிறகு ''தங்கள் சகோதருக்காக ஜீவனைக் கொடுக்க'' (1 யோவான் 3:16)அவர்களால் இயன்றது.

சிறு குழுக்களில் அல்லது பராமரிப்புக் குழுவில் தேவைப்படுகிற ஒருவருக்கொருவரின் இசைவு நிலை

சரீரத்தில் மற்ற அங்கத்தினருடன் உள்ள நம்முடைய உறவுமுறை உருவெடுத்தலும் புறவேலையும் விசேஷமாக நாம் யாரோடு 'இணைக்கப்பட்டு'(எபே.4:16) இருக்கிறோமோ, அது நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கை முதிர்ச்சியடைந்து, பயனுள்ள, பொறுப்புள்ள தேவனுடைய ஊழியனாக மாற உதவி செய்கிறது. உடன் அங்கத்தினருடன் உள்ள உள்ளான செயல்பாடுகள் கொடுத்தல், பெறுதல், ஊழியம் செய்தல், தியாகம் செய்தல் நம்முடைய வாழ்வு மற்றும் ஊழியத்தை ஆழமாக வளப்படுத்தி மேன்மைப்படுத்துகிறது.

a: ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள். ரோமர் 15:7

''ஆதலால் தேவனுக்கு மகிமையுண்டாக, கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டது போல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளுங்கள்''. நாம் எவ்வாறு இருந்தோமா அவ்வாறே கிறிஸ்து நம்மை அன்போடும், முழு விருப்பத்தோடும் ஏற்றுக்கொண்டார். அவர் எதிர்பார்த்த சிலவற்றை நாம் நிறைவேற்றினபடியினால் கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொள்ளவில்லை, அதற்கு பதிலாக நம்மை நேசித்து நாம் இருக்கின்ற வண்ணமாக நம்மை ஏற்றுக்கொண்டார். இது துல்லியமானது ஏனென்றால் கிறிஸ்து நம்மை இலவசமாக ஏற்றுக்கொண்டார். அதே விதமாக நாமும் தொடர்ந்து ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

b: ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் எபே. 4:32

''ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்'' பவுல் அறிவுறுத்துகிறார் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளும்போது ''அவனுடைய மனஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்காமல்'' இருக்க வேண்டும். நாம் ஒருவரை பகுதியாகவோ, நிபந்தனையோடு ஏற்றுக்கொள்ளமால் முழுவதுமாக, நிபந்தனையில்லாமல் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

c: ஒருவரையொருவர் பராமரியுங்கள் 1 கொரி.12:25-26

அங்கத்தினர் ஒருவருக்கொருவர் சமமான பராமரிப்பு கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் ஒரு அங்கத்தினர் துன்பப்படும்போது மற்ற அங்கத்தினரும் அவரோடு துன்பப்படமுடியும். அல்லது ஒரு அங்கத்தினர் கனப்படுத்தப் படும்போது அவரோடு சேர்ந்து மற்ற அங்கத்தினர்களும் சந்தோஷப்படமுடியும். இயேசு கிறிஸ்து அவருடைய சரீரத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் பராமரிக்கப் படவேண்டும் என்று விரும்புகிறார். அதை சரீரத்திலுள்ள அங்கத்தினரைக் கொண்டே நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புகிறார். அவருடைய பராமரிப்பு அவருடைய நாமத்தில் அவருடைய சரீரத்திலுள்ள ஒவ்வொரு

அங்கத்தினர்களுக்குள்ளும் பயிற்சி செய்யப்பட வேண்டும் என்று விரும்புகிறார். இது தலைமைத்துவத்திலிருந்து ஆரம்பித்து படிப்படியாக எல்லா அங்கத்தினர் மத்தியிலும் செயல்படுத்தப்பட வேண்டும். தலைவர் ஒருவரையொருவர் நேசிக்கிறவராகக் காணப்படவேண்டும். இயேசு தம்முடைய சீஷர்களிடம் சொன்னது போல, நீங்கள் ஒருரையொருவர் நேசிக்கிறபடியினால், எல்லா ஜனங்களும், நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று அறிவார்கள்.

d: **ஒருவருக்கொருவர் பக்திவிருத்தியை உண்டாக்குங்கள் 1 தெச 5:11**
"ஆகையால் நீங்கள் செய்துவருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்." பக்திவிருத்தி என்ற வார்த்தை இலத்தின்மொழியில் இருந்து வந்தது, அதற்கு "கட்டுதல்"(வழ டிரடைன) என்று பொருள். ஒருவருக்கொருவர் கட்டுதல். இதன் குறிப்பிட்ட பயன்பாடு வேதாகம முறையில் மக்களை அவர்களுடைய விசுவாசத்தில் கட்டுதல் - அறிவுப்பூர்வமாக, ஒழுக்கரீதியில், ஆவிக்குரியரீதியில். இது கிழித்துப் போடுதலுக்கு எதிர்பதமாகும். சண்டை, குறைகூறுதல், காழ்ப்புணர்ச்சியினால் ஒருவரையொருவர் கிழித்துக் கொள்ளாமல் நேர்மறையாக, நாம் ஒருவருக்கொருவர் ஆசிர்வதித்துப் பலப்படுத்தி பக்திவிருத்தியை உண்டாக்குவோம்.

e: **ஒருவர் பாரத்தை ஒருவர் சுமத்தல். கலா.6:2**
"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்". கலா.6:2. இந்த வேதவசனம் "குற்றத்தில் அகப்பட்ட" சகோதரனை அன்போடு சீர்பொருந்தப் பண்ணுவதற்கான ஆலோசனை கொடுக்கப்பட்ட இடத்தில் வருகிறது. இவ்விதமான சம்பவங்கள் மற்றும் மற்றவர்களுடைய துக்ககரமான சம்பவத்தின் மூலமாக ஏற்படுகின்ற பாரங்களை சுமப்பதற்கு உதவுதல் என்பதை தெளிவாக இது குறிக்கிறது. மேலும் அடிக்கடி வாழ்க்கையில் நம்மேல் திணிக்கப்படுகிற பாரங்களை ஒருவருக்கொருவர் சுமத்தல் என்பதையும் குறிக்கிறது. சகோதரனை தன்னந்தனியாக போராட விட்டுவிடுவதற்கு பதிலாக நாம் ஒருவருக்கொருவர் உதவிச்செய்து வாழ்க்கையின் உரிமைத் தேவைகளை சந்திக்க உதவ வேண்டும்.

f: **ஒருவருக்கொருவர் பயபக்தியாய் இருத்தல் ரோமர் 12:10**
"சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்: கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள். ஒன்றை நாம் ஆண்டவருக்கு கொடுத்தபின் அது பயபக்திகுரியது என்று சொல்லப்படுகிறது. சில பொருட்களை அவருக்கென்று ஒருமுறை பயபக்திக்குரியது என்றுக் கொடுத்தப் பின் ஒருபோதும் மீண்டும் பெற்றுக் கொள்ளவோ திரும்ப பெறவோ கூடாது. இப்பொழுது அது தேவனுக்குப் பரிசுத்தமானது என்று குறிக்கப்படுகிறது. அவ்விதத்திலே அது என்றென்றைக்கும் தேவனுக்கு சொந்தம்.
நாம் ஒருவருக்கொருவர் பயபக்தியாய் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். தேவன் நம்மை இணைத்த சரீரத்திலுள்ள அங்கத்தினர்களோடு உடன்படிக்கை உறவுமுறைக்கு நம்மைக் கொடுக்க வேண்டும். இப்படிபட்ட உறவுமுறையை விரிவாக்கம் செய்வதற்கு நம்முடைய சகோதரர்களோடு தயவு, பாசம், சகோதர அன்பு, நம்மை விட மற்றவர்களை முந்தி கனம் பண்ணுதல் போன்ற காரியங்களினால் நெருக்கமாக நாம் தொடர்பு கொள்ளவேண்டும்.

g: **ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் 1 யோவான் 4:11**
தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம். வேதப்பூர்வமான அன்பு என்பது நம்மை வேதவசனத்தோடு இணைத்து எந்த மனித அன்பைக் காட்டிலும் உயரமானதும், ஐசுவரியமுள்ளதும், ஆழமானதும், அதிக அர்த்தம் உள்ளதுமான அன்பாய் இருக்கிறது. மனித அன்பு பல வித்தியாசமான அனுபவங்களை உடையதாய் இருக்கிறது. மனநிலை சார்ந்த, உணர்ச்சிபூர்வமான, காதல்சார்ந்த, சரீரப்பூர்வமானதை கொண்டதாய் இருக்கிறது. இயேசு வெளிப்படுத்திக் காட்டியதும், பரிந்து பேசியதுமான அன்பின் தரம் இவை எல்லாவற்றைக் காட்டிலும் வித்தியாசமானதும் உயர்ந்ததுமாகும். இயேசு அறிமுகப் படுத்திய "அகப்பே" அன்பு, அடிக்கடிக்

காட்டப்பட்டாலும் மேற்பரப்பானதும், நம்பிசாரமுடியாததுமான மனித, காதல்சார்ந்த, உணர்ச்சிபூர்வமான, சரீர அன்பைக் காட்டிலும் மிக உயர்ந்ததாகும். இவ்விதமான அன்பு உணர்ச்சிபூர்வமானதைக் காட்டிலும் ஆழமான ஒன்றை அடிப்படையாகக் கொண்டது. இது தெய்வீக வெளிப்பாடான அன்பு, பரிசுத்த ஆவியானவரால் நமது இருதயத்தில் ஊற்றப்பட்டுள்ளது. இந்த அன்பு நம்மை மற்றவர்களுக்காக தியாகம் பண்ணவைக்க காரணமானதாகும்.(ரோமர் 5:5) நமக்குள்ளே உள்ள கிறிஸ்துவின் அன்பைச் சார்ந்து அதினால் ''தேவ அன்பினாலே'' ஒருவரிலொருவர் அன்பாயிருக்கிறோம்.

h: ஒருவருக்கொருவர் சேவை செய்யக் கடவோம் 1 பேதுரு 4:10

''அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்.'' வேலைக்காரத்துவத்தின் ஊழியம், இந்நாட்களில் விரும்பப்படாததும், துக்கரமாக வெறுக்கப்படுகின்றதுமான ஒன்றாக மாறிவிட்டது. ஆனாலும் வேதத்தின்படி ''ஊழியன்'' என்பவன் ''வேலைக்காரன்''. இயேசு வேலைக்காரத்துவத்தின் ஊழியத்தை செய்துகாட்டி, அவருடைய எல்லா சீஷர்களுக்கு ஒரு மாதிரியை ஏற்படுத்தினார். பயனுள்ள வேலைக்காரனாய் இருப்பதற்கு உண்மையான தாழ்மை தேவைப்படுகிறது. துரதிஷ்டவசமாக அந்த தாழ்மை அநேக ஊழியர்களிடம் இல்லை.

இவ்விதமான வேலைக்காரத்துவத்தின் தாழ்மையின் சிந்தை பிலி.2:5 யில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. அதிலே ''கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது'' என்று நமக்கு அறிவுரை கூறப்பட்டுள்ளது. நம்மிடத்தில் இவ்விதமான சிந்தையில்லாமல், கிறிஸ்துவைப் போல் ஆகுதல் என்பதை அடைவது கூடாத காரியம். உண்மையென்னவென்றால், கிறிஸ்துவின் சரீரத்திலே நாம் தாழ்மையோடு ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வதில் விரிவடைவது, சுத்திகரிக்கப்படுவதின் மூலமாக கிறிஸ்துவைப் போலாகலாம்.

i: நற்கிரியைக்காக ஒருவரையொருவர் கடிந்துக் கொள்ளுங்கள்.எபி10:24

'' மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து.'' கடிந்துக் கொள்ளுதல் என்பது ''ஆழந்த தூக்கத்திலிருப்பவரை எழுப்புதல், தூண்டுதல்'' என்று அர்த்தமாகும். இது நேர்மறையான அல்லது எதிர்மறையான பயன்பாட்டை கொண்டுள்ளது. ஒருவருக்கொருவர் எதிர்மறையாக செயல்பட்டு விரும்பதகாத சூழ்நிலையை உருவாக்க கூடாது என்று புதிய ஏற்பாடு நமக்கு தெளிவாக போதிக்கிறது. நாம் ஒருவரையொருவர் எதிர்மறையாக கோபத்திற்கும், தீமைக்கும் தூண்டிவிடமால், நன்மைக்கும், நற்கிரியை செய்யவும் தூண்டி விடவேண்டும்.

கிறிஸ்தவர்களுக்கு இவ்விதமான கடிந்துக் கொள்ளுதல் தான் அனுமதிக்கப் பட்டுள்ளது. கடிந்துக் கொள்ளுதல் என்பது ஆண்டவரின் நாமம் மகிமைப்படும்படியாக ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்தி, ஒன்றை செய்ய விருப்பத்தை ஏற்படுத்தி, தூண்டிவிட்டு நற்கிரியைகளை செய்ய வேண்டும்.

சிறு குழுவின் அமைப்பும், நோக்கமும்

நான் சிறிய என்ற வார்த்தையை பெரிய என்ற வார்த்தையோடு ஒப்பிட்டு பார்க்கும் படியாக உபயோக்கிறேன். ஆரம்ப சபையானது சிறிய அல்லது குழுவாக மற்றும் பெரியகூடுகையாக கூட்டத்தின் நோக்கத்தையும், காலநிலையையும் பொறுத்து கூடினார்கள். பெரிய கூடுகைகள் இணைந்து சாட்சி பகர தேவாலயத்திலோ அல்லது பொது இடத்திலோ கூடினார்கள். சிறிய கூடுகைகள் அறிவுறுத்தல், ஒருவருக்கொருவர் செயல்பாடுகள், ஒருவரையொருவர் பராமரித்தல் போன்ற நோக்கத்திற்காக வீடுகளில் கூடினார்கள். இயேசு ஏற்படுத்திய மாதிரியின் படியே பன்னிரண்டு பேர் என்பது சீஷத்துவ நோக்கத்திற்கான சரியான எண்ணிக்கையுள்ள குழுவாகும் என்று நாம் தீர்மானிக்கலாம். எப்படியிருந்தாலும், இதுதான் குறிப்பிட்ட எண்ணிக்கையல்ல. சூழ்நிலையைப் பொறுத்து சிறியதாகவோ, பெரிய அளவிலோ கூடலாம். சிறிய குழுவானது இரண்டு அல்லது மூன்று பேர்களைக் கொண்டதாக கூட இருக்கலாம். இயேசு சொன்னார், ''இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே கூடியிருக்கிறார்களோ...'' (மத் 18:20). எப்படியாயினும், ஒரு

சிறிய குழு பெரிய எண்ணிக்கையில் மாற அனுமதிக்கக்கூடாது. அப்படி மாறினால் சிறிய குழுவிற்குரிய சிலாக்கியமான நெருக்கம், ஒருவருக்கொருவர் உள்ள செயல்பாட்டை இழந்துவிடும். சிறிய குழுக்கள் பலவிதமான வழிகளில் செயல்படலாம்:

- வீட்டு சபை. வீட்டில் கூடுவதற்கு ஏதுவான எண்ணிக்கையுள்ள சபை குழு.
- பாரமரிப்புக் குழு. பெரிய அளவிலான அமைப்பின் ஒரு பகுதி, அந்தந்த பகுதியில் சிறிய எண்ணிக்கையில் கூடலாம். பொதுவாக பன்னிரண்டு பேர்.
- விசேஷ விருப்ப குழுக்கள். (உதா). இசை ஊழியம், சந்திப்பு ஊழியம், மிஷன் கமிட்டி
- சீஷத்துவ குழுக்கள். தலைவர்களை உருவாக்குதல்.

சிறிய குழுக்கள் இதற்காக நிலைத்திருக்கிறது:

a: ஐக்கியம் (கொய்னேனியா)

கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கத்தினரிடையே உள்ள நம்முடைய தொடர்பு முறைகளைக் குறித்து ஆழமான விழிப்புணர்வை விரிவடையச் செய்ய வேண்டும். மற்ற அங்கத்தினரை வளமாக்கும் எண்ணமோ அல்லது விருப்பமோ இல்லாமல் இருக்கும் கிளப் அல்ல கிறிஸ்துவின் சபை. ஒவ்வொரு உள் உறுப்பும், புற உறுப்பும் இரக்கமுள்ள நரம்பு மண்டலத்தில் இணைக்கப்பட்டு, ஒரு அங்கத்தினர் வேதனை அனுபவிக்கும்போது யாவரும் வேதனை அனுபவிக்கும் ஒரு சரீரமாகும். சரீரத்தின் ஒரு உறுப்பு தனக்கு தானே வாழமுடியாது. ஆனால் அது சரியான முறையில் மற்றவைகளோடு இணைக்கப்பட்டு மற்ற அங்கத்தினர்களோடு தொடர்புடையதாக இருந்தால் மாத்திரமே பயன்படமுடியும். அதுபோல நாமும் சரியான முறையில் கிறிஸ்துவின் சரீரத்தில் மற்றும் அதனுடைய அநேக அங்கத்தினர்களோடு சரியான தொடர்புடையவர்களாய் இருக்க வேண்டும்.

b: பக்தி விருத்தி உண்டாக்குதல், ஒருவரையொருவர் கட்டியெழுப்புதல்

ஒருவரையொருவர் உற்சாகப்படுத்த, விசுவாசத்திலே ஒருவரையொருவர் கட்டி எழுப்ப, ஆவிக்குரிய வரங்களை உபயோகப்படுத்தி விரிவடைய கற்றுக்கொள்ள வேண்டும். எபேசியர் 4:12-16, கூறுகிறது கிறிஸ்துவின் சரீரம் கட்டியெழுப்பப்படுதல், பெலப்படுதல், பக்திவிருத்தியடைதல், விரிவடைதலுக்கு உதவியாய் இருக்கிற "சகல கணுக்களிலும்". கணு என்கின்ற இடத்தில் தான் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தினாகள் இசைவாய்கூடி, இணைக்கப்பட்டு, விசேஷ செயல்பாட்டையும், நோக்கத்தையும் உண்டாக்கி கொடுக்கிறது. உதரணமாக மூட்டு இணைப்பு இல்லாமல் நம்மால் சரியாய் நடக்க முடியாது. அதே முறையில் கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கிற வெவ்வேறு அங்கத்தினர்கள் சரியான தொடர்பில் இணைக்கப்பட்டு, இணைந்து சபையை பக்திவிருத்தியடையச் செய்ய வேண்டும்.

c: கிறிஸ்துவைப் போல் ஆகுதலை விரிவாக்குதல்

இயேசு பிதாவாகிய தேவனின் "தன்மையின் சொரூபமாய்" (எபி.1:3). அவர் பரலோக பிதாவின் மனித வெளிப்படாயிருக்கிறார். ஒத்த சாயலிலும், ரூபத்திலும் அவரைப் போலவும் உண்டாக்கப்பட்டார். எனவே அவர் தேவ குமாரனாய் இருக்கிறார். பரிசுத்த ஆவியானவருடைய முடிவான விருப்பம் மீட்கப்பட்ட தேவனுடைய ஜனங்களாகிய நம்மிடத்தில் அவரைப் போல் மாறி பூரணமடையச் செய்வது. சரியான சூழ்நிலை கொடுக்கப் படாவிட்டால் இந்த பரிசுத்த பணி செய்து முடிக்க முடியாது. அதற்கான சூழ்நிலையின் பகுதி "கொய்னேனியா" சூழ்நிலையின் செயல்பாட்டில் உருவாகுகிற தொடர்பில் காணப்படுகிறது. இயேசு உண்மையான வேலைக்காரனாக தெளிவாக சித்தரிக்கப்படுகிறார். (பிலி.2:1-7). நமக்கும் அப்படிப்பட்ட தன்மை இல்லாவிட்டால் உண்மையாக கிறிஸ்துவைப் போலாகுதலை அடைய முடியாது.

d: அறிவுரை கூறுதல்

நம்முடைய வாழ்வு, குணாதிசயம், ஊழியம் சரியான, முழுமையான வளர்ச்சிக்கு போதனையும், அறிவுரையும் தேவைப்படுகிறது. முறையான அமைப்பில் பிரசங்க பீடத்திலிருந்து கொடுக்கப்படுகிறதைக் காட்டிலும் இந்த அறிவுரை மிகவும் போதுமானதாக

இருக்க வேண்டும். உடன்படிக்கை அர்ப்பணிப்பிலும், உண்மையான வாழ்க்கை ஊழிய சூழ்நிலையிலும் வாழ்க்கையையும், ஊழியத்தையும் உருவாக்குகின்ற அறிவுரை வழங்கப்பட்டு, பெறப்படவேண்டும்.

e: பங்கெடுத்தல்

நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிற அமைப்பில் செயல்திறன்மிக்க பங்கெடுத்தல் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்ற செயல்திறன்மிக்க பங்கெடுத்தல் போல கலாந்தாய்வு வகுப்புகளை ஏற்படுவதின் மூலம் பெற ஆரம்பத்தில் அடைய முடியும். அதே வேளையில் ஊழிய நிகழ்வுகளில் செயல்திறன்மிக்க பங்கெடுத்தல் அவசியமாகிறது. உதா. ஆராதனை நடத்துதல், பிரசங்கித்தல், ஜெபம் மற்றும் ஆலோசனை கூறுதல் மூலம் ஜனங்களிடம் ஊழியம் செய்தல். இப்படிப்பட்ட பயிற்சி வகுப்புகளை ''வேலையில் பயிற்சி'' என்று அழைக்கிறோம். அறிவுரை என்பது கல்வி அல்லது தத்துவங்களின் அடிப்படையிலானது மட்டுமல்ல, நடைமுறை பயிற்சியாக அந்த பணியை உண்மையாக செயல்படுத்துவதின் மூலம் கற்றுக்கொள்ள முடியும்.

f: ஊழிய பொறுப்பெடுத்து, நிறைவேற்றுதல்

உண்மையான அந்த பணியை செயல்படுத்துவதற்கு அதிகாரபூர்வமான ஈடுஇணையானது ஏதுவுமில்லை. மாணவர்கள் பெற்றுக் கொள்கின்ற போதனைகள், பயிற்சிகள் இவைகளுடன் கூட கலாந்தாய்வு போன்ற செயல்பாடுகளில் அவர்களின் செயல்திறன்மிக்க பங்கெடுத்தல் அவசியம். கொடுக்கப்பட்ட உண்மையான ஊழியத்தில் சரியாக செயல்படுத்தி காட்ட வேணடும். திறமைமிக்க சில நபர்களின் கண்காணிப்பில் தருணங்கள் ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் ஊழிய பணிகளை செயல்படுத்த செய்து கண்காணிக்க வேண்டும். இயேசுவும் இவ்விதமான பயிற்சி முறையில் பனனிரண்டு பேர்களை அனுப்பினார் பிறகு எழுபது பேரை அனுப்பினார். சரியான பணிவிபரங்களுடன் அவர்களை தெளிவான கட்டளைக் கொடுத்து அனுப்பினார்.

அதிகாரம் மூன்று – இயேசு எவ்வாறு சீஷர்களை உருவாக்கினார்

பரத்திற்கு ஏறுவதற்கு முன் இயேசு தமது சீஷர்களுக்கு கட்டளைக் கொடுத்து சொன்ன வார்த்தைகள்

- ❖ நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள். மாற்கு 16:15
- ❖ நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி. மத்.28:29

இதை செய்வதற்கு அவர் வலியுறுத்திய அவருடைய (நம்முடையதாகவும் இருக்க வேண்டும்)மிக முக்கிய காரியங்கள்

A. சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல். இழந்துப் போனவர்களை ஆதாயப் படுத்துதல்
B. சீஷர்களை உருவாக்குதல். போஷித்து, விசுவாசிகளுடைய வாழ்க்கையை உருவாக்குதல்.

அவர் பேதுருவினடத்தில் கொடுத்த சவால்கள் இந்த இரண்டு வரிகளில்

1. ''மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக்குவேன்'' மத்.4:19
2. ''என் ஆடுகளை மேய்ப்பாயாக'' யோவான் 21:17

அநேக ஊழியர்கள் சுவிஷேத்தைப் பிரசங்கிக்கிறார்கள், ஆனால் சிலரோ இயேசு நமக்கு கட்டளையிட்டபடி சீஷர்களை உருவாக்குகிறார்கள்.

இயேசு மீட்பின் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்

''இழந்து போனதை தேடவும், இரட்சிக்கவும்'' மனுஷகுமாரன் வந்திருக்கிறார். அவருடைய முதல் வார்த்தைகள் ''மனந்திரும்பி இராஜ்ஜியத்தினுடைய சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்'' மாற்கு 1:15. அவருடைய முதன்மையான பணி விழுந்துப்போன மனிதகுலத்தை உயிரப்பித்தலாகும். இந்த காரியத்திற்காகவே அவர் வந்தார், வாழ்ந்தார், மரித்தார் மீண்டும் உயிரோடு எழும்பினார். அவர் இந்தப் பெரிய பணியை செய்ய சீஷர்களை தெரிந்தெடுத்து, அழைத்து, பயிற்சியளித்தல் மூலம் ஆரம்பித்தார். ''அவர் கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகையில், மீன்பிடிக்கிறவர்களாயிருந்த

சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும் கடலில் வலைபோட்டுக் கொண்டிருக்கிறபோது அவர்களைக் கண்டார். இயேசு அவர்களை நோக்கி: என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்." மாற்கு 1:16-17.

a: அவர் அவர்களை தெரிந்தெடுத்தார்

இயேசு தம்முடைய சீஷர்களை தெரிந்து, அணுகி, தேர்வு செய்தார். அவர் இதை திறந்த அழைப்பாக கொடுக்கவில்லை. அவர் அழைக்கும்போது அவர் கடைபிடித்த சில காரியங்களை தயவு செய்து கருத்தில் கொள்ளவேண்டும். அதை யோவான் 15:13-17 ல் காணலாம், "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள். இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன். நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்: நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்." இந்தப் பகுதியிலிருந்து கீழ்கண்டவற்றை கருத்தில் கொள்:

→ வச.13 முன்பகுதி. அவருடைய தெரிந்தெடுப்பு அன்பினால் ஆனது. அவருடைய பிதாவின் அன்பு. அவருடைய சீஷர்களுக்கான அன்பு, அவர்கள் ஊழியம் செய்யப்போகிற உலகத்திற்கான அன்பு

→ வச.13 பின்பகுதி. அவர்களை சீஷர்களாக்குவதற்காக தன்னுடைய ஜீவனையும் தியாகம் பண்ணுவதற்கு தயாராக இருந்தார்.

→ வச.14. அவர்களை நண்பர்களாகப் பார்த்தார். வேலைக்காரனாக அல்ல.

→ வச.15. பிதா அவருக்கு காட்டிய எல்லாவற்றையும் அவர் அவர்களுக்குப் போதித்தார்.

→ வச.16. அவர் அவர்களைத் தெரிந்து கொண்டார். அவர்கள் அவரை தெரிந்து கொள்ளவில்லை.

→ வச.16. அவர் அவர்களை கனி நிறைந்தவர்களாய் இருக்கும்படியாய் ஏற்படுத்தினார்.

→ வச.16. அவர்களுடைய கனி நிலைத்திருக்கும்படியாக அவர் விரும்பினார்.

"இயேசு பிலிப்புவைக் கண்டு நீ எனக்குப் பின் சென்று வா" என்றார். யோவான் 1:43.
அவர்களுடைய திறமைக்காக தெரிந்தெடுத்தார். அவருடைய வாழ்க்கையின் பதிவுகளை கண்டு அல்ல. அவர் பலதரப்பட்ட நபர்களை தெரிந்தெடுத்தார். மீன்பிடிக்கிறவர், வைத்தியன், வரிவசூலிப்பவர் மற்றும் பலர்.

b: அவர் அவர்களை அழைத்தார்

அவர் அவர்களை பெயர் சொல்லியழைத்தார். (உதா). , நீ சீமோன்.
அவர் அவர்களை பின்பற்றும்படி சவால் விட்டார். கற்றுக்கொள், கீழ்படி, அவருடைய மாதிரியின்படி வாழ். யோ.1:43. அவர் முழுமையான தியாகமான வாழ்வை எதிர்பார்த்தார். (உதா.) அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள்.
அவர் ஒவ்வொருவரோடும் தொடர்பை உருவாக்கினார்.
அவர் தன்னுடைய வாழ்க்கையை தனித்தனியாக ஒவ்வொருவரிலும் முதலீடு செய்தார்.

c: அவருடைய வாழ்க்கையை மாதிரியாக்கினார் -அவர்களுக்கு முன்பாக ஊழியம் செய்தார்

இயேசு தம்முடைய சீஷர்கள் பின்பற்றக் கூடிய சிறந்த மாதிரியானார்.
தரமான தம்முடைய நேரத்தை அவர்களோடு செலவழித்தார்.
சிறந்த தரமான தலைமைத்துவத்தை வெளிப்படுத்திக் காட்டினார்.
குணாதிசயம், நேர்மை, தாழ்மை, கீழ்படிதல் ஆகியவற்றில் தம்முடைய மாதிரியைக் காண்பித்தார்.

தொடர்ந்து ஆவிக்குரிய புதுப்பிக்கப்படுதலின் தேவையை வெளிப்படுத்திக் காட்டினார். இளைப்பாறுதல், மற்றும் புதுப்பிக்கப்படுதலின் தேவையை வெளிப்படுத்திக் காட்டினார்

d: அவர் அவர்களுக்குப் போதித்தார்

இயேசு குறிப்பட்ட போதனாமுறையை உடையவராய் இருந்தார்.
இயேசு தம்முடைய சீஷர்களோடு ஒன்றாக கலந்து இணைந்து போதித்தார்.
இயேசு உதாரணம் மூலமாய் போதித்தார்.
அவர் செய்யவும், உபதேசிக்கவும் என்ற முறையில் போதித்தார். அப்.1:2.
அவர் வெறுமனே காரியங்களைத் தெரிவிப்பதைக் காட்டிலும் அவர்களை உருவாக்கினார். அவர்கள் ஊழிய பணியை செய்யும்படியாக சீர்பொருத்தினார்
எபே.4:11-13, "மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும் சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்."
கிறிஸ்து சபைக்கு ஊழியங்களைத் தந்தார் (வச.11) என்பதை கவனிக்க வேண்டும். எதற்கென்றால் அவர்கள் பரிபூரணப் பட்டுப் பயிற்சியளிக்கவும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தி சுவிசேஷத்தின் வேலை நடைபெற்று கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை பக்திவிருத்தியடையச் செய்வதற்காக.

அவர் எப்படி போதித்தார் என்பதற்கான எளிய மாதிரி இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

- ✓ நான் செய்கிறேன், நீ கவனி (நான் பணியின் மாதிரி)
- ✓ நான் செய்கிறேன், நீ உதவி செய் (நான் நல்லறிவுரையாளர்)
- ✓ நீ செய், நான் உதவி செய்கிறேன் (நான் உற்றுநோக்குகிறவன்)
- ✓ நீ செய், யாரோ ஒருவர் கவனிக்கட்டும் (நீ மாதிரி மற்றும் யாரோ ஒருவருக்கு நல்லறிவுரையாளர்)

e: அவர் அவர்களை உற்சாகப் படுத்தினார் நீ இவ்வாறு இருக்கிறாய்...நீ இவ்வாறு இருப்பாய்.
நீ சீமோனாய் இருக்கிறாய், நீ கைப்பாஸ் (Cephas) – நீ ஒரு கூழாங்கல், நீ பாறையாய் மாறுவாய்." இயேசு பேதுருவை உணர்வூட்டி உற்சாகப்படுத்தினார். அவனுடைய திறமையை அடைந்து தேவன் எதற்காக அவனை ஏற்படுத்தினாரோ அதுவாய் மாறுவதற்கு. அவருடைய ஒவ்வொரு சீஷரோடும் தனிப்பட்ட உறவுமுறைகளை விரிவாக்கிக் கொண்டு அவர்களோடு உள்ள அந்த தொடர்பை பயன்படுத்தி அறிவுறுத்தினார், பயிற்சியளித்தார். அவர்களுடைய வாழ்க்கையை மாதிரியாக்கினார். நாம் என்ன ஆகவேண்டுமென்ற தரிசனத்தை அவர் தம்முடைய ஆவியினாலே நமக்கு காண்பிக்கிறார். அதன்பிறகு அந்த இலக்கை அடைய எல்லாவற்றிலும் நமக்கு உதவி செய்கிறார்.

f: அவர்களுக்காக பணியையும் பொறுப்புகளையும் ஏற்படுத்தி கொடுத்தார்
"நீங்களே அவர்களுக்கு போஜனம் கொடுங்கள்" மத் 14:16. அவர்கள் இதுவரை செய்து பார்க்காத அல்லது செய்து முடிக்காத பணிக்காக அவர்களை ஏற்படுத்துவதற்கு முன்பாக இந்த தருணத்திலே இயேசு அவர்களை மிகவும் கவனமாய் ஆயத்தப் படுத்தினார். தேவனுடைய தெய்வீக உதவியல்லாமல் அவர்கள் முழுவதுமாய் கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்றுவதற்கு தகுதியில்லாதவர்கள் என்பதை காட்ட கொடுக்கப்பட்ட வேலையாகும். அவர் தகுதியாக்குவதற்கு அவர்கள் முற்றிலும் அவரை சார்ந்திருக்க வேண்டும்.

g: பொருத்தமான அதிகாரத்தை அவர்களோடு பகிர்ந்து கொண்டார். லூக்கா 10:19
அவர் அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதற்கு முன்பதாக இயேசு பொறுப்புகளை கொடுத்தார் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். கிறிஸ்துவுக்குள் நமது அதிகாரம் குறிக்கப்பட்ட

நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டுள்ளது. நம்முடைய தனிப்பட்ட மனம்போன காரியங்களையும் விருப்பங்களையும் திருப்தி படுவத்துவதற்காக அல்ல. அவர் நமக்கு கொடுத்த வேலைகளை நிறைவேற்றுவதற்காக இந்த அதிகாரம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

h: அவர் அவர்களுக்கு கட்டளைக் கொடுத்தார்.

"அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார்." லூக்கா 9:1,2. "இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார்." லூக்கா 10:1.

கமிஷன் (Commission) என்ற வார்த்தையின் அமைப்பை தயவுசெய்து கவனத்தில் கொள்க.
Co = உடன் இணைந்து
Mission = நிறைவேற்றப்பட வேண்டிய பணி
அவரோடு இணைந்து பணியை நிறைவேற்றி முடிக்க அவர் அவர்களுக்குக் கட்டளைக் கொடுத்தார்.

i: அவர் மறுஆய்வு மற்றும் பணிவினவல் செய்தார்

"அப்போஸ்தலர் திரும்பிவந்து, தாங்கள் செய்த யாவையும் அவருக்கு விவரித்துச் சொன்னார்கள்." லூக்கா 9:10.
"பின்பு அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து: ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும், எங்களுக்கு கீழ்ப்படிகிறது என்றார்கள்." லூக்கா 10:17.
இயேசு அவர்களுக்கு பொறுப்பேற்கும்படியாக கட்டளையிட்ட பணியை முடித்தவுடனே, சீஷர்கள் அவரிடம் திரும்பி வந்து, தாங்கள் அனுபவித்தது பற்றிய முழு அறிக்கையை சமர்ப்பித்தனர். அவர்கள் அனுபவித்த வெற்றியைக் குறித்து இயேசுவும் சந்தோஷப்பட்டார். ஆனால் அதேவேளையில் சரிசெய்ய வேண்டியவற்றை சரிசெய்தார். (உதா). "ஆகிலும் ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்." (லூக்கா 10:20).

j: அவர் அவர்களுடைய கட்டளையில் சிறிய மாற்றம் செய்தார்

லூக்கா 9:1-6; லூக்கா 10:1-16.
லூக்கா 9 மற்றும் 10 அதிகாரத்தில் உள்ள கட்டளையில் பல மாற்றங்களும் சிறிய மாற்றியமைத்தலும் உள்ளன. அந்த மாற்றங்களைக் குறித்து இங்கு ஆராய்ந்து விவாதிக்காமல் நமது பணிக்காக இங்கு குறிப்பிடுகிறோம். பெரிய கட்டளையை நிறைவேற்றுவதில் சிலநேரங்களில் சிறிய மாற்றியமைத்தலும், சரிச் செய்தலும் தேவைப்படுகிறது. அனுப்பப்படும் நபர்களைப் பொறுத்து, அல்லது யாரிடத்தில் அனுப்பப்படுகிறோமோ அந்த ஜனங்களைப் பொறுத்து அவர்களுடைய சூழ்நிலையைப் பொறுத்து, சில நேரங்களில் முறைமைகளில், செயல்பாடுகளில் சரிகட்டவேண்டிய தேவை ஏற்படுகிறது. சூழ்நிலைகள் வெளிப்படுத்தும்போது நாம் நேரத்திற்கு நேரம் சிறிய மாற்றியமைத்தலுக்கும், சரிச் செய்வதற்கும் பயப்படக்கூடாது.

k: அவர் அவர்களுக்கு மறுக்கட்டளைக் கொடுத்தார்

மாற்கு 16:15; மத்தேயு 28:19
சில வேளைகளில், பெரிய கட்டளைக் கொடுத்தது, சீஷர்களுக்கு மறுக்கட்டளைக் கொடுத்ததாக அமைந்தது. லூக்கா 9 மற்றும் 10 அதிகாரத்தில் அவர்கள் பெற்ற கட்டளையிலிருந்து மாறுபட்டது. அதேபோல் நம்முடைய குறிப்பிட்ட கட்டளையும், செயல்பாடும் நேரத்திற்கு நேரம் மாற்றியமைக்கப் படலாம். ஒரு மேய்ப்பர், ஒரு போதகராகவும், ஒரு சுவிசேஷகராகவும், ஒரு மிஷனெரியாகவும் தனது செயல்பாடுகளை மாற்றியமைக்கலாம். தேவன் நம்முடைய வாழ்க்கையில் கொண்டுவரும் விசேஷ அழைப்பிற்கும், கிருபைக்கும் தகுத்தாற்போல நாம் செயல்பட ஆயத்தமாக இருக்கவேண்டும்.

I: அவர் அவர்களை நியாயாசனத்திற்கு முன்பாக மறுஆய்வு செய்வார்

"ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்." (2கொரி.5:10). அவர் நமக்கு கொடுத்த வரங்களின் உக்கிராணத்துவத்தைக் குறித்து கணக்குக் கொடுக்க கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கவேண்டும். அந்தப் பரிசுத்த நிகழ்ச்சிக்கு ஆயத்தப்படுவதற்காக கர்த்தரோடு நெருங்கிய தொடர்புடையவர்களாய் இருந்து, அவருடைய சத்தம் கேட்கிறவர்களாய் இருக்க வேண்டும். அவருடைய அறிவுரைகளையும், சில வேளைகளில் அவருடைய சீர்திருத்துதலையும் திறந்த உண்மையான, நேர்மையான மனதுடன் அவருக்கு முன்பாக நாம் கடைபிடிப்பது அவசியம். அப்போது தான் அவருடைய மதிப்பிடுதலைக்குறித்து எப்போதும் விழிப்புள்ளவர்களாய் இருக்க முடியும். இந்த வழியாக அவரை பிரியப்படுத்தும் மற்றும் நல்ல விதத்தில் திருப்திபடுத்தும் விதமாக நம்முடைய நடக்கையையும், பணியையும் காத்துக் கொள்ள முடியும்.

ஒவ்வொரு ஊழியனும், உடன் ஊழியருக்கு பதில் சொல்லும் மற்றும் கணக்கு கொடுக்கும் விதத்தில் இருப்பது ஆரோக்கியமான காரியமாகும். இது நம்முடைய வாழ்க்கையையும், ஊழியத்தையும் உண்மையான அளவுகளில் உற்றுநோக்க உதவும். கிறிஸ்துவின் ஊழியன் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய வாழ்க்கையில் நேர்மையாக, வெளிப்படையாக பேசக்கூடிய நபர்கள் குறைந்த பட்சம் இரண்டுபேர் தேவை. சீர்திருத்தலுக்கும், சரிச் செய்வதற்கும் இது ஒரு நல்ல தருணத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது. இதை நம்மில் அனைவரும் தகுந்த கால இடைவெளியில் செய்ய வேண்டும்.

அதிகாரம் நான்கு – சபை நிறுவுவோர்களுக்கான பயிற்சி வகுப்புகள்

நாம் பெரிய கட்டளையில் இரண்டு முக்கிய காரியங்களைக் கூறினோம்.

1. சுவிசேஷத்தை பரப்புதல். அதாவது மனுஷரை பிடிக்கிறவர்களாக்குதல்.
2. சீஷர்களை உருவாக்குதல். தேவனுடைய ஆடுகளை போஷித்தல்.

சிறு குழுவில் மிகவும் பயனுள்ள வழிகளில் சீஷரை உருவாக்குதல்

- இது வேதாகம முறைமை
- இது இயேசு உபயோகித்த முறைமை
- இது ஆரம்ப கால சபையினால் உபயோகிக்கப்பட்ட முறைமை
- இது இன்றும் பயனுள்ளதாய் இருக்கிறது. உதா. பூரண சுவிசேஷ சபை, சீயோல், கொரியா. (750,000 அங்கத்தினர்)

1: ஒவ்வொரு போதகருக்கும் சீஷர்கள் இருக்க வேண்டும்

- இயேசுவுக்கு சீஷர்கள் இருந்தார்கள். மூன்று, பன்னிரண்டு, எழுபது பேர்கள்.
- அப்போஸ்தலர்களும் அவர்களுடைய சீஷர்களை உடையவர்களாய் இருந்தார்கள். உதா. பவுலும் தீமோத்தேயும்
- தீமோத்தேயு மற்ற விசுவாசமுள்ள மனிதர்களை சீஷர்களாக்கினான்.
- அந்த விசுவாசமுள்ள மனிதர்கள் மற்றவர்களுக்கு போதித்தார்கள்.
  2தீமோ. 2:2, "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை, மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி."



.

- இந்த மாதிரி இன்றும் தேவையாய் இருக்கிறது!

2: இதை செய்வதற்கு எந்த ஒரு சபை நிறுவுதலுக்கான பாடத்திட்டம் அல்லது ஊழியம் தலைமைத்துவ பயிற்சி பாடதிட்டம் உதவி செய்யும்

- ஸ்தல சபையில் உபயோகிப்பதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
- சிறுகுழுவில் உபயோகிப்பதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ஸ்தல போதகரே தலைமையாசிரியராக இருக்க வேண்டும்.
- கல்வி சம்பந்தபட்ட காரியங்களை காட்டிலும் தொடர்புகளை (நல்லறிவுரை கூறுதல்) வலியுறுத்துகிறது.
- இது ஆத்தும ஆதாயம், சபை வளர்ச்சி, சபை நிறுவுதல் ஆகியவற்றை வலியுறுத்துகிறது.
- இதன் மூலம் உருவாக்கப் படுகின்ற ஒவ்வொரு சீஷனும் ஸ்தல சபையில் மிகவும் பிரயோஜனமானவன்.
- இதில் தேர்ச்சி பெறும் யாவரும் போதக நிலைமைக்கு தகுதியுள்ளவர்களாகி சிறு குழுக்கள், வீட்டுச் சபைகள் அல்லது புதிய கிளை சபை நிறுவலாம்.

3: உங்கள் தகுதிவாய்ந்த தலைவர்களை தெரிந்தெடுத்தல்

- பொதுவாக உங்கள் சபை அங்கத்தினர்களின் நடுவிலிருந்து.
- நல்ல நிலைமையிலிருக்கும் நபர். ஆடுகளுக்கு மாதிரியானவர்.
- தன்னை நல்ல நிலையில் நிரூபித்தவர்கள். கற்றுக்குட்டி அல்லது புதிய விசுவாசிகள் அல்ல.
- போதிக்ககூடிய, பொறுப்புள்ள, பொருந்தகூடிய, கிடைக்ககூடியவரான நபர்.
- நல்ல, சந்தோஷமான, உண்மையுள்ள, தாழ்மையான, நேர்மையான குணாதிசயம் கொண்ட நபர்.

4: ஜெபத்துடன் தெரிந்தெடுங்கள்

- இயற்கையான முறையில் உற்றுநோக்கி காணமுடியாததொன்றை, ஜெபத்துடன் உற்றுநோக்குதல் மூலமாக நீங்கள் அவர்களின் தகுதித்தன்மையை தெளிவாக காணச் செய்யும்.

5: கவனமாய் தெரிந்தெடுங்கள்

- அவர்களை அணுகும் போது சில விதமான அர்ப்பணிப்பை நீங்கள் செய்கின்றீர்கள்.
- பின்னால் வருத்தபடாமல் இருக்க அணுகாமல் இருப்பது நல்லது.
- ஆரம்பத்தில் அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்தி அவர்களை அறிந்துக் கொள்வோம்.
- அவர்களை சீஷத்துவத்தில் ஈடுபடுவதற்கு முன் அவர்கள் தகுதியுள்ளவர்களா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

6: பொருந்தக்கூடியவர்கள் என்பதை நிர்ணயம் செய்து கொள்

- உங்களுடன், உங்களுடைய தரிசனத்துடன் மற்றும் தலைமைத்துவ முறையுடன்
- உங்களுடைய சபையின் தரிசனம் மற்றும் நிகழ்ச்சிகளுடன்
- அவர்கள் அங்கத்துவம் வைக்கப்போகிற குழுவினருடன்
- உங்களை பாராட்டுகிறவர்கள், நம்புகிறவர்கள் மற்றும் ஆதரிக்கிறவர்களை மாத்திரமே நீங்கள் சீஷத்துவத்தில் நடத்த முடியும்.

7: அவர்கள் போதிக்கப்படக்கூடியவர்கள் என்பதை உறுதி செய்து கொள்

- அவர்கள் கற்றுக்கொள்ள விரும்புகிறார்களா?
- அவர்களை கற்றுக் கொள்ளுதலை முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளுகிறார்களா?
- இவ்விதமான பயிற்சிக்காக கிரையம் செலுத்த விரும்புகிறார்களா?
- கிரையம் என்பது உண்மையான அர்ப்பணிப்பு, தியாகம், ஒழுக்கம் மற்றும் கடின வேலை.

8: அவர்கள் உண்மையான "வேலையாட்களா"?

- வேலையாட்களுக்காக ஜெபிக்கும்படி இயேசு சொன்னார். (லூக்கா 10:2)
- தேவனுக்கு அவரோடு இணைந்து வேலை செய்ய அர்ப்பணிப்புள்ள நபர்கள் தேவை.
- வேலை செய்வதற்கு அஞ்சாத ஜனங்களே தேவனுக்குத் தேவை.
- அதே வேளையில் தேவன் வீட்டைக் கட்டாராகில் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா என்பதை உணர்ந்த ஜனங்களாய் இருக்க வேண்டும்.

9: குணமுடைய நபராய் தேர்ந்தெடுக்க வேண்டும்

- ஆளுமைக் காட்டிலும் குணாதிசயம் மிக முக்கியம், ஆனால் இரண்டையும் ஒருங்கே பெற்றிருப்பது சாத்தியம்.
- குணாதிசயம் என்பது நீ யார், ஆளுமை (Personality) என்பது நீ என்ன செய்கிறாய்
- குணாதிசயம் உட்புறமானது, ஆளுமை வெளிப்புறமானது.
- குணாதிசயம் என்பது ஆழமாக உள்ளிருக்கும் தன்மையாகும், ஆளுமை என்பது மேற்பரப்பான தோற்றமாகும்.
- கிறிஸ்தவ குணாதிசயம் என்பது ஆவியின் கனியின் அடையாளமாகும். அது விசுவாசியின் வாழ்வில் வளர்ந்து முதிர்ச்சியடைய வேண்டும்.

10: நல்ல பண்பின் முக்கியத்துவம்

பண்பு என்பது நம்முடைய மனநிலை, போக்கு, நடத்தை. இது நாம் கொண்டிருக்கும் ஒருவித ஆவியை குறிக்கும். நல்ல ஆரோக்கியமான, நேர்முறையான எண்ணம் கொண்ட நபர்களை தேர்ந்தெடுக்க முயற்சி செய். போக்குக்கும், சுபாவத்திற்கும் சரியான நிலையில் சமநிலைப் படுத்தக்கூடிய நபர்களாக இருக்க வேண்டும். ஒருவனுடைய இயற்கையான சுபாவமான போக்கிலே ஆவியின் கனியின் வளர்ச்சி நேரடியான பாதிப்பை ஏற்படுத்த வேண்டும். மோசமான பண்பு அடிக்கடி குணாதிசயத்தில் வெளிப்படும். அது முற்றிலும் தேவனுக்கு அர்ப்பணிக்கப் படாததாயிருக்கும். அது முரட்டாட்டமும் சுயசித்தத்தின் படி எழுகின்ற கீழ்த்தரமான பண்பாகும்.

11: தன் வீட்டாரை நன்றாய் விசாரிக்கிறவனை தெரிந்தெடு- (1தீமோ.3:4)

தேவன் தன்னுடைய வேலையாள் குறைந்த பட்சமாக தன்னுடைய சொந்த குடும்பத்தை, வீட்டாரை நல்ல நிலைமையில் நடத்துகிறவனாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். அவர் வெளிப்படுத்துகிற காரியம் தன் சொந்த குடும்பத்தை நன்றாக நடத்தாத நபரிடம் இருந்து சபையை நடத்தும்படியாக எதிர்பார்க்க மாட்டார்.

ஒரு மனிதனுடைய குணாதிசயங்களின் காரியங்கள் அவன் அவனுடைய மனைவியையும், குடும்பத்தையும் நடத்துவதிலிருந்து வெளிப்படும். தன்னுடைய சொந்த வீட்டாரை திறமையாக ஒழுங்குபடுத்தி நிர்வாகம் செய்யாதவன் ஐக்கியத்தில் இடம் பெற்றுள்ள குடும்பங்களை எப்படி சரியான முறையில் நிர்வகிக்க முடியும். நீங்கள் ஊழியத்திற்காக குறிக்கப்பட்ட நபர் எப்படிப்பட்டவர் என்பதை அறியவேண்டுமானால் அவருடைய மனைவியையும், குடும்பத்தையும் கவனமாய் கவனித்தால் தெரியவரும். ஏனென்றால் அவர்கள் அவனுடைய போதக திறமையின் வெளிப்பாடாய் இருக்கிறார்கள்.

12: ஒவ்வொரு நபருடனும் தனித்தனியாக பேசுங்கள்

- உங்களுடைய தரிசனத்தை நோக்கத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்.
- தேவனுக்காக அவருடைய ராஜ்ஜியத்திற்காக நீங்கள் கொண்டுள்ள தீராத வாஞ்சையை பகிர்ந்துக் கொள்ளுங்கள்.
- அவர்களுடைய பொறுப்பின் தரத்தை தெளிவாகக் காணுங்கள்.
- ஒத்த உணர்வு உள்ளதா என்பதை உற்று நோக்குங்கள்.

13: குழுவிலுள்ள யாவரோடும் மொத்தமாக பேசுங்கள்

- எதிர்பார்க்கப்படும் திட்டத்தை விளக்குங்கள்.
- முழுமையாக விவாதியுங்கள்.
- செய்யப்பட்டிருக்கும் பொருத்தமான ஒழுங்குகளைக் காணுங்கள்.
- எப்பொழுது? எங்கே? எப்பொழுதெல்லாம்? எவ்வளவு காலத்தில்?
- இந்த காரியங்களில் குழுவாக சரியான தீர்மானங்களை எடுக்க முயற்சி செய்யுங்கள்.

14: மிகப் பொருத்தமான இடம்

- சபை வளாகத்தில் உள்ள ஒரு பகுதியாய் இருக்குமானால், அது பொருத்தமானதாய் இருக்கும்.
- அது நிகழ்ச்சியை ஸ்தல சபையின் செயல்பாட்டுடன் தொடர்புடையதாய் மாற்றும்.
- கிடைக்கக்கூடிய பொருத்தமான உபகரணங்களை ஏற்பாடு செய்யுங்கள். ஒளிஊடுருவும் தாள்களை பிரதிபலிக்கும் கருவி (O.H.P) மற்றும் பல.
- இடையூறுகள் இல்லாத தனிமையான இடம் ஏற்புடையதாய் இருக்கும். சிறிய வாடகை அறை.

15: மிகவும் பொருத்தமான நேரம்

- இது உங்களுடைய மாணவர்களின் மற்ற வேலைகளின் அர்ப்பணிப்பை பொறுத்து அமையும். குறிப்பாக திருமணமானவர்கள், குடும்பத்தை உடையவர்கள்.
- உங்களுடைய மாணவர்கள் அநேகருக்கு மிக பொருந்தக்கூடிய சரியான நேரமே தீர்மானிக்கும் காரணியாகும்.

16: மிகவும் பயன் அளிக்ககூடிய போதனாமுறைகள்

- உறவுமுறையைக் கட்டுதல்
- அர்பணிப்பை வலியுறுத்தல்
- குறிப்பிட்ட தியாகங்களை எதிர்பார்த்தல்
- உங்களுடைய போதனாமுறையின் தத்துவங்களின் மாதிரி
- மாணவர்களை பங்குபெறச் செய்தல். கலந்தாய்வுகள், செய்முறைப் பயிற்சியில் பங்கெடுத்தல்.
- மரியாதையும், உண்மையும் நிறைந்த சிறிய குழுக்களாக அமையுங்கள்.

செய்தி தொடர்பு: ஆக்கப்பூர்வமான விளைவு மற்றும் தெளிவு தேவை

திறவுகோல் கருத்து: ''ஞானிகளின் உதடுகள் அறிவை இறைக்கும்: மூடரின் இருதயமோ அப்படியல்ல.'' (நீதி.15:7)

முகவுரை

செய்தி தொடர்பு என்பது: மொழி மற்றும் அடையாளங்களை உபயோகித்து, நபர்களிடையே, இருவருக்கும் பொதுவான மொழியில் எண்ணங்களை, தகவல்களை பரிமாறிக்கொள்ளுதல் என்று அர்த்தங் கொள்ள முடியும். குணாதிசயத்தை ஊடுறுவுதல், பகிர்ந்து கொடுத்தல், தெரிவித்தல், கருத்துகளை, அறிவை பரிமாறிக் கொள்ளுதல் மற்றும் பலவற்றை உடைய ஊடகமாகும். (பேச்சு, எழுத்துகள், அடையாளங்கள் அல்லது பொதுவாக பங்கெடுத்தல், இவற்றில் எதின் மூலமாக).

'செய்தி தொடர்பின் வலிமை, வழி நடத்துதலுக்கான திறமை' என்ற வாக்கியம் மிகவும் உண்மையானது. எப்படியாயினும், ஆக்கப்பூர்வமான செய்தி தொடர்பு என்பது வெறும் வார்த்தைகளை பேசுவதைக் காட்டிலும், ஒருவரிடம் என்ன செய்ய வேண்டும்/சிந்திக்க வேண்டும் என்று சொல்வதைக் காட்டிலும் அல்லது ஒரு நபரை செயல்படவைப்பதைக் காட்டிலும் மேலானது. செய்தி தொடர்பு என்பது ஒருவர் மற்றொருவருடன் பகிர்ந்து கொண்டு புரிந்துக் கொள்ளுதலை உறுதிப்படுத்தலாகும். புரிந்துக் கொள்ளுதல் என்பது வெறுமனே சிலவற்றை அறிந்துக் கொள்ளுதல் என்பதைக் காட்டிலும் மிகவும் மேலானது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அது கிரகித்துக் கொள்ளுதலாகும் (அல்லது ஒரே அர்த்தத்தை பகிர்ந்துக் கொள்ளுதல்). உதாரணமாக, நாம் மற்றொரு நபருக்கு சில அறிவுரைகளை அவர் செய்யும்படி கொடுத்தவற்றை, நாம் எப்படி செய்ய விருப்பப்பட்டோமோ அப்படியே செய்வதாகும். அதாவது நாம் எப்படி புரிந்துக் கொண்டு கிரகித்துக் கொண்டுள்ளோமோ அப்படியே அவரும் புரிந்துக் கொண்டு, கிரகித்துக் கொண்டு செய்வதாகும்.

''அப்படியே புல்லாங்குழல், சுரமண்டலம் முதலாகிய சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்கள் தொனிகளில் வித்தியாசம் காட்டாவிட்டால், குழலாலே ஊதப்படுகிறதும், சுரமண்டலத்தாலே வாசிக்கப்படுகிறதும் இன்னதென்று எப்படித் தெரியும்? அந்தப்படி எக்காளமும் விளங்காத சத்தமிட்டால் எவன் யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணுவான்? அதுபோல, நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே. உலகத்திலே எத்தனையோவிதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது, அவைகளில் ஒன்றும் அர்த்தமில்லாததல்ல. ஆயினும், பாஷையின் கருத்தை நான் அறியாமலிருந்தால், பேசுகிறவனுக்கு அந்நியனாயிருப்பேன், பேசுகிறவனும் எனக்கு அந்நியனாயிருப்பான்.'' (1 கொரி.14:7-11).

செய்தி தொடர்பு ஆக்கப்பூர்வமானதாய் அமைவதற்கு, அது இருதயத்திற்கு இருதயம், ஆவியோடு ஆவி, மனதோடு மனது செய்யப்பட வேண்டும். எனவே ஆக்கப்பூர்வமான விளைவை உண்டாக்கத்தக்க ரீதியில் செய்தி தொடர்புக் கொள்ள விரும்புகிறவர்கள் விருப்பு வெறுப்பில்லாதவர்களாய் இருக்க வேண்டும். மற்றும் யார் அவர்கள் (மற்ற ஜனங்களிடத்தில் அவர்கள் எப்படி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார்கள்) செய்தி தொடர்பு அமையும் இடம் மற்றும் பிற நபர்கள் / ஜனங்கள் ஆகியவற்றைக் குறித்து விழிப்புள்ளவர்களாய் இருக்க வேண்டும். உண்மையிலே செய்தி தொடர்பு கொள்ள விரும்புகிறவர்களோடு திறந்த மனநிலையோடு இருப்பது அவசியம்.

நல்ல செய்தி தொடர்பாளர்கள் சூழ்நிலைக்கேற்ப வளைந்து கொடுப்பவர்களாகவும் பரிவுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். அவர்கள் எப்பொழுதும் யாரிடத்தில் செய்தி தொடர்பு கொள்ளுகிறார்களோ அவர்களைக் குறித்து உற்றுநோக்கி அதன் விளைவாக அவர்கள் சொல்லுகிற மற்றும் செய்யப்போகிற காரியத்தில் சிறிய மாற்றம் செய்வார்கள். பல்வேறு அமையும் இடங்கள் / சூழ்நிலைகள் / ஒழுக்க மாண்பியல் / உணர்ச்சிகள் / ஜனங்கள் / மனோபாவம் ஆகியவற்றை அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்வார்கள். வெறும் வார்த்தைகளால் மாத்திரம் செய்தி தொடர்பு கொள்ள முடியாது என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்கள், அவர்கள் யார் என்பதின் மூலமாக முடியும்.

செய்தி தொடர்பின் மாதிரி

"இவைகளால் செய்தி தொடர்பு கொள்ள முடியாது என்று சொல்லுவதற்கு நல்ல யோசனை என்று ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை: நல்ல யோசனை என்று வருத்தப்படுவதற்கு ஒன்றுமில்லை."

பின்வரும் மாதிரி எளிமையானது ஆனால் பயனுள்ள மாதிரியாகும். இதைப் படித்தால் செய்தி தொடர்பு நடைபெறும் விதத்தைக் குறித்து நீங்கள் சிறந்த முறையில் புரிந்து கொள்ள முடியும்.



மூல ஆதாரம் (Source): செய்தி தொடர்பாளரின் மனது. அங்கு தான் செய்தி தொடர்பு கொள்ள வேண்டிய கருத்து அல்லது எண்ணம் உதயமாகிறது. (குறிப்பு: மூல ஆதாரமாகிய மனதில் மாத்திரம் இருக்கும் கருத்து அல்லது எண்ணத்திற்கு மதிப்பில்லை, யாருக்கும்!)

E = Encoding – குறிப்பாட்டுக்கு உட்படுத்துதல்: இது ஒரு செயல் முறையாகும். இதிலே செய்தியானது மூல ஆதாரத்தின் முடிவின்படி சொற்களாக அல்லது குறியீடுகளாக வெளிப்பட்டு அதன் மூலமாக யாரோ ஒருவருக்கு செய்தி தொடர்பு கொள்ள முடிகிறது. (புரியாச் சொற்கள், சங்கேத முழக்கம், தெளிவற்ற வாக்கியம், தேவையான விளக்கமின்மை, என்ன அர்த்தத்தில் சொல்ல வருகிறோம் என்பதை தெரிவிக்காமல், அல்லது நாம் சொல்லுவதின் அர்த்தத்தை தெரிவிக்காமல் இருப்பது ஆகியவைகள் ஆபத்தானவைகள்)

Receiver – பெறுகிறவர்: யாருக்காக செய்தி சொல்லப்பட்டதோ அவர்கள்.

D = Decoding – குறி விளக்கம் செய்தல்: இது ஒரு செயல்முறையாகும். இதிலே பெறுகிறவர் செய்தியைப் பெற்று புரிந்து கொள்கிறார். (குறிப்பு: செய்தி தொடர்பு என்பது பெறுகிறவர் புரிந்து கொள்ளக்கூடிய வடிவத்திலே இருக்க வேண்டும்.)

Feedback – பின்னறித்தகவல்: இது பெறுகிறவராலே செய்தி பெறப்பட்டு புரிந்து கொள்ளப்பட்டதா இல்லையா என்பதை அறிந்து கொள்ள உதவும் ஆதாரமாகும். (உதா. செய்தியில் இருந்து உணரக்கூடிய கேள்விகள் எழும்புகிறதா அல்லது ஜனங்கள் எழுந்து வெளிநடப்பு செய்கிறார்களா!). செய்தி தொடர்பாளர்கள் பின்னறித்தகவல்களை ஊக்குவிக்க வேண்டும். இது அவர்களுடைய நோக்கத்தை எவ்வளவு தூரம் அடைகிறார்கள் என்பதை கணிக்க உதவி செய்கிறது. மற்ற ஜனங்கள் மேல் எந்தவித பாதிப்பை உண்டாக்குகிறார்கள் என்பதை அறியாமல் இருக்கிறார்கள் என்பது எத்தனை ஜனங்களுக்கு தெரியும். உதா. அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் மற்றும் எப்படி வாழ்கின்றார்கள்?. செய்தி தொடர்பாளர் பெறப்பட்ட எந்த ஒரு பின்னறித்தகவலை எந்த ஒரு எதிர்கால செய்தியின் சிறப்பான குறிப்பாட்டுக்கு உட்படுத்த உபயோகப்படும் என்பதை நினைவில் கொள் (குறிப்பாக எந்த ஒரு செய்திகளில் கொடுக்கப்பட்ட ஜனங்களில் பின்னறித்தகவல் பெற வாய்ப்பு அளிக்கும் போது).

Fields of Experience – அனுபவப் பகுதிகள்: இது எந்த ஒரு செய்தி கொடுக்கப்படுகின்ற அல்லது பெறப்படுகின்ற அமையும் இடம் / சூழ்நிலைகள் ஆகும். நீங்கள் இன்னொரு நபரோடு தொடர்பு கொள்ளும்போது நீங்கள் உங்கள் முழு அனுபவ பகுதியை எடுத்துக்கொண்டு அடுத்தவருடைய அனுபவ பகுதியில் உள்ளார இடம்பெற செய்கிறார்கள். இது குறிப்பாட்டுக்கு உட்படுத்துதல் மற்றும் குறிவிளக்கம் செய்தல் செய்திதொடர்பு நிலையில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். முதிர்ந்த, ஆவிக்குரிய, ஞானமுள்ள கிறிஸ்தவன் எப்பொழுதும் அவர்களுடைய மற்றும் மற்றவர்களுடைய அனுபவ பகுதியைக் குறித்து கருத்தில் எடுத்துக்கொள்வார்கள். யார் அந்த நபர் (ஏனெனில் அவர் கேட்கப்போகின்ற காரியம் அவரில் பாதிப்பை ஏற்படுத்தும்): கால அளவீடு: மனநிலை: கேட்க, புரிந்துக்கொள்ளும் நிலை, சூழ்நிலை ஆகிய காரணிகள் இந்த பகுதியில் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

தனிப்பட்ட செய்தி தொடர்பு என்பது உங்களுக்குள் உள்ளார அமைந்திருக்கும் ஒன்றை உயர்த்தி மற்றவர்களிடத்தில் அவர்களுடையதாக போடுதலாகும். இது வெறும் வார்த்தைகள் அல்ல. உண்மையில் வார்த்தைகள் என்பது இவை எல்லாவற்றையும் சுமந்து செல்கின்ற எலக்ட்ரானிக் வயரின் ஒரு பகுதியாகும். செய்தி தொடர்பு பயனுள்ள வகைகளில் செய்வதற்கு, செய்தி ஏற்படும் மூல ஆதாரத்திலிருந்து குறிபாட்டுக்கு உட்படுத்துதல் அவசியமாகிறது. இது மற்ற நபரிடத்தில் செலுத்தப்பட்டு, பெறப்பட்டவரால் குறிவிளக்கம் செய்யப்படுதல் அவசியமாகிறது. பெற்றுக்கொண்டவர் தெளிவாக குறிப்பாட்டுக்கு உட்படுத்திய நோக்கத்தை குறிவிளக்கம் செய்யும் அளவீடு, அந்த அளவீட்டில் தான் பயனுள்ள செய்தி தொடர்பு ஏற்படும். அதே வேளையில் பல்வேறு காரணிகளாக சூழ்நிலைகள், மனநிலை, உள்ளார்ந்த எழுச்சிகள் போன்றவைகள் குறிப்பாட்டுக்கு உட்படுத்துதல் அல்லது குறிவிளக்கம் செய்தல் செயல்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்தி, ஆக்கப்பூர்வமான செய்திதொடர்பில் தடை செய்வோ, பாதிப்பை ஏற்படுத்தவோ செய்கிறது.

ஆக்கப்பூர்வமான செய்திதொடர்பு என்பது பலவேளைகளில் அடைவதற்கு கடினம் தான். எந்த ஒரு நபரோடு நபர் செய்தி, மூலஆதாரம் என்ன சொல்ல நோக்கம் கொண்டுள்ளதோ அதில் ஆரம்பிக்கிறது. இது பொதுவாக சிறிய மாற்றம் செய்யபட்டு (ஒரு அளவு வரை) மூல ஆதாரம் என்ன சொல்லுகிறது என்பதிலிருந்து (வார்த்தைகள் அல்லது அடையாளங்கள் அவர்கள் மற்றவர்களோடு செய்திதொடர்புக் கொள்ள உபயோகப்படுத்தும்போது). செய்தியானது பெறப்பட்டவராலே மேலும் திரிக்கப்பட்டு என்ன சொல்லப்பட்டது என்பதை கேட்கத் தவறுகிறார்கள் அல்லது மூல ஆதாரத்தின் நோக்கிலிருந்து வித்தியாசமான ஒன்றை புரிந்து கொள்கிறார்கள்(ஒரு வேளை வேறு ஏதோ ஒன்றை அவர்கள் கேட்க விரும்பியிருக்கலாம். அல்லது செய்தித் தொடர்பில் உள்ள ஒரு வார்த்தையை மூல ஆதாரம் கொண்ட அர்த்தத்திலிருந்து வித்தியாசமான அர்த்தத்தை நினைத்திருக்கலாம், மற்றும் பல.) ஆக்கப்பூர்வமான செய்தித் தொடர்பின் இரகசியம் என்னவென்றால் இப்படிப்பட்ட திரிபுகளை குறைப்பதாகும். அப்பொழுது தான் மூலஆதாரம் சொன்ன நோக்கத்தை புரிந்து கொள்ளவோ கிரகித்துக் கொள்ளவோ பெறுகிறவரால் முடியும்.

செய்தித் தொடர்பின் விளைவுகள்

செய்தி தொடர்பு என்பது இருவழிச் செயல்பாடு, உதா.பரப்புதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவைகள் இசைவு நிலை, செயல்பாடு மற்றும் புரிந்துகொள்ளுதலை உயர்த்துவதற்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. செய்தித்தொடர்பு என்ன செய்ய வேண்டும் என்பதை பின்வரும் அட்டவணை விளக்குகிறது.

அறிவித்தல்	பதிலை/தடையை எடுத்துப்போடுதலை	வழங்குகிறது
ஊக்கமூட்டுதல்	ஆர்வமூட்டுதல் /தரிசனத்தை	வழங்குகிறது
குறைத்தல்	விடுதலை(உதா.மனக்காயத்திலிருந்து, மற்றும் பல)	வழங்குகிறது
நேரடியாக	வழிகாட்டுதலை	வழங்குகிறது
அறிவுறுத்தல்	உதவியை	வழங்குகிறது
சரிசெய்தல்	ஒழுக்கநெறிப்படுத்துதலை	வழங்குகிறது
தெளிவாக்குதல்	விளக்கமளித்தல் /நேர்வழிப்படுத்துதலை	வழங்குகிறது

விரிவாக்குதல்	உள்நோக்கத்தை	வழங்குகிறது
ஒற்றுமையாக்குதல்	பொதுசெயல்திட்டத்தை	வழங்குகிறது
இணைத்தல்	உறவுமுறைகளை	வழங்குகிறது
திருப்தியாக்குதல்	பங்குபெறுதலை	வழங்குகிறது
எதிர்கொள்ளுதல்	சவால்களை/உறுதிப்படுதலை	வழங்குகிறது
பங்குபெறுதல்	ஐக்கியத்தை	வழங்குகிறது

செய்தித் தொடர்பின் வழிமுறைகள்

செய்தி தொடர்பு கொள்வதற்கு இரண்டு வழிமுறைகள் உள்ளன. முறைப்படியான மற்றும் முறைசாரா வழிமுறை.

(i) முறைப்படியான செய்திதொடர்பு

வார்த்தை அல்லது எழுத்துகள் ஆகியவைகளை நம்முடைய எண்ணம் / கருத்துகள் / உணர்வுகளை மற்றொரு நபரிடத்தில் தெரிவிப்பதற்கு முயற்சி செய்ய உபயோகப்படுத்துகிறோம். குறிப்பாணை எழுதுதல், கடிதம் எழுதுதல், பிரசங்கித்தல், போதித்தல் ஆகியவற்றில் நாம் உபயோகிக்கும் வார்த்தைகள் அல்லது நாம் செய்திகளை அனுப்புவதற்கு பயன்படுத்தும் சில இயந்திரமயமான செயல்பாடுகள், கருத்துகளையும், எண்ணங்களையும் ஒரு நபரிடத்திலிருந்து மற்றவரிடத்தில் தெரிவித்தலாகும். இந்த வடிவிலுள்ள செய்திதொடர்பானது வார்த்தை வடிவிலானது என்று கொள்ளலாம்.

(ii) முறைசாரா (வார்த்தை வடிவமற்ற)செய்திதொடர்பு

இது செய்தி தொடர்பின் மிக முக்கியமான வடிவமாகும். இதை தரிசனமுறை என்று கூட கூறலாம். நாம் செய்தி தொடர்பு கொள்ள வார்த்தையை முக்கிய காரணியாக பயன்படுத்தினாலும் ஒரு முழுமையான முறைசாரா செய்தி ஊடகங்கள் இருக்கின்றது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். நம்மில் இருக்கிற யாவும் செய்தித் தொடர்பு கொள்கிறது (நாம், எனவே செய்தி தொடர்பு கொள்கிறது என்று கருத்தில் கொள்வது அவசியமாகிறது)! உண்மையிலே நாம் உபயோகிக்கும் வார்த்தைகள் பல தனிப்பட்ட ஊடகங்களாகிய நமது மனநிலை, உள்எழுச்சி, நம்முடைய சூழ்நிலை ஆகியவற்றை தெரிவிக்கிறது. செய்தி தொடர்பு என்பது நாம் என்ன சொல்லுகிறோம் என்பதை விட மிக அதிகமான ஒன்று.

ஒரு புகழ்பெற்ற விஞ்ஞானி இவ்வாறு எழுகிறார், 'சில உளவியல் நிபுணர்கள் சொல்லுகிறார்கள், சரீரமொழி மிக முக்கியமானது ஏன் என்றால் உள்எழுச்சி பாதிப்புகள் எந்த ஒரு செய்தியிலும் 55% முக மற்றும் சரீர பாவனைகள், 38% தொனி ஏற்றத்தாழ்வுகள், 7% தான் வார்த்தை உபயோகங்களாகும். (அதாவது 93% படைப்பு 7% தான் வார்த்தை). இது எதை அர்த்தப்படுத்துகிறதென்றால் நமது சரீரம் நமது வாயை விட அதிக சத்தமாக பேசுகிறது என்பதை. அதே வேளையில் அர்த்தப்படுத்துகின்ற மற்ற காரியம் என்னவென்றால், நமது சரீரங்கள் நமது வார்த்தைகளிலிருந்து மாறுபட்டு இருக்குமானால், அவைகளை யாருடன் செய்திதொடர்பு கொள்ள முயற்சி செய்கின்றோமோ அவர்கள் புரிந்துக் கொள்ள அல்லது நமது வார்த்தையின் மீது நம்பிக்கை கொள்ள கஷ்டப்படுவார்கள். முறைசாரா (வார்த்தை வடிவமற்ற) செய்திதொடர்பில் உள்ள சில காரணிகள்:

- ✓ சில காரியங்களை நாம் எப்படி சொல்கிறோம். உதா. கடினமாக / மென்மையாக / வெறுப்புடன் / மெதுவாக / நிறுத்தி தொடர்தல் / விட்டுவிடுதல்
- ✓ நம்முடைய தோரணை, உதா. எப்படி நம்முடைய சரீரம் நேர்மறையான / எதிர்மறையான பதித்துக் கொள்ளக்கூடிய கருத்துகளை வெளிப்படுத்துகிறது.
- ✓ நம்முடைய முக பாவணை, உதா. பல்லை காட்டுதல் மற்றும் முக நெளிப்பு, சுளிப்புகள்
- ✓ நம்முடைய கரங்களை, கைகால்களை வைத்து என்ன செய்கிறோம், உதா. தாளம் தட்டுகிற கை விரல்கள், மெதுவாக தட்டும் கால் விரல்கள், அமைதியற்ற சலனமடைந்த அசைவுகள்.

- ✓ நாம் நடக்கும் விதம் / நம் சரீர நிலைகள். உதா. நம்பிக்கையுடன், பயத்துடன், மற்றும் பல.
- ✓ தொடுதல் உதா. கட்டி அணைத்தல், கை குலுக்குதல், பாசத்துடன் கையினால் மென்மையாக தடவுதல்
- ✓ நாம் உடை உடுத்தும் விதம்
- ✓ நமது செய்கைகள் மற்றும் நாம் வாழும் விதம் (ஏனென்றால் அது பொதுவாக நமது வார்த்தைகளை விட சத்தமாக பேசும்)
- ✓ கண்ணால் ஏற்படும் தொடர்பு
- ✓ நமது விருப்பு / வெறுப்பு
- ✓ நம்மை சுற்றி நமக்கு தேவைப்படும் இடம்
- ✓ நமது பிரசன்னம் / அந்த இடத்தில் இல்லாமை

நபருக்கு நபர் உள்ள செய்தி தொடர்பு

"மனுஷனுடைய இருதயத்திலுள்ள யோசனை ஆழமான தண்ணீர் போலிருக்கிறது: புத்திமானோ அதை மொண்டெடுப்பான்" (நீதிமொழிகள் 20:5)

அநேக ஜனங்கள் தாங்கள் உள்ளார என்ன உணருகிறார்கள், தங்கள் அறிவிலுள்ள கருத்துகளை மற்ற ஜனங்களுக்கு விளக்க விரும்புகிறார்கள். (வார்த்தையில் தெரிவிக்க) ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு ஜீவனுள்ள புஸ்தகம் இருக்கிறது, அது எழுதப்பட்டிருக்க வேண்டும். இதை செய்வதற்கு நம்மில் அநேகரை தடை செய்கிற காரியம்என்னவென்றால், இந்த கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு நம்மில் பலருக்கு தைரியமோ, தெளிவோ அல்லது திறமையோ கிடையாது. சிறந்த சிந்தனையாளர்கள் மாத்திரமே வழக்கமாக தங்களுக்குள் என்ன இருக்கிறது என்பதை சொல்லக்கூடிய வரம் பெற்றவர்கள். நபருக்கு நபர் உள்ள செய்தி தொடர்பு இரண்டு காரியங்கள் அடங்கியுள்ளன: ஒருவருக்குள் உள்ள உறவு மற்றும் ஒருவருக்கொருவர் உள்ள உறவு

ஒருவருக்குள் உள்ள உறவு: இது நமக்குள் போகும் காரியங்களான சிந்தித்தல், உணர்தல், தங்களை வெளிப்படுத்தல் ஆகியவற்றை குறிக்கிறது. நமக்குள் என்ன போகிறது என்பதை குறித்து கவனமாயிருக்க வேண்டும், இல்லாமல் கவனக்குறைவாக இருந்தால் அது யாருக்குள்ளும் செல்லும். ஒருவருக்கொருவர் உள்ள உறவு: இது நாம் மற்ற ஜனங்களோடு தொடர்பு கொள்ளும் போது, நம் இருவருக்கும் இடையே என்ன நடக்கிறது என்பதை குறிக்கிறது. இதை இரண்டு பகுதியாக பிரிக்கலாம்: நம்முடைய மற்றும் மற்றொரு நபருடைய.

(i) நம்முடைய

"கிறிஸ்தவ ஊழியத்தில், சபையின் தலையாகிய கிறிஸ்துவுடனே சரியான நேரடி தொடர்பு … திருப்திப்படுத்தும், பயனுள்ள கிடைமட்ட தொடர்பு வளர்ந்து பராமரிக்கப்படுவதற்கு முன் மிகவும் தேவையாயிருக்கிறது."

நம்முடைய சொந்த இருதயத்தில் விடுதலையாக உள்ளோமா என்பதை நாம் அறிய வேண்டும் மற்ற ஜனங்களோடு விடுதலையாக இருப்பதற்கு முன். நாம் யாருடனும் செய்தி தொடர்பு கொள்ளுவதற்கு முன் நம்முடைய உள்ளான தன்மையில் சரியாக உள்ளோமா என்பதை உறுதிப்படுத்தும் இடத்தில் இருக்கிறோம். ஆக்கப்பூர்வமான செய்தி தொடர்பில் அடங்கியிருக்கின்ற சில முக்கியமான காரணிகள்:

- ✓ அறியப்பட்டும் அறிந்தும் இருந்தால்
- ✓ நமக்குள் இருக்கும் தீர்க்கப்படாத உணர்ச்சி கொந்தளிப்புகள் நல்ல செய்தி அதிகமாக பாதிக்கும், உதா. கவலை, பயம், கோபம், தவறான ஒப்பீடுகள், மன்னியாத தன்மை, தவறான இசைவு நிலை, மறைந்து கொள்ளுதல், தவறாக புரிந்துக் கொள்ளுதல், குழப்பம், ஊக்கமிழத்தல், திரிந்து கூறுதல் மற்றும் பல.
- ✓ களைப்பும் பயனுள்ள செய்தி தொடர்பை பாதிக்கும், முக்கியமாக மற்ற நபரிடத்திலிருந்து போதுமான அளவு கேட்கும் நம்முடைய திறமையை மட்டுபடுத்தும்
- ✓ இடர் தரும் ஆள்களால் ஆளுமையில் வரும் பிரச்சனைகள். நம்முடைய பெலத்தையும், பெலவீனத்தையும் குறித்து கவனமுடையவர்களாக இருக்க வேண்டும், தேவைப்பட்டால் உதவி பெற வேண்டும்.

- ✓ முன்தோன்று கருத்துகள் / தவறான கருத்துகள்.
- ✓ மற்ற ஜனங்களைக் குறித்து / இடத்தைக் குறித்தான நம்முடைய நிலைப்பாடு. நம்முடைய ஒருதலைச் சார்பு நிலையைக் குறித்து அறிந்திருக்க வேண்டும்.
- ✓ செயல்பாட்டில் ஊடகத்தில் ஏற்படும் குழப்பம். பிரசங்கத்தில், கடிதத்தில் மற்றும் பலவற்றில் உபயோகிக்கும் வார்த்தைகள் ஆக்கப்பூர்வமான செய்தி தொடர்பை ஏற்படுத்தியது என்று அர்த்தம் கொள்ள முடியாது. உண்மையில் நாம் நினைத்தது / எதிர் பார்த்தை விட சற்று வித்தியாசமான பயன்பாட்டை ஏற்படுத்திருக்கும்.

ஆக்கப்பூர்வமான செய்தி தொடர்பு கொள்ள நாம் முயற்சிக்கும்போது நம்மில் தேவைப்படுகிற, தொடர்புடைய சில அடிப்படை தத்துவங்கள்:

- ✓ திறந்த நிலை (நம்மில் திறந்த நிலை இல்லாவிட்டால், ஆக்கப்பூர்வமான செய்தி தொடர்பு ஏற்படாது)
- ✓ நேர்மையான நிலை (அதிகப்படுத்தி கூறுவதோ, மறைத்து கூறுவதோ கூடாது)
- ✓ தெளிவான நிலை (நாம் என்ன சொல்லுகிறோம் என்பதல்ல, என்ன கேட்கிறார்கள் என்பது முக்கியம்)
- ✓ விழிப்பான நிலை (நம்மைக் குறித்தும், மற்ற ஜனங்களைக்குறித்தும்)
- ✓ காயப்படக் கூடிய நிலை(சில நேரங்களில் நாம் தவறுகிறோம் / அறியாமல் உள்ளோம் / தேவையில் உள்ளோம் / மற்றும் பல, என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்)
- ✓ கருத்தேற்புள்ள நிலை (குறைந்த பட்சம் நாம் பேசும் அளவுக்காவது கேட்க வேண்டும்)

(ii) நமது செய்தி தொடர்பை பாதிக்கும் தனிப்பட்ட காரணிகள்

கிறிஸ்தவர்களுக்கு ஊடகம் தான் செய்தியல்ல என்பதை நாம் சொல்ல வேண்டிய அவசியம் இருந்தபோதிலும் பல நேரங்களில் ஊடகம் எதிரான வழியில் செய்தியை திரிக்கவோ பாதிக்கவோ செய்கிறது. மற்றொரு விதத்தில் நம்முடைய தனிப்பட்ட தோற்றமும் நல்ல செய்திதொடர்பு கொள்ளுவதற்கு சில நேரங்களில் உதவி செய்கிறது. ஊழியத்திற்கும், பொதுஜன செய்திதொடர்புக்கும் வாழ்க்கை முழுவதுமான ஒழுக்கநெறியும், தனிப்பட்ட பயிற்சியும் அவசியமாகிறது. இந்தக் காரியங்கள் வழக்கமாக பொதுவான இடத்தில் தொடங்குவதில்லை. ஆனால் ஆழமான தனிப்பட்ட மற்றும் நம்முடைய வாழ்க்கையின் தனிப்பட்ட பகுதியான உள்ளடக்கியதாக இருக்கிறது. பின்வரும் சில தனிப்பட்ட காரணிகள் ஒருவருக்கொருவர் உள்ள செய்தி தொடர்பை பாதிக்கவோ அல்லது மேன்படுத்தவோ உதவும்.

- ✍ **தோற்றம்**: இன்றைய சூழ்நிலையில் இருக்கும் பலதரப்பட்ட நடைஉடை விருப்பங்களில் சரியான வழிகாட்டிநெறியை வழங்குவது கடினம். எவ்வாறு இருந்தாலும் சுத்தம் சுகாதரமாய் இருப்பதும் பொதுவாக நல்ல நிலைமையில் உள்ள தனிப்பட்ட தோற்றம் மற்றவர்களோடு சம்பாஷணை செய்கிற கிறிஸ்தவர்களுக்கு தேவையாய் இருக்கிறது. உடை போன்ற விஷயங்களில் இது தான் சட்டதிட்டமான நடைமுறை என்று கூறுவது கடினம். ஆனால் எல்லோராலும் பொதுவாக அங்கிகரிக்கப்படக்கூடிய நல்ல உடையை உடுத்துவது நல்லது. (உதா. நல்ல ரசனையான, தன்னடக்கமான) அவைகள் எல்லா வித சூழ்நிலையிலும் பொருந்தக்கூடியதாய் இருக்க வேண்டும். சில நேரங்களில் நீங்கள் போகிற இடத்தைப் பொறுத்து அதற்கேற்ற உடை அணிய வேண்டும். நீங்கள் உடுத்துகிற விதம் எந்த வகையை சார்ந்தவர்கள் நீங்கள் என்பதை வெளிப்படுத்தும். என்ன உடுத்த வேண்டும் என்பதை தேர்ந்தெடுப்பதில் கவனம் செலுத்த வேண்டிய சில காரணிகள்:
  - ⏩ நீங்கள் தேர்ந்தெடுத்து உடுத்துகிற விதத்தில் உள்ள மனஎழுச்சி, நீங்கள் யாரோடு செய்தி தொடர்பு கொள்ள முயற்சி செய்கின்றீர்களோ, அவர்களின் மனஎழுச்சியை பாதிக்கிறது.
  - ⏩ உங்களுடைய செய்தி தொடர்பு அமையும் இடத்தில் உங்கள் உடை எந்த விதமான அர்த்தத்தை வெளிப்படுத்துகிறது. (நினைவில் வைத்துகொள்ளுங்கள், சமுதாயம் அதனுடைய சமுதாய விதிமுறைகளை நடைமுறை படுத்துவதற்கும், குணாதிசயத்தை கட்டுப்படுத்துவதற்கும் உடையை பயன்படுத்துகிறது)

- எப்படி, எதை உடுத்துகிறீர்கள் என்பதை உள்ள நிலைப்பாட்டையும், செயல்பாட்டையும் வெளிப்படுத்துகிறது.
- நீங்கள் உடுத்துகிற விதம் தேவனுக்கு மகிமை கொண்டு வருகின்றதா? அல்லது நீங்கள் தேவனுக்கு செய்யும் சேவையை தடைசெய்யவோ, உதவவோ செய்கிறதா? (உதா. சாட்சியாயிருக்கிறதா? / கிறிஸ்துவோடுள்ள உங்கள் உறவை வெளிப்படுத்துகிறதா?)
- பெண்களுக்கு உடை, அலங்கார காரியத்தில் நாணம், பணிவு மற்றும் சமநிலை முக்கியத்துவம் பெறுகிறது.

- **தனிப்பட்ட சுகாதாரம்**: ஊழியமும், பொதுஜன செய்தி தொடர்பும், அதிகமாக நேருக்கு நேர் நெருங்கிய நிலையில் பங்கு கொள்கிறது. வாய் துர்நாற்றம், பற்சிதைவு, சரீர நாற்றம், ஆடையின் துர்நாற்றம், சுத்தமில்லாத சீவப்படாத முடி, திருகியிருக்கும் சட்டையின் கழுத்துப்பட்டை, வெட்டப்படாத அழுக்கான விரல் நகங்கள், மற்றும் பல. இவையெல்லாம் மற்ற ஜனங்களிலிருந்து விலக்குகிறது, மேலும் செய்திதொடர்பு ஆக்கப்பூர்வமான விதத்தில் அமைய மிகபெரிய தடையை உண்டாக்குகிறது. இதற்கு புகைப்பிடித்தல் வெளிப்படையான உதாரணம். சுவாச காற்றில் வெளிப்படும் சிகரெட் புகையின் சகிக்க முடியாத துர்நாற்றம் ஒருவருக்கொருவராக வெற்றிகரமான செய்தி தொடர்பை கொன்றுவிடும். தனிப்பட்ட சுத்தம் என்கிற காரியத்தில் நறுமணம் என்கிற அடுத்த முனைக்கு செல்வதும் சரியான முக்கியத்துவம் பெறுகிறது. (நடமாடும் நறுமண கடையாய் இருக்கும் நபரால் வெற்றிகரமான செய்திதொடர்பு கொள்ளுவது சற்று கடினம்).

- **ஆளுமையின் சிறந்த பண்பு**: நாம் யாவரும் இதை உடையவர்களாய் இருக்கிறோம். நீங்கள் அவைகளை அடையாளம் கண்டு கொள்ளுவது முக்கியமாகும். அதை உங்கள் செய்திதொடர்பில் (கடவுளின் உதவியோடு) உதவி செய்யும் காரணி அமைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும், தடை செய்யும் காரணியாய் அல்ல. அடிப்படை குணாதிசயத்திலுள்ள குறைபாடுகளை அழிப்பதோ, அவைகளோடு இடைப்படுவதோ எப்பொழுதுமே மிக கடினமாகும். சிறந்த காரியம் என்னவென்றால், அவைகளை அடையாளம் கண்டு ஒழுக்கநெறிக்கு உட்படுத்தி செய்தி தொடர்பு ஊழியத்தில் பலனை பெற்றுதரும் கால்வாயாக மாற்றுவது தான்.

- **பழக்கவழக்கங்கள்**: ஒரு நபருடைய பழக்கவழக்கங்கள் பொதுவாக அவரை பிரதிபலித்து காட்டுவதாக இருக்கிறது. அவருடைய வீடு, அலுவலகம், அறை பாருங்கள் அவருடைய வாழ்க்கையின் நுண்ணளவை நீங்கள் காணலாம். துப்பரவற்ற, அசுத்தமான பழக்கவழக்கங்கள் செய்தி தொடர்பு அமையும் இடத்தில் அவரைக் குறித்து வெளிப்படுத்துகிறது. முழுநேர கிறிஸ்தவ தலைவர்களின் ஒரு முக்கியமான பழக்கவழக்கம் அவர் அலுவலகத்தில் இருக்கும் விதம் வருகிற நபரிடத்தில் எந்த வார்த்தையும் பேசுவதற்கு முன் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை வெளிப்படுத்தும் (உதா. முறைச்சாரா, இளைப்பாறுகிற, துப்புரவற்ற, கடுமையாக, அதிகாரத்துடன், செயல் ஆற்றுகின்ற, மற்றும் பல?) கிறிஸ்தவ தலைவர்கள் அலுவலகத்தை எப்படி அமைத்து கொள்ள வேண்டும் என்பதை கற்றுக் கொள்ள வேண்டும். சரியான விதத்தில் அமைந்து இருக்கும் போது தான் அதிலிருந்து செய்யப்படும் செய்தி தொடர்புகள் விரும்பிய விளைவுகளை கொண்டுவருவதற்கு சரியான சூழ்நிலை உடனடியாக ஏற்படுத்தி கொடுக்கும். (உதா. மேசைக்கு பின்னால் அமருதல், நீங்கள் வியாபார சம்பந்தமான தொடர்பு நிலையை போல் சுருக்கமான நேரத்திற்குள்ளாக இருக்கின்றீர்கள் என்பதை வெளிப்படுத்துகிறது, அல்லது சந்திக்க வந்தவருக்கு அருகில் நாற்காலியில் மேசை விட்டு தூரமாய் அமருவது இது முறைச்சாரா சம்பாஷணை, நீங்கள் கேட்பதற்கு அதிகமான நேரத்தை உடையவர்களாக உள்ளீர்கள் என்பதை தெரிவிக்கிறது.)

(iii) மற்ற நபர்கள்

நாம் வெற்றிடத்தில் செய்தி தொடர்பு செய்யாமல், நம்மைப் போல் உள்ள மற்றொரு நபரிடத்தில் செய்தி தொடர்பு கொள்கிறோம் என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் என்ன சொல்லுகிறோம் என்பது அந்த நபரின் அனுபவம், திறமைகள், சூழ்நிலைகள், மனயெழுச்சிகள், முன்எண்ணங்கள், முன்கருத்துகள் ஆகிய வலைப்பின்னலை பொருத்தது. எனவே நாம் மற்றவர்களை பற்றி அறிய பின்னறித்தகவல் பெற உற்சாகப்படுத்த வேண்டும். அதை பொறுத்து செய்தி தொடர்பு இருக்க வேண்டும். நபருக்கு நபர் செய்தி தொடர்பில் நாம் கருத்தில் கொள்ள வேண்டிய மற்றவர்களுடைய காரியங்கள்:

- தனிப்பட்ட மனச் சமநிலை (உதா. செய்தி தொடர்பு சமயத்தில் நாம் உள்ளார என்ன உணருகிறோம்)
- ஒருதலை சார்பு நிலை (உதா. உணர்ச்சிபூர்வமாக, சமுதாய நிலைமையில், உபதேச நிலையில், அறிவுப்பூர்வமாக எதை அவர்கள் விசுவாசிக்கின்றார்கள்)
- புரிந்துக் கொள்ளும் தன்மை (நாம் குறிப்பட்ட வார்த்தைகளை, அடையாளங்களை, மொழிகளை உபயோகிக்கும் போது நாம் புரிந்து கொள்ளுகின்ற மாதிரி மற்ற நபர்களும் புரிந்து கொள்ளுகிறார்களா)
- முன்தோன்றி யோசனைகள் (உதா. நாம் சொல்லுகிறதை உண்மையிலே அவர்கள் கேட்கின்றார்களா)
- அமையும் சூழ்நிலைகள்(பெற்றுக்கொள்ளுவதற்கு தடையாக ஏதாவது காரணிகள் உள்ளனவா, உதா. அதிக புழுக்கமாக உள்ள இடமா அல்லது குழந்தைகளின் சத்த தொந்தரவு உள்ள இடமா)
- மூல ஆதாரம் / அனுப்புகிறவர் என்ற நிலையில் நம்மை குறித்த எண்ணம் (உதா.செய்தி தொடர்பின் நேரத்தில் நம்மை குறித்து என்ன நினைக்கின்றார்கள், நம்மிடத்தில் எவ்வாறு செயலாற்றுகின்றனர்)
- பெயர் (அநேக ஜனங்கள் மற்றவர்கள் தங்கள் பெயரை உபயோகிப்பதை கேட்க விரும்புகிறார்கள்)

(iv) உள்ளே செல்லும் வழி

"செய்தி தொடர்பு என்பது சொல்வது மாத்திரமல்ல, செய்தி தொடர்பு என்பது கேட்பது, சொல்வது, கவனிப்பது பின்பு புரிய வைத்தலை உருவாக்குதல் ஆகும்."

நாம் என்னத்தை தொடர்பு கொள்ள விரும்புகிறோம், மற்றவர்களைப் பற்றி எதை நாம் விரும்புகிறோம் என்பதற்கு நேரடித்தொடர்பு உள்ளது. அதிக சிக்கலான காரியமாகிய இதை இரண்டு பகுதியினரும் புரிந்து கொள்ளுவதற்கு ஆழமான புரிந்து கொள்ளும் திறன் தேவை. உதா.'தயவு செய்து கதவை மூடுங்கள்' இதை செய்ய வைப்பதற்கு மற்ற நபரை பற்றிய அதிகமான தனிப்பட்ட அறிவு தேவையில்லை. ஆலோசனை நேரத்தில் வந்த நபரிடத்தில் செய்ய சொன்னால் செய்து விடுவார்.

மேலும் ஒரு தலைவர் விரிவுரையோ, பிரசங்கமோ செய்யும் போது கண்டிப்பாக அதை ஒரு நாடகமாக கணிக்க முடியாது. உங்களோடு சேர்ந்து பார்வையாளர்கள் / சபையார் / வகுப்பறையிலுள்ளோர் யாவரும் பங்கு கொள்ளுகிறார்கள். உண்மையிலே நீங்கள் சொல்லுகின்ற செய்தியின் முழு பயன்பாட்டை அனுபவிக்க போகிறவர்கள் அவர்கள் மாத்திரம் தான். நல்ல செய்திதொடர்பாளர் கேட்பவர்களிடமிருந்து மறுஉத்தரவை எதிர்பார்ப்பார்கள். தாங்கள் சொல்லுகிற காரியம் கேட்பவர்களை தொடர்புக்கொள்ளுகின்றதா என்பதை எப்பொழுதும் பார்ப்பார்கள் (அவருடைய சரீர அசைவுகளை வைத்து தெரிந்துக் கொள்ளுவார்கள்- சரீர மொழி) எனவே அவர்கள் அடிக்கடி தங்களிடமும், யாரிடம் செய்தியை சொல்ல முயற்சி செய்கின்றார்களோ அவர்களிடமும் கேள்விகளை கேட்டுக் கொள்வார்கள் (உதா. இந்த ஜனங்கள் என்னை நம்புகின்றார்களா? அல்லது ஜனங்கள் தவறான வழியில் கவர்ந்திழுக்கப்படுகின்றார்களா / நேர்மையற்ற தன்மையை உணருகின்றார்களா?)

நபருக்கு நபர் உள்ள செய்தி தொடர்பில் கேள்வி கேட்பது முக்கியம். செய்தி தொடர்பாளர் வெற்றிகரமான செய்தி தொடர்பு நடைபெறுவதற்கு வசதியாக சற்றாகிலும் அவர்கள் மனதை அறிந்து கொள்வது முக்கியமாகும். காரணம் என்னவென்றால், செய்தி தொடர்பு நடைமுறை படுத்தப்படுகிற வேளையில் அவர் உபயோகிக்கும் வார்த்தைகள் மற்ற நபரால் எப்படி புரிந்து கொள்ளப்படும் என்பதை செய்தித் தொடர்பாளர் அறிவது அவசியம். மற்ற நபர்களுடைய புரிந்துக் கொள்ளுதல் அவர்களுடைய பிறப்பு, அவர்கள் வளர்க்கப்பட்ட விதம், அவர்களுடைய சூழ்நிலை, படிப்பின் விதம், எந்த நிலை வரை, அவர்களுடைய வேலை மற்றும் பலவற்றினால் பாதிக்கப்படலாம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

செய்தித் தொடர்பு செயல்படுத்தப்படும் வேளையில் செய்தி தொடர்பாளர் உபயோகிக்கூடிய பல தரப்பட்ட கேள்விகள்:

- அறிவுப்பூர்வமானவைகள் (புள்ளி விபரங்கள் / உண்மை நிலவரங்கள் பற்றிய கேள்விகள் மற்றும் பல. அவைகள் பொதுவாக எதிர்ப்புக்கு இடமற்றவைகளாக இருக்கும்)
- கருத்துப்பூர்வமானவைகள் (யோசனைகள் / சிந்தனைகள் / ஆலோசனைகள் போன்ற கேள்விகள் மற்றும் பல. அவைகள் பொதுவாக தீமை விளைவிக்காதவைகள்)
- மதிப்பீடு (சுயபரிசோதனை / சுயமதிப்பீடு போன்ற கேள்விகள் மற்றும் பல. இது பாதுகாப்பு நிலையை உருவாக்கும் அல்லது ஞானமாய் கேட்காவிட்டால் பிரிவினையை உண்டாக்கும்)
- திறந்த நிலை கேள்விகள் (ஒரு நபர் தன்னுடைய மனம்திறந்த கருத்துகளை வெளிப்படுத்த அழைத்தல்: உதா. ''இந்த சூழ்நிலையில் என்ன செய்வீர்கள்?'').
- மூடிய நிலை கேள்விகள் (ஒரு நபர் தனக்கு சொந்தமில்லாத கருத்தை ஏற்றுக்கொள்ளும் படியாக கட்டாயப்படுத்துதலின் முயற்சி. உதா. 'இந்த செய்கை உங்களுடைய ஆசீர்வாதத்திற்கான உயர்விற்கு தீங்கு செய்யும் எனவே நீங்கள் உண்மையிலே இந்த செய்கையில் தொடர விரும்புகிறீர்களா?')
- வழி நடத்தும் கேள்விகள் (பதில் அளிப்பதற்கு ஏதுவாக நடத்தும் ஆனால் பதிலுக்கு தடை விதிக்காது: உதா. 'இந்த தீர்மானத்திற்கு நீங்கள் எப்படி வந்தீர்கள்?')
- நிரப்பபட்ட கேள்விகள் (இவை பாதுகாப்பை உண்டாக்கும். ஏனெனில் கேள்வி கேட்பவர் கேட்க விரும்புகிற பதிலை மாத்திரம் பதிலாகக் கொண்டவைகள்: உதா. 'இந்த சரியான முடிவை எடுப்பதற்கு பூமியின் மேலே எது சிந்திக்க உதவியது?')
- இதமான கேள்விகள் (காரணத்திற்கு நேராக மென்மையாக நடத்தும் மற்றும் சிறிதளவு உணர்ச்சிகளுக்கும் இடமளிக்கும்: உதா. 'நம்முடைய அடுத்த செயல்பாடு என்னவாக இருக்கும்?')
- சூடான கேள்விகள் (நம்முடைய உணர்ச்சிகளை மறுதலிக்கவும், எதிர்மறையான உணர்ச்சிகளை தூண்டிவிடும் பதில்களை கேட்பவர்கள் மத்தியில் எழுப்பும்: உதா. 'இந்த தீர்மானத்தைக் குறித்து நான் என்ன நினைக்கிறேன் என்பதை உனக்கு சொன்னேன், எனவே நாம் என்ன செய்ய வேண்டும் என்று நீ நினைக்கிறாய்?')

''மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்: அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்'' (நீதிமொழிகள் 18:21)

(v) செய்தி தொடர்பின் செயல்பாடுகள்

ஒரு நபரோடு உள்ள செய்தி தொடர்பில் ஆக்கப்பூர்வமான விதத்தில் செய்தி வெளிப்பட மூன்று படிகள் உள்ளது. முதல் படி அந்த நபரின் கவனத்தை ஈர்த்தல். (உதா. உங்களுக்கு செவிசாயக்க தயார்படுத்துதல்). இரண்டாவது படி நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்பதற்கும் ஜனங்கள் என்ன கேட்க விரும்புகிறார்கள் என்பதற்கும் பாலம் அமைக்க வேண்டும். இதை செய்வதற்கு, நீங்கள் அதில் யார் என்பதையும்,

மற்ற ஜனங்கள் உங்களோடு என்ன தொடர்பில் உள்ளார்கள் என்பதையும் நீங்கள் புரிந்துக் கொள்ள வேண்டும். (உதா. சமுதாயத்தில், கல்வியில், அறிவில், மற்றும் பல.) இதை சார்ந்த நிலையில் உங்கள் செய்தி தொடர்பிற்கான வார்த்தைகளை தெரிந்து கொள்ள வேண்டும். (உதா. அவர்கள் என்ன புரிந்து கொள்ள நீங்கள் நினைக்கின்றீர்களே அதை குறிப்பிட்ட நபர் புரிந்து கொள்ளக்கூடிய ரீதியில் இருக்க வேண்டும்). தேவையற்ற வார்த்தைகளால் செய்தி தொடர்புக்கு இடையூறு செய்ய கூடாது என்பதை நினைவில் கொள்க. முடிவாக, பொருந்த செயலை செய்யும்படியாக நீங்கள் கேட்க வேண்டும் (இது தான் முழு குறிப்பிலும் முதன்மையான இடத்தை பிடிக்கிறது)

(vi) செய்தி தொடர்பில் செவிசாய்தலுக்குரிய இடம்

செவி சாய்த்து கேட்கும் விதத்தை ஒரு தலைவர் வளர்ந்துக் கொள்ளுவது மிக முக்கியமாகும். ஏனெனில் ஒவ்வொரு நாளும் செய்தி தொடர்பில் 45% செவிசாய்த்து கேட்பதில் செலவழிகிறது (அதனுடன் சராசரியாக 30% பேசுவதிலும், 9% எழுதுவதிலும், 16% வாசிப்பதிலும்). ஒவ்வொரு நாளும் 80% ஏதாவது ஒரு செய்திதொடர்பில் செலவழிகிறது எனவே செய்தி தொடர்பின் நேரத்தை தரமுள்ள ஒன்றாக மாற்றுவது மிக முக்கியமானதாகும்.

செவிசாய்த்து கேட்பது என்பது: அறிந்து செய்யும் முயற்சி எடுத்து கேட்டல், கவனத்துடன் கேட்டல், வாய்மொழி அடையாளங்களுக்கு அர்த்தம் காண முயற்சி செய்தல், செய்தியாளர் அல்லது பெறுகிறவர் குறியீட்டுக்கு உட்படுத்திய செய்தியை குறிவிளக்கம் செய்தல், சத்தங்களுக்கு மதிப்பீடு செய்தல், கிரகித்துக் கொள்ளுதல். செய்தி தொடர்பு செயல்பாட்டில் செவிக்கொடுத்து கேட்டல் என்பது முக்கிய பங்கு வகிக்கிறது. ஏனெனில் வெற்றிகரமாக அமைவதற்கு, செய்திதொடர்பாளர் பொதுவாக சொல்லப்பட்ட செய்தி கேட்டவர்களால் / பெற்றவர்களால் உண்மையிலே என்ன புரிந்துகொள்ளப்பட்டது என்பதை உறுதி செய்ய வேண்டும். உண்மையிலே, அநேக ஜனங்கள் ஆக்கப்பூர்வமான விதத்தில் செய்தி தொடர்பு கொள்ளுவதில்லை. ஏனெனில் அவர்கள் புரிந்துக் கொண்டிருப்பார்கள் என இவர்கள் நினைத்து கொள்ளுவது, இவர்கள் கேட்டு அதை தெரிந்து கொள்ளுவதில்லை. பின்னறித்தகவல் செயல்பாட்டில் செவிமடுத்து கேட்பது ஒரு பகுதியாகும். அது செய்திதொடர்பாளர் திருத்தி கொள்ள/ சரி செய்ய / உறுதி செய்ய உதவி செய்கிறது (தேவை ஏற்படும்போது). மேலும் செய்தி தொடர்பின் ஆரம்பத்தில் செவிக்கொடுத்து கேட்டல் முக்கியத்துவம் பெறுகின்றது (நாம் ஏற்கனவே பார்த்தது போல) ஏனெனில் செய்திதொடர்பாளர் செய்தி தொடர்பு கொள்ள போகிற நபர் எப்படிப்பட்டவர் என்பதை அறிய வேண்டும். (ஆகவே என்ன வார்த்தை உபயோகிக்க வேண்டும் மற்றும் பல). செவிக்கொடுத்து கேட்கும் போது, கவனத்துடன், விடாமுயற்சியுடன் மறைந்திருக்கும் அர்த்தத்தை காண விழிப்பு, சரியாக கேட்க முயற்சி செய்ய வேண்டும். கிறிஸ்தவ தலைவர்களும் என்ன கேட்கிறார்கள், எப்படி கேட்கிறார்கள் என்பதை கவனத்துடன் கவனிப்பது அவசியம். (மாற்கு 4:24; லூக்கா 8:18).

நல்ல தலைவர்கள் யாருக்கு மற்றும் யாரிடத்தில் பொறுப்பாளியாக இருக்கின்றார்களோ அவர்களிடத்திலிருந்து செவிக்கொடுத்து கேட்கின்றார்கள் (நீதி. 12:15; 13:18). இதன் அர்த்தம் என்னவென்றால் அவர்கள் அந்த நேரத்தில் ஆலோசனைக்கு / அறிவுரைக்கு செவிக்கொடுத்து கேட்கிறார்கள் மற்றும் மற்ற நேரத்தில் சீர்திருத்திக் கொள்ளுதல் அல்லது எச்சரிப்படைகிறார்கள். தூரதிஷ்டவசமாக, அநேக தலைவர்கள் செவிக்கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள். ஏனெனில் முரட்டாட்ட சுபாவமும், அவர்களிடத்தில் எல்லா சரியான பதிலும் தங்களிடத்தில் இருக்கிறது என்ற நம்பிக்கையும் தான். தேவன் நல்ல ஒரு செவிக்கொடுத்து கேட்கிறவர். அவர் தன்னுடைய தலைவர்களும், அவர் எப்படி நல்ல செவிக்கொடுத்து கேட்கிறவராக இருப்பது போல் மாதிரியாய் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். (முதலாவது அவருக்கு செவிக்கொடுத்தல், பின்பு ஜனங்களுக்கு: யாக் 1:19).

பின்வரும் நடைமுறை குறிப்புகள் தேவனுடைய தலைவர்கள் தங்களுடைய ஜனங்களுக்கு நல்ல விதத்தில் செவிகொடுத்து கேட்பதற்கு உதவி செய்யும்.

	கவன குறைவாக கேட்பவர்		நல்ல விதத்தில் கேட்பவர்
1.	விருப்பமில்லாத தலைப்புகளுக்கு கவனத்தை முற்றிலும் விலக்குதல்	1.	மற்ற ஜனங்களுக்கு சிறந்த முறையில் உதவி செய்ய முடிகின்ற எல்லா வழிகளிலும் தகவலை தேடுதல்.
2.	வெளிதோற்றத்தை, செய்யும் முறையை வைத்து பேசுகின்றவரை நியாயந்தீர்த்தல்	2.	வெளிப்பிரகாரமாக யார் சொன்னார், எப்படி சொன்னார் என்பதை விட என்ன சொல்லப்பட்டது என்பதை நியாயந்தீர்த்தல்
3.	பேச்சாளர் சொன்ன ஒரு கருத்தையே யோசித்துக் கொண்டு, அவர் சொன்ன மற்ற கருத்துகளில் கவனம் செலுத்தாமல் இருப்பது.	3.	உணர்ச்சிபூர்வமான செயல்பாடுகளை கட்டுப்படுத்திக்கொண்டு, பேச்சாளர் சொல்லுகிற முழு கருத்தையும் கிரகித்துக் கொள்ளுகிறார்கள்.
4.	குறிப்பு எடுப்பதில் எந்த பேச்சாளர் பேசினாலும் ஒரே விதமான அமைப்புமுறையை பின்பற்றுதல்	4.	பேச்சாளருக்கு தக்கவாறு வித்தியாசமான விதத்தில் குறிப்பு எடுத்தல்
5.	கேட்பதற்கு சிறதளவே கவனத்தை அல்லது சக்தியை செலவழித்தல்	5.	குறிப்பிடதக்க சக்தியை செலவழித்தல், கேட்பதற்கு அதிக பிரயத்தனமெடுத்தல்
6.	எளிதாக கவனசிதறலுக்கு உள்ளானவர்கள் அல்லது உண்மையிலே தங்களில் தானே உருவாக்கிக் கொள்வார்கள்.	6.	எவ்வளவு முடியுமோ அவ்வளவாய் கவனசிதறலை குறைந்து அல்லது அறியாமல் இருந்து விடுவார்கள்.
7.	புதிய சவால்களை தவிர்த்து, பேச்சாளர் குறிப்பிடுகின்ற வெவ்வேறு பகுதிகளை ஏற்றுக்கொள்ளும் தன்மை வளர்க்க மாட்டார்கள்.	7.	செய்தியின் எல்லா வகைப் பகுதிகளையும் கவனித்து, எல்லாவற்றிலும் முக்கியத்துவமானவைகளை காண்பதற்கு முயற்சி செய்தல்
8.	மூடிய மனநிலையில் செயல்பட்டு, உணர்ச்சிபூர்வமான வார்த்தைகள் இடையூறு செய்ய இடங்கொடுத்து, சூழ்நிலைகளை கவனமாய் மதிப்பீடு செய்தல்.	8.	திறந்த மனநிலையுடன் செயல்பட்டு, கவனமாய் பொருளடக்கத்தையும், சாராம்சத்தையும் கவனித்து, சொன்ன எல்லா காரியத்தின் முழுமையான அர்த்தத்தையும் காணுதல்.
9.	குறை கூறுவதற்கும், வேறுபாடான குறிப்புகளை கண்டுபிடிப்பதற்கும் கவனித்தல்	9.	கேட்கிற காரியம் சுவையில்லாததாக இருந்தாலும், ஏற்றுக்கொள்ள முடியாததாக இருந்தாலும், கவனத்துடன் கவனித்தல்
10.	எதை கேட்க விரும்புகிறார்களோ அதை மாத்திரம் கவனித்தல்	10.	புரிந்துக்கொள்ளுவதற்கும், மற்ற நபர்களோடு அதிக விளைவுகளுடன் செய்தி தொடர்புக் கொள்ள கவனித்தல்

நன்றாக செவிக்கொடுத்து கேட்கின்றவரின் செய்திதொடர்பு இவ்வாறு இருக்கும்:

- ❖ பேச்சாளருக்கு முழு கவனம் செலுத்துதல், ஏனெனில் இல்லாவிட்டால் செய்திதொடர்பின் பெரும் சதவீதத்தை இழந்து விடுவார்கள்.
- ❖ கேட்கும்போதே பொருத்தமான பதிலை அளித்தல் (உதா. தலையாட்டுதல், கண்களில் அவர்களை பார்த்தல், வார்த்தையில் உற்சாகப்படுத்துதல், வழிநடத்துகிற கேள்விகளை கேட்டல் மற்றும் பல.), ஏனெனில் பதிலை அளிக்காமல் கேட்பவர்களால், பேச்சாளரின் செய்திதொடர்பின் எந்த ஒரு முயற்சியையும் பகுதியாக குறைத்து விடும்.
- ❖ உண்மை செய்தி / அர்த்தத்திற்காக கவனித்தல் (உதா. வார்த்தை / சரீர செய்கைகள் / உணர்ச்சிகள் / நிறுத்தங்கள் / மற்றும் பலவற்றிற்கு அப்பாற்பட்டு செய்தியாளர் என்ன சொல்ல முயற்சிகின்றார்?)
- ❖ ஒரு நபரிடம் அதிகம் சொல்லுவதை நிறுத்துங்கள். ஏனெனில் இது அந்த நபருடன் நம்முடைய வேலை சம்பந்தமான தொடர்பை நாளைக்கு வெகுவாக பாதிக்கும். (உதா. உங்கள் அதிகார / தகுதி / பொறுப்பு வரம்பிற்குள்ளே செய்தியாளர் என்ன சொல்லுகிறார் என்று உங்களுக்குள்ளே கேளுங்கள்: அப்படி இல்லாவிட்டால், யார் அவருக்கு உதவ முடியுமோ, அந்த நபருக்கு நேராக வழிநடத்தி தாங்குங்கள்.
- ❖ பேச்சாளரே அவர்களுக்கு சொல்லட்டும், பொருந்தமான இடத்தில் மட்டும் மொழிபெயர்ப்பு செய்யுங்கள்.
- ❖ நேரத்தை உபயோகித்து, கேட்பதற்கு எவ்வளவு கற்றுக்கொள்ள முடியுமோ அவ்வளவு பேச்சாளரை பற்றியும், தங்களை பற்றியும் கற்றுக் கொள்ளட்டும். (அதே வேளையில் செய்தி தொடர்பில் செய்தியாளருடன் சில காரியங்களில் செயல்படுவார்கள்), மற்றும் செய்தியாளருடன் தொடர்பு கொள்ள. (எனவே தான் அவர்கள் மிக பயனுள்ள வழியில் அந்த நபருடன் செய்தி தொடர்புக் கொள்ளுவது சாத்தியமாகிறது.)

(vii) ஆறு திறவுகோல் கேள்விகள்

கீழே கொடுக்கப்பட்ட கேள்விகள் ஆக்கப்பூர்வமான செய்திதொடர்புக்கு மதிப்பற்ற உதவி செய்யும்.

முதல் மூன்று கேள்விகள் நம்மிடத்தில் பயன்படுத்த கூடியவைகள்.

⇨ நாம் என்ன சொல்ல அல்லது எழுத விரும்புகிறோம்?

⇨ நாம் உண்மையாகவே சொல்லுகிறோமா அல்லது எழுதுகிறோமா, சில நேரங்களில் நம்முடைய நல்ல நோக்கத்திற்காகவா?

⇨ நாம் என்ன சொல்லுகிறோமோ அல்லது எழுதுகிறோமோ அதை குறித்து பெற்றுக்கொள்ளுபவரின் உணர்ச்சிப்பூர்வமான பாதிப்பு என்ன?

மற்ற மூன்று கேள்விகளும் நாம் யாரிடத்தில் செய்திதொடர்புக் கொள்ள விரும்புகிறோமோ அவரிடத்தில் பயன்படுத்த கூடியவைகள்

⇨ அந்த நபர் வாசிக்க அல்லது கேட்க விரும்புகிற காரியம் எது?

⇨ அந்த நபர் உண்மையிலே எப்படி வாசிப்பவர் அல்லது கேட்பவர், உண்மையிலே என்ன பேசப்பட்டதோ அல்லது எழுதப்பட்டதோ அந்த நேரத்தை தவிர?

⇨ அந்த நபர் வாசித்த அல்லது கேட்டதைக் குறித்து எப்படி உணருவார்?.

செய்தி தொடர்பின் நோக்கம் என்னவென்றால், நாம் அவர்கள் என்ன புரிந்துக் கொள்ள விரும்புகிறோமோ அவ்விதமாய் மற்ற ஜனங்கள் புரிந்துக் கொள்ளுவதாகும்.

<u>செய்தி தொடர்பாளர், எனவே எவைகள் தேவைகள் என்பதை தேர்வு செய்ய வேண்டும்:</u>

- ⇨ அவர்களுக்கு சிறப்பு வாய்ந்தவைகள்: அப்போது தான் பெறுகிறவரால் ஏற்றுக்கொள்ளப்படும். (ஏனெனில், ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், செய்தியானது நிராகரிக்கப் படும்).
- ⇨ அவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவைகள், அப்போது தான் பெறுகின்றவருக்கு அர்த்தமுள்ளவைகளாக இருக்கும் (செய்தி தொடர்பாளர் வார்த்தைகளைக் காட்டிலும பெறுகின்றவர் வார்த்தையில்)
- ⇨ செய்தி தொடர்பாளருக்கு அர்த்தமுள்ளவைகளாக வார்த்தைகள் இருக்கும் பட்சத்தில் பெறுகின்றவரில் விரும்புகின்ற பாதிப்பை உண்டாக்கும்.

(viii) நபருக்கு நபர் செய்திதொடர்பு கொள்ளுவதில் உள்ள மூன்று குறிக்கோள்

கிறிஸ்தவர்களாக பொதுஜனங்களோடு செய்தி தொடர்புக் கொள்ளும்போது, எப்பொழுதும் உங்களுடைய நோக்கத்தில் மூன்று விரிவான குறிக்கோளை கடைபிடிக்க வேண்டும்:

- ⇨ அவர்களுடைய மனதை தெளிவுபடுத்து. சாத்தானுடைய குறிக்கோள் என்னவென்றால் அவிசுவாசிகளின் மனதை குருடாக்குவது தான் (எப்போது முடியுமோ அப்போது விசுவாசிகளையும்), எனவே கிறிஸ்துவின் ஒளி அவர்களுக்குள் பிரகாசிக்க முடியவில்லை (2 கொரிந்தியர் 4:4). கிறிஸ்தவர்கள் சத்தியத்தை பிரசங்கிக்க வேண்டும், ஏனெனில் சத்தியம் வெளிச்சத்தை கொண்டு வரும், வெளிச்சம் விடுதலையை கொண்டு வரும்.
- ⇨ உணர்ச்சிகளை கிளறிவிடுதல். உணர்ச்சிகளை குறித்து ஜனங்கள் மத்தியில் பெரிய பயம் இருக்கிறது, விசேஷமாக கிறிஸ்தவர்களில். உண்மை என்னவென்றால் தேவன் உணர்ச்சிகளை உண்டாக்குகிறார். கிறிஸ்தவ செய்திதொடர்பாளர் யாரிடத்தில் அவர்கள் செய்திதொடர்புக் கொள்ளுகிறார்களோ அவர்களிடத்தில், அந்த ஜனங்களை தன்னிடமாக இழுத்து கொண்டு வரும்படியாக சரியாக உள்ளார மறைந்திருக்கும் உணர்ச்சிகளை எழுப்பி விடவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். காரணகாரியத்திடம் முறையீடுவதைக் காட்டிலும், உணர்ச்சியிடம் முறையீடுவது மிக சுபலமானது. ஏனெனில், உணர்ச்சி ஜனங்களை பற்றிபிடித்துள்ளது, அது தான் ஜனங்களை கேட்கச் செய்கிறது. இருந்தபோதிலும், கிறிஸ்தவ செய்திதொடர்பாளர் உணர்ச்சித் தத்துவத்தை உபயோகித்து, ஜனங்களை சாதுர்யமாக கடடுப்பாட்டுக்குள் வைக்க கூடாது (உணர்ச்சிபூர்வமாக காரியங்களால் ஜனங்களை கட்டுபடுத்துதல்), ஏனெனில் கிறிஸ்துவுக்குள் இது தவறானது.
- ⇨ அவர்களுடைய சித்தத்தை செயல்படுத்தி வைத்தல். விசுவாசத்திற்கான முதல்படி சித்தத்தில் ஒரு செயல் ஏற்படுதலாகும். ஜனங்கள் தீர்மானிக்க வேண்டும். அவருடைய சிருஷ்டிப்பின் செயல்பாட்டில் இந்த பங்கை ஏற்புத்திறனாக அவர்களுக்கு தேவன் தந்திருக்கிறார். அவர்களுடைய சித்தத்தில் தேவன் முறையீடுகிறார், எனவே அந்த நபர்கள் தங்களுடைய பழைய வாழ்க்கையிலிருந்து திரும்பி (மனம்திரும்பி), அவருக்குள் புதியதொரு வாழ்க்கை வாழ ஆரம்பிக்கிறான்.

கிறிஸ்தவ செய்திதொடர்புகள் தோல்வியடைவதற்கு காரணங்கள்

- ➢ செய்தி தொடர்பாளர் தெளிவாக, எளிதாக, புரியும்படியாக பேச தவறுதல். கேட்கின்றவர் புரிந்துக்கொள்ளமுடியாத வார்த்தையையோ, அல்லது வாக்கியத்தையோ உபயோகிப்பதற்கு எந்த தேவையும் இல்லை (உதா. மண்வெட்டியை விவசாய கருவியாக அழைப்பது) எந்த ஒரு செய்தி தொடர்புக்குமான சிறந்த திட்டம் இதுவாகும். (எப்பொழுதெல்லாம் முடியுமோ), உதா. உங்களுடைய யோசனைகளையும், கருத்துக்களையும் உங்களுக்கு ஏற்றவாறு கூர்மையாகவும், ஒருங்கிணைக்கவும் செய்யுங்கள் (எல்லாவித உண்மைகளை தகவல்களை பெற்ற பின்பதாக வெற்றிகரமாக

செய்வதற்கு இதைச் செய்யவேண்டும்). நாம் செய்தி தொடர்பாளர்களுக்கு உபயோகப்படுத்தும்படியாக கூறுகிற ஞானமான அறிவுரை என்னவென்றால், 'அறிமுகம் இல்லாத இடத்தில் அறிமுகமான வார்த்தை; கொள்கை உள்ள இடத்திலே திட்டமான வார்த்தை; நீளமான இடத்திலே ஒரு குட்டையான வார்த்தை; பல வார்த்தை இடத்திலே ஒரே வார்த்தை'. செய்தி தொடர்பாளர் தாங்கள் விரும்புகிற விளைவைப் பெற சூழ்நிலைக் கேற்றவாறு சரியான வார்த்தையை உபயோகிக்க முயற்சிக்க வேண்டும். எப்பொழுதெல்லாம் முடியுமோ அப்பொழுதெல்லாம் செய்தித் தொடர்பாளர் கேட்பவர்களின் மொழியை உபயோகிக்க முயற்சிக்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு கூட்ட ஜனங்கள் மட்டும் புரிந்துக் கொள்ளகூடிய வார்த்தைகளை தவிர்க்க வேண்டும் (செய்தி தொடர்பாளர் அந்த குறிப்பிட்ட ஒரு கூட்ட ஜனங்களோடு மாத்திரம் செய்தி தொடர்பு கொள்ள முயற்சி செய்தால் ஒழிய). வார்த்தைகள் அகராதி விளக்கத்திலிருந்து அர்த்தத்தை எடுத்துக் கொள்ளாமல் வார்த்தை உபயோகிக்கப் படும்போது பேச்சாளர் மற்றும் கேட்பவர் என்ன புரிந்து கொள்கிறார் என்பதிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுகிறது என்பதை நினைவில் கொள்ளவேண்டும் (இது மிகப்பெரிய வித்தியாசத்தை உண்டாக்கும்)

- செய்தி தொடர்பாளர் தன்னுடைய வார்த்தைகள் நேர்த்தியாக தொனிக்க விரும்புகிறார். ஆகவே நேர்த்தியான இழைகளினால் உருவாக்குகிறார். தெளிவான காட்சிகளை மனதில் உருவாக்கக் கூடிய சரியான வார்த்தைகளை உபயோகிப்பது சரியானது (உண்மையிலே, சிறந்த செய்தி தொடர்பு இதை செய்யும் போது சாத்தியமாகிறது). கேட்கிறவர் உள்ளான அர்த்தத்தை காண முடியாதபடி செயற்கை அழகுள்ள மொழிகளினால் காரியத்தை மறைப்பது தவறானதாகும்.

- பகட்டான வியாபாரத்தில் உபயோகிப்பது போல கிறிஸ்தவ செய்தி தொடர்பாளர் அதைப் போல செய்தி தொடர்பு கொள்ள முயற்சி செய்கிறார்கள். ஆனால் தேவன் தெரிந்துக் கொண்ட பாத்திரமாகிய அவர்கள் மூலமாய், தம்முடைய ஜனங்களோடு பேசுவதற்கு / நடத்துவதற்கு விரும்புகிறார் என்பதை மறந்து விடுகிறார்கள். தேவனுடைய தலைவர்கள் பரிசுத்த ஆவியானவரை சார்ந்தவர்களாய் தேவனுக்காக செயல்பட செய்யவே அவரே தகுதிப் படுத்துகிறார் என்பதை மறந்து விடக்கூடாது. ஆனால் ஆக்கப்பூர்வமான செய்தித் தொடர்பு செய்வதற்கோ, தனிப்பட்ட கவர்ச்சிக்காகவோ, உந்துதலுக்காகவோ, கவர்ந்து இழுக்கவோ, அல்லது நிர்வாகத்திலோ, மற்றும் பலவற்றிலோ அல்ல.

- செய்தி தொடர்பாளர் உணர்ச்சி பூர்வமான தடைகளை கவனிக்க தவறி விடுகிறார். அநேக ஜனங்கள் ஏற்கனவே வேறு காரியங்களால் ஆக்கிரமிக்கப்பட்டு / கவனச்சிதறல் அடைந்து ஒரு நபர் என்னச் சொல்லுகிறார் என்பதை கேட்க மறுக்கிறார்கள். உதா. அவர்கள் சுகவீனமாய், வலிவேதனையில் இருக்கலாம். குடும்ப சூழ்நிலையின் காரணமாக கவனச்சிதறல் அடையலாம், அல்லது யாரோ ஒருவர் சொன்ன / செய்த காரியத்தின் மூலமாக மனதில் காயப்பட்டிருக்கலாம். ஆக்கப்பூர்வமான செய்தி தொடர்பு கொள்ள முயற்சிக்கும் போது நாம் உணர்ச்சி பூர்வமான மனித குலத்தோடு இடைப்படுகிறோம் என்பதை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே நாம் பரிவோடும், இரக்கத்தோடும், நல்இணக்கத்தோடும் இருக்க வேண்டும். மற்றவர்கள் இடத்தில் நம்மை வைத்து மற்ற நபர்கள் கேட்பதற்கு, கவனம் செலுத்துவதற்கு / கேட்பதற்கு உள்ள இயலாமையை அல்லது பிரச்சனைகளின் அடையாளங்களை பார்க்க வேண்டும்.

- செய்தி தொடர்பின் அமைப்பு முறை ஆட்டிபடைக்கும் அல்லது அதிகாரம் செலுத்த / கவர்ந்து இழுக்க முயற்சி செய்வதாக இருத்தல். மற்ற ஜனங்கள் முடிவிலே இதனால் விரக்தி அடைந்து செய்தி தொடர்பாளர் பரிமாறிய செய்தி தொடர்பிற்கு பொருந்தமான பதிலை அளிப்பதற்கு தவற செய்கிறது (இது நபருடைய தலைமைத்துவத்தை பயனற்றதாக மாற்றுகிறது).

- செய்தித் தொடர்பாளரின் வாழ்க்கை, அவருடைய வார்த்தைக்கு எதிரிடையாக இருக்கும் போது. (அதாவது அவர்களுடைய பிரசங்கம், ஆலோசனை கூறுதல் / மற்றும் பல.). எனவே அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பது ஜனங்களுடைய இருதயத்தை தொடாவிட்டால் சொற்ப மதிப்புள்ளது, அதை ஆயத்தப்படுத்துவதற்கு எவ்வளவு நேரம் செலவு செய்தார்கள் என்பதல்ல. எல்லாவற்றிக்கும் மேலாக நம்முடைய மிகப் பெரிய செய்தி நம்முடைய வாழ்க்கை முறையேயாகும்!.

- கிறிஸ்தவ செய்தி தொடர்பாளர்கள் செய்தி தொடர்பு கொள்ள பயன்படும் ஊடகத்தை சேர்த்து தவறுதலாக செய்தி தொடர்பு கொள்ளுவது தான். உதா. அவர்கள் சொல்லுகிற காரியங்கள் செய்தி தொடர்பு கொள்கிறது என்று அவர்கள் நினைப்பது தான்.

தரிசனத்தின் முக்கியத்துவம்: உந்தும் சக்தி

“தீர்க்கதரிசனமில்லாத (வெளிப்படுத்தல்) இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள் (தன்னடக்கம் இல்லாதவர்களாய்); வேதத்தைக் காக்கிறவனோ (சந்தோஷமடைவான்) பாக்கியவான்”. (நீதிமொழிகள் 29:18)

அறிமுகம்

உயிர் வாழ்வதற்கு தரிசனம் மிக முக்கியம். அது விசுவாசத்தினால் பெருமளவு உண்டாகுகிறது, நம்பிக்கையினால் தாங்கப்படுகிறது, கற்பனை வளத்தினால் தீ மூட்டப்படுகிறது, உற்சாகத்தினால் உறுதிப் படுகிறது, காட்சியை விட பெரியது, சொப்பனத்தை விட ஆழமானது, யோசனையை விட அகலமானது. தரிசனமானது நடக்கக்கூடியவற்றை முன்னறியக்கூடிய, பாதுகாப்பான, எதிர்பார்க்ககூடிய நிலைகளுக்கு வெளியே மிகப்பெரிய அழகிய காட்சியை சூழ்ந்துள்ளது. அது இல்லாவிட்டால் நாம் அழிந்து விடுவோம் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

வாழ்க்கையானது ஆவிக்குரிய தரிசனம் என்னும் உண்மையிலே நிலையாக ஊன்றப்படாவிட்டால் ஆண்டவருக்காக சிறப்பு வாய்ந்த வாழ்க்கை வாழ முடியாது. அல்லது ஆண்டவருக்காக சிறப்பு வாய்ந்த வேலை ஒன்றையும் செய்யமுடியாது. கர்த்தர் கொடுத்த தரிசனம் கிறிஸ்தவனை சாதாரண நிலைமையிலிருந்து உயர்த்துகிறது. அவர்களை கர்த்தருக்காக பெரிய காரியங்களை சாதிக்கக்கூடியவர்களாய் மாற்றுகிறது. கர்த்தரிடத்திலிருந்து வரும் தரிசனம் வேதாகமத்தின் பெரிய கதாபாத்திரங்களின் திசையை திருப்பி இருக்கிறது. உதா. மோசே, ஆபிரகாம், தாவீது, ஏசாயா, ஏரேமியா, பவுல் மற்றும் பல. இந்த வேதாகம கதாபாத்திரங்கள் தேவனோடு இடைபட்டார்கள். அது தனிப்பட்ட வெளிப்படுத்துதலைக் காட்டிலும் அதிக ஈடுபாடு உடையது. அவர்களுக்கு தேவனிடத்திலிருந்து வார்த்தை வந்து, அவர்களுடைய வாழ்வில் வேரூன்றி வாழ்க்கை முழுவதற்குமான சேவையை கொடுத்து, தேவனுக்கு நேராக நடத்தியது. யாரெல்லாம் தேவனுடைய வல்லமையினால் தொடப்பட்டார்களோ அவர்கள் அவரோடு வாழ்க்கையை மாற்றுகிற இடைபாட்டை உடையவர்களாக இருந்தார்கள். இது என்னவென்றால் இந்த ஜனங்களுடைய முழுக்கவனத்தையும் தேவன் பெற்றது போலாகிறது. எனவே அவர்கள் அவருக்கு செவிகொடுத்து முழுமனதுடன் அவர்களுடைய வாழ்க்கையின் மீதிப் பகுதி முழுவதுமாய் அவருக்கு கீழ்ப்படிகிறார்கள். இந்த ஜனங்கள் தேவனிடத்திலிருந்து பெற்ற ஆவிக்குரிய தரிசனம் அவர்களை பற்றிப் பிடித்திருந்தது வாழ்க்கை முழுவதற்குமாய் தேவன் அவர்களுக்கு தந்த தரிசனத்திற்காய் அனைவரும் சேவை செய்தார்கள்.

நாம் ஆவிக்குரிய தரிசனத்தில் இரண்டு விதமான நிலைகளை இந்தப் பாடத்தில் பார்க்கப் போகிறோம். முதலாவது தனிப்பட்ட தரிசனம் அதாவது தேவன் நமக்கு தந்த தனிப்பட்ட ஆவிக்குரிய தரிசனம். இரண்டாவது கூட்டு தரிசனம் அதாவது ஆவிக்குரிய தரிசனம் தனிப்பட்ட நபராலே பெறப்பட்டு, அந்த நபரின் வாழ்க்கையை மட்டும் பாதிக்காமல், அநேகரை பாதிக்கிறது. இருந்த போதிலும் இந்த இரண்டு விதமான ஆவிக்குரிய தரிசனங்கள் ஒன்றோடு ஒன்றாக பகுதியாக ஒத்திருக்கிறது. உண்மையிலே வழக்கமாக தனிப்பட்ட தரிசனம் உடையவர்களாய் இருப்பது அவசியம். அது கூட்டு தரிசனத்திலே பொருந்தும். ஏனெனில் தேவன் அரிதாக தம்முடைய வேலைக்காரனை சொந்தமாகவே அவருக்காக வேலை செய்யும் படியாக அழைக்கிறார்.

தனிப்பட்ட தரிசனம்

தனிப்பட்ட தரிசனம் என்பது மறைபொருள் அடிப்படையிலான, அநேகர் பார்த்து உடையதாக கூறும், காலங்களை கடந்த இயேசுவின் பிம்ப தோற்றத்தை அல்லது அதற்கு ஒத்த மற்ற காரியங்களையே பார்த்து இருக்கிறோம் என்று சொல்லுகிற அனுபவமல்ல. அது ஒரு நபருடைய வாழ்க்கையிலே தேவனுடைய ஆவியானவர் அசைவாடி, அதன் மூலமாய் மனித / தெய்வீக இடைப்பாட்டின் நேரத்தில் வருவது தனிப்பட்ட தரிசனமாகும். உதா. மனந்திரும்புதலின் போது அல்லது தேவனால் ஊழியத்திற்கு நாம் அழைக்கப்படும் போது மற்றும் பல. தனிப்பட்ட தரிசனம் வாழ்வை கொடுக்கிற தேவனுடைய வல்லமையை மாத்திரம் சுமந்து வராமல், அந்த நபருடைய

வாழ்க்கைக்கான தேவனுடைய உள்ளான விருப்பத்தின் விதையை அந்த நேரத்திலிருந்து தனிப்பட்ட தரிசனம் சுமந்து செல்லுகிறது. எனவே தனிப்பட்ட தரிசனம் சொந்த கட்டளைகளால் தன்னில் தானே சுமந்து வருவதாகும். அதை வழி நடத்துகிற ஒன்று இருந்தாலும் தனிப்பட்ட கரிசனைக்குரிய விபரங்கள் சில காலம் தெளிவாக காணப்படாமல் இருக்கலாம்.

தேவனிடத்திலிருந்து வரும் தரிசனம் என்ற எண்ணம் ஏதோ ஒன்று சிலருக்கு, அது அவர்களுடைய கிறிஸ்தவ அனுபவத்திலே அதிக மதிப்புடையதாக இல்லை. அவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதிலே சந்தோஷப்பட்டு இருந்து விடுகிறார்கள். எனவே, அவர்களுடைய வாழ்வில் தேவனுடைய வேலையை சிறுமைப்பட்டதாக காண்கிறார்கள். அவர்கள் கிறிஸ்தவத்தை சிறிய தனிப்பட்ட மனந்திரும்புதல் என்கிற அனுபவம் என்ற நிலைக்கு குறைத்து விடுகிறார்கள். பதிலாக அவர்களுடைய இருதயத்தில், மனதில் ஜீவனுள்ள தேவனுடைய வெளிப்படுத்துதலை தேவையற்ற தலையீடாக கருதுகிறார்கள்.

இரட்சிப்பு தேவன் நம்முடைய வாழ்விற்காக வைத்திருக்கிற தரிசனத்தின் விதை அடங்கியதாக இருக்கிறது. அதாவது கிறிஸ்துவின் இரட்சிக்கும் வல்லமையில் நமது அனுபவம், நமது வாழ்விற்கான தேவனுடைய தரிசனம் உட்புறமானது. அவர் அந்தகாரத்திலிருந்து நம்மை இரட்சித்து, அவருடைய பிரியமான குமாரனுடைய ஒளியின் இராஜ்யத்திற்கு நம்மை கொண்டு வந்திருக்கிறார். நோக்கமற்ற வாழ்வு வாழ்ந்த நம்மை அவர் இரட்சித்து, தேவன் முன்கூட்டியே நமக்காக நாம் செய்யும்படி ஆயத்தம் பண்ணிய 'நற்கிரியைக்கு' நேராக நம்மை கொண்டு வந்தார். (எபேசியர் 2:10). இரட்சிப்பிலே, தேவனுடைய தெய்வீக நோக்கம் நமது வழியாக வழிந்தோடும் படியான பாத்திரமாக நம்மை மாற்றியிருக்கிறோம். தேவனுடைய விருப்பம், நம்முடைய வாழ்விற்காக அவர் கொண்டுள்ள திட்டத்தை வாசித்து, புரிந்துக்கொள்ள வேண்டும். நம்முடைய தினசரி அனுபவத்திலே கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசத்தின் மூலம் அந்த திட்டம் உண்மையாகி வருவதை காணலாம். இது தானாக நடைபெறும் செயல்பாடு அல்ல, ஏனெனில் அநேக காரணிகள் வருடங்கள் செல்லும்போது அந்த விதை முதிர்ச்சியடைந்த பின்பாக செயல்படும். ஆம், அந்த விதை அங்கே தான் இருக்கிறது, தேவனுடைய விருப்பம் அது விருத்தியடைந்து வளர்ந்து அவருக்கு உபயோகமுள்ளவர்களாக, நேர்த்தியானவர்களாக மாறுகிறோம்.

கூட்டு தரிசனம்

எல்லா கிறிஸ்தவ பணி ஸ்தாபனங்களும், சபைகளும், குழு ஊழியங்களும் - உண்மையிலே ஒவ்வொரு தேவனுடைய வேலையும் கூட்டு தரிசனத்தின் மூலமாக உருவாக்கப்பட்டது அல்லது தேவனிடத்திலிருந்து வந்த வெளிப்பாடாகும். ஆவிக்குரிய கூட்டு தரிசனத்தை தனிப்பட்டவர்களும் பெற்றுக் கொள்ளலாம், ஆனால் அந்த தனிப்பட்ட நபருக்கு மாத்திரம் உரியதல்ல. ஒரு கூட்ட ஜனங்களினால் அவருடைய சித்தம் செயல்படுத்தப்படும் படியாக தேவனால் கொடுக்கப்படுகிறது. (அநேக தேவனுடைய வேலைகள் ஒரு குழுவினரால் செயல்படுத்தப்படுகிறது, ஒரு தனிப்பட்ட நபரால் அவருடைய சொந்தமாக அல்ல). இங்கே, தேவன் அவருடைய தரிசனத்தை ஒரு நபருக்கு வெளிப்படுத்துகிறார் அதன்பின் அந்த தரிசனம் நிறைவேறும்படியாக மற்ற ஜனங்களை பற்றிபிடிக்கிறது.

தேவன் ஆரம்பத்திலே தரிசனத்தை ஒரு நபருக்கு கொடுக்கலாம். ஆனால் பொதுவாக அந்த மனிதனுடைய தரிசனம் நிறைவேறும்படியாக ஒரு கூட்ட ஜனங்களை ஒன்றாக அழைக்கிறார். இதுதான் எப்பொழுதுமான நிலைப்பாடாக இருக்காது, ஏனெனில் சில தரிசனங்கள் நிறைவேற ஒரே ஒரு நபர் மாத்திரம்போதும் அல்லது சில நபர்கள் மாத்திரம் தேவைப்படுகிறார்கள். எப்படியிருந்தாலும், எப்போது ஒரு கூட்ட ஜனங்கள் ஒரு தரிசனம் நிறைவேறுவதற்கு பங்கெடுக்கிறார்களோ, அப்போது தேவன் ஒரு தலைவர்கள் குழுவை எழுப்பி அவருடைய தரிசனத்தை கண்காணிக்க வைக்கிறார். தேவன் பொதுவாக அதன்பிறகுதான் அந்த தலைவர்கள் குழுவிற்கு தனது தரிசனத்தை முழுவதுமாக விரிவுப்படுத்தி வெளிப்படுத்துகிறார்.

எந்த ஒரு சபையிலோ அல்லது ஸ்தாபனத்திலோ வழக்கமாக பலதரப்பட்ட வித்தியாசமான வேலைகள் / தரிசனங்கள் ஒரே நேரத்தில் நடந்துக்கொண்டிருக்கிறது. அதாவது தேவன் அவருக்காக குறிப்பிட்ட வேலை செய்யும்படியாக தனிப்பட்ட நபர்களை தரிசனப்படுத்துகிறார். இந்த தனிப்பட்ட நபர்கள் சபையின் அல்லது ஸ்தாபனத்தினுடைய பரந்த தரிசனத்தில் பங்கெடுக்கிற தேவனால் அழைக்கப்பட்ட ஜனங்களை தரிசனப்படுத்துகிறார்கள். அதாவது சபையின் அல்லது ஸ்தாபனத்தினுடைய பரந்த

தரிசனத்தில் அவர்களுடைய தரிசனத்தை செயல்படுத்தும் படியாக அவர்களை அழைத்திருக்கிறார். எப்போது இது நடக்கிறதோ, பரந்த தரிசனத்தின் தலைவர்கள் அரிதாக சபை அல்லது ஸ்தாபனத்திற்கு கொடுத்த முழு தரிசனத்தை தனிப்பட்ட நபர்கள் உடையவர்களாய் இருப்பார்கள். அதற்கு பதிலாக, தலைவர்கள் குழு தொடர்ந்து முயற்சி செய்து எல்லா துண்டுகளையும் ஒன்றிணைக்கும் புதிர்போல ஒன்றிணைத்து, அது எப்போது முழுமை பெறுகிறதோ அப்போது அந்த கூட்ட ஜனங்களுக்கான தேவனுடைய முழு தரிசனத்தை வெளிப்படுத்தும். அவர்கள் இதை செய்து கொண்டு இருக்கையிலே, தேவன் ஏற்கனவே காட்டியுள்ள வழியில் முழுமையுமான தரிசனம் சரியான விதத்தில் நிறைவேற அவர்கள் காரியங்களை நகர்த்தி கொண்டிருக்க வேண்டும்.

மூப்பர்கள் (அல்லது யார் இந்த பரந்த தரிசனத்தை கண்காணிக்கிறார்களோ) தொடர்ந்து கூடி தேவனைத் தேடி, அவருடைய வழி நடத்துதலை கண்டுகொள்ள வேண்டும். அப்போது தான் அவர்கள் பொறுப்பெடுத்துள்ள முழு வேலையும் சரியான பாதையில் இணைந்து செல்லும். உண்மையிலே, முழு தலைவர்கள் குழுவும் / கண்காணிகளும் தரிசனம் செல்ல வேண்டிய திசையைக் குறித்த காரியத்தில் ஒற்றுமையாக இருக்க வேண்டும். எல்லாவற்றிக்கு மேலாக, அவர்கள் எல்லோரையும் தலைமைத்துவத்தில் செயல்படும்படியாக அழைத்திருக்கிறார். அவர் மாத்திரமே, முழு குழுவாக செல்லும் திசையை உடையவராக இருக்கிறார். எனவே தேவனுடைய வழியை கண்டுபிடிப்பது சாத்தியமான காரியமே. அதை குறித்து முழுவதுமாக ஒற்றுமையில் இருக்க வேண்டும். யாருக்கெல்லாம் தேவைப்படுகின்றதோ, அவர்களை எல்லாம் ஐக்கியப்படுத்துவது தேவனிடத்திலிருந்து வரும் கிருபையாக இருக்கிறது, அது இணைந்து அவருடைய மனதை கண்டுபிடிக்கும்.

ஒரு மனித தரிசனத்தினால் வரும் ஆபத்துகள்

தாங்கள் மாத்திரமே தரிசனத்தின் மூல ஆதாரமாய் இருக்க விரும்புகிற தலைவர்கள் இருக்கிறார்கள். அதனால் கூட்டு தரிசனத்தை ஆவிக்குரிய ரீதியில் காணத்தவறுகிறார்கள். எப்படியிருந்தாலும் ஒரு மனித தரிசனத்தினால் அநேக ஆபத்துகள் உண்டு. அவை தேவனுக்குள் அதிகாரப்பூர்வமானதா என்று சரி பார்க்க தவறுதல், குறிப்பிட்ட பகுதிகளில் சமநிலையற்ற நிலையிலிருப்பதற்கான வாய்ப்பு, அது கவனிக்கப்படாமல் இருப்பதற்கான வாய்ப்பு அல்லது அதற்கு வரும் எதிர்ப்புகளை நொறுக்கி விடுதல்/இருந்த இடம் தெரியாமல் அழித்து விடுதல்; தொலை நோக்கப்பார்வை மட்டுப்படுத்தப்படுதல்; தரிசனமானது பகுதியாய் மாத்திரம் இருக்கும், ஏனெனில் குழுவில் உள்ள மற்ற ஜனங்களுடைய முழுமையான தரிசனம் கேட்கப்படவில்லை. இருந்தபோதிலும், ஒரு நபரில் ஊற்றெடுத்து அநேக ஜனங்களை அதில் பங்கெடுக்க வைக்கிற சமயங்களும் உண்டு, உதா. மோசே; ஆனால் இது அடிக்கடி நிகழ்கிற காரியமல்ல.

பொதுவாக, தனிப்பட்ட தரிசனம் கூட்டு தரிசனத்தில் நம்முடைய பங்கை செயல்படுத்தும் படியாக அமைகிறது. ஆனால் அரிதாக நம்முடைய சொந்தத்திலே செயல்படுமாறு அமைகிறது. கூட்டு தரிசனம் அடிக்கடி ஒரு மனிதனுக்குள் தெய்வீக வெளிப்பாடு ஏற்பட்டு அவரே மூல ஆதாரமாய் திகழ்வார். ஆனால் பொதுவாக அதின் வெளிப்புற வளர்ச்சி அவருடைய தரிசனத்தின் செயல்பாடு மாத்திரமே. கூட்டு தரிசனம் அதனுடைய அதிகார தன்மையை தக்க வைத்துக் கொள்ள கூட்டு அதிகாரமுடையதாய் இருக்க வேண்டும். தேவனுடைய முழுமையான நோக்கத்தை அரிய சமநிலை தேவை. எப்படி இருந்தாலும், தேவனால் எழுப்பப்பட்ட தலைவர்கள் குழு தரிசனத்தை மேற்பார்வை செய்ய இருந்தாலும், பொதுவாக அந்த குழுவில் உள்ள ஒரு நபர் அதிகமான தெய்வீக வெளிப்பாடுகள், வழிநடத்துதல், உள்செலுத்துதல் உடையவராக இருப்பார். அந்த நபர் பொதுவாக தரிசனத்தின் மூலஆதாரமாக அல்லது ஆரம்ப முதலே தேவனுடைய தகுதியை சுதந்தரித்துக் கொண்ட நபராய் இருப்பார். தரிசனமானது அநேக ஜனங்களால் பகிர்ந்து கொள்ளப்படுமானால் தலைவர்கள் பேசுகிறது போல ஜனங்கள் பேசக்கூடாது. அதாவது தலைமைத்துவம் செய்கிற காரியத்தில் தேவனுடைய செயல்பாட்டின் அடையாளத்தை தெளிவாக காணும் போது மாத்திரமே ஜனங்கள் நம்மோடு தரிசனத்தை பகிர்ந்து கொள்வார்கள். தலைமைத்துவம் சொல்லுகிறதான காரியத்திற்கு அவர் விளக்கம் தருகிறார். அவர் சபை மூலமாக, குழு மூலமாக, ஸ்தாபனத்தின் மூலமாக செயல்பட விரும்புகிறார்.

குழு தரிசனம்

எந்த ஒரு ஸ்தாபனத்திற்கும் /சபைக்கும் /குழுவிற்கும் தேவன் கொடுத்த தரிசனம் தேவை. உண்மையிலே எல்லா குழு அங்கத்தினர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். தேவனிடத்திலிருந்து வந்த கூட்டு தரிசனமாகிய பொதுவான நோக்கத்தை அடைவதற்கு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். ஏனெனில் அவருடைய தரிசனம் தனிப்பட்டதை விட மிகப்பெரியது. இது தேவனிடத்திலிருந்து வந்த தரிசனமாகையால் குழு அங்கத்தினர்கள் அதற்கு தங்களை அர்ப்பணித்து, அதை பின்பற்ற வேண்டும். அதற்கு மாறாக சில குருக்களை அல்லது வலிமையுள்ள தலைவர்களையோ பின்பற்றக்கூடாது. அவர்கள் தேவனுடைய தரிசனத்திற்கு ஒருமுறை அர்ப்பணித்த பின் பொதுவாக அதிலே பங்கு பெறுகிற யாவரும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வாழ்க்கை சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். உண்மையிலே அவர்கள் தேவனுடைய ஊழியத்திலே ஒருவருக்கொருவர் தங்களுடைய பொருத்தமான இடத்தை கண்டுபிடிக்க வேண்டும். அவருடைய தரிசனம் நிறைவேறும்படியாக தேவனோடும் மற்ற ஒவ்வொருவரோடும் சரியான தொடர்பிலே வாழ வேண்டும்.

குழுவிலே /சபையிலே ஒவ்வொரு முறையும் புதிய அங்கத்தினர்கள் (புதிதாக மனந்திரும்பியவர்) சேரும் போது குழு அல்லது சபையின் தலைவர் அந்த குழுவிற்கு அல்லது சபைக்கு தேவன் தந்த தரிசனத்தை தெளிவான கருத்துகளுடன் எடுத்துச் சொல்வது மிக முக்கியமானதாகும். புதிய அங்கத்தினர் தேவனில் அவர்கள் தங்களை எதற்காக அர்பணித்து இருக்கிறார்கள் என்று அறிவது அவசியம். குழு அல்லது சபைத் தலைவர்கள் ஒழுங்காக தரிசனத்தை மறுஆய்வு செய்வது அவசியம். (அதாவது ஒரு வருடத்தில் குறைந்தது சில தடவைகளாவது). இதிலே அவர்கள் குழுவாக இணைந்து விவாதிக்க வேண்டும். பல்வேறு காரியங்களைக் குறித்து தேவன் அவர்களுக்கு சொன்ன காரியத்திலே எங்கே பிளவுபட்டிருக்கிறார்கள், அவர்கள் மூலமாய் என்ன காரியம் நழுவி சென்றிருக்கிறது என்பதை விவாதிப்பது அவசியம்.

தேவனுடைய தரிசனத்தை பெற்றுக் கொள்வது எப்படி?

தேவன் தரும் தரிசனம் தேவன் நம்மிடத்திலே செயல்படும் செயல்பாட்டின் வெளிப்பாடு. அவர் தரிசனத்தை உருவாக்குகிறார். நாம் நம்முடையதாக அப்படியே பெற்றுக் கொள்ள வேண்டும். அது பின்பு தேவன் அழைக்கும் ஒரு இடமாக அல்லது இலக்காக மாறி அவருடைய ஜனங்களாக நாம் அதை நோக்கி நகருகிறோம். தரிசனம் என்பது நாம் செய்ய வேண்டும் என்று கருதுகிற அல்லது நாம் நிறைவேற்ற வேண்டும் என்று நினைக்கிற காரியங்களின் செயல் திட்டம் அல்ல. ஆனால் அது தெய்வீகத்தை மூல ஆதாரமாகக் கொண்டு நம்மிடத்திலிருந்து மறுஉத்தரவை கொடுக்கச் செய்து, நம்மை அழைத்து செயல்படுதலுக்கு நேராக நடத்துகிறது. தேவனிடத்திலிருந்து வரும் தரிசனம் நம்மை பதிலளிக்கும் படியாக அழைக்கிறது!

தேவனிடத்திலிருந்து வரும் தரிசனம் பார்க்க முடியும், கேட்க முடியும், அனுபவிக்க முடியும், தனிப்பட்டது, தீர்க்கதரிசனமானது. தேவன் தம்முடைய மனதையும், சித்தத்தையும் தன்னுடைய ஊழியக்காரனுக்கு தெரிவிக்க விருப்பம் கொண்டுள்ளார் என்ற உண்மையைக் குறித்து தேவனுடைய தலைவர்கள் நம்பிக்கை உடையவர்களாய் இருக்க வேண்டும். எனவே அவர்கள் நேரம் செலவழித்து அவரை சந்திக்க வேண்டும். தங்களுடைய வாழ்க்கையை அவருக்கு திறக்க வேண்டும் (ஆவிக்குரிய காது). ஒரு முறை அவரிடத்திலிருந்து கேட்டவுடன் அவர்களிடத்தில் அவர் செய்யும்படி என்ன சொன்னாரோ அதற்கு கீழ்படிய வேண்டும் (இல்லாவிட்டால் அவர்களுக்கான தேவ வார்த்தை வற்றிப் போய் விடலாம்) ஒரு நபர் உண்மையாக அவரைத் தேடுவாரானால் அவருடைய நேரத்திலே அவர்கள் செய்யும்படியான பங்கை அவருடைய ஊழியக்காரர் யாவருக்கும் தேவன் காட்டுவார். உண்மை என்னவென்றால் கிறிஸ்தவர்கள் கனியுள்ளவர்களாக, மிகுதியான வாழ்க்கை வாழ, தேவன் வாக்குப்பண்ணின நிறைவான வாழ்க்கை வாழ இது ஒன்றே வழி (சங்கீதம் 139:13-16; ஏரேமியா 1:4-10; எபேசியர் 1:4,5; 2:10; யோவான் 10:10).

இயேசுவே அவருடைய சரீரமாகிய கிறிஸ்தவ சபைக்கு அவரே தலை. தலையின் செயல்பாடு என்னவென்றால் சரீரத்தை வழிநடத்துவதும் என்ன செய்ய வேண்டும் என்று சொல்வதும். இயேசு வழி நடத்துவாரானால், அவருடைய சபையின் அங்கத்தினராகிய நாம் செவி கொடுத்து கேட்க

வேண்டும். தேவன் 20 நபர்களை ஒருவிதமாக மற்ற 5 பேரை வேறுவிதமாக நடத்துவாரா? இல்லை! அந்த குழுவில் / ஸ்தாபனத்தில் சபையில் வேலை செய்யும் அங்கமாய் நம்மை அழைத்திருப்பாரானால் தேவன் நம்மை இணைத்தே நடத்துவார். சில வேளைகளில் சற்று வித்தியாசங்கள் இருக்கலாம். கிறிஸ்துவின் சிந்தையை கண்டு பிடித்து கீழ்ப்படிதல் ஆவியில் ஒருமனப்பட உதவுகிறது. உண்மையிலே ஐக்கியம் என்பது கிறிஸ்துவின் தலைமைத்துவத்தின் கீழே செயல்படும் போது ஏற்படுகிறது. அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறார். வழியில்லாமல் போவதற்கான மார்க்கம் இல்லை, சத்தியம் இல்லாமல் அறிவது இல்லை, ஜீவனில்லாமல் வாழ்க்கை இல்லை.

தலைவர்களுடைய இருதயம் கூட்டு தரிசனத்திலே கிறிஸ்துவின் மனதை அறிய முற்படும்போது அதிலே எதிர்ப்பவர்கள் அல்லது தேவனுடைய தரிசனம் செல்லுவதற்கு தடை ஏற்படுத்துகிறவர்கள் காரணமில்லாமல் அப்படி செய்ய மாட்டார்கள். தலைவர்கள் ஒரு நபர் பெரும்பான்மையோடு ஒரு காரியத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கும்போது அறியாமல், அல்லது மறைந்து செல்லக்கூடாது. ஒரு நபர் தானே என்று சொல்லி கவலையீனமாய் இருக்கக்கூடாது. இது கூறப்படும் காரியம் என்னவென்றால் பிலேயாமின் கழுதையைக் கொண்டு ஆண்டவர் பேச முடியும். அப்படியே அவரால் தீர்மானிக்கப்பட்ட எந்த ஒரு நபரைக் கொண்டும் அவர் பேச முடியும். ஒருவேளை அந்த நபர் தரிசனத்தை தடை பண்ணுவாரானால் இந்தக் காரியத்தில் அவர் கர்த்தருடைய மனதை உடையவராக இருக்கிறார்.

நமது வாழ்க்கைக்கான தேவனுடைய தரிசனம் நமது நேரத்தில் அல்ல அவருடைய நேரத்தில் வெளிப்படுத்தப்படும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நாம் அவருக்கு கீழ்ப்படியும் வாழ்க்கை உள்ளவர்களாக இருக்க வேண்டும். அவரை பிரியப்படுத்தும் வழியிலே வாழ வேண்டும். மோசேக்கு 80 வயதாகும் போது அவன் தன்னுடைய கூட்டு தரிசனத்தை தேவனிடத்திலிருந்து பெற்றான். அநேக வருடங்களுக்கு முன்பாய் இந்த மோசே தேவன் என்ன செய்ய விரும்புகிறார் என்ற எண்ணத்தை உடையவனாக இருந்தான் என்று காணப்படுகிறது. ஆனால் இது ஒரு தனிப்பட்ட தரிசனம், தேவன் செயல்படுத்துவதற்கான நேரத்தை மோசே இன்னும் அடையவில்லை. தன்னுடைய குறிக்கப்பட்ட வேளை வரும்வரை மோசேயை தேவன் காத்திருக்கப் பண்ணினார் (அவருக்குத் தெரியும் மோசேயும், ஜனங்களும் எப்பொழுது தயாராவார்கள் என்பது). நம்மில் ஒவ்வொருவருக்கும் குறிக்கப்பட்ட நேரத்தில் நமது தரிசனத்தை தேவன் வெளிப்படுத்துவார்(ஆபகூக் 2:3). நம்முடைய வேலை என்னவென்றால் நாம் முதிர்ச்சியடையும் வரை நிறைவடையும் வரை ஒன்றிலும் குறையில்லாதவர்களாய் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் (யாக்கோபு 1:4). நாம் தொடந்தேர்ச்சியாக நம்முடைய மனதை தேவனுக்கு திறந்து வைக்க வேண்டும். அப்பொழுது தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்துவார்.
"உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள்; நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்" (யோசுவா 3:5).

தேவன் கொடுக்கும் தரிசனத்தின் நான்கு விதமான விளைவுகள்

(i) இது துரிதப்படுத்துகிறது (நான் அழைக்கப்பட்டேன்)

இது ஜீவனைக் கொண்டு வருகிறது, ஏனெனில் இது வாழ்க்கை மாற்றத்தை திணிக்கிறது. அது நமது வாழ்க்கையின் புதிய வழியையும், நோக்கத்தையும் கொண்டு வருகிறது. நமது வாழ்க்கை ஒரு வழியாக செல்லலாம். ஆனால் ஒருமுறை நாம் தேவனுடைய தரிசனத்தை பெற்றுக்கொண்டோமானால், அது பற்றி பிடிக்கிறது, நாம் ஒன்றும் செய்ய முடியாது ஆனால் சேவிக்க முடியும். உதாரணமாக,

- ⇨ சவுல் / பவுல் (அப்போஸ்தலர் 9:1-31)
- ⇨ ஏசாயா (ஏசாயா 6:1-8)
- ⇨ மோசே (யாத்திராகமம் அதிகாரம் 3, 4)
- ⇨ யெருபாகால் / கிதியோன் (நியாயாதிபதிகள் அதிகாரம் 6, 7)
- ⇨ ஆபிராம் / ஆபிரகாம் (ஆதியாகமம் 17:1-27).

(ii) இது மன எழுச்சியைத் தருகிறது (நான் செய்வேன், என்னால் முடியும்)

தேவனிடத்திலிருந்து வரும் தரிசனமானது இலக்கை நோக்கி முன்னேறுகிறது. அது உட்புறமாக இருந்து கிரியை செய்கிறது. நமக்கு தேவனிடத்திலிருந்து தரிசனம் இல்லாவிட்டால் தேங்கிய நிலையடைந்து அழிந்து விடுவோம். உண்மையிலே தரிசனம் நமது வாழ்வுக்கான தேவனுடைய நோக்கமென்னும் விதையை சுமக்கிறது. (அந்த தரிசனத்தோடு இணைந்த எல்லோருடைய வாழ்க்கையும்) முட்புதர் செடியில் மோசே பெற்ற வெளிப்படுத்தலானது மோசேக்கான தனிப்பட்ட வார்த்தை என்பதைக் காட்டிலும் மிக அதிகம். அவருடைய ஜனங்களுக்காக தேவனுடைய நோக்கம் என்னும் விதையை சுமந்ததாக இருந்தது. மற்றொரு உதாரணம் தேவ தரிசனத்தினால் மனயெழுச்சிப் பெற்ற மனிதன் அப்போஸ்தலனாகிய பவுல் (அப்போஸ்தலர் 26:12-23). தமஸ்கு ரஸ்தாவில் ஏற்பட்ட ஒளியோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சரீர வெளிப்பாடு மாத்திரம் சவுலின் வாழ்க்கையை மாற்றவில்லை. தேவன் அவன் செல்ல வேண்டிய வழியை காட்டினார். அதற்கு அவன் கீழ்ப்படிந்தான். அந்த அனுபவம் சவுலை தேவன் என்ன விரும்பினாரோ அதை அவனிடத்திலே கேட்க திறந்த நிலைக்கு கொண்டு சென்றது. சவுல் எப்பொழுது இயேசுவைக் கண்டானோ அப்பொழுது அவன் செல்ல வேண்டிய திசையை அவன் இருதயத்தில் பெற்றுக் கொண்டான். 'புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தின் வெளிச்சத்தை கொண்டு செல்ல நான் உன்னை ஏற்படுத்தினேன்' தேவனை சந்தித்த அனுபவம் அவனுடைய எஞ்சிய வாழ்விலே அவன் செல்ல வேண்டிய வழியை பெற்றுக்கொண்டான். அதிலிருந்து அவன் செய்த எல்லாவற்றிக்கும் அது ஒரு மனயெழுச்சியைத் தந்தது. பின்பாக அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன் (1 கொரிந்தியர் 9:24-27; பிலிப்பியர் 3:12-14). பவுல் அவனுடைய மனந்திரும்புதல் அனுபவத்திலே அவனுடைய வாழ்க்கையில் சிறிய மாற்றங்களை கொண்டு வருகிற எந்த ஒரு குளிர்நத நிலையையும் உடையவனாக இருக்கவில்லை. அவனுடைய இரட்சிப்பின் அனுபவத்திலே ஏற்பட்ட அதிதீவிரமான வாழ்க்கை மாற்றத்தைக் குறித்ததான விழிப்புணர்ச்சியை பவுல் எப்போதும் உடையவனாய் இருந்தான்.

தேவ தரிசனத்தில் நமக்கு தேவையான அனைத்தையும் தேவன் தருகிறபடியினால் நாம் நம்முடைய பகுதியை நிறைவேற்ற முடியும் என்ற அறிவை தருகிறது! (பிலிப்பியர் 4:13,19; 2 பேதுரு 1:3). அவருடைய தரிசனத்தில் நம்முடைய பகுதி நிறைவேறவில்லை என்றால்தேவன் இந்த வழியாய் செல்ல நம்மை அழைக்கவில்லை என்பதையும் நாம் அறிவோம்.

தரிசனம் என்பது: ஒருவர் தேவையை இவ்விதமாய் பார்ப்பது, சிலவற்றை செய்வதற்கான சாதகமான தன்மை காட்டிலும் தேவை ஒருவருடைய மனதில் மிகப்பெரியதாய் தெரிவது.

(iii) இது வற்புறுத்துகிறது (நான் மாத்திரம்)

தேவனுடைய தரிசனத்தை தங்களுடைய இருதயத்திலே உண்மையாய்ப் பெற்ற ஜனங்கள் மாத்திரமே தரிசனத்தோடு ஒட்டியுள்ள காரியங்களை செய்ய வேண்டும். அதிலிருந்து அவர்களுடைய வாழ்க்கை தரிசனத்தினால் வார்க்கப்பட்டு வடிவமைக்கப்படுகிறது. இந்த ஜனங்கள் தங்கள் பழைய வாழ்க்கையிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு காரியங்களை மாத்திரம் செய்கிறார்கள். அவர்கள் தேவனிடத்திலிருந்து பெற்ற தரிசனம் அவர்களை தகுதிப்படுத்துகிறது. உதாரணமாக, தேவனிடத்திலிருந்து மோசே பெற்ற தரிசனம் குறிப்பிடத்தக்கது. அது அட்டவணையையும், பொருளடக்கத்தையும் உடையதாய் இருந்தது. மோசே அட்டவணையை தாண்டி செல்ல சுயாதீனமில்லை அல்லது உள்ளடக்கத்தை மாற்ற முடியாது. தேவன் மோசேக்கு சொன்னார், 'மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு.' (யாத்திராகமம் 25:40).

"தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவர்கள்". (நீதிமொழிகள் 29:18).

தேவன் எப்பொழுது தம்முடைய ஆவியினால் வேத வசனத்தின் மூலமாக தரிசனத்தை தந்து, அவர் என்ன விரும்புகிறார் என்பதை தெரியப்படுத்துகிறார். அப்போது உங்கள் மனம் மற்றும் ஆத்துமா சிலிர்க்கிறது. நீங்கள் அந்த தரிசனத்தின் வெளிச்சத்தில் நடவாவிட்டால், ஆண்டவர் கொண்டிராத நோக்கத்தின் பாதையிலே நீங்கள் முழ்கி விடுவீர்கள். அதன் பின்பு உண்மை வெளிப்படுத்தப்படும் போது நீங்கள் அப்படி இருக்க மாட்டீர்கள். அந்த சம்பவம் உங்களை இயேசுகிறிஸ்துவின் உண்மையான சீஷர்களாய் அதிகமாக்கும் அல்லது பின்மாற்றமடையச் செய்து அழிவைக் கொண்டுவரும்.

(iv) இது பரிசுத்தமாக்குகிறது (நான் செய்யகூடாது)

ஜனங்கள் தேவனிடத்திலிருந்து தரிசனத்தை பெரும்போது அதனோடு செய்கையையும் சேர்ந்தே பெறுகின்றார்கள். தங்களுக்கு அதிகமான காரியத்தை வெளிப்படுத்தின தேவனுக்காக சேவை செய்ய தங்களுடைய வாழ்க்கையை ஒழுங்கு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகின்றார்கள். தங்களை தாங்களே பிரியப்படுத்திக் கொள்ள விரும்பாமல், தேவனுக்காகவும் அவருடைய சேவைக்காகவும் தங்களுடைய வாழ்க்கையை பிரித்தெடுக்கிறார்கள். 'உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப் போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி' என்று மோசேக்கு தேவன் சொன்னார். (யாத்திராகமம் 3:5). மோசேயின் வாழ்க்கையில் தேவன் செய்த காரியம், அவனை பழைய வாழ்க்கையிலிருந்து விடுவித்தது மாத்திரமல்லாமல் அவனுக்குள் இருந்த திட்டங்களிலிருந்தும், யோசனைகளிலிருந்தும் அவனை முற்றிலும் வேறுபடுத்தியது. அதன் பின்பாக, அவன் வேறு எதற்காகவும் ஒருபோதும் வாழவில்லை.

தரிசனக்காரர்கள், செய்யக்கூடியவர்கள், தாங்குகிறவர்கள்

கூட்டுத் தரிசனம் எப்படி தேவனிடத்திலிருந்து இறங்கி வந்து செய்முறைப் பயிற்சியில் உண்மையாகி இந்த பூமியிலே எப்படி செயல்படுத்தப்படும்? இந்த தரிசனம் எப்படி ஒருங்கிணைக்கப்படும்? இந்த தரிசனம் எப்படி மற்ற கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையிலே கிரியை செய்யும்?. பின்வரும் அச்சுவடிவ மாதிரி நம்முடைய வாழ்ககையிலும், ஊழிய சூழ்நிலையிலும் செயல்படுத்த முடியும் அவை இந்த கேள்விகளுக்கு பதில் தேடுவதின் மூலமாக.

சரித்திரங்களில் தேவன் செயல்பட்ட விதம் ஒரு நபரைக் கண்டுபிடித்து அந்த நபரை தன்னுடைய தரிசனத்தின் சிருஷ்டிக்கிற மூலஆதாரமாய் பயன்படுத்தினார். ஏன் சில சபைகள் தீடிரென 200 ஆண்டுகளுக்கு பின்பாக உயிர் பெறுகிறது. ஏன் சில கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் / சபைகள் சில வருடங்களிலே மிகப்பெரிய வெற்றியை பெறுகிறது?. தேவன் தன்னுடைய தரிசனத்தின் ஆதாரமாய் விளங்கக்கூடிய நபரை கண்டுபிடித்து நாட்டினபடியால் இங்கே இந்த மனிதனை தரிசனக்காரர் என்று அழைக்கிறோம். சபை / ஸ்தாபனத்திலிருந்து அந்த தரிசனக்காரனை எடுத்துவிட்டு திரும்பவும் அவரை உபயோகிக்க தவறுவோமானால் அந்த சபை அல்லது ஸ்தாபனம் சில காலங்கள் இயங்கலாம், ஆனால் காலப்போக்கில் தேங்கிய நிலைமையில் சென்று பின்பு பாரம்பரியமாகவும், உபயோகமற்றதாகவும் மாறிவிடும்.

தேவன் தந்த தரிசனத்தின் நிறைவேறுதலின் மூலஆதாரமாக ஒரு நபர் மாத்திரம் இருப்பது மிகவும் விரும்பதகாத ஒன்று தான். பொதுவாக, தேவன் மற்ற ஜனங்களையும் சிருஷ்டிப்பு மூல ஆதார தரிசனத்தைவுடைய நபரோடு இணைந்து வேலை செய்வதற்கு அழைக்கிறார். அதிலே சில நபர்கள் தேவனிடத்தில் இருந்து வரங்களைப் பெற்றவர்களாய் தரிசனத்தை பொறுப்பெடுக்கக்கூடிய திறமையுள்ளவர்களாய் மாறி அதை ஒருங்கிணைத்து நிறைவேற்றக் கூடியவர்களாய் மாறுகிறார்கள். இங்கே இந்த ஜனங்களை நாம் செய்து முடிக்கக் கூடியவர்கள் என்று அழைக்கிறோம். இதன் அர்த்தம் தரிசனக்காரன் இந்தப் பகுதியிலே எதுவும் செய்ய முடியாதவன் என்பது அர்த்தமல்ல. ஏனெனில் ஒரு நிலைக்கு வரும்பொழுது அவரும் செய்து முடிக்கக் கூடியவராய் மாறிவிடுகிறார்.

கடைசியாக, தரிசனத்தை பராமரிக்கக்கூடிய ஜனங்கள் தேவை. தேவன் தன்னுடைய தரிசனத்தில் தினமும் தரிசனம் உருவாக்கின்ற வேலையை செய்யக்கூடிய உண்மையாய் தாங்கக்கூடிய ஜனங்களை அழைக்கிறார். இந்த ஜனங்கள் இல்லாமல் தரிசனம் வெற்றிகரமாக வெளிப்புறமாக செயல்படாது. இந்த ஜனங்கள் தரிசனம் செய்முறையிலே நிலை கொள்வதற்கான மற்றும் தொடர்ந்து

செயல்படுவதற்கு தேவையானவைகளையும் செய்து முடிக்கிறார்கள். செய்து முடிக்கிறவர்கள் தரிசனம் ஒருங்கிணைக்கப்படவும், அதிக கடினமான தலைமைத்துவப்பணிகளையும் எடுத்துக் கொள்கிறார்கள். அதற்கு பின்பு நாம் அழைக்கிற தாங்கி பிடிக்கிறவர்களிடத்தில் சென்று தரிசனத்தின் அநேக வேலைகள் செயல்படுத்தப் படுகிறது.

இஸ்ரவேல் ஜனங்களுக்காக மோசே சிருஷ்டிக்கிற தரிசனத்தின் மூல ஆதாரம் (அதாவது தரிசனக்காரன்). அவன் அநேக செய்து முடிக்கிறவர்களை உடையவனாய் இருந்தான். உதாரணம்: ஆரோன் (செய்தித் தொடர்பாளர்), யோசுவா (இயக்குநர், இராணுவ தளபதி, மோசேயின் உதவியாளன் சிறு வயது முதலே) பெசலியேல் (சித்திரக்காரன், கட்டி எழுப்புகிறவன்), ஊர் (தாங்கி பிடிப்பவர்), காலேப் (உற்சாகம் முட்டுகிறவன்), எத்திரோ (ஆலோசகர்). யாத்திராகமம் 3ம் அதிகாரத்தின் அனுபவம் இந்த நபர்களுக்கு உரியதல்ல. மோசேக்கு மாத்திரம் உரியது. இந்த மனிதர்கள் எல்லாரும் தேவனால் அழைக்கப்பட்டு மோசேயினிடத்தில் மூல ஆதாரமாய் கொடுக்கப்பட்ட தரிசனத்தை செய்து முடிக்கிறவர்களாக, செய்முறையிலே தரிசனத்தை உண்மையாக்குகிறவர்களாய் இருந்தார்கள். மோசேயின் காரியத்திலே, அவனுடைய தாங்கி பிடிக்கிறவர்கள் லேவியர்கள், ஆரோனின் குமாரர்கள், நியாயதிபதிகள், 12 கோத்திரத்தின் தலைவர்கள், திட்டமிடுகிறவர்களின் தலைவர்கள் மற்றும் 70 மூப்பர்கள். இந்த மனிதர்கள் தரிசனத்தோடு தொடர்புடைய ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டின் பகுதிக்கு பொறுப்பானவர்கள். செய்து முடிக்கக் கூடியவர்களில் செயல் பாட்டுப் பகுதியிலே தாங்கி பிடிக்கிறவர்களின் தேவை எழுகிறது.

இந்த மூன்று விதமான ஊழிய நிலைகள் தேவனுடைய தரிசனத்தை உண்மையாக்குவதற்கு தேவைப்படுகிறது. சில நேரங்களில் சில பகுதிகள் ஒன்றொடொன்று மோலோங்கிச் செல்லலாம். ஆனால் அவைகள் தேவனுடைய மூல ஆதாரமான தரிசனம் எப்படி தொடங்கி செயல்படுத்தப் படுகிறது என்கின்ற தான படத்தை நமக்குக் கொடுக்கின்றது. ஊழிய நிலைகளின் இரகசியம் என்னவென்றால் தரிசனக்காரன் வெளிப்படுத்துகிற தரிசனத்தை தேவன் தந்த தரிசனமாக எடுத்துக் கொண்டு அதை தங்களுடைய சொந்தமாக ஆக்குவது தான். அவர்கள் தேவன் அழைத்த அழைப்பின் பகுதியை பெற்று அதை செய்து அவருடைய தரிசனம் நிறைவேறுவதற்கு ஏதுவாக செய்து முடிக்கிறவர்களாக மாறுகிறார்கள்.

சொற்ப ஜனங்கள் தரிசனத்தை ஆரம்பிக்க தேவனால் அழைக்கப்படுகிறார்கள் (தரிசனக்காரர்கள்) அநேகர் அந்த தரிசனத்திலே சேவை செய்யும்படியாக அழைக்கப்படுகிறார்கள். உண்மையென்னவென்றால், சில தரிசனக்காரர்கள் பின்பு செய்து முடிக்கிறவர்கள், சில செய்து முடிக்கிறவர்கள் பின்பு தாங்கிப்பிடிக்கிறவர்கள், எந்த விதத்திலும் மதிப்புடைய நியாயத்தீர்ப்பு எந்த நபர் மீதும் அல்லது ஊழியத்தின் மீதும் செய்ய தேவையில்லை. தேவன் தம்முடைய ஜனங்களை வெவ்வேறு வேலைகளை அவருக்காக செய்யும் படியாக அழைக்கிறார். அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை மாத்திரம் நிறைவேற்றி முடிக்க எதிர்பார்க்கிறார். மற்ற காரியங்களை செய்ய முயற்சிப்பது முட்டாள் தனமானது. பொதுவாக, அவைகள் தோல்வியிலும், பெரும்பிரச்சனையிலும் முடியும். தேவனுக்கு சிறந்தது எது என்றுத் தெரியும். அவர் எதற்காக நம்மை அழைத்து, தகுதிப்படுத்தினாரோ அதை அவருக்காக செய்வதற்கு அதிலே ஒட்டிக் கொள்வது அவசியம். தேவ தரிசனம் என்பது அதிலே பங்கு பெறுகின்ற யாவருக்கும் பொதுவான சொத்து என்பதை நினைவில் வையுங்கள் (உதாரணமாக, மோசேயின் நாட்களில் இஸ்ரவேல் ஜனங்கள்). ஏனெனில், இந்த தரிசனம் தேவனுடையது. மனிதனுடையது அல்ல. தேவனால் அழைக்கப்பட்ட எல்லா ஜனங்களும் தரிசனத்திலே வேலை செய்ய பங்கு கொள்ள அவர்களுக்கென்று ஒரு பங்கு உண்டு. அது தரிசனக்காரனால், செய்து முடிக்கிறவனால், தாங்கி பிடிக்கிறவனால், சொந்தமாக்கப்பட்ட, உருவாக்கப்பட்ட பங்கு அல்ல. அவர்கள் முழுமையான தரிசனத்தில் மறுக்கமுடியாத, மிகமுக்கியமான பங்குகள் என்பதை அவர்கள் பார்க்க வேண்டும். தேவன் தம்முடைய மகிமைக்காக அவர்களை உபயோகிப்பார். தனிமையிலே, தனியாக தங்களுடைய சொந்த காரியங்களை செய்துக் கொண்டிருக்கிறோம் என்று ஒருபோதும் அவர்கள் தங்களை பார்க்ககூடாது. அவர்கள் தரிசனக்காரர்களுக்கு ஒருபோதும் 'ஆமா சாமிகளாக' இருக்ககூடாது. ஏனெனில் அவர்கள் தரிசனக்காரர்களுடன் தரிசனத்தில் பங்கு பெறுகிறார்கள். அதன் வெற்றி அவர்களின் வெற்றியில் இருக்கிறது. தரிசனக்காரர்களுடன் ஒரு கூட்ட ஜனங்களாக இணைந்து, தேவனுடைய தரிசனம் செயல்படவும், வழிந்தோடவும், தனிப்பட்ட நபர்கள் கிரியை செய்யும்படியாக தரிசனம் உருவாக்குகிற ஊழியங்களை / செயல்பாடுகளை நிறைவேற்றவும் வேண்டும்.

தரிசனக்காரனின் குணாதிசயங்கள் (VISIONARY)

தேவனால் அழைக்கப்பட்ட ஜனங்கள் தங்களுடைய தரிசனத்தை இந்த பூமியிலே மூல ஆதாரமாக்குவதற்கு அநேக குணாதிசயங்கள் தேவைப்படுகிறது. தரிசனக்காரன் இவ்விதமான ஜனங்களாய் இருக்க வேண்டும்:

(i) தெய்வீக உந்துதல்

தரிசனக்காரர்கள் தெய்வீக உந்துதலைப் பெற்ற ஜனங்களாய் இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு உள்ளும் உந்துதலை ஏற்படுத்தக்கூடியவர்களாய் இருக்க வேண்டும். (தெய்வீக உந்துதல் பெற்றவர்கள் எந்த விதத்திலாவது மற்றவர்களுக்குள் உந்துதல் ஏற்படுத்தக்கூடியவர்கள்). தரிசனக்காரன் தேவனிடத்திலிருந்து தெய்வீக உந்துதலைப் பெறவில்லை என்றால், தரிசனத்தின் அவர்களுடைய பகுதியை நிறைவேற்றவோ மற்றும் பங்கு கொள்வதற்கான விலைக் கிரையத்தைக் கொடுக்கவோ அவர்களால் முடியாது. மற்றவர்களுக்குள்ளும் அதை ஏற்படுத்த முடியாது. தரிசனக்காரன் தேவனோடு முகமுகமாய் சந்திப்பது அவசியம். அவருடைய தீர்க்கதரிசன உள்நோக்கம் / தரிசனத்தை ஆதாயப்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த தரிசனத்தில் வேலை செய்ய தேவனால் அழைக்கப்பட்ட மற்ற ஜனங்களிடத்தில் அதை கடத்தக்கூடியவர்களாய் இருக்க வேண்டும். தெய்வீக உள் உந்துதலில் காந்தபுலத்தைப் போல் இழுக்கும் தன்மை உண்டு. ஒரு தரிசனக்காரன் மற்ற ஜனங்கள் தரிசனத்தை எடுத்து அதை சொந்தமாக்கி கொள்வதற்கு ஏதுவான நிலையில் அவர்களுக்குள் உந்துதல் ஏற்படுத்தக்கூடியவனாய் இருக்க வேண்டும். எப்பொழுது தரிசனக்காரன் இதை செய்கிறானோ அப்போது அந்த தரிசனம் ஆரம்பித்து செயல்படுவதற்கும், செய்து முடிக்ககூடியவர்களுக்கும், அதை தாங்குகிறவர்களுக்கும் உரிய இடத்தை உருவாக்கிக் கொடுக்கிறான். அதாவது மற்றவர்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய தரிசனமானது தடையில்லாமல் செயல்படுவதற்கு இடமளிக்க வேண்டும்.

தரிசனக்காரர்கள் நல்லது நடக்கும் என்ற உயர்வான எண்ணமும், நம்பிக்கையும் கொண்டவர்கள். ஏனெனில் எந்த ஒரு தீமை கொள்கைக்காரனும் சிறந்த தலைவனாய் ஏற்பட்டதில்லை. அல்லது பெரிய காரியங்கள் செய்யும்படியாக மற்ற ஜனங்களுக்குள்ளும் உந்துதல் ஏற்படுத்தியது கிடையாது. தீமை கொள்கைக்காரன் ஒவ்வொரு தருணத்திலும் ஏற்படுகிற கஷ்டத்தைப் பார்க்கிறான். ஆனால் நல்லதே நடக்கும் என்ற கொள்கைக்காரன் எல்லா கஷ்டமான சூழ்நிலையின் மத்தியிலும் செயல்படக்கூடிய தருணத்தைப் பார்க்கிறான். உண்மையிலே, உந்தி முன்னேறிச் செல்ல காத்திருக்கிற தரிசனக்காரனை தீமைக் கொள்கைக்காரன் வழக்கமாக பின்னுக்கு இழுக்கிறவனாய் இருக்கிறான். இருந்தபோதிலும், எச்சரிக்கையுள்ள / கவனமுள்ள / அறிவு நுட்பமுள்ள ஜனங்கள் தரிசனக்காரன் நடைமுறை நபராய் இருப்பதற்கு உதவுகிறார்கள். அவர்கள் தேவனால் உயர பறக்க அழைக்கப்பட்ட மனிதனுடைய இறக்கையை பிடித்து தொங்கி கொண்டு இருக்கக்கூடாது. கவனமுள்ள ஜனங்கள் வரலாற்றில் இருந்து விலைமதிப்பு மிக்க பாடங்களை கற்றுக் கொள்வார்கள். ஆனால் பழங்காலத்தோடு பிணைக்கப் படக்கூடிய அபாயம் அவர்களுக்கு உண்டு. கஷ்டமான சூழ்நிலைகளுக்கும் பின்பாக பார்த்து செயல்படுவதற்கான தருணங்களை அறியும் திறன் இல்லாதவர்கள், அவரைப் பின்பற்றுகிறவர்களுக்குள் ஒருபோதும் உந்துதல் ஏற்படுத்த முடியாது.

(ii) தெளிவு

தரிசனக்காரன் தன்னுடைய தரிசனத்தை ஞானமாய் வெற்றிகரமாய் தெரிவிக்ககூடியவனாய் இருக்க வேண்டும். அதாவது தரிசனம் என்பது செயல் திறன், விபரங்கள் மற்றும் பல. இதை செய்வதற்கு அவர்கள் தரிசனத்தை அறிந்து புரிந்து கொள்ள வேண்டும். அதிகமான மற்ற ஜனங்களுக்கு தரிசனத்தை விளக்க வேண்டியது அவசியம். மோசேயைப் போல் தரிசனத்தில் குறிப்பிட்ட பகுதியின் மாதிரியை பெற்று யாரோடு வேலை செய்யும்படியாய் தேவன் அழைத்தாரோ அவர்களோடு (யாத்திராகமம் 26:30; 24:34),

எனவே தரிசனக்காரன் தேவனுடன் நேரத்தை செலவழித்து தேவன் தந்த தரிசனத்தின் விளக்கத்தை கொடுக்கவும், மற்றவர்களிடத்தில் கொண்டு செல்லவும் தெளிவு தேவை. அதன் பின் தரிசனக்காரன் செய்து முடிக்கிறவர்களிடத்திலும் மற்ற யாரெல்லாம் அந்த தரிசனத்திலே பங்கு பெறும்படியாக அழைக்கப்பட்டார்களோ அவர்களிடத்தில் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை சொல்ல வேண்டும் (அதாவது, தேவனுடைய மாதிரி என்ன). தரிசனக்காரனுடைய தரிசனத்தை தங்களுடையது ஆக்கியவர்கள் இப்பொழுது தரிசனக்காரன் சொன்னதான விபரங்களை சொல்ல வேண்டும் என்பதை நினைவில் கொள்க.

(iii) புரிந்துக்கொள்ளுதல்

மோசேயைப் போல தரிசனக்காரன் தரிசனத்தையும் அதன் செயல்பாடுகளையும் புரிந்து கொள்ள வேண்டும். தரிசனத்தின் உண்மையான தன்மை என்ன என்பதையும் இருதயத்தின் உறுதியான நிலையை அறிந்து எல்லா சூழ்நிலைகளையும் நிதானிக்கக் கூடியவர்களாய் அதற்கேற்றாற்போல் எதிர்கொள்கிறவர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும். எனவே அவர்கள் எந்த விதமான செயலையும் / நடக்கையையும் / திருப்பங்களையும் பார்ப்பதற்கு திறமை உள்ளவர்களாய், தேவனுடைய தரிசனத்தில் அவர் விரும்பிய பிரகாரமாய் இல்லாமல் எவ்வளவு தூரம் விலகிச் செல்கிறது என்பதை அறிந்து ஜனங்களை மற்றும் தரிசனத்தை மீண்டுமாய் அவர்கள் / அது இருக்க வேண்டிய இடத்திற்கு கொண்டு வருகிறவர்களாய் இருக்க வேண்டும். உண்மையிலே தரிசனக்காரன் செய்து முடிக்கிறவர்களையும், தாங்கிப் பிடிக்கிறவர்களையும், தரிசனத்தோடு இணைந்த நிலைமையில் இருப்பதற்கு பாதுகாக்கிறவராய் இருக்க வேண்டும். அதோடு கூட புரிந்து கொண்டு தரிசனம் திறம்பட செயல்படுவதற்கு தேவையான இடங்களில் எந்த ஒரு திருத்தங்களையும் கொண்டு வரக்கூடியவராய் இருக்க வேண்டும். மோசே ஆசாரிப்புக் கூடாரத்தை ஆய்வு செய்தான், ஏனெனில் தரிசனத்தின்படி எப்படி இருக்க வேண்டுமென்று புரிந்து வைத்துள்ளான் (யாத்திராகமம் 39:32-34). தேவன் அவனுக்கு கொடுத்த தரிசனத்தின்படி எல்லாம் சரியாக செய்யப்பட்டிருக்கிறதா என்பதை உறுதி செய்து கொண்டான், ஏனெனில் இல்லாவிட்டால் தேவனுடைய மகிமை வராது.

தரிசனக்காரர்கள் விசுவாசத்தின் ஜனங்களாய் நிலைத்திருப்பதற்கு கவனம் செலுத்த வேண்டும். ஒருபோதும் பலன் இல்லாத சொப்பனக்காரனாய், தற்போது உள்ள பயன்பாட்டு காரியங்களை மாத்திரம் கருத்தில் கொண்டு அல்லது அதிக இம்மைக்குரியவர்களாய் மாறிவிடக்கூடாது (அதாவது மிக உயர்ந்த மனதுடையவர்களாய் இவ்வுலக உபயோகத்திற்கே உபயோகிக்க தகுதியில்லாதவர்களாய் மாறிவிடக்கூடாது). தரிசனக்காரர்கள் முன் உணரக்கூடியவர்களாய் இருக்க வேண்டும். அதாவது முன்பாக என்ன இருக்கிறது என்று தேவனுக்குள்ளாய் காணும் திறமையுடையவர்களாய் மற்றும் அதற்கான வழி வகைகளை ஏற்படுத்தக்கூடியவர்களாய் இருக்க வேண்டும். அவர்கள் ஈடுபட்டுள்ள செயல்பாடுகளில் முடிவின் விளைவை தனக்குள் காணும் திறமையுடையவராய் இருக்க வேண்டும். அவர்களுடைய கோட்பாடுகள், முறைகள், இலக்குகள் எதிர்காலத்தில் என்ன விதமான விளைவுகளை உண்டாக்கும் என்பதை அறிந்தவர்களாய் இருக்க வேண்டும்.

(iv) அதிகாரம்

ஒரு தரிசனக்காரனின் அதிகாரம் தேவனிடத்தில் அவர்கள் பெற்ற அபிஷேகத்தினால் வருகிறது. அவர்கள் அதற்காக முயற்சி செய்ய வேண்டியதில்லை. ஆனால் அதிலே நிலைத்திருந்தால் போதுமானது. மற்ற ஜனங்கள் அதை அங்கிகரித்து கொள்வார்கள் (குறிப்பாக, அதே தரிசனத்தில் அவர்களோடு வேலை செய்யும்படியாக) தேவனால் அழைக்கப்பட்டவர்கள் எப்பொழுது தரிசனக்காரன் அபிஷேகத்தை இழக்கிறானோ, அப்பொழுது தன்னுடைய தரிசனத்தை செயல்படுத்துவதற்கு / மூலஆதாரமாய் இருப்பதற்கான அதிகாரத்தை இழந்து விடுகிறான். இதனால் தான் தரிசனத்தை உடைய நபர் எப்பொழுதும் தேவனுக்கு முன்பாக தாழ்மையை கடைபிடிக்க வேண்டும்.

(v) பொறுப்புணர்வு

தரிசனக்காரர்கள் தேவன் தந்த தரிசனம் நிறைவேறுவதற்கு பிரதான பொறுப்பாளியாவார்கள் (எத்தனை செய்து முடிக்கிறவர்கள் மற்றும் தாங்கி பிடிக்கிறவர்கள் அவர்களிடத்தில் உள்ளனர் என்பது காரியமல்ல) இதன் அர்த்தம் என்னவென்றால் அவர்கள் தேவனை சார்ந்திருக்க வேண்டும் மற்றும் தரிசனம் நிறைவேறுவதைக் காண போதுமான விசுவாசம் உடையவர்களாய் இருக்க வேண்டும். உண்மையிலே பார்ப்பதற்கு வெறுமையாய்த் தோற்றமளிக்கும் இடத்திலும் விருப்பத்துடன் விசுவாசத்தின் புதிய அடிகளை எடுத்து வைப்பது அவசியம். தரிசனக்காரன் பரபரப்பு அடைய மாட்டான். தரிசனத்தை சரியான விதத்தில் தொடர்ந்து நடத்துவதற்கு பொறுப்புணர்ச்சியின் விலைக் கிரையத்தை எண்ணுவதற்கும், அதைச் செலுத்துவதற்கும் அவசியம். மோசே தொடர்ந்தேர்ச்சியாக தேவனுக்கும், ஜனங்களுக்கும் இடையே தன்னை வைக்க வேண்டியதாயிற்று. மோசேக்கு தரிசனத்தின் மிகப்பெரிய பொறுப்பைக் குறித்து தெரியும் மற்றும் அதின் எல்லைகளையும் அவன் அறிந்து வைத்திருந்தான் (அவன் எப்பொழுதும் அதன் அருகாமையிலே வேலை செய்தான்). தரிசனக்காரர்கள் ஜனங்களை தேவனிடத்திற்கும், அவருடைய தரிசனத்திற்கும் நேராக வழி நடத்த வேண்டிய பொறுப்பில் இருக்கிறார்கள் தனக்குத் தானேயல்ல.

செய்து முடிக்கிறவரின் குணாதிசயங்கள் (ENABLER)

தேவன் மோசேக்கு கொடுத்தது போல தகுதியுள்ள மனிதர்களை தரிசனம் நிறைவேறுவதற்கு கொடுக்கிறார். எனவே தேவன் ஒவ்வொரு உண்மையான தரிசனக்காரனுக்கும் அவர்களுக்கு தேவைப்படுகிற ஒவ்வொரு நபரையும், தரிசனம் நிறைவேறுவதற்கு தருகிறார். செய்து முடிக்கிறவர்கள் தரிசனத்தை மூலஆதாரத்திலிருந்து எடுத்து அது செயல்படுவதற்கு தொடங்கி வைக்கிறார். எனவே அவர்கள் மிகவும் பொறுப்புள்ள ஒரு கூட்ட ஜனங்கள், அவர்களை புரிந்து கொண்டு ஒருங்கிணைத்து தரிசனத்தை தெளிவாக செய்தித்தொடர்பு கொள்வது அவசியம். தரிசனத்தின் மையப்பகுதியின் சாரம்சத்திற்கு அருகில் இருப்பது அவர்களுக்கு அவசியம். மேலும் உண்மையிலே அவர்கள் மிஷினெரி சொன்ன காரியத்தை எதிரொலிக்க வேண்டும். செய்து முடிக்கிறவர்கள் இப்படிப்பட்ட ஜனங்களாய் இருப்பது அவசியம்:

(i) புலனறிவு திறமை

செய்து முடிக்கிறவர்கள் தரிசனத்திலே பங்கு பெற்று அதை தங்களுக்கே சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். எனவே அவர்களுக்கு தரிசனக்காரன் தொடர்ந்து தரிசனத்தைக் குறித்து விளக்கம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. உண்மையிலே செய்து முடிக்கிறவர்கள் தரிசனத்தை மற்ற ஜனங்களுக்கும், மீண்டும் தரிசனக்காரன் வியாக்கியானம் செய்வதற்கு நம்பிக்கைக்கு பாத்திரமான ஜனங்களாய் இருக்க வேண்டும். தரிசனத்தை நிறைவேற்றுவதில் அடங்கியுள்ள காரியத்தை காண்கிறவர்களாய் இருக்க வேண்டும். அதோடு அதைக்குறித்து ஏதாகிலும் செய்கிறவர்களாய் இருக்க வேண்டும், அதாவது கிரியை செய்ய வைக்க வேண்டும்.

(ii) முடிவு செய்து அதன்படி நடக்கும் திறமை

செய்து முடிக்கிறவர்கள் தீர்மானம் எடுக்கக்கூடியவர்களாய் இருக்க வேண்டும். அது தரிசனத்தோடு தொடர்புடையதாய் இருக்க வேண்டும். அது செய்து முடிக்கக் கூடியதாய் இருக்க வேண்டும். ஆரோன் இஸ்ரவேல் ஜனங்களுக்காக தன்னுடைய இருதயத்திலே தீர்மானம் எடுக்கிறவனாய் இருந்தான் (யாத்திராகமம் 28:30). இன்று செய்து முடிக்கிறவர்கள் தேவனையும், அவருடைய தரிசனத்தையும் அவர்களுடைய இருதயத்தில் அறிய வேண்டும். ஆகையால் சரியான தீர்மானம் எடுக்கும் திறமை உள்ளவர்களாய் மாறி தரிசனம் செயல்படுத்தப் படுவதற்கு உதவியாய் இருக்க வேண்டும் (ஒருபோதும் அதிலிருந்து திசை திருப்பக்கூடாது).

(iii) ஒரே மனநிலையில் இருக்கும் திறமை

செய்து முடிக்கிறவர்கள் தரிசனத்திற்கு தங்களை அர்ப்பணித்து அதை தொடர்ந்து செய்கிறவர்களாய் இருக்க வேண்டும் (யோசுவா 24:15). உண்மையிலே முடிவு அல்லது இலக்கை அடையும்வரை என்ன விலைக்கிரையம் செலுத்த வேண்டியது வந்தாலும், அதைத் தொடர்ந்து பின்பற்று. மோசேயின் தரிசனத்திற்கு தங்களை அர்ப்பணித்த இரண்டு மனிதர்கள் மோசே இறந்த பின்பும் அதை சுமக்கிறவர்களாய் இருந்தனர் (தொடர்ந்து செய்தார்கள் யோசுவாவும் காலோபும்)

செய்து முடிக்கிறவர்கள் ஆபத்தானவர்களாய் கூட மாறலாம். ஏனெனில் தரிசனத்தை பொறுத்தவரை அவர்கள் வல்லமையுள்ள ஜனங்கள். உதாரணமாக, ஆரோன் பொன்கன்றுக் குட்டியை செய்து கீழ்ப்படியாமை காட்டுவதற்கும், முறுமுறுத்து தரிசனத்தை விட்டு விலகி ஒடுவதற்கும் அனுமதித்தான் (யாத்திராகமம் 32). பின்பு மோசேயின் தரிசனத்திலிருந்து விலகி தலைமைத்துவத்திற்கு எதிராக முறுமுறுக்க அனுமதித்தான் (எண்ணாகமம் 12), பரிசுத்தமான / சுத்தமான மற்றும் புனித குறைவான ∴ அசுத்தமான இவற்றிக்கு இடையேயுள்ள வேறுபாட்டை காணும் பார்வையை இழந்து விடுகிறான் (லேவியராகமம் 10). ஒவ்வொரு முறையும் ஆரோன் தரிசனத்திலிருந்து வழிவிலகும் போது அவன் மிகப்பெரிய அழிவிற்கு வித்திட்டான். இதே உண்மைதான் அநேக தரிசனங்களை உள்ள செய்து முடிக்கிறவர்களுக்கு. எனவே, அவர்கள் மிக கவனமாய் தரிசனத்திற்கு உண்மையாய் நிலைத்து நிற்பது அவசியம்.

(iv) ஊக்குவிக்கும் திறமை

செய்து முடிக்கிறவர்கள் மற்ற ஜனங்களுடைய வாழ்க்கையில் அவர்கள் தரிசனத்திலிருந்து பெற்றதான காரியத்தை (ஒரு பகுதியாவது) விதைக்கக்கூடியவர்களாய் இருக்க வேண்டும். எனவே, அந்த ஜனங்கள் செயலிலே திறம்பட செய்யக்கூடியவர்களாய் மாறுவார்கள். அவர்கள் மற்ற ஜனங்களுக்கு போதிக்கும் திறமையும், ஊக்கப்படுத்தும் திறமையும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். எனவே, அந்த ஜனங்கள் தரிசனத்திற்கு உபயோகம் உள்ளவர்களாய் இருப்பார்கள் (யாத்திராகமம் 35:30-35). மற்ற ஜனங்களோடு தன்னை அடையாளப் படுத்திக் கொள்கிறவர்களாய் இருக்க வேண்டும். எனவே, அந்த ஜனங்களை சரியானப் பாதையில் நடத்த முடியும்.

(v) தலைமைத்துவ திறமை

மற்ற ஜனங்களை நடத்தக்கூடிய தலைவர்களாய் மாத்திரமல்ல, மற்ற தலைவர்களையும் நடத்தக்கூடிய தலைவர்களாய் இருக்க வேண்டும் (உபாகமம் 34:9)

<u>தாங்கிப் பிடிக்கிறவர்களின் குணாதிசயங்கள் (Sustainer)</u>

அவர்கள் அடிப்படையான, முன்னணியில் நிற்கும் ஜனங்கள் தரிசனத்தை செயல்படுத்தி நடைமுறையில் விளக்கமான வழியில் பராமரிக்கக்கூடியவர்கள் தாங்கிப் பிடிக்கிறவர்கள் இவ்விதமான ஜனங்களாய் இருக்க வேண்டும்:

(i) பணிவு

தாங்கிப் பிடிக்கிறவர்கள் தரிசனத்தின் விரிவான பகுதியை தங்களுடைய இருதயத்தில் எடுத்துக் கொள்ளுகிற ஜனங்களாய் இருக்க வேண்டும். ஆனால், அவர்கள் தரிசனத்தின் அவர்களுடைய பங்கில் வேலை செய்வதற்கு கவனத்தை செலுத்துகிறவர்கள், எனவே, அவர்கள் தரிசனத்திற்கும், தலைமைத்துவத்திற்கும் யார் தங்களுடைய முயற்சிகளை வழிநடத்தி தரிசனம் நிறைவேறுவதற்கு உதவுகிறார்களோ, அவர்களுக்கு பணிவாய் இருக்க வேண்டும். அச்சத்தின் பின்செல்லுகிறவர்களாக, தாழ்வு மனப்பான்மை ஆவியுள்ளவர்களாக அவர்கள் இருக்க வேண்டிய அவசியமில்லை. அப்படிப்பட்ட ஆவிகள் சொல்லும், 'நான் நல்லவனல்ல, நான் வரங்களை / திறமைகளைப் பெற்றவனல்ல, சில தெய்வீக தீர்க்க தரிசகள் எனக்கு சொன்னபடியே ஒவ்வொரு சொல்லையும் நான்

சுமக்க வேண்டும்'. ஆண்டவர் அவர்களுக்கு கட்டளையிட்டபடியே வேலை செய்ய வேண்டும். அவர்கள் உண்மையான மதிப்புமிக்கவர்கள் மற்றும் பயன்படக்கூடியவர்கள் என்ற தெய்வீக உணர்வு உடையவர்களாய் இருக்க வேண்டும்.

(ii) ஈடுபாடு, ஒப்படைப்பு

தாங்கிப் பிடிக்கிறவர்கள் தேவனால் அழைக்கப்பட்ட பணியை செய்து முடிப்பதற்கு ஈடுபாடு உள்ளவர்களாய் இருக்க வேண்டும். அந்தப் பணியை தேவன் தந்த திறமையில் சிறப்பாக செய்ய வேண்டும். சிலர் தாங்களாகவே விலகினாலும் வேலை செய்ய மனதுடையவர்களாய் இருக்க வேண்டும்.

(iii) விருப்பம்

தாங்கிப் பிடிக்கிறவர்கள் அவர்கள் செய்ய வேண்டிய வேலையை விருப்பமுள்ள மனதுடன் வேலை செய்கிறவர்களாய் இருக்க வேண்டும் (யாத்திராகமம் 35:20,21), ஏனெனில் அவருடைய மக்களுக்கும் அவர் தந்த தரிசனத்திற்கும், ஆண்டவருக்கும் சேவை செய்ய மனதுடையவர்கள். அவர்கள் வேலை செய்யும் சூழ்நிலையில் தரிசனத்தை செயல்படுத்த விருப்பத்தோடு முயற்சி செய்கிறவர்களாய் இருக்க வேண்டும்.

(iv) விடாமுயற்சி

தாங்கிப் பிடிக்கிறவர்கள் தங்களுடைய வேலை நிறைவு பெற்று இருக்கிறதை காண விரும்புகிறார்கள். இது நடைபெறுவதற்கு தங்களையும், தங்களுடைய நேரத்தையும் மனப்பூர்வமாய் கொடுக்கிறார்கள். விசுவாசத்திலே நீட்டிக்கப்படவும், அதற்கான கிரையத்தை செலுத்தவும் மனப்பூர்வமாக சம்மதிக்க வேண்டும். அப்பொழுது தான் தரிசனத்தில் தங்களுடைய பகுதியை வெற்றிகரமாக செய்து முடிக்க முடியும் (இதன் அர்த்தம் அவர்கள் முன்பு இருந்த நிலையைக் காட்டிலும் நன்றாக நீட்டிக்க படுதல்). இயேசு அவர்களை நோக்கி: ''நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின் படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது'' (யோவான் 4:34). இயேசுவைப் பின்பற்றுகிற அனைவரும் இந்தக் காரியத்திலே அவருடைய மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

(v) வரங்கள்

தாங்கிப் பிடிக்கிறவர்கள் தேவன் அவர்களுக்கென்று நியமித்ததான குறிப்பிட்ட பணியை செய்து முடிப்பதற்கு தேவன் தந்த சரியான வரத்தை கண்டுபிடிக்க வேண்டும் (யாத்திராகமம் 36:1). உண்மையிலே தேவன் அழைத்த ஒவ்வொரு நபருக்கும், தேவன் கொடுத்த தரிசனம் வேலை செய்ய, வெற்றிகரமாக நிறைவேறுவதற்கும், தேவன் தந்த வரங்களில் மட்டுமே தரிசனமானது பயனுள்ள விதத்திலே செயல்படும். தரிசனக்காரர்களும் செய்து முடிக்கிறவர்களும், தேவன் ஜனங்களுக்கு தந்த வரங்களை / தாலந்துகளை நிதானித்து விடுவிக்க கூடியவர்களாய் இருக்க வேண்டும். அப்பொழுது மட்டுமே தரிசனம் நிறைவேற முடியும். எப்பொழுது ஒரு நபர் அவருக்கு தந்த வரத்திலே விடுவிக்கப்படுகிறார்களோ, அப்பொழுது மட்டுமே அவர்கள் மற்ற ஜனங்களை வித்தியாசமான வெளிச்சத்திலே பார்க்கிறார் என்பதை நினைவில் வையுங்கள். அந்த தரிசனத்திலே மற்ற ஜனங்களுக்கு தேவன் தந்த வரங்களுக்கு முன்பாக தரிசனத்திலே பங்குள்ள எல்லா ஜனங்களும் தங்களை தாழ்த்தி / ஒப்படைக்க வேண்டும்.

பகுதியாக ஒத்திருக்கும் பகுதிகள்

இந்த தரிசனத்தில் எல்லா நிலைகளிலும் பங்கு பெறுகின்றவர்களுக்கு இப்படிப்பட்ட அநேக குணாதிசயங்கள் பொருந்தும். உதாரணமாக, தாங்கிப் பிடிக்கிறவர்களிடத்திலே பணிவு எதிர்பார்க்கப் படுகிறது போல, தரிசனக்காரர்களும் தேவனுக்கும், தரிசனத்திற்கும் பணிய வேண்டும். செய்து முடிக்கிறவர்களுக்கு புலனறிவு தேவையாய் இருப்பது போல தாங்கிப் பிடிக்கிறவர்களும் தரிசனத்தில்

தங்களுடைய இடத்தை கண்டு, அதன் மதிப்பை அறிவது அவசியம். தாங்கி பிடிக்கிறவர்கள் அர்ப்பணிப்பு உள்ளவர்களாய் இருப்பது போல தரிசனக்காரர்களும் அர்ப்பணிக்கப் பட்டவர்களாய் இருக்க வேண்டும் (உண்மையிலே அவர்கள் தான் அதிக அர்ப்பணிப்பு உள்ளவர்களாய் இருக்க வேண்டும். ஏனெனில் அவன் தான் முடிவிலே மிகப்பெரிய விலைக்கிரையத்தை தாங்குகிறவன்). உண்மையென்னவென்றால், எல்லாக் குணாதிசயங்களும், ஒன்றுக் கொன்று தொடர்புடையவைகள். ஆனால், அவர்களின் செயல்திறன் வெளிப்பாட்டின் மதிப்பீடு தான் வித்தியாசத்தை உண்டாக்குகிறது.

தரிசனக்காரர்கள், செய்து முடிக்கிறவர்கள், தாங்கிப் பிடிக்கிறவர்கள், அனைவரும் தரிசனத்திற்கு வேலைக்காரர்களாய் இருப்பது அவசியம். அவர்கள் நோக்கத்திலும், இருதயத்திலும் ஐக்கியமுள்ளவர்களாய் இருப்பது அவசியம். அந்த தரிசனத்திலே அவர்களுடைய சொந்த இடத்திலே அவர்கள் நம்பிக்கை உள்ளவர்களாகவும், திருப்தியுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். ஆண்டவருக்குள்ளும், தங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் தொடர்ந்து ஆவியிலே திறந்த நிலையில் இருப்பது அவசியம். தரிசனத்தில் பங்கு பெறும்படி அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் தனிப்பட்ட விதத்திலே தரிசனத்தோடும், தரிசனக்காரனோடும் தொடர்புடையவர்களாய் உணர வேண்டும். அவர்கள் செய்கிற எல்லாக் காரியத்திற்கும் தனிப்பட்ட வித்திலே கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்கள் என்பதை அறிய வேண்டும். அவருடைய வேலையின் நிமித்தம் மதிப்புடையவர்கள் பொறுப்புள்ளவர்கள் என்ற உணர்வின் அறிவு இருக்க வேண்டும். அந்த தரிசனத்திலே வேலை செய்கிற ஒவ்வொருவரும் ஒரே குரலில் பேசும்படியான தரிசனம் செய்தி தொடர்பு கொள்ள விரும்புகிற செய்தியில் தனிப்பட்ட விதத்தில் ஈடுபாடு உடையவர்களாய் இருக்க வேண்டும்.

ஸ்தாபன அமைப்பு முறை மற்றும் தேவனுடைய மூலஆதார தரிசனம்

ஊழியத்தை வெற்றிகரமாக மாற்றுகிற ஆவிக்குரிய தரிசனத்தை எந்த ஒரு அமைப்பும் உருவாக்குவதில்லை. எந்த ஒரு சபை / குழுவின் அமைப்பாக தேவமனிதனின் தரிசனம் மாத்திரமே இருக்க வேண்டும். உண்மையிலே சபை / ஸ்தானபத்தின் அமைப்பு வல்லமையாக எப்பொழுதும் பொருந்தக் கூடியதாய் இருக்குமென்றால், ஒன்றாக இணைக்கப்பட்டு தேவ தரிசனத்திற்கு சேவை செய்யும்போது தான் எப்படியிருந்தாலும் சபை அல்லது குழுவின் அமைப்பு முக்கியமானது. ஏனெனில் இது ஆவிக்குரிய தரிசனம் நடைமுறை உண்மையாக மாறுவதற்கு உதவி புரிகிறது. அதாவது, அமைப்பு தரிசனம் வெளியே செயல்படுவதற்கு உதவி செய்கிறது (நிறைவேற்றப் படுவதற்காக செயல் திறத்துடன் தரிசனமானது உண்மையிலே வெளியே வேலை செய்யப்படவேண்டும். இல்லாவிட்டால் கட்டுக்கதையியல், மறைபொருளியலாகவும் மாறிவிடும்).

தரிசனக்காரர்கள் மற்ற ஜனங்கள் மற்றும் ஸ்தாபனம் / அமைப்பு தேவனிடத்திலிருந்து பெற்ற மூலஆதாரமாகிய தரிசனம் நடைமுறை உண்மையாக மாறுவதற்கு உதவி செய்தல் அவசியம். மற்ற ஜனங்கள் செயல்படுவதற்கான இடத்தை உருவாக்கவில்லையென்றால் தரிசனமானது அவர்களுக்குள்ளே பூட்டப்பட்டதாய் இருக்கும். அவர்களும் தரிசனத்தின் பகுதியை இந்த ஜனங்களுக்கு விடுவிப்பது அவசியம். இந்த சுயாதீனம் தரிசனக்காரனையும், அந்த தரிசனத்திலே வேலை செய்யும்படியாக தேவனால் அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் பகுதியை பெற்று அவர்கள் பங்கை செய்ய வேண்டும். இந்த ஒரு வழியாக மாத்திரம் தரிசனமானது உண்மையாக்கப்படும். உதாரணமாக, தரிசனக்காரன் ஒரு ஸ்தாபனம் ஆரம்பிப்பதற்கு பொதுவாக ஆரம்பகட்ட செயல்களை செய்வான், ஆனால் அது நிர்வாக திறமையுள்ள தலைவர்களை ஏற்படுத்தி, தரிசனம் உருவாக்குகிற வளர்ச்சியின் பாதையில் செல்லத்தக்கதாக தாங்கி பிடித்து நியாயந்தீர்க்கிறது. மேலும், ஸ்தானபத்திற்கு தேவைப்படுகிற ஒரு கூட்ட ஜனங்கள் அமைப்பில் ஒருங்கிணைந்து முயற்சி செய்ய முடிகிறது. ஏனெனில், இல்லாவிட்டால் எந்த ஒரு மதிப்புமிக்க காரியத்தை அடைந்து, பராமரிக்க முடியாது.

தரிசனம் பரிசோதிக்கப்படும்

தேவனுடைய தலைவர்கள் அடிக்கடி தங்களுடைய ஆவிக்குரிய உள்ளக்காட்சி தேவனுடைய நோக்கத்தோடு உள்ளதா என்று காணவேண்டும். தேவனிடத்திலிருந்து வந்த அவர்களுடைய தரிசனம் கேள்வி கேட்கப்பட்டு, சாவாலிடப்பட்டு அல்லது எதிர்க்கப்படுகிறது. எனவே அவர்கள் ஆண்டவரிடத்திலிருந்து கேட்ட ஒன்று தானா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அப்பொழுது மட்டுமே அவர்கள் சூழ்நிலையை விசுவாசத்தோடு ஆவிக்குரிய கண்களால் காண்பார்கள்.

உண்மையிலே, தேவன் எதிர்ப்பை வரவிடுகின்றதின் நிமித்தமாக தன்னுடைய தலைவர்களின் தரிசனம் உள்ளக்காட்சியை பரிசோதிக்க அனுமதிக்கிறார். அப்பொழுது தான் தேவன் காட்டிய காரியத்தில் அவர்களுடைய விசுவாசத்தில் எவ்வளவு ஆழமாய் இருக்கிறார்கள் என்ற உண்மை தெரியவரும். தேவன் நம்முடைய தலைவர்கள் தொடர்நதேர்ச்சியாய் தன்னையும், தன்னுடைய பரிசுத்த ஆவியானவரையும் சார்ந்திருக்க வேண்டுமென்று விரும்புகிறார். தங்களுடைய செய்து முடிக்கும் திறமைகளையோ / ஏற்புத் திறமையையோ / பதவியையோ / மற்ற ஜனங்களையோ அல்லது சூழ்நிலையையோ சார்ந்து இருக்க தேவன் விரும்பவில்லை.

மற்றொரு காரணம் தரிசனம் நிறைவேற்றபடுகிறதினால் வருகிற எல்லா மகிமையும் அவர் பெற விரும்புகிறபடியினால் தரிசனத்தை அவர் வைத்திருக்கிற தன்னுடைய தலைவர்களுடைய இருதயத்தை பரிசோதிக்க அவர் அனுமதிக்கிறார். தேவன் தரிசனத்தை சாகும் நிலைக்கு அனுமதித்து தலைவர்களை அடிக்கடி பரிசோதிக்கிறார். அதாவது தரிசனம் பிறந்த பிறகு, பார்ப்பதற்கு அது செத்தது போல காணப்படும். தேவனிடத்தில் போவதைத் தவிர இந்த சூழ்நிலையில் தலைவர்கள் ஒன்றையும் செய்ய முடியாது. இப்படிபட்ட சூழ்நிலையை தேவன் அனுமதிக்கிறார். ஏனெனில் தன்னுடைய தலைவர்கள் ஆவிக்குரிய தரிசனத்தை மீண்டும் அவரிடமே கொடுக்க அவர் விரும்புகிறார். எல்லாவற்றிக்கும் மேலாக எந்த ஒரு தேவனுடைய தலைவரும் தாங்கள் தரிசனத்தை சொந்தமாக்கிக் கொண்டோம், தாங்கள் தான் தெரிவித்தோம் அல்லது செயல்படுத்தினோம் என்று உணரவோ, விசுவாசிக்கவோ மாட்டார்கள். தேவன் எல்லா மகிமையும் விரும்புகிறார். தரிசனம் சில பகுதியில் செத்தது போல காணப்பட்டு தேவனால் மாத்திரம் உயிர்ப்பிக்கப்படும் போது தலைவருக்கு, தேவனுக்கே எல்லா மகிமையும் கொடுப்பது மிக எளிதாகிறது. இப்படிபட்ட அனுபவம் உள்ள ஒரு தலைவர் (இதைப் போல் ஒத்த அநேக அனுபவங்கள்) தரிசனம் நிறைவேறும் போது தேவனுக்கு எல்லா மகிமையையும் கொடுப்பார். தரிசனம் தேவனால் மாத்திரம் அவருடைய வழியில் அவருடைய நேரத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதை உணர்ந்து கொள்வார்கள். தரிசனத்தில் செயல்பட்ட எல்லோரும் தேவனால் உபயோகப்படுத்தப்பட்ட கருவிகள் என்பதை உணர்ந்து கொள்வார்கள்.

தரிசனத்தை இழத்தல்

தரிசனத்தை இழத்தல் என்பது இளைஞர்களுக்கும், அனுபவம் இல்லாத கிறிஸ்தவ தலைவர்களுக்கும் பொதுவாக இது ஒரு பிரச்சனையே அல்ல. ஏனெனில் அவர்கள் தங்களை வைத்துப் பார்க்கிற இடம் எல்லாம் கைவிட்டுப் போனதாக காண்பார்கள். எப்படி இருந்தாலும், வயதானவர்கள் அதிகமாக நிலைநிறுத்தப்பட்ட தலைவர்கள் தரிசனத்தை இழத்தல் என்பதை அதிக மோசமாக பிரச்சனை என்பதாக காண்கிறார்கள். விசேஷமாக, அவர்கள் ஆவிக்குரிய தரிசனத்தில் தங்களுடைய பகுதியை நிறைவேற்றிய பின் இங்கே பிரச்சனை என்னவென்றால், தலைவர் ஒரு தரிசனத்தை நிறைவேற்றி விட்டு (ஒன்றில் ஒரு பகுதியை) மற்றொன்றிற்கு (மற்ற ஒரு பகுதி) தேவனிடத்தில் செல்வதற்கு தவறிவிடுதல். இப்படிபட்ட பிரச்சனைக்கு முக்கியமான காரணம் என்னவென்றால், இந்த தலைவர்கள் குறிப்பிட்ட விதமான வேலையை அநேக ஆண்டுகள் செய்து, அது அவர்களில் ஒரு பகுதியாக மாறி விடுகிறது. பின்பு அந்த வேலை முடிந்தவுடன் அவர்கள் இழந்தவர்களாய் காணப்படுகிறார்கள். ஏனெனில் அவர்களுடைய வேலை அர்த்தத்தை கொடுத்து, நோக்கத்தின் உணர்வையும் கொடுக்கிறபடியினால், தேவனை சேவிப்பது என்பது எங்கோ ஒரு பகுதியில் சென்று இரண்டாம் தரமானதாய் மாறிவிடுகிறது. அவருடைய வேலையை செய்வதைக் காட்டிலும் இந்தத் தலைவர்கள் ஒரு காலத்தில் பரபரப்பாய் இருந்தவர்கள். இப்பொழுது எல்லாவற்றையும் இழந்து என்ன செய்வது என்று தெரியமால் திகைக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் தொடர்ந்து நீண்ட காலம் நீடித்தால் தலைவர்கள் செயலற்றவர்களாய், ஊக்கம் இழந்தவர்களாய், வெறுப்படைந்தவர்களாய், ஏமாற்றம் உள்ள ஜனங்களாய் முடிவடைந்து விடுவார்கள். பதில் என்னவென்றால், புதிய தரிசனத்திற்காக தேவனுடைய சமூகத்தில் காத்திருப்பது தான். அல்லது அந்த நபர் செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிற தரிசனத்தை தேவன் வெளிப்படுத்தி அவருக்காக சேவை செய்வது.

தரிசனத்தின் மூலஆதாரம் / ஆரம்பித்து வைத்தவர் மற்றொரு தரிசனக்காரனால் இடமாற்றம் செய்யப்படாவிட்டால் தரிசனமானது சீக்கிரத்தில் பாரம்பரியமானதும், சட்டதிட்டமானதுமாய் மாறி விடும். தரிசனத்தில் புதிய தலைவர்கள் அடிக்கடி தரிசனக்காரனுடைய நிலையையும், செய்து முடித்தவற்றையும் உண்மையாய் பாதுகாக்க முயற்சி செய்கிறார். தொடர்ந்திருக்கும் செத்த

பாரம்பரியத்தையும் நிர்வகிப்பார் (அல்லது புதிய ஒன்றை ஆரம்பிப்பார்) எந்த ஒரு ஸ்தாபனமும் / குழுவும் / சபையும் ஒட்டுநர் இருக்கையில் செய்து முடிக்கிறவர்களோ, தாங்கி பிடிக்கிறவர்களோ தனியாக இருக்க அனுமதிப்பதில்லை. ஒவ்வொரு தேவனுடைய வேலையிலும் தரிசனக்காரர்கள் முதன்மையான தலைமைத்துவத்தில் இருப்பது அவசியம். அவர்கள் ஒரு வேளை முதல் தலைவராக இல்லாமல் இருக்கலாம். ஆனால் தீர்மானம் எடுப்பதிலும் ஸ்தாபனம் / குழு / சபையின் இலக்குகளை நிர்மானிக்கும் செயல்பாட்டிலும் அவர்தான் மையமாக இருப்பது அவசியம். தேவனுடைய வேலையை மற்ற எந்த ஒரு வழியிலாவது செய்ய முயற்சிப்பது குருட்டாட்டத்தில் செய்ய முயற்சிப்பது போலாகும்.

தேவனுடைய தலைவர்கள் ஆண்டவரிடத்தில் இருந்து வந்த ஆவிக்குரிய தரிசனம் உடையவர்களாக இருக்க வேண்டும். எந்தவிதமான அழுத்தமும், எதிர்மறையான ஜனங்களிடத்திலிருந்து அல்லது எதிராளிகளிடத்திலிருந்து / கஷ்டமான சூழ்நிலையிலிருந்து வந்தாலும் ஆவிக்குரிய தரிசனம் நிலைகுலைந்து போகாது, தடுமாறாது, அல்லது இழந்துப் போகாது. தேவன் அவர்களுக்கு தந்த தரிசனத்தின் பகுதியை நிறைவேற்றி முடிக்கும்வரை தொடர்ந்து செயல்படுவார்கள். எந்த ஒரு எதிர்ப்பும் அவர்களை சோர்ந்து போக அனுமதிக்க மாட்டாது. உண்மையிலே தரிசனத்தின் ஜனங்களுக்கு எப்பொழுதெல்லாம் எதிர்ப்பு கிளம்புகிறதோ, அப்பொழுதெல்லாம் தேவனிடத்திற்கு ஜெபத்திலே சென்று அந்த சூழ்நிலையை தேவனிடத்திற்கு எடுத்து செல்வார்கள். அதன்பின்பு தங்களால் தேவனுக்கு செய்ய முடிந்த அனைத்தையும் கடைசிவரை தொடர்ந்து அவர்கள் செய்ய வேண்டும்.

உங்களை தேவனுடைய திட்டத்தில் பார்க்கின்றீர்களா?

- உங்களையும் உங்களுடைய வேலைகளையும் தேவன் பார்ப்பது போல் பார்க்கிறீர்களா?
- தேவனிலும் அவருக்காக உங்களுடைய வேலையிலும் இப்பொழுது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?
- நீங்கள் அடைந்த இந்த இடம் உங்களுடைய குறிப்பிட்ட அளவுதானா?
- உங்களுடைய குறிப்பிட்ட அளவு எவ்வளவு?
- உங்களால் தேவனுக்கு செய்ய முடிந்த அனைத்தையும் இப்பொழுது செய்கின்றீர்களா?

நம்மையும் நம்முடைய வேலையையும் தேவன் பார்க்கிற விதமாய் நாம் பார்க்க வேண்டியது அவசியம். நாம் இதைச் செய்யும்பொழுது நம்முடைய அளவு மற்றும் திறமையின்படி நம்மை மட்டுப்படுத்தி விடாமல் தேவனுடைய அளவு மற்றும் திறமையின் அடிப்படையில் நாம் விசுவாசிக்க முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக நாம் தேவனுக்காக என்ன செய்ய முடியும் என்பது எண்ணப்படாமல் நம் மூலமாய் அவர் என்ன செய்கிறார் என்பது எண்ணப்படும்! நம்மை கிறிஸ்துவுக்குள் வளர்கின்ற, உருவாக்குகின்ற நபராய், தேவனுடைய வல்லமையினால் நிரப்பப்பட்டவராய் காண்பது அவசியம். கிறிஸ்துவுக்குள் நம்மேல் விசுவாசமுள்ளவர்களாய் இருப்பது அவசியம் (2 கொரிந்தியர் 3:4-6; 4:7). இதன்பிறகு மாத்திரமே ஆண்டவர் அவருக்காக செய்யும்படி நமக்கு குறித்த வேலையை நாம் முழுவதும் அடைய முடியும். தேவன் கொடுத்த தரிசனத்திலே பெரிய காரியங்களை தேவனுக்காக சாதிக்கும்படி பெரிய ஒன்றை அல்லது பகுதியை உடையவர்களாக இருப்பது அவசியம் என்பதை நினைவில் கொள்க.

யாத்திராகமம் புஸ்தகத்திலே பளிங்கு கல்லில் வேலை செய்த கைவினைஞர்களை குறித்து வாசிக்கிறோம். இந்த மனிதர்கள் பெசலியேலைக் காட்டிலும் சிறந்த வேலை செய்யமுடியும் (பெசலியேலுக்கு தொழில்நுட்பம் தெரிந்திருந்த போதிலும்). எப்படி இருந்தாலும் அவன் ஒரு செய்து முடிக்கிறவன், ஒருங்கிணைக்கும் வரம் பெற்றவன். மிகப்பெரிய அமைப்பிலே அவர்கள் வேலை செய்வதற்கான இடத்தை அமைத்துக் கொடுத்தான். கைவினைஞர்களும், பெசலியேலும், ஒருவருக்கொருவர் தேவை. இருவருடைய வேலையும் செயல்படுத்தப் படுவதற்கு அந்த நாட்களில் கட்டியெழுப்பப்பட்ட ஆசாரிப்புக் கூடாரத்தை கற்பனை செய்ய முடிகிறதா? முதலிலே எல்லாம் நிலத்திலே அங்குமிங்குமாய் சிதறி கிடந்திருக்கும். பளிங்குகல் கைவினைஞர்களும் மற்ற எல்லா வேலைக்காரர்களும் அங்கு நின்று முழுமையில் தங்களுடைய பகுதியை செய்வதை கவனித்தார்கள். மெதுவாக, முழுமையான காரியம் ஒன்றிணைந்து வந்த போது எல்லா ஜனங்களும் ஆச்சரியப்

பட்டிருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அவர்களுடைய சிறிய பகுதி முழுமையின் ஒருபகுதியை நிறைவேற்றி தரிசனம் நிறைவேற உதவியது. அவர்கள் தனிப்பட்டவர்களாய் இருந்து, சொந்தக் காரியத்தை செய்தார்கள். ஆனால் தனிமையாக அவர்களுக்கு முன்னிருந்த வெளிப்படுத்தப்பட்டு பார்த்த காரியத்தின் அருகில் கூட சென்றிருக்க முடியாது. அவர்களுடைய வேலை முழுமையின் ஒரு பகுதி. அதிலே தேவனுடைய மகிமை தங்கியிருக்க தெரிந்து கொண்டார். தேவன் வேலை செய்யும்படியாக அழைத்த தரிசனத்திலே நம்முடைய பகுதியை நாம் செய்ய வேண்டும். அந்த இடம் தான் தேவனுடைய மகிமை தங்கப்போகிற இடம். உண்மையிலே தேவனுடைய திட்டத்திலே உங்களுடைய இடத்தைப் பார்க்க ஆரம்பித்து அந்த திட்டத்திலே மற்ற தேவஜனங்களோடு உள்ள தொடர்பில் எப்படி நீங்கள் பொருந்துவீர்கள் என்பதை காண்பது தான் மிகப்பெரிய அனுபவமாகும்.

தேவனுடைய நித்திய திட்டத்திலே தங்களுடைய பகுதி நிறைவேற்றப்படுவதில் தேவனுடைய ஜனங்கள் திருப்தி அடைவது அவசியம். இந்த திட்டங்கள் நினைவுகூறப்பட வேண்டும். நம்முடைய ஆயுள் காலத்தை கடந்து நல்ல நிலையில் செல்ல வேண்டும். தேவனில் நாம் கற்பனை செய்யும் அநேக காரியங்கள் நாம் செய்து முடிப்பதற்கு கிரியை செய்வதில்லை. இது நம்மை ஊக்கமிளக்க செய்யக்கூடாது அல்லது ஏமாற்றம் அடைய காரணமாகக் கூடாது அல்லது வெறுப்படைய வைக்கக் கூடாது. அவருடைய திட்டத்திலே நம்முடைய பகுதியை மாத்திரம் செய்யும்படியாக நாம் தேவனால் அழைக்கப் பட்டிருக்கிறோம். நாம் அதிலே திருப்தியடைந்தவர்களாய் இருக்க வேண்டும். மோசே கூட ஒருபோதும் வாக்குத்தத்த நாட்டிற்குள்ளாய் போகவில்லை.

இன்னும் சில புத்தியான ஆலோசனை என்னவென்றால்: நீ செய்து நிறைவேற்ற விரும்புகிற பெரிய காரியங்களைக் குறித்ததான தரிசனங்களைப் பெற்றுக் கொள். அதை நீ நிறைவேற்றுவதற்கு திட்டத்தின் வழியைப் பெற்றுக் கொள். இதற்காக போராட தயாராகிக் கொள். தேவன் வெற்றியைத் தரும்படியாக இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும்.

முடிவுரை

நீதிமொழிகள் 29:18யை வேறு வார்த்தைகளால் (பொழிப்புரை) கூறலாம். ‘‘எங்கே திட்டங்களும், இலக்குகளும் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் ஒரு கூட்ட ஜனங்களுக்கு இல்லையோ, அங்கே அந்த ஜனங்கள் அர்த்தமற்றவர்களாய் இலக்கு அற்றவர்களாய், பயனற்ற ஜீவிகளாய் விட்டுவிடப் படுவார்கள்’’. நான் இன்றைக்காக ஏதோ வாழ்ந்தால் எதிர்காலத்தைக் குறித்த எண்ணம் இல்லாவிட்டால் நம்முடைய வாழ்க்கை சிறிய நிறைவேற்றுதலோடு கடந்து சென்றுவிடும். நாம் தேவனிடத்திலிருந்து தரிசனத்தை பெறவேண்டியது அவசியம். அது மற்றவர்களுடைய வாழ்க்கையின் மூலஆதாரமாய் மாறவேண்டும் அல்லது நம்முடைய வாழ்வின் மூலஆதாரமாய் மாறவேண்டும். அதன்பின்பு, தரிசனத்தை போஷித்து, காப்பாற்றி, பாதுகாக்க வேண்டும். தரிசனம் நிறைவேற்றப்படுதலை திட்டமிடுதல் மூலம் எதிர்பார்க்க வேண்டும். அதாவது தரிசனம் நிறைவேறுவதற்கு ஏதுவான வாழ்க்கை வாழவேண்டும். தேவன் காட்டிய வண்ணமாகவே தரிசனம் வெளிப்படுத்தப்பட எதிர்பார்க்க வேண்டும் (அதாவது நேரடியாக அல்லது தலைவர் மூலமாக). இதுதான் விசுவாசம். ஒரு முறை தரிசனம் வந்தபின், நம்முடைய திறமைகளை பயன்படுத்தி, அதே தரிசனத்தில் வேலை செய்யும் படியாக தேவன் அழைத்த மற்ற ஜனங்களோடு இணைந்து வேலை செய்ய வேண்டும். இதன் அர்த்தம் என்னவென்றால் இலக்குகளும், குறிக்கோள்களும் நம்முடன் வேலை செய்கிறவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். அப்போது தான் தேவனுடைய தரிசனம் நிறைவேற முடியும்.

தரிசனம் தனிப்பட்ட நபரால் பெறப்படலாம். தேவனுக்காக ஒரு குறிப்பிட்ட வேலையை செய்யும் படியான பாரம் ஏற்படலாம். தரிசனக்காரன் செய்து முடிக்கிறவர்களையும், தாங்கிபிடிக்கிறவர்களையும், வேலை செய்யும்படியாக இழுத்துக் கொள்கிறான். (ஏனெனில் அவர்களும் நம்முடைய தரிசனத்தை தேவனுக்குள் பிடித்துக் கொண்டு, அவரால் அழைக்கப்பட்டு, நம்மோடு தரிசனத்திற்காக கிரியை செய்கிறார்கள்). எப்படியிருந்தாலும், ஸ்தாபனம் / சபையில் உள்ள தரிசனம் பல்வேறு செயல்பாடுகளை கொண்டது. அரிதாக, ஒரு நபர் அந்த ஸ்தாபனத்திற்காக / சபைக்காக முழு தரிசனத்தையும் பெறுகிறார். இங்கே அநேக ஜனங்கள் தரிசனத்தின் பகுதியை பெருகிறார்கள். சபை / ஸ்தாபனம் மேற்பார்வை செய்கிற வேலையிலும் அந்த ஸ்தாபனம் / சபையில் எல்லாவற்றிற்கும் மேலான

தேவனுடைய திட்டத்தில் செய்யப்படுகிற எல்லா காரியங்களிலும் பொருந்துகிறதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அதை செய்வதற்கு ஆவிக்குரிய அதிகாரம் தேவை. அதற்கு தேவனுடைய சித்தத்தை இணைந்து தேட வேண்டும்.

கூட்டு ஆவிக்குரிய தரிசன தொடர்பிலே அநேக தலைவர்களும் அநேக கவனமற்ற மிகைப்படுத்தப்பட்ட உரிமைகோருதல் கேட்கிறார்கள். இது உண்மையை எந்த விதத்திலும் மாற்றிவிடாது. உண்மையான ஆவிக்குரிய தரிசனம் உண்டு. அது தேவனால் அதிகாரப்படுத்தப் பட்டதாயிருக்கும். அது அவருடைய வல்லமையினால் அவருடைய நோக்கம் நிறைவேறும்படியாக கொடுக்கப்படுகிறது. நம்மில் சிலர் கூட்டு தரிசனத்தின் மூல ஆதாரமாய் இருக்கும்படியாய் அழைக்கப்படுகிறார்கள். மற்றவர்கள் ஒருங்கிணைத்து செய்து முடிக்க அழைக்கப்படுகிறார்கள். இன்னும் மற்றவர்கள் பணியாளர்களாக தொடர்ந்து நடைபெறும்படியாக அழைக்கப்படுகிறார்கள். ஆனால் நாம் எல்லோரும் தேவனுடைய பிள்ளைகளாக .·. மகனாக அழைக்கப்பட்டு தேவனுடைய தரிசனத்திலே ஒரு இடத்தை உடையவர்களாய் இருக்கிறோம். தேவனில் நாம் வெற்றி உள்ளவர்களாய் இருக்க வேண்டுமானால் நம்முடைய வாழ்க்கைக்காக உள்ள தேவ தரிசனத்தில் நாம் வாழுவது அவசியம். அந்த தரிசனத்தில் நம்முடைய பகுதியை செயல்படுத்துவது அவசியம்.

தனிப்பட்ட பயிற்சி

உங்களுடைய ஸ்தாபனத்தின் அல்லது பாரம்பரியத்தில் உங்களுடைய விசுவாசிகள் எதிர்பார்த்த வாழ்க்கைமுறையில் நிலைத்து விட்டார்களா? உங்களுடைய வாழ்க்கைக்காக தேவன் கொடுத்த தரிசனம் என்ன? (செய்வதற்கும் மற்றும் இருப்பதற்கும்)

ஒருவர் இவ்வாறு சொன்னார் "அநேக சபைகள் மற்றும் ஸ்தாபனங்கள் ஒரு பெரிய காரியத்தில் தோல்வியடைந்து விட்டன – தரிசனமில்லையானால்!" இது உண்மையா? இது உங்களுடைய சூழ்நிலையாய் இருந்தால் என்ன செய்வீர்கள் அல்லது என்ன செய்ய வேண்டும்?

ஒரு மோட்டார் வாகனத்தில் வேகத்தை அதிகரிக்கும் கருவி, கியர், பிரேக் உடையதாக இருக்கிறது. ஒரு குழுவும் அவ்வாறே உள்ளது. தரிசனக்காரன் வேகத்தை அதிகப்படுத்தும் கருவி போன்றவன். மணிக்கு 90 மைல் வேகத்தை 6.2 விநாடிகளில் அடைய ஆயத்தமாகி அடைந்து தூசி மண்டலத்தை பின்னாக விட்டு செல்கிறான். அவனுடைய சொந்தத்தில் அவன் ஆபத்தானவன். அவனுடைய விரைவு புதிதான அமைப்பு சபையை பிளவுப் படுத்தலாம். அவனுக்கு பிரேக் போல உள்ள ஜனங்கள் தேவை. அவனுடைய வேகத்தை குறைப்பதற்கு, வேகத்தை அதிகப்படுத்தும் கருவியில்லாமல் பிரேக் தன்னுடைய உண்மையான செயல்பாட்டை செய்யமுடியாது. பெரிய மாற்றத்தை உண்டாக்குகிறவர்கள் ஞானமுள்ள ஆண்களும், பெண்களும் சபை அல்லது குழு எப்பொழுது உயர்ந்த கியரில் செல்ல வேண்டும் அல்லது ஏனெனில் துணிச்சலான முயற்சி அதிக ஆபத்து நிறைந்தது என்று வரும்போது எப்பொழுது குறைக்க வேண்டும் என்று தீர்மானிப்பவர்கள். இந்த சொற்றொடர்கள் உண்மையா? இதிலிருந்து ஏதாவது பாடத்தை நாம் கற்றுக் கொள்ள முடியுமா? உங்களுடைய சபை / குழு / ஸ்தாபனத்தில் நீங்கள் என்ன செய்வீர்கள்?

உங்களுக்காக தினந்தோறும் அவருடைய செயல்திறனை வெளிப்படுத்தும்படி தேவனிடத்தில கேட்பீர்களா? நீங்களும்?

ஒருவேளை நீங்கள் இந்த கதையை கேள்விப்பட்டிருக்கலாம். ஒரு மனிதன் வேலை செய்கிற மூன்று கைவினைஞர்களை எதிர் கொண்டான். முதல் மனிதனைப் பார்த்து நீ என்ன செய்கிறாய் என்று கேட்டான். அதற்கு அவன் சொன்ன பதில், நான் செங்கலைப் போடுகிறேன்!' இரண்டாவது மனிதனைப் பார்த்து, நீ என்ன செய்கிறாய், அதற்கு அவன் சொன்ன பதில், "நான் சுவரைக் கட்டுகிறேன்". கடைசியாக, அவன் மூன்றாவது மனிதனிடம் நீ என்ன செய்கிறாய் என்று கேட்டான். அதற்கு அவன் முற்றிலும் வித்தியாசமான

பதிலைக் கூறினான். அந்த மனிதன் கூறிய பதில், 'நான் ஒரு தேவாலயத்தை கட்டுகிறேன்!'. மூன்றாவது மனிதன் தரிசனத்தைப் பிடித்தவனாக காணப்படுகிறான். அவன் தன்னுடைய குறிப்பிட்ட வேலையை செய்கிறான். ஆனால் அவன் செய்கிற வேலை பெரிய ஒரு காரியத்தில் அமைந்ததாக இருக்கிறது. அவனுடைய திருப்த்தியை யுகித்துப் பாருங்கள். அவன் முழுமையும் கண்ட பொழுது அதிலே தன்னுடைய பகுதியைப் பார்த்தான்.

உங்களுடைய வேலையும் ஊழியமும் தேவனுக்காக என்பதாக காண்கிறீர்களா? நீங்கள் எப்படி நோக்குகிறீர்களா? நீங்கள் தேவனிடத்தில் சென்று அவர் உங்களுடைய பார்க்கும் விதத்தை மாற்ற அவசியம் ஏற்படுகிறதா, அதாவது, மீண்டும் உங்களை தரிசனப்படுத்த? அப்படியென்றால் உடனே செய்யுங்கள், அது உங்களுக்குத் தேவை!.

முழுமையான தரிசனத்திற்கு உங்களுடைய வாழ்க்கையை கொடுக்கக் கூடிய மதிப்பு உடையதுதானா? அளவு என்பது முக்கியமானதும், தேவையானதும் அல்ல. தரிசனம் தான் முக்கியம். ஏனெனில் தேவனுடைய சித்தம் அதற்கு பின்பாக இருக்கிறது. உலகம் ஒரு வேளை அதை தகுதிக்கு மிஞ்சிய ஒன்று என்று அழைக்கலாம். ஆனால் நம்முடைய வாழ்க்கையில் அந்த அழைப்பிற்கு பதிலாக அந்த பெரிய காரியத்திற்கு கீழ்ப்படிதலையும், சீஷத்துவத்தையும் பதிலாகத் தருவோமா!. தரிசனத்தின் அளவு முக்கியமானதா? நீங்கள் இப்போது வேலை செய்கிற ஆவிக்குரிய தரிசனத்திற்கு உங்களுடைய வாழ்க்கையை கொடுத்துள்ளீர்களா? ஏன் கூடாது? உங்களால் முடியுமா?

தேவனுடைய தரிசனம் சபைக்கு சபை வித்தியாசப்படுமா? அல்லது பொதுவான தரிசனமாய் இருக்குமா? எல்லா சபைகளும், அன்புள்ள ஐக்கியங்களாக ஆராதிக்கும் சரீரங்களாக கிறிஸ்துவுக்குள் ஜனங்களை போஷிக்கும், பயிற்றுவிக்கும் இடமாக அமைந்து வெளியே செல்வதற்கும் தேவனை சேவிப்பதற்கும் ஏதுவாக தேவன் விரும்புகிற விதத்தில் உள்ளதா? ஒவ்வொரு சபையும் எல்லாவற்றையும் செய்ய அழைக்கப்பட்டுள்ளதா? அல்லது அந்த சபைக்காக தேவனுடைய தரிசனம் பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டதா?

திறமையுள்ளவர்களாக இருப்பதற்கு நேரத்தை நிர்வகித்தல்

தேவனுடைய வேலை நாம் செய்கிற எல்லா வேலைகளிலும் மிக முக்கியமானது என்பதை நினைவு கூறுங்கள். எல்லாவற்றிக்கும் மேலாக தேவனுக்காக நாம் செய்யும் வேலை எல்லாவற்றைக் காட்டிலும் நீண்டகாலம் நிலைத்து நிற்கக் கூடியது. எனவே நாம் தேவனுக்குள் என்ன செய்யப்பட வேண்டும் மற்றும் நாம் என்ன செய்ய விரும்புகிறோம் என்பதற்கு இடையேயுள்ள வித்தியாசத்தை எப்படி தீர்மானிப்பது என்று கற்றுக் கொள்வது அவசியம். தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு எப்பொழுதும் போதுமான நேரம் இருக்கிறது என்பதையும் நினைவு கூறுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நேரத்தை சிருஷ்டித்தவர் அவரே. நம்முடைய நற்காரியங்களை முன்பதாகவே திட்டமிட்டவரும் அவரே (எபேசியர் 2:10). இந்த விலைமதிப்பற்ற திரும்பக் கிடைக்காத ஆதாரமாகிய நேரத்தை வீணாக்காத வரை, நம்முடைய வாழ்க்கைக்காக தேவனுடைய திட்டத்திலும் நோக்கத்திலும் நாம் பொருந்தும் போது நமக்கு நேரபற்றாக்குறை வராது. "ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" (எபேசியர் 5:15,16).

நேரத்தை வீணடிக்கிறவைகள்

- **தயக்கம்:-** எந்தவித தலைமைத்துவத்திலும் தீர்மானம் எடுக்கப்பட வேண்டியது அவசியம். அதிலே ஆபத்திற்கான மூலக்கூறுகளும் அடங்கியுள்ளது. எனவே, தலைவர்கள் ஆபத்துக்களை ஏற்றுக்கொண்டு கடந்து சென்று கூடுமானமட்டும் சிறந்த வழியில் தீர்மானங்களை எடுக்க வேண்டும். காலம் தாழ்த்துதல் (அணைத்துப் போடுதல், அல்லது செயலை தாமதப்படுத்துதல்) என்பது நேரத்தின் முதன்மையான எதிரி. துரதிஷ்டவசமாக நம்மில் பலருக்கு இதுவே பொதுவான தவறாகும். உண்மையிலேயே அநேக காரியங்கள் நம்முடைய வாழ்க்கையில் அச்சமூட்டும் பொருளாக மாறி அந்தக் காரியங்களை அடுத்த நாள் வரும் வரை அணைத்துப் போடுகிறோம். வேலை மிகக் கடினமாக அல்லது பெரிதாக இருந்தால் நன்றாக நிர்வாகிக்க கூடிய சிறுசிறு பகுதிகளாக பிரித்துக் கொள்ளுங்கள். அதோடு கூட உங்களுக்குள்ளாகவே முடிவுறும் நாளை குறித்துக் கொண்டு அந்த நாளுக்குள்ளாக வேலையை முடிக்கும் படியாக நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். தேவனிடத்திலே மிக அவசரம் உண்டு. தெய்வீகமாய் அவர் இன்றும் வேலை செய்கிறார். (2 கொரிந்தியர் 6:2). இதன் அர்த்தம், தேவனை முந்தி ஓட வேண்டும் என்பதல்ல. அலமாரியில் வைத்து எப்போது நாம் விரும்புகிறோமோ, அப்போது நடக்கும் என்று நம்பி இருப்பதை விட, இது எதிர்பார்த்தலின் காரியம், தேவ வசனம் கொடுக்கப்படும்போது அது செயல்படுவதற்கு உதவி செய்தலாகும்.

- **திட்டமிட தவறுதல்:-** அநேக தேவனுடைய தலைவர்கள் தாங்கள் என்ன செய்துக் கொண்டு இருக்கிறோம் என்பதை தெரியாமலே செய்துகொண்டு இருக்கிறார்கள். அவர்கள் செய்கிற காரியங்களை வரிசைப்படுத்தி எழுதுவது உதவியாய் இருக்கும். பின்பு முக்கியத்துவத்தை பொறுத்து தரவரிசைப்பட்டியலிட வேண்டும். அதன்பின்பு, உங்களுடைய நாளை/ வாரத்தை/ மாதத்தை/ வருடத்தை திட்டமிடுங்கள். பின்பு காரியங்கள் அந்த நாள் / வாரம் / மாதம் / வருடத்தின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் அமைந்து இருக்கின்றதா என்பதை உறுதி செய்துகொண்டு, காரியங்களை செய்யும் போது சிறந்தவற்றை கொடுப்போம்.

- **ஒழுங்குப்படுத்த தவறுதல்:-** உங்களுக்கு என்ன வேண்டும், எப்பொழுது வேண்டும் என்று, எப்பொழுதாவது நீங்கள் கண்டுபிடித்தது உண்டா? உங்களுடைய மேஜை அல்லது உங்களுடைய முழு அலுவலகமும் தாறுமாறாக இருந்து நீங்கள் செய்கிற காரியத்தில் உங்களால் முழு மனதையும் செலுத்த முடியவில்லையா? (உதாரணமாக எப்பொழுதும் செய்ய வேண்டிய ஏதோ ஒன்றைப் பார்த்து அவை உங்களுடைய கவனத்தை கவர்ந்து கொள்கிறதா?) ஒருங்குப்படுத்த படுங்கள் மற்றும் நல்ல கோப்பு முறையைப் பின்பற்றுங்கள். ஒன்றில் செலவிடப்படும் நேரம் இணைந்து பல மணி நேரங்களை பின்பாக உங்களுக்கு சேமித்துத் தரும். உங்களுடைய மேஜை ஒழுங்காக அடுக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். ஒரு நேரத்தில் நீங்கள் வேலை செய்கிறதை மாத்திரம் பார்க்கும் படியாய் அமையுங்கள்.

- **கட்டுப்பாடின்மை:-** நேரம் மிக எளிதாக வீணாக கழிந்து விடுகிறது. ஏனெனில் செய்ய வேண்டிய காரியத்தை அந்த நேரத்தில் செய்யாததினால் அதற்குப் பதிலாக நாம் கனவு கண்டு மற்றொரு குவளை காபி அல்லது தேநீர் அருந்திக் கொண்டு, காகிதத்தை அங்கும் இங்கும் மேஜையின் மேல் தள்ளிக்கொண்டு, மற்றொரு நபருடன் அவருடைய விடுமுறை எப்படி இருந்தது, வார இறுதி நாட்கள் எப்படி கழிந்தது என்று பேசிக்கொண்டு, இன்னொரு தொலைப்பேசி தொடர்பு ஏற்படுத்தி மற்றும் பலவற்றினாலும் நேரம் வீணாக கழிகிறது. ஒழுங்குப் படுத்தப்படாத நேரம் நல்லவைகள் இல்லாத காரியங்களில் கழிந்து போவதிற்கான வாய்ப்புகள் உண்டு: அவைகள் (இங்கே பகிர்ந்தளித்தல் தான் பதில்) சத்தத்தை உயர்த்துகிற வலிமையான ஆதிக்கம் செலுத்துகிற நபரினால் கட்டுப்படுத்தப்படுதல், (நம்முடைய நேரத்தை உபயோகிப்பதற்கு தேவனுடைய முக்கியத்துவத்தின்படி உபயோகிப்பது அவசியம்). உடனடியாக அவசரம் என்ற கொடுங்கோன்மையினால் அரசாளப்படுதல், (சத்தமாய் கூக்குரலிடுகிற எல்லாமே நேர முக்கியத்துவத்தில் மிக அவசரமானது என்று அர்த்தமல்ல). நம்முடைய மாம்ச பிரகாரமான காரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தல், பொது ஜனங்கள் கைகொட்டி ஆர்ப்பரிக்கிற காரியங்களுக்கு உடனடியான பரிசு கிடைக்கிறதான காரியங்களில் செலவு செய்தலாகும் (எனவே நாம் நம்மை தேவனுடைய தாழ்மையான வேலைக்காரனாக பார்க்க வேண்டியது அவசியம்). கிறிஸ்தவ ஊழியர்கள் தேவனுக்காக செய்ய வேண்டுமென்ற குறிக்கோளோடு இருக்க வேண்டும். எனவே அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் மிக ஒழுக்கமாக இருந்து அந்த குறிக்கோளை வெற்றிகரமாக நிறைவேற்றி அவர்களுடைய நேரத்தை பயனுள்ள விதத்தில் உபயோகிக்க வேண்டும். உண்மையிலே நம்முடைய பணக்காரியங்களைப் போல நேரமும் வரவு-செலவு கணக்கீடப்பட வேண்டும். பிரதான நேரத்தை மிக முக்கியமான காரியங்களுக்கு கொடுக்க வேண்டும். மற்றும் உடனடியான முக்கியத்துவத்திற்கும் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த காரியங்களையும் அட்டவணைப் படுத்திக் கொண்டு நம்முடைய நேரத் திட்டத்தில் மற்ற நேரங்களைக் கொடுக்கலாம்.

- **மிக அதிகமான காரியங்களை செய்தல்:-** இதினால் அடிக்கடி குறைந்தவற்றையே செய்து முடிக்க முடியும் மற்றும் செய்த காரியங்கள் மிக சிறப்பாக இருக்க உங்களுடைய வேலைப்பளு மிக அதிகமாக இருந்தால், பங்கிடக்கூடிய வேலைகளை பிறருக்கு கொடுப்பதின் மூலம் குறைக்கலாம். தேவைப்பட்ட இடத்தில் முடியாது என்றும் சொல்ல வேண்டும். வழக்கமான, மதிப்புக்குறைந்த காரியங்களை அந்த நாளில் நீங்கள் செயல்திறன் குறைந்த நேரம் வரும்வரை ஒதுக்கி வைக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்க.

- **மிகவும் பரப்பரப்பாக காட்டிக் கொண்டு ஒன்றும் செய்யாமல் இருப்பது:-** அடிக்கடி தலைவர்கள் காரியங்களை செய்கிறார்கள் ஏனெனில் அந்த காரியங்கள் எப்பொழுதும் செய்கிற காரியங்கள், அல்லது அவைகள் தோற்றத்தில் மிகவும் பரபரப்பாக காணப்படுகிற காரியங்கள், இவைகளை தலைவர்கள் விரும்புகின்றார்கள். உண்மையிலே, மிகவும் சிறிய மதிப்புடையவைகளை தான் செய்து முடிக்கிறார்கள். தேவனுடைய தலைவர்கள், அவர் அவர்களை என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறார் என்பதை அவரிடம் கேட்க வேண்டும். அவர்கள் எதிர்காலத்தில் எப்படி இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார் என்பதை கண்டுபிடிக்க வேண்டும். அதை அடைவதற்கு அவர்களுடைய செயல்பாடுகளை அதை நோக்கி வேகப்படுத்த வேண்டும். அவர்களுடைய சொந்தத்திற்கான செயல்பாடுகளாக அமையக் கூடாது. ஆனால் தேவனுடைய வேலைகள் அவருடைய வழியில் நேரத்தில் செய்து முடிக்கும் படியாக அமைந்திருக்க வேண்டும்.

- **சோம்பேறித்தன்மை:-** நம்முடைய மாமிசம் அடிக்கடி எளிதான காரியத்தையே விரும்புகிறது. உண்மையிலே இழிந்த உணர்ச்சிகளை நிறைவேற்றிக் கொள்ள விருப்பங்கொண்டு அதற்கே இடம் கொடுக்கிறோம். நாம் இதை செய்யாதபடிக்கு நம்மை உறுதி செய்து கொள்வது அவசியம். நம்முடைய நடக்கையிலே சோம்பேறித்தனமாய் இருப்பதைக் காட்டிலும் தேவனுடைய வேலை நமக்கு மிக முக்கியமானது. தேவன் அவருடைய சித்தத்தை நம்மை நம்பி தந்திருக்கிறார். அவருக்குள் நமது பொறுப்பு என்னவென்றால் உண்மையுடன் சிறந்த நம்முடைய திறமையினால் அவருடைய வேலையைச் செய்வது (மத்தேயு 25:24-30; 2 தெசலோனிக்கேயர் 3:6-15).

- **ஒட்டிக் கொண்டிருக்கும் தன்மை இல்லாதிருத்தல்:-** தேவனுடைய தலைவர்கள் ஒட்டிக் கொண்டிருக்கும் தன்மையுடையவர்களாய் இருக்க வேண்டும். தேவனுடைய வேலைக்காக இயேசுவின் குணாதிசயத்தை உடையவர்களாக இருந்து மேம்பாடு அடைய முயற்சி செய்ய வேண்டும். அவர் சொன்னார், "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது." (யோவான் 4:34). அநேக ஜனங்கள் அதிக பளுவான காரியங்களைப் பெற்று பாதியைச் செய்கிறார்கள் அல்லது அலமாரியில் வைக்கிறார்கள். உண்மையிலே அவர்கள் அடிக்கடி அதிக பளுவான காரியங்களைப் பெற்று செய்ய முடியாமல் விட்டு விட்டு முடிவிலே ஒன்றும் செய்யாமல் இருந்து விடுவார்கள். நாம் கடந்து சென்று அவரால் நமக்கு கொடுக்கப்பட்ட காரியங்களை நிறைவேற்றும்படி தேவன் விரும்புகிறார் (1 கொரிந்தியர் 9:24-27; பிலிப்பியர் 3:12-14).

- **பேரச்சம், குழப்பநிலை:-** நம்முடைய கஷ்டமான சூழ்நிலை மற்றும் பிரச்சனை நமக்கு மிக அதிகமாகும் போது அவைகள் நம்மை முழ்கடித்து பேரச்சம், குழப்பநிலை ஏற்படுகிறது. இங்கே பிரச்சனை என்னவென்றால் அடிக்கடி பயத்தினால் மிகவேகமாக சுவாசிக்கிறோம் (அதாவது மிக வேகமாக சுவாசித்து, மிக எளிமையாக உணர்தல்). இப்படிப்பட்ட காரியத்தில் நாம் என்ன செய்யவேண்டுமென்றால் நிறுத்தி, சற்று இளைப்பாறி மெதுவாக ஆழ்ந்த மூச்சை எடுக்க வேண்டும் (அதாவது ஆக்ஸிஜனை உள்ளிழுத்து). ஒரு தடவை நாம் அமைதியாக ஆரம்பித்துவிட்டால் நாம் ஜெபம் பண்ணி சூழ்நிலையை தேவனிடத்தில் கொண்டு வந்து அவருக்குள் எல்லாம் செய்ய முடியும் என்று உணர முடியும் (பிலிப்பியர் 4:13). நாம் குழப்பமான சூழ்நிலையில் இருக்கும்போது எந்த ஒரு காரியத்தையும் செய்ய முயற்சிப்பது நேரத்தை வீணாக்குவதாகும். நாம் மீண்டும் தேவனுக்குள் நம்முடைய பேரமைதியை பெறும் வரை வேலைகளை நிறுத்தி வைப்பது சாலச்சிறந்தது.

- **இடையூறுகள்:-** நீங்கள் ஏதாவது முக்கியமான காரியங்களை செய்து கொண்டிருக்கும் போது அல்லது அவசரமாக செய்யவேண்டிய காரியத்தை செய்து கொண்டிருக்கும் போது தொலைபேசி மணி ஒலித்தாலோ அல்லது முன்கதவு அழைப்பு மணி ஒலித்தாலோ எப்படி உணர்வீர்கள் என்பதை கவனித்தது உண்டா? இடையூறு இல்லாமல், வேலை செய்வதற்கு அந்த நாளின் நேரத்தை ஒதுக்குவது மிக உதவியாய் இருக்கும். இதன் அர்த்தம் என்னவென்றால், பதிலளிக்கும் தொலைபேசியை செயல்பட வைப்பது அல்லது தொலைபேசியை செயல்படாமல் நிறுத்தி வைப்பது. பார்வையாளர்களும் தடை செய்யப்பட வேண்டும். கூடுமானால் உங்களுக்கு பொருத்தமான நேரத்தில் பார்ப்பதற்கான குறிக்கப்பட்ட நேரத்தை கொடுக்கலாம். மற்ற நபருடைய அவசர நிலை அவர்கள் நினைப்பது போல முக்கியத்துவம் இல்லாத காரியமாய் இருக்கலாம். ஆனாலும் அவசர நிலைக்கு நேரத்தை ஒதுக்க வேண்டும். மதிய சாப்பாட்டுக்கு பின் ஜனங்களை பார்ப்பது உதவியாய் இருக்கும் அல்லது அந்த நாளில் திறமையாய் செயலாற்ற முடியாத நேரத்தில் ஜனங்களைப் பார்க்கலாம். இருந்தபோதிலும் எதிர்பாராத இடையூறுகள் தேவனால் ஏற்படுத்தப்படும். இயேசு இடையூறுகள் வருவதைக் குறித்து கவலைப்படவில்லை. ஆனால் பிதாவின் திட்டத்தை ஒரு பகுதியாகவே கண்டார். இடையூறு உங்கள் வழியில் வரும்பொழுது ஏன் தேவன் இந்த நபரை / சூழ்நிலையை இந்த நேரத்தில் என்னுடைய வழியில் வரும்படி அனுமதித்தார் என்ற கேள்வியைக் கேளுங்கள். அதாவது, தேவனை உள்ளே கொண்டுவந்து அவருடைய தெய்வீக திட்டத்தைப் பாருங்கள் (எபேசியர் 2:10).

- **கூட்டங்கள்:-** அநேக தேவனுடைய தலைவர்கள் இன்று அவர்கள் கலந்து கொள்ள தேவையில்லாத கூட்டத்தில் கலந்து கொள்வதின் மூலம் அதிகமான நேரத்தை வீணாக்குகிறார்கள். சபைத் தலைவர்கள் எல்லா சபைக் கூட்டங்களிலும் பொதுவாக இருக்க வேண்டும் என்று இல்லை. எல்லா கருத்தரங்குகளிலும் கலந்து கொள்வது அல்லது எல்லா உள்ளூர் நட்புறவு கூட்டங்களில் இருக்கவேண்டிய அவசியமில்லை. தேவனுடைய தலைவர்கள் அவர்களுடைய முக்கியத்துவத்தின் அடிப்படையில் வேலை செய்து அவசியம் கலந்து கொள்ள மிக அவசியமான கூட்டங்களுக்கு மாத்திரம் கலந்து கொள்ளுங்கள்.

- ❖ **மதிய நேர செயலின்மை:-** வேலை முடியாமல் இருக்கும்பொழுது குறிப்பாக மதிய உணவுக்குப் பின் வயிறு முழுவதும் நிரம்பியதால் ஏற்படும் இன்பமான உணர்ச்சியை நாம் அனுபவிக்கும்போது கண் சொருக ஆரம்பித்து நமது மனது அலைந்து திரிகின்றது. பிற்பகல் செயலின்மையை தவிர்ப்பதற்கு உதவியான சில எளிமையான கருத்துகள்: இலகுவான மதிய உணவை உண்ணுதல், அதிக வெப்பமான இடத்தில் அலுவலகத்தை அமைக்காதிருத்தல், மதியத்திற்கு பின்பாக உள்ள வேலைகளை தூண்டுதல் படுத்தக்கூடியதாக இருக்க பார்த்துக் கொள்ள வேண்டும். (வேலைக்கு உற்சாகப் படுத்தி உதவக்கூடியதாய் இருப்பதற்கு). முழுநாளும் மேஜையின் பின்பு உட்கார்ந்திருப்பது ஆழமற்ற சுவாசத்திற்கு காரணமாகும் என்பதை குறித்துக் கொள்ளுங்கள். இது நம்முடைய இரத்தத்தில் ஆக்ஸிஜன் குறைவதற்கு காரணமாகி அரைத்தூக்கம், சோம்பறித்தனத்திற்கு நடத்தி கவனம் செலுத்த இயலாமைக்கு தள்ளுகிறது. நாம் எப்பொழுது அரைத்தூக்கமாக உணரும்பொழுது, நம்முடைய சரீரத்தை ஆக்ஸிஜன் ஏறுவதற்கு வியர்வை வராத மென்மையான உடல்பயிற்சிகளை செய்வது தான் சிறந்த காரியமாகும் (உதாரணம். துரிதமான நடைநடத்தல், அல்லது மாடிப் படியில் மேலும் கீழுமாக ஏறி இறங்குதல்).

- ❖ **தொலைக்காட்சி / வானொலி / தொலைபேசி:-** இவை உபயோகமான கருவிகள் இளைப்பாறுவதற்கும் நம்முடைய மனதில் பக்திவிருத்தி உண்டாக்குவதற்கும் உபயோகிக்கலாம். ஆனால், மிக கவனமாய் இருப்பது அவசியம். அநேக ஜனங்கள் தங்களுடைய வாழ்க்கையின் அதிக நேரத்தை இவ்வித காரியங்களினால் வீண்டித்து விட்டார்கள். நாம் தேவனுடைய வேலையை முதலாவது செய்ய வேண்டும். நாம் அவருக்காக என்ன செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ அதிலே இந்தக் காரியங்களைப் பொருத்த வேண்டும்.

நீங்கள் நினைக்கின்ற நேரத்தை வீணடிக்கிற அநேக காரியங்கள் இருக்கிறது. அது தனிப் பட்டவர்கள் நேரத்தை வீணடிக்க காரணமாகின்றன. நேரத்தை வீணடிக்கிற காரியங்களை செய்யமால், அவைகள் தீர்க்கப்பட சில காரியங்களை செய்யுங்கள். நாம் தேவனுக்காக வாழ ஒரே ஒரு வாழ்க்கை இருக்கிறது, நம்மால் முடிந்தளவிற்கு சிறந்த முறையில் உபயோகிப்பதற்கு முயற்சி செய்வோம்.

நம்முடைய செயல்பாடுகளை மதிப்பீடு செய்தல்

நேரத்தை இழக்க முடியும். ஆனால் அதை திரும்ப பெற முடியாது. அதை சேமித்து வைக்க முடியாது. செலவழித்தாக வேண்டும். அதை தள்ளிப் போடவும் முடியாது. உற்பத்தி திறன் தரும் விதத்தில் செலவழிக்கப் படாவிட்டால் மீண்டும் மீட்க இயலாத நிலையில் அது இழந்து விடும். உயர்பட்டறிவுள்ளவர்கள் ஒரு ஸ்தாபனத்திலே பயனுள்ள விதத்திலே நேரத்தை நிர்வகிப்பதினால் மதிப்பீடு செய்வதற்கு மூன்று வித அளவீடுகளுக்குரிய கேள்விகளை கேட்கிறார்கள். அவைகள்:

- ◆ நான் செய்கிற இந்த காரியம் என்னால் மட்டுமே செய்யப்பட வேண்டுமா, வேறு யாராவது செய்யலாமா?
- ◆ என்னுடைய நேரத்தில் உள்ள இந்த செயல்பாடுகள் சிறந்ததாக அமையாவிட்டால் மற்றவர்களால் கையாளப்பட முடியுமா?
- ◆ நான் செய்கிற இந்தக் காரியம் மற்றவர்களுடைய நேரத்தை வீணாக்குகிறதா?

இந்தக் கேள்விகள் எல்லாம் முதன்மையாக வியாபார நிர்வாகத்தை குறிக்கோளாக கொண்ட கேள்விகளாக இருந்தாலும் நான் இந்த கேள்விகளுக்கு பதிலளிப்பது சிறிய மதிப்பு அதிலே இருக்கிறது. உதாரணமாக தேவனுடைய தலைவர்கள் அவர்களால் செய்யப்பட வேண்டிய வேலைகளை மாத்திரம் அவர்கள் செய்கிறார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். தேவை இல்லாமல் மற்ற ஜனங்களை பாரப்படுத்தவில்லை என்பதை முடிவு செய்து கொள்ள வேண்டும். கிறிஸ்தவ தலைவர்களாகிய நாம் ஜெபத்துடன் நம்முடைய நேரத்தை உபயோகிக்கும் வழியைக் குறித்து மதிப்பீடு செய்ய வேண்டும். இதை செய்வதற்கு உயர்பட்டறிவு உள்ளவர்கள் கேட்கும் கேள்வியை தான் உபயோகிக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஆனால் நேரத்தை குறித்ததான காரியத்தில் பேரின்ப அறியாமையிலே வாழாதீர்கள். ஏனெனில் நீங்கள் போய் திரும்ப நேரத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. நல்ல யோசனை என்னவென்றால் உட்கார்ந்து

அந்த நாளில் ஒவ்வொரு அரைமணி நேரமும் எவ்வாறு உபயோகப் படுத்தப்படுகிறது என்று கண்டுபிடிக்க வேண்டும். இவ்விதமான கேள்விகளை கேட்க வேண்டும்: 'நான் தேவனுக்கு செய்யும் சேவையில் இந்த செயல் உற்பத்தி திறன்மிக்கதாய் உள்ளதா?', அல்லது 'என்னுடைய வாழ்க்கைக்கு / குடும்பத்திற்கு / சபைக்கு அர்த்தமுள்ள ஏதாவது ஒன்றை கொடுக்கின்றதா?', அல்லது நான் இதை செய்ய வேண்டியது அவசியம் தானா?. நம்மில் அநேகர் நம்முடைய நேரத்தை சிறத்த முறையில் உபயோகிக்க வில்லை என்பதை கண்டு பிடிப்போம். இந்தப் பகுதியல் நாம் முன்னேறுவதற்கு சில எளிமையான காரியங்கள் உள்ளன.

ஒவ்வொரு நபர்களும், ஒரு நாளின் உச்சகட்ட நேரத்தில் என்ன செய்கிறார்கள் என்று கண்டு பிடிப்பார்களானால் அது அவர்களுக்கு மிக பிரயோஜனமாக இருக்கும். இது நபருக்கு நபர் வேறுபடும். சூழ்நிலையைப் பொருத்து தனிப்பட்ட வாழ்க்கையிலும் வேறுபடும். இதை செய்வதற்கு எளிதான வழி என்னவென்றால் நீங்கள் உற்பத்தி திறன் மிக்க வேலைகளை செய்த பின் அந்த நாளின் இறுதியில் மதிப்பீடு செய்வது தான் (அப்பொழுது தான் உங்களுக்குத் தெரியும்). இது வாழ்க்கையின் அதிக சீரான காலத்திலும் மதிப்பீடு செய்யப்பட வேண்டியது அவசியம். அதே வேளையில் விரிவுப்படுத்தப்பட்ட காலத்திலும் செய்ய வேண்டும். அதாவது சில வாரங்களாவது நம்முடைய பயனுள்ள உற்பத்தி திறன் உள்ள நேரம் காலையிலோ அல்லது மதிய வேளையிலோ வரும் குட்டித்தூக்கத்திற்குப்பின் அல்லது தூண்டுதல் ஏற்படுத்தும் உரையாடலுக்குப்பின் மற்றும் பல. ஒருமுறை அந்த நாளின் அல்லது வாரத்தில் உங்களுடைய செயல்களை நீங்கள் சிறப்பாக தீர்மானித்துவிட்டால் இந்த நேரங்களை கால அட்டவணைப்படுத்தி முக்கியமான பணிகளை குறித்துக் கொள்ள முடியும். அதாவது, வேகமான, பயனுள்ள விதத்தில் வெற்றிகரமான விதத்தில் அந்த காரியம் முடிக்கப்பட மனதிலும், சரீரத்திலும் உயர்ந்த நிலையில் செயல்படுவதற்கு எவைகள் தேவை என்பதை கண்டறிய வேண்டும். அதே நேரத்தில் அந்த நாளில் உற்சாகம் குறைந்ததான நேரங்களை தீர்மானிப்பதும் முக்கியமானதாகும். கால அட்டவணையில் உங்களை குதுகாலப்படுத்துகின்றதான காரியங்களுக்கு, அல்லது நீங்கள் சிறந்த முறையில் செயல்பட தேவையில்லாத காரியங்களுக்கு ஒதுக்கலாம். இப்படிப்பட்ட ஆய்வு வழக்கமாக செய்யப்பட வேண்டும் என்பதை கவனத்தில் கொள்க. ஏனெனில் உங்களுடைய சூழ்நிலை அவ்வப்போது மாறும்.

நம்முடைய நேரத்தை ஒழுங்குமுறை படுத்தும் வழிகள்

- நம்மை அறிதல், அதாவது நாம் எப்பொழுது சிறப்பாக செயல்படுவோம் என்று அறிந்தல் அந்த சிறப்பான நேரத்தையும் சூழ்நிலையையும் தேவன் கொடுத்த காரியத்தை செய்ய பயன்படுத்தலாம். அதன்பின்பு நம்முடைய வாழ்க்கை ∴ வேலை திட்டங்களை அதை சுற்றி வளர்ச்சியடையச் செய்ய வேண்டும். இதையும் நாம் வழக்கமாக தேவனுடன் மறுஆய்வு செய்ய வேண்டும். ஏனெனில், காரியங்கள் மாறிக்கொண்டிருக்கும். நாம் தொடர்ந்தேர்ச்சியாக நம்முடைய நேரங்களை கனிதரும் விதத்தில் உபயோகித்து தேவனோடு நிலைத்து நிற்க வேண்டும்.

- நம்முடைய வேலைகளை முக்கியத்துவத்தின் அடிப்படையில் தளவரிசைப் படுத்த வேண்டும். மிக முக்கியமான காரியத்தை முதலாவது செய்ய வேண்டும். இது அதிகமான ஆற்றல் சக்தியை சேமிக்கும் (ஏனெனில் வேலையை நீண்ட காலம் செய்ய வேண்டும் என்ற கவலை நமக்கிருக்காது) மற்றும் பொதுவாக, இது நம்முடைய நேரத்தையும் சேமிக்கும். முதல் தரமான காரியங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய நிலையில் இருக்கும்போது ஜனங்கள் இரண்டாந்தர முக்கியத்துவம் வாய்ந்த காரியங்களில் கவனத்தையும் உங்களுடைய முயற்சியையும் மற்றும் நேரத்தையும் முதலீடு செய்யக்கூடாது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னுடைய நாட்களை கவனமாக திட்டமிட வேண்டும். மிக முக்கியமான நேரங்களை முக்கியத்துவம் வாய்ந்த காரியங்களை செய்வதற்கு உபயோகிக்க தெரிந்து கொள்ள வேண்டும்.

- நம்முடைய நேரத்தை மிகவும் பயனுள்ள விதத்தில் நிர்வகிப்பதற்கு நம்முடைய நேரத்தை பகுதிகளாக ஒருங்கிணைத்து கொள்வது உதவியாய் இருக்கும். உதாரணமாக, ஒரு நாளை காலை, மதியம், மாலை என்று நாம் பிரித்துக் கொண்டால் ஒவ்வொன்றிலும் என்ன செய்ய

வேண்டும் என்று தீர்மானிக்கலாம். இதை செய்வதற்கு கடிகாரம், தினசரி குறிப்பேடு, நோட்புக் மற்றும் பேனாவை எப்பொழுதும் நாம் எடுத்து செல்வது அவசியம்.

- வழக்கமாக தொடர்ந்து செய்யக்கூடிய வேலைகளைச் செய்ய வேண்டும். இதற்கு ஒரு குறிப்பிட்ட பகுதி நேரத்தை ஒவ்வொரு வாரமும் அதே நாளில் ஒரு குறிப்பிட்ட வேலைக்காக தனியே ஒதுக்குவது. உதாரணமாக பிரசங்க ஆயத்தம், வீடு சந்திப்பு, குழுவாக சேர்ந்து படித்தல், மற்றும் குடும்பத்திற்காக இப்படிப்பட்டவைகளுக்கு ஒதுக்கும் நேரங்கள் மற்றும் பல.

- முன்கூட்டியே நன்றாக திட்டமிடுதல். நம்முடைய பரபரப்பான கால அட்டவணையின் மத்தியிலும் மிக முக்கியமான காரியங்களை செய்வதற்கு நேரத்தை உடையவர்களாக இருக்கச் செய்யும். (தேவனோடு செலவிடும் நேரங்கள் மற்றும் குடும்பத்தோடு செலவிடும் நேரங்கள்). அதன்பின்பு, மற்ற எல்லா நேரங்களும், நிர்பந்தங்களும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் தொடர்ந்து வர அனுமதிக்கலாம். இதை செய்வதற்கு நன்றாக ஒருங்கிணைக்கப்பட்ட தனிப்பட்ட நாள் குறிப்பேடு அவசியம். ஒரு ஞானமுள்ள நபர் எதுவெல்லாம் முக்கியமான தனிப்பட்ட சவால்களாய் அமையப்போகின்றன என்பதை முன்பாகவே பார்த்து அதற்கான இடத்தையும் அறிந்து வைத்திருக்கிறார். அதாவது சோர்வு, உற்சாக இழப்பும் ஏற்படும்போது ஏன் ஏற்பட்டதென்று அறிவார். அந்த நபர் எப்படி தேவையான ஆற்றலை சேர்ப்பது மற்றும் முன்நிற்கும் காலத்திற்கு தேவையான உற்சாகத்தை எப்படி பெறுவது என்று திட்டமிடுவார், மற்றும் இந்தக் காரியங்களின் வழியாக எப்படி கடந்து செல்ல வேண்டுமென்று அறிந்திருப்பார். இதை செய்வதற்கு அந்த நபருக்கு கீழ்க்கண்டவைகள் தேவைப்படுகிறது: முதலாவது தன்னை அறிதல் (எது தன்னைப் பாதிக்கிறது. தங்களுடைய பெலவீனம், மற்றும் பெலன் என்ன, உற்சாகம் குறைந்ததான நேரத்தில் உற்சாகத்தை மீண்டும் உயிர்பிக்கக் கூடிய காரியம் எது). இரண்டாவதாக, தன்னை சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறிந்து புரிந்து கொள்ள வேண்டும் (ஆவிக்குரிய ரீதியிலும், இயற்கையான ரீதியிலும்) மற்றும் அந்தக் காரியங்களோடு எப்படி செயலாற்றுவது என்பதை அறிந்திருப்பார். கடைசியாக, தேவனை அறிதல் (குறிப்பாக, தனிப்பட்ட அவர்களை குறித்து தேவன் கொண்டுள்ள அவருடைய அன்பு, பராமரிப்பு, உண்மைத்துவம், அந்த சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும் (அவருடைய பராமரிப்பு). ஒவ்வொரு வாழ்க்கையும் அதனுடைய பிரச்சனை / கடினமான பகுதிகளைக் கொண்டுள்ளது. இது ஒவ்வொரு நபருக்கும் மாறுபடும். உதாரணமாக, ஒரு நபருக்கு ஒரு நபரோடு - ஒரு நபர் செய்யும் ஆலோசனை கஷ்டமாகத் தெரியலாம். ஆனால் மற்றவருக்கு பிரசங்கத்தை ஆயத்தம் பண்ணுவதோ, குறிப்பிட்ட காலவரையறையை சந்திப்பதோ கடினமாகத் தோன்றலாம். நான் செய்து முடிக்க முடியும் என்று நினைத்துக் கொள்ள வேண்டும் மற்றும் வரப்போகிறதை முன்பாக பார்த்து, நாசம் பண்ணக்கூடிய குறிப்புகளை காணக்கூடாது. தேவனில் நம்பிக்கை கொள்வது நல்லது தான். ஆனால் அவர் நாம் அவருக்குள் முன்னோக்க விரும்புகிறார். அவர் என்ன வருகின்றது என்பதை காண்கிறார். நம்முடைய வழியில் வரும் எதையும் சந்திப்பதற்கு அவருக்குள் தயாராக இருப்பதை அவர் விரும்புகிறார் (எபிரெயர் 12:1-3; எபேசியர் 6:10-18; 2 தீமோத்தேயு 4:2; 1பேதுரு 5:8,9). எனவே, நாம் தினசரி அடிப்படையில் அவரை சந்தித்து அவரிடத்திலிருந்து பெற்றுக் கொள்கிறோமா என்பதை உறுதி செய்து கொள்வது அவசியம்.

- அதிகாலையில் ஆரம்பிப்பவராக இருங்கள். அதிகமான காரியங்கள் ஒரு நாளின் அதிகாலை வேளையில் நிறைவேற்றப்படுகிறது. ஏனெனில், நம்முடைய தனிப்பட்ட திறன் இரவு தூக்கத்திற்கு பின்பதாக, முதல் சில மணிநேரங்கள் அதிகமாகவே இருக்கும் மற்றும் இடையூறுகள் மிகக் குறைவாக இருக்கும். படுக்கையிலிருந்து எழும்பவதற்கு 20 நிமிடங்களை எடுத்துக் கொள்ளதீர்கள். அதற்குப் பதிலாக சீக்கிரமாக படுக்கையை விட்டு முகம் கைகால் கழுவி ஆடை அணிந்து செல்லுங்கள். ஒருவர் இவ்வாறு சொன்னார், 'நாம் குறைவாக தூங்கினால் நாம் அதிகமாக வாழ்வோம்'. உண்மையிலே ஒரு நாளில் நம்முடைய தூக்க நேரத்தில் ஒரு மணி நேரம் குறைவாக தூங்கினால் நம்முடைய வாழ்க்கையில் எல்லாம் சேர்த்து 2 வருடம் விழித்திருக்கும் நேரத்தை பெறுகின்றோம்.

- நாம் செய்கிற காரியத்தில் முழுக்கவனம் செலுத்த வேண்டும் (கொலோசெயர் 3:23). அரைகுறை மனதோடு அதிக மணிநேரம் செய்வதைக் காட்டிலும் முழுகவனத்துடன் சில மணிநேரங்கள் செய்வதே சாலச்சிறந்தது.

- இப்பொழுதே செய்! நாம் செய்ய வேண்டிய காரியங்கள் மலைபோல் உயரமாய் குவிந்து கொண்டே செல்வதற்கு விடக்கூடாது. பின்பு அவைகளில் சிக்கிக் கொள்வோம்.

- பணிகளை பகிர்ந்தளி, அப்பொழுது தான் தேவனுக்குள் நாம் என்ன செய்கிறோம் என்று அறிவோம். அதிலொரு பிடிமானம் இருக்கும் மற்றவர்கள் செய்ய வேண்டிய வேலையை அல்லது செய்கிற வேலையை நாம் ஒருபோதும் செய்யக்கூடாது.

- நம்முடைய நேரத்தை சிறந்த முறையில் உபயோகிப்பதற்கு தேவனுடைய திட்டஅளவுகோலை உடையவர்களாக இருக்க வேண்டும். உங்களுடைய குடும்பம் ஒதுக்கபட்டு விடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அவர்களும் உங்கள் பொறுப்பிற்கு உரியவர்கள் என்பதை நினைவில் கொள்க.

மூன்றுவித தலைமைத்துவ அமைப்பு முறைகளை மதிப்பீடு செய்தல்: நீங்கள் எதிலே பொருந்துவீர்கள்?

நம்முடைய சமுதாயத்திலே அநேக விதமான தலைமைத்துவ அமைப்பு முறைகள் சபைகளில் காணப்படுகிறது. நான் இங்கே தற்போது சபைகளில் காணப்படுகின்ற மூன்றுவிதமான அமைப்பு முறையைக் குறித்து சுருக்கமாக விவாதிக்க விரும்புகிறேன். முதலாவது மோசமான அமைப்புமுறை. இரண்டாவது நல்லது. மூன்றாவது சிறந்தது. இப்பாடத்தில் அவைகளை காண்போம்.

1: கண்ணாடி சீசாவிலிருக்கும் அடைப்பான் அமைப்பு முறை

இவ்விதமான அமைப்பு முறையால் தனிப்பட்ட தலைவர் அதிகமாக முன் நிறுத்தப்படுவார். அவர் தலைமைத்துவம் வகிக்கிற சபை அல்லது ஸ்தாபனம் கண்ணாடி சீசா போன்றது. அதில் அந்த தலைவர் அடைப்பான் போன்றவர். அவருடைய தனிப்பட்ட அனுமதியில்லாமல், அங்கீகாரம் இல்லாமல் எந்த ஒரு காரியமும் அந்த பாத்திரத்தின் உள்ளே நுழையவும் முடியாது. வெளியேறவும் முடியாது. எந்த வித நிலைமையிலும் அவரே தனிப்பட்ட முறையில் தீர்மானங்களை எடுப்பார். அவர் தொடங்காமல் ஒன்றும் வெளியே தெரிய வராது.

இந்தவிதமான தலைவர் ''ஒரு மனித இசைக்குழு'' என்று நான் அடிக்கடி அழைப்பது உண்டு. தனக்குத்தானே எல்லாவற்றையும் செய்து கொள்ள முயற்சி செய்யும் தலைவர். பலசூழ்நிலைகளில் இவ்விதமான நபர்களை நான் பார்த்திருக்கிறேன். இவர் ஒரே நேரத்தில் பலவிதமான வாத்தியக் கருவிகளை வாசிக்க முயற்சி செய்வது போலாகும். ஒரு நபர் ஒரு காட்சி ஒன்றில் அவரே மவுத் ஆர்கான் ஊதினார், அக்காடின் வாசித்தார், டிரம்ஸ் அடித்தார், தாளங்களை தட்டினார், ஆகியவற்றை செய்ததை நினைவு கூறுகிறேன். அவருடைய தலை, வாய், கைகள், கால்கள் அனைத்தும் அதிக நேரம் வேலை செய்து ஒரு முழு இசைக்குழு செய்யும் வேலையை செய்து கொண்டிருந்தார். இது வேடிக்கையாகவும், பொழுது போக்காகவும் செய்யப்படுகிற காரியம். எப்படியிருந்தாலும் ஒரு கிறிஸ்தவ தலைவர் அதைப் போல் காரியத்தை செய்ய முயற்சிக்கும் போது இது வேடிக்கையானது அல்ல. அப்படிப்பட்ட தலைவர் அரிதாக வேலைக்காரனுக்குரிய காரியங்களை மட்டும் பகிர்ந்து கொள்கிறார். அவருடைய தகுதி வாய்ந்த தலைவர்களுக்கு மிக அரிதாக பயிற்றுவிக்க, ஆயத்தப்படுத்த நேரத்தை எடுத்துக் கொள்கிறார். சுய நலத்தோடு பொறாமையோடு தன்னிடத்தே எல்லா தலைமைத்துவ பொறுப்புகளையும் பிடித்து வைத்துக் கொள்வார். தன்னை ஒரு பெரிய ஆளாக காட்டிக்கொண்டு அவருடைய வேலையை யாரும் அவரைப் போல் திறமையாக செய்யமுடியாது என்று நினைப்பார். நான் அவரை ''கண்ணாடி சீசாவின் அடைப்பானாக'' காண்கிறேன். அவருடைய அனுமதியில்லாமல் சபையில் எந்த காரியமும் நடக்காது. அவர் மூப்பர்கள் குழுவை உடையவராக இருந்தாலும் அவர்கள் எல்லாம் தலையை ஆட்டுகிற ''ஆமா சாமிகளாக'' இருப்பார்கள், குறிப்பாக அவர்கள் எப்போதும் அவருக்கு ஒத்துபோகிற படியினால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இந்த விதமான அமைப்பு முறை சிறிய சபையில் வேண்டுமானால் கிரியை செய்யலாம். அங்கே அங்கத்தினர்களில் பெரும்பான்மையானவர்கள் செயல்படாதவர்களும், பங்கெடுக்காதவர்களுமாய் இருக்கிறார்கள். எப்படியிருந்தாலும் இது ஒரு எதிர்மறையான அமைப்பு முறை. இது அரிதாக வளர்ச்சிக்கும், விரிவாக்கத்திற்கும் நேராக வழி நடத்தும். தண்ணீராவது, பாலாவது அந்த பாட்டிலின் உள்ளே இருக்கும் வரை அடைப்பான் அதனிடத்தில் தான் இருக்கும். ஆனால் உள்ளே ஜீவனும் ஆவியும் உள்ள திராட்ச ரசம் இருக்கும் போது குலுக்கல் ஏற்பட்டு அது தவிர்க்க முடியாத இரண்டில் ஒரு காரியத்தை ஏற்படுத்தும். ஒன்று பாட்டில் வெடித்து சபை பிளவுப்படும் அல்லது உள்ளழுத்தம் அதிகமாகி அடைப்பானை பாட்டிலின் வாயிலில் இருந்து வெளியே எரிவதற்கு காரணமாகி விடும்.

2: கூம்பு வடிவ அமைப்பு (பிரமிடு) அல்லது செயலாண்மையாளர் முறை

இந்த அமைப்பு முறை முதலாவது அமைப்பு முறையில் இருந்து பெரிய அளவில் வளர்ச்சியடைந்த நிலை. இந்த முறை மோசேக்கு அவருடைய மாமாவாகிய எத்திரோவினால் பரிந்துரை செய்யப்பட்ட மாதிரியாகும். (யாத்திராகமம் 18:13-27). மோசே ஒரு நபர் இசைக்குழுவாக செயல்பட முயற்சி செய்து கொண்டிருந்தார். அவர் பலமணி நேரம் வேலை செய்ததின் நிமித்தமாக களைப்புற்றவராக மாறினார். ஜனங்களும் அவரோடு ஆலோசனை செய்ய நீண்ட நேரம் நீண்ட வரிசையில் காத்திருந்து களைப்புற்றார்கள்.

எத்திரோவின் அறிவுரையினால் தன்னுடைய தலைமைத்துவ அமைப்பு முறையை பிரமிடு அமைப்பு முறைக்கு மாற்றினார். அந்த அமைப்பு முறையில் மோசேயின் இடம் பிரமிடின் உச்சி பகுதி என்று நினைத்தார். மோசே ''கட்டளைகளையும், பிரமாணங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தி; அவர்கள் நடக்கவேண்டிய வழியையும், அவர்கள் செய்யவேண்டிய காரியத்தையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தவும்'' அறிவுறுத்தப்பட்டார்.(யாத்திராகமம் 18:20). மோசே நேரடியாக ''ஆயிரம் பேருக்குத் தலைவனை'' தொடர்புக் கொண்டான். அவர்கள் ''நூறு பேருக்குத் தலைவனை'' தொடர்புக் கொண்டார்கள். அவர்கள் ''ஐம்பது பேருக்குத் தலைவனை'' தொடர்புக் கொண்டார்கள். அவர்கள் ''பத்து பேருக்குத் தலைவனை'' தொடர்புக் கொண்டார்கள். இவ்விதமான அதிகாரத்தின் அமைப்பு முறை உச்சியிலிருந்து அடிப்பாகம் வரை கீழ்நோக்கி பாய்ந்தோடுகிறது.

இது மிகத் தெளிவானது மற்றும் பயனுள்ள அமைப்பு முறையாகும். அநேக வியாபார நிறுவனங்களினால் பயன்படுத்த படுகிறது. இந்த மாடலில் அதிகார அமைப்பு முறை தெளிவாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கட்டளையின் சங்கிலி தெளிவாக வரையறுக்கப் பட்டுள்ளது. ஸ்தானபத்திலே அவர்களுடைய அதிகார நிலைக் குறித்து ஒவ்வொருவரும் தெளிவாக புரிந்துள்ளார்கள்.

அநேக தற்கால சபைகளிலே இந்த அமைப்பு முறையின் சற்று வித்தியாசமான முறையை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். சபை அல்லது கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் அமைப்பிலே இந்த முறையானது மிகவும் திறமையான ரீதியிலே செயல்படுகிறது. எப்படியிருந்தாலும் இது ஒரு தகுதியான முறை. ஆனால் இது இயேசுவின் தலைமைத்துவ மாதிரி முறையல்ல.

3: இயேசுவின் அமைப்பு முறை தலைமைத்துவம்

அதிக அளவு சபை தலைவர்களால் மிகவும் விரும்பத்தக்க அமைப்பு முறையாகும். இந்த முறையை நான் சிலவேளைகளில் ''செயல் மையத் தத்துவம்'' என்று விவரிப்பதுண்டு. இதிலே இயேசு செயல்மையம் (மையப்பகுதி), சீஷர்கள் சக்கரத்தின் சுற்றளவு முழுமைக்கு பாய்ந்து செல்லுகிற இணைப்பு கம்பிகள். (சைக்கிள் சக்கரத்தை மனதில் கொள்க).
இந்த விதமான மாடலிலும் அதிகார அமைப்பு முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசுவே மையப்பகுதி. அவரே செயல்மையம், எல்லாமே அவரை சுற்றியே வருகிறது. எல்லா இணைப்பு கம்பிகளும் அவரோடு இணைக்கப்பட்டுள்ளது. அதேவேளையில் சக்கரத்தின் புற விளிம்புடனும் (ரிம்) இணைக்கப்பட்டுள்ளது. சக்கரம் தொடர்ந்து சரியாக சுழல்வதற்கு செயல்மையமே காரணியாகும். ஒவ்வொரு இணைப்புக் கம்பியும் சரியாக செயல்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ள போது தான், அதே வேளையில் சக்கரத்தின் புற விளிம்புடன் இணைக்கப்பட்டுள்ள போது தான் உபயோகமானதும், சட்டரீதியாக செல்லத்தக்கதானதும் ஆகும்.

துரதிஷ்டவசமாக, அநேக கிறிஸ்தவ தலைவர்களுக்கு, அவர்களுடைய தலைமைத்துவ அமைப்பு முறை அவர்களுடைய ஸ்தாபனத்திலே சர்வாதிகார முறையில் உள்ளது. அதற்கு சபையானது ஆதரவு கொடுக்க வேண்டும். இவை யாவும் போதகர் / சபை மக்கள் என்ற கருத்தை அடிப்படையாக கொண்டது, சரீர ஊழியம் என்ற கருத்தை அடிப்படையாக கொண்டதல்ல. இது புதிய ஏற்பாட்டு மாதிரியை அடிப்படையாகக் கொண்ட எல்லா விசுவாசிகளின் ஆசாரியத்துவம் என்ற கருத்தை போதகர்கள் ஏற்றுக்கொள்ள மிக கடினமாக்குகிறது. உண்மையான சீஷத்துவ விசுவாசிகளுக்கு மேலும் இது மிக அதிக கடினத்தை உண்டு பண்ணுகிறது. எப்படியிருந்தாலும், வேதாகம கட்டளையான சீஷர்களை உருவாக்குதல் என்பதை பின்பற்றுவதற்கு எந்த வழியிலும் சாக்குப்போக்கு

சொல்ல முடியாது. ஒரு வழி அல்லது மற்ற எந்த வழியிலாவது சிறந்த முறையில் சீஷத்துவதிற்கான சூழ்நிலையைக் கொடுப்பதற்கு வழிவகை காணப்பட வேண்டும்.

ஒரு போதகர் ''சீஷர்களை உருவாக்கவில்லை'' என்றால், அவர் தன்னுடைய ஊழியத்தை முழுமையாக நிறைவேற்றவில்லை. மேய்ப்பன் மற்றும் போதக ஊழியத்தின் நிறைவு பெற இன்றியமையாத மற்றும் தேவையான தன்மை என்னவென்றால் தகுதிவாய்ந்த தலைவர்களுக்கு இன்றியமையாத திறமையிலும், தலைமைத்துவ ஒழுங்கிலும் பயிற்சியளிப்பதும், ஆயத்தப்படுத்துவதும் ஆகும்.

எபேசியர் 4:11-13 சொல்லுகிறது: ''பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.'' பிரதான வேலையாகிய ஐந்து வித ஊழியத்தின் வரங்கள் ஊழியத்தின் வேலையை செய்வதற்காக அல்ல, பரிசுத்தவான்கள் (விசுவாசிகள்) சீர் பொருந்தும் பொருட்டு (பயிற்சி, ஆயத்தம், சீர்திருத்தம்), அதினால் அவர்கள் ஊழியத்தின் வேலையை நிறைவேற்றும் படியாக என்று மிக தெளிவாக போதிக்கிறது. அதாவது, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை கட்டியெழுப்புவதாகும்.

உண்மையான விளைவுகளை உண்டாக்கும் ஒரு போதகர் ஊழியத்தின் எல்லா வேலைகளையும் தன்னில் தானே செய்யமாட்டார். அவருடைய மிக முக்கியமான வேலை என்னவென்றால், தேர்ந்தெடுத்தல், அழைத்தல், பயிற்சியளித்தல் மற்றும் பரிசுத்தவான்களை இவைகளை செய்வதற்கு ஆயத்தம் செய்தலாகும். இந்த வழியில் தான் ஸ்தல சபை விசுவாசிகள் உண்மையாக முதிர்ச்சியடைந்து கட்டியெழுப்ப படுவார்கள். எந்த ஒரு தனிப்பட்ட ஒருவரும் போதக ஊழியத்தை தனியாக நின்று திறமையாக நிறைவேற்ற முடியாது. அதற்கு பல தரப்பட்ட வரங்கள் மற்றும் அநேக தகுதிவாய்ந்த தலைவர்கள் நேர்த்தியாக தேவ ஜனங்களை மேய்ப்பதற்குரிய வேலைக்காக தேவைப்படுகிறார்கள்.

இதை செய்து முடிப்பதற்கு முதலாவது தேவையான காரியம் என்னவென்றால், எல்லா ஸ்தல சபைகளிலும் சீஷத்துவ பயிற்சி திட்டத்தை செயல்படுத்துவது தான். இந்த சீஷர்கள், (ஆரம்ப பயிற்சியாளர்கள்) ஊழிய குழுவாக செயல்பட உதவி செய்ய வேண்டும். இதன் அர்த்தம் என்னவென்றால் அவர்கள் பயிற்சியை மட்டும் பெற மட்டார்கள், உண்மையான வாழ்க்கை சூழ்நிலையில் சபையின் ஊழியத்தில் அவர்கள் ஊழியத்தை வெளிப்படுத்துவதற்கு உண்மையான தருணம் கொடுக்கப் படலாம். அவர்கள் அனுபவத்திலும், திறமையிலும் வளர்ச்சியடையும் போது, படிப்படியாக பல்வேறு பணிகளை உள்ளடக்கிய மேய்ப்பர் ஊழியத்தின் பொறுப்புகளை எடுப்பதற்கு தகுதியுள்ளவர்கள் ஆக்கலாம்.

ஆர்வமூட்டுதலின் (ஊக்கமூட்டுதலின்) தத்துவங்கள்

கருத்து: ஊக்கமூட்டுதல் இல்லாமல் எதையும் செய்ய முடியாது.

நாம் தேவனுக்காக சில நேரங்களில் பெரிய மலையையும் ஏறி விடுகிறோம், மற்றும் மிக அகலமான கடலையும் கடந்து விடுகிறோம். ஆனால் சில நேரங்களில் ஒரு விரலைக்கூட உயர்த்த முடிவதில்லையே ஏன்? எந்த வகையிலும் தேவனுடைய சேவையைச் செய்ய எது நம்மை உள்ளடக்குகிறது? இந்த பூமியில் முழு மனதோடு தேவனுக்கு சேவை செய்ய வேண்டுமென்பதை எப்படி அறிந்திருக்கிறோம்? எப்படி பிற ஜனங்களும், தேவனுக்கு முழுமனதோடு சேவை செய்ய நம்மால் பெற்றுக்கொள்ள முடியும்?.

ஊக்கமூட்டுதல் வரையறுக்கப்படுதல்

ஊக்கமூட்டுதல் என்பது இவ்வாறு அர்த்தம் கொள்ளப்படலாம்: எது அசைவை உண்டாக்குகிறது அல்லது எது ஒரு மனிதனை செயலாற்ற வைக்கிறது. அது மனிதனின் சக்தி, இது பூமியிலே மிகவும் தாரளமாக கிடைக்கக்கூடியதும், வல்லமையான மூல ஆதாரமுமாகும். நாம் ஒருபோதும் அதை இழந்தவர்களாய் இல்லை. ஆனால் தவறாய் வழி நடத்தப்பட்டால் அது பார்ப்பதற்கு குறைந்தது போல் காணப்படும் அல்லது இப்போது மோசமாய் இருக்கும். நம்மை ஊக்கமூட்டுகிற காரியங்களின் பட்டியலுக்கு முடிவில்லை. அது மனிதனுக்கு மனிதன் மாறுபடும் மற்றும் நாளுக்கு நாள் மாறுபட்டதாகவும் இருக்கும்.

எதிர்மறை	**நடுநிலை**	**நேர்மறை**
கட்டாயப்படுத்துதல்	சந்தோஷம்	தெய்வீகம்
கோபம்	மரியாதை	பரிசுத்தம்
பொறாமை	நன்னிலைஉணர்வு	நீதி
மனக்காயம்	மனநிறைவு	சமாதானம்
பயம்	ஒத்துப்போகுதல்	மகிழ்ச்சி
பெருமை	கருத்துவேறுபாடு	தயவு
சோம்பல்	அழுத்தம்	நன்மை
வெறுத்தல்	சுத்தம்	உண்மை
வெறுப்புணர்வு	விருப்பம்	இரக்கம்
தனிமைஉணர்வு	சூழ்நிலை	நம்பிக்கை
தீமை	நல்ல சித்தம்	அன்பு
நம்பிக்கையின்மை	நற்குணம்	தன்னலமற்ற
பாதுகாப்பற்ற	பாதுகாப்பு	தேவபயம்
தன்அமைதி	போட்டி	பொறுமை
கவலை	கிளர்ச்சி	சாந்தம்
பிழை	இன்பம்	தன்னடக்கம்
அதைரியம்	மனசாட்சி	தேவனிடமிருந்து வரும் தரிசனம்
சூது	வெற்றி	கிருபை
ஏமாற்றம்	சரீர தகுதி	தேவஉணர்வு

இந்தப்பட்டியல் சரியான அமைப்பு முறையில் இல்லை, ஒரு பாகத்தில் சேர்க்கப்பட்டது, குறிப்பிட்ட சூழ்நிலையில் அடுத்த பாகத்திலும் சேர்க்கபடலாம். இந்த பட்டியல் கொடுக்கப்பட்டதின் காரணம் ஊக்கமூட்டுதலின் மூலக்காரணத்தையும் அளவையும், வகையையும் அறிந்து கொள்ளவே (மற்றும் இன்னும் அநேகம் நாம் சேர்த்துக் கொள்ளலாம்).

ஊக்கமூட்டுதலை நாம் புரிந்து கொள்வதின் மூலம் மிகப் பயனுள்ள ஊழியத்திற்கும் மற்றும் நிலத்தை விட்டு மேலே எழும்ப முடியாதப்படிக்கு காணப்படும் ஊழியத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை உண்டாக்கலாம். இந்த முக்கியமானத் தலைப்புகளை விரிவாக காணப்பது அவசியம்.

மனித ஊக்கமூட்டுதலின் அடிப்படையான மூன்று காரணிகள்

அநேகமாக மிக வல்லமையானதும், அதேவேளையில் மிக அடிப்படையான மனித ஊக்கமுட்டுதலின் காரணம் நாம் அனைவரும் வாழுவதற்காகும். இதை நாம் உணர வேண்டும், ஏனெனில் வாழ்வில் பயமுறுத்தப்பட்ட யாருக்காவது நாம் எதையாவது செய்ய உதவமுன்வந்தால் (உதா. பசி, நோய், முதுமையடைதல் மற்றும் பல), நாம் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியது, இது அநேகமாக அவரது சிந்தனையை அதிகாரம் பண்ணி மற்றும் அவர்களுடைய அநேக செயலைத் தூண்டுகிறது.

மனித ஊக்கமூட்டுதலின் மற்றொரு அடிப்படை ஆதாரம் எல்லா ஜனங்களும் வாழ்கின்ற உணர்வை உருவாக்கும் நோக்கத்தை உடையவர்களாய் இருக்க, தங்களுடைய வாழ்வு மதிக்கப்படுகிற ஒன்றாக உருவாக்க விரும்புகிறார்கள் என்பதை புரிந்துக் கொள்வது அவசியம். இதன் காரணமென்னவென்றால் தேவன் எல்லா மனித ஜீவன்களும் அவரை அறியவும், அவருடைய சித்தத்தைச் செய்யும் அவசியத்தோடு உருவாக்கப்பட்டுள்ளான். இந்த ஊக்கமுட்டுதலின் மூலஆதாரம் விரிவாக ஏதாவது ஒரு விதத்தில் நாம் அறியாத வண்ணம் உந்தித் தள்ளுகிறது. ஆனால் இது எல்லா மதங்களையும் கடந்து நாஸ்திகத்தையும் உள்ளடக்கி ஊக்கமுட்டுதலின் மூலஆதாரமாய் இருக்கிறது.

மனித ஊக்கமூட்தலில் மூன்றாவது அடிப்படை மூலஆதாரம் கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கி, நமக்குள் செயலாற்றுகிற ஒன்றாக இருக்கிறது. நமக்கு எது நல்லதோ, அந்த காரியங்களை மாத்திரம் செய்வதற்கு நம்மை வல்லமையாக உந்தும் சக்தியாக இருக்கிறது. இந்த சுயநலமான அல்லது சுயத்தை மையமாகக் கொண்ட ஊக்கமூட்டுதலின் மூலஆதாரம் நம்முடைய வாழ்வில் நமக்கு முன்னுரிமையளிக்க தள்ளுகிறதாய் இருக்கிறது. எனவே அதை எடுத்துவிட வேண்டும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் எல்லாவற்றிலும் தேவனை முன்வைப்பது அவசியம். இதன் அர்த்தம் நம்மை நாம் மறுதலிப்பதாகும். இது மனித ஜீவனுக்கு இயற்கையாக வராத ஒன்றாக இருக்கிறது. எப்படியிருப்பினும் கிறிஸ்துவுக்குள் இந்த வாழ்க்கை சாத்தியமாகும். நம்முடைய வாழ்க்கை எல்லாவற்றிலும், தேவனுக்கு நாம் ஆளுகைத்துவத்தை கொடுப்பது அவசியம். ஆகவே கீழ்படிதலோடு சுயநலமற்ற வாழ்க்கை வாழ தேட வேண்டும். அதிலே தேவனும், அவருடைய சித்தமும் நம்மிலும் நம்முடைய சித்தத்தின் மேலும் முக்கியத்துவம் பெறும் (லூக்கா 9:23). தேவனுக்கு வெளியே ஆதாயம் என்பதை ஜனங்கள் இவ்வாறு அர்த்தம் கொள்ளுகிறார்கள்: விலைமதிப்புள்ள வேலையை செய்து முடிப்பதின் மூலம், இலக்கை அடைவதின் மூலம், மற்றும் தொடங்கப்பட்ட வேலையை முடிப்பதின் மூலம் தன்னிலையை உயர்த்திக் காட்டும் நிலையை அடைவதின் மூலம், மற்ற ஜனங்களோடு திருப்திகரமான உறவை விரிவாக்குவதின் மூலம், அதிகாரத்தை பயிற்சித்து, அதன் மூலம் மற்ற ஜனங்களை தனக்கேற்றவாறு செயல்படுத்துவதின் மூலம், மற்றும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அந்த ஜனங்களையும், உலகத்தையும் கருவியாக மாற்றி அதன் மூலம் தேவையான பணத்தை சம்பாதித்து தங்களுடைய வாழ்க்கைக்கு தேவையான அவசியமான பொருட்களை சம்பாதிப்பது என்பதாக அர்த்தம் கொள்கிறார்கள். கிறிஸ்தவர்களும் கூட தங்களுடைய வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட அளவு இப்படிப்பட்ட ஊக்குமூட்டுதலின் ஆதாரத்தினால் செயல்படுத்தப் படுகிறவர்களாக இருக்கிறார்கள். ஆனால் நாம் வேறுபட்டவர்களாய் இருக்க தேவன் விரும்புகிறார். கிறிஸ்தவர்களாகிய நாம் எது நம்மை ஊக்கமூட்டுகிறது என்பதை நாம் புரிந்துகொள்வது அவசியம். மேலும் சரியான காரியங்களுக்காக 100% நேரமும் ஊக்கமூட்டுதல் அடைந்து எப்படி நிலைத்திருப்பது என்பதை நாம் அறிந்து கொள்வது அவசியம். அதன்மூலம் நாம் தேவனுக்கு சேவை செய்து, எப்படி ஊக்கமூட்டப்பட்ட நோக்கத்திலும், அர்த்தத்திலும் நிலைத்திருந்து, நம்முடைய வாழ்க்கையை தேவனை சுற்றி உறுதி செய்து கொண்டு, நம்முடைய தொடர்பு அவரோடு நிலைத்திருக்கும். நாம் செய்கிற எல்லாம் அவர் விரும்புகிறபடியினாலும், நாம் அவரை நேசிக்கிறபடியினாலும் அமைந்ததாக இருக்கவேண்டும்.

ஊக்கமூட்டுதல் அடைந்த ஜனங்கள் எவ்வாறு இருப்பார்கள்?

ஊக்கமூட்டப்பட்ட ஜனங்கள் முதலும், முதன்மையான விருப்பமுள்ள ஜனங்களாய் இருப்பார்கள். விருப்பமுள்ள ஜனங்கூட்டத்திற்கு ஒரு நல்ல உதாரணம் இஸ்ரவேல் ஜனங்கள். அவர்கள் தேவனுடைய ஆசாரிப்புக்கூடாரம் கட்டுவதற்கு தங்களுடைய காணிக்கையை கொண்டு வந்ததின் மூலம் இதைக்

காணலாம் (யாத்திராகமம் 35:4 – 36:7). இங்கே ஜனங்கள் அதிகம் கொண்டு வருவதில் இருந்து விலகி இருக்க வேண்டும். காரணம் அவர்கள் கொடுப்பதற்கு மிகவும் விருப்பமுடையவர்களாய் இருந்தார்கள். அநேக தலைவர்கள் அநேகமாக தங்களுடைய சபைகளில் இப்படிப்பட்ட பிரச்சனை உடையவர்களாக இருக்க விரும்புகிறார்கள். ஏன் இந்த ஜனங்கள் மிகவும் விருப்பமுடையவர்களாக இருந்தார்கள். விடை எளிதானது. இந்த ஜனங்களுடைய இருதயங்களை தேவனும், அவருடைய வேலையும் சிறைபிடித்திருந்தது. எனவே அவர்கள் முறுமுறுப்பதை நிறுத்தி அதற்கு பதிலாக விருப்பமுடைய, ஊக்கமூட்டப்பட்ட ஜனங்களாக மாறினார்கள்.

ஊக்கமூட்டப்பட்ட ஜனங்களும், வேலை செய்து முடிக்கப்பட விரும்புகிறார்கள். அவர்களுடைய ஊக்கமூட்டுதல் அவர்களை செயல்பட வைக்க உற்சாகப்படுத்துகிறது. வலிமையான ஊக்கமூட்டுதலினால் அதிக தியாகத்துடன் நேரத்தை பணத்தை மற்றும் சக்தியை அவர்கள் செலவிடுவார்கள். உண்மையிலே உச்சகட்ட ஆர்வமூட்டப்பட்ட ஜனங்கள் வலிமையான எதிர்ப்புகளை அவர்கள் சந்தித்தப் போதிலும், வேலையை செய்து முடிக்க தீர்மானிப்பவர்களாக இருப்பார்கள். ஆகவே அவர்கள் பொதுவாக வாழ்க்கையில் அதிகமானவற்றை சாதிக்கிற ஜனங்களாய் இருப்பார்கள்.

<u>உச்சகட்ட ஊக்கமூட்டுதல் அடைந்த ஜனங்களோடு அநேக சிறப்பியல்புகளை நாம் சம்பந்தப்படுத்தலாம். கீழேயுள்ள பட்டியலில் உயர்வாக சாதிக்கும், உயர்வாக ஆர்வமூட்டப்பட்ட கிறிஸ்தவர்களிடமிருந்து குறிப்பிட்ட பொதுவான சிறப்பியல்புகளை இதிலே காணலாம். தேவனுக்கு அதிக பயனுள்ள முறையில் சேவை செய்ய விரும்பும் எந்த கிறிஸ்தவர்களும் இந்த சிறப்பியல்புகளில் அதிகரிக்க வேண்டும்:</u>

- அவர்கள் தங்களை கைக்குள்ளடக்கி, ஒழுக்கமுள்ள, தெய்வீக வாழ்வு வாழ்ந்து தேவனையும், அவர் சித்தத்தையும் முதன்மை படுத்துவார்கள். அவர்கள் தங்களுடைய வாழ்விற்கு இலக்குகள் அமைத்து, அதை சாதிக்க திட்டம் வகுத்து, அந்த வேலை முடியும் வரை (நிகழும் வரை) அதோடு இணைந்திருப்பார்கள். உண்மையாக, தாங்கள் தேவனுக்காக செய்யும் எல்லாக் காரியமும் மேம்பட விரும்புவார்கள். தாங்களாகவே களைத்தோ, சோர்ந்தோ போக மாட்டார்கள். காரணம் அவர்கள் வாழ்வு நோக்கமுடையதாகவும், பயனுள்ளதாகவும் அமையத்தக்க ஸ்திரத்தன்மையை அடைந்திருக்கிறார்கள். மேலும் வாழ்வின் எந்தப் பகுதியையும் வெறுக்கவில்லை என உறுதிபடுத்திக் கொள்வார்கள். ஆகவே, அவர்கள் சரீரம், உணர்வு, அறிவு, சமுதாயம், ஆவிக்குரிய தேவைகளை சந்திக்க நேரமெடுப்பார்கள். அவர்கள் எப்படி கோபப்பட வேண்டும், பாவம் செய்யாதிருக்க வேண்டுமென்று அறிவார்கள் (எபேசியர் 4:26). இயேசுவைப் போல, பாவம், பாசாங்கு, அநீதி ஆகியவை மேல் நேர்மையாக கோபமுடையவர்கள். ஆனாலும் கோபத்தை எப்படி கட்டுப்படுத்த வேண்டுமென்றும் அறிவார்கள். உண்மையாக, மற்றவர்கள் மேலுள்ள கோபம், முதலாவது அவர்களை மன்னிக்காமல் சூரியன் கீழேயிறங்க விடமாட்டார்கள். ஏனென்றால் கசப்பும், வெறுப்பும் மன்னிப்பதிலிருந்து அப்பாற்பட்டவை என்றும், அவை அவர்களின் ஊக்கமூட்டுதலையும், தேவனுக்குரிய ஆக்கப்பூர்வ தன்மையும் கெடுத்துவிடும் என்பதையும் அறிவார்கள் (எபேசியர் 4:26,27; யாக்கோபு 1:19,20).
- அவர்கள் வாழ்வின் எந்த சூழ்நிலையிலும் நல்லதையே காண்கிறப் பண்புடையவர்கள். தேவனால் எந்த பிரச்சனையையும் தீர்க்கமுடியும் என்று நம்புகிறவர்கள். அவர்கள் சில நேரம் ஊக்கம் குறைந்தவர்களாயிருக்கலாம். ஆனால பொதுவாக கவலையோ, அல்லது தாழ்ந்த நிலையோ அடைய மாட்டார்கள். மாறாக, எதிலும் குறைக்காண்பவர்கள் எந்த தருணத்திலும் தடையை காண்பார்கள். எதிலும் நல்லதை காண்கிறவர் எந்த தடைகளிலும் தருணத்தை காண்பார்கள். ஆகவே அவர்கள் கடின வேலையையும், சமாளித்து செல்லும் விருப்பமுடையவர்கள். மேலும் அவர்கள் சந்தோஷமாக வாழ்வார்கள். காரணம் அவர்கள் அந்த வேலையிலும் மற்றும் தங்கள் நேரத்தையும், முயற்சியையும் விதைப்பதின் மூலம் புதிய நுணுக்கங்களை உருவாக்குவதில் (தங்கள் கற்பனைத்திறனை உபயோகிக்க) விருப்பமுள்ளவர்கள். அவர்கள் எப்பொழுதும் திறந்த / எச்சரிக்கையாக / வரவேற்கும் பண்புடையவர்கள், மற்றும் ஜனங்கள், புதிய நுணுக்கம், அறிவு ஆகியவற்றிலும் விருப்பமுடையவர்கள்.

- அவர்கள் தரிசனத்தை உடையவர்களோ அல்லது இல்லாதவர்களாகவோ இருக்கலாம். ஆனால் தங்கள் வாழ்விற்கு உணர்வுள்ள வழிகாட்டுகிறவர்கள், மற்றும் தேவனுடைய தரிசனத்தைப் பிடித்து அதன்படி ஒடுகிறவர்கள். அவர்கள் எப்பொழுதும் தூண்டி இயங்கக்கூடியவர்கள். தங்கள் எண்ணங்களை பிறருக்கு அளிப்பவர்கள. அவர்கள் எப்போதும் பலனை காண்பதற்கு முன்னோக்கி பார்ப்பவர்களாக இருப்பார்கள். எனவே, தீர்மானங்களை எடுக்க மனதால் அறியும் அல்லது பகுத்தறியும் திறமையுடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் நடைமுறையானவர்கள். எனவே தரிசனத்தை உண்மையானதாக மாற்ற வேண்டும் என்று அறிவார்கள்.

- அவர்கள் தங்கள் சிந்தனை மற்றும் சரீர எல்லையை விரிவாக்குகிறவர்கள். ஏனென்றால் அவர்கள் தேவசித்தத்தை நிறைவேற்றுகிறவர்கள். அவர்கள் விசுவாசத்தில் காலடி எடுத்துவைத்து, தேவைப்படும்போது ஆபத்தானவற்றையும் எடுப்பார்கள். அவர்கள் மாறக்கூடிய தகுதியுடையவர்களாக, எப்பொழுதும் தேவைப்பட்டாலும் பலத்துறைகளிலும் திறமையுடையவர்களாயிருப்பார்கள்.

- அவர்கள் தேவனிலும், தேவன் அவர்களைக் கொண்டு செய்யப்போவதிலும் முழு நம்பிக்கையுடையவர்கள். தங்களைத் தாங்களே நம்பவில்லையென்றால் பிறர் நம்மேல் நம்பிக்கை வைக்கமாட்டார்கள் என்பதை அறிகிறவர்கள். எப்பொழுதெல்லாம் அவர்களுக்கு தவறாய் கிடைக்கும்போது அல்லது காரியங்கள் தவறாய் போகும்போது அவர்கள் நம்பிக்கை அவர்களை சிரிக்க வைக்கும். தேவன் மேலுள்ள அவர்களின் நம்பிக்கை அவர்களுக்கு தைரியமூட்டும். அவர்கள் தீர்மானமுடையவர்கள், ஆர்வமுடையவர்கள், உறுதியுடையவர்கள் மற்றும் அவர்கள் தேவனில் தவறாயிருக்கிறார்கள் என்பதை உணரும்வரை தங்களை விட்டு கொடுக்க மாட்டார்கள். அவர்கள் பயப்படும் போதும் கூட தேவன் தங்களோடு இருக்கிறார் என்பதை அறிவார்கள். அவர்கள் பயத்தை புறம்பே தள்ளி, பயம் தங்களை மேற்கொண்டு வீழ்த்திவிடாதபடி மறுக்கிறார்கள் (யோசுவா 1:1-9).

- அவர்கள் தாழ்மையுடையவர்கள். தேவனே அவர்களுடைய வெற்றியின் மகிமை மற்றும் கனத்தை பெற தகுதியானவர் என்பதை அறிவார்கள். தங்களுடைய சாதனை, வெற்றிகள் மூலம் தங்களை புகழவேண்டிய அவசியமில்லை, ஏனெனில் இவைகள் தங்களை குறித்தே பேசுகின்றபடியினால்.

- அவர்கள் பொறுமையுடையவர்கள். தேவன் எப்பொழுதும் உண்மைத்துவத்தை நீருபிப்பவர் என்பதை அறிவார்கள். ஆனால் எல்லாவற்றிற்கும் குறித்த நேரமுடையவர் என்பதை அறிகின்றவர்கள் (பிரசங்கி 3:1-8). அவர்கள் நன்றாக கவனித்து கேட்பவர்கள், நல்ல செய்தி தொடர்பாளர். அவர்கள் முக்கியமான தீர்மானங்களை, போதுமான பொருத்தமான தகவல்களை சேகரித்த பின்பு எடுப்பார்கள்.

- அவர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்கள். அவர்கள் நேர்மையான / உண்மையான வாழ்க்கை வாழுகின்றவர்கள். தங்களுடைய பொறுப்பை உணருகின்றவர்கள். அவர்கள் வார்த்தை மதிக்கப்படக்கூடிய அர்த்தமுடையவைகளாக இருக்கும். விசேஷமாக எப்போதும் கடினமானவற்றை பெற்றுக்கொள்ளும் போதும். எல்லாவற்றிற்கும் மேலாக வாழ்வின் எந்தப் பகுதியிலும் ஏமாற்றுவதை மறுக்கிறவர்கள், ஏனெனில் இது காரியங்களை குறுகிய காலத்திற்கு எளிமையாக்கும், ஆனால் அவைகள் தங்களோடு வாழ முடியாது என்று அறிவார்கள்.

நமது இன்றைய உலகம்

நம்மை சுற்றியிருக்கிற உலகம் போட்டி நிறைந்ததாய் மாறிக்கொண்டே வருகின்றது. கடந்துசெல்கின்ற ஒவ்வொரு நாளும் குறைந்த விதத்திலே முன்னறியக் கூடியதாய் இருக்கிறது. மனிதகுலம் கடந்த 50 வருடத்தில் அணுஆயுத யுகத்திற்குள்ளாய், வான மண்டல யுகத்திற்குள்ளாய் கணணி யுகத்திற்குள்ளாய் நுழைந்துவிட்டது. முன் சந்ததி இருந்ததை விட 20மடங்கு அதிகமான தகவல்களை வேலையின்நிமித்தமாக புரியக்கூடியவராய் இருக்க வேண்டுமென்று சராசரியாக கணக்கிடப்பட்டுள்ளது.

கிறிஸ்தவர்களும் இந்த நடப்பிலிருந்து நீங்கியிருக்கவில்லை. நாம் இந்த உலகத்திலே வாழ வேண்டும். ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளாய் நாம் அதிலே பங்குள்ளவர்களாய் இருக்கிறோம். ஜீவனுக்காக நம்மில் அநேகர் வியாபார ஸ்தலங்களிலே வேலை செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் எளிதாக நம்மை சுற்றியிருக்கிற செய்கை என்னும் சூறாவளியினால் பிடிக்கப் படுகிறோம். தேவனோடு நடக்கின்ற கிரையத்தின் மதிப்பிலே இன்று சபைத் தலைவர்கள் அதிகமான எண்ணிக்கையிலே தெரிந்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். உதாரணமாக என்ன வாசிக்க வேண்டும் (மலைப் போல் குவிந்திருக்கிற புத்தகங்களின் நடுவில்) எந்த உபதேசத்தை விசுவாசித்து தங்களுடைய சொந்தமாய் ஆக்கிக் கொள்வது மற்றும் தங்களுடைய ஜனங்களுக்கு என்னத்தை போதிப்பது(நம்முடைய நேரம் மற்றும் பணத்திற்கு போட்டியாக உள்ள அநேக விதவிதமான அதிகரிக்கின்ற உபதேசங்கள் நடுவிலிருந்து) எந்த கருத்தரங்கில் கலந்து கொள்வது நம்முடைய சபையிலே எத்தனை கூட்டங்கள் வைக்க வேண்டும் அதிலே எதில் கலந்துக் கொள்வது மற்றும் பல. இன்றைய சபை அங்கத்தினர்களும் தங்களுடைய தலைவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதை அதிக உரிமையுடன் கேட்கிறார்கள். உடனடியான அதிக அழுத்தமுள்ள பலனையே நோக்கமாகக் கொண்டுள்ள நாம் வாழுகிற இந்த உலகம் சபைக்குள்ளும் ஆக்கிரமிக்கிறது மற்றும் எல்லாவித பிரச்சனைகளையும் சபைக்குள்ளே கொண்டு வருகிறது. சில நேரங்களில் வெற்றியை இந்த விதத்தில் பெறவும் தகுதியாக்குகிறது.

சபைத் தலைவர்கள் எதிர்பாராத இன்னல்களைத் தரும் இந்தக் காரியங்களைக் குறித்து பேசி தேவனுக்கு அவர்கள் செய்யும் சேவையில் தூண்டப்பட்டவர்களாய் நிலைத்திருப்பது அவசியம். இன்றைய மேற்கத்திய உலக சமுதாயம் நல்ல ஆக்கப்பூர்வமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்து, அவை தேவனுக்கு மகிமைக் கொண்டுவரும் விதத்திலே வாழும் எளிதான சூழ்நிலையில் இல்லை. ஆனால் இது செய்யக்கூடிய சாத்தியம் உள்ளது தான். இதை செய்வதற்கு நாம் நம்மைப் பற்றியும் தேவனில் நாம் யார் என்பதையும் கற்றுக் கொள்வது அவசியம். பல்வேறு சூழ்நிலையிலும் சந்தர்ப்பங்களிலும் நாம் எப்படி? ஏன்? செயலாற்றுகிறோம் என்பதை அறிவது அவசியம். மிக முக்கியமாக நாம் நம்மை முழுமையாக தேவன் பயன்படுத்தக் கூடிய விதத்தில் இருக்க வேண்டும். அப்பொழுது தான் தேவையான நேரங்களில் நம்மை மாற்றி உருவாக்குவார். அப்பொழுது தான் நாம் உண்மையாக அவருடைய சித்தத்தை அவருடைய வழியில் செய்வதற்கு தகுதியாவோம். தேவன் தன்னுடைய தலைவர்கள் உயர்ந்த விதத்தில் தூண்டப்பட்டவர்களாகவும், அதின் மூலமாய் அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் எதைச் செய்துக் கொண்டிருந்தாலும் அவருக்கு கனியுள்ளவர்களாகவும் ஆக்கப்பூர்வமானவர்களாகவும் விளங்க முடியும்.

அழுத்தத்திற்கு தகுந்தாற்போல் ஜனங்கள் செயல்படும் மூன்று வழிகள்

இன்றைய உலகில் ஏற்படும் வேகமான மாற்றங்கள் உடனடியாக கிடைக்கக்கூடிய தகவல்களின் வளர்ச்சி சிறந்த முறையில் செய்யப்பட வேண்டிய எதிர்பார்ப்பின் கட்டாயம் கிறிஸ்தவ வட்டாரத்திலும் கூட. இவைகள் எல்லாம் நம்மை பரந்த உயர்ந்த அளவிலான அழுத்தத்துடன் நம்மை போராட வைக்கிறது. ஆகையால் ஜனங்களாகிய நாம் அழுத்தத்திலே எப்படி செயல் படுகிறோம் என்பதை புரிந்துக் கொள்ள உதவியாய் இருக்கும் இந்த காரியங்களை இதற்கு முன்னுள்ள அதிகாரங்களில் ஒரு குறிப்பிட்ட அளவுப் பார்த்தோம். அதாவது பிரச்சனை மற்றும் அழுத்தத்தின் மதிப்பு. ஆனால் இங்கே அழுத்தம் நம்முடைய உந்துதலில் ஏற்படுத்தும் விளைவுகளில் கவனம் செலுத்துவோம். அழுத்தத்திற்கு ஜனங்கள் மூன்று விதத்தில் பதிலளிக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கீழே கொடுக்கப்பட்டுள்ள பிரிவுகளில் மூன்று விதங்களில் அழுத்தத்திற்கு மறுமொழி கொடுக்கும் ஜனங்களைக் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது.

(1) வால் துரத்திகள்

இந்த ஜனங்கள் அழுத்தத்திற்கு பதிலளிப்பதில் மிக வேகமானவர்களாக இருப்பார்கள். அதன் விளைவாக இவர்கள் அடிக்கடி முடுக்கி விடப்பட்டவர்களாகவும், இயல்புக்கு மீறிய செயல்படுகிறவர்களாகவும், வலிமையான மக்களாகவும் இருக்கிறார்கள். நாம் இந்த குழுவினரை வால்துரத்திகள் என்று அடையாளமிடுகிறோம். காரணமென்னவென்றால் இவர்கள் நாய் தன்னுடைய வாலை துரத்துவது போல நடந்துக் கொள்கிறார்கள். அதாவது தங்களுடைய இலக்கை அடைய

வட்டத்திற்குள்ளாக அளவுக்கு மீறிய உணர்ச்சியுடன் முந்தி தள்ளுகிறார்கள். அவர்கள் சாதிக்க நினைத்து தீர்மானித்ததை சமாளிக்க முடியுமா, தங்களைக் கொண்டு என்ன செய்ய முடியும் என்பதை அறியாமலிருக்கிறார்கள். அவர்கள் அடுத்த காரியத்தை கண்டுபிடித்து பைத்தியக்காரத்தனமாக துரத்தும் வரை அடிக்கடி தங்களைக் கொண்டு என்ன செய்ய வேண்டுமென்று அவர்களுக்குத் தெரியாது. அதாவது மீண்டும் அந்த வாலைக் காணும்போது எந்த விலைக்கிரையம் கொடுத்தாகிலும் அதை அடைய விரும்புவார்கள்.

இப்படிபட்ட நபர்கள் பொதுவாக சுற்றியே வேகமாகத் தள்ளி அதிகமாக மிக விரைவாக செய்ய முயற்சித்து அதன் விளைவாக தரத்திலே மிக குறைவானவற்றையே நிறைவேற்றுவார்கள். அவர்கள் அதிகமான பொறுப்புகளை எடுக்கவிரும்புவார்கள். அவர்கள் அதிகமாக அர்ப்பணித்து தங்களுக்குள்ளாக அதிக சவால்களை விடுவார்கள். நேரம் அவர்கள் விரோதி. அவர்கள் செய்யும் எந்தக் காரியத்தைக் குறித்தும் அவசர உணர்வு மற்றும் பரபரப்புடன் இருப்பார்கள். அதிக கடின முயற்சி எடுக்க விரும்புவார்கள். மற்றும் வேலை விரைவாக செய்துமுடிக்கப்பட அதிக ஆபத்தான, உண்மைக்கு புறம்பான முயற்சிகளை எடுப்பார்கள். அவர்கள் அடிக்கடி மிகப்பெரிய காரியங்களை எதிர்பார்த்து உண்மைக்கு புறம்பாக அதிகமாக அவர்களுக்காக மற்றவர்கள் வேலை செய்ய விரும்புவார்கள். அவர்களுடைய எதிர்பார்ப்பிற்கு ஏற்றபடி அந்த ஜனங்கள் வாழாவிட்டால் கோபமும் படுவார்கள். காரியங்கள் முந்தின நாளில் சரியாக செய்யப்படவில்லையென்றால் அவர்கள் சந்தோஷமாக இருக்க மாட்டார்கள். மேலும் இப்படிபட்ட ஜனங்கள் தலைகீழாக முயற்சிப்பார்கள். வெற்றிக்கு குறுக்கு வழியை நாடுவார்கள். எனவே அவர்கள் திட்டமிடுகிற நேரத்தை தவிர்த்துவிட்டு மற்றும் பெரும்திறமை பெறுவதற்கான போதுமான நேரத்தை கொடுப்பதில்லை. அடிக்கடி பேரச்சமே அவர்களுடைய சக்தியின் காரணியாய் இருக்கிறது. இதன் விளைவாக, இந்த ஜனங்கள் நீண்ட நேரத்திற்கு கவனம் செலுத்த முடியாது. அதாவது அவர்களுடைய சிந்தை தீடிரென்று ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு பாயும் தன்மையுடையது.

இவ்விதமான நடத்தையின் கிரையம் மிகப்பெரியது. அவர்கள் பயனற்றவர்கள் மட்டுமல்லாமல் மிகப்பெரிய அளவிலான மனபாரத்தையும் உணர்ச்சி கொந்தளிப்பையும் சுமக்கிறவர்களாக இருக்கிறவர்கள். இவைகள் ஊக்கமிழக்கச் செய்தல், படபடப்பு, கோபம், சரீர சுகவீனம் (இருதய நோய், புற்று நோய்), மதுபானத்திற்கு அடிமையாகுதல், அளவிற்கு அதிகமாக புகைபிடித்தல், போதை வஸ்துக்களை சார்ந்திருத்தல், மனநிலை பாதிப்பு மற்றும் சில வேளைகளில் தற்கொலை செய்தலை ஊக்கப்படுத்தும். தங்களுடைய சொந்த வாழ்க்கையையே கட்டுப்பாடற்றதாக உணர்வார்கள். தலைக்கு மேல் வெள்ளம் செல்வதாக உணர்வார்கள். சுற்றி நடக்கிறவைகளால் கட்டுப்படுத்தப்பட்டு நடத்தப்படுவதாக உணர்வார்கள். இது ஒரு பயமுறுத்தும் நிலையாகும்.

அழுத்தத்திற்கு பதிலளிக்கும் விதமாக தங்களுடைய வேலை பளுவையும், வேகத்தையும் அதிகப்படுத்துகிறதான ஜனங்கள் அடிக்கடி வளைந்துக் கொடுப்பார்கள். அதாவது அதிகமாக செய்வதற்கு முயற்சித்து வேகமாகவும், விரைவாகவும் அவர்கள் வேலை செய்வார்கள். ஆனால் அவர்கள் குறைவாகவே சாதிப்பார்கள். மற்றும் குறைவாக சாதிப்பதால் கடினமாக உணர்ந்து இப்பொழுது செய்கின்றவற்றை விட அதிகமாக உழைக்க வேண்டுமென்று உணர்வார்கள். இந்த விதமான ஜனங்கள் வெற்றியை சந்தித்தாலும் எல்லாமே அவர்களுடைய தவறான நடக்கையை உற்சாகப்படுத்துவதாகவும், வலுபடுத்துவதாகவும் தோன்றும். அதாவது அவர்கள் அதிக வேலையை எடுப்பதும் அதை விரைவாக செய்வதும் தான். எந்த ஒரு காரியத்தை நிறைவேற்றி முடிப்பதற்கும், வெற்றி சிறப்பதற்கும் ஒரே வழி என்று நம்புவார்கள். ஆகவே அவர்கள் சுற்றி சுற்றி வரும் வழியில் இருக்க விரும்பி அதிலே சிக்குண்டு, அது முடிவில்லாத பழக்கமாகி பயனற்றதாகி, விளைவு ஆபத்தில் முடியும்.

(2) உண்மை நிலையை எதிர் கொள்ள மறுப்பவர்கள் (தீக்கோழி)

இந்த ஜனங்கள் அறியாமையினால் அழுத்தத்திலிருந்து மெதுவாக கீழே இறங்கவோ அல்லது ஓடவோ செய்கிறார்கள். அழுத்தத்திற்கு இந்த விதமான செயல்பாடுகளின் விளைவு தூண்டுதலின்மை, கவனயின்மை, கவனக்குறைவான ஜனங்களாய் தாங்கள் செய்யும் வேலையை முடிப்பதை விட தங்கள் மேல் அதிக கரிசனையுள்ளவர்களாய் இருப்பார்கள். இந்த ஜனங்கள் அழுத்தம் மறைந்து போக விரும்புவார்கள். ஆகவே தங்களுடைய தலையை மண்ணுக்குள் புதைக்கவோ அல்லது

அழுத்தம் இருக்கின்றதை ஏற்கவோ மறுப்பார்கள். அல்லது அழுத்தத்திற்கு ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி பின்னாக திரும்பி ஓடிவிடுவார்கள் அது அவசரத் தேவையாக செய்துமுடிக்க வேண்டியதாக இருந்தாலும் சரி. ஆயினும் இந்த ஜனங்கள் முதல் குழுவினரைப் போல் உயர் இரத்த அழுத்தம் உடையவர்களாக இருக்கமாட்டார்கள். இவர்கள் கிளர்ச்சியில்லாத, ஊக்கமிழந்த வாழ்க்கை வாழ்கின்றவர்களாக இருப்பார்கள். இவர்கள் பொதுவாக உயர்ந்த சாதனையாளர்கள் அல்ல, காரணம் இவர்கள் ஆர்வமுட்டுதல் இல்லாதவர்கள், அவசியமான முயற்சிகளை எடுத்து தவிர்க்க முடியாத சவால்களை மேற்கொள்ளக்கூடிய ஆற்றல் இல்லாதவர்கள். இவர்களுடைய சோம்பேறித்தனம், என்ன கிரையத்தினாலாகிலும் பாதுகாப்பாயிருப்பது என்ற நடக்கையினால் இவர்கள் பாதுகாப்பாயிருப்பார்கள். ஆனால் வருத்தத்திற்குரியவர்கள். இவர்கள் எப்பொழுது விருப்பமில்லாமல் அழுத்தத்தை எடுக்கிறார்களோ, அப்பொழுது அரைகுறை மனதோடு செய்வார்கள், ஆகவே தரம்குறைந்த செயல்பாடுகளை வெளிப்படுத்துவார்கள். இது அந்த நபருடைய சூழ்நிலையை உறுதியாக்கி, அடுத்த முறை உறுதியிழக்கச் செய்து எளிதாக விட்டுவிடுபவர்களாக மாற்றும்.

இப்படிப்பட்ட நடக்கையின் மிகப்பெரிய விளைவு என்னவென்றால் இந்த ஜனங்களின் வாழ்வு எங்கும் செல்லாதது போல் உணர்வார்கள். இவர்கள் அடிக்கடி சலிப்படைந்து தங்களுடைய வேலையில் குறைந்த அளவே விருப்பமுடையவர்களாக அல்லது விருப்பமில்லாதவர்களாக இருப்பார்கள். இந்த ஜனங்கள் பொதுவாக தாங்கள் செய்கிற காரியங்களில் மிகக் குறைந்த அளவே தகுதியுடையவர்களாக இருப்பார்கள். ஆனால் தங்களுடைய தகுதி எல்கையை மீறிச் செல்லவோ, அல்லது புதிய எல்கையில் கால் வைக்கவோ விரும்ப மாட்டார்கள். புதிய எல்கை என்றால் இதற்கு முன் அவர்கள் செய்திராத காரியங்களை செய்வது அல்லது இதற்கு முன் அவர்கள் செய்திராத காரியங்களை செய்வது அல்லது இதற்கு முன் இருந்த அளவை மீறிச் செல்வதாகும். புதிய முயற்சியின் எல்கைக்குள் கால்வைப்பது இவர்கள் பார்வைக்கு மிக ஆபத்தானதாய் பார்ப்பார்கள். முக்கியமான காரணம் என்னவென்றால் தோல்வியடைந்து விடுவோம் என்ற பயம் தான். எனவே இந்த ஜனங்களுக்கு வாழ்க்கை என்பது வெளிப்படையானதும், வழக்கமானதும் ஆகும். இவர்கள் செய்யும் காரியத்தில் மிக எளிதாக விருப்பத்தை இழந்து விடுவார்கள். மற்றவர்களோடு துள்ளு நடைபோடுவதற்கு ஆயத்தமாகி எல்லோரையும் சந்தோஷமாய் வைப்பதற்கு போதுமான காரியத்தை செய்வார்கள். இந்த ஜனங்கள் அடிக்கடி மனச்சோர்வு அடிப்படையிலான நோய்களுக்கு ஆளாவதற்கான சாத்தியக்கூரின் காரணம் என்னவென்றால் அவர்களுடைய வெறுப்படைதல், மனச்சோர்வு, நிறைவேற்ற முடியாமை, ஏமாற்றமடைதல், வருத்தமடைதலாகும்.

(3) தகுதியான கொள்கை

இந்தக் குழுவினர் அழுத்தத்திற்கு தகுதியான வழியில் மறுமொழியளிக்கிறார்கள். அதாவது அவர்களின் உயரமான அளவில் செயல்படுவதற்கு தாங்கள் ஆர்வமுட்டப்படுவதற்கு அனுமதி அளிப்பார்கள். அதின் மூலமாய் தேவையான வேலைகளை செய்து முடிப்பார்கள். இதைக் குறித்து முந்தின அதிகாரங்களில் நாம் பார்த்திருக்கிறோம். எனவே இந்த விதமாக அழுத்தத்திற்கு மறுமொழி கொடுப்பதைக் குறித்து இங்கே நாம் விரிவாக படிக்க மாட்டோம். இந்த ஜனங்களைக் குறித்து சொல்ல வேண்டுமானால் தங்களுடைய சூழ்நிலை தங்கள் மேல் அதிகாரம் செலுத்தவோ அல்லது தங்களை கட்டுப்படுத்தவோ அனுமதிக்க மாட்டார்கள். இவர்கள் அழுத்தத்தை எடுப்பார்கள். ஆனால் அது தங்களுக்குள்ளாக அழுத்தத்தை உறிஞ்சிக் கொண்டு, அதன் விளைவாய் துன்பப் படுவதற்கு பதிலாக அதை எப்படி வடிகால் உண்டாக்க வேண்டுமென்பதை அறிவார்கள். அவர்கள் தங்களுடைய வேலையில் அர்ப்பணித்தவர்களாக இருப்பார்கள். தங்களுடைய வேலையைச் செய்வதற்கு தேவையான ஆபத்துகளை நம்பிக்கையோடு எடுப்பார்கள். அவைகள் உண்மைக்கு புறம்பானதாய் இருக்காது. எனவே அவர்கள் செய்யும் காரியங்களில் முழ்கி விடுவார்கள். அடிப்படையாக தங்களையும், தங்களுடைய சூழ்நிலையையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பார்கள். தங்களுடைய வேலையை மிக பயனுள்ள விதத்தில் செய்வதற்கு தேவையான திறமைகளை உடையவர்களாக இருப்பார்கள் (அல்லது அதை உடையவர்களாக இருப்பதற்கு தேவைப்படும் பயிற்சியில் இருப்பார்கள்) உண்மையிலே இதுதான் தகுதியான சூழ்நிலை. சில நேரங்களில் உயர்பயிற்சி உடையவர்களாக இருப்பது சாத்தியமற்றதாக இருக்கலாம். ஆனால் நாம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். மற்ற நேரங்களில் நாம் எடுக்கிறதான காரியங்கள் நம்முடைய ஆழத்தின் அளவுக்கு வெளியே சென்று விட்டதாக உணருவோம். ஆனால் கிறிஸ்தவர்களாகிய நமக்கு நம்முடைய பெலவீனங்களில் தேவன் நம்மை தகுதிப்படுத்துகிறார் என்று அறிவோம்.

நிச்சயமாக, நம்முடைய வாழ்க்கை முழுவதுமாக நம்முடைய வழியில் வரும் வெவ்வேறு விதமான பணிகளையும் சவால்களையும் நாம் எல்லோரும் வித்தியாசமான முறையில் எதிர் கொள்கிறோம். இந்த மூன்று விளக்கங்களும், அழுத்தத்தை நாம் எவ்விதமாக எதிர் கொள்கிறோம் என்பதை ஒவ்வொருவரும் அறிய உதவுகிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் எல்லோரும் நம்முடைய ஆக்கப்பூர்வமான தன்மையை அதிகப்படுத்தி, தேவனுக்காக சிறந்த சாத்தியமான விளைவுகளை சாதிப்பதற்கு இலக்கு உடையவர்களாக இருக்க வேண்டும்.

திறமை, தேவன் தந்த வரங்கள் மற்றும் நடக்கைக்கு இடையே உள்ள நடுநிலமை

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய சிறப்பான செயல்பாடுகளை செய்வது என்பது திறமை, தேவன் தந்த வரம் மற்றும் நடக்கையின் கூட்டு இணைப்பாகும். திறமை என்பது ஒன்றை செய்வதற்கு கொண்டிருக்கும் அறிவு மற்றும் தகுதியென்று விளக்கலாம். விதியின் பிரகாரம் எந்த செய்கையும் நாம் வெற்றிகரமாக செய்வதற்கு முன்பதாக இது தேவைப்படுகிறது. அவருடைய சித்தத்திற்கு நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணிக்கும் வரைக்கும், இந்த வாழ்க்கைக்கும், தெய்வீகத்திற்கும் தேவையான எல்லாவற்றையும் தருவதாக தேவனும் வாக்குபண்ணியிருக்கிறார். (2பேதுரு 1:3). நாம் கிறிஸ்தவர்களாக வெற்றிகரமாக அவருக்கு சேவை செய்ய வேண்டுமானால், தேவனுடைய வரத்தை அறிவது அவசியம். எப்படியாயினும் தெளிவாக இந்த இரண்டு காரியங்களும் மிக முக்கியமானவையாகும். நடக்கை என்பது உண்மையிலே வெற்றிகரமாக இருப்பவர்களிடத்தில் இருந்து தகுதியானவர்களை வேறுபடுத்திக் காட்டுகிறது. திறமையும், தேவனுடைய வரமும் அநேகரால் பெற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனால் சில கிறிஸ்தவர்கள் மாத்திரம் தான் தேவனுக்காக உண்மையாக வெற்றி சிறக்கிறவர்களாக இருக்கிறார்கள். நம்முடைய வாழ்க்கையில் தேவன் வைக்கும் வித்தியாசமான அழைப்பின் நிமித்தமாக வேறுபடுகிறது. அதாவது சிலர் பெரிய காரியங்களுக்கு அழைக்கப்பட்டு அதிகமான காரியங்களை சாதிக்கிறார்கள். சிலர் அழைக்கபடுவது காரியங்கள் எளிமையாக நடைபெற்று செல்வதற்காகும். எப்படியாயினும் அநேக கிறிஸ்தவர்கள் தேவனுக்காக அதிகமான காரியங்களை செய்வதற்கு திறமையுடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் தங்களுடைய செயல்களை ஒருமுகப்படுத்த தவறுகின்றார்கள். எனவே அவர்கள் பகுதியாக மாத்திரம் வெற்றியுடையவர்களாக இருக்கிறார்கள். பொதுவாக வித்தியாசத்தை உண்டாக்குவது நடத்தை தான்.

நடக்கை என்பது ஒரு குறிப்பிட்ட வழியில் நாம் செயல்படுவதற்கு நம்மை ஆர்வமுட்டும் அல்லது தூண்டுகின்ற சிந்தனை, மனோபாவம் அல்லது பார்க்கும் விதமாகும். நமது நடக்கையை ஒரு சிலர் தான் பயனுள்ள விதத்தில் கட்டுப்படுத்தவோ அல்லது கடிவாளம் போடவோ செய்கிறார்கள். எப்படி சிறப்பான முறையில் நமது திறமைகளை மற்றும் தேவன் தந்த வரங்களையும் உபயோகிக்கிறோம் என்று நமது நடக்கை தீர்மானிக்கிறது. நாம் எப்படி அறிப்பூர்வமாக அறிந்தவற்றை உபயோகிக்கிறோம் அல்லது வெளிப்படுத்துகிறோம் என்பதையும் தீர்மானிக்கிறது. எந்த சூழ்நிலையைக் குறித்தான நம்முடைய பார்வையை நமது நடக்கை வசீகரிக்கிறது. அதாவது அது நாம் எப்படி பார்க்கப்போகிறோம் என்பதை தீர்மானிக்கிறது. மற்றும் அந்த சூழ்நிலையில் நாம் எப்படி சிறப்பாக செயல்படப்போகிறோம் என்றும் தீர்மானிக்கிறது.

நமது நடக்கை பிரச்சனையால் நமது வாழ்வில் மிகப்பெரிய அளவில் அழிவை அறுப்பது மிக சுலபமானது. ஏனென்றால் அது நம்மை ஒரு சூழ்நிலையில் மாத்திரம் தவறாக செயல்பட வைக்காது, நாம் சந்திக்கின்ற எல்லா சூழ்நிலைகளிலும் தவறாக செயல்பட வைத்து விடும். உதாரணமாக, தோல்வியின் எதிர்பார்ப்பு ஒரு பொதுவான நடக்கைப் பிரச்சனையாகும். காரணம் பொதுவாக நம்முடைய கடந்தகால தோல்வி நம்மைக் குறித்து தவறான உணர்வை தருகிறது. இதே நடக்கை நாம் செய்யும் மற்ற காரியங்களில் எடுத்துச் செல்லப்பட்டு, அது அங்கேயும் நாம் தோல்வியடைவதற்கு காரணமாகி விடும். இப்படிப்பட்ட சுழற்சியில் பிடிக்கபட்டு, நாம் தொடர்ச்சியாக மோசமாக செயல்படக் காரணமாகிறது. கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட மோசமான சுழற்சியில் அகப்பட்டுக் கொள்கிறார்கள் (இதில் அவர்கள் மோசமான நிலையிலிருந்து படுமோசமான நிலைக்கு செல்கிறார்கள்). அவர்கள் தேவனுக்காக பயனுள்ளதாக மற்றும் வெற்றி சிறக்க வேண்டுமானால் இதை முறிப்பது அவசியமாகும். இதைச் செய்வதற்கு அவர்களுக்கு தேவனிடமிருந்தும், மற்ற ஜனங்களிடமிருந்தும் உதவி தேவைப்படுகிறது. நேர்மறையாக சிந்திப்பது மட்டும் பதிலாய் மாறாது. அந்த பிரச்சனைக்கு காரணமான வேரைக்குறித்து காரியங்கள் செயல்படுவது அவசியமாகும், அதாவது அவர்கள் நடக்கை பிரச்சனையை சீர்ப்படுத்துவது அவசியம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நல்லவற்றிலிருந்து சிறப்பானவற்றிக்கு செல்லுவது அவசியம். நாம் செய்கின்ற எந்த காரியத்திலும் வெற்றிப்பெற வேண்டுமானால், தேவன் நம்மை பார்ப்பது போல் பார்க்க வேண்டும். அதினால் நாம் ஒரு நல்ல சுய ரூபத்தை கொண்டிருப்போம். எந்த சூழ்நிலையிலும் உண்மையான நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கு நாம் போதுமான திறமையும், தகுதியுமுடையவர்களாக இருந்தால் (தேவனிலும், நம்முடைய வரங்களிலும்); அந்த நேரத்தில் அது தேவனுடைய சித்தம் என்று அறிந்து, நாம் செய்கின்ற காரியத்தில் நம்மை அர்ப்பணித்திருந்தோமானால்; மற்றும் அந்த சூழ்நிலையை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தோமானால் (தேவனில்); நாம் செய்கின்ற எல்லாவற்றிலும் தொடர்ந்து உயர்வாக ஆர்வமுட்டபடுவோம், வெற்றி பெறுவோம். வெற்றி சிறப்பது நமது நல்ல நடக்கையையும், சுபாவத்தையும் நாம் தொடர்வதற்கு நம்மை பலப்படுத்தும்.

தேவனுடைய சேவையில் நாம் சரியான நடத்தையை கடைபிடிப்பதற்கு நம்மை தகுதிபடுத்தும் சில உபயோகமான கருத்துகள்

- ⊡ நம்முடைய விளைவை உறுதிசெய்து அதில் சில பாடங்களை படிப்பது நமக்கு அவசியம். நம்மிடையே நாம் அநேக கேள்விகளை கேட்கக் கூடும். இதற்கு பதில் அளிப்பதின் மூலமாக நம்முடைய வாழ்வில் சந்திக்கிற அடுத்த சூழ்நிலையில் அதை பயன்படுத்தினால், நம்மை தேவனுடைய சேவையில் நல்ல நிலையிலிருந்து மேன்மையான நிலைக்கு உயர்த்தும். நம்மிடையே நாம் கேட்கும் சில கேள்விகள்:
  - → இந்த பணிக்கு எனது திறமை போதுமானதுதானா?
  - → எனது செயல்திறனை எப்படி விருத்தி செய்யலாம்?
  - → மேன்மையாக செய்வதற்கு எந்த காரியம் என்னை தடுக்கிறது?
  - → அந்த பணியை மீண்டும் கொடுத்திருந்தால் நான் என்ன செய்திருக்க வேண்டும்?
  - → அந்த சூழ்நிலையில் தேவனை கொண்டு வந்தேனா?
  - → என் வேலையை செய்யும்போது தேவன் என்னோடு இருக்கிறார் என்று அறிந்திருக்கிறேனா?
  - → சூழ்நிலையை எவ்வளவு சரியாக புரிந்துள்ளேன்?
  - → என்னைக் குறித்தும், என்னுடைய திறமையைக் குறித்தும் நான் என்ன நினைக்கிறேன்?

- ⊡ வாழ்க்கையைக் குறித்த நமது நடத்தை, நாம் எப்படி வாழ்க்கையில் இருப்போம் என்பதை தீர்மானிக்கும். நாம் கிறிஸ்தவர்கள் என்று ஒப்புக்கொண்டு, தேவன் நம்மேல் அன்பு கூர்ந்ததையும், நம்மை தெரிந்துக் கொண்டதையும் அறிய வேண்டும். நம்முடைய இருதயத்தில் என்ன விதமான சிந்தையை கொண்டுள்ளோம் என்று அவர் அறிவார். (எபிரெயர் 4:12-13). நாம் நமது சரீரத்திலும், உணர்ச்சியிலும், அறிவிலும் எவ்வாறு இருக்கிறோம் என்று அறிந்திருக்கிறார். ஒருவரும் செய்ய முடியாத சில காரியங்களை நாம் அவருக்காக செய்யத்தக்கதாக, அவர் தனிச்சிறப்பான வழியில் நம்மை தகுதிப்படுத்தியிருக்கிறார். நாம் எவ்வாறு இருக்கிறோமோ, அவ்வாறே தேவன் நம்மை பயன்படுத்த முடியும். ஆனால் நாம் அவருடைய சேவையில் முன்னேறி, வளர்ந்து, அவருக்குள் முதிர்ச்சியடைந்து, அவருடைய சேவையில் இன்னும் அதிகமாய் நம்மை பயன்படுத்த விரும்புகிறார். தவறான நடத்தை விருப்பங்களினால் கறைபடிந்த நம்முடைய பழையக் கூட்டை விட்டு விடவேண்டும். நம்முடைய சிந்தனையில் புதிய நடத்தையுள்ளவர்களாக தேவன் நம்மை உருவாக்க விட்டுக்கொடுக்க வேண்டும். கிறிஸ்துவில் நம்முடைய புதிய கூட்டை தரிந்துக் கொள்ள வேண்டும். அது தேவன் விரும்புகிற உண்மையிலும், நீதியிலும் மற்றும் பரிசுத்தத்திலும் உருவாக்கப்பட்டதாக இருக்க வேண்டும். (எபேசியர் 4:22-24).

- ⊡ நாம் யாரைப் போல் இருக்க விரும்புகிறோமோ, அதற்கேற்றார் போல் சிந்தித்து, பேசி செயல்படவேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுவைப் போல் சிந்தித்து, பேசி செயல்படவேண்டும். (பிலிப்பியர் 2:5-11: 1பேதுரு 4:1,2).

- ⊡ மற்றவர்களிடத்தில் நாம் காட்டும் நடத்தை தான் அவர்கள் நம்மிடத்தில் காட்டும் நடத்தையை தீர்மானிக்கும். உதா. நாம் ஒருவரை தேவைப்பட்டவராக, முக்கியமானவராக, பாராட்டிற்குரியவராக நினைத்தால், அதே நடத்தையை அவர்கள் நம்மிடத்தில் காண்பிப்பார்கள். பிறர் நமக்கு என்ன செய்ய நினைக்கின்றோமோ, அதையே பிறர்க்கு நாம் செய்ய வேண்டும். முடிகின்ற எல்லா விதத்திலும் எல்லோரையும் மதிப்புடையவராகவும், பெருந்தன்மையுள்ளவராகவும், மரியாதைக்குரியவராகவும் கருத வேண்டும். உங்களுடைய ஆரோக்கியத்தைக் குறித்தும் அல்லது தனிப்பட்ட பிரச்சனைகளைக் குறித்தும ப பேசுவது நல்ல யோசனையல்ல (நல்லவைகளாக இருக்குமானால் தவிர) (அநேகமாக அவை நமக்கு உதவி செய்யாது: திட்டமாக மற்ற ஜனங்களுக்கு உதவி செய்யாது).

- ⊡ பணியின் ஆரம்பத்தில் உள்ள நமது நடத்தை, பணியில் நம்முடைய செயல்பாட்டையும், பணியின் முடிவையும் பாதிக்கும்.

- ⊡ எல்லா இடங்களிலும் புதிய யோசனைகளை பார்த்து, சிறந்தவற்றை கண்டுபிடித்து புதிய காரியங்களை உருவாக்குகிறவராக இருக்க வேண்டும்.

- ⊡ நம்முடைய தரிசனங்களையும், விருப்பங்களையும், இலக்கையும் பகிர்ந்துக் கொள்ள வெட்கப்படக்கூடாது.

- ⊡ நாம் உண்மையிலே தேவ சித்தத்தை செய்ய விரும்பும்போது, அது நடைபெறுவதற்கு நம்மை அர்ப்பணிக்கும் போது, நம்முடைய நடத்தை சரியாக இருக்கும்.

- ⊡ நல்லொழுக்கமும், தைரியமுமான நடத்தையை நாம் பிரதிபலிக்க வேண்டும். நாம் நேர்மறையான சிந்தனையுடையவராக இருக்க வேண்டும். உண்மையுள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எவைகளோ, அன்புள்ளவைகள் எவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள். (பிலிப்பியர் 4: 8).

- ⊡ தீயப் பழக்கவழக்கங்களை நம்மைவிட்டு துரத்தவேண்டும். பயத்தை போக்க முயற்சிக்க வேண்டும். தேவையான திறமைகளை கற்றுக்கொள்ள வேண்டும். அப்போது தான் இவை நாம் தேவனுக்கு திறமையாக செயல்படுவதை தடைசெய்ய முடியாது.

அர்ப்பணிப்பும், நம்முடைய இருதயத்தை சிறைப்படுத்தும் காரியங்களும்

நம்முடைய எண்ணங்கள், மனப்பான்மை, நோக்கம் மற்றும் தீர்மானங்கள் யாவற்றிற்கும் நம்முடைய இருதயம் நாற்றங்கால் இருக்கிறது. நம்முடைய இருதயத்தை அடிமைப்படுத்தும் காரியங்கள் நம்முடைய எண்ணங்கள், உணர்ச்சிகளில் அதிகாரம் செலுத்தும், நம்முடைய சித்தத்தின் தீர்மானத்தில் ஆதிக்கம் செலுத்தும் (நீதிமொழிகள் 27:9; 4:23; லூக்கா 6:43-45). நம்முடைய இருதயத்தை சில காரியங்களில் எவ்வளவு அதிகம் அடிமைப்படுகிறதோ, அதின் மேல் அவ்வளவு அதிகம் ஆவல் கொள்கிறோம்; நாம் எதின் மேல் அதிக ஆவல் கொள்கிறோமோ அதற்கு நம்முடைய அர்ப்பணிப்பு அவ்வளவு அதிகம் இருக்கும்; நம்முடைய அர்ப்பணிப்பு எதின் மேல் அதிகமாக இருக்கின்றதோ அதன்மேல் ஆர்வமுட்டுதலும், அதை அடைய வேண்டும் என்ற விருப்பமும் இருக்கும். அடிமைப்படுத்தப்பட்ட இருதயம் மற்றும் அர்ப்பணிப்பும், ஆர்வமுட்டுதலை உண்டாக்கி பெரிய தடைகளையும் மேற்கொள்ள முடிகிறது. தொடர்ந்து நிலை நிற்க, இதற்காக மிக பெரிய விலைக்கிரயத்தை நாம் செலுத்த வேண்டியது வந்தாலும். உண்மையிலே, எதற்கு அதிகமாக அர்ப்பணிக்கிறோமோ, அப்போது கஷ்டம் குறைந்தது போல காணப்படும். எதுவும் அதிக உபத்திரவமாக தெரியாது, எல்லாம் செய்து முடிக்கக்கூடியதாக தெரியும். தடைகளை ஒரு இடையூறுராகக் கருதி அவைகளை மேற்கொள்ள வேண்டும், தோல்விகள் கற்றுக்கொள்ளுவதற்கான தருணமாக கருதப்படவேண்டும்.(அதாவது எப்படி செய்யகூடாது, அடுத்த தடவை எவ்வாறு சிறந்ததாக செய்வது). ஒரு அடிமைப்படுத்தப்பட்ட இருதயம் தோல்வியை ஒத்துக்கொள்ளாது, ஒருபோதும் பின்வாங்கி விட்டுவிடாது. அப்போஸ்தலனாகியப் பவுலைப் போல இலக்கை நோக்கி பந்தயப் பொருளை பெற்றுக்கொள்ளத்தக்கதாய் தொடர்ந்து ஓடச் செய்யும் (பிலிப்பியர் 3:12-14; கொலோசெயர் 3:23,24).

கிறிஸ்தவர்களாகிய நாம், தேவனும் அவருடைய வேலையும், நம்முடைய இருதயத்தை அடிமைப்படுத்த விட்டு கொடுக்க வேண்டும். அப்போது தான் அவரையும், அவருடைய சித்தத்தை செய்து முடிப்பதை நாம் விரும்புவோம், எல்லாவற்றை விட அதுவே நம்முடைய விருப்பமாய் இருக்கும் (1கொரிந்தியர் 4:5; 2தெசலோனிக்கியர் 3:5; நீதிமொழிகள் 3:5,6; சங்கீதம் 119:1-3) இது சாத்தியமாக, நாம் தேவனை சந்திக்க வேண்டும், அவருடைய விருப்பங்களை அறிய வேண்டும். அப்பொழுது, நம்முடைய இருதயம் அவருக்கு இசைவாய் துடிக்க ஆரம்பிக்கும். நாமும் அவரைப் போல மாற ஆரம்பிப்போம். அவருடைய சித்தம் நம் சித்தமாகும். நாம் அவரை அனுமதித்தால், நம்மைக் குறித்து கனவு கண்டு, நம்முடைய இருதயத்தை சில வேலைகளினால் சிறைப்படுத்துவார். நமது வாழ்க்கைக்கு சில ஆயத்த வேலைகளை நாம் செய்யவேண்டியது வரும், ஆனால் நாம் தொடர்ந்து அவரை நோக்கினால், அவருக்காக நாம் என்ன செய்யவேண்டும் என்பதை காண்பிப்பார். தேவனால், அவருடைய சித்தத்தினால் அடிமைப்படுத்தப்பட்ட இருதயம், அர்ப்பணிப்பையும், ஆர்வமுட்டுதலையும், சக்தியையும் தரும். என்ன விலைக்கிரயமாய் இருத்தாலும், அவருடைய சித்தத்தை செய்ய நம்மை உந்தும். இது தான் வேதாகம கதாபாத்திரங்களான மோசே, தாவீது போன்றவர்களுக்கு நடந்தது, இது நமக்கும் நடக்கலாம். உள்உணர்வுப்பூரணமான பேச்சினால் அல்லது இலவசம் என்று தொங்கிக்கொண்டு இருக்கும் வெகுமதிகளினால் ஜனங்களை ஒரு சிந்தையிலிருந்து இன்னொரு சிந்தைக்கு தற்காலிகமாக நகர்த்த நம்மால் முடியும். ஆனால் கிறிஸ்தவனை உண்மையான சந்திப்போடு கூடியஅவருடைய சித்தத்தை புரிந்துகொண்டு, கீழ்ப்படிதலை காட்டிலும் எதுவும் ஆர்வமுட்ட முடியாது.

எதை நமக்குள் பங்கெடுத்து, எதை நம்முடைய வாழ்க்கையில் உட்செல்ல அனுமதிக்கிறோமோ, அது நம்முடைய இருதயத்தை சிறைப்படுத்தும். எனவே, கிறிஸ்தவர்களாகிய நாம் கவனமாயிருக்க வேண்டும். ஏனெனில் கிறிஸ்தவர்களாகிய நம்முடைய இருதயமும் திருடப்பட முடியும், நாம் நம்முடைய அரண்களை தகர்த்து, எதிரி உள்ளே வருவதற்கு அனுமதிக் கொடுத்தால். இது நடப்பதற்கு அனுமதி அளித்தால், ஆண்டவருக்காக சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். தேவனுக்கும், அவருடைய சித்தத்திற்கும், சம்பந்தமில்லாத மற்ற காரியங்களுக்கும் அர்ப்பணிக்க ஆரம்பிப்போம். ஒரு தடவை இது நடந்துவிட்டால், நம்முடைய இருதயம் தீமையான குணாசதிசயங்களில் தொடரும்படியாக உற்சாகப்படுத்தும் (ஏரேமியா 17:9; ரோமர் 1:21). கிறிஸ்தவர்களாகிய நம்முடைய இருதயத்தை அடிமைப்படுத்தும் சில தீமையான காரியங்கள்: பாவம் (எபிரெயர் 3:12); சுயநலம் (நீதிமொழிகள் 14:10); சந்தேகம் (நாளடைவில் அவிசுவாசம்); பயம் மற்றும் கவலை (உபாகமம் 20:8); மற்ற ஜனங்கள்(சங்கீதம் 69:20); சோர்வு, கலகம், மதிமயக்கம், ஏமாற்றம், கசப்பு, மனக்காயம்.

தேவனுடைய பிள்ளையாகிய நாம் நம்முடைய இருதயத்தை ஒருபோதும் அவருக்கு பூட்ட அனுமதிக்கக் கூடாது. விசேஷமாக, நாம் சோர்ந்து, உணர்ச்சிபூர்வமாக காயமடைந்து இருக்கும்போது. மன்னிப்பதற்கு, நம்முடைய கண்கள் எப்பொழுதும் அவர்மேல் நோக்கமாயிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். இது நம்முடைய இருதயம் அவருக்கு கல்லைப் போல மாறுவதற்கு தடைசெய்யும். கிறிஸ்தவர்களாகிய நாம் எப்பொழுதும் தேவனுக்கு முழுவதுமாக வசப்பட்டு இருக்கும்படியாக விரும்புகிறார். எனவே, நாம் நம்முடைய இருதயத்தை ஒருபோதும் தேவனுக்கு பூட்ட அல்லது மரத்துப்போக அனுமதிக்க கூடாது. அது, அவர் நம்மை சிறைபடுத்துவதை தடைசெய்து அவருக்காக நாம் செய்யவேண்டும் என்று அவர் நினைக்கிற காரியங்களை தடைசெய்யும் (1சாமுவேல் 16:7). நம்முடைய இருதயம் கடினப்படுமானால், நாம் தேவனிடத்தில் சரியாக இல்லை என்று அறிய வேண்டும். நாம் அவரிடம் சென்று அதை அறிவித்து, நம்முடைய வாழ்க்கையை புதுப்பிப்பதற்கு அவருடைய கரத்தில் விட்டுவிட வேண்டும். அவர் நம்மில் சுத்தமான இருதயத்தை சிருஷ்டித்து, அது முழுவதுமாக திறந்த நிலையில், தேவனுக்கு வசப்பட்டு உபயோகிக்கத்தக்கதாய் மாறிவிடும். (சங்கீதம் 139:23,24; எசேக்கியேல் 18:31-32; சங்கீதம் 51:10-12).

தேவனால் சிறைபிடிக்கப்பட்ட இருதய நிலையை பராமரிக்க அவருடைய சமாதானம் நம்முடைய இருதயத்தை பாதுகாக்க, ஆள அனுமதிக்க வேண்டும். (பிலிப்பியர் 4:7; கொலோசெயர் 3:15); ஒவ்வொரு நாளும் தேவனுடைய பிரசன்னத்திலும், அவருடைய வார்த்தையிலும் நேரத்தை செலவிட வேண்டும் (1யோவான் 3:19-21; எபிரெயர் 4:12); பரலோகத்திலே பொக்கிஷத்தை சேர்க்க வேண்டும் (மத்தேயு 6:19-21); நன்றியறிதலுள்ள இருதயம், தாழ்மை, கிறிஸ்துவைப் போலுள்ள நடக்கை

ஆகியவற்றைப் பராமரிக்க வேண்டும். (சங்கீதம் 10:17; எபேசியர் 5:19-20); தேவனுக்கு பயப்பட வேண்டும் (உபாகமம் 5:29; நீதிமொழிகள் 28:14); நம்முடைய இருதயத்தை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, அவர் எப்பொழுதும் ஆண்டவராக ஆளுகை செய்ய இடமளிக்க வேண்டும் (மாற்கு 12:19-31); நம்மை ஒழுக்கத்திற்கு உட்படுத்துவோம், அப்போது தான் நாம் எப்பொழுதும் தேவனுடைய சித்தத்தை தெரிந்து எடுப்போம் (கலாத்தியர் 6:9; நீதிமொழிகள் 23:19).

தேவனுக்கு அடிமைப்படுத்தப்பட்ட இருதயம், தேவனுக்கும், அவருடைய சித்தத்திற்கும் உள்ள அர்ப்பணிப்பை உருவாக்கும், அது தான் கனியுள்ள, தேவனை மகிமைப்படுத்தும் வாழ்க்கை வாழ முக்கியமான திறவுகோலாகும். கிறிஸ்தவர்களாகிய நாம், எது நம்முடைய இருதயத்தை அடிமைப்படுத்த அனுமதிக்கிறோம் என்பதை தீர்மானிக்க வேண்டும். தேவன் உள்ளே செல்ல விரும்புகிற காரியத்தின் அடிப்படையில் நம்முடைய தீர்மானங்களை அமைத்து வாழ்க்கை வாழவேண்டும். அது நாம் இப்போது செய்கிற சில காரியங்களை அல்லது நமக்குள் செலுத்துகிற காரியங்களை விட்டு விட அவசியமாக்குகிறது. அது நம்முடைய நண்பர்களிடமிருந்து நம்மை தூரப்படுத்தக்கூடும். அவருக்காக முழுவதும் கொடுக்கப்பட்ட சுயநலமற்ற, நீதியுள்ள, பரிசுத்த வாழ்வு வாழ நம்மை கேட்கிறார். நாம் செய்கிற எல்லாவற்றையும் நாம் செய்யலாம், ஏனெனில் அக்காரியங்களில் தேவன் விரும்புகிற காரியமாக மாத்திரம் இருப்பதால். இதன் அர்த்தம் என்னவென்றால் அதிக மதிப்புள்ள தியாகங்களை செய்ய வைக்கும், ஆனால் தேவன் நமக்காக இயேசுவிலே செலுத்திய தியாகத்தை விட அதிக மதிப்புடையதாக அதில் ஒன்றும் ஒருபோதும் இருக்காது.

தீர்மானித்தல்

ஒருவர் இவ்வாறு கூறினார், 'என் மகனே, கடிதத்தில் ஒட்டப்படும் ஸ்டாம்பை பார். அதின் உபயோகம் கடிதம் மறுமுனையை சென்று அடையும் வரை ஒட்டிருக்கும் திறமையைப் பொருத்தது.' எந்த துறையிலும் ஜெயித்துக் கொண்டிருக்கும் ஜனங்கள் பொதுவாக சோர்ந்து போய் விட்டு விடமாட்டார்கள். தடைகள் வரும்போது, அவர்களுடைய விட்டுக்கொடுக்காத சித்தம், அந்த ஜனங்கள் உயர்வை நோக்கி நகர்ந்து, அதிக தீர்மானமாய் உள்ள உந்தும் சக்தி செல்லும் வழியை காணும்வரை விட்டு விடமாட்டார்கள். விளைவை கண்டு அதை சாதிக்கும் வரை வேலை செய்வார்கள். கிறிஸ்தவர்களுக்கு இந்த வழியில் தேவனுடைய வேலையை நோக்குவது தவறல்ல. நம்முடைய தேவனுக்காக நம்மில் அநேகர் சாதித்த காரியங்கள் மிகக்குறைவு. கிறிஸ்தவர்கள் தேவனிடத்திலிருந்து கேட்டு, அவருடைய சித்தத்தை நிறைவேற்ற தீர்மானம் எடுக்க வேண்டும். எதுவும் நம்மை நிறுத்தக் கூடாது.

ஒருவர் இவ்வாறு கூறினார், 'சிறந்த மனிதர்கள் சாதாரண மனிதர்கள் தான் ஆனால் அசாதாரண விட்டுவிடாத தன்மையை உடையவர்களாக இருப்பார்கள்'. அநேக கிறிஸ்தவர்களிடம் உள்ள பிரச்சனை என்னவென்றால் அவர்கள் எந்தக் காரியத்தையும் ஆரம்பிக்க மாட்டார்கள், அல்லது கஷ்டத்தின் அடையாளத்தை கண்டவுடன் விட்டுவிடுகிறார்கள். இது தான் நம்முடைய நடத்தையாயிருந்தால் தேவனுக்காக நாம் எதையும் சாதிக்க முடியாது. நாம் அவருடைய பிரதிநிதியாக அவருடைய வேலையை இந்த பூமியில் செய்ய நம்மை தெரிந்தெடுத்து இருக்கிறார். அவர் நாம் என்ன செய்ய வேண்டுமென்று திட்டம் வைத்திருக்கிறாரோ, அதற்கு நம்மை முழுவதுமாக அர்ப்பணித்து, அந்த வேலையை முடிகின்றதை காண்கின்ற வரை விட்டு விடாமலிருக்க தீர்மானிக்க வேண்டும் (நாம் எல்லாவற்றையும் செய்து முடிக்கும் வரை), அதற்காக நாம் எவ்வளவு விலைக்கிரையம் செலுத்த வேண்டியது வந்தாலும். உண்மையிலே, நம்முடைய வாழ்வை கொடுக்க வேண்டும் (1கொரிந்தியர் 9:24-27; 1தீமோத்தேயு 4:16). நாம் சரியான காரியத்திற்கு அர்ப்பணிக்கும் போது, அந்தக் காரியம் மிக பெரிய கஷ்டங்களை சந்திக்க, பற்றாக்குறைகளை மேற்கொள்க, பணம், நேரம், முயற்சியின் வடிவில் அதிக கிரையம் செலுத்த வேண்டியது அவசியம் ஆகலாம். ஆனால் அது அதிக மதிப்புள்ளது. நமது அர்ப்பணிப்பு இல்லாமல் எங்கேயும், எதையும் சாதிக்க இயலாது. நமது அர்ப்பணிப்பு, வேலை முழுமையாக நிறைவேறுகின்ற வரை செயல்பட, தொடர்ந்து செல்ல வேண்டும்.

இயேசு சொன்னார், ''கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல'' (லூக்கா 9:62)

நம்மிலும், தேவனிலும் உள்ள நம்பிக்கை

நம்முடைய வெற்றியின் இரகசியம் என்னவென்றால், தேவனுடன் நாம் கொண்டிருக்கும் உறவு தான்: நமது தலைவரோ, சம்பளமோ, பதவியோ, மற்ற எதுவுமில்லை. உண்மையாக கனி மற்றும் பலன் நிறைந்தவர்களாய் காணப்பட, நம்மிலும் தேவன் நம் மூலம் என்ன செய்கிறார் என்பதிலும் நம்பிக்கை வேண்டும். தேவன் நம்மை எந்த வேலைக்காக அழைத்தாரே அந்த வேலையை நம்மால் செய்ய முடியும் என்ற நம்பிக்கை வேண்டும். அந்த வேலையில் நம்மை தேவன் பார்ப்பது போல நாமும் பார்க்க வேண்டும். தேவன் நம்மிடம் அவருக்காக செய்ய சொன்ன வேலைக்கு தகுந்தாற்போல நம்மை தகுதி படுத்துவதாக வாக்களித்துள்ளார். நாம் தோல்வியடையும்போதோ, அல்லது மற்ற ஜனங்கள் செய்ய வேண்டியதை செய்யாதிருக்கும்போதோ நமது நம்பிக்கை அசையக்கூடாது. நாம் நம்மையும் நமது சூழ்நிலையையும் தேவன் பார்க்கிற விதமாய் பார்க்க வேண்டும், அது மோசமாய் இருத்தாலும். பிறகு நாம் அமர்ந்திருந்து, தேவனுக்காக சிறந்ததை செய்ய வேண்டும். அவருக்காக வேலை செய்ய நம்மை முழுவதுமாக அர்ப்பணித்து, இதை தான் தேவன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார் என்று அறிய வேண்டும். இந்த நடத்தை நம்மில் இருக்கும் போது புதிய காரியத்தை செய்ய முயற்சிப்போம். பொருந்தமான வேளையில், தேவைப்பட்டால் எப்பொழுதும் செய்கிற வழியை மாற்றிக் கொள்வோம். தேவனிலும், நம்மிலும் உள்ள நம்பிக்கை(எப்பொழுது நாம் அவரது சித்தம் செய்கிறோமோ) பெரிய விடுதலையை கொடுத்து, நம்முடைய மனஎழுச்சிக்கு அசுர உந்தும்சக்தியை கொடுத்து அவருக்காக சேவை செய்கிறோம்.

முழுவதுமாக மனித நம்பிக்கையில் நாம் வேலை செய்வோமானால், நம்முடைய செயல்கள் எல்லாம் ஒரு வரைமுறைக்குட்பட்டதாக இருக்கும். கிறிஸ்தவர்களாகிய நாம், தேவனுக்குள் நமக்கிருக்கும் ஸ்தானத்திலிருந்து மற்றும் தேவன் தெய்வீக பலனை நமது மூலம் தருவார் என்ற அறிவின் அடிப்படையில் நம்பிக்கையோடு வேலை செய்ய வேண்டும். நாம் நம்மை அவர் உபயோகிக்கும்படி செய்தால் இது சாத்தியம். இந்த காரியங்களின் அடிப்படையில் வரும் நம்பிக்கை பெருமை, முரட்டாட்டம், பயம் போன்றவற்றில் நாம் விழுவதற்கு காரணமாய் அமையாமல், விசுவாசத்தில் அடியெடுத்து வைக்க, எல்லா மகிமையையும் அவருக்கு செலுத்த, நம் மூலம் அவர் செய்யும் வேலைக்கும் கனத்தை அவருக்கு செலுத்த செய்கிறது (2 கொரிந்தியர் 3:4-6; 4:7; 1 கொரிந்தியர் 4:1-5). நம்முடைய நிர்பந்தத்தை நம்முடைய தோளின் மீது தனியாக சுமக்கவில்லை, தேவன் நம்மோடு இருக்கிறார். நம்முடைய திறமைகள் நாம் செய்ய நினைக்கிற எல்லாவற்றையும் செய்ய போதுமானதாக இல்லாவிட்டாலும் அவருடையவைகள் இருக்கின்றது. இதுவே கிறிஸ்தவர்களின் நம்பிக்கையும், பாதுகாப்பின் மூலஆதாரமாகவும் இருக்க வேண்டும்.

அநேக கிறிஸ்தவர்களுக்கு கூட பயம் நம்பிக்கைக்கு பெரிய எதிரி. அது கலக்கத்திற்குள் நடத்தும்; நம்முடைய செயல்களில் வெறுப்புணர்ச்சிக்கு காரணமாகும்; எல்லாம் சேர்ந்து நம் வேலை செய்வதையே நிறுத்தி விடும். கிறிஸ்தவர்கள் பயத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு இருக்கிறார்கள் (2தீமோத்தேயு 1:7; யோவான் 8:32,36; எபிரெயர் 2:15) ஆனால் அநேகர் அதோடு வாழ்கின்றார்கள். அதினால் தேவனுடைய சேவையில் திறமையற்றவர்களாக மாற்றி விடும்.

ஒவ்வொரு மனிதனும் பயத்தையும் கவலையையும் அறியும் திறனோடு உருவாக்கப்பட்டுள்ளான். நாம் வழக்கமாக பயம் ஏற்படுவதை தடுக்க முடியாது. ஆனால் தேவனில் அதை எப்படி கையாளுவது என்று கற்றுக்கொள்ளலாம். நாம் பயத்தை கையாள வேண்டும், ஏனெனில் அது நமது நோக்கப்பார்வையை இயல்புக்கு மாறாக தெரியசெய்து சூழ்நிலையில் அதிக ஆபத்தானதாய் தோன்றச்செய்து இயல்பாக இருக்கிறதைவிட மிகக்கடினமாக்கும். அதன்பின் சூழ்நிலையைக் கையாளும் நமது திறமையை குறைவாக்கி விடும். நாம் பயந்த நிலைமையில் இருக்கும்போது நம்முடைய கற்பனை கட்டுக்கடங்காததாய் இருக்கும். என்ன நடக்கும்?. இயற்கையாக நிகழமுடியாத காரியங்கள் எல்லாம் நிகழக்கூடியதாய் தோன்றும். நாமும் நம்முடைய பயத்தை அதிகரிக்கும் அல்லது உறுதிபடுத்தும் காரியங்களை மாத்திரம் பார்க்க முயலுவோம். அது சூழ்நிலையை எல்லா நேரங்களைவிட மிக மோசமானதாக்கும். மேலும் பயமானது தோல்வியின் விளைவுகளை, அச்சமூட்டும், தீடிரென ஏற்படும் அழிவின் தோற்றமாக மிக பெரிதாக காட்டும். பயத்தின் மற்றொறு குழப்புகிற காரியம் என்னவென்றால் பயம் ஏன் ஏற்பட்டதென்ற சரியான காரணத்தை அடையாளப்படுத்த முடியாது.

பயத்தின் இரண்டு மிக பொதுவான எதிர்ச்செயல் என்னவென்றால் நம்மை செயலற்றவர்களாக ஆக்கிவிடும். அல்லது முயற்சி செய்து நம்முடைய வழியில் போராடும்படியாகச் செய்யும். அதாவது நம்மை அதிகமாக எதிர்செயல்புரிய வைத்துவிடும். கிறிஸ்தவர்களுக்கு பயத்தை கையாளும் சிறந்த முறை எதுவென்றால் என்ன நடக்கிறது என்பதை அங்கிகரித்துக் கொள்ள வேண்டும். பின்பு பயத்தை நிறுத்தி எதிர்கொள்ள வேண்டும். இதைச் செய்வதற்கு நாம் அமைதியடைவது அவசியம். பின்பு அந்தச் சூழ்நிலையை தேவனிடத்தில் எடுத்துச் செல்லவேண்டும். அநேக கிறிஸ்தவர்கள் பயத்தை புதைக்க முயற்சி செய்கிறார்கள். அவைகள் பாதகமான சமயங்களில் திரும்ப வந்து அவர்களை வாதிக்கின்றதை காண்கிறார்கள். சில எச்சரிக்கை அடையாளங்கள் நாம் பயப்படும்போது தோன்றுவதைக் காணலாம். நம்மில் நாமே எதிர்மறையாக பேசுதல் (உதாரணமாக, உண்மையாக நான் இதைச் செய்ய முடியாது அல்லது நான் போகிறேன் இந்த முறை கீழே வரட்டும் மற்றும் அவர்கள் என்னிடத்தில் மிகக் கோபமாய் இருக்கப் போகிறார்கள்) அல்லது விட்டு விட்டு மூச்சுவிடுதல், உலர்ந்த வாய், நடுங்கும் முழங்கால்கள், வியர்க்கும் உள்ளங்கைகள், பேரச்சம் அதிகரிப்பதை உணருதல் போன்ற சரீர செயல்பாடுகள் மற்றும் பல. இப்படிபட்ட பய எச்சரிக்கை அடையாளங்களை நாம் கண்டுகொள்ளும்போது நாம் நிறுத்தி சரீரத்தை தளர்ந்த நிலைக்கு கொண்டு வர சில ஆழ்ந்த சுவாசங்களை எடுக்க வேண்டும். அமைதியடைந்து, முடியுமானால் நாம் செய்துகொண்டிருப்பதை நிறுத்தி நம்முடைய பயத்திற்கும், நமக்குமுள்ள இடைவெளி தூரத்தை அதிகப்படுத்துவதற்கான தருணத்தை கொடுக்க வேண்டும். அது வெற்றிடத்தை உருவாக்கி நாம் இருக்கும் சூழ்நிலையை நம்மிடத்தில் பயம் உண்டாக காரணம் என்பதை அறிய முயற்சிக்க வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் மேலும் இந்த வெற்றிடத்தில் இந்த சூழ்நிலையைக்குள்ளாக தேவனைக் கொண்டு வந்து என்ன உண்மையாக நடக்கிறது. ஏன் அவ்விதமாக நாம் செயல்படுகிறோம் என்று அவரிடத்தில் கேட்கலாம். இவைகள் என்ன அங்கே இருக்கிறது, உண்மையான சூழ்நிலை என்ன என்பதைக் காண உதவுகிறது (நாம் மீண்டும் சிறுகுன்றுக்கும், மலைக்கும் உள்ள வித்தியாசத்தை காணமுடியும்). பொதுவாக மிகச் சரியான அமைதி சூழ்நிலையை புரிந்துக் கொண்டு அவைகளை தேவன் பார்ப்பது போல் பார்த்து நம்முடைய பயத்தை குறைத்து, நம்முடைய கட்டுபாட்டிற்குள் நாம் திரும்பி வர உதவி செய்யும் (2இராஜா 6: 8-23).

பயம் ஏற்படுகிற சூழ்நிலையில் நாம் செய்ய வேண்டிய உதவிகரமான சில காரியங்கள் உண்டு. முதலாவது நாம் செய்யவேண்டிய அனைத்துக் காரியங்களையும் ஒரு பலகையில் அல்லது ஒரு காகிதத்தில் பட்டியிலிட வேண்டும். இவைகளைச் செய்ய தேவனிடத்தில் உதவி கேட்க வேண்டும். நம்மில் அநேகர் இந்த பட்டியலை மனதில் மாத்திரம் வைப்பதின் மூலம் நாம் செய்யவேண்டிய வேலையின் அளவை திரித்துவிடுகிறோம். சரீரப்பிரகாரமாக எழுதிய இந்தப் பட்டியலை பார்க்கும்போது உண்மையிலே என்ன செய்யப்பட வேண்டும் என்பதை நாம் தெளிவாக காண உதவி செய்கிறது. மற்றும் சிறந்த விதத்தில் மதிப்பீடு செய்ய உதவுகிறது. இரண்டாவது, நாம் எதிர்கொண்டு இருக்கிற சூழ்நிலையையும், உண்மையான கடினத்துவத்தையும் அளவீடு செய்ய முயற்சிக்க வேண்டும். எப்பொழுது நமது மனது ஒன்றை மதிப்பீடு செய்யும்போது (உதாரணமாக பத்துக்கு எத்தனை மதிப்பெண் என்று கொடுத்தல்) நமது மனது பிரித்து ஆராயும் விதத்தில் மாறும், நடுநிலைமை அடையும். இது பயம் இயல்புக்கு மாறாக நம்மை பார்க்க வைத்த தோற்றத்தின் காரணத்தை உடைத்துவிடும். மூன்றாவதாக நாம் நம்மை மதிப்பீடு செய்யலாம். தேவனிடத்தில் கேட்ட வண்ணமாகவே நான் காரியங்களை செய்கின்றேனா என்று கேட்கலாம். அப்படியென்றால் நாம் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் அந்த சூழ்நிலையில் வெற்றி சிறக்க தேவையானவற்றைக் கொடுத்து தகுதியாக்குவார். அப்படியில்லையென்றால், சிறந்த வழியில் அந்த சூழ்நிலையில் இருந்து வெளியே வருவது அவசியம். உதாரணமாக மலை என்பது உண்மையாக மலைதானா? இதைப் போல் ஒத்த சூழ்நிலையில் இதற்கு முன்பாக இருந்தேனா என்பதை கேட்பது அவசியம் (ஒரு வேளை அதில் பகுதி மாத்திரம்) மற்றும் நாம் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். இதைப் போல் ஒத்த சூழ்நிலையில் நாம் சமாளித்து இருந்தால் அது நம்மை உற்சாகப்படுத்தும். ஒரு வேளை சமாளிக்காமல் இருந்தால் புத்திகூர்மையாய் செயல்படுவது அவசியம். அல்லது தைரியத்திற்காகவும், தீர்மானம் எடுக்கவும் தேவனைத் தேடி அந்த நேரத்தில் வெற்றி சிறக்க வேண்டும். நாம் எப்பொழுதும் தேவனிடத்தில் செல்ல வேண்டும். தேவன் சொல்லாமல் நம்முடைய ஆழத்திற்கு இறங்காதபடி உறுதி செய்துகொள்ள வேண்டும். மேலும் அவரிடத்தில் இருந்து நாம் சரியான பாதையில் தான் இருக்கிறோமா என்பதை கண்டுபிடித்துக் கொள்ள வேண்டும். அல்லது

நாம் செய்கிற காரியத்தை சரி செய்ய வேண்டியது அவசியம்தானா என்பதை ஆராய வேண்டும். கடைசியாக, நாம் தோல்வியடைந்தால் என்ன மோசமான நிலைமை ஏற்படும் என்பதை கற்பனை செய்ய வேண்டும். நம்முடைய சூழ்நிலையில் தோல்வியின் மோசமான சாத்தியக்கூறான விளைவுகளை நாம் உண்மையாக தீர்மானித்தால் இதைக் கொண்டு வாழ முடியுமா? முடியாதா? என்று நாம் தீர்மானம் எடுக்க முடியும். அப்படி முடியும் என்றால் நாம் முன்னேறிச் செல்லலாம். நடைபெறும் மோசமான விளைவுகளை மதிப்பீடு செய்வதும் நமக்கு உதவி செய்யும். ஏனென்றால் நமது மனது அதை மிகைப்படுத்தி உண்மையாக சம்பவித்தால் எவ்வாறு இருக்கும் என்பதையும் பார்க்க உதவும். சேதத்தை மதிப்பீடு செய்யாத காரியம் நாம் நன்றாக வேலை செய்வதில் இருந்து விலக்கி வைக்கும்.

தேவனுடைய உதவியினால் முதலாவது மதிப்பீடு செய்யாமல் எந்த ஒரு வேலையையும் ஆரம்பிக்கக்கூடாது. ஒரு முறை தேவனுடைய நோக்கப் பார்வையில் இருந்து காரியங்களை உண்மையாக நாம் பார்த்துவிட்டால் நாம் நம்முடைய சூழ்நிலையில், அடுத்த நிகழ்வு என்னவாக இருக்கும் என்பதை தீர்மானிக்கலாம். தவறான தைரியத்தோடு ஒரு வேலையை செய்வது என்பது நேர்மறையான அறிக்கையின் அடிப்படையில் தெளிவற்ற நம்பிக்கை, நம்முடைய திறமையை அளவிற்கு அதிகமாக மதிப்பீடுதல் அல்லது சூழ்நிலையின் கடினத்தை குறைத்து மதிப்பீடுதல் அழிவில் சென்று முடியலாம். தேவன் கருத்தோடு நம்மை நாமே நியாயத்தீர்க்கச் சொல்லுகிறார் (ரோமர் 12:3). தவறாக தீர்ப்புச் செய்தல், தவறான பகுத்தறிதல் நாம் ஆயத்தமில்லாத சூழ்நிலைக்குள் செல்வதற்கு காரணமாகி விடும். அல்லது கவனக்குறைவாக, நாம் இருக்க வேண்டிய கவனத்தோடு இல்லாமல் இருக்க காரணமாகி விடும். வேலையை வெற்றிகரமாக செய்து முடிப்பதற்கு அதிக உதவி அல்லது மேற்பயிற்சி அவசியமா என்பதை தேவனோடு இருந்து மதிப்பீடு செய்வது அவசியம். அந்த வேலைக்கு தகுதியான பயிற்சியை உடையவர்களாக இருக்கின்றோமா என்ற அறிவு அந்த வேலையை நம்பிக்கையின் எண்ணத்தோடு செய்வதற்கு மிகப்பெரிய உதவியாய் இருக்கும். வேலையின் ஆரம்பத்தில் சரியான நடத்தை உடையவர்களாக இருக்கிறோமா என்ற நம்முடைய கண்டுபிடிப்பு வெற்றி பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை வெகுவாக அதிகரிக்கும்.

தலைவர்களாகிய நம்மை ஆர்வமூட்ட உதவும் சிலக் கருத்துகள்

- ✓ நாம் செய்யும் காரியம் அங்கிகரிக்கப்பட்டு பாராட்டப்பட வேண்டும். இது நாம் செய்யும் காரியத்தை தொடர்ந்து செய்வதற்கு நம் எல்லோருக்கும் உற்சாகம் அளித்து, நம்மை உறுதி செய்துக் கொள்ள காரணமாகும். அதைச் செய்வதற்கு அதிகமான முயற்சிகளை நாம் எடுக்கும்போது நாம் எல்லோருக்கும் சரியான காரியத்தை செய்கிறோம் என்று ஒருவர் சொல்ல வேண்டும். மற்ற ஜனங்களால் நாம் ஏற்றுக் கொள்ளப்படுதல் மேலும் அவசியம். தேவனில் நம்முடைய சொந்த மதிப்பை ஏற்றுக் கொண்டு.˙. மதிக்கப்பட்டு இருக்கும்போது நாம் ஆர்வமுட்டப் பட்டவர்களாய் நிலைத்திருப்போம்.

- ✓ தலைமைத்துவ பணிக்கு தேவன் நம்மை அழைத்திருக்கிறார் என்று அறிந்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது தேவன் நம்மோடு இருக்கிறார் என்று நாம் அறிந்துக் கொள்வோம். அவருடைய தலைவர்களில் ஒருவராக தேவனுக்கு சேவை செய்ய ஆர்வமூட்டப்பட்டவர்களாய் பராமரிக்கப்பட தேவையான பாதுகாப்பையும், தேவ சமாதானத்தையும் தரும்.

- ✓ நம்மால் நடத்தப்படுகிறவர்களுக்கு மாதிரியாக இருக்க முயற்சிக்க வேண்டும். இது சரியான காரியத்தை நாம் செய்வதற்கு ஆர்வமூட்டும். நீதி மற்றும் பரிசுத்த வாழ்க்கை தொடர்ந்து வாழ ஆர்வமூட்டும். இவைகள் நாம் நடத்துகிறவர்களும் அதையே செய்ய உற்சாகப்படுத்தும்.

- ✓ நம்முடைய கட்டுப்பாட்டுக்கு வெளியே காணப்படும் காரியங்கள் மேல் கவனம் வைக்கவோ அந்தக் காரியங்களைக் குறித்து கவலைப் படவோ கூடாது. அது நம்முடைய நேரத்தையும், சக்தியையும், ஆர்வத்தையும் இழக்கச் செய்துவிடும். உதாரணமாக நாம் மற்ற நபருடைய தேவைகளையோ, நடத்தையையோ அல்லது பதிலளித்தலையோ எந்த பெரிய அளவிலாவது நாம் கட்டுப்படுத்த முடியாது. அவர்களுடைய செய்கைகளின் மேல் நாம் ஒருவேளை விளைவை உண்டாக்கலாம் (விசேஷமாக ஜெபத்தின் மூலமாக). ஆனால் விளைவை உண்டாக்குவது என்பது கட்டுப்படுத்துதல் என்பதிலிருந்து வெகுதூரமாகும். முடிவாக நாம் நம்மையும் நாம் செய்யும் காரியத்தையும் குறித்து மாத்திரமே தேவனுக்கு முன்பாக நாம் பொறுப்புள்ளவர்கள்.

- ✓ கொடுத்தல் அல்லது மற்ற ஜனங்களோடு பகிர்ந்து கொள்ளுதல். நாம் கொடுப்பதைக் காட்டிலும் அதிகமாக தேவன் நம்முடைய வாழ்க்கையில் திரும்ப ஊற்றுகிறார். ஆகவே நாம் மீண்டும் கொடுக்க வேண்டும் (லூக்கா 6:38; 2கொரி 9:6). கொடுப்பது என்பதில் பொருளாதாரத்தை விட அதிகமான காரியங்கள் அடங்கியிருக்கிறது. அன்பு, சந்தோஷம், உற்சாகம், நேரம், நட்பு, நடைமுறை, உதவி ஆகிய பகுதிகளை உள்ளடக்கி உள்ளது. நாம் விரும்புவதை எல்லாம் கனவு காணலாம், விருப்பப்படலாம். ஆனால் முடிவிலே நாம் விதைத்ததை அறுப்போம். உன்னுடைய வாழ்க்கையில் பார்க்கிறதை நாம் விரும்பாவிட்டால் நீ விதைக்கின்றவற்றை சரிபார்க்க வேண்டும்.

- ✓ நாம் மற்ற ஜனங்களோடு இணைந்து பொதுவான இலக்குகளையும், நோக்கங்களையும் அடைவதற்கு இணைந்து வேலை செய்கிறோம் என்று அறிய வேண்டும். இது நம்முடைய ஆர்வமுட்டுதலுக்கு மிகப்பெரிய உற்சாகத்தை தரும். இது நம்மை ஈடுபடுகின்றவர், முக்கியமானவர், தேவையானவர், நோக்கமுடையவர் என்று உணர உதவி செய்யும். மற்ற ஜனங்களும் பகிர்ந்துக் கொள்ளும்போது சாதனை என்பது பெரிதாக இருக்கும்.

- ✓ நமது வாழ்விற்கும், வாழ்க்கைக்கும் நாம் தேவனுக்கு முன்பாக கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று அறிய வேண்டும். இது நம்மை தேவனுக்காக கனி கொடுக்கிறவர்களாக, உற்பத்திமிக்கவர்களாக இருக்க உற்சாகப்படுத்தும். நம்முடைய வாழ்க்கையில் பகிர்ந்து கொள்கின்ற சரியான குழுவினரான நண்பர்களோடு கணக்கு ஒப்புவிக்கிறவர்களாக இருக்க நமக்கு உதவி செய்யும். அதாவது வெற்றியையும் அதே நேரத்தில் தோல்வியையும்.

- ✓ நாம் செய்ய வேண்டும் என்று தெரிந்தவற்றை ஒருபோதும் அணைத்துப் போடக்கூடாது. வெற்றிகரமான உயர்ந்த ஆர்வமுள்ள ஜனங்கள் கடந்துப் போன நேரத்தை திரும்ப ஒருபோதும் பிடிக்க முடியாது என்று அறிவார்கள். எனவே அந்த விலை மதிக்க முடியாத ஆதாரத்தை சிறந்த வழியில் உபயோகிப்பார்கள்.

- ✓ வாழ்க்கையில் சரியானவற்றை தெரிந்தெடுங்கள். தேவன் நம்மைக் கொண்டு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறார் என்று அறிந்துக் கொள்வது அவசியம். பின்பு அவருடைய உதவி மூலம் நாம் உண்மையாக அடையக்கூடிய இலக்குகளை நிர்ணயித்து அதை நோக்கி வேலையைத் தொடர வேண்டும். இலக்குகளை நிர்மாணிக்கும் செயல்பாடு, எதிர்பார்ப்பையும், உந்துதலையும் கொண்டு வந்து வெகுவாக ஆர்வமூட்டுவதாய் இருக்கும். அடையக்கூடிய இலக்குகளை நிர்மாணித்தல் நம்மால் முடியாது என்ற நிலைமையை உடைத்தெறிந்து நம்மால் கையாள முடியும் என்ற நிலைக்கு வரும். அது நம்மால் முடியும் என்ற நிலையை உருவாக்கி, நம்முடைய உருவாக்கும் தன்மையை வெளிப்படுத்தும் (சோம்பேறியாய் வாழ்க்கையிலே நின்று இருப்பதற்கு பதிலாக). இலக்குகளை அடைவது என்பதும் ஆர்வமூட்டக்கூடியதாய் இருக்கிறது. ஏனெனில் மதிப்பீடு செய்யக்கூடிய வழியில் வெற்றி சிறந்து இருக்கிறோம். மற்றும் நாம் கனி நிறைந்தவர்கள் என்பதைக் காட்டும். நாம் வித்தியாசத்தை உண்டாக்க முடியும், மற்றும் நம்முடைய வாழ்க்கை மதிக்கப்படக்கூடிய ஒன்றாக மாறும்.

- ✓ நாம் சிறப்புடையவர்களாய் இருக்கின்ற பகுதியில் கூட நம்மை முன்னேற்றுவிக்க வேண்டும். சிலவற்றை நாம் சிறப்பாக செய்வதை காணும்போது நம்முடைய ஆர்வத்தை உறுதிபடுத்தி முன்னேற உதவும். ஏற்கனவே நிகழ்த்தப்பட்ட சாதனைகளை முறியடிக்க முயற்சி செய்யும் ஆர்வமும், வெற்றி சிறந்தவர்களாய் இருக்க வேண்டுமென்ற ஆர்வமும் சிறந்தது. இது தடைகளை, துரதிஷ்டங்களை மேற்கொள்ள உதவும். ஒவ்வொரு கருத்தரிக்கக்கூடிய மனித முயற்சியிலும் பெரிய காரியங்களை சாதிக்கும். நம்மில் கற்பனைக்கு எல்கையை வைக்கும்போது அது நமது செயல்பாட்டிற்கு எல்கையிடும். ஏனென்றால் நீண்ட ஒட்டத்தில் அது உண்மையான எல்கையாக மாறிவிடும். இது ஏனென்றால் நமது மனதானது நம்முடைய சரீரத்தையும், நம்முடைய சித்தத்தையும் இதை செய்ய முடியாது என்று ஒப்புக்கொள்ளச் செய்துவிடும். கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நம்மை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும்

செய்ய நமக்குப் பெலனுண்டு (பிலிப்பியர் 4:13). தேவனுக்கு சித்தமானால் அது நம்மூலமாய் கூட செயல்படுத்தப்பட முடியும். ஜெபத்திலே அவரிடத்திலே சென்று எப்படி செய்வது என்று கண்டிபிடிப்பது அவசியம்.

- ✓ நமது செயல்களின் விளைவுகளை கருத்தில் கொள்ள வேண்டும். நம்முடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்திற்கான நடைமுறை இலக்குகளை அமைத்து திட்டமிடும் போது மாத்திரமே இதை உண்மையாக செய்ய முடியும். நாம் ஒருமுறை இதைச் செய்துவிட்டால் முடிவுகள் எப்படியிருக்கும் என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ளலாம். நாம் சாதிப்பதற்கு தவறினாலோ, நாம் மனஅழுத்தம், பொருளாதார நஷ்டம், வெறுப்படைதல், ஆர்வமிழத்தல் மற்றும் பலவற்றை உடையவர்களாக இருப்போமா? அதை உடையவர்களாக இருப்பதற்கு அது மதிப்புடையதுதானா?

- ✓ நம் உடலும் மனமும் உச்ச நிலையில் செயல்படும்போது முக்கியமான பணிகளை அந்த நேரத்தில் திட்டம் பண்ண வேண்டும். இந்த நேரங்கள் எது என்று தெரியாதபோது ஒன்று இரண்டு மாதங்கள் தினசரி ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்க வேண்டும். ஒவ்வொரு நாள் முடிவிலும் மிக உற்பத்திகரமான வேலையை எப்பொழுது நீங்கள் செய்தீர்கள் என்று மதிப்பிட வேண்டும். அது காலை வேளையிலா அல்லது கிளர்ச்சியூட்டும் சம்பாஷணைக்குப் பின்பாகவா, சிறு தூக்கத்திற்கு பின்பாகவா, மற்றும் பல. இந்த தனிப்பட்ட மதிப்பீடு செய்தல் ஒழுங்காக நடைபெற வேண்டும். இதை செய்தால் வாழ்க்கை முழுவதும் சுயஆர்வமூட்டப்பட்டவர்களாய் இருப்பதற்கு இது உதவும்.

உருவத்திற்குள்ளாக வருதல்

"சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது" (1தீமோத்தேயு 4:8). இந்த வசனம் அடிக்கடி சரீர உடற்பயிற்சியை தவிர்ப்பதற்கு சாக்குபோக்காக உபயோகப்படுத்தப் படுகிறது. ஆனால் பவுல் சொல்லும் உண்மை என்னவென்றால் சரீர உடல்பயிற்சியினால் சில பிரயோஜனங்கள் உண்டு. நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவியானவருடைய ஆலயமாகையால் அதை பராமரிப்பதின் அவசியத்தை வேதாகமம் அடிக்கடி குறிப்பிடுகிறது (1கொரிந்தியர் 3:16; 6:15-20; 2கொரிந்தியர் 6:16-7:1). நாம் தேவனுக்காக செய்யும் சேவையை நம்முடைய சரீர தகுதியின்மை தடைசெய்யுமானால் நாம் அதைக் குறித்து ஏதாகிலும் செய்தாக வேண்டும்.

தனிப்பட்ட பயிற்சி கேள்விகள்

1. ஆர்வமுள்ள விருப்பமுள்ள நபராக உங்களை நீங்கள் வகைப்படுத்த முடியுமா? எந்தப் பகுதியிலே நீங்கள் ஆர்வம் அடைந்தீருக்கிறீர்கள்? ஏன் அந்தப் பகுதிகள்? இந்தப் பகுதிகள் எல்லாம் தேவன் நீங்கள் ஆர்வம் அடையும்படியாக விரும்புகிற பகுதிதானா? தேவனுடைய சேவையில் நீங்கள் ஆர்வம் அடைய என்ன செய்வீர்கள்?

2. வெற்றியுள்ள நபருக்கும், தோல்வியடைந்த நபருக்கும் உள்ள வித்தியாசம் அல்லது சராசரி சற்று ஏறக்குறைவாகாவா? நீங்கள் எந்த வகையான நபர் உங்களை மேம்படுத்த நீங்கள் ஏதாவது செய்ய முடியுமா?

3. நீங்கள் செய்கிற காரியத்தில் தேவனுடைய அனுமதியை அனுபவிக்கிறீர்களா? எப்பொழுதும் தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு தடுமாறுகின்றீர்களா? உங்களுடைய அழைப்பு கொண்டுவரும் பணிகளை பற்றிக்கொள்ள பெருமகிழ்ச்சியடைகின்றீர்களா? உங்களிலும் தேவனிலும் உறுதியும் நம்பிக்கையும் உடையவர்களாக இருக்கின்றீர்களா? அது உங்களை கடும்முயற்சி இல்லாமல் சேவை செய்ய தகுதிப்படுத்துகின்றதா?

4. நீங்கள் அல்லது உங்களால் நடத்தபடுகின்றவர்கள் அர்ப்பணிப்பு பிரச்சனையை அனுபவிக்கின்றார்களா? உங்களுடைய இருதயத்தையும், அவர்களுடையதையும் எது சிறைப்படுத்தியுள்ளது? அது தேவன் விரும்புகிற காரியம்தானா? அர்ப்பணிப்பை எவ்வாறு

நீங்கள் உற்சாகப்படுத்துகின்றீர்கள்? அர்ப்பணிப்பு கட்டாயப்படுத்த முடியாது என்பதை நினைவு கூறுங்கள்.

5. ஒரு பல்பை கண்டுபிடிக்க திரு. தாமஸ் எடிசன் 700 முறை முயற்சிகளுக்கு பின் வெற்றியடைந்தார். எத்தனை முயற்சிகளுக்குப் பின் நீங்கள் முயற்சி செய்வதை விட்டு விடுகின்றீர்கள்? முதல் முறை வெற்றியடையவில்லையென்றால் மீண்டும் மீண்டும் முயற்சி செய்கிறாயா? அது உன்னுடைய வாழ்க்கையில் உண்மையா?

6. உடனடியான தீர்வுகளை உடைய நம்முடைய மிகவேகமான உலகத்தின் பொறுமை என்பது பழைய முறை என்று கொள்ளலாமா? கிறிஸ்தவ தலைவர்களாகிய நீங்கள் பொறுமையாய் இருப்பீர்களா? கடந்த வருடங்களில் குறிப்பிடும்படியாக எதையாவது சாதித்தது உண்டா? அப்படியில்லையென்றால் ஏன் முடியாது? இதற்காக உங்களால் ஏதாகிலும் செய்ய முடியுமா?

7. எந்த சவாலையும் எடுக்கவில்லை என்றால் நாம் ஒருபோதும் ஒன்றையும் சாதிக்க முடியாது. நீங்கள் எப்பொழுதாவது சவாலான பணிகளை எடுத்து இருக்கின்றீர்களா? தலைவர்களாகிய நீங்கள் எவ்வளவு தூரம் வெற்றியடைந்து இருக்கின்றீர்கள்? மேலும் வெற்றியடைய முடியுமா? மேன்படுத்த நீங்கள் என்ன செய்ய முடியும்?

8. உங்களுடைய சரீர நிலைமை தேவனுக்காக செய்யும் வேலையை தடைபண்ணுகின்றதா? அல்லது உதவியாய் இருக்கின்றதா? உங்களுடைய சரீரத்தை பராமரிப்பதற்கு அதிக பணம் நேரம் தேவைப்படுகிறதா? உங்களுடைய சரீர உருவம் தேவனை மகிமைப்படுத்துகின்றதாக இருக்கின்றதா?

முன்னேறுவதற்கும், வெற்றியடைவதற்கும் தெய்வீக ஆர்வமூட்டுதல் தேவை

வேலை செய்யப்படும்போது அவர் இருப்பதுபோல ஏன் அவருடைய வேலையை செய்கிறோம் என்பதைக் குறித்தும் தேவன் கரிசனையுடையவராய் இருக்கிறார். விசுவாசிகளாகிய நாம் அவருக்காக செய்யும் சேவையில் ஆர்வமுட்டப்பட்டவர்களாயிருக்க அவர் விரும்புகிறார். ஏனெனில் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து அவருடைய வேலை செய்யப்படுவதற்கு ஆர்வமுட்டுதல் நம்மை தகுதிபடுத்துமானால், அந்த வேலை செய்து முடிக்கப்படும்வரை எது நம்மை ஊக்கப்படுத்துகிறதென்பதைக் குறித்து தேவன் அக்கறைக் கொண்டவரா? என்ற கேள்வி எழும்புகிறது. பதிலும் 'ஆம்' என்றே இருக்கிறது. இந்த படிப்பில் ஜெபத்துடன் தகுந்த இடைவெளி காலத்தில் நம்மை சோதித்துப் பார்ப்பதின் அவசியத்தைக் குறித்துப் பார்க்கப் போகிறோம். ஆகவே நாம் எது நம்மை வழி நடத்துகிறது, எதில் நாம் முன்னேறுகிறோம் என்றும் மதிப்பீடு செய்யலாம். அவருடைய வேலையை அவருடைய வேலைக்காரனாய் சுமந்து செல்வதற்கு தேவன் நமக்கு கொடுத்திருக்கின்ற ஊக்கப்படுத்துதலின் சில முக்கியமான ஆதாரங்களையும் பார்ப்போம். இறுதியாக, நாம் தேவனுக்கு சேவை செய்ய தேடுவது போல் சரியான ஜனங்கள் கொண்டு இருக்கக்கூடிய நேர்மறையான விளைவையும் பார்ப்போம்.

தகுந்த இடைவெளி காலத்தில் நம்மை சோதித்துப் பார்ப்பதின் அவசியம்

தற்பரிசோதனை வாழ்க்கை முறையாகி விடக்கூடாது. அதுவே கிறஸ்தவர்களுக்கு முடிவாகி விடக்கூடாது. இது ஏனென்றால் அடிக்கடி பயிற்சி செய்யப்படும்பொழுது ஜனங்கள் அதிகமாக தன்னாய்வு செய்கிறவர்களாக மாறிவிட காரணமாகி விடும். இது நடக்கும்பொழுது ஜனங்கள் தேவனுக்கு மேல் வைக்க வேண்டிய பார்வையை எடுத்துவிட்டு அதற்கு பதிலாக தங்களுடைய கவனத்தை அவர்களுடைய பிரச்சனையின் மேலும் கஷ்டங்களின் மேலும் வைப்பார்கள். நாம் முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேட வேண்டும். நமது வாழ்வில் தேவனையும் அவருடைய சித்தத்தையும் முதன்மையாக கொள்ள வேண்டும். தொடர்ந்து தங்களையே உற்றுநோக்கும் ஜனங்கள் சுயநலவாதிகளாகவும், சுயத்தை முக்கியத்துவப்படுத்தும் வாழ்க்கை கொண்டிருப்பார்கள். இது ஏனென்றால் தங்களுடைய அதிகமான நேரத்தை தாங்கள் யார் தாங்கள் செய்கிற காரியத்தை ஏன் செய்கிறார்கள் என்பதை கண்டுபிடிக்க அவர்கள் தியானிக்கிறபடியினால் அல்லது சுயஇரக்கத்தில் எப்பொழுதும் புரண்டு கிடப்பார்கள், மற்றும் பல. உண்மையிலே அடிக்கடி நம்மை நாமே உற்றுப் பார்க்குதல் பெரிய ஆபத்தாக முடியும். அது மிகப்பெரிய பயத்திற்குள்ளாக அடிமைத்தனத்திற்குள்ளாக செயலற்ற நிலைமைக்குள்ளாக நடத்தும். விசேஷமாக நாம் எதையும் செய்யாமல் நாம் கண்டுபிடித்தவற்றைக் குறித்தே கவலைப்பட்டுக் கொண்டு இருப்போம்.

எப்படியாயினும் ஆரோக்கியமான தற்பரிசோதனைக்கு இடமுண்டு. இது எப்பொழுதும் நாம் எப்படி இருக்க முடியும் என்ற நம்பிக்கையோடு முன்னோக்கிப் பார்க்கும் மற்றும் அதற்கும் மேலாக மாத்திரம். ஆகவே செய்யப்பட்ட எந்த தவறில் இருந்தும் இது கற்றுக் கொள்கிறது. நாம் யார் என்பதையும் நாம் செய்கின்றவற்றை எது ஆர்வப்படுத்துகிறது என்பதையும் அறிய உதவுகிறது. நாம் எதற்காக அவருக்கு சேவை செய்கிறோம் என்பதைக் குறித்து தேவன் அக்கறைக் கொள்ளுகிறார். தவறான காரியங்கள் நம்மை ஆர்வமூட்டும் போதும் அவர் நம்மேல் அக்கறை கொள்கிறார். குறித்த நேரங்களில் ஜெபத்தோடு நம்மைக் குறித்து அறிந்துக் கொள்ள விரும்புகிறார். ஆகவே, அவரோடு உள்ள நம்முடைய நடக்கை எவ்வாறு இசைந்துப் போகிறது என்று அறிந்து கொள்ளலாம். அதன் மூலமாய் நமக்குள் என்ன உண்மையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை கண்டுபிடிக்கலாம். இதற்கும் நாம் எதற்கு விரோதமாக எச்சரிக்கப்பட்டிருக்கிறோமோ என்பதற்கும் இடையேயுள்ள வித்தியாசம், தேவனுடைய கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது, நம்முடைய கட்டுப்பாட்டில் அல்ல. நம்முடைய வாழ்க்கையில் சரியில்லாத காரியங்களை சுட்டிக் காண்பிக்க அவருக்கு நேரத்தையும் இடத்தையும் மாத்திரம் அளிக்கிறோம். ஒருமுறை இதை அவர் செய்துவிட்டால், நாம் அவரிடத்தில் மன்னிப்பை கேட்டு இந்த பகுதிகளையெல்லாம் அவருடைய கையில் விட்டு விடலாம். அவருடைய தலைவர்களாகிய நாம் ஜெபநேரத்திலே சுயபரிசோதனையின் போது தேவன் நமக்கு காட்டுகிற சில காரியங்கள்:

- ❖ நம்முடைய பலம் மற்றும் பெலவீனங்கள் என்ன
- ❖ நம்மைக்குறித்து நடைபெற முடியாத எதிர்பார்ப்புகள் ஏதேனும் உண்டா?
- ❖ தேவன் நம்மை ஒருபோதும் செய்யச் சொல்லாத காரியங்கள் எதையாவது நாம் செய்கின்றோமா (இங்கே தொடர்ந்து வற்புறுத்துவதற்கு எந்த உரிமையுமில்லை).
- ❖ நமக்கு உபத்திரவப்படுத்துகிற மனோபாவம் இருக்கிறதா? அநேக சூழ்நிலைகளில் நம்மை நாமே பயமுறுத்த அது காரணமாகி விடுகிறது. (அவைகள் அங்கே இருந்தாலும், இல்லாவிட்டாலும்).
- ❖ நம்முடைய தலைமைத்துவத்தில் நாம் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறோமா? ஏனெனில் நாம் ஜனங்களுக்குப் பயப்படுகிறபடியினால் அல்லது ஏனெனில் போதுமான அளவு போட்டியிடவில்லை என்று நாம் உணர்கின்றபடியினால்.
- ❖ நமக்கு மேற்பயிற்சி தேவையா? ஏனெனில் குறிப்பிட்ட முக்கியமான பகுதியில் திறமைக் குறைந்தவர்களாக இருப்பதினால் ஆக்கப்பூர்வமான தலைவராக செயல்படுவதற்கு தேவையான யாருடையதாவதைக் குறித்து பொறாமையுள்ளவர்களாக இருக்கின்றீர்களா?
- ❖ நம்முடைய பதவியைக் குறித்து திருப்தியற்றவர்களாக இருக்கிறோமா? மற்றும் யாருடையதாவதைக் குறித்து விருப்பமுடையவராக இருக்கிறோமா?
- ❖ நம்மை மனக்காயம் படுத்தினவர்களைக் குறித்து விரோதத்தை வைத்து வைத்திருக்கிறோமா? (நாம் மறந்தும், மன்னித்தும் நம்பிக்கை கொண்டு கடந்து செல்வது அவசியம் என்பதை நாம் அறிவோம்).

ஜெபத்துடன் தற்பரிசோதனை நம்மைக் குறித்துச் செய்ய விருப்பமில்லாமல் இருக்கும்போது அது நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியை வெகுகடினமாக்கி விடும். மற்றும் நம்முடைய ஊழியத்தை ஆக்கப்பூர்வமற்றதாக மாற்றி தேங்கிய நிலையில் நிலைத்திருக்கச் செய்யும் நம்முடைய ஊழியத்தை மதிப்பிட்டு நம்முடைய இலக்குகள் முதன்மைத்துவங்கள் தேவனுக்குள் சரியாக இருக்கின்றதா என்று அறிய நமக்கு சுயவிழிப்புணர்வு அவசியமாய் இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் நமது ஆலோசகராக கொடுக்கப்பட்டிருக்கிறார். அவர் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்தி செல்வார் (யோவான் 14:26; 16:13,14). நாம் எங்கு மாற வேண்டும் என்பதைக் குறித்து அவர் நமக்கு காண்பிப்பார். நாம் மாறுவதற்கு அவர் உதவி செய்வார். அவர் நம்முடைய வாழ்வில் வருவதற்கு நாம் அவருக்கு இடம் கொடுக்க வேண்டும். தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்கு கீழ் வராமலிருப்பதற்கு நம்மை நாமே சரியான முறையில் நியாயம் தீர்த்து சுயபரிசோதனை செய்வது அவசியம் (ரோமர் 12:3, 1கொரிந்தியர் 11:27-32; 2கொரிந்தியர் 10:12,13; 13:5,6).

தங்களையும், தங்களுடைய வேலையையும் குறித்து தேவன் பார்க்கிறவண்ணமாக பார்ப்பதற்கு எல்லா கிறிஸ்தவர்களும், தங்களுடைய சிந்தனையை மாற்றியமைத்துக் கொள்வது அவசியம். நாம் நம்முடைய சிந்தனையில் கருத்துள்ளவராய் இருப்பது அவசியம். நாம் அவருக்காக அதிகமான காரியத்தை செய்யும்படியாக தேவன் நம்முடைய கொள்ளளவை பெரிதாக்குவதற்கு நாம் விருப்பமுடையவராக இருக்க வேண்டும். நாம் உண்மையோடு அவருக்காக செய்யச் சொன்ன சிறிய காரியங்களை சுமந்து செல்வோமென்றால் அவர் நமக்காக இதை செய்வேன் என்று வாக்குத்தத்தம் பண்ணி இருக்கிறார் (லூக்கா 19:11-27). இதன் அர்த்தம் என்னவென்றால் நாம் தேவனோடு சரியாகயிருந்து, சரியான காரியங்களினால் ஆர்வமூட்டப்படுகின்றோமா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். சில நேரங்களில் தேவன் அவருடைய வேலை மிகவும் வழக்கமில்லாத வழியில் எடுத்துச் செல்லப்பட அனுமதிக்கிறார் என்பது உண்மை. மற்றும் பலமுள்ள ஆர்வமூட்டுதலுக்காக ஆனால் நம்மைக் குறித்த காரியம் என்னவென்றால் நாம் கவனத்தோடு கட்ட வேண்டும். ஏனெனில் சரியான அஸ்திபாரத்தில் சரியான பொருட்களைக் கொண்டு கட்டும்போது மாத்திரமே அழியாத கீரிடத்தை நாம் பெறுவோம் (1கொரிந்தியர் 3:10-15).

காரியங்கள் மோசமாய் போகும்போது தற்பரிசோதனை செய்துக் கொள்வது கடினம். ஆனால் நம்மையும், நம்முடைய காரியங்களையும் சரியாக்குவதற்கு பிரித்து பார்ப்பது அவசியம். நாம் தோல்வியடையும் போது நம்மை ஆராய்ந்து பார்ப்பது அவசியம். ஏனெனில் நமது தோல்விகள் தீர்வாக அமையும். காரியங்கள் சரியாய் இருக்கும் போதும் நம்மை நாமே மதிப்பிடுவது அவசியம்.

ஏனெனில் ஏன் இது கிரியை செய்தது என்று கற்றுக் கொள்ள முடியும். மேலும் அடுத்த முறை இன்னும் சிறப்பாக செய்யலாம். நம்முடைய சுயமதிப்பு நம்முடைய சாதனையின் அடிப்படையிலோ மற்ற ஜனங்கள் நம்மை அங்கீகரிக்கும் முறையிலோ அல்லது நமது நட்பின் மூலமாகவோ இருக்கக் கூடாது. அவை தேவன் நம்மைக் குறித்து என்ன நினைக்கிறார் என்பதின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதை நினைவு கூறவேண்டும்.

சில தலைவர்கள் தங்களை மதிப்பிடு செய்வதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள் (நம்மில் அநேகர் சிறதளவு கருத்து திரிபு நோயாளிகளாய் இருக்கிறோம்). எனவே நாம் நம்புகிறதான ஜனங்களிடத்தில் நம்மைக் குறித்து அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அவர்களிடத்தில் கேட்பது நமக்கு உதவும். இந்தக் கேள்வியானது பொதுவாக நம்முடைய வாழ்க்கை முழுவதையும் பற்றியோ அல்லது குறிப்பிட்ட பகுதியைப் பற்றியோ கேட்கலாம். நாம் நம்மைக் குறித்து பார்ப்பதை விட மற்ற ஜனங்கள் நன்றாக பார்க்க முடியும் என்பது உண்மை. நாம் நமக்குள்ளாக பெற்றிருக்கிற எல்லா மனக் காயங்கள், பெருமைகள், பாதுகாப்பின்மைகள் ஆகியவற்றை அவர்கள் பெற்றிராதபடியினால் சிறப்பாக பார்க்க முடியும். அவைகள் நாம் நம்மைப் பார்க்கிற விதத்தை மாற்றி விடும். (இந்த காரியங்ளை சுற்றி நாம் போட்டிருந்த உள்ளான தடை நம்மை அவர்களிடமிருந்து பாதுகாக்கும். அவர்கள் உண்டாக்கின காயங்களிலிருந்து). தலைவர்களாகிய நாம் மற்றவர்களுக்கு ஆக்கப்பூர்வமாய் ஊழியம் செய்வதற்கு சில விதங்களில் நம்முடைய சுய மனச்சாட்சியில் இருந்து நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். தேவனிடத்தில் இருந்து எப்படி கேட்க வேண்டும் என்று தெரிந்தவர்கள் மற்றும் நம்பிக்கைக்கு உரிய நண்பர்கள் அல்லது நம்மை நன்றாக அறிந்துள்ள நமது மனைவி போன்றவர்கள் நாம் இதைச் செய்வதற்கு சிறந்த ஜனங்களாவர்கள். தலைவர்களும் ஒருவருக்கொருவர் இந்தப் பகுதியிலே உதவி செய்யலாம். இதை செய்வதற்கு ஒரு வழி என்னவென்றால் முதன்மையான சபை அங்கத்தினர்களை தனிமையான இடத்திற்கு அழைத்துச் சென்று (கூடுமானால் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள்) ஒருவருக்கொருவர் வாழ்க்கை மற்றும் ஊழியத்தை ஆக்கப்பூர்வமாக பார்க்க வேண்டும். போதகர், பாதிரியார் அல்லது மூத்த தலைவர் மாதிரியாக தேவையானவற்றை திறந்த நிலையிலே பகிர்ந்துக் கொள்ளும்போது காரியங்கள் நடைபெறுகின்றன.

தேவனுடைய பெரிய ஆர்வமூட்டுகின்றவைகள்

கிறிஸ்தவ தலைவர்கள் ஆர்வமிழத்தல் சாத்தியமட்டுமல்ல. அவைகள் பொதுவானவைகள். தேவனுடைய தலைவர்களாகிய நாம் தேவனால் ஆர்வமூட்டப்பட்ட ஜனங்களாய் இருக்கின்றோம். (குதூகலம் மூட்டப்பட்ட என்றால் அர்த்தம், முழுவதும் தேவனால்). நாம் அவருக்கு சேவை செய்வதற்கு ஆர்வமூட்டுதலின் ஆதாரம் சரியானதுதானா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அநேக கிறிஸ்தவ தலைவர்கள் மிகவும் உலகப் பிரகாரமாக இருக்கிறார்கள். அவர்களுடைய நடக்கையிலே ஒத்துப்போகிறவர்களாகவும் இணைந்து போகிறவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே தேவனுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற அவர்களுடைய ஆர்வமூட்டுதல் பெலவீனமாக இருக்கிறது. தேவன் அவருடைய தலைவர்களாகிய நாம், நம்மை நடத்துகிறவர்களுக்கு சரியான ஆர்வமூட்டுதல் உடையவராக இருக்க விரும்புகிறார். ஆகவே நாம் அவர்களுக்கு நல்ல மாதிரிகளாக இருப்போம். மேலும் நாம் மிகவும் கவனமாய் இருக்க வேண்டும். ஏனெனில் எதிர்மறையான சக்திகளால் நாம் ஆர்வமடைந்து விட முடியும், அவை காலப்போக்கில் நம்மை அழித்து விடும்.

தேவன் நம்முடைய நோக்கங்களைக் குறித்து கரிசனையுள்ளவராக இருக்கிறார். தேவனுடைய பொருளாதாரத்திலே முடிவு காரியங்கள் நியாயப்படுத்தாது. தேவனுடைய வார்ததையின் பிரகாரம் நம்முடைய நோக்கங்களை அவர் புரிந்துக் கொள்கிறார் (1நாளாகமம் 28:9); நம்முடைய நோக்கங்களை அவர் சீர்தூக்கிப் பார்க்கிறார் (நீதிமொழிகள் 16:2); அவர் நம்முடைய நோக்கங்களை வெளிப்படுத்துவார், நியாயந்தீர்ப்பார், சோதிப்பார் (1கொரிந்தியர்4:5: 1தெசலோனிக்கேயர் 2:4). தவறான நோக்கங்களோடு நாம் ஜெபம் பண்ணும்போது அவர் நம்முடைய ஜெபத்தை கேட்க மாட்டார் (யாக்கோபு 4:3). உண்மையாக தேவன் பெரிய கம்புடன் நம்மை கவனித்து நாம் ஒவ்வொரு முறையும் தவறும்போது, நம்மை அடிக்கிற பெரிய சகோதரன் என்ற வடிவிலே தேவன் இல்லை. அவர் நம்மை நேசிக்கிறார். நமக்கு சிறப்பானவற்றை மாத்திரம் அவர் விரும்புகிறார். ஆனால் நம்மை ஆர்வமூட்டுகிற சில காரியங்கள் நம்மை மிகவும் சேதப்படுத்தி விடும் என்று அவருக்குத் தெரியும். அவர் கொடுத்திருக்கிற கருவிகள் மூலமாய் நாம் ஆர்வமூட்டப்பட விரும்புகிறார். அது அவருக்கு மகிமையை கொண்டுவரும்.

மற்றும் நித்தியத்திற்கும் சிறப்பானதை கொண்டுவரும். தேவனுடைய மிக முக்கியமான ஆர்வமூட்டுதலின் ஆதாரங்கள் நம்மை கிறிஸ்தவ சேவையிலே ஆக்கப்பூர்வமானவர்களாக கனி நிறைந்தவர்களாக தகுதியாக்குகின்ற சில காரியங்கள் பின்வருமாறு:

ஆர்வமூட்டுதலின் முக்கியமான ஆதாரங்கள்

(i). தேவனுடைய அன்பு

தேவனுடைய அன்பு சுயநலமற்றது, தியாகமானது, நிபந்தனையற்றது. இதற்கான கிரேக்க வார்த்தை 'அகப்பே'. இந்த விதமான அன்பு எல்லாருடைய நலனையே நோக்கும், யாருக்கும் தீங்கு விளைவிக்காது. அதை இயேசு இந்த உலகத்திற்கு வந்து பாடுபட்டு, எல்லா மனுக்குலத்திற்காக மரித்தபோது சாத்தியம் என்பதை காட்டினார். இது ஆசீர்வதித்து கொடுக்க விரும்புகிறது. அது வழிநடத்துகிற யாவரையும் அவர்களுக்கு சிறப்பானதை மாத்திரம் விரும்புகிறது.

அகப்பே ஆழமான நிலையான அன்பை வெளிப்படுத்துகிறது. முற்றிலும் தகுதியற்ற நபரை பூரணமானவர்களாக மாற்ற விருப்பங்கொண்டு அவர்களிலே மரியாதைக்குரிய அன்பை கொடுப்பவர்க்கு நேராக உருவாக்கி வளரச் செய்கிறது. அதிலே பங்கெடுக்கிறவர்களிடத்தில் நடைமுறையான அன்பை வெளிப்படுத்துகிறது. மற்றவர்களுக்கு உதவி செய்து கொடுக்கின்ற வரை தேடச் செய்கிறது. எல்லையில்லாத தேவனுடைய அன்பின் ஆழம் அவருடைய குமாரனாகிய இயேசுவின் மூலமாக மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தப்பட்டது. நமக்காக தேவன் கொண்டு இருக்கும் தேவனுடைய அன்பிலே நாம் நம்பி சார்ந்துக் கொள்ளலாம். அந்த அன்பிலிருந்து நம்மை எதுவும் பிரிக்காது (ரோமர் 8:38,39). நாம் அதிலே மாறிமாறி இயங்குவோமானால் தேவன் சகல காரியங்களையும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாக செய்வார் (ரோமர் 8:28). ஒருமுறை ஒரு மனிதன் தேவனோடு தனிப்பட்ட உறவை விசுவாசத்தின் மூலம் ஏற்படுத்திக் கொண்டால் 'அகப்பே' அன்பு உருவாகி அந்த அன்பு வளர்கிறது. ஏனெனில் நமக்குள் மறுரூபமாக்கும் பரிசுத்தாவியானவருடைய வேலை நமக்குள் நடைபெறுவதால் (ரோமர் 5:5).

நம்முடைய உலக வேலை மற்றும் நமக்கு மேலாக நாம் அவரை முதலாவது நேசிக்கிறேன் என்று உண்மையாகவே சொல்லும்போது அவருடைய மேய்ச்சலின் கீழிருக்கும்படியாக தேவன் மாத்திரமே நம்மை விடுவிக்க முடியும். (யோவான் 21:15-17). வசனம் கூறுவது போல தேவன் நம்மைப் பிரியத்துடன் நேசிக்கிறார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை (யோவான் 3:16; ரோமர் 5:8; எபேசியர் 2:4,5; எபேசியர் 5:1,2). நம்முடைய கிரியைகள் மூலமாய் நாம் அவரையும் மற்ற ஜனங்களையும் நேசிக்கிறோம் என்பதை காட்ட வேண்டுமென்று நமக்கு கட்டளையிட்டு இருக்கிறார். (மத்தேயு 6:1-4; லூக்கா 10:27,28; யோவான் 13:34,35; ரோமர் 12:9,10; 13:8-10; 1கொரிந்தியர் 16:14; கலாத்தியர் 5:6,13,14; 1தெசலோனிக்கேயர் 4:9,10; 2 தெசலோனிக்கேயர் 3:5; 2 தீமோத்தேயு 2:22-26; 1பேதுரு 1:22; 4:8; 1யோவான் 3:14-18; 4:7-21). உண்மையிலே கிறிஸ்தவர்களாகிய நாம் அன்பின் வாழ்க்கை வாழ வேண்டும். விசேஷமாய் விசுவாசிகள் என்னும் சமுதாயத்திற்குள்ளாக தேவனுடைய அன்பான குடும்பம் என்ற சூழ்நிலையில் விசுவாசிகள் தேவனுடைய அன்பில் வளர்ந்து கிறிஸ்தவ முதிர்ச்சியடைய வேண்டும். (எபேசியர் 3:17,19). அன்பு உறவு முறைகளை உருவாக்கி கிறிஸ்துவின் சரீரத்திலே ஐக்கியத்தை பராமரிக்கிறது (பிலிப்பியர் 2:1-4; கொலோசெயர்2:2,3). அன்பு சுயநலத்திற்கெதிரானது. உண்மையிலே அன்பு கூறுகிறவர்கள் அவர்களுடைய அன்பு யாருக்கு நேராக இருக்கிறதோ அவர்கள் ஆசீர்வதிக்கப்படும்பொழுது அவர்கள் அன்பு நிறைவேறுகிறது. மற்றொரு விதத்தில் சுயநலம் ஒருபோதும் நிறைவேறாது. அதற்கு எப்பொழுதும் அதிகமாகவே கேட்கும்.

கிறிஸ்தவர்களாகிய நமக்கு நாம் செய்கிற எல்லா காரியத்திற்கும் ஆர்வமூட்டுகிற பிரதான மூலஆதாரமாய் அன்பு இருக்க வேண்டும் (1கொரிந்தியர்13:1-13; 2கொரிந்தியர் 5:14). பரிசுத்த ஆவியின் வரங்களை உபயோகித்து ஊழியம் செய்தல், நமக்கிருக்கிற எல்லாவற்றையும் ஏழைகளுக்கு கொடுத்தல், மலைகளை பெயர்க்கத்தக்க போதுமான விசுவாசம் கொண்டிருத்தல், மற்றும் இரத்த சாட்சிகளாய் மரித்தல் ஆகியவைகள் எல்லாம் வலிமைமிக்க கருத்துக்கள் அதை எல்லாக் கிறிஸ்தவர்களும் செய்ய விரும்புகின்றார்கள். (ஒரு குறிப்பிட்ட அளவிற்கு), ஆனால் வேத வசனத்தின்படி தேவனுடைய அன்போடு ஒப்பிடும்போது அவைகள் ஒன்றுமில்லை. உண்மையிலே இவைகள் அன்பின் உந்துதலினால் செய்யப்படாவிட்டால் இவைகள் ஒன்றுமில்லை. எனவே நாம் செய்கிற

எல்லா செய்கைகளின் பின்பாக உந்தும் சக்தியாக தேவனுடைய அன்பு இல்லாவிட்டால் இந்தக் காரியங்களின் மேல் நம்முடைய முழு வாழ்க்கையும், ஊழியமும் அமைந்தால் நாம் ஒன்றும் செய்யவில்லை. அவைகளுக்கு எந்த நித்திய மதிப்புமில்லை. கிறிஸ்தவத்திலே குணமாக்குதல், தீர்க்கதரிசனம் அல்லது சுவிசேஷ பிரபல்லியம் கூட முக்கியமான காரியமில்லை. அன்பு தான் மிக முக்கியமான கருத்தாகும். தேவனுக்காக நாம் செய்யும் எல்லா சேவையும், எல்லா பரிசுத்த ஆவியானவருடைய வரங்களும், தேவனுடைய அன்பை வெளிப்படுத்துவதற்கு மாத்திரமே. நாம் அடிக்கடி நமது கவனத்தை வரங்களில் ஒருமுகப் படுத்துகிறோம். ஆனால் அதை கொடுத்தவரில் அல்ல. (வரங்கள் ஏன் முதலிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மறந்துவிடுகிறோம். அதாவது ஜனங்களை தேவனிடத்திற்கு நடத்த அவர்களிடத்தில் தேவனுடைய அன்பை வெளிப்படுத்த) அல்லது நம்முடைய சேவையிலே கவனத்தை செலுத்துகிறோம் மற்றும் எதற்காக சேவை செய்கிறோம் என்பதை மறந்து விடுகிறோம்.

தேவனுடைய அன்பு நம்முடைய வாழ்க்கையின் நடுமையமாக இருப்பது அவசியம். அதுவே நாம் செய்கிற எல்லாக் காரியத்திலும் ஆர்வமூட்டுகின்றதாய் இருக்க வேண்டும். இது அதிகமாக நம்முடைய வாழ்க்கையில் உண்மையாகும்போது அது நாம் தேவனுக்கு செய்யும் அர்ப்பணிப்பை அதிகமாக உற்சாகப்படுத்தும். அவருக்கு நம்முடைய கீழ்படிதலை முன்னேற்றுவிக்கும். அவருக்காக நாம் வேலை செய்ய நம்மை தகுதிபடுத்தும் (யோவான் 14:21-24; 1தெசலோனிக்கேயர் 1:3; 1யோவான் 5:3). நம்முடைய சுயநலமிக்க ஆர்வமூட்டும் உந்துதல்களை உடைத்து நம்மை அதிலிருந்து விடுதலையாக்குவதற்கு தகுதிப்படுத்துகிறது. அதற்குப் பதிலாக தேவனுக்காகவும், மற்றவர்களுக்காகவும் வாழ உதவி செய்யும். கிறிஸ்தவர்கள் தங்களுடைய முழு இருதயத்தோடும், பெலத்தோடும், மனதோடும், ஆத்துமாவோடும் தேவனை நேசிப்பார்களானால் அவரை சேவிப்பதற்கும், அவருக்கு கீழ்படிவதற்கும் வேறு எந்த ஆர்வமூட்டுதலும் தேவையில்லை (மத்தேயு 22:37-39). அது அவ்வாறு இருந்தால் நாம் எல்லோரும் இலக்காக கொண்டிருக்க வேண்டிய பரிபூரணத்தை அடையும் வரைக்கும் மற்ற ஆர்வமூட்டும் ஆதாரங்களும் நமக்கு உதவிச் செய்யும்.

தேவனுடைய அன்பை பெற ஏழுவழிகள்

a). தேவனிடமிருந்து நேரடியாக அதாவது தேவன் நம்முடைய வாழ்க்கையில் கட்டுவதற்கு அனுமதிப்பது (1தெசலோனிக்கேயர் 3:12; 2பேதுரு 1:3).

b). அதிகரிக்கின்ற அளவிலே தேவனை அறிந்துக் கொள்வதின் மூலமாக நாம் இதை ஜெபித்தல், தேவனைத் தேடுதல், அவரை ஆராதித்தல் மற்றும் பலவற்றின் மூலமாக செய்கிறோம். (யோவான் 17:26; 1யோவான் 4:8). தேவன் அன்பாகவே இருக்கிறார்; தேவனுடைய பிரசன்னத்தில் நேரத்தை செலவிடுதல், அவருடைய அன்பில் நம்மை பங்கெடுக்க அனுமதிக்கிறது. எனவே நம்முடைய வாழ்க்கையில் சில காரியங்கள் கட்டப்படுகின்றன.

c). தேவனுடைய கட்டளைகளைப் புரிந்துக் கொண்டு பின்பு அதற்கு கீழ்படிதல் (யோவான் 14:21). நாம் செய்கிற எல்லாவற்றிலும் தேவனை முதன்மையாக வைக்கும்போது நம்முடைய வாழ்க்கையில் தேவன் அவருடைய அன்பை கிரியை செய்வதற்கான அமைப்பை உருவாக்கி கொடுக்கிறது. அவருக்காக ஏதாகிலும் ஒன்றை செய்யும்படியாக அவர் சொல்லும்பொழுது நாம் அவருக்கு கீழ்படியாமல் இருந்தோமானால் அந்த காரியங்களிலே நம்மையும், நம்முடைய விருப்பத்தையும் தேவனுக்கு மேலாக வைக்கிறோம். அதாவது கிரியையிலே அந்தக் காரியங்களில் நம்மை ஆண்டவராக ஆக்குகிறது. அதன்பிறகு தேவன் நம்முடைய வாழ்க்கையின் அந்தக் காரியங்களிலே அவருடைய அன்பை காட்ட முடியாமல் போய்விடுகிறது. தேவன் எங்கு அவர் தேவைப்படுகிறாரோ, எங்கு அவர் ஆண்டவராக அழைக்கப்படுகிறாரோ அங்கு மாத்திரம் செல்வார்.

d). நம்முடைய வாழ்க்கையை பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள் கொடுப்போமேயாகில் அதன்மூலமாக அவர் அவருடைய அன்பை நம்முடைய இருதயங்களில் ஊற்றி அன்பின் கனிகளை நம்மிடத்தில் உருவாக்குகிறார் (ரோமர் 5:5; கலாத்தியர் 5:22).

e). விருப்பமுள்ள மனநிலைமையோடு உண்மையாக அன்பை தரிந்துக் கொண்டு தேவன் அல்லாத எல்லாவற்றையும் ஒதுக்கி தள்ளிவிட தீர்மானம் எடுக்க வேண்டும். தேவனுடைய அன்பு நமக்கு இலவசமாக கிடைக்கிறது. அதை நாம் ஏற்றுக் கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம். அதோடு இணைந்து வேலை செய்யலாம் அல்லது அதை அறியாமல் இருக்கலாம் (கொலோசெயர் 3:12-14). 2பேதுரு 1:5-9 வரையுள்ள வசனம் விளக்குகிறது என்னவென்றால், அநேக முன்னேறுவதற்காக படிக்கல்களைக் குறித்து விளக்குகிறது. அது அன்பிலே முடிவடைகிறது. அதை தேவனுக்காக உற்பத்தியுள்ளவர்களாகவும், ஆக்கப்பூர்வமானவர்களாகவும் வளர்ச்சியடையும்படியாக நம்முடைய வாழ்க்கையில் சேர்த்துக்கொள்ளும்படியாக நாம் கேட்டுக் கொள்ளப்படுகிறோம்.

f). தூய்மையான இருதயம் நல்மனச்சாட்சி, உண்மையுள்ள விசுவாசம் உடையவர்களாக இருக்க வேண்டும். (1தீமோத்தேயு 1:3-7). இந்தப் பகுதி போதிக்கிறது என்னவென்றால் பவுலின் முடிவான இலக்கு அன்பாகும். அன்பு அர்ப்பணிப்பை வெளிப்படுத்த வேண்டுமென்று அவன் எதிர்பார்த்தான். எனவே சபையில் உள்ள ஜனங்கள் முடிவான இலக்கு மற்றும் தங்களுடைய ஆர்வமூட்டுதலின் மூலஆதாரமாக அன்பையுடையவர்களாக இருக்கும்பொழுது செய்யப்படவேண்டிய எல்லாக் காரியங்களும் செய்யப்படும். தேவனுடைய இராஜ்ஜியத்தில் அன்பே மிக முக்கியமான காரியமாகும். தேவனுடைய சபையை சபையாக இணைத்துக் கட்டும் சிமெண்டாக அன்பு உள்ளது.

g). அன்புக்கும், நற்கிரியைக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிக்க வேண்டும் (எபிரெயர் 10:24).

> "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாகப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங் கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துக்கொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்." (எபேசியர் 3:16-19).

(ii). தேவ பயம்

தேவபயம் கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் கட்டுப்படுத்தும் காரியமாக இருக்க வேண்டும். இந்த பெருமதிப்பிற்குரிய பயபக்தி அல்லது தேவபயம் அவருடைய வழியை தெரிந்துக் கொண்டு அவருடைய சித்தத்தை செய்ய வைக்கிறது. சுயமாய் நாம் தெரிந்து கொண்டு செய்வதற்கு பதிலாக (சங்கீதம் 36:1-4; ரோமர் 3:10-18; 2கொரிந்தியர் 6:14-7:1). தேவபயம் ஞானத்தின் ஆரம்பம் என்று விவரிக்கப்பட்டுள்ளது. (சங்கீதம் 111:10; நீதிமொழிகள் 1:7; 1பேதுரு 1:17), ஏனெனில் அது தேவனிடத்தில் ஆரோக்கியமாக மரியாதை கொண்டிருக்கச் செய்கிறது. தீமையான விருப்பங்களை தவிர்த்து, அதற்கு பதிலாக அன்பின் பரலோகப் பிதாவை பிரியப்படுத்தும் கீழ்படிதலுள்ள தேவபக்தியான வாழ்க்கை வாழ உதவுகிறது. மேலும் இது நம்முடைய வாழ்க்கையை சரியான நோக்கில் வாழ உதவுகிறது. எல்லாவற்றையும் சிருஷ்டித்த சர்வ வல்லவருடைய சித்தத்திற்கு எப்பொழுதும் நம்முடைய சித்தம் அடிபணிய உதவுகிறது. இந்த வழியில் தேவனை கணக்கில் எடுத்துக் கொள்வது வாழ்க்கையின் ஒழுக்கமுள்ள கீழ்படிதலுள்ள, நீதியுள்ள பரிசுத்த வாழ்க்கையின் சிறந்த அஸ்திபாரமாகும். அதிலே நாம் கட்டலாம். இதற்கு எதிரிடையாக வருகிற எல்லாவற்றையும் வெறுத்து விடலாம் (உபாகமம் 6:13-19; 10:12:22). உண்மையாக தமக்கு பயப்படுகிறவர்களை ஆசீர்வதிப்பதாக தேவன் வாக்குபண்ணியிருக்கிறார். (சங்கீதம் 128:1-4).

தேவனுக்கு பயப்படும்பயம் மனித குலத்தை பாதிக்கும் அநேக இயற்கையான பயங்களிலிருந்து விடுவிக்கிறது. நம்மை அடிமைத்தனத்திற்குள் கட்டுப்பாட்டிற்குள் வைக்கும் அவைகளிலிருந்து விடுவிக்கிறது. அதாவது மரணபயம் (எபிரெயர் 2:14-15); மற்றவர்களைக் குறித்த பயம் மற்றும் அவர்கள் நமக்கு என்ன செய்வார்களோ என்ற பயம் (மத்தேயு 10:28; லூக்கா 12:4,5; எபிரெயர் 13:6; 1பேதுரு 3:13-16); சத்துருவைக் குறித்ததான பயம் (உபாகமம் 20:3-4); கெட்ட செய்தியைக் குறித்த பயம், தெரியாதவற்றைக் குறித்ததான பயம், எதிர்பார்ப்பின் பயம், அவைகள் ஏதாவது

தவறாய் போய்விடுமோ என்ற விவரிக்க முடியாத உணர்வுகள் (சங்கீதம் 112:7,8). இது ஏன் என்றால் நம்மைச் சுற்றிலும் அல்லது நமக்கு என்ன நடந்தாலும், எந்த காரியமும் இல்லை என்று அறிவோம். தேவன் நமக்காக இருக்கிறார். எல்லாம் அவர் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. உண்மையிலே தேவன் நம்மை விட்டுவிலகுவதுமில்லை; கைவிடுவதுமில்லை என்று வாக்குப்பண்ணியிருக்கிறார். (எபிரெயர் 13:5); அவரை, அவருடைய அன்பை விட்டு ஏதுவும் நம்மை பிரிக்க முடியாது என்று அவர் வாக்குப்பண்ணியிருக்கிறார் (ரோமர் 8:38,39). எப்பொழுது நாம் உண்மையாக தேவனுடைய வல்லமையைக் குறித்து விழிப்புடன் இருக்கிறோமோ அப்போது நம்முடைய வாழ்க்கையின் எல்லா விவரங்களைக் குறித்து அவர் அன்பின் கரிசனையோடு இருக்கிறார் என்று அறிவோமானால் அப்பொழுது நாம் நம்மை ஒத்துப் போகச் செய்கிற அல்லது தேவனுக்கு கீழ்படியாமலிருக்கச் செய்கிற எல்லா பயங்களிலிருந்தும் நம்மை விடுவிக்கிறார் (சங்கீதம் 128:1-4).

தேவபயமும், தேவ அன்பும் இணைந்தே கிரியை செய்கிறது. அதாவது எப்பொழுது நாம் தேவனுடைய சித்தத்திற்கு அடியெடுத்து வைக்கிறோமோ அப்போது தேவனுக்கு மாத்திரம் பயப்படவேண்டும். அது அவருடைய அன்பின் நிமித்தமாக தேவபயம் ஆர்வமூட்டுதலின் மிகப்பெரிய ஆதாரமாகும். தேவனுடைய சித்தத்திற்கும், அவருடைய அன்பிற்கும் திரும்பி வரும்படியாக நம்மை உற்சாகப்படுத்துகிறது. தேவன் தம்முடைய அன்பை எடுத்துவிடமாட்டார். நாம் பாவத்திலே அடியெடுத்து வைக்கும்போது சில பகுதிகளில் தேவனுடைய அன்பை விட்டு வெளியே வருகிறோம். தேவனுக்கு அல்லாத காரியத்திலே தேவபயம் வெளிப்புறமாக தடையாக பார்க்கப்படுகிறது. உட்புறத்திலோ அது தேவஅன்பு. உட்புறத்தில் எந்த பயமும் இல்லை, ஏனெனில் பரிபூரண அன்பு எல்லா பயங்களையும் துரத்தி விடுகிறது (1யோவான் 4:18). எப்பொழுது நாம் தேவனை நேசித்து பயப்படுகிறோமோ அப்போது அவருடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து தண்டனையைக் குறித்தும் பயப்பட அவசியமில்லை. ஏனெனில் நாம் அவரோடு இருக்கிறோம். உண்மையிலே தனிப்பட்ட விதத்தில் நாம் அவரிடத்தில் வரும்போது நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் கிறிஸ்துவில் நமக்கிருக்கும் நிலைபாட்டின் நிமித்தம் தைரியத்தோடு அவரிடத்தில் வரலாம். (எபேசியர் 3:10-12; எபிரெயர் 10:19-22; சங்கீதம் 103:17). கிறிஸ்தவர்களாகிய நாம், அந்தப்படி திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள் (ரோமர் 8:15).

"தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" (2தீமோத்தேயு 1:7). தேவபயத்தில் வாழ்வது ஆதித்திருச்சபை அங்கத்தினரிடையே வழக்கமான பயிற்சியாக இருந்தது. (அப்போஸ்தலர் 9:31). அனனியா சப்பிராள் சம்பவத்தில் நாம் பார்க்கிறபடி அவருடைய ஜனங்கள் கொண்டிருந்த மரியாதைக்குரிய பயத்தை தேவன் உற்சாகப்படுத்தி செயல்பட்டார் (அப்போஸ்தலர் 5:1-11). தேவபயம் ஒருவருக்கொருவர் அர்ப்பணிக்க உதவுகிறது. ஏனெனில் சகவிசுவாசிகளாகிய நாம் ஒருவருக்கொருவர் போட்டியாளர்கள் அல்ல என்பதை உணர்கின்றபடியினால். ஆனால் அதற்கு பதிலாக நாம் ஒரே தேவனை சேவிக்கிறோம் என்ற உணர்வு வருகிறது (எபேசியர் 5:21). நாம் தேவனுக்காக செய்யும் சேவை அன்பினால் தூண்டப்பட்டதாகவே இருக்க தேவன் விரும்புகிறார். எந்த ஒரு தண்டனைக்குரிய பயத்தினிமித்தமாக அல்ல என்பதை நினைவு கூறவேண்டும். அல்லாமலும் வேதவசனம் கூறுகிறபடி தேவனை எளிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஆனால் ஏற்றுக்கொள்ளக் கூடிய மரியாதைக்குரிய தெய்வீக பயத்தோடு அவரை சேவிக்க வேண்டும். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறாரே (எபிரெயர் 12:28,29). "ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கதோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்." (பிலிப்பியர் 2:12,13). "அன்றியும், பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டுவருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடத்துக் கொள்ளுங்கள்" (1பேதுரு 1:17).

(iii). தேவனிடத்திருந்து வரும் தரிசனம்

தேவனிடத்திலிருந்து வரும் தரிசனம் வேதாகமத்தில் வருகிற அநேக பெரிய கதாபாத்திரங்களின் வாழ்க்கையை மாற்றியமைத்தது. உதாரணம்: ஆபிரகாம், மோசே, சாமுவேல், பவுல் மற்றும் பலர். இது தேவனால் நமக்கு தீர்க்கதரிசனமாக கொடுக்கப்பட்டபடியினால் தனிப்பட்ட முறையில் அனுபவிக்க, கேட்க, பார்க்க முடியும். இது தேவனுடைய இராஜ்ஜியத்தின் மிக வல்லமையான ஆர்வமூட்டும் சக்தியாகும். தரிசனம் முடுக்கிவிடுகிறது, ஏனெனில் ஆக்கப்பூர்வமான தேவனுடைய சேவைக்குள்ளாக நம்மை செயல்பட வைக்கிறது. மற்றும் இது வற்புறுத்துகிறது, ஏனெனில் தேவனுடைய சித்தத்தில் நிலைந்திருந்து செயல்படுவதற்கான எல்கையை அதற்குள்ளாக அமைக்கிறது. உண்மையிலே, நீதிமொழிகள் சொல்லுகிறபடி தரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள், தடைகளை மீறுவார்கள் அல்லது தரிகெட்டு ஒடுவார்கள்.

(iv). தேவ சமாதானம்

போர் அல்லது சமுதாய குழப்பத்திலிருந்து விடுதலை, அமைதி, கலக்கமின்மை, மனஅமைதி நண்பத்துவ நிலை அல்லது சண்டை இல்லாமை என இவ்வாறாக அகராதியிலே சமாதானம் வரையறுக்கப்படுகிறது. தேவனுடைய சமாதானத்தை வரையறுக்கவோ அல்லது புரிந்துக் கொள்ளவோ மிகக் கடினம். உண்மையிலே வேதவசனம் சொல்லுகிறது என்னவென்றால் இது எல்லாப் புரிந்துக்கொள்ளுதலுக்கும் மேலாக கடந்து செல்கிறது (பிலிப்பியர் 4:7).

சமாதானம் என்பதற்குரிய எபிரெய வார்த்தை ஷாலோம். இது சொல்லுகிற அர்த்தம் என்னவென்றால் முழுமையான நிறைவான, இளைப்பாறுதல், ஒழுங்கு, ஒருங்கிணைப்பு, ஐக்கியம், ஆரோக்கியம், மனநிறைவு, செழுமை, நிறைவேறுதல், அதே வேளையில் அதிகமான பொதுவான அர்த்தமாகிய சண்டையின்மை. இது பெறுகின்றவர்களின் நலனின் ஆசீர்வாதமாகவும், விருப்பமாகவும் பயன்படுத்தப்பட்டது (படுகிறது), ஆனால் அதிக முக்கியத்துவமாக உள்ளான மற்றும் வெளியான ஆசீர்வாதத்தைக் குறித்துப் பேசுகிறது. தேவனோடும், அவருடைய சித்தத்தோடும் நெருங்கிய தொடர்புக் கொண்டு வாழும்போது அந்த நபரிடத்திலே அல்லது ஜனங்களிடத்திலே வருகிற ஒற்றுமையைக் குறித்து பேசுகிறது. உண்மையாக தேவனுடைய சமாதானம் என்பது தேவனுடைய குணாதிசயத்தின் ஒரு பகுதி (நியாயதிபதிகள் 6:24; ரோமர் 15:33; 1கொரிந்தியர் 14:22; 1தெசலோனிக்கேயர் 5:23,24; எபிரெயர் 13:20). அவர் மாத்திரமே உண்மையான மனித சமாதானத்தின் ஆதாரம். சமாதானம் என்பதின் கிரேக்க வார்த்தையான 'இரேனி' பாரம்பரியமாக குறிப்பிடுகின்ற காரியம் என்னவென்றால் போர் இல்லாத காலங்களில் சாத்தியமாகின்ற, முறைப்படியான, செழுமையான வாழ்க்கையின் வழியாகும். எப்படியாயினும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் சமாதானம் என்பதற்கான எபிரெய வார்த்தையான ''சாலோம்'' என்பதற்கு இணையாக அதன் அர்த்தத்தை மாற்றியமைத்து உள்ளார்கள். மேலும் புதிய ஏற்பாட்டு சமாதானத்தின் நேரடித் தொடர்பு இயேசு என்று இணைக்கிறது. எல்லாவற்றிக்கும் மேலாக அவர் மாத்திரமே தேவசமாதானத்தின் மனிதத்துவ வழியாகும்.

விசுவாசிகளுடைய வாழ்விலே தேவனுடைய சமாதானம் தெளிவான அடையாளமாய் இருக்க வேண்டும். சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்திலே அங்கத்தினர்களாய் இருக்கிறவர்களின் நடுவிலே தரமுள்ள உறவாக பாய்ந்தோட வேண்டும். உண்மையாக, தேவனுடைய சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக் கொள்ளும் (பிலிப்பியர் 4:7). அதை நீங்கள் உடையவர்களாக இருந்தால் அது உங்களை தொடர்ந்து செல்வதற்கு உதவும்; அதை நீங்கள் இழந்தால் திரும்பப் பெற வைக்கும். எனவே அது நம்மை ஆளுகை செய்யும். (ஏசாயா 60:17). தேவனோடு சரியான விதத்தில் நிலைத்திருப்பதற்கு நம்மை ஆர்வமூட்டுகிற மிக பிரயோஜனமான ஒரு கருவியாகும். தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள் (கொலோசெயர் 3:15). நாம் சமாதானத்திற்கென்று அழைக்கப்பட்டிருக்கிறோம். நம்மை சுற்றிலும் அல்லது நமக்கு எது நடந்தாலும் பரவாயில்லை இது உண்மையாக இருக்கிறது. வேதவசனம் மேலும் நமக்கு கூறுகிறது, தேவ சமாதானம் நமக்கு எதிர்காலத்தை கொடுக்கிறது. ஏனெனில் சமாதானம் நமக்கு எதிர்காலத்தை கொடுக்கிறது. ஏனெனில சமாதான மனிதனுக்கு எதிர்காலமுண்டு (சங்கீதம் 37:37). அது சரீரத்திற்கு ஜீவனைக் கொண்டு வருகிறது. ஏனெனில் சமாதானத்திலிருக்கும்

இருதயம் சரீரத்திற்கு ஜீவனைக் கொண்டு வருகிறது (நீதிமொழிகள் 14:30). அது சந்தோஷத்தை கொண்டு வருகிறது (நீதிமொழிகள் 12:20), அழகை கொண்டு வருகிறது (ஏசாயா 52:7), நீதியின் அறுவடையைக் கொண்டு வருகிறது (யாக்யோபு 3:18). தேவன் தந்த சமாதானத்தை பிரகனப்படுத்துதல் அல்லது பகிர்ந்துக் கொள்ளுதல் என்பது விதைத்தல் மற்றும் அறுத்தல் என்ற தத்துதவத்தின் அடிப்படையில் அதிக அளவிலான சமாதானத்தை தரும் (லூக்கா 6:38; 2கொரிந்தியர் 9:6).

நமது சமாதானத்தை இழப்பதற்கான பல வழிகள் உண்டு, அவைகள்:

+ மனந்திரும்பாத பாவம் (ஏசாயா 48:22).
+ தேவனுக்கு கீழப்படியாமை
+ தேவனுடைய சமாதானம் நம்முடைய இருதயத்தை ஆள இடங்கொடாமை, ஏனெனில் 'அது ஆளட்டும்' என்று நாம் சொல்லுகிறோம் (கொலோசெயர் 3:15).
+ ஒழுங்குபடுத்தப்படாத உள்ளான ஆவிக்குரிய வாழ்க்கை.
+ நீதியற்ற வாழ்க்கை வாழுதல் (ஏசாயா 59:8).

நம்முடைய இருதயத்திலே தேவனுடைய சமாதானம் நிறுவப்படுவதற்கும் அநேக வழிமுறைகள் உள்ளன. விசுவாசிகளாகிய நமக்கு கல்வாரி சிலுவையில் இயேசுகிறிஸ்து செய்து முடித்த வேலையை முதன்மையாக கொண்டு அதற்கு நம்மை ஒப்புக்கொடுத்து மற்றும் பாவமன்னிப்பை அறிந்து இயேசுகிறிஸ்துவை ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு பாவத்திலிருந்து மனந்திரும்புதல் மூலமாக கிடைக்கக்கூடிய இரட்சிப்பையும், தேவனோடு உள்ள சமாதானத்தையும், அறிவதின் மூலமாக (ஏசாயா 53:5; ரோமர் 5:1; எபேசியர் 2:14-18). கிறிஸ்துவின் சமாதானம் நம்முடைய இருதயத்தில் நிலையாக ஆளுகை செய்ய வைக்கும் மற்ற வழிகள் எவைகளென்றால்:

= நம்முடைய வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் சமாதானத்தை உருவாக்க இடம் கொடுத்தல், அது பரிசுத்தாவியானவரின் கனிகளில் ஒன்று (கலாத்தியர் 5:22).
= கிறிஸ்துவின் சமாதானம் நம்முடைய இருதயங்களை ஆளுகை செய்ய அனுமதித்தல் (கொலோசெயர் 3:15). இதிலே நமது சித்தம் தேவனுடைய சித்தத்தை செய்ய வைப்பது அடங்கியிருக்கிறது.
= ஏற்கனவே பார்த்தபடி குணாதிசயத்தின்படி தேவன் சமாதானமானவர். எனவே நாம் அவரில் அவருடைய வார்த்தையில் நேரம் செலவழித்தால், அவருடைய சமாதானத்தின் சிலவைகள் நம்மேல் தடவப்பட்டுவிடும்.
= பிலிப்பியர் 4:4-9 வரையுள்ள வசனம் நம்முடைய இருதயத்தில் தேவனுடைய சமாதானம் நிறுவப்பட நாம் செய்ய வேண்டிய அநேக காரியங்களைக் குறித்துக் கூறுகிறது. அவைகளாவன: கர்த்தருக்குள் களிகூறுதல் (வசனம் 4); நம்முடைய சாந்த குணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக (வசனம் 5); ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் (வசனம் 6); உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ள வைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள் (வசனம் 8); தேவனிடத்தில் மற்றும் தேவ மனிதனிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள் (வசனம் 9).
= சமாதானத்தை தேடி முயற்சிப்பதின் மூலம் (சங்கீதம் 34:14; ரோமர் 14:19).
= தேவனுடைய சட்ட திட்டங்களை நேசிப்பதின் மூலம், ஏனெனில் தேவனுடைய பிரமாணங்களை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானம் உண்டு (சங்கீதம் 119:165).
= ஞானத்தை கண்டு அடைவதின் மூலம், ஏனெனில் அதினுடைய பாதை எல்லாம் சமாதானம் (நீதிமொழிகள் 3:13,17).
= நம்முடைய பிள்ளைகளை சிட்சிப்பதின் மூலம் (நீதிமொழிகள் 29:17).
= நமது மனதை நிலையாக வைத்திருப்பதின் மூலம், ஏனெனில் நாம் தேவனை நம்புகிறோம் (ஏசாயா 26:3; ரோமர் 15:13).
= நீதியை அனுசரிப்பதின் மூலம், ஏனெனில் நீதியின் கனி சமாதானம் (ஏசாயா 32:17; 57:2).

= தேவனுடைய கட்டளைக்கு செவிசாய்ப்பதின் மூலம் (ஏசாயா 48:18).
= தேவனால் போதிக்கப்பட்ட தேவனுடைய மகனாய் இருப்பதின் மூலமாய் (ஏசாயா 54:13).
= நன்மை செய்வதின் மூலமாய், ஏனெனில் தேவன் மகிமையையும், கனத்தையும், சமாதானத்தையும் நன்மை செய்கிறவர்களுக்கு கொடுக்கிறார் (ரோமர் 2:10). இந்த வசனம் தேவனை அறியாத அநேகர் கூட சமாதானத்தின் வாழ்க்கையை ஏன் அனுபவிக்கிறார்கள் என்று விளக்குகிறது. அதாவது அவர்கள் மற்றவர்களுக்கு நன்மை செய்கின்றபடியினால் தேவனிடத்திலிருந்து இந்த வாக்குத்தத்தின் பலனை அறுவடை செய்கிறார்கள். கிறிஸ்துவில் எப்படியாயினும் நமக்கு மிக ஆழமான சமாதானம் கிடைக்கிறது. ஏனெனில் அதில் தேவ சமாதானம் அடங்கியிருக்கிறது. அதை எல்லா மனித குலமும் அறியும்படியாக உருவாக்கப்பட்டார்கள். ஆனால் அது இல்லாமல் சமாதானத்தின் உண்மையான ஆழத்தை அறிவது இயலாத காரியம்.
= ஆவியானவர் கட்டுப்படுத்தப்பட்ட சிந்தையின் மூலம், ஏனெனில் இது ஜீவனும், சமாதானமாகும் (ரோமர் 8:6).
= நம்பிக்கைக்குரிய தேவன்மேல் நம்பிக்கை வைத்தல், ஏனெனில் அதனால் நாம் சமாதானத்தினால் நிரப்பப்படுவோம் (ரோமர் 15:13).

(v). நல்மனச்சாட்சி

இந்தப்பகுதியிலே இந்தப் பாடத்தை இணைத்ததற்கான காரணம் சுத்தமான மனசாட்சியில்லாமல் தேவனை நாம் முழு இருதயத்தோடு சேவிக்க முடியாது. மனசாட்சி என்பதற்குரிய கிரேக்க வார்த்தை '*சன்யிடிஸ்*'. அதற்கு எழுத்துப்பூர்வமான அர்த்தம் உள்ளிருப்பதை அறிதல், அதாவது ஒருவருக்குள்ளிருப்பதை அறிதல். உள்ளான அங்கிகரித்தல், ஒருவருடைய நோக்கம் மற்றும் செய்கையின் ஒழுக்க தரம், ஆற்றல் அல்லது அவை ஒருவருடைய செயல்கள் அல்லது நோக்கங்களின் ஒழுக்க தரத்தின் மேல்முறையாக அறிவித்தல், சரியானதை அங்கிகரித்தல், தவறானதை கண்டித்தல் என்று அகராதி இவ்வாறு இதை விளக்குகிறது. நம்முடைய மனச்சாட்சி, நம்முடைய நடக்கையின் சாட்சியாய் இருக்கிறது. அது நம்மை குற்றப்படுத்தும் அல்லது சாக்குப் போக்குச் சொல்லும் (ரோமர் 2:15). நம்முடைய மனச்சாட்சி அறிவிற்கு பொருத்தமானதாய் இருப்பதில்லை. அது எது சரியென்று அறிந்ததோ அதையே முன்னேற்றுவிக்கும். நம்முடைய வாழ்வில் மிகப்பெரிய உணர்ச்சி நெருக்கடியை எழுப்பாமல் நாம் அதை தணிக்கமுடியாது, விலைக்கு வாங்க முடியாது அல்லது மறுக்க முடியாது. இந்த உணர்ச்சி நெருக்கடியை சில காலம் மாத்திரம் வேண்டுமானால் அடக்கம் பண்ணிவைக்கலாம். ஆனால் காலப்போக்கில் இது நோயாக அல்லது கசப்புத்தன்மையாக மேல்பரப்பிற்கு வரும். தேவன் ஒவ்வொருவருக்கும் நம்முடைய கீழ்படிதல் மற்றும் அவருக்காக செய்யும் சேவையில் உதவிபுரிய மனசாட்சியை முக்கியமான கருவியாய் கொடுத்திருக்கிறார் (ரோமர் 9:1; 13:5; 2கொரிந்தியர் 1:12; 5:11; எபிரெயர் 13:18; 1பேதுரு 3:16-22).

இந்த மாதிரியான சூழ்நிலையில் நம்முடைய மனசாட்சி தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக நம்முடைய வாழ்வில் நாம் ஏதாவது செய்தால் (செய்ய நினைத்தால் கூட) நமக்கு எப்பொழுதும் காண்பிக்கும்படியாக அமைக்கப்பட்டுள்ளது. துரதிஷ்டவசமாக பாவத்தில் மனிதனுடைய வீழ்ச்சி அநேக அதிகப்படியான அல்லது வேறுபாடான காரியங்கள் நம்முடைய உள்ளான மனிதனில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே நம்முடைய மனசாட்சி எப்பொழுதும் தேவன் விரும்புகிற மாதிரியான வழியில் அமைக்கப்பட்டு இருக்கவில்லை (தீத்து 1:15-16). மனச்சாட்சி மாத்திரம் உண்மையான ஒழுக்கமுள்ள நபரை உருவாக்குவதில் ஒருபோதும் வெற்றி அடைவதில்லை. விசுவாசிகளாகிய நம்மில் நம்முடைய மனதை புதிதாக்க தேவன் கிரியை செய்ய வேண்டியதிருக்கிறது. எனவே நமது மனசாட்சியை தேவன் விரும்புகிற வழியில் மாத்திரம் மீண்டும் செயல்படும்படியாக தூண்டப்பட மறுபயிற்சி அளிக்க அல்லது மறுஅமைப்பு செய்யப்படவேண்டும். இதற்கு காலம் எடுக்கும் மற்றும் இதில் தேவனுடைய வார்த்தையை வாசித்தல் அவருடைய சித்தத்திற்கு கீழ்படிதல், நம்முடைய மனதை பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்புக் கொடுத்தல் அடங்கியிருக்கிறது. இவைகள் நாம் தேவன் நம்மை விரும்புகிற வழியில் நாம் சிந்தித்து செயல்படும் வரைக்கும், செய்துக் கொண்டே இருக்க வேண்டும். பரிபூரணம் என்னும் இந்த இடத்தை அடையும்வரைக்கும் நாம் முழுமையாக நம்முடைய மனசாட்சியை நம்ப முடியாது. அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார், ''ஆயினும் நான் உங்களாலேயாவது மனுஷருடைய நியாயநாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது

எனக்கு மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது; நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை. என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே. ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்.'' (1கொரிந்தியர் 4:3-5).

பெலவீனமான மனசாட்சியை உடைய விசுவாசிகள் எது உண்மையாகவே நல்லது அல்லது தேவபக்தியானது மற்றும் எது தீமையானது, தேவபக்தியற்றது அல்லது எது ஒழுக்க வேறுபாடுகள் உள்ளது என்று தெளிவாக பகுத்தறிவதற்கு போதுமான முதிர்ச்சியடையாதவர்களாய் இருப்பார்கள். இந்த ஜனங்கள் அடிக்கடி சட்டப்படியான மனநிலைமையின் அடிப்படையில் செயல்படுவார்கள். ஏனெனில் இவர்களுக்கு வாழ்வதற்கும், செய்கிற தவறான காரியத்தை நிறுத்துவதற்கும் சட்டங்கள் தேவைப்படுகிறது. தேவனுக்கல்லாத எல்கையை இவர்கள் அடிக்கடி ஏற்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் அவைகள் ஒருபோதும் இவர்களுக்கு உதவி செய்வதில்லை. அவர்களுடைய மனச்சாட்சி இந்த எல்கைக்குள்ளாக இருக்கும்படியாக நிகழ்ச்சி நிரல் பண்ணப்பட்டுள்ளது. பவுல் இந்த தானே விதித்துக் கொண்ட எல்கையைக் கூட மீறாதபடிக்கு எச்சரிக்கிறார். (நமது மனசாட்சியில் நிலைத்திருக்கும் படியாக) விசேஷமாக மற்றவர்களிடத்தில் இருந்து வரும் அழுத்தத்தின் நிமித்தமாக, இதை செய்யும்போது இவை விசுவாசத்திலிருந்து செயல்படுகிறதில்லை, அது பாவமாகும் (ரோமர் 14:1-23; விசேஷமாக வசனம் 23; எபிரெயர் 11:6).

பெலமுள்ள மனசாட்சியுள்ள ஜனங்கள் வேத வசனத்தின் அடிப்படையில் அமைந்துள்ளார்கள். இவர்களுக்கு சட்டப்பூர்வமான சட்டத்திட்டங்கள் அதிகமாக தேவையில்லை. இவர்கள் தங்களுடைய இருதயத்தில் தேவனுடைய எல்கையை உடையவர்களாக இருக்கிறார்கள். அவை அவர்களை விரும்புகிற வழியில் வாழ்வதற்கு உதவி செய்கிறது. எப்படியிருந்தாலும் பெலமுள்ளவர்கள் தங்களுடைய சகோதரர்கள், அவர்கள் செய்கிற காரியத்தின் மூலமாக இடறுவதற்கு காரணமாகி விடக்கூடாது (1 கொரிந்தியர் 8:7-13; 1கொரிந்தியர் 10:23 – 11:1). எங்கே தேவனுடைய சித்தம் தெளிவாக இல்லையோ, அங்கே ஒவ்வொரு நபரும் தங்களுடைய சொந்த மனச்சாட்சியின் படியே செயல்படவேண்டும். மற்றும் தங்களுடைய உறுதிபாட்டை மற்றவர்கள் மேல் திணிக்காதபடிக்கு கவனமாய் இருக்க வேண்டும். ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் இந்தக் காரியத்தில் அவர்கள் தேவனை விசுவாசித்து அவர் விரும்புகிறபடியெல்லாம் சுயாதீனமாக பதிலளிக்கிறவராக இருக்க வேண்டும். எப்படியிருந்தாலும் எப்பொழுது வேத வசனம் ஒரு காரியத்தில் தெளிவாக இருக்கிறதோ, அங்கே நாம் அதற்கு கீழ்படிய வேண்டும். நம்முடைய மனச்சாட்சி என்ன சொன்னாலும் சரி.

வரங்களும், வழிகளும் நம்மை பாவத்திலிருந்து சுத்திகரிப்பதற்கு முடியாது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் எல்லா பாவங்களிலிருந்தும் நம்மை சுத்திகரிப்பதற்கு போதுமானது என்பதை நினைவு கூறுங்கள் (எபிரெயர் 9:9-14; 10:19-22). எனவே எப்போது நாம் நம்முடைய பாவத்திலிருந்து மன்னிக்கும் படியாக தேவனை கேட்கும்போது அல்லது நம்முடைய மனசாட்சியிலிருந்து முன்னேறும்படியாக கேட்கும்போது நாம் முழுவதுமாக குற்றத்திலிருந்து விடுவிக்கப்படும்படியாக எதிர்பார்க்க வேண்டும். நாம் உண்மையாக மனந்திரும்பினால் நம்முடைய மனசாட்சி சுத்தமாகும். மீந்திருக்கிற எந்த ஒரு குற்ற உணர்வும் பொதுவாக சத்துரு மூலமாய் வரும். எனவே நாம் எதிர்த்து கடிந்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் இப்படிப்பட்ட கண்டிப்புகள் தேவனிடத்தில் இருந்து வருகிறவைகள் அல்ல (ரோமர் 8:1,2).

நம்முடைய மனசாட்சி எதையாவது குறிப்பிட்டு நம்மிடத்தில் சொல்லுகிறதா என்று நாம் பார்க்க வேண்டும். தேவன் அடிக்கடி நம்முடைய மனசாட்சியை உபயோகித்து நாம் அவரிடத்தில் வரவேண்டிய சில காரியங்களை சுட்டி காட்டுவார். நம்முடைய மனசாட்சியை அறியாமல் விட்டுவிட்டால் நம்முடைய சொந்த தீங்கை நாம் செய்வோம். ஏனெனில் நம்முடைய வாழ்வில் உணர்வு நெருக்கடி கட்டப்படும். நம்முடைய மனசாட்சி உணர்ச்சி அற்றதாகி அல்லது மந்தமாகும். ஆகவே, அது நமக்கு பாதுகாப்பு குறைவானதாய் மாறும் (1தீமோத்தேயு 1:19; 4:2). தேவனை சேவிக்க வேண்டும் என்ற நம்முடைய ஆர்வமுட்டுதலும் துன்புறும். ஏனெனில் நமக்குள்ளாக ஏதோ தவறு என்று அரித்துக் கொண்டிருக்கிற

உணர்வை நாம் அறிவோம். நம்முடைய வாழ்வில் மற்றும் குணாதிசயத்தில் தேவனுடைய அன்பை உருவகமாக பெற்றுக் கொண்டு ஏற்றுக் கொள்வதற்கு முன்பாக முழுவதும் சுத்தமான மனச்சாட்சி நமக்கு அவசியம் (1தீமோத்தேயு 1:5). அப்போஸ்தலனாகிய பவுலைப் போல எப்பொழுதும் தேவனுக்கு முன்பாகவும் மனிதர்களுக்கு முன்பாகவும் சுத்த மனசாட்சியுடையவர்களாக இருக்க நாம் முயற்சிக்க வேண்டும் (அப்போஸ்தலர் 24:16).

நமக்கு ஆர்வமுட்டும் நண்பர்கள்

ஒவ்வொரு தலைவர்களும் தவிர்க்க முடியாமல் எதிர்கொள்கிற கஷ்டங்கள் வழியாக கடந்துச் செல்வதற்கு நமக்கு நண்பர்கள் அவசியம். இந்த நண்பத்துவம் கிரியை செய்வது அவசியம். நேரத்தை அவர்களுக்குள் முதலீடு செய்து பண்படுத்த வேண்டும். மற்ற காரியங்கள் முக்கியமான செயல்கள் என்று தெரிந்த போதிலும் அவைகளை ஒதுக்கி விட்டு நேரத்தை கொடுக்க வேண்டும். அவர்களை தவிர்ப்பது என்பது தலைமைத்துவத்தின் மிகப்பெரிய பிரச்சனைக்கு நேராக வழிநடத்தும், அதாவது தனிமைக்குள்ளாக. (அல்லது தனிமைப்படுத்தப்பட்ட). நண்பத்துவம் நாம் ஜீவனையும், ஆர்வமூட்டுதலையும் பெற்றுக் கொள்ளும் வாகனமாய் இருக்கிறது. அதன் மூலமாய் நாம் ஜீவனையும், ஆர்வமுட்டுதலையும் மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கலாம். சில நேரங்களில் நண்பர்கள் கூட சோர்ந்து போகலாம். ஆனால் அதன் கிரையம் பொதுவாக மதிப்பிற்குரியது. அவர்கள் உறுதிப்படுத்தி நம்மை உற்சாகப்படுத்துவார்கள். நம்முடைய குறைகளை சுட்டிக்காட்ட விருப்பமுடையவர்களாய் இருப்பார்கள். சரியான நேரத்தில் சரியான ஒழுங்கு முறையை கொண்டு வருவார்கள். நாம் வெற்றியடையும் போது மகிழ்ச்சியடைவார்கள். நாம் விழும்போது அழுவார்கள். நாம் ஜெயிக்கும்போது பொறாமைக் கொள்ளமாட்டார்கள், அல்லது நாம் விழும்போது அவலமகிழ்ச்சி அடையமாட்டார்கள். நம்முடைய மிகவும் கஷ்டமான நேரங்களில் நண்பர்கள் நமக்கு உதவி செய்து நம்மோடு நிற்பார்கள். அவர்கள் இல்லாமல் நாம் என்ன செய்ய முடியும். சோகம் என்னவென்றால் அநேக கிறிஸ்தவ தலைவர்கள் அறிமுகமுள்ள அநேகரை உடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் வெகு சிலர் உண்மையான நண்பர்களை உடையவர்களாக இருக்கிறார்கள்.

நண்பர்களைக் குறித்தும், நண்பத்துவத்தைக் குறித்தும் நாம் பேசும்பொழுது **ஒன்பது விதமான நண்பர்களை நாம் வேறுபிரிக்கலாம்.** அதை நாம் அனைவர்களும் உடையவர்களாக இருக்க வேண்டும். அல்லது மற்ற ஜனங்கள் நம்முடைய வாழ்க்கையில் குறைந்த பட்சம் சில குறிப்புகளாவது இருக்க வேண்டும். அவைகளாவன:

(1). பயிற்றுவிப்பவர்

நமக்கு அங்கிகாரம் கொடுக்கக்கூடிய நண்பர்களும் உண்டு. அவர்கள் நம்முடைய வாழ்வில் பெலம், உணர்வுந்தல், பொங்குணர்ச்சி மற்றும் தரிசனத்தை ஊற்றி அதிக ஆக்கப்பூர்வமாய் தேவனை சேவிக்க உதவுகிறார்கள். நமக்கு தைரியம் அங்கிகாரம் வழிகாட்டுதல் மற்றும் உறுதி தேவைப்படுகின்ற நேரத்தில் கிடைக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். மற்றும் தேவனில் நம்முடைய முழு திறமையில் நிறுவப்பட்டு விரிவாக உதவுகிறார்கள். சில நேரங்களில் நம்முடைய ஊழியத்தை செலுத்துவதற்கும் உதவுகிறார்கள். நம்முடைய வாழ்க்கை உருவாக்கப்படுவதற்கும், தேவனை சேவிப்பதற்கான நம்முடைய ஆர்வத்தை தூண்டி எழுப்புகிறவர்களாக இருக்கிறார்கள். இந்த பயிற்றுவிப்பாளர் நம்முடைய நெருங்கிய நண்பர்களாய் இருக்க அவசியமில்லை. சில காலகட்டத்திற்கு நம்முடைய வாழ்க்கையில் வந்து ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அவர்கள் எப்பொழுதும் நம்முடைய வாழ்வில் நேர்மறையாக பங்களிப்பை மாத்திரம் உருவாக்குகிறார்கள். துரதிஷ்டவசமாக இப்படிப்பட்ட நண்பர்களின் பாதுகாப்பின் நிழலில் எப்பொழுதும் நாம் வாழ முடியாது. நம்முடைய சொந்த காலில் எப்படி நிற்பது என்று நாம் கற்றுக் கொள்வது அவசியம். மற்றும் தேவனில் நமது சொந்த அழைப்பில் முதிர்ச்சியடைய வேண்டும். நம்மை பயிற்றுவிப்பவர் எளிமையாக போகிற வழியில் நமக்கு உதவி செய்வார். அவர்கள் மாதிரியான ஜனங்கள் தேவனில் அவர்களுக்கு இருக்கும் முதிர்ச்சி காரணமாக அவர்களை பின்பற்றலாம். இந்த மாதிரியான நண்பத்துவத்திற்கு வேதாகம உதாரணங்கள்: இயேசுவும் அவருடைய சீடர்களும், பர்னபாவும் பவுலும், பவுலும் தீமோத்தேயும்.

(2).ஊக்கமூட்டுகிறவர்

நாம் செய்கிற காரியத்தை மற்றும் நாம் எவ்வாறு உருவாகுகிறோம் என்பதை கவனத்தில் கொண்டு அதோடு மதிப்பை இணைப்பவர்கள் இப்படிப்பட்ட நண்பர்கள். அதாவது தேவனிடத்தில் ஒரு இடத்தில் இருக்கிறோம் என்பதை நம்மை அறிய செய்வார்கள். இந்த ஊக்கப்படுத்துதல் அல்லது உறுதிப்படுத்துதல் வெறுமையான அன்பளிப்புகள் அல்ல, அல்லது உந்துதலினால் சொல்லப்படும் வாக்கியமும் அல்ல. மற்றும் திட்டவட்டமாக அந்த நபருக்கு தேவைப்படுகிற பரிமாறும் அல்ல. ஆனால் இது ஒரு நபருடைய அங்கிகாரம் மற்றும் அவருடைய வாழ்க்கையின் நேர்மறையான மதிப்பீடு மற்றும் மற்றொரு நபரின் தேவனுடைய அழைப்பாகும். இந்த விதமான நண்பத்துவம் இல்லையென்றால் நாம் செய்கிற காரியம் உண்மையாகவே நல்ல விதத்தில் தேவனில் போதுமானதாய் இருக்கிறதா என்பதை ஒருபோதும் உறுதியாக தெரியாது. அவர்கள் இல்லையென்றால் அர்த்தமுள்ள எதையாவது நாம் பங்களித்துள்ளோமா அல்லது தேவனுக்காக வித்தியாசமாக எதையாவது உருவாக்கி இருக்கிறோமா என்று அறியாமல் எப்பொழுதும் அலைந்து திரிகிறவர்களாக இருப்போம். சாத்தான் எப்பொழுதும் நம்மை குற்றம் சொல்லிக் கொண்டு எதிர்மறையான எண்ணங்களை நம்முடைய சிந்தனையில் அனுப்பி கொண்டிருக்கிறான். அதின் மூலம் நாம் பாதுகாப்பின்மையை உணரமுயற்சி செய்கிறான். மற்றும் நம்முடைய தோல்வியின் எண்ணங்களில் கேளிக்கை அடைகிறான். நாம் தொலைநோக்குப் பார்வையில் பார்க்க சரியான பாதையில் ஊக்கமுட்டுகிறவர்கள் தேவை. இப்படிப்பட்ட நண்பர்கள் இல்லாவிட்டால் அநேக அதிகமான நம்பிக்கை இழந்தவர்கள் இருப்பார்கள். இந்த மாதிரியான நண்பத்துவ முறையில் செயல்படுகின்ற ஜனங்கள் மிக கவனமாயிருந்து, மற்ற நபர்களில் எவைகள் தேவனுடையவைகளோ, அவைகளை மாத்திரம் உற்சாகப்படுத்தவோ அல்லது உறுதிபடுத்துகிறவர்களாகவோ இருக்க வேண்டும். அவர்களுக்கு ஆமா சாமிகளாக இருக்கக் கூடாது.

(3).அறிவுரை கூறுகிறவர்

இப்படிப்பட்ட நண்பர்கள் நமக்கு உண்மையை கூறுவார்கள். ஒருவேளை அது நமக்கு மனகஷ்டத்தை கொண்டு வருகிறதாய் இருந்தாலும் அவர்கள் நம்முடைய முகத்திற்கு முன்பாக பேசுவதற்கு விருப்பமுடையவர்களாய் இருப்பார்கள். ஆனால் அதையே மற்ற ஜனங்கள் நம்முடைய முதுகிற்கு பின்னால் பேசுவார்கள். தலைமைத்துவத்தில் இருக்கிற அநேகர் இப்படிப்பட்ட நபர்களை எடுப்பதற்கு கடினமாக உணர்வார்கள். ஏனெனில் அவர்களே எல்லா சரியான பதிலையும் உடையதான நபர்களாய் பழகிவிட்ட படியினால். நாம் நேர்மையாக இருப்போமானால் சில வேளைகளில் தேவனுக்கு முன்பாக நாம் சரியாக நம்மை வைப்பதற்கு, நம்மை கடிந்துக் கொள்ளுகிறவர்கள் சொல்லுகிறதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். (நம்முடைய வாழ்க்கையை அதற்கேற்றாற்போல் மாற்ற வேண்டும்). நம்முடைய வழியில் வருகிற எல்லா எதிர்மறையான வார்த்தைகளுக்காக நம்முடைய குணாதிசயத்தை மாற்றுவது சரியல்ல, ஆனால் நாம் பெற்றுக் கொள்கிற எந்த ஒரு கடிந்துக் கொள்ளுதலின் வார்த்தைகளை நிறுத்துப் பார்த்து அதில் என்ன அடங்கியிருக்கிறது என்று பார்ப்பது சரியானதாகும். அந்த வார்த்தையில் ஏதாவது உண்மை மறைந்திருக்குமானால் (பொதுவாக அவ்வாறு இருக்கும்). அப்பொழுது அவைகளை நாம் ஏற்றுக் கொண்டு அதன்படி நம்முடைய வாழ்க்கையை மாற்றியமைத்தால் நாம் சிறந்த தேவனுடைய ஊழியராக இருக்க முடியும். கடிந்துக் கொள்ளுதலின் வார்த்தைகளை ஜெபத்திலே தேவனிடத்தில் எடுத்து செல்வது நல்ல ஒரு பயிற்சியாகும். மற்றும் அவைகள் உண்மையானதா, அவைகளை கொண்டு என்ன செய்ய வேண்டும் என்று கேட்க வேண்டும்.

கிறிஸ்தவ வட்டாரத்திலே ஒருவருக்கொருவர் நாம் நல்லவர்களாவே நடந்துக் கொள்கிறோம். சில அச்சுறுத்தல் குணாதிசயங்களை நாம் சகித்துக் கொள்கிறோம். இப்படி வாழ கட்டாயப்படுத்தப்படுகிறோம். ஏனெனில் நாம் அன்பை கவனமற்ற பாசத்துடன் குழப்புகிறபடியினால். எனவே நாம் ஒருவருக்கொருவர் உள்ள உணர்ச்சிகளை காயப்படுத்த விருப்பமில்லாமல் இருக்கிறோம். அல்லது மற்ற விசுவாசியைக் குறித்து எதிர்மறையான வார்த்தை சொல்லாமல் இருக்கிறோம். நேர்மறையாக குற்றம் சாட்டுதல் நமக்கு கிடைக்கக்கூடிய மிக மதிப்புள்ள ஆதாரங்களில் ஒன்று. தேவன் நம்மை மெய்மையில் வாழ விரும்புகிறார்.

தேவனுடைய வழியில் பேசப்படுகிற உண்மை தேவனுடைய நேரத்தில் கொடுக்கப்படுகிற அன்பு மெய்மையில் வாழ உதவிசெய்யும். அது வாழ்க்கையை மாற்றுகிற காரியமாய் இருக்கும். கடிந்துக் கொள்ளுதல் நாம் அனுபவிக்கக்கூடிய மிக ஆக்கப்பூர்வமான கற்றுக்கொள்ளுகிற அனுபவங்களில் ஒன்று. நம்முடைய ஊழியங்களை காரியங்கள் தடைசெய்வதற்கு முன்பாக நம்மை விடுவிக்கிறது அல்லது ஆண்டவரை சேவிப்பதற்கான ஆர்வமூட்டுதலை அவிழ்த்துப் போடுவதற்கு முன்பாக நம்மை விடுவிக்கிறது (நீதிமொழிகள் 27:5,6; 28:23). நாம் தவறும்போது நம்மை சரி செய்துக் கொள்வது அவசியம். நாம் சோம்பேறிகளாக இருக்கும்போது உந்தி தள்ளப்படுவது அவசியம். நாம் தன்அமைதி உள்ளவர்களாக மாறும்போது தரிசனம் பெற வேண்டும். தேவனுடைய வழியை விட்டுவிலகும்போது திசை திருப்பப்படுவது அவசியம்.

நாம் கடிந்துக் கொள்ளுதலை பெற்றுக்கொள்ளும்போது சுயரூபம் மிரட்டப்படுகிறது. எப்படியிருந்தாலும் தேவன் இதை நாம் தடுத்துநிறுத்தும்படியாக கேட்கவில்லை. ஏற்றகாலத்தில் நம்மை உயர்த்தும்படி அவருடைய பலத்த கரத்திற்குள் நாம் அடங்கியிருக்க வேண்டும் (1பேதுரு 5:6). கடிந்துக் கொள்ளுகிறவன் என்ற பங்கை நீங்கள் பொறுப்பேற்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறதாக நீங்கள் உணர்ந்தால் எல்லாக் காரியங்களும் அன்பின் நோக்கத்தோடு செய்யப்பட வேண்டும் என்பதை நினைவு கூறுங்கள். மற்ற நபர்களின் நன்மைக்காக மாத்திரம் கடிந்துக் கொள்ளுங்கள். அது ஏதாவது ஒன்றை செய்வதற்கு ஏதுவாக அமைந்தால் நம்மை கடிந்துக் கொள்ளுகிறவர்களை கவனிப்பது அவசியம். நம்மை தாழ்த்த வேண்டும். அப்போது அவர்கள் நம்மேல் கடந்து செல்வதற்கு வழி வகுக்கும் அல்லது அவர்கள் தங்களை பெரியவர்களாக உணர்வார்கள். கடிந்துக் கொள்வதில் அன்பு தான் உண்மையான நம்முடைய நோக்கமாய் இருந்தால் அது கிரையம் செய்ய வைக்கும். மனங்காயங்களை உண்டுபண்ணும். ஏனெனில் நாம் ஒருவரை நேசிக்கும்பொழுது நாம் அவர்களை காயப்படுத்த விரும்புவதில்லை (2கொரிந்தியர் 2:2-4).

(4).பரிந்து பேசுகிறவர்

ஜெபத்திலே நம்மை ஆண்டவருக்கு முன்பாக நிறுத்துகிற நண்பர்களும் உண்டு. காரியங்கள் எப்படி நடக்கிறது என்று நம்மை கேட்கிற, நாம் எப்படியிருக்கிறோம் என்று தேடுகிற நண்பர்கள் உண்டு. இந்த ஜனங்களோடு நம்முடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதை புத்திசாலித்தனமாக பகிர்ந்துக் கொள்ள வேண்டும். நமக்காக ஜெபிக்கும்படி சரியான காரியத்தை தேவன் அவர்களிடத்தில் சொல்லுவார். எப்பொழுதெல்லாம் முடியுமோ அப்பொழுதெல்லாம் நாம் தேவனோடு எவ்வாறு இருக்கிறோம், நாம் தேவனுக்காக என்ன செய்கிறோம், தேவனுக்குள் நம்முடைய தேவைகள் என்ன என்பதை அவர்கள் அறிய செய்வது உதவியாக இருக்கும். இந்த நண்பர்களை தேவன் எவ்வாறு நம்முடைய தேவைகளை சந்தித்தார் என்பதை அறியச் செய்வதின் மூலம் அவர்களை உற்சாகப்படுத்துவதும் முக்கியமானது. நமக்காக ஜெபிக்கிறவர்களை ஒருபோதும் புறக்கணிக்கக் கூடாது. ஏனெனில் தேவனுக்குள் நமது வாழ்க்கையும் தேவனை சேவிக்க வேண்டுமென்ற நம்முடைய ஆர்வமும் ஜெபத்தையே சார்ந்துள்ளது. தேவனுக்குள் நம்முடைய முதிர்ச்சியின் அளவு எவ்வாறு இருந்தாலும் நமக்காக ஜெபிக்கிறவர்கள் நமக்குத் தேவை. தலைமைத்துவ பொறுப்பில் இருக்கிறவர்களுக்கு அவசர காலத்தைப் போல் ஜெபம் தேவையாயிருக்கிறது.

(5). பங்காளர்

இந்த நண்பர்களோடு நம்முடைய வேலைப் பளுவை, நம்முடைய வாழக்கையை பகிர்ந்துக் கொள்கிறோம். இவர்கள் குழு நண்பர்கள். அவர்கள் ஆர்வமூட்டுவார்கள். ஏனெனில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரே காரியத்தை நோக்கி இலக்காக கொண்டிருக்கிறபடியினால் அவர்களும் அதே திசையில் செல்லுகிறபடியினால். எனவே அவர்கள் நம்மை உற்சாகப்படுத்தி நம்மை செயலிலே இறங்கச் செய்வார்கள். ஆகவே நாம் அவர்களோடு ஏற்படுத்துகிற பங்களாத்துவம் இலக்குகளை அடைவதற்கு உதவும். பாரமான சுமையை சுமப்பதுபோல் தெரிந்தால் எங்கே இருக்கிறீர்களோ அங்கே நிலைத்திருங்கள். பங்காளர்கள் அந்த சுமையிலே ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு பொறுப்புகளை ஏற்றுக் கொள்வார்கள். பொதுவாக எப்போது

அவர்கள் நமக்குத் தேவைப்படுகிறார்களோ அப்போது நம்மோடு இணைந்து இரக்கப்படுவார்கள். ஏனெனில் நாம் வேலையின் நிமித்தம் காயப்படுவதினால் நம்முடைய சந்தோஷத்தையும், வெற்றியையும் பகிர்ந்துக் கொள்வார்கள். பங்களாத்துவம் பொதுவாக தனிப்பட்ட நபரின் ஆக்கப்பூர்வ தன்மையைக் காட்டிலும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடைய ஆக்கப்பூர்வ தன்மை மிக பெரியதாகவே இருக்கும். இதன் அர்த்தம் பங்காளர்களினால் நிறைவேற்றப்படும் வேலையின் அளவு குழுவிலே மிகப்பெரியது (பொதுவாக மிகப்பெரியதாய் இருக்கும்). பங்காளத்துவத்திலே உள்ள அங்கத்தினர்கள் தனித்தனியாக ஒவ்வொருவரும் நிறைவேற்றக்கூடியதைக் காட்டிலும், அதாவது சில பகுதியைக் காட்டிலும் முழுமையானது, அதிக ஆக்கப்பூர்வமானது. பங்காளத்துவம் தேவனுக்குள் நம்முடைய முழுத்திறமையையும் அடைவதற்கு தகுதியாக்குகிறது. அவர்கள் தைரியத்தையும், ஆர்வமூட்டுதலையும், பெலனையும் கொடுக்கிறார்கள். குழுவிலே ஒரு அங்கத்தினராய் செயல்படுவது மிகவும் உற்சாகமூட்டக்கூடியதாய் இருக்கிறது. விசேஷமாய் குழுவானது விளைவுகளைக் காணும்போது. நீங்கள் திருமணமானவராய் இருந்தால் உங்களுடைய முக்கியமான பங்காளர் உங்களுடைய துணைவியார்.

(6). மேய்ப்பர்

இப்படிப்பட்ட நண்பர்கள் நம்மை புரிந்துக் கொண்டு, நம்மை நடத்தி, போஷித்து, கேடகமாயிருந்து, மேய்ப்பனாய் இருப்பார்கள். நம்மோடு கூட வந்து நாம் எப்பொழுது தாழ்ந்து விடுகிறோமோ அப்போது நம்மை தூக்கி விடுவார்கள். நாம் பெலவீனப்பட்டு இருக்கும்போது நம்மை உற்சாகப்படுத்துவார்கள். ஆண்டவரை சேவிக்க வேண்டுமென்ற நமது ஆர்வமூட்டுதல் துன்பப்படுகிறதான வேளையில் அவர்கள் வந்து நமக்கு உதவி செய்து நம்முடைய சொந்தக் காலில் மீண்டும் நிற்பதற்கு உதவி செய்வார்கள். நாம் மனக் காயத்தில் இருக்கும்பொழுது நம்மை பராமரிப்பார்கள். குழப்பத்தில் இருந்து ஒழுங்கிற்குள்ளாக கொண்டுவருவார்கள். நாம் தேவனுக்குள் எந்த நிலைமையில் இருக்கிறோம் என்பதை இந்த நண்பர்கள் உணர்ந்து கொள்வார்கள். நம்மை அணுகி நம்முடைய தேவையின் காரியத்தை சந்திப்பார்கள். இவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஜனங்கள், நம்முடைய ஆர்வத்தை இழந்ததான நேரங்களில் நாம் இவர்களிடத்திலே சென்று நமக்கு தேவையாயிருக்கிற ஊக்கமூட்டுதல் உதவி மற்றும் ஊழியத்தை இவர்களிடத்திலே பெற்றுக் கொள்ளலாம்.

(7). வேலைக்காரன்

இப்படிப்பட்ட நண்பர்கள் விருப்பத்துடன் நமக்கு நடைமுறையான காரியங்களை செய்து தருவார்கள். நம்முடைய நண்பர்களாயிருந்து எப்பொழுது அவர்கள் நமக்குத் தேவைப்படுகிறார்களோ, அப்பொழுதெல்லாம் நமக்குக் கிடைக்கக்கூடியவர்களாய் இருப்பார்கள். இந்த விசுவாசமுள்ள ஜனங்களுக்கு எந்த ஒரு காரியமும் வேலையாளுக்குரிய வேலையல்ல. அல்லது நிலைகுலையச் செய்யும் வேலையல்ல. ஏனெனில் தங்களை நம்மோடு இணைத்துக் கொண்டு நாம் தேவனுக்காக செய்யும் வேலையை செய்ய உதவுவார்கள். நமது ஆர்வமூட்டுதலுக்கு உதவி செய்வார்கள். ஏனெனில் நம்முடைய வேலைப்பளுக்களின் சிலவற்றை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள். ஆகவே நாம் தேவனுக்காக செய்ய வேண்டும் என்று அறிந்த காரியத்தை செய்வதற்கு நேரத்தை நமக்குக் கொடுப்பார்கள். இந்த விதமான நண்பத்துவத்தை நாம் அங்கிகரித்துக் கனப்படுத்துவதற்கு கவனம் எடுத்துக் கொள்வது அவசியம். பொதுவாக இவைகள் கவனத்தில் கொள்ளப்படாதவைகளாய் அல்லது பெருத்தன்மைக்குரியதாய் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அப்படி செய்யக்கூடாது, செய்வோமானால் இது அந்த நபர் உபயோகப்படுத்தப்பட்டு தூக்கியெறியப்பட்டவராய் நமக்கு சேவை செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தை இழப்பார். இந்த ஜனங்கள் நமக்கு அளிக்கிற உதவியை ஏற்றுக் கொள்வதற்கு ஒருபோதும் நாம் பெருமைக்குரியவராக இருக்கக் கூடாது. இந்த வழியில் உதவி செய்வதற்கு ஜனங்களை கட்டாயப்படுத்தக்கூடாது. இப்படிப்பட்ட சேவை தேவனுடைய அழைப்பில் வரவேண்டும். அவைகள் ஒருபோதும் கட்டாயப்படுத்தக் கூடாது.

(8). சீஷன்

இப்படிப்பட்ட நண்பர்களுக்கு சில காலத்திற்கு பொறுப்புள்ளவர்களாய் தேவன் நம்மை மாற்றுகிறார். நம்மிடத்திலிருந்து கற்றுக்கொண்டு பெற்றுக் கொள்ள விரும்புகிற ஜனங்களுக்கு உதவி செய்து பயிற்சியளிப்பது நம்முடைய வேலையாகும். இருந்தபோதிலும் இந்த நண்பர்களுக்கு நம்முடைய நேரத்தையும், சக்தியையும் அதிகமாக கொடுக் வேண்டியதிருக்கும். இதை செய்வதற்கு நாம் சந்தோஷமுள்ளவர்களாய் இருப்போம். ஏனெனில் தேவனுக்காக அவருக்குள் இருக்கும்திறமையை நாம் பார்ப்போம். தேவன் நம்மை அவருடைய சீஷர்களாக அழைத்திருக்கிறார். சில வேளைகளில் தேவனுடைய இராஜ்ஜியத்தில் வேலை செய்துக்கொண்டே மற்ற ஜனங்களை பயிற்றுவித்தலும் நம்முடைய அழைப்பின் ஒரு பகுதியாகும். ஆண்களும், பெண்களும் நம்மால் உதவி செய்யப்பட்டதை பார்க்கும்பொழுது அவர்களுடைய வாழ்க்கையில் கட்டமுடிந்த காரியங்களினால் உற்சாகப்படுத்தப்படும்போது தேவனுக்காக சேவை செய்ய வேண்டுமென்ற நம்முடைய ஆர்வமூட்டுதல் சற்று அதிகமாகவே தூண்டப்படுகிறது. மீண்டும் யாரையும் நம்முடைய சீஷனாக இருக்கும்படியாக நாம் கட்டாயப்படுத்தக் கூடாது என்பதை நினைவு கூறவேண்டும்.

(9). சமுதாய நண்பர்கள்

இப்படிப்பட்ட நண்பர்களோடு நாம் இளைப்பாறி நல்ல நேரங்களை உடையவர்களாக இருக்கலாம். கிறிஸ்தவ தலைவர்களும் கூட நேரத்திற்கு நேரம் இதை செய்ய வேண்டும். ஏனெனில் தேவன் நம்மை சமுதாய சிருஷ்டியாக படைத்திருக்கிறார். இந்த நண்பர்களோடு நம்முடைய பொதுவான பழக்கவழக்கங்களை விருப்பங்களை விளையாட்டுகளை பகிர்ந்துக் கொள்ளலாம். இப்படிப்பட்ட செய்கைகளை இந்த நபர்களோடு பகிர்ந்துக் கொள்ளுதல் மனஇறுக்கம் தளர்த்தப்படுவதற்கு உதவி செய்கிறது. சில நேரத்திற்கு நம்முடைய வேலையிலிருந்து மனதை விடுபட வைக்கிறது. எல்லாக் கிறிஸ்தவர்களும் இதைச் செய்வது அவசியம். பகிர்ந்துக் கொள்வதற்கும், அதிக மதிப்புடையதாய் மாற்றுவதற்கும் நண்பர்கள் தேவை. மற்றும் இது குணப்படுத்தும் ஆற்றலுடையதாய் இருக்கிறது. இவர்களோடு ஒரு கப் காபி அருந்தலாம். ஆனால் பிரசங்கிக்கவோ அல்லது வேலையைக் குறித்து விவாதிக்கவோ கூடாது என்று அறிய வேண்டும். அவர்களுக்கு விருப்பமிருந்தால் ஒழிய. இந்த விதமான நண்பத்துவம் நம்மை தொலைத்தூரப்பார்வையில் வைப்பதற்கு மாத்திரம் என்பதை கவனிக்க வேண்டும். இந்த விதமான நண்பத்துவத்தில் செயல்பாடுகளில் முழுமையாக நம்மை ஈடுபடுத்திக் கொண்டு ஆனந்தம் அடையலாம். ஆனால் இந்த செய்கைகள் எல்லாம் நம்முடைய அதிகமான நேரத்தை எடுப்பதற்கோ, ஆண்டவரையும் அவருடைய வேலைக்கும் பதிலாக நம்முடைய இருதயத்தை சிறைபடுத்துவதற்கோ நாம் இடம் கொடுக்கக்கூடாது.

ஒரே நபர் நமக்கு வித்தியாசவிதமான நண்பர்களாய் வெவ்வெறு நேரங்களில் இருப்பார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். தேவனில் நாம் நண்பத்துவத்தை உருவாக்க வேண்டும். இப்படிப்பட்ட நண்பர்களாய் இருப்பதற்கு தேவன் விரும்புகிற நபர்களை தேட வேண்டும். எப்படியிருந்தாலும் நம்முடைய வாழ்க்கை குருட்டுத்தனமாக ஒன்று அல்லது இரண்டு நபர்களுக்கு மாதிரியாக வைக்கக்கூடாது. ஏனெனில் இது விக்கிரக ஆராதனைக்கும் தனிநபர் ஆராதனைக்கும் காரணமாகி விடும். நாம் நம்மை இயேசுவில் மாத்திரம் மாதிரியாக வைக்க வேண்டும். மற்றும் அவருடைய குணாதிசயத்தின் காரியங்களை மற்ற ஜனங்களில் நாம் பார்க்க வேண்டும்.

நண்பத்துவத்தை பயிற்சி செய்து அதிலே முன்னேற்றமடையவிட்டால், அநேக சபைகள் பிழைத்திருக்காது. புதிய சபை அங்கத்தினர்கள் அன்பின் சூழ்நிலையை சபையிலே கண்டுபிடித்து வரவேற்கப்பட விரும்புகின்றார்கள். சபை வளர்ச்சி யுக்தி சபையிலே புதிய அங்கத்தினர்கள் தங்களை நீண்ட காலத்திற்கு அர்ப்பணிக்கும் முன்பதாக இந்த ஏழு அர்த்தமுள்ள உறவுமுறைகள் சபையிலே தேவை என்பதை கண்டுபிடித்துள்ளது. விதிகளின்படி இது அர்த்தமுள்ள உறவுமுறைகள் சபையிலுள்ள ஜனங்களை பிடித்து வைத்துள்ள அமைப்புமுறையோ, நிகழ்ச்சி நிரலோ அல்ல. தனிமை உணர்வு சபைக்கு விரோதமாய் அவர்களை திருப்பி சபைக்கு வெளியே துரத்தி விடும். ஏனெனில் அன்பாக பராமரிக்கப்பட

வேண்டிய விதத்திலே அவர்கள் தனிமையாய் இருக்க விரும்புவதில்லை. ஜனங்கள் தாங்கள் தேவைப்படுகிறவர்களாக இருக்க விரும்புகிறார்கள்.

நண்பத்துவம் தனிநலக்குழுவாக மாறும்போது தவறாகி விடுகிறது. ஏனெனில் மற்ற ஜனங்கள் வெளியே இருப்பதாக உணர்ந்து இப்படிப்பட்ட குழுவினரால் பயமுறுத்தப்படுவதாக உணர்கிறார்கள். எப்படியாயினும் இயேசுவில் ஏற்படுத்தப்படும் நண்பத்துவம் அடிப்படையாகும். நிலைத்து நிற்கும் மற்றும் மிகப்பெரிய தாக்கத்தை நம்முடைய வாழ்க்கையிலும் ஒவ்வொரு நாளும் நாம் தொடர்பு கொள்கிற ஜனங்களுடைய வாழ்க்கையிலும் ஏற்படுத்தும். எல்லாத் தலைவர்களும் சரியான நண்பர்களைக் கொண்டிருக்கும்போது சபை சிறந்த இடமாக இருக்கும். எல்லா சபை அங்கத்தினர்களும், சபையின் வாழ்க்கையின் இந்த மிக முக்கியமான காரியத்திற்காக வேலை செய்வார்கள். ஆர்வமூட்டுதல் அதிகரித்து அதிகமாக தேவனுடைய வேலை செய்யப்படும் சுயாதீனமாய் தேவனுடைய அன்பு வழிந்தோடும் (இது ஒருபோதும் தோல்வியடையாது).

தனிப்பட்ட நடைமுறைப்படுத்துவதற்கான கேள்விகள்

1. நீங்கள் எப்படி தேவனிடத்திற்கு வந்தீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? அவரோடு உள்ள தொடர்பில் வளர்கின்றீர்களா? அல்லது நீங்கள் காலடித் தண்ணீரைப் போல இருக்கிறீர்களா? தேவனோடு உள்ள நடக்கையை எப்பொழுதாவது ஜெபத்துடன் தற்பரிசோதனை செய்தீர்களா? நீங்கள் செய்ய வேண்டுமா? இதை செய்வதினால் உள்ள சில ஆபத்துகள் என்ன? தற்பரிசோதனை உங்களை ஒடுக்குகிற முன்வேலையாக மாற அனுமதித்துள்ளீர்களா? தற்பரிசோதனை ஆபத்துகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய மதிப்புடையதுதானா?
2. உங்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதிக்கான உண்மையான சில இலக்குகளை எழுதுங்கள். இதை செய்வதற்கு முன்பாக ஜெபம் பண்ணுங்கள். இந்த ஒவ்வொன்றையும் நிறைவேற்றுவதற்கு நீங்கள் செல்லும் கஷ்டங்களை மதிப்பீடு செய்யுங்கள். அவைகள் மிகவும் கடினமாய் இருந்தால, இலக்குகளை எளிதாக்குங்கள். வெளிப்புறமான எதிர்பார்ப்புகளை உட்புறமான ஒன்றிலிருந்து பிரிக்க முயற்சி செய்யுங்கள். (மற்ற ஜனங்கள் உங்களிடத்திலிருந்து எதிர்பார்க்கிறார்கள், உங்களிடத்திலிருந்து நீங்கள் எதிர்பார்ப்பது). ஏனெனில் இவைகள் இந்தப்பகுதியிலே எவைகள் அல்லது யார் உங்களை ஆர்வமூட்டுகின்றனர் என்பதை பார்க்க உதவி செய்யும். முடிவாக உங்களுடைய எதிர்பார்ப்புகளை நீங்கள் நிறைவேற்றுவதின் மூலம் நீங்கள் எவ்வளவு மதிப்புடையவர்கள் என்பதை பரிசோதித்து உணர்ந்துக் கொள்ளுங்கள்.
3. அன்பானது செய்கையிலே காட்டப்படுமானால் அது முன்னேற்றுவிக்கும். உங்களுடைய வாழ்க்கையிலே எவ்வளவு அன்புடையவர்களாக இருக்கிறீர்கள். இன்னும் அதிகமான அன்பிற்கு தேவனிடத்தில் கேட்க உங்களுக்கு அவசியத்தை ஏற்படுத்துகீன்றதா? தேவனுக்கான உங்களுடைய சேவையில் உங்களை ஆர்வமூட்டுகிற பிரதான காரியம் என்ன?
4. தேவனுக்காக எவ்வளவு மரியாதையும், மதிப்பு கலந்த பயமும் தேவனிடத்தில் சரியான இருதய நோக்கத்தோடு செல்லுகின்றீர்களா? உங்களுடைய தெரிந்தெடுத்தலில் நீங்கள் எவ்வளவு ஞானமுள்ளவர்களாக இருக்கின்றீர்களா?
5. உங்களுடைய இருதயத்தை சிறைபடுத்தும் தரிசனம் என்ன? அது தேவனுடையதானால் நீங்கள் தேவனுக்காக செய்யும் வேலையில் குதூகலம் அடைகின்றீர்களா? சீர் கெடுவதாக அல்லது முழ்குவதாக உணர்கின்றீர்களா? அல்லது கட்டுப்பாடற்ற முறையில் செயல்படுகின்றீர்களா? ஏனெனில் தேவனிடத்திலிருந்து உங்களுக்கு எந்த வழி காட்டுதலும், திசை காட்டுதலுமில்லை அல்லது உங்களுடைய சொந்த காரியங்களை செய்து சிறப்பானவற்றிற்காக நம்பிக் கொண்ருக்கின்றீர்களா?
6. கிறிஸ்துவின் சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளுகை செய்கின்றதா? அப்படியில்லையென்றால் ஏன் இல்லை? அதைக் குறித்து நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்?

7. உங்களுடைய மனசாட்சி தேவனுக்கு முன்பாக சுத்தமாக இருக்கின்றதா? எதைக் குறித்தாவது குற்ற உணர்வோடு இருக்கின்றீர்களா? அதின் காரணமென்ன? அதைக் குறித்து ஏதாகிலும் நீங்கள் செய்தீர்களா? தேவன் எப்பொழுதவது நம்மை கண்டித்து இருக்கின்றாரா?

8. சபையின் தலைமைத்துவப் பொறுப்பிலே ஆர்வமிழந்து தனியாக வேலை செய்கிற அநேகர் இருக்கிறார்கள். அதிலே நீங்கள் ஒருவரா? இந்த சூழ்நிலையைக் குறித்து நீங்கள் என்ன செய்ய முடியும்? நீங்கள் பார்க்கக்கூடிய ஏதாவது பழைய நண்பர்கள் இருக்கீன்றார்களா? நண்பத்துவ முறையிலே உங்களுடைய மனைவியோடு இணைந்து வேலை செய்ய அவசியமா?

9. அப்போஸ்தலனாகிய பவுலுக்கு நண்பர்கள் இருந்தார்களா? அவர்களுக்கு அர்ப்பணிக்கப் பட்டவனாக இருந்தானா? அவன் தொடர்ந்து அவர்களை உறுதிப்படுத்தி இந்த நண்பத்துவத்திலே வேலை செய்தானா? ஏன் அவன் இதை செய்ய வேண்டும்? அவன் அவனுடைய நண்பர்களை சார்ந்திருந்தானா? இந்தப் பகுதியிலே பவுலினிடத்திலிருந்து நாம் என்னப்பாடத்தை கற்றுக் கொள்ள முடியும்?

கிறிஸ்துவின் கீழ் தலைவனென்னும் அதிகாரம்

இயேசு தலையாய் இருக்கிற சபையின் எல்லா தலைவர்களுக்கும் தேவையான அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டு அவராலே பதவி அமர்த்தப்படுகிறார்கள். எனவே அந்த சூழ்நிலையில் அவர் என்ன செய்வாரோ அதை மாத்திரம் இவர்கள் செய்ய வேண்டும்.

அதிகாரம் என்பது கீழ்படிதலை செயல்படுத்துவதற்கு சரியான அல்லது வல்லமையுள்ள தனிப்பட்ட ஆதிக்கம். இது நாம் எடுத்துக்கொள்கிற ஒன்றல்ல. இது கொடுப்பது. உண்மையிலே மற்ற ஜனங்கள் அங்கிகரித்தால் மாத்திரமே இது மதிப்புடையது.

எங்கேயெல்லாம் ஒரு மனிதன் மற்றவரோடு நேர்மறையாக தொடர்புகொள்ளுகின்றானோ, அப்பொழுது அவர்கள் தனிப்பட்ட ரீதியிலே அதிகாரத்தை செயல்படுத்தவோ, பெறவோ செய்கிறார்கள். கூடுமானவரை எல்லா மட்ட அனுபவத்திலும் இது உண்மையாக இல்லாவிட்டால் மனித குலத்தின் அர்த்தமுள்ள செயல்பாடுகள் நின்று விடும். அதாவது வியாபாரத்தில், சமுதாய தொடர்பில், அரசாங்கத்தில், வீட்டில், உண்மையிலே தனிப்பட்ட அதிகாரத்தை அங்கீகரிக்காத வரையில் மனிதனாக இணைந்து நிலைநிற்க முடியாது

வேதாகம அதிகாரம் என்றால் என்ன?

புதிய ஏற்பாட்டில் அதிகாரம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள மிக பொதுவான கிரேக்க வார்த்தை "***எக்குஸியா***". இந்த வார்த்தையின் அர்த்தம், ஒருவர் விரும்புகிற விதத்தில் 'விடுதலை' நல்லப் பண்பை கொடுக்கக்கூடிய திறமை அல்லது பெலனாகும். அதிகாரத்தின் வல்லமையாகும். அதாவது வல்லமையை செயல்படுத்தும் உரிமை, ஆளுகை செய்யும் அதிகாரம் அல்லது ஆளுகை செய்யும் அரசாங்கம் ஒருவருடைய சித்தம் அல்லது கட்டளை மற்றவர்களால் கீழப்படியதக்க அதிகாரம், பதவியின் அடிப்படையில் அதிகாரத்தின் சிந்தனை எனவும் கொள்ளப்படலாம். அதிகாரம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள மற்ற கிரேக்க வார்த்தை "***ஹையுபர்ரோச்***", அதன் அர்த்தம் 'வீழ்த்துதல், பிடிமானத்திற்குள் வைத்தல், சிறப்பு, உயர்வுபான்மை, உயர்ந்த இடம்' (1தீமோத்தேயு 2:2); "***எபிடசி***" என்றால் 'ஆணையிடுதல், கட்டளைகள் செலுத்துதல்' (தீத்து 2:15); "***டூனஸ்டஸ்***" என்றால் அர்த்தம் 'அதிகாரமுள்ள ஒன்று' (அப்போஸ்தலர் 8:27); மற்றும் "***அத்தினியோ***" என்றால் அர்த்தம் 'ஒருவருடைய சொந்த ஆயுதத்தை உபயோகித்தல், அதிகாரத்தை பறித்தல், ஒருவர் தன்னுடைய சொந்த அதிகாரத்தில் செயல்படுதல்' (1தீமோத்தேயு 2:12).

அதிகாரம் தன்னில் தானே தவறானது என்று வேதம் சொல்லவில்லை. அது தெய்வீகமாக, மனுஷிகமாக, சாத்தானுடையதாக இருக்கலாம். ஞானமுடையதாக அல்லது முட்டாள்தனமாக இருக்கலாம். உதவியாக, அல்லது அழிக்கக்கூடியதாக இருக்கலாம். ஏற்றுக் கொள்ளப்பட்டதாய் அல்லது கட்டாயமாக திணிக்கப்பட்டதாய் இருக்கலாம். ஆனால் இது தேவையானது. அதிகாரம் ஜனங்களின் தேவையின் எல்கையை திணிக்கிறது. ஏனெனில் நாம் பாவத்தினால் கறைபட்டு இருக்கிறோம். நாம் ஒருபோதும் அதிகாரத்தை புறக்கணிக்க கூடாது. ஆகாயத்து நட்சத்திரங்களைக்கூட அவதூறு பண்ணக்கூடாது. ஏனெனில் அவைகளுக்கு தேவனால் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது (யூதா 8-10). எல்லாவற்றிக்கும் மேலாக தேவனாலன்றி ஒரு அதிகாரமும் இல்லை. உண்டாயிருக்கிற அதிகாரமெல்லாம் தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறது. நாம் அதற்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும் (ரோமர் 13:1-7).

இயேசுவின் அதிகாரம்

அவருடைய பரலோக பிதாவின் இடத்தில் அவர் செயல்படுகிறபடியினால் அவருடைய அதிகாரம் வந்ததென்று அங்கிகரித்தார் (யோவான் 10:18; 5:19,30). ஜனங்களுடைய பாவங்களை அவர் மன்னித்தார். சுகமாக்குதல் தேவைப்பட்டவர்களை சுகமாக்கினார். ஜனங்களை விட்டு போகும்படி பிசாசுக்களுக்கு கட்டளையிட்டார். இயற்கையை கட்டுப்படுத்தினார். போதித்தார். ஜனங்களை மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பினார். இந்த அதிகாரமெல்லாம் அவருக்கு பிதாவாகிய தேவனால் கொடுக்கப்பட்டது. இந்த அதிகாரம் அவருக்கு நியாயந்தீர்க்கும் உரிமையைக் கொடுத்தது

(யோவான் 5:27); நித்திய ஜீவனைக் கொடுத்தார் (யோவான் 17:2). அவருடைய சொந்த ஜீவனைக் கூட கொடுத்தார் (யோவான் 10:17,18). இயேசுவும் வேத வசனத்திற்கு கீழ்ப்படிந்தார். ஏனெனில் அவைகள் அவருக்கு பிதாவின் வார்த்தைகளாகும் (யோவான் 10:34,35; மத்தேயு 4:1-10). இயேசு அதிகாரத்தோடு பேசினார். ஊழியம் செய்தார் (மாற்கு 1:22,27; லூக்கா 4:31-37). அவர் தொடர்பு கொண்ட ஜனங்களுடைய வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை அவரைக் குறித்த காரியங்கள் உண்டாக்கியது. அநேகர் விருப்பத்துடன் நேர்மறையாக அவருக்கு பதிலளித்தார்கள். மற்றவர்கள் எதிர்மறையாக கோபத்துடன் செயல்பட்டார்கள் (மத்தேயு 7:28,29; லூக்கா 7:1-10), ஆனால் அவருக்கு எப்பொழுதும் சிலவிதமான மறுஉத்தரவுகள் கிடைத்தது என்பதாக காண்கிறோம்.

[5]இயேசு கப்பர்நகூமில் பிரவேசித்த போது, நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடத்தில் வந்து:
[6]ஆண்டவரே! என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டிக்கொண்டான். [7]அதற்கு இயேசு: நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன் என்றார். [8]நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். [9]நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான், என் வேலைக்காரனை, இதைச் செய்யென்றால் செய்கிறான் என்றான். [10]இயேசு இதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப் பின்செல்லுகிறவர்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். [11]அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள். [12]ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். [13]பின்பு இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான். (மத்தேயு 8:5-13).

இந்தப் பகுதியிலே நூற்றுக்கதிபதி இயேசுவின் அதிகாரத்தை அங்கிகரித்துக் கொண்டான். இராணுவ அதிகாரியாகிய அந்த நூற்றுக்கதிபதி அவருடைய அதிகாரத்தை ஆளுகிற ரோம சாம்ராஜ்ஜியத்தில் இருந்து பெற்றுக் கொண்டார். இது ரோம சீஷர் தாமே தன்னுடைய படைகளுக்கு கட்டடையிடுவது போல நூற்றுக்கதிபதி தன்னுடைய படைகளை ஆளுகை செய்யவும், கட்டுப்படுத்தவும் அனுமதியளித்தது. நூற்றுக்கதிபதியின் வேண்டுகோள் இயேசுவினிடத்தில் ஒரு விசுவாசத்தின் அறிக்கையாகும். ஏனெனில் இயேசு தமது அதிகாரத்தை தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்டார் என்பதை அவன் அங்கிகரித்துக் கொண்டான். எனவே அவர் ஒரு வார்த்தையினால் சொஸ்தமாக்கும் வல்லமையுடையவர் என்பதை அங்கிகரித்தார். அதாவது இயேசு முழு தெய்வீக அதிகாரத்தினால் பேசினார், செயல்பட்டார் என்பதை அறிந்தான். எனவே அவர் பேசின போது அது பிதாவாகிய தேவன் பேசினது போலாகும். உண்மையிலே இயேசுவினுடைய ஒவ்வொரு வார்த்தையும் அவருடைய பிதாவின் அதிகாரத்தினால் மூலதானமாய் இருந்தது. ஏனெனில் இயேசு முழுவதுமாக அவருக்கு அவருடைய சித்தத்திற்கு அர்ப்பணித்து இருந்தார். அவருடைய பரலோக பிதா செய்யச் சொல்லாத எதையுமே அவர் பேசவில்லை, செய்யவில்லை.

<u>நாம் இயேசுவின் ஊழியத்தைப் பார்க்கும்பொழுது அவருடைய வேலையின் சில தெளிவான குணாதிசயங்களை நாம் பார்க்க முடியும்:</u>

- அது ஆவியானவரால் நடத்தப்பட்டது. அவருடைய பிதாவினால் இயேசு தன்னிச்சையாக செயல்படவில்லை. இயேசு தாமே பரிசுத்த ஆவியின் வல்லமையினால் ஊழியம் செய்தார் என்கிற உண்மை இதிலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (மத்தேயு 12:28; யோவான் 5:7-32). அவருடைய தண்ணீர் ஞானஸ்நானம் யோர்தானில் ஆவியானவர் இறங்குதல், இவற்றிற்கு முன்பு இயேசு எந்த வல்லமையான காரியங்களையும் செய்யவில்லை.
- அது தேவையானவர்களை நோக்கி செல்கிறது. இயேசுவின் ஊழியத்தின் முத்திரை என்னவென்றால், அவருடைய ஊழியம் என்று அறிந்தவர்களை நோக்கியே இருந்தது. இயேசு ஒருமுறை சொன்னார், ‘‘பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல்

சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை'' (மத்தேயு 9:12). ஜனங்கள் இயேசுவிடம் ஆவியிலே தேவையுள்ளவர்களாய் வெறுமையாய் வந்தார்கள். அவரிடத்திலே அந்த தேவைக்கான பதிலை கண்டு கொண்டார்கள்.

- இது சத்துருவுக்கு எதிராக இருந்தது. அவருடைய முழு ஊழியமும் அவருடைய வாழ்க்கையையும் மரணத்தையும் உள்ளடக்கி, சத்துருவின் அதிகாரத்திற்கு நேரடி சவாலாய் அமைந்திருந்தது. சாத்தான் பலசாலியான மனிதனாய் பார்க்கப்படுகிறான். இயேசு அவனை பரிசுத்த ஆவியின் வல்லமையினால் கட்டினார் (மத்தேயு 12:29). அவன் கட்டப்படும்பொழுது அவனுடைய வீடு கொள்ளையிடப்படக்கூடும். இயேசுவின் ஊழியம் சாத்தான் வருகிற நாட்களில் முழுவதுமாக கட்டப்பட்டு முற்றிலுமாக புறம்பாக தள்ளப்படுவான் என்பதின் முன்குறிப்பாகும். தீமையானது முற்றிலுமாக புறம்பாக தள்ளப்படுவான் என்பதின் அறிவிப்பாகும். உச்சக்கட்டமாக அவன் தோற்கடிக்கப்படுவான் என்பதின் அடையாளமாகும். இயேசுவின் மூலமாய் ஒவ்வொரு வல்லமையான காரியங்களும் சுகமாக்குதலும், ஆண், பெண் வாழ்க்கையிலிருந்த சாத்தானின் பிடியிருந்து விடுவிக்கிறதாய் இருந்தது (யோவான் 12:31). இவ்வுலகத்திற்கு இயேசுவின் வருகை சாத்தானின் வல்லமையோடு நேரடியான சவாலாய் அமையும்.

- அது இரட்சிற்பிற்கான இயேசுவின் நோக்கம் ஆண், பெண்ணின் முழு இரட்சிப்பாகும். மீண்டும் மீண்டும் அவர் ஜனங்களை சரீரப்பிரகாரமாய் சுகமாக்கினார். அவர்களுடைய சரீரத்திற்கு அப்பாற்பட்ட நிலைமையில் அவர்களை எடுத்துச் சென்று இரட்சிப்பானது அதைவிட ஆழமானது என்பதை அடையாளப்படுத்தினார். அவர் அடிக்கடி ஜனங்களிடத்திலே போங்கள், ஏனெனில் உங்கள் விசுவாசம் உங்களை இரட்சித்தது என்றார். இயேசு ஆண்களும், பெண்களும் ஆவி ஆத்துமா, சரீரத்திலே முழுமையடைந்தவர்களாய் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார் (1தெசலோனிக்கேயர் 5:23,24).

- அது வல்லமையிலே இருந்தது. இயேசுவின் வல்லமையான ஊழியங்களின் உதாரங்களினால் சுவிசேஷங்கள் நிரம்பியுள்ளது. உண்மையான சுவிசேஷ ஊழியம் என்பது வெறும் சுவிசேஷ வார்த்தைகள் மட்டுமல்ல. நம்முடைய நம்பிக்கையைக் குறித்து விசாரித்து கேட்கிற யாவருக்கும் உத்தரவு சொல்ல நாம் வார்த்தைகளை உபயோகிக்க வேண்டும் (1பேதுரு 3:15), ஆவிக்குரிய இருளில் மற்றும் கட்டுகளில் தங்களுடைய வாழ்க்கை முழுவதும் வாழ்கிற ஜனங்களுக்கு பல வேளைகளில் வார்த்தை மாத்திரம போதுமானதாய் இல்லை. நேரடியான தேவனுடைய வல்லமை உடுருவிச் செல்லும்பொழுது தங்களுடைய வாழ்வில் தேவனுடைய தேவையைக் குறித்ததான விழிப்புணர்வை அடையச் செய்யும். இதுதான் இயேசுவின் ஊழியத்தில் நடத்தது.

விசுவாசிகளின் அதிகாரம்

தேவன் வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரத்தை இயேசுவுக்கு கொடுத்திருக்கிறார். (மத்தேயு 28:18; எபேசியர் 1:22,23; கொலேசெயர் 2:10; 1பேதுரு3:22). இயேசு அவருடைய தருணத்தில், இந்த அதிகாரத்தை அவருடைய சபையிலுள்ள விசுவாசிகளுக்கு பகிர்ந்தளிக்கிறார். நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஸ்தானம் அவர் மூலமாய் பிதாவாகிய தேவனோடு நமக்கிருக்கும் தொடர்பு தேவனுடைய இராஜ்ஜிய ஊழியத்தில் ஈடுபட தேவையான அதிகாரத்தை நமக்கு தருகிறது. நம்முடைய ஊழியம் தேவன் ஆரம்பித்த ஊழியத்தில் தொடர்ச்சியாய் இருக்க வேண்டும். அவருடைய ஊழியத்தில் பிரதிபலிக்கிறதாய் இருக்க வேண்டும் (யோவான் 14:12). இயேசுவுக்குள் இருந்த இரகசியம் போல் நாமும் நேரடியாக பரிசுத்த ஆவியானவரை சார்ந்தே காண்கிற எந்த தேவையின் மீதும் தேவனுடைய வல்லமையை கொண்டு வரும். விசுவாசிகளாகிய நம்மை கிரியை செய்வதற்கு தகுதிப்படுத்துகிறது. நம்முடைய அதிகாரம் என்ன என்பதை நாம் காண்போம்.

விசுவாசிக்கிற தலைவரின் அதிகாரம்

இயேசு தலைவர் என்னும் தன்னுடைய ஸ்தானத்தை அவருடைய சபையிலுள்ள குறிப்பிட்ட தெரிந்து கொள்ளப்பட்ட விசுவாசிகளுக்கு பகிர்ந்து கொடுக்கிறார். நடத்தி செல்வதற்கு ஏதுவாக அவருடைய அதிகாரத்தில் சிலவற்றை அவர் அவர்களுக்கு கொடுக்கிறார். இந்த தலைவர்களிடத்தில் இருக்கிற எந்த ஒரு அதிகாரமும் கொடுக்கப்பட்ட அதிகாரமாகும். எனவே அவருடைய வேலைக்காரர்களாய்

இயேசுகிறிஸ்துவின் சபைக்கு வேலை செய்ய வேண்டும். அவைகள் நடத்துகிறவர்களை ஆளுகை செய்வதற்காக அல்ல. இயேசு சபையிலே தன்னுடைய அதிகாரத்தை பிரதிநிதித்துவப் படுத்தவும், அவருடைய ஊழியம் தொடரவும், அவருடைய வாழ்க்கையை வெளிக்காட்டவும் தலைமைத்துவத்தை ஏற்படுத்துகிறார்.

(i) இரண்டு தவறான எண்ணங்கள்

ஒவ்வொரு தலைவர்களுக்குள்ளேயும் இரண்டு தவறான எண்ணங்கள் போட்டியிடுவதற்கு வாய்ப்புள்ளது. முதலாவது நம்மை குறித்து மிகவும் உயர்வாக எண்ணி நாம் நிறைவேற்றி முடித்த எல்லாவற்றிற்கான மகிமையையும் நாமே எடுத்துக்கொள்ளுதல், இரண்டாவது நம்மைக் குறித்து மிகவும் குறைவாக எண்ணி நம்மிடத்தில் எந்த நன்மையுமில்லை என்று விசுவாசித்து நாம் உதவாக்கரைகள் என்று உணரும் எண்ணமாகும் (சத்துரு எப்பொழுது நம்மை தாழ்வு மனப்பான்மை கொள்ளச் செய்கிறானோ அப்பொழுது நாம் ஒத்துப்போவதற்கான வாய்ப்புகள் உண்டு. மற்ற ஜனங்கள் நம்மை ஏற்றுக் கொண்டு அன்பு செலுத்தும் படியாக அவர்களுடைய எதிர்பார்ப்பிற்கு ஏற்றவிதத்தில் உறுதி செய்துக் கொள்ள நாம் முயற்சிக்கிறோம்). இரண்டு விதமான எண்ணங்களும் சத்துருவினால் ஊட்டப்பட்டு உற்சாகப்படுத்தப்படுகிறது. இவை இரண்டும் தடை செய்யப்பட வேண்டும். நாம் நம்மைக் குறித்து புரிந்து கொள்வது அவசியம். இந்தக் காரியங்கள் நம்முடைய வாழ்க்கையில் வேர்விட முயற்சிக்கும்போது போதுமான அளவு அறிந்துக் கொள்ளுவது அவசியம். அவைகள் சரியான பொருத்தமான செய்கைகளை எடுப்பதற்கு உதவி செய்யும். இதன் காரணம் என்னவென்றால், இந்த இரண்டு துருவங்களுக்கு இடையே நிலையான மற்றும் அதிகாரத்தின் இடத்தை காண்கிறோம். இங்கே நாம் தேவனுக்குள் யார் என்பதையும் நமக்குள் யார் என்பதையும் அறிவோம்.

(ii) அன்பான (சீரான) அதிகாரம்

தலைவர்களாகிய நாம் நமது பதவியின் அதிகாரத்தை உபயோகித்து யாராவது ஒருவரை ஏதாவது ஒன்றை செய்யச் சொல்லிக் கேட்கும் பொழுது நாம் மென்மையாக தாழ்மையாக, அன்பாக கேட்பது அவசியம். அர்ப்பணிப்பை வற்புறுத்தி பெற்றுக் கொள்வது நல்லதல்ல. அல்லது தேவனால் நம்மிடத்தில் கையளிக்கப்பட்டவர்களை ஆளுகை செய்வது நல்லதல்ல. அவர்களுக்கு மாதிரியாய் இருப்பதே சிறந்தது. ஒரு நபர் உங்களோடு ஒத்துழைக்காவிட்டால் அவர்கள் தேவனுடைய வேலைக்காரர்கள் (உங்களுடையவர்களல்ல) என்பதை நினைவு கூறுங்கள். எனவே தேவன் அவர்களை சரிசெய்வார். தேவன் உங்களை அவர்களை சரிசெய்ய ஒழுங்குபடுத்த நடத்துவாரானால் அன்புடன் அவர்களுக்கான இடைவிடாத ஜெபத்துடன் தங்களுடைய இருதயத்தை மாற்றும்படியாய் செய்ய வேண்டும் (1பேதுரு 5:3). தலைவர்களாகிய நமது பங்கை மென்மையான அதிகாரத்தோடும், கிறிஸ்துவின் தாழ்மையோடும் நிறைவேற்றுவது அவசியம். அப்போஸ்தலனாகிய பவுலைப் போல நாமும் ஜனங்களோடு வேலை செய்ய வேண்டும். ஜனங்களுக்கு எதிராக அல்ல (2கொரிந்தியர் 1:24).

(iii) மிகவும் அதிகமாக, மிகவும் வேகமாக

அநேக தலைவர்கள் விசேஷமாக இளைஞர்கள் நேரடியாக முழு அதிகாரத்தை பெற விரும்புகிறார்கள். பொதுவாக இது புத்திசாலித்தனமானது அல்ல. தலைவர்கள் தங்களுடைய பொறுப்புகளில் படிப்படியாக எப்படி அதிகாரத்தை செயல்படுத்துவது என்பதை கற்றுக் கொள்வது அவசியம். அதே வேளையில் அவர்களுக்கு மேலே அதிகாரத்தில் இருப்பவர்களை அங்கிகரித்து கீழ்ப்படிய வேண்டும். விரைவாக கொடுக்கப்பட்ட அதிகமான அதிகாரம் மிக விரைவாக பொதுவாக பயனற்றதாய் இருக்கும் மற்றும் அது அழிவிற்கு நேரானதாய் அமையும். ஏனெனில் இது பெருமைக்கு நேராக வழிநடத்தும் கற்றுக்கொள்ள தகுதியற்றவராய் மாறி அறிவுநுட்பமில்லாதவராய் மாற வழிவகுக்கும். இந்த ஜனங்கள் வேகமாக முன்னேற விரும்பி வழக்கமான விளைவுகள் தற்செயலாக அவர்கள் செல்லும் வழியில் நடைபெறும்.

உண்மையான அதிகாரம் நமக்கு மேலிருக்கும் அதிகாரத்திற்கு நம்மை அர்ப்பணிக்கும் போதும் தேவனுடைய வேகத்தில் நகரும்போதும் நமக்கு வரும்.

(iv) அதிகாரத்தின் எல்லை

தலைவர்கள் தேவனால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் அளவுக்கு தக்கதாக மாத்திரமே கடந்து சென்று செயல்பட முடியும். இந்த எல்கையை விட்டு வெளியே கடந்து செல்லும் தலைவர்கள் அவர்களுடைய செயல்பாட்டை தாங்கி பிடிக்கும் பரலோகம் மூல ஆதாரமில்லாமல் விட்டுவிடும். அது அடிமைத்தனத்திற்கு நேராக வழிநடத்தி தலைவராக அவருடைய எதிர்பார்ப்பினால் அவருடைய ஆழத்திலிருந்து வெளியே வந்துவிடுவார். இந்த எல்கைகள் தேவனுடைய சித்தத்தினால் தலைவருடைய வாழ்க்கைக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்குள்ளாக தலைவர்களுக்கு மிகப் பெரிய விடுதலை உண்டு. ஏனெனில் அவர் செய்யும்படியாக கேட்கப்பட்ட தேவனுடைய வேலைக்கு என்னதெல்லாம் செய்ய வேண்டும் என்பதை அவர் அறிவார்.

(v) தேவபயம்

தலைவரின் அதிகாரத்தின் மையம் தேவபயமாகும்.

தேவனுக்குப் பயப்படுகிற நபர்:

- ஞானத்தின் ஆதாரத்தை கண்டுபிடிப்பார் (நீதிமொழிகள் 9:10).
- எளிதாக வெளியே எடுத்துச் சென்று விடும் விருப்பங்கள் மற்றும் மேற்பரப்பான பகுதியான நியாயத்தீர்ப்பிலிருந்து விடுவிக்கிறது (ஏசாயா 11:3-5).
- தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து அவனுடைய தீர்மானங்கள் மற்றும் அவனுடைய செயலுக்கான திட்டங்களை அவன் அந்த சூழ்நிலையில் தன்னுடைய சொந்த திட்டங்களையும், காரியங்களையும் செய்வதற்கு பதிலாக தேவனை என்ன விசுவாசிக்கின்றானோ, அதின் அடிப்படையில் எடுக்கிறான்.
- தேவன் அனுமதித்த வடிவமைப்பில் தன்னுடைய பகுதியை செய்வதற்கு திருப்தியடைகிறான். அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அல்லது முக்கியத்துவமற்றதாக இருந்தாலும் அந்த பகுதியை செய்வதற்கு தன் முழு விருப்பத்தையும் தனது சிறந்த முயற்சியையும் அவன் செய்கிறான்.
- அவனுடைய பாவங்களையும், தவறுதல்களையும் பொறுப்பெடுக்க தகுதிப்படுத்தி, மனந்திரும்பச் செய்து தேவையான இடங்களில் சரி செய்ய உதவுகிறது.

(vi) ஐக்கியமுள்ள உறவுநிலை

கிறிஸ்துவின் சரீரத்திலே தலைவராக சேவை செய்தல் மற்ற ஜனங்களோடு நிலையான ஒருவருக்கொருவர் உள்ள தொடர்பு அடங்கியிருக்கிறது. ஐக்கியமுள்ள தொடர்பு கொள்வதற்கு தலைவர்கள் ஸ்தாபனத்தில் தங்களுடைய அதிகார வரம்பை அறிவது அவசியம். மேலும் அவர்கள் தங்களுடைய பதவியின் அகலம் எவ்வளவு என்று அறிய வேண்டும். தங்களுடைய அதிகாரம் எவ்வளவு தூரம் செல்லும்படியாகும் என்பதை அறிய வேண்டும். அவர்களுக்கு உரிமையில்லாத பகுதியில் தங்களுடைய அதிகாரத்தை திணிக்க தலைவர்கள் முயற்சிப்பார்களானால் எதிர்மறையான உணர்ச்சிகளும், மனங்காயங்களும் மாத்திரம் அதன் விளைவாக ஏற்படும். தலைவர்கள் சபையிலே தங்களுடைய இடத்தை அறிந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். அது தேவனுடையது என்று அறிய வேண்டும். எந்த மனிதனும் தங்களை அந்த இடத்தில் வைக்கவில்லை என்பதை அறிய வேண்டும்.

(vii) அச்சுறுத்துதல் அல்லது உதவுதல்

ஜனங்கள் தங்களைப் பார்க்கிற விதத்தில் நடப்பதற்கு பெரிய அளவில் சாத்தியக்கூறுகள் உண்டு. சபையிலே தங்களுடைய பொறுப்பு என்ன என்பதைக் குறித்து எண்ணுகிறார்களோ அதின் அடிப்படையில் செயல்பட முயற்சிக்கிறார்கள். ஒரு நபரின் அதிகாரத்திற்கு எதிரான

செயல்பாடுகள், அவர்கள் தம்மில் தாமே தலைவர்களாய் இருந்தாலும் அதிகாரத்தை அவர்கள் அச்சுறுத்துதலாக அல்லது உதவியாக எண்ணுவதை பொறுத்தே அமையும். அதிகாரத்தினால் வழிகாட்டுதல் நெறிமுறைகள் வகுக்கப்பட்டாலும் இந்த எண்ணத்தின் வழியில் தான் பார்க்கப்படுகிறது. ஜனங்களிடத்திலிருந்து அர்ப்பணிப்பை வற்புறுத்தும்போது பொதுவாக, அது கிரியை செய்வதில்லை. உங்களுடைய குழுவில் நல்ல ஒரு சூழ்நிலையை உருவாக்குவது சிறந்தது. ஜனங்களை உற்சாகப்படுத்துகிற தீர்மானங்களை உருவாக்கி, உங்களுடைய தலைமைத்துவத்திற்கு கீழ்ப்படிய வையுங்கள். இருந்தபோதிலும், இவைகள் ஒருபோதும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும் செலவுக்கு தக்கதாய் செய்யப்படக் கூடாது அல்லது ஒத்துப்போகக்கூடாது.

எது கிறிஸ்தவ அதிகாரம் அல்ல

உண்மையான கிறிஸ்தவ தலைமைத்துவம் என்பது ஆணையான்மை உள்ள விதத்தில் நாம் நடத்துகின்றவர்களின் மனதை மற்றும் நடக்கையை கட்டுப்படுத்துதல் அல்ல. இது ஒரு நல்ல மக்கள் தொடர்பு அல்ல. ஆர்வமும், கடமையும் ஊட்டவல்ல பிரசங்கபீட ஆழத்துவமும் அல்ல. விருப்பத்தோடு அதிகாரத்தை தேடுவதுமல்ல. அதற்கு பதிலாக, நமது பொறுப்பில் தேவன் கொடுத்திருக்கிற தாழ்மையோடு சேவை செய்து அவருடைய அதிகாரத்தையும், வல்லமையையும் உபயோகித்தலாகும். (மத்தேயு 20:25-28); 1கொரிந்தியர் 1:26-31). ஆணையான்மை தலைமைத்துவ அதிகாரத்தை திணிக்க முயற்சிக்கிறது. தன்னைத் தானே மாத்திரம் உயர்த்துகிறது. தன்னை பாதுகாத்துக் கொள்ள முயற்சிக்கிறது. சட்டப்பூர்வமான கொள்கையையும், பாரத்தையும் மாத்திரம் கொண்டு வருகிறது. கிறிஸ்தவ தலைவர்கள் மற்றொரு விதத்தில் அவருடைய பொறுப்பில் இருக்கிறவர் மேல் முழு அதிகாரம் உடையவாகள் அல்ல. எனவே அவர்கள் நடத்துகிறவர்கள் மேல் ஆளுகை செய்யவோ ஆதிக்கம் செலுத்தவோ கூடாது. ஆனால் கிறிஸ்துவைப் போல் ஒத்த தன்மையினாலும், தேவனுக்கு கீழ்படிவதினாலும் மாதிரியாக செயல்பட்டு அவர்களை கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சியடைய உற்சாகப்படுத்த வேண்டும். உண்மையிலே வேதம் சொல்லுகிறபடி மிகப்பெரிய தேவனுடைய தலைவர்கள் யாரென்றால், தேவனுக்கும், தாங்கள் நடத்துகின்றவர்களுக்கும் அவர்கள் மிகப்பெரிய வேலைக்காரர்கள் (மாற்கு 10:42-45).

இயேசு தன்னுடைய தலைவர்களுக்கு தருகிற அதிகாரம் எந்த ஒரு செய்கையையோ, அவர்களைப் பின்பற்றுகிறவர்கள் சுமந்து செல்லும்படி கட்டாயப்படுத்தும் உரிமையையோ கொடுக்கவில்லை. அல்லது கட்டளைக்கேற்ப நடப்பதை ஆதாயப்படுத்திக் கொள்வதற்குமல்ல. இந்தவிதமான தவறான வழியில் கட்டாயப்படுத்துவதின் மூலம் தன்னுடைய ஜனங்களை நசுக்கி விடுவார். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட தலைவர்களாக நாம் பெற்ற தேவன் கொடுத்த அதிகாரம்கூட உணர்வுபூர்வமாக, நுண்புலத்தோடும், ஞானத்தோடும், முதிர்ச்சியோடும் உபயோகிக்கப்பட வேண்டும். உண்மையிலே சொல்லப்பட்ட படியே, தேவனுடைய தலைவர்கள் தாங்கள் நடத்துகிறவர்களையும் அவர்களுடைய விருப்பங்களையும், செயல்பாடுகளையும் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக சேவை செய்வது அவசியம். தேவனுடைய பாதையிலிருந்து விலகி திரியும் நபர்களை கிறிஸ்துவுக்கு நேராக நடத்த வேண்டும். கீழ்படிதலை கட்டாயப்படுத்தக் கூடாது. அப்போஸ்தலனாகிய பவுல் கூட தெளிவாக மிகப்பெரிய அதிகாரத்தை உடையவராய் இருந்தார். கடுமையாக அதிகாரத்தை உபயோகிக்கவில்லை. ஏனெனில் தேவன் தாமே அந்த அதிகாரத்தை தந்தார் என்று அவர் அறிவார். அது அவர்களை கட்டவே, இடித்துப்போடுவதற்காக அல்ல (2கொரிந்தியர் 10:8; 13:10; 1தெசலோனிக்கேயர் 4:2). தேவனுடைய தலைவர்கள் தாங்கள் நடத்துகிறவர்கள் மேல் மிக வலிமையான அதிகாரத்தை உடையவர்களாய் இருக்கிற நேரம் எதுவென்றால், எப்பொழுது தேவன் முடிவான அதிகாரத்தை உடையவராகிய அவர் தருகின்றபோது மாத்திரமே. இங்கே தேவன் பேசுகிற எழுதின காரியம் எளிதாக கீழ்ப்படிவதை மாத்திரம் மற்றும் தேவனுடைய வார்த்தையை அவருடைய ஜனங்களுக்கு கொடுப்பதற்காக மாத்திரம் (2கொரிந்தியர் 13:2-4).

கிறிஸ்தவ தலைவர்களாகிய நாம் ஜனங்களை அறிவுகூர்மையுடன் கவர்ந்திழுக்க தேவையில்லை. நாம் செய்ய விரும்புவதை கட்டாயப்படுத்தி அவர்களை செய்ய வைக்க அவசியமில்லை. ஏனெனில் இயேசுவே அவருடைய சபைக்கு தலையாயிருக்கிறார். மேலும், கட்டுவேன் என்று வாக்குபண்ணி இருக்கிறார். அவர் எப்பொழுதும் போல் இன்றும் வல்லமையுள்ளவராய் இருக்கிறார் (எபிரெயர் 13:8). தலைவர்களாகிய நாம் அவருடைய வழிநடத்துதலை பின்பற்றும் வரை நாம்

நமக்குத் தேவையான எல்லா அதிகாரத்தையும் பயிற்சி பண்ண முடியும். நமக்குத் தேவைப்படுகிற எல்லா வல்லமையையும் உடையவர்களாய் இருப்போம். நம்முடைய சூழ்நிலையில் தேவனுடைய சித்தத்தை சுமந்து செல்வோம். தலைவருடைய அதிகாரம் என்பது எளிதாக விசுவாசிகளை இயேசுவுக்கு பதிலளிக்கிறவர்களாக மாறுவதற்கு உதவி செய்தலாகும், மற்றும் அவர்களை கட்டுப்படுத்துவதற்காக அல்ல. தலைவர்களுடைய விருப்பம் போல் நடக்க கட்டாயப்படுத்தக் கூடாது. இந்த காரியங்களால் இயேசு தாமே சிறந்த உதாரணத்தை முன் வைத்து சென்றிருக்கிறார். அவர் விரும்பியிருந்தால் நகரங்களை அல்லது உலகத்தை கூட முற்றிலும் இல்லாமல் அழித்து விடுவதற்கு அவர் வல்லமையுடையவராய் இருந்தார். அவர் திட்டவட்டமாக எளிதாக அறிவுத்திறமையினால் ஜனங்களை கவர்ந்திழுத்திருக்கலாம். குறிப்பிட்ட வழியில் தங்கள் நடக்கையை காண்பிக்கும்படி அவர்களை கட்டாயப்படுத்தி இருக்கலாம். ஆனால் அதை அவர் செய்யவில்லை. அவருக்கு செவி கொடுத்தவர்களை, விசுவாசிக்கவும், கீழ்படியவும் எளிமையாக அழைத்தார். அவ்வாறு ஜனங்கள் செய்யவில்லை என்றால் அவர்களுடைய விருப்பத்திற்கு அவர் விட்டுவிட்டார். இருந்தபோதிலும், அவர்களுடைய தேர்ந்தெடுப்பின் அடிப்படையில் அவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள். ஆனால் பூமியில் இருக்கும் வரை அவர்கள் தேர்ந்தெடுக்கும் உரிமையுள்ளவராய் இருக்கிறார்கள்.

தலைவர்கள் ஒருபோதும் அதிகாரத்தை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கக் கூடாது. அவர்கள் நடத்தும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறபடியால் ஜனங்களுடைய மரியாதையை எதிர்பார்க்கக் கூடாது. எல்லாவற்றிற்கும் மேலாக சபையிலே இருக்கிற ஜனங்கள் கீழ்படியும்படியாக எந்த ஒரு கட்டாயமும் இல்லை. தலைவருடைய அதிகாரம் அங்கிகரிக்கப்படவில்லை என்றால் அவர்களுடைய தலைமைத்துவம் சாத்தியமற்றதாய் மாறிவிடுகிறது. அப்பொழுது இராஜினாமா செய்யவேண்டியது வரும். கிறிஸ்தவ தலைவர்கள் அதிகாரத்தை பயிற்சிப்பது அவர்கள் அதிகாரத்தின் கீழ் சார்ந்திருக்கிறது. அது அவர்களுடைய அலுவலகத்திலிருந்தோ, தலைப்பிலிருந்தோ வராமல் தேவனிடத்தில் இருந்து அவருடைய வேலையை அவருக்கு பதிலாக செய்யும்படியாக வருகிறது. உதாரணமாக, அடையாள அட்டை அவ்வாறு சொல்லுகிறபடியினால் எந்த ஒரு நபரும் பாஸ்டர் அல்ல. தங்களுடைய ஜனங்களை மேய்த்து அவர்களுடைய ஆடுகள் அவர்களை பின்பற்றினால் மாத்திரமே அவ்வாறு சொல்ல முடியும். தலைவர்கள் தேவனுடைய அதிகாரத்தின் கீழ் இருக்கும் போது மாத்திரமே, அவருடைய இராஜ்ஜியத்தின் அதிகாரத்தை அவர்கள் பயிற்சிக்க முடியும். எனவே தலைவர்கள் அவர்களுடைய குழுவிலே மிகவும் அர்ப்பணிக்கப்பட்ட நபர்களாய் இருப்பது அவசியம்.

தேவசபையிலே எந்த பதவியின் அதிகாரமும் தலைவருடைய புகழுக்காக அல்லது மகிமைக்காக உபயோகப்படுத்தக் கூடாது. எல்லா மகிமையும் தேவனிடத்தில் செல்லவேண்டியது அவசியம். தேவன் கொடுத்த அதிகாரம் தேவனை மகிமைப்படுத்த தேட வேண்டும். அதன் பராமரிப்பின்கீழ் இருக்கிறவர்களை பாதுகாக்க வேண்டும். ஜனங்களை சுதந்திரமாய், சந்தோஷமாய், கனியுள்ளவர்களாய் இருப்பதற்கு விடுவிக்க வேண்டும். தலைவர்களாகிய நாம் நம்முடைய தேவனோடு தாழ்மையிலே நடக்க வேண்டும். அவருக்கு கீழ்ப்படிந்து நாம் நடத்துகிறவர்களுக்கு எந்த வழியில் எல்லாம் தேவையிருக்கிறதோ அவைகளில் எல்லாம் சேவை செய்ய வேண்டும்.

அதிகாரமும், கீழ்ப்படிதலும்

இயேசு சபையின் தலையாய் இருக்கிறார். அதன் வழியாக செயல்பட அவர் விருப்பம் கொண்டிருக்கிறார். ஏனெனில் அது பூமியிலே அவருடைய சரீரமாய் இருக்கிறது. எனவே விசுவாசிகள் அவருடைய தலைமைத்துவத்திற்கு அர்ப்பணிப்பது அவசியம். மற்றும் ஆண்டவர் அவர்களுக்கு மேலாக வைத்திருக்கிறவர்களுக்கும் அர்ப்பணிப்பது அவசியம். இந்த அதிகாரம் அங்கிகரிக்கப்படுதல் மற்றும் சம்பாதிக்கிறது மூலம் சிறந்த முறையில் அர்ப்பணிப்பை பெற முடியும். கட்டாயப்படுத்தி பெறுவதினால் அல்ல. கீழ்ப்படிதல் என்பது இருதயத்தின் நடக்கையாகும். அது அடிமைத்தனத்தின் பதவியல்ல. அர்ப்பணிப்பு என்பது உங்களை தன்னார்வமாக பராமரிப்பின் கீழ், பாதுகாப்பின்கீழ், தலைமைத்துவத்தின் கீழ் வைப்பதாகும். உங்கள் குழுவிலுள்ள அங்கத்தினர் எதையும் செய்ய கட்டாயப்படுத்த முடியாது என்பதை நினைவு கூறுங்கள். எப்படியிருந்தாலும், எப்பொழுது உண்மையான அதிகாரத்தை தலைவனிடத்தில் அங்கிகரிக்கிறார்களோ, அப்பொழுது அந்த அதிகாரத்தின் கீழ் இருப்பவர்கள் விருப்பத்தோடு அர்ப்பணிப்பார்கள்.

சபையிலே அதிகாரத்திற்கு அர்ப்பணித்தல் என்பது மூன்று வழிதொடர்புநிலையின் அடிப்படையில் உள்ளது. அதாவது தலைவர், ஜனங்கள், தேவனுக்கிடையே ஒரு தலைவர் தேவனுடைய முத்திரையை சுமந்திருப்பதோடு பின்பற்றுவார்கள். தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டுமென்று நினைக்கிற குழு அங்கத்தினர்கள் தலைவருடைய வழிகாட்டுதலுக்கு செவிகொடுத்து செயல்படுவார்கள். அவர்களுக்குள் தேவனுடைய வார்த்தை இருப்பதைக் கேட்டு அங்கிகரித்தார். உண்மையிலே தலைவர்கள் அதிகமாக தேவனுக்கு அர்ப்பணிக்கும்போது (முதல் தரத்திலே அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளப்பட்டவர்கள்) அதிகமாக தேவனுடைய அதிகாரத்தை அந்த தலைவர்கள் உடையவர்களாக இருப்பார்கள். ஏனெனில் அவருக்கு அவருடைய அதிகாரத்தின் கீழ் இருப்பவர்கள், அதிகாரத்தைப் பெற்றவர்கள் என்று கண்டுபிடிப்பார்கள் (மத்தேயு 8:8,9). ஒரு தலைவரிலே தேவனுடைய அதிகாரம் எப்பொழுது விடுவிக்கப்பட்டு அவரால் நடத்தப்படுகிறவர்களால் பதிலளிக்கப்படும்போது பெரிய விளைவுகளையும் தேவனுக்காக கனிநிறைவையும் பெற தகுதியாக்குகிறது.

தேவனே முடிவான அதிகாரம் அதை அவர் கையாண்டு, தலைமைத்துவத்தை எழுப்பும்போது பகிர்ந்தளிக்கிறார். தேவன் தன்னை பின்பற்றுகிறவர்களை அவர்களுடைய தலைவர்களுக்கு கீழ்ப்படிந்து அர்ப்பணிக்கச் சொல்லுகிறார் (எபிரெயர் 13:17). விசுவாசிகளாகிய நாம் தேவன் நமக்கு மேல் எழுப்பினவர்களுக்கு அர்ப்பணிக்கும்போது உண்மையிலே நாம் அவருக்கு அர்ப்பணிக்கிறோம். நமக்கு எந்த தேர்ந்தெடுப்பும் இல்லாதபடியினால் நம்முடைய தலைவர்கள் சொல்லுகிற எல்லாவற்றிற்கும் நாம் அர்ப்பணிக்க வேண்டும். என்பது இதன் அர்த்தமல்ல. ஆனால் இந்த அர்ப்பணிப்பு மரியாதையின் நிமித்தமாக எழும்புகிறதாய் இருக்கவேண்டும். தலைவர்களை தேவனுக்கு முன்பாக வைத்து அங்கிகரித்துக் கொள்ள வேண்டும் என்பதாகும் (1தெசலோனிக்கேயர் 5:12,13).

கிறிஸ்துவின் சரீரத்தில் பங்குள்ளவர்களாகிய விசுவாசிகள் தேவனுக்காக இவ்வுலகத்தில் உண்மையாகவே தாக்கத்தை ஏற்படுத்தவேண்டுமானால் அவர் பகிர்ந்தளித்த தலைமைத்துவத்திற்கும் தேவனுக்கும் தரமுடையவர்களாய் இருப்பது அவசியம். அவருடைய இராஜ்ஜிய விரிவாக்கத்திற்காக தேவனுக்கு மகிமை கொண்டுவரும்படியாக தலைமைத்துவத்தின் மூலமாக தேவன் நடத்துகிற வழியில் அதிகமாய் செல்வது அவசியம். தேவனுக்கு முன்பாக அவர்களுக்கு பொறுப்பாய் இருக்கிற தலைமைத்துவத்திற்கு அர்ப்பணித்து உண்மையாய் இருப்பது அவசியம். தலைவர்கள் மூலமாய் தனிப்பட்ட ரீதியிலே வேதவசனத்தை கேட்க வேண்டும். அதை மிக கவனமாக கையாளும்படியாக போதிக்க வேண்டும் (1தெசலோனிக்கேயர் 2:13); தெய்வீக மாதிரியான தங்களுடைய தலைவர்களைப் பின்பற்ற வேண்டும் (1தெசலோனிக்கேயர் 1:6); தங்களுடைய தலைவருடைய ஊழியங்களுக்காக குடும்பங்களுக்காக ஜெபிக்க வேண்டும் (1தெசலோனிக்கேயர் 3:1); ஆர்வமுடன் தலைவர்களை வாழ்த்த வேண்டும். வரவேற்கப்பட்டவர்களாக அன்புகூரப்பட்டவர்களாக உணரச் செய்ய வேண்டும். தங்களுடைய தலைவர்களை பாராட்டி அவர்களுக்க கொடுக்க வேண்டிய மரியாதையை கொடுத்து அங்கிகரிக்க வேண்டும் (1தெசலோனிக்கேயர் 5:12,13).

நமது பதிலை வேறு ஒருவர் கொடுக்க எப்பொழுதும் நாம் அர்ப்பணிக்க வேண்டும். ஆனால் அந்த அர்ப்பணிப்பு எதை சிந்திக்க வேண்டும், எப்படி சிந்திக்க வேண்டும் என்று அறியாதிருக்கிற காய்கறிகளைப் போல இருப்பதற்கு ஒருபோதும் உற்சாகப்படுத்தக் கூடாது. இந்த சூழ்நிலை அடிக்கடி நாம் எப்பொழுது மிக அழுத்தமாக தலைமைத்துவ ஆதிக்கம் செலுத்தி நாம் நடத்துகிறவர்களுக்காக தீர்மானம் எடுக்கும்போது எழும்புகிறது. இது சபையிலே எந்த வித கீழ்ப்படிதல் பிரச்சனைகளையும் எழுப்பாது. ஆனால் எந்தவித ஆரம்பித்தலும் இருக்காது. விளைவு உற்பத்தியற்ற தன்மையாக இருக்கும். இப்படிப்பட்ட முறையின்படி இருக்கிற கிறிஸ்தவர்கள் உணவு ஊட்டப்படுகிற குழந்தைகளைப் போல இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் ஒருபோதும் உண்மையிலே கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சி அடைவதில்லை. அவர்களை நடத்துகிறவர்களுக்கு அடிமைகளாகி என்ன உடுத்த வேண்டும், எப்படி சிந்திக்க வேண்டும், எப்பொழுது திருமணம் முடிக்க வேண்டும், விடுமுறைக்கு எங்கே செல்ல வேண்டும் என்பதெல்லாம் அவர்களுக்கு சொல்லப்பட வேண்டும். இது தேவன் விரும்புகிற காரியமல்ல. திட்டவட்டமாக இப்படிப்பட்ட முறைமையை நாம் ஆதித் திருச்சபையிலே பார்ப்பதில்லை. தேவன் தம்மிடத்தில் வருகிறவர்கள் ஆசாரியராக, மகனாக சொந்தமாக தீர்மானம் எடுக்கக்கூடிய முதிர்ந்த கிறிஸ்தவராக இருக்க விரும்புகிறார். தங்களுடைய தலைவர்களுடைய சாதாரண விரிவாக்க ஜனங்களாக இருக்க விரும்பவில்லை. மிக அதிகாரமுள்ள தலைவர்களாய் வற்புறுத்தப்படுகிற அர்ப்பணிப்பு சுயசித்தத்தை பலியாக்குவது அல்லது மிகப்பணிவான தன்மையைத் தவிர வேறொன்றும்

இல்லை. ஆனால் உண்மையான கிறிஸ்தவ அர்ப்பணிப்பு தேவனுக்குள் முழு திறமையில் ஜனங்கள் வளர அனுமதிக்கிறது. இது தாங்கள் நடத்துகிறவர்களை நேசிப்பதின் மூலமாக எழும்புகிறது. அவர்களுக்கு சிறந்ததை மாத்திரம் விரும்புகிறார்கள். ஏனெனில் அவர்கள் இயேசுவின் விரிவாக்கமாயிருந்து, அவரைப் பின்பற்றுகிற எல்லோரிலும் இந்த வழியாக பார்க்கிறார்கள்.

அதிகாரமும் சபை ஒழுங்குமுறைப்படுத்துதலும்

கிறிஸ்து தலையாக இருக்கிறார். சபையிலே தேவனுடைய ஒழுங்குமுறைப்படுத்துதலைக் கொண்டு வருவது, தேவனுடைய தலைவர்களின் பொறுப்பிலே ஒருபகுதியாக இருக்கிறது. சபை ஒழுங்குமுறைப் படுத்துதல் சரியான வழியில் எடுத்துச் செல்லப்படும்பொழுது சபையானது தேவனுடைய சித்தத்தில் இருப்பதற்கு உதவியாய் இருக்கிறது. இவைகள் சபைத் தலைவர்களால் இயேசுவுக்காக ஒழங்குமுறைப் படுத்தப்படவேண்டும்.

சகவிசுவாசியின் மேல் ஒழுங்குமுறைப்படுத்துதலை தலைவர் கொண்டு வரும்போது இரண்டு காரியங்களை நினைவில் கொள்வது அவசியம். முதலாவது மற்ற நபரை தலைவர்கள் ஒருபோதும் கோபத்தினாலோ அல்லது பழிவாங்குவதற்கோ ஒழுங்குமுறைப் படுத்தக்கூடாது. ஆனால் அந்த நபரின் அன்பின் இருதயத்தை ஆதாயப்படுத்திக் கொள்வதற்காக முயற்சி செய்ய வேண்டும். இது அவர்களை ஒழுங்குமுறைப் படுத்தும்போது சரியான நோக்கத்தில் வைக்க உதவிசெய்யும். அவர்கள் பொறுப்பிலுள்ள குழுவிற்காகவும், அந்த நபரின் சிறந்த நன்மைக்காக மாத்திரமே அவர்கள் செய்வார்கள் (ரோமர் 12:10). சபை ஒழுங்குமுறைப் படுத்துதல் அன்பின் நோக்கத்தின் வெளிப்பாட்டிலிருந்து எழும்ப வேண்டும். குழு அங்கத்தினர்களை நீதியின் இடத்திலே வைப்பதற்காக இரண்டாவது ஒழுங்குமுறைப்படுத்துதலில் நம்முடைய நோக்கம் எப்பொழுதும் சீர்பொருந்தப்பண்ணுதலாகும் (கலாத்தியர் 6:1; யாக்கோபு 5:19,20; யூதா 22,23). நம்முடைய ஜனங்களை ஒழுங்குமுறைப்படுத்துதல் நம்முடைய நோக்கம், திரும்பவும் தேவனோடும், அவருடைய சித்தத்திற்குள்ளாய் மீண்டும் கொண்டுவருவதாகும்.

<u>சபை ஒழுங்கு முறைப்படுத்துதலைக் குறித்ததான காரியத்தில் வேதாகமம் பின்பற்றும்படியான தெளிவாக வழிகாட்டு நெறிகளைத் தருகிறது:</u>

"[15]உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய். [16]அவன் செவிகொடமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. [17]அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும் இருப்பானாக." (மத்தேயு 18:15 -17).

- சகல காரியங்களும் இரண்டுமூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும். (2கொரிந்தியர் 13:1).
- முதிர்வயதுள்ளவனைக் கடிந்துகொள்ளாமல், அவனைத் தகப்பனைப் போலவும் (1தீமோத்தேயு 5:1).
- மூப்பனானவனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் நீ ஏற்றுக் கொள்ளக்கூடாது. மற்றவர்களுக்குப் பயமுண்டாகும்படி, பாவஞ்செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாகக் கடிந்துக்கொள். (1தீமோத்தேயு 5:19,20).
- [10]வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனை விட்டு விலகு. [11]அப்படிப்பட்டவன் நிலைதவறி, தன்னில்தானே ஆக்கினைத் தீர்ப்புடையவனாய்ப் பாவஞ்செய்கிறவனென்று அறிந்திருக்கிறாயே. (தீத்து 3:10,11).
- நாம் ஒழுங்குமுறைப்படுத்துகிற நபரோடு மிகக் கடினமாக நடந்துக் கொள்ளக்கூடாது. அவர்கள் தேவபக்தியற்ற வழிகளை விட்டு திரும்பும்போது அவர்களை மீண்டும் ஏற்றுக்

கொள்ள விரும்பம் உடையவர்களாய் இருக்க வேண்டும். தேவன் ஒவ்வொரு நபரும் துன்மார்க்கமான வழியை விட்டு திரும்பி வாழ விரும்புகிறார். (எசேக்கியேல் 33:10-20) மற்றும் அவருடைய தலைவர்களும் இதே வழியில் உணர வேண்டும். ஜனங்கள் பாவத்தில் விழும்போது நாம் சந்தோஷப்படக் கூடாது. தேவனுக்கு முன்பாக அவர்களை நீதியினிடத்திலே திரும்ப உயிர்பிக்கும்படியாக நாம் எல்லாவற்றையும் செய்வது அவசியம் (2கொரிந்தியர் 2:5-8).

- ❖ சில வேளைகளில் விசுவாசிகளை ஒழுங்குமுறைப் படுத்துவதற்கு சரியான வழி அவர்களை அவர்களுடைய பாவத்திற்கோ அல்லது சாத்தானிடத்திலோ ஒப்புக் கொடுப்பதாகும். அதினால் அவர்களுடைய உணர்ச்சியில் அதிர்ச்சியடைந்து அல்லது எப்படியாவது தங்களுடைய தவறை உணர்ந்து நீதியின் வழியிலே புதுபிக்கப்படுவார்கள் (1தீமோத்தேயு 2:5-8).

- ❖ தேவபக்தியற்றவர்களுக்கு முன்பாக நம்முடைய வழக்குகளை எடுத்துச் செல்லக்கூடாது (1கொரிந்தியர் 6:1-8).

தேவனுடைய தலைவர்கள் தத்துவங்களின் அடிப்படையில் செயல்படலாம். ஏனெனில் தேவனுடைய வசனம் அதை செய்வதற்கான அதிகாரத்தை கொடுக்கிறது (தீத்து 2:15). சபை ஒழுங்குமுறைப் படுத்துதல் ஒருவருக்கொருவர் ஆரம்பிக்கப்பட வேண்டும். தேவைப்படும்போது மாத்திரமே ஏற்படுத்தப்பட வேண்டும். தனிப்பட்ட பாவங்கள் தனியாக இடைப்பட வேண்டும். பொதுவானவைகள் சட்டத்திட்டத்தின்படி பொதுவாக இடைப்பட வேண்டும். நாம் இவைகளைச் செய்வதற்கு காலதாமதமாகும் போது முழு சரீரமும் பாதிக்கப்படும். ஏனெனில் தலைமைத்துவம் அமைதியாய் இருப்பதின் மூலம் தவறான நடக்கைகைக்கு தவிர்ப்பு அளிப்பதின் மூலம் இது நடைபெறுகிறது.

எந்த ஒரு ஒழுங்குமுறைப்படுத்துதலையும் கொண்டுவருவதற்கு முன்பு தேவனிடத்தில் சில மணி நேரங்கள் காத்திருப்பது மிக முக்கியமானது. இது அந்த சூழ்நிலையில் அவருடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதை அறிவதற்கான தருணமாகும். மற்றும் அவர் என்ன செய்வார் என்பதையும் அறியும் தருணமாகும். ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு கடினமான சூழ்நிலை வரும்போது (தலைவர்களாகிய உங்களை காயப்படுத்தும்போது), பொதுவாக, அந்த சூழ்நிலையிலிருந்து 'கொடுக்கு' போவதற்காக சில காலம் விட்டு விடுவது சிறந்தது. இதன் அர்த்தம் நீண்ட காலம் காத்து இருக்க வேண்டும் என்பதல்ல, மற்றும் நம்முடைய குழுவில் வேறுன்ற அனுமதிக்க வேண்டும் என்பதல்ல. இப்படிச் செய்வது அதிக பாதிப்பை உண்டாக்கும் (நீதிமொழிகள் 10:17; 1கொரிந்தியர் 5:6,7). ஆனால் தேவனுடைய நேரத்தில் மாத்திரமே நாம் ஒழுங்குமுறைப் படுத்தவேண்டும் என்பதாகும்.

சபை ஒழுங்குமுறைப் படுத்தல் தேவைப்படும் நேரங்கள் பின்வருமாறு:

- ■ ஜனங்கள் பிரிவினைக்கு காரணமாகும்போது தடைகள் ஏற்படுவதை கண்டுபிடிக்கும்போது (அவர்கள் வேதவசனத்திற்கு எதிர்மறையாய் இருக்கும்போது) தேவனை பின்பற்ற முயற்சி செய்கிறவர்களுடைய வழியில் தடைகளை ஏற்படுத்துதல் (ரோமர் 16:17).

- ■ சபையின் அங்கத்தினர் நடுவே வழக்குகள் ஏற்படும்பொழுது (1கொரிந்தியர் 5:12,13).

- ■ சபையிலே எந்தவிதமான ஒழுக்கக் கேடுகளும் வேர் விட முயற்சிக்கும்போது (1கொரிந்தியர் 5:1-5).

- ■ ஜனங்கள் சோம்பேறிகளாய் இருந்து வேதவசனத்தின்படி வாழாமல் இருக்கும்பொழுது (2தெசலோனிக்கேயர் 3:6; 1தெசலோனிக்கேயர் 5:14).

- ■ ஜனங்களில் யாராவது வஞ்சனை எந்த வடிவத்தையாவது தழுவுகிறதை கண்டுபிடிக்கப்படும் பொழுது (எபேசியர் 5:6,7).

துரதிஷ்டவசமாக, அநேக தலைவர்கள் தங்களுடைய ஜனங்களை சரி செய்யவோ, ஒழுங்குமுறைப்படுத்துவதற்கோ விரும்புவதில்லை. இவைகள் பாவத்திற்கான சூழ்நிலையை உருவாக்கி, ஒத்துப்போகுதல் வேருன்றி பெலவீனமான கிறிஸ்துவின் சரீரத்திற்கு காரணமாகி விடும். தேவன் நம்மை நேசிக்கிற படியினால் நம்மை சிட்சிக்கிறார் (எபிரெயர் 12:5,6). தலைவர்கள் தங்களுடைய

ஜனங்களை ஒழுங்குமுறைப் படுத்த வேண்டும். ஏனெனில் அவர்களை நேசித்து அவர்கள் முன்னேறுகிறதை காண விரும்புகிறபடியினால்.

தலைவர்கள் தங்களுடைய ஜனங்களை ஒழுங்குமுறைப்படுத்தாததற்கு சில காரணங்கள் பின்வருமாறு:

- தங்களுடைய சொந்த குடும்பத்தை அவர்கள் ஒழுங்குமுறைப் படுத்துவதில்லை. ஆகையால் மற்ற ஜனங்களை ஒழுங்குமுறைப் படுத்த முடியாது என்று உணருகிறார்கள்.
- தங்களுடைய வாழ்க்கையிலே அறிக்கை செய்யப்படாத பாவத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். அது தேவனோடு நடப்பதற்கு தடையை ஏற்படுத்தி கிறிஸ்துவில் அதிகாரத்தின் ஸ்தானத்தை பெலவீனப்படுத்துகிறது.
- போதுமான அளவு தேவனையும், அல்லது அவருடைய வார்த்தையையும் அறியாமலிருந்து எந்தந்தப் பகுதியில் ஒழுங்குமுறைப் படுத்தல் தேவையாயிருக்கிறது என்பதை அறியாமல் இருக்கிறார்கள்.
- அவர்கள் மற்ற ஜனங்களை அதிகமாக தயவுபண்ண விரும்புகிற படியினால் இந்த காரியத்திற்கு இடையூறுச் செய்யும் எதையுமே செய்வதில்லை. ஜனங்களை தங்களுடைய சொந்த காரியங்களை செய்வதற்கு அனுமதிக்கும்போது ஜனங்கள் தளர்த்தப் பட்டதாகவும், சந்தோஷமாகவும் உணர்கிறார்கள். ஆனால் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு ஆக்கப்பூர்வமானதாய் இராது (நியாயதிபதிகள் 21:25).
- அவர்களை நடத்துகிறவர்கள் தேவைப்படும்பொழுது உறுதியாய் நிலைநிற்க போதுமான அளவு அவர்களை நேசிக்காதபடியினால்
- அவர்கள் சுயநீதியுள்ள ஒருவராய் அல்லது ஜனங்களை எப்பொழுதும் பார்க்க விரும்பாத படியினால் திட்டுகிற ஒருவராய் இருக்கலாம். எனவே அவர்கள் மற்றவழியில் சமநிலையற்றவர்களாய் மாறி தேவைப்படும்பொழுது ஒழுங்குமுறைப் படுத்துவதில்லை.
- தங்களுடைய ஜனங்கள் தங்களை தள்ளிவிடுவார்கள் என்று அவர்கள் பயப்படுகிற படியினால் அல்லது தங்களுடைய ஒழுங்குமுறைப் படுத்துதலை தள்ளிவிடுவார்கள் என்று பயப்படுகிற படியினால். எனவே தங்கள் முகத்தைக் காத்துக்கொள்ள தட்டி கழிக்கிறார்கள். தங்கள் மேலுள்ள நல்ல மதிப்பை பராமரிப்பதற்கும் மற்றும் தங்களுடைய நண்பத்துவத்தையும் பராமரிக்க.
- அவர்கள் ஒழுங்குமுறைப் படுத்த விரும்பாத மற்ற ஜனங்களின் அழுத்தத்திற்கு பணிகிறார்கள். உதாரணமாக, மூப்பர்கள், மற்ற தலைவர்கள், குழுவிலே ஆதிக்கமுள்ள ஜனங்கள்.
- தலைவர்களாகிய அவர்கள் தங்களுடைய அதிகாரத்திலே பாதுகாப்பற்றவர்களாய் உள்ள படியினால்.

இளம் சிறுவர்கள் எப்பொழுதும் அவர்கள் குறிப்பிட்ட குணாதிசயத்தின் வரைமுறைக்குள்ளாக அதை தாண்டக்கூடாது என்று அறியும்பொழுது சந்தோஷமாக அதிக பாதுகாப்பாக இருக்கிறார்கள். தேவ ஜனங்களுக்கும் இது உண்மையானதாகும். தங்களுடைய தலைவர்களால் கவனிக்கப்படுகிற ஆவிக்குரிய எல்கையை கடக்கக்கூடாது என்று அவர்கள் அறிவது அவசியம். தேவனுடைய ஒழுங்குமுறைப் படுத்துதல் மாம்சத்திற்கு சந்தோஷமாய் இராது. ஆனால் ஆவியிலே, அதில் பழகினவர்களுக்கோ நீதியாகிய சமாதான பலனைத் தரும் (எபிரெயர் 12:5-11). தேவைப்படுகிற ஒருவருடைய செய்கையை ஒழுங்குமுறைப் படுத்துவதற்கு வார்த்தை எப்பொழுதும் போதுமானதாய் இராது (நீதிமொழிகள் 29:19).

ஒருவரை ஒழுங்குமுறைப் படுத்தும்போது அவர் எங்கே தவறி சென்றிருக்கிறார் என்றும் எப்படி சரியான வழி செல்ல வேண்டுமென்றும் காட்டுவது அவசியம். ஈடுபட்டிருக்கிற ஜனங்களுக்கு பிறகு மனந்திரும்புதலின் தேவையையும், தேவனோடு மீண்டும் எப்படி இணைவது என்பதையும் காண்பிக்க வேண்டும். அந்த தவறிலே மீண்டும் அதே வழியில் விழுந்து விடாதபடிக்கு அறிவுறுத்தி அவர்களுக்கு உதவ வேண்டும் (2தீமோத்தேயு 2:25,26).

எல்லாவிதமான சபை ஒழுங்குமுறைப் படுத்தலும் கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தினர் மூலமாகவும் எடுத்துச் செல்லப்படலாம் என்று ஒருபோதும் நினைக்கக் கூடாது. எல்லா விசுவாசிகளும் ஒருவருக்கொருவர் போதித்து, புத்தி சொல்ல வேண்டும். ஆனால் தலைமைத்துவத்தில் இருப்பவர்களோ யார் அதிக ஆவிக்குரிய மற்றும் தேவனில் முதிர்ச்சியடைந்தவாகளாய் இருக்கிறார்களோ அவர்கள் மாத்திரமே மிக கஷ்டமான சம்பவங்களை கையாளுவதற்கு அனுமதிக்கப் படவேண்டும்.

அதிகாரமும் ஆவிக்குரிய யுத்தமும்

தேவன் ஆரம்பத்திலே மனித குலத்திற்கு தந்த வல்லமையையும், அதிகாரத்தையும் சாத்தான் பறித்துக்கொண்டான் (லூக்கா 4:6; ஆதியாகமம்). ஆனால் கிறிஸ்துவுக்குள் விசுவாசிகள் மீண்டும் வல்லமையையும் அதிகாரத்தையும் அறிகிறார்கள். இயேசுவின் மரணமும், உயிர்த்தெழுதலும் சாத்தான் மற்றும் விழுந்துபோன தூதர்களின் வல்லமையை பறித்து முறித்துப் போட்டது (கொலேசெயர் 2:15; எபிரெயர் 2:14,14; 1யோவான் 3:8). இயேசுவிற்கு எல்லா அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் சிலவற்றை தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கு பகிர்ந்தளித்து எல்லா தேசங்களிலும் சீஷர்களை உருவாக்க கட்டளையிட்டிருக்கிறார் (மத்தேயு 28:18-20; மாற்கு 16:15-18; எபேசியர் 1:17-23). அவர் ஆரம்பித்த வேலையை அவர்கள் தொடர்ந்து செய்ய விரும்புகிறார். எல்லா துரைத்தனத்தையும், அதிகாரம் மற்றும் வல்லமையையும் பரிகாரித்து பிதாவாகிய தேவனுக்கு அவர் மீண்டும் இராஜ்ஜியத்தை ஒப்புக் கொடுத்து முடிவு உண்டாகும் வரைக்கும் (1கொரிந்தியர் 15:24-28). அதே வேளையில் தேவன் தம்முடைய ஜனங்கள் அவருடைய அதிகாரத்தை தீமையானவைகளின் மேல் பயிற்சி செய்து அவருடைய கட்டளைக்கு கீழ்படிகிறதின் மூலம் அவருடைய இராஜ்ஜியத்தை விரிவாக்க விரும்புகிறார். (அப்போஸ்தலர் 1:8; பிலிப்பியர் 2:12,13).

தேவனுடைய தலைவர்கள் தங்களுடைய ஜனங்கள் இருளின் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்பதற்கு உற்சாகப்படுத்தவேண்டும். இது ஆவிக்குரிய யுத்தத்தின் ஏதாவது ஒரு விதத்தில் ஈடுபட்டிருக்கிற நம் அனைவருக்கும் தேவை (எபேசியர் 6:10-18). சாத்தான் எல்லா தேவனுடைய வேலையையும் அழிப்பதற்கு முயற்சி செய்கிறான். எனவே தேவனுடைய ஜனங்கள் அவனுடைய திட்டங்களை குறித்து விழிப்பாயிருந்து அவைகளை தடை பண்ண வேண்டும். தேவனுடைய இராஜ்ஜியத்தின் வேலைகள் தொடர்ந்து செல்ல வேண்டும். தேவனுடைய தலைவர்கள் தங்களுடைய ஜனங்களை இந்தப் பணிக்காக அணிதிரட்டுவது அவசியம். தேவன் தம்முடைய எல்லா ஜனங்களும் விசேஷமாக தன்னுடைய தலைவர்களும் (யாரெல்லாம் சரியான மாதிரியை வைக்க விரும்புகிறார்களோ) தீமையின் மீது அவர் கொடுத்த இந்த அதிகாரத்தை செயல்படுத்த விரும்புகிறார் (யாக்கோபு 4:7; 1பேதுரு 5:8,9). நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும் வரைக்கும் சத்துருவைக் குறித்து நாம் எந்த விதத்திலும் பயப்படத்தேவையில்லை (கொலேசெயர் 3:23), ஏனெனில் அவர் எல்லா துரைத்தனத்திற்கும், அதிகாரத்திற்கும் வல்லமைக்கும் கர்த்தத்துவத்திற்கும் மேலாக உயர்ந்திருக்கிறார் (எபேசியர் 1:17-23). அவைகள் எல்லாம் அவருக்கு கீழ்ப்பட்டிருக்கிறது. அவருடைய நாமத்தில் அவருடைய சித்தத்தை செய்யும் நமக்கும் கீழ்பட்டிருக்கிறது. அறிவதற்கு ஆறுதலாய் இருக்கின்ற காரியம் என்னவென்றால் தேவனுடைய அதிகாரத்துடன் கூடிய ஒரு தலைவர் இருளின் அதிகாரத்தினால் அங்கீகரிக்கப்பட்டு பயப்படுவதாகும். (அப்போஸ்தலர் 19:15).

கிறிஸ்தவ தலைவர்கள் தங்களுடைய ஜனங்களை ஆளுகை செய்கிற அரசாங்க அதிகாரங்களுக்கு கீழ்ப்படிய உற்சாகப்படுத்துவது அவசியம். அவைகளெல்லாம் சில வழிகளில் விசுவாசிகளை பாதுகாக்க தேவனால் ஏற்படுத்தப்பட்டது (ரோமர் 13:1-7; 1பேதுரு 2:13,14; தீத்து 3:1). அவர்கள் தேவனுடைய முகவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் இல்லாவிட்டால், இந்த பாவ உலகில் யாவரும் தங்களுக்கு விருப்பமானதை அநேகமாக செய்வார்கள். அதன்பிறகு இந்த உலகம் சர்வ குழப்பமாய் மாறி தேவனுடைய இராஜ்ஜியத்தின் வேலை செய்வதற்கு மிகக் கடினமாய் மாறிவிடும். நமக்கு மேலே இருக்கிற அதிகாரங்களுக்கு கீழ்படிந்து அமைதியாய் வாழ முயற்சிப்பதற்கு பொதுவாக அவர்களுடைய கரங்களிலே நாம் துன்பப்படுவதை நிறுத்தும். எப்படியிருந்தாலும் அவர்கள் தேவனுடைய சட்ட திட்டங்களை மீறுகின்றார்கள். முதலாவது தேவனுக்கு கீழ்ப்படிவது நமது கடமையாய் இருக்கிறது. அவர் நாம் செய்ய எதிர்பார்க்கிற காரியங்களை எதிர்பார்க்கிற வண்ணமாய் செய்வதற்காகும்.

தேவனுடைய தலைவர்கள் தங்களுடைய ஜனங்களை ஆளுவதற்கு எல்லா அதிகாரங்களை தேவன் தாமே ஏற்படுத்தியிருக்கிறார் என்று நினைவு படுத்துவது அவசியம். அவர்களுக்கு கீழ்படியும்படியாக அவர் கட்டளையிட்டு இருக்கிறார். கலகம் பண்ண அல்ல. இப்பொழுது இருக்கிற முழு உலக நடைமுறையின் கட்டுப்பாடும் பொல்லாங்கன் கையிலே இருக்கிறது என்பது நினைவு கூறப்படவேண்டும் (1யோவான் 5:19). இந்த உலக நடைமுறை மனித குலத்தை கட்டுப்படுத்தவும், விளைவை உண்டாக்கும் முக்கிய கருவிகளில் ஒன்றாக இருக்கிறது. இரட்சிக்கப்படாதவர்களின் உலகம் இருளின் இடமாகும். அதிலே ஜனங்களுக்கு நம்பிக்கையில்லை. உண்மையிலே அவர்களெல்லாரும் பொல்லாங்களின் வல்லமையின் கீழ்யிருக்கிறார்கள். விசுவாசிகள் மாத்திரம் இந்த இருளிலிருந்து இயேசுவினால் மீட்கப்பட்டு தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள்ளாக கொண்டு வரப்பட்டார்கள். அவர்கள் சத்துருவின் பிடியில் இல்லை (எபேசியர் 2:1-10; கொலேசெயர் 1:13). எனவே விசுவாசிகள் முடிவான அதிகாரமுள்ள தேவனுடைய உயர்ந்த கட்டளையை அவர்கள் மீறாதவரைக்கும் மாத்திரமே உலக தலைவர்களுக்கு கீழ்படிவது அவசியம் (அப்போஸ்தலர் 4:19). தங்களுடைய தலைவர்களுக்காக அவர்கள் ஜெபிப்பது அவசியம். அப்பொழுது தான் சமாதானத்தின் சூழ்நிலை நிலைநிற்கும் மற்றும் தேவனுடைய வேலை அதிக ஆக்கப்பூர்வமாய் எடுத்துச் செல்லப்படும் (1தீமோத்தேயு 2:1-4).

சாத்தான் தேவனுடைய வேலையை தடைசெய்ய முயற்சிப்பான். இதை அடிக்கடி அவன் விசுவாசிகளுடைய வாழ்க்கையில் பயம், பாதுகாப்பின்மை, பாவத்தை உற்பத்தி செய்ய முயற்சிக்கிறான். இதன் மூலம் விசுவாசியை மட்டுப்படுத்தி அவன் தேவனுடைய அதிகாரத்தில் வாழுவதை நிறுத்த முயற்சிக்கிறான். தேவனுடைய தலைவர்கள் தங்களுடைய ஜனங்களை அதாவது கிறிஸ்தவர்களை, அவர்கள் சத்துருவைக் காட்டிலும் அதிக அதிகாரத் திட்டத்தின் கீழ் செயல்படுத்துகிறார்கள் என்பதை (அவர்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கும் பொழுது) நினைவு படுத்துவது அவசியம். எனவே அவர்கள் அவனுடைய தாக்குதலை தடைபண்ணி அவனுடைய திட்டங்களை அழிக்க முடியும். சபையின் பணியாகிய கிறிஸ்துவுக்கு ஆத்துமாக்களை ஆதாயம் செய்தலை மற்றும் சிறைபட்டவர்களை விடுவிப்பதை சத்துருவானவன் தடை பண்ணவோ நிறுத்தவோ முடியாது. அவன் ஒருவேளை அநேக சிறு வெற்றிகளை அடையலாம். ஆனால் முடிவான விளைவு ஏற்கனவே நிறுவப்பட்டு விட்டது.

எப்பொழுது விசுவாசிகள் தெய்வீக தலைமைத்துவத்திற்கு கீழ்படிகிறார்களோ, அப்பொழுது அவர்கள் சத்துருவில் இருந்து பாதுகாக்கப்படுகிறார்கள். ஏனெனில் அவர்களுடைய தலைமைத்துவம் அவர்களுக்கு ஆவிக்குரிய பாதுகாப்பின் திரையாய் இருக்கிறது. தேவனுடைய தலைவர்கள் தங்களுடைய ஜனங்களுக்கு பாதுகாப்பு திரையாய் செயல்படுவது இன்றைய நாளின் மிகப்பெரிய தேவையாய் இருக்கிறது. சாத்தான் தேவனுடைய வார்த்தையை சிதைக்க முயற்சிக்கிறான். பூமியிலே தேவனுடைய வார்த்தையை அழிக்க நினைக்கிறான். அவனுடைய அதிக வெற்றியுள்ள தந்திரங்களில் ஒன்று ஏமாற்றுவதை பரப்பி அதன் மூலமாய் தேவனுடைய ஜனங்கள் பொய்மை மற்றும் தவறுக்கு நேராக வழி விலகி நடத்தப்பட காரணமாய் அமைகிறது (மாற்கு 13:22; மத்தேயு 24:4-25; 2தெசலோனிக்கேயர் 2:3). தேவனுடைய தலைவர்கள், தேவனுடைய வார்த்தையையும், தேவனையும் அறிவது அவசியம். அதின் மூலம் இந்த ஏமாற்றங்களை அங்கிகரித்துக் கொண்டு அவைகளின் முகத்திரைகளை விலக்க காரணமாகி தேவனுடைய ஜனங்களை அவைகளிலிருந்து பாதுகாக்க வேண்டும். எப்பொழுது தேவன் ஒரு தலைவருக்கு ஒரு விசுவாசிகள் கூட்டத்தை கொடுக்கிறாரோ, அவர் சுற்றி திரியக் கூடாது (உதாரணம் அநேக கருத்தரங்களில் கலந்து கொள்ளுதல், மற்ற சபைகளில் செய்தியளிக்கச் செல்லுதல், மற்றும் பல). இது தேவனுடைய சித்தமில்லையென்றால் அவனுடைய மந்தை பாதுகாப்பற்ற நிலைமையில் விடப்படும். அவர் போக வேண்டுமானால் அவருடைய மந்தை தகுதியான முறையில் மூடப்பட்டு ஆவிக்குரிய ரீதியில் பாதுகாக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் போகும்பொழுது உறுதி செய்து கொள்வது அவசியம்.

மாற்றங்களை கொண்டுவரும் அதிகாரம்

இயேசுவின் நாட்களில் இருந்த ஆவிக்குரிய தலைவர்கள் எந்த அதிகாரத்தினால் நீர் இவைகளைச் செய்கிறீர்கள் என்று அவரிடம் அடிக்கடி கேட்டார்கள் (மத்தேயு 21:23; யோவான் 2:18). அதேக் கேள்வியை இன்று சபைகளிலே எப்பொழுது தலைவர் மாற்றங்களை கொண்டுவர முயற்சி செய்யும்போது கேட்கிறார்கள்.

தலைவர்கள் சபையில் உள்ளக் காரியங்களை மாற்ற அதிகாரம் உடையவர்களாய் இருப்பது எப்பொழுது:

- இப்பொழுது இருக்கிற அமைப்பு தேவனுடைய வசனத்தின்படி இல்லாதிருக்கும்போது அல்லது அவைகள் சுவிசேஷத்தின் வேலைக்கு தடையாய் இருக்கும்பொழுது.
- எப்பொழுது தலைவர் முன்னேறிச் செல்லும்படியாக தேவனால் பணிக்கப் படும் பொழுது அதாவது இது தேவனுடைய நேரத்தில் பொதுவாக சபை எப்பொழுது ஆயத்தமாய் இருக்கிறதோ அப்பொழுது.
- எப்பொழுது சபை மக்கள் ஒரு மாற்றம் வேண்டுமென்று தேவனுக்குள் உணர்கிறார்களோ அப்பொழுது அவர்கள் தலைமைத்துவத்தை இதைச் செய்யுமபடியாக கேட்கும்பொழுது.

அநேக ஜனங்கள் மாற்றங்களினால் பயமுறுத்தப்படுகிறார்கள். அவைகள் பாதுகாப்பின்மைகளை உற்சாகப்படுத்த முயற்சித்து அதன் மூலமாக ஜனங்கள் தாங்கள் அறிந்த சொகுசாய் உள்ள காரியங்களுக்கு திரும்ப காரணமாகிறது. உதாரணம் சபை பராம்பரியம். எனவே மாற்றங்கள் அடிக்கடி மெதுவாக மென்மையாக ஜனங்களை பாதிக்கும் குறிப்புகளுடன் அறிமுகப்படுத்துவது அவசியம்.

தேவனுடைய தலைவர்கள் தங்களை தங்களுடைய சூழ்நிலையில் அவர் பகிர்ந்தளித்த அதிகாரமுடையவர்களாக பார்ப்பது அவசியம். அவர்கள் தேவனுக்கும், அவர்கள் பொறுப்பிலே இருக்கும் குழுவிற்கும் அர்ப்பணிப்பது அவசியம். தேவனுடைய பார்வையில் அவர்கள் ஊழியம் செய்யும் சூழ்நிலையையும் அவர்களுடைய குழுவையும் காண்பது அவசியம். அவருடைய முக்கியத்துவங்களையும், நோக்கங்களையும் அவருக்கு காத்திருப்பதின் மூலம் தங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்வது அவசியம். இது தலைவர்களுக்கு பெலத்தையும் சரியான அளவு பொருத்த உணர்வையும் கொடுத்து அவைகள் மாற்றங்கள் செய்யப்படும் பொழுது தவிர்க்க முடியாமல் எழும்பும் கஷ்டங்களை அவர்கள் மேற்கொள்ள உதவிச் செய்கிறது. தலைவர்கள் மாற்றங்களை தேவனுடைய பெரிய திட்டத்தின் அமைப்பிலே தங்களுடைய குழுவிற்காக அல்லது சபைக்காக பார்ப்பார்களேயினால் அது அவர்களுடைய சொந்த பயங்களிலிருந்து வெளிவர உதவிச் செய்கிறது. மற்றும் மாற்றங்களை தங்களுடைய ஜனங்களில் ஏற்படுத்த விரும்புகிறது.

தேவனுடைய இராஜ்ஜியத்தில் அதிகாரத்தில் உள்ளவர்களின் பொறுப்பு

தேவன் அதிகாரத்தை பகிர்ந்துக் கொண்ட தேவனுடைய இராஜ்ஜியத்தின் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட பொறுப்புகளை உடையவர்களாக இருக்கிறார்கள்:

- அவாகள் தங்களுக்காகவும், தங்களுடைய குழுவினருக்காவும் தேவனுடைய வார்த்தையைக் கேட்க வேண்டும். தேவனுடைய வார்த்தையின் அதிகாரம் தலைவருடைய வாழ்க்கையிலும், ஊழியத்திலும் இருக்கும்போது மாத்திரமே அவருடைய அதிகாரம் இறுதியானது. அதிக அதிகாரமும் பொறுப்பும் உடையவர்களாய் நாம் இருக்கும்போது நாம் அதிகமாய் தேவனுடைய சமுகத்தில் காத்திருக்க வேண்டும். தங்களுடைய ஜனங்களோடு ஈடுபாடு உள்ளதாய் விசேஷமாய் உணர்ச்சிபூர்வமாய் கடினமாய் காணப்படுகிற நேரங்களில் தலைவர் தேவனிடத்தில் இருந்து காரியங்களை கேட்பார். தேவனே முடிவான அதிகாரம் உடையவர். அவருடைய நியாயத்தீர்ப்புக்கு அடிபணிவது இறுதியானது என்று தலைவர்கள் உணர்ந்து கொள்வது அவசியம். தேவனுடைய நோக்கம் தலைவர்களாகிய நம்மால் தடைபடக்கூடாது. நம்மை விட அவர் என்ன செய்கிறார் என்பதை அவர் சிறந்த முறையில் அறிந்து வைத்துள்ளார்.
- தங்களுடைய குழுவின் அங்கத்தினர்கள் வாழ்கின்ற காலத்தின் அடையாளங்களையும், பருவ காலங்களையும் புரிந்துகொள்வது அவசியம். அதை தாங்கள் நடத்துகிறவர்களிடத்தில் ஆக்கப்பூர்வமாய் தெரிவிக்க வேண்டும்.

- சபையின் தலையாய் இருக்கிற இயேசுகிறிஸ்துவின் ஸ்தானத்தில் அதிகாரத்தையும் ஒழுங்குமுறைப் படுத்துதலையும் கொடுக்க வேண்டும்.

- அவர்கள் தங்களையும் தங்களுடைய சொந்த வீட்டாரையும் நன்றாக நடத்துகிறவர்களாக இருக்க வேண்டும் (1தீமோத்தேயு 3:1-7). ஒரு தலைவர் அணுகக்கூடியவராய், அன்பானவராய், மென்மையானவராய், சுயகட்டுப்பாடு உடையவராய் சிக்கல் இல்லாதவராய் இருக்க வேண்டும். இது அவருடைய சொந்த குடும்பத்தில் பிரதிபலிக்க வேண்டும். தங்களுடைய குடும்பத்தையும், ஊழியத்தின் அழுத்தம் காரணமாக புறக்கணித்து விடக்கூடாது.

- அவர்கள் நடத்துகிறவர்களுக்காக உண்மையான அன்பும் பராமரிப்பும் உடையவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் பொறுப்பிலுள்ள குழுவிற்காக சிறந்தவற்றை அப்பொழுது தான் கொடுக்கக் கூடியவர்களாக இருப்பார்கள்.

- சத்துருவின் தாக்குதலில் பாதிப்புகளில் இருந்து தங்களுடைய ஜனங்களை பாதுகாப்பில் காக்க வேண்டும் (அப்போஸ்தலர் 20:28-31).

- தங்களுடைய ஜனங்களை ஒருவருக்கொருவர் மற்றும் தேவனோடு ஐக்கியம் உள்ளவர்களாய் வைக்க திறமையுள்ளவராய் இருக்கவேண்டும். தங்களுடைய வெறுமையை, பெருமையை விட்டு அதற்கு பதிலாக முதன்மையான பிரிவினை இல்லாத உண்மைத்துவத்தை காக்கக்கூடிய கிறிஸ்தவர்கள் இன்றைய சபைக்குத் தேவையாய் இருக்கிறார்கள்.

- பின்பற்ற தகுதியான கீழ்படிதல் உள்ள கனி வாழ்க்கை வாழவேண்டும் (1கொரிந்தியர் 11:1; 1தெசலோனிக்கேயர் 1:6; 1தீமோத்தேயு 3:2-5; 4:12). தங்களுடைய ஜனங்களுக்காக முன்னேறிச் செல்கிறவர்களாய் இருக்க வேண்டும். ஜனங்கள் செய்யும்படியாக கேட்கிற காரியத்தை அவர்கள் முதலாவது செய்ய வேண்டும்.

- அவர்கள் நீதியுள்ள வாழ்க்கை வாழ வேண்டும். சாத்தான் பாவ சோதனையின் மூலம் தேவனோடு நமது நடக்கையை மாசுபடுத்த முயற்சி செய்வான். ஏனெனில் நாம் பாவம் செய்யவோமானால் கிறிஸ்துவுக்குள் நமது அதிகாரம் பெலவீனப்பட்டு சத்துருவோடு நமக்கு இருக்கிற யுத்தத்தை தடைபண்ணுகிறது. அல்லது ஆக்கப்பூர்வமற்றவர்களாக மாற்றுகிறது. மற்றும் தேவனுக்காக நம்முடைய வேலையை குறிப்பிட்ட அளவு தகுதியிழக்கச் செய்கிறது. பரிசுத்த ஆவியானவர் சுத்தமான ஆயத்தமான அழைக்கப்பட்ட பாத்திரத்தின் மூலமாக மாத்திரம் ஆக்கப்பூர்வமாக தேவனுடைய வேலை இந்தப் பூமியில் நடை பெற வேண்டும்.

- அவர்கள் விசுவாசத்தின் ஜனங்களாய் இருக்க வேண்டும். தலைவர்கள் தேவன் மேல் விசுவாசமுடையவர்களாய் இருப்பது அவசியம். அது அவர்களை பின்பற்றுகிறவர்கள் தேவன் மேல் நம்பிக்கை உள்ளவர்களாகவும், அவர்களுடைய தலைமைத்துவத்தின் மேல் நம்பிக்கை உள்ளவர்களாகவும் தூண்டிவிடும்.

- அவர்கள் பொறுப்பின் கீழ் இருக்கிற ஜனங்களை குறித்து எச்சரிக்கை உள்ளவர்களாய் இருப்பது அவசியம். அவர்களுடைய நலனைக் குறித்தும், முன்னேற்றத்தைக் குறித்தும் தேவனுக்கு பதில் சொல்ல வேண்டியவர்கள் தாங்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

- தைரியமுள்ள நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய ஜனங்களாய் இருப்பது அவசியம். அப்படி இல்லாவிட்டால் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு தலைவர் தேவனில் எது சரியானது என்பதை அறிந்திருப்பது அவசியம் (தானியேல் 11:32), அவருடைய அதிகாரத்தின் ஸ்தானத்திலே நம்பிக்கைக்குரியவராய் இருக்க வேண்டும். விளைவுகளைப் பார்க்க தீர்க்கமானவராய் இருக்க வேண்டும். மனித அழுத்தத்தின் விளைவிலே ஒரு தலைவர் செயல்படுவாரானால் அல்லது சந்தேகத்தின் ஸ்தானத்தில்

அவருடைய செய்கையை தொடர்வதற்கு இன்னும் முயற்சிப்பாரானால் அவருடைய அதிகாரத்தின் ஸ்தானத்தை கேள்விக்குறியானதாய் மாற்ற முயற்சிக்கும். அவர் நிறைவேற்றி முடிக்க நிர்மானித்தவைகளை அடைய தவறி விடுகிறார் (1கொரிந்தியர் 16:12-14).

- தங்களுடைய பொறுப்பிலிருந்து ஒடிவிடாத ஜனங்களாய் இருப்பது அவசியம். எவ்வளவு கடினமானவற்றின் வழியாக சென்றாலும், தங்களுடைய பொறுப்பிலிருந்து ஒடிவிடுகின்ற தலைவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய அதிகாரத்தை இழந்து விடுகிறார்கள். பொறுப்பை ஒப்படைத்தல் தலைவரோடு நின்று விடக்கூடாது. அவர்கள் தேவன் தந்த பொறுப்பை அங்கிகரித்துக் கொள்ளுதல் அவசியம். ஒரு நபர் தன்னுடைய பொறுப்பை தட்டி கழிப்பதினால் அது மறைந்து விடுவதில்லை. அது மற்ற ஒருவருக்கு சாதாரணமாக மாற்றப்படுகிறது. தேவன் தன்னுடைய தலைவர்களை அவர்களுடைய பொறுப்பினால் முழ்கி விட அனுமதிக்க மாட்டார். அவர்கள் தொடர்ந்து அவரை பார்த்துக் கொண்டிருக்கும் மட்டும் அவர் அவர்களிடம் பகிர்ந்துக் கொண்ட வேலையை மாத்திரம் செய்வதற்காக எடுத்துக் கொள்ள வேண்டும். பிரச்சனைகள் நாம் விழுந்து விடுவதற்கு காரணமாக அமைந்து விடக் கூடாது. ஆனால் நாம் தேவனிடம் செல்ல வேண்டும். தலைவர்கள் அழுத்தங்களின் கீழ் வெற்றியாய் வாழ்வது எப்படி என்று கற்றுக் கொள்ள வேண்டும்.

- தேவனுடைய வார்த்தையை ஒருபோதும் அவர்கள் விட்டுக் கொடுக்கக் கூடாது. தேவனுடைய இராஜ்ஜியத்தில் அதிகாரத்தில் இருப்பவர்கள் தேவனுடைய வழியில் அறிந்தவற்றை ஒருபோதும் விட்டு கொடுக்கக் கூடாது. இயேசு ஐசுவரியவானான வாலிபனை நேசித்த போதிலும் (மாற்கு 10:17-26; லூக்கா 18:18-26). அவன் பின்பாகச் சென்று அந்த மனிதன் ஏற்றுக் கொள்வதற்கு எளிமையாக்குவதற்காக சுவிசேஷத்தை விட்டு கொடுக்கவில்லை. அந்த மனிதன் துக்கத்தோடு கடந்து சென்றிருக்கலாம். ஆனால் சுவிசேஷத்தினுடைய நேர்மை முழுமையாக களங்கமில்லாமல் இருந்தது.

- அவர்கள் முன்னணியில் நிற்கிற ஜனமாய் இருப்பது அவசியம். அநேக தலைவர்கள் அநேக காரியங்களை செய்யாமல் விட்டு விட்டார்கள். மனக்காயம் அடைந்ததினால், வெறுப்படைந்ததினால் தவறாகப் புரிந்துக் கொள்ளப்பட்டதினால் குறைகூறப் பட்டதினால் அல்லது அநேகதரம் ஏமாற்றப்பட்டதினால் சந்தேகத்தினால் தங்களுடைய தோள்களை அநேகந்தரம் தூலுக்குகிறார்கள். தேவன் அவர்கள் செய்யும்படியாக விரும்புகிறார் என்று அறிந்த காரியத்தைக் கூட ஆரம்பிக்க தவறி விடுகிறார்கள். அநேக தீர்மானங்களை தள்ளி வைக்கிறார்கள். அதன் விளைவாக அவர்களுடைய எல்லா உற்சாகத்தையும் இழந்து தேவனை சேவிப்பதற்கான சக்தியை இழந்து விடுகிறார்கள். அவர்கள் இப்பொழுது எளிமையான வழியையும், செலவில்லாதவற்றையும், முன்னிலைப் படுத்துகிறார்கள். ஒருவேளை அவர்கள் ஓய்வுபெறும் வரை இது தொடரும்.

- எளிதான வாழ்க்கை ஆரம்பிக்கும் எந்த ஒரு காரியமும் அவருடைய நோக்கமாய் மாறி விடுகிறது. இந்த ஜனங்கள் தாங்கள் யாரை சேவிக்கிறோம், ஏன் சேவிக்கிறோம் என்று நினைவு கூறுவது அவசியம். தேவன் ஒருபோதும் நம்மை பாரப்படுத்த மாட்டார் அல்லது செய்ய முடியாதவற்றை நம்மிடத்தில் கட்டாயப்படுத்த மாட்டார் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். அவருடைய சித்தத்தை செய்வதற்கு தேவையான எல்லாவற்றையும் எவைகள் எல்லாம் தேவையாய் இருந்தாலும் தருவதற்கு வாக்குபண்ணியிருக்கிறார் (பிலிப்பியர் 1:19; 2பேதுரு 1:3).

- அவர்கள் தேவனுக்கு முழுவதும் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை வாழ்வது அவசியம். அல்லது அதற்கு நேராக சற்றேரக்குறைய கிரியை செய்கிறவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் தேவனுடைய சித்தத்திற்கு கண்டிப்பாக பதில் அளிக்க வேண்டும். தேவன் அவர்களைச் செய்ய சொன்ன வேலையை அவர்கள் மூலமாய் தேவன்

கிரியை செய்யும்படியாய் எதிர்பார்க்க வேண்டும். இதன் அர்த்தம் அவர்கள் போராட வேண்டிய அவசியம் இல்லை. தேவனை சார்ந்திருந்து அவர் மேல் நம்பிக்கை வைத்து அவரிடம் உள்ள தொடர்பின் மூலமாக கிடைக்கிற பெலத்தையும், தேவையானவற்றையும் பெற்று அதன் மூலமாய் மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும். தேவன் உங்கள் மூலமாய் கிரியை செய்ய அனுமதிக்காத காரியத்தை ஒருபோதும் உங்கள் மூலமாய் செய்ய மாட்டார் என்பதை நினைவு கூறுங்கள்.

- சுய முன்னேற்றம் அல்லது பதவி உயர்வை கருத்தில் கொள்ளாமல் தேவன் அவர்களை செய்யச் சொன்ன காரியங்களை அவருக்காக நிறைவேற்றுவதில் திருப்தியடையும் போது ஏற்ற காலங்களில் அவர் உயர்த்துவதற்கு விட்டுவிடவேண்டும் (1பேதுரு 5:6).

கேள்விகளும் பயிற்சியும்

1. யார் உயர்ந்த அதிகாரம் உடையவர்? தேவனா அல்லது அவருடைய பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரமா. எனவே இந்த இரண்டு அதிகாரங்களுக்கு இடையே முரண்பாடு வருமானால் யார் கீழ்படிய வேண்டும்?

2. கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள மற்றவர்களுக்கு சேவை செய்யவும், போதிப்பதற்கும் ஆர்வமுள்ளவராய் இருக்க வேண்டுமா (யாக்கோபு 3:1)? இந்தக் காரியங்களை நாம் செய்யும்போது நம்முடைய நடக்கை எவ்வாறு இருக்கும் (1பேதுரு 4:11)?

3. அதிகாரத்தில் கீழ் உள்ளவர்கள் ஏன் தங்களை அதிகராம் உடையவர்களாக காண்கிறார்கள் (மத்தேயு 8:5-13)?

4. நீங்கள் நடத்துகிறவர்கள் நீங்கள் சொல்லுகிற காரியத்தை சிரத்தையோடு தனிப்பட்ட விதத்தில் எடுத்துக் கொள்கிறார்களா? கண்டிப்பாக அவர்கள் உங்களுடைய அதிகாரத்திற்கு தாழ்மையுடன் அர்ப்பணிக்கிறார்களா? அவர்களுடைய தலைவர்களாய் உங்களுடைய மாதிரியைப் பின்பற்றுகிறார்களா? இல்லையென்றால் ஏன் அவ்வாறு இல்லை?

5. தேவனோடு உள்ள உங்கள் சொந்த நடக்கையின் கணக்கு ஒப்புவித்தலை தேவன் பிடித்து வைப்பாரா, உங்களுடைய அதிகாரத்தின் கீழ் உள்ளவர்களுக்காக அவர் உங்கள் கணக்கு ஒப்புவித்தலை தேவன் பிடித்து வைப்பாரா, இந்த பொறுப்பிலிருந்து நீங்கள் விலகி ஒடுவதற்கு தேவன் கணக்கு ஒப்புவித்தலை பிடித்துவைப்பாரா? தேவன் இதற்காகத்தான் உங்களை அழைத்தாரா? இந்த விளைவுகளுக்காக நீங்கள் பதில் சொல்ல விருப்பம் தானா?

6. நீங்கள் நடத்துகிறவர்களை உங்களுக்காக உங்கள் குடும்பத்திற்காக மற்றும் அதிகாரத்திலிருக்கிற மற்ற ஜனத்திற்காக ஜெபிக்கும்படியாக உற்சாகப் படுத்துகிறீர்களா (1தீமோத்தேயு 2:1-4)?

7. உங்களுடைய மந்தையை நடத்துவதற்கும், ஓட்டுவதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?. உங்களுடைய மந்தையை எப்படி நடத்துவீர்கள்?

8. தேவைப்படுகிறபோது அங்கத்தினர்களை தெய்வீக சரிசெய்தலுக்குள்ளாக மற்றும் ஒழுக்கத்திற்குள்ளாக கொண்டுவர விருப்பமுள்ள தலைவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் தேவையாய் இருக்கிறதா? நீங்களுமா?

9. விபச்சாரத்தில் பிடிபட்ட ஸ்தீரியைக் குறித்து இயேசுவினுடைய செயல்பாடு எவ்வாறு இருந்தது (யோவான் 8:3-11)? தலைவர்களாகிய நமக்கு இந்தப் பகுதியில் என்ன தேவனுடைய ஒழுங்குமுறைப் படுத்துதலைப் போதிக்கிறது. நீங்கள் அறநெறி அதிகாரமும், அதே வேளையில் ஆவிக்குரிய அதிகாரமும் உடையவர்களாக இருக்கிறீர்களா?

10. தலைமைத்துவத்தில் இருக்கிற நீங்கள் தேவனையா, மற்ற ஜனங்களையா அல்லது உங்களையா பிரியப் படுத்துகிறீர்கள்? தேவனை ஊழியம் பிரியப்படுத்த வில்லையென்றால் அது வல்லமையில்லாதது என்பதை நினைவு கூறுங்கள்.

11. உங்களுடைய அதிகாரத்தையும், மதிப்பையும் பாதுகாத்துக் கொள்ளுகிறீர்களா? இயேசுவும் அவ்வாறா? தாழ்மை ஒருபோதும் சுயநலமுள்ளதாய் இராமல் எப்பொழுதும் மற்றவர்களை நோக்கி உள்ளது என்பதை நினைவு கூறுங்கள்.

12. வெற்றியும், தோல்வியும் இவை இரண்டும் உங்களை தேவனிடத்தில் நடத்துகிறதா? கண்டிப்பாக அவ்வாறா? (2கொரிந்தியர் 3:4-6)?

13. இயேசுவைப் போல தேவனுடைய தலைவர்கள் தேவனுடைய அதிகாரத்தைப் பிரதிபலிக்க வேண்டும். நீங்களும் அவ்வாறா? உங்களுடைய சொந்த சித்தத்தை செய்வதற்கு பதிலாக, அவருடைய சித்தத்திற்கு அர்ப்பணித்து தேவனுடைய அதிகாரத்தின்கீழ் நீங்கள் இருக்கிறீர்களா? வேத வசனத்தின் அதிகாரத்திற்கு அர்ப்பணித்து கீழ்ப்படிகிறீர்களா? நீங்கள் செய்கிற காரியத்தை செய்வதற்கு உங்களுக்கு அதிகாரத்தை கொடுத்தவர் யார்?

14. உங்கள் உதவிக்கும், ஆலோசனைக்கும் யாராவது உள்ளார்களா? நீங்கள் உண்மையிலே நம்பக்கூடிய ஜனங்கள் இருக்கின்றார்களா? உங்களுடைய மதிப்புமிக்க இரகசியங்களை வெளிப்படுத்தக்கூடிய ஜனங்கள் இருக்கின்றார்களா? மற்றும் அவர்கள் அதேப்போல் தொடர்ந்து நேசிக்கக்கூடியவர்களா? இல்லையென்றால் ஏன் இல்லை?

ஆக்கப்பூர்வமான, வலுவான, ஐக்கியமுள்ள ஊழியக்குழுவை எப்படிக் கட்டுவது

எந்த ஒரு மிகப்பெரிய பணியை செய்து முடிப்பதற்கும் தகுதியாவதற்கும் ஐந்து காரணிகள் தேவைப்படுகிறது:

1. தகுதியாவதும் மற்றும் ஆர்வமுட்டும் காரியமாக இருத்தல்
2. தகுதி வாய்ந்த தனிநபர்கள் (குழுவிலுள்ள வேலையாட்கள்)
3. ஸ்தாபனம் மற்றும் நிர்வாக அமைப்பு மற்றும் திறமைகள்
4. தரமான கட்டுப்பாடு, மதிப்பீடு, சரிசெய்தல்
5. சந்தை திட்ட செயல்யுக்தி

இந்த ஐந்து வித தத்துவங்களும் எந்த ஒரு பெரிய நிலைத்திருத்திருக்கும் நிறுவனத்திற்கு தேவைப்படுகிறது. எந்த ஒரு வியாபார நிறுவனம் அல்லது கம்பெனிகளில் அடிப்படை காரணிகளை அமைப்பு விதிகளாய் ஆக்கியிருக்கிறது. ஊழியக்குழுவை உருவாக்குவதில் கடைபிடிக்க அவசியமான தத்துவங்கள் உண்டு.

பெரிய பணிக்கு பலதரப்பட்ட நபர்கள் தேவைப்படுகிறது

தலைமைத்துவத்தில் பகுதி வெற்றி பலதரப்பட்ட வடிவங்களை ஐக்கியம் உள்ளதாய் கலப்பதாகும். ஒவ்வொரு மாதிரியும் தேவைப்படுகிறது. ஒவ்வொரு மாதிரியும் வித்தியாசமான குணாதிசயங்கள் உளப்பாங்கு மற்றும் பலவற்றை உடையவனவாய் இருக்கின்றன. பல தரப்பட்ட வடிவங்களை ஆக்கப்பூர்வமாய் நிர்வகிப்பதில் வெற்றியடைவதற்கு தேவைப்படுகிறது.

மேல் சொன்ன ஐந்து காரணங்களை மனதில் வைத்து இயேசு தெரிந்து கொண்ட சில சீஷர்களின் குணாதிசயங்கள் உளப்பாங்குகள் மற்றும் அவர்களுடைய பங்கு எப்படியிருந்தது என்று பார்ப்போம்.

1. பேதுரு – உருவாக்குகிறவர் - கருத்துகளை உடைய நபர்

வெளிப்படுத்தலை பெற்ற நபர். மத்தேயு 16:13-19.
முக்கியமான கேள்விகளை கேட்டார், தகவல்களை சேகரித்தார் மத்தேயு 18:21.
மூன்று ஆசாரிப்புக் கூடாரங்களை கட்டத் திட்டமிட்டார். மத்தேயு 17:4.
குணாதிசயங்கள்: ஆர்வமுள்ளவர், புதிய கருத்துகளுக்குத் திறந்த நிலையுள்ளவர், எளிதாக பிடித்துக் கொள்ளும் தன்மை உள்ளவர்.
எதிர்மறை: ஒருங்கிணைப்பாளருக்கும், கட்டுப்படுத்துகிறவருக்கும் சமநிலை தேவைப்படுகிறது.

2. யோவான் - ஜனங்களின் நபர் - தனிப்பட்ட உறவுநிலை

இயேசுவின் உள்வட்டத்தில் உள்ள ஒரு நபர் மத்தேயு 26:37.
இராபோஜனத்தில் இயேசுவுக்கு அருகில், அவருடைய மார்பிலே சாய்ந்திருந்தவன். யோவான் 13:23-25.
இயேசு தன்னுடைய தாயை யோவானுடைய பராமரிப்புக்கு அர்ப்பணித்தார் யோவான் 19:26,27.
பவுலை உற்சாகப்படுத்தினார். கலாத்தியர் 2:9.
குணாதிசயங்கள்: ஜனங்களிடையே சந்தோஷப்படுவது, மற்றவர்களோடு நல்லத்தொடர்பை ஏற்படுத்துவது, மற்றவர்களோடு தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறவர்.
உற்சாகப்படுத்துகிறவர், நேர்மறையானவர், குதூகலமானவர், அறிவுறுத்தி இணங்கச் செய்கிறவர்.

3. அந்திரேயா – ஒருங்கிணைக்கிறவர்

பேதுருவை கிறிஸ்துவிடம் வழிநடத்துகிறார். யோவான் 1:40-42.
இளைஞனிடமிருந்த உணவைக் குறித்து இயேசுவிடம் சொன்னார் யோவான் 6:8,9.
கிரேக்கர்கள் இயேசுவை சந்திப்பதற்கு ஒருங்கிணைப்பு செய்தவர். யோவான் 12:20-26.
மற்ற விபரங்களை இயேசுவிடம் கேட்டறிந்தான். மத்தேயு 13:3,4. ''அந்திரேயா தனியாக இயேசுவிடம் கேட்டான்''

அவனுக்கு முழு விபரங்கள் தேவைப்பட்டது.
குணாதிசயங்கள்: விபரங்களில் மிக கவனம் உள்ளவனாய் இருந்தார், எச்சரிக்கை உள்ளவராய் இருந்தார், மெதுவாய் காரியங்களை செய்தார்.
எதிர்மறை: விசேஷமாக அறிவுறுத்தி இணங்கச்செய்தல் தேவை, உணர்வுட்டப்படுதல் தேவை, தட்டியெழுப்பப் படுதல் தேவை.

4. தோமா – கவனத்துடன் கட்டுப்பாடு பண்ணுகிறவர்

"சந்தேகிக்கிற தோமா"
இயேசுவிடமிருந்து அறிவுரைகளும், விளக்கங்களும் தேவைப்பட்டது. யோவான் 14:1-3.
நம்புவதற்கான நிபந்தனை கூறினான். யோவான் 20:25.
இயேசு மீண்டும் தோன்றி அவனுக்கு உறுதிப்படுத்தினார். யோவான் 20:26-29.
குணாதிசயங்கள்: கவனமுள்ளவர், மெதுவாய் காரியங்களை செய்கிறவர், உண்மைக் குறிப்புகள் தேவைப்பட்டது.
எதிர்மறை: சில நேரங்களில் மிக அதிக ஜாக்கிரதையாய் இருந்தார், மாறுவதற்கு கடினமுள்ளவர்.

5. பவுல் - தொழில்முனைவர்

பவுல் ஒரு முன்னணி அப்போஸ்தலன், அவன் ஒரு முன்னணி தொழில் முனைவர்களில் ஒருவர் (முன்னேற்றுபவர், வழிமுனைவர், ஆதிகால சபையை தாங்கி நடத்துபவர்). தொழில் முனைவர் என்ற வார்த்தையின் அர்த்தம் "வினைத்திட்பம் உள்ள நபர்", அதாவது வீரச்செயல் நிகழ்த்துபவர், ஆற்றல் உள்ளவர், தைரியமுள்ளவர், ஆர்வமுள்ள ஆவி உள்ளவர், துணிச்சலுள்ளவர், உழைப்பாற்றல் உள்ளவர். நம்முடைய நவீன உலகத்திலே இந்த வார்த்தை அடிக்கடி வியாபார நிறுவனங்கள் சம்பந்தப்பட்டவைகளில் உபயோகிக்கப் படுகிறது. புதிய வியாபார தருணங்களுக்காக எப்பொழுதும் விழிப்பாய் இருக்கும் நபரை குறிப்பிடுகிறது. ஒவ்வொரு தருணங்களையும், புதிய வெற்றிகரமான வியாபாரங்களை துணிச்சலுடன் உருவாக்க முனைகிறவர்.

ஆவிக்குரிய உலகில் பவுல் ஒரு தொழில் முனைவர். எப்பொழுதெல்லாம் எங்கெங்கெல்லாம் வாய்ப்புள்ளதோ, அங்கெல்லாம் சபையை நிறுவும் தொழிலில் முழு இருதய அர்ப்பணிப்போடு பவுல் செயல்பட்டார். பவுல் தன்னுடைய பணியை தனக்கு இருந்த ஒவ்வொரு திறமைகளுடனும், தாலந்துகளுடனும் முனைந்து செய்தார்.

<u>ஊழிய குழுவை உருவாக்கி தாங்குவதற்குரிய சில காரணங்கள்:</u>

a) தெளிவான தரிசனத்தில் நோக்கத்தையும், குறிக்கோளையும் கருத்தரித்தல்.
எங்கே செல்லுகிறோம் என்ற உண்மையான யோசனை இல்லாமல் அநேக சபைகள் உள்ளது என்பது ஆச்சரியப்பட வைக்கிறது. அவர்கள் நோக்கமின்றி திரிந்து வருடாவருடம் வருடாந்திர நிகழ்ச்சிகளை நடத்தி குறிப்பிட்ட குறுகியகால இலக்குகளை உடையவர்களாய் இருந்து, தெளிவாக அவர்கள் போவதற்கான நீண்டகால இலக்குகளை எதையும் கருத்தரிக்காமல் இருக்கிறார்கள். அநேகர் ஒருபோதும் கவனத்துடன் குறிப்பாக நீண்ட காலத்தில் எதை சாதிக்க முயற்சிக்கிறார்கள் என்பதை ஜெபத்துடன் கருத்தில் கொள்ளாமலிருக்கிறார்கள். இப்பொழுது இருந்து பத்து அல்லது இருபது வருடத்தில் தேவன் விரும்புகிற பிரகாரம் எப்படிப்பட்ட சபையாய் இருக்க விரும்புகிறார்கள் என்ற தெளிவான விரிவாக்கப்பட்ட படத்தை உடையவர்களாக இருக்க வேண்டும்.

b) தரிசனத்தை வெளியே பகிர்ந்து கொள்ளுதல், திட்டமிடுதல், விவாதித்தல், செயல்திறன் வரைதல்.
எல்லா அங்கத்தினர்களும் தரிசனத்தின் தொடக்க நிலையிலிருந்து உள்ளடங்கிய பகுதியாக நினைப்பார்களானால், குழுவின் ஆக்கப்பூர்வமான செயல்பாட்டிற்கு மிகவும் உதவும். அவர்களுடைய ஜெபங்களும், யோசனைகளும் கருத்துகளும் செயல்திறன்களும் எல்லாவற்றிற்கும் மேலாக தரிசனத்திற்காக முதலீடு செய்வார்களானால் அதன் நிறைவேறுதலில் தங்களை உள்ளடங்கிய பகுதிகளாக அதிகமாக உணருவார்கள். இது ஒரு குழுவின் ஈடுபாடு, முதலீடு, அர்ப்பணிப்பாகும்.

c) பணியின் தெளிவான வாக்கியத்தை எழுது.

தரிசனத்தை சுருக்கி எழுதுவது என்பது ஒரு தெளிவுப்படுத்துவதற்குரிய சிறந்த வழி. அவை சுருக்கமாக எல்லாம் அடங்கிய அதே நேரத்தில் சுருக்கமாக கூறு. தரிசனத்தின் அடிப்படை நம்பிக்கைக்கு பருவ வடிவம் கொடுத்து ஒரு பத்தி வாக்கியங்களில் சொல்லப்பட வேண்டும். அதுவும் கண்டிப்பாக சுருக்கமாக இருக்க வேண்டும். அதன்பின்பாக அந்த வாக்கியங்கள் சில பத்திகளாக பிரிக்கப்படலாம். ஒவ்வொரு பத்தியும், தரிசன இலக்கின் ஒரு குறிப்பிட்ட கருத்தை விவரிக்க வேண்டும். அடிப்படை வாக்கியம் "முழக்க வார்த்தைகளாக" சுருக்கப்பட்டு சபை அல்லது அலுவலகத்தின் அதிகமான இடங்களில் நன்மை தரும் விதத்தில் ஒட்டப்பட்டு குழு மற்றும் அங்கத்தினர்களுடைய சிந்தனை மற்றும் கண்களுக்கு முன்பாக தரிசனம் வைக்கப்பட வேண்டும்.

d) குழு அங்கத்தினர்களை கவனமாக தேர்ந்தெடுங்கள்

குழுவில் பலதரப்பட்ட அங்கத்தினர்களை மிக கவனத்துடன் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். குழுவின் அமைப்பு விதி நீங்கள் அடைய நினைக்கிற குறிப்பிட்ட குறிக்கோளை மற்றும் தரிசனத்தின் விசேஷித்த குணாதிசயத்தின் மீது அமைந்த மிகப்பெரிய கட்டளையை சார்ந்து இருக்க வேண்டும். குழு அங்கத்தினர்கள் குறிப்பிட்ட மற்றும் விசேஷித்த திறமை மற்றும் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தரிசனத்தின் எல்லாப் பகுதிகளும், தகுதியான ரீதியில் தன்னுள் அடக்கிய சரியான சமநிலையில் இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ள வேண்டும். பொதுவாக, உங்களுடைய குறிப்பிட்ட பெலனாய் உள்ளவற்றை தவிர்த்து, மற்ற பணியை செய்யக்கூடிய அங்கத்தினர்களை உங்களுடைய குழுவில் சேர்ப்பது புத்திசாலித்தனமானது. குழுவிலுள்ள பெலவீனப்பகுதிகளை ஈடுகட்டும் விதத்தில் உள்ள நபர்களை தேர்வு செய்து ஒவ்வொரு தகுதியுள்ள குழு அங்கத்தினரிடையே கேட்கப்பட வேண்டிய மூன்று அடிப்படை கேள்விகள்:

- இந்த வேலையை அவர்கள் செய்ய முடியுமா? அவர்கள் மிக தகுதி வாய்ந்த பொருத்தமானவர்கள்தானா?
- அவர்கள் அந்த வேலையை செய்வார்களா? கடினமாக உழைக்க சித்தமும், அர்ப்பணிப்பும் உள்ளவர்கள் தானா?
- குழுவிலே சீர்இசைவு உள்ள விதத்திலே பொருந்தக்கூடியவர்கள்தானா? அவர்கள் குழுவிலே செயல்பட முடியுமா?

e) "தரிசனத்தை சொந்தமாக்கிக் கொள்ள" குழுவை உற்சாகப்படுத்துங்கள்

ஒவ்வொரு குழு அங்கத்தினர்களும் தரிசனம் நிறைவேற்றப்பட முழுவதும் அர்ப்பணித்தவர்களாய் இருப்பது முக்கியமாகும். தரிசனம் ஆக்கப்பூர்வமாய் செயல்படுத்தப் படுவதற்கு குழுவிலுள்ள அங்கத்தினர்கள் நிறைவுபெற இன்றியமையாத மற்றும் தேவையானவர்களாய் உணர்வது அவசியம். இதை நாம் அடிக்கடி தரிசனத்தை சொந்தமாக்கிக் கொள்ளுதல் என்று அழைக்கிறோம். இது கொடுக்கப்பட்ட தேவனுடைய தரிசனத்தை மற்றவர்கள் உடையதாய் அல்ல. தங்களுடையதாய் தரிசனத்தை உணருதல், ஒவ்வொரு அங்கத்தினர்களும் தரிசனம் நிறைவேற்றப் படுவதற்கு விருப்பமுள்ளவர்கள் என்பதை உணர உதவி செய்தல். பல தரப்பட்ட சட்டப்பூர்வமான ஊக்கத்தை கொடுப்பதற்கு முயற்சியுங்கள்.

f) ஒவ்வொரு தனிப்பட்டவர்களையும் அங்கிகரித்து பாராட்டி பராமரியுங்கள்.

குழுவிலுள்ள ஒவ்வொரு தனிப்பட்டவர்களுடைய குறிப்பிட்ட தனித்தன்மையையும் நாம் எப்பொழுதும் மனதில் கொள்ள வேண்டும். பணியில் காட்டுகிற விசேஷ திறமைகளை பாராட்ட வேண்டும். ஒருவருடைய ஒப்பிட முடியாத குணாதிசயத்திற்காக மற்றும் தனிப்பட்ட அல்லது ஆவிக்குரிய வரங்களுக்காக அவரை குழுத்தலைவர் அடிக்கடி தேர்வு செய்கிறார். பின்பு தலைவருடைய நடை உடை பாவனையில் அந்த நபர் மாறி உறுதி செய்ய எதிர்பார்க்கிறோம். குழுவில் உள்ளவர்கள் எல்லாரும் மனித அச்சு மாதிரி ஒன்று போல் இருக்க தேடாதிருங்கள்.

g) குழு வேலையின் தேவையை தொடர்ந்து வலியுறுத்துதல்

ஒவ்வொரு சிறப்பு வாய்ந்த தனிப்பட்டவர்களின் மதிப்பை அங்கிகரித்தபின் குழு ஆவியின் அவசியத்தை நாம் தொடர்ந்து வலியுறுத்த வேண்டும். ஒரு அங்கத்தினர் எவ்வளவு புத்திசாலியாய் இருந்தாலும், எந்த தனிப்பட்டவரும் தனியாக ஜெயிக்க முடியாது. ஒவ்வொரு குழு அங்கத்தினருடைய

ஆக்கப்பூர்வமான ஐக்கியமுள்ள வேலைகள் மற்றும் இணைந்து செயல்படுவதை சார்ந்தே வெற்றி அமைந்திருக்கிறது. எந்த ஒரு தலைவனும் தனியாக ஜெயிப்பதில்லை. முடிவிலே அவனுடைய குழுவிற்கு அவன் ஒரு நல்லவன் மாத்திரமே. அவனுடைய வெற்றி எல்லா குழு அங்கத்தினரிடையே ஐக்கியத்தையும் ஒத்துழைப்பையும் பராமரித்து, அவனுடைய முன்னேற்றுவிக்கும் திறமையின் மூலமாக அடைகிறான்.

h) எப்பொழுதும் ஒருவருக்கொருவர் நேர்மையாய் இருப்பதை வலியுறுத்துங்கள்.
நேர்மை என்னும் நற்பண்பு குழுவை இணைப்பின் நிலையில் வைக்கிறது. இது பொதுவாக பரிமாற்றத் தன்மையாகும். உங்களுடைய குழு அங்கத்தினர், உங்களுக்கு நேர்மையாய் இருக்க விரும்பினால், நீங்களும் உங்கள் குழு அங்கத்தினருக்கு எப்பொழுது நேர்மையாய் இருக்க வேண்டும். நேர்மை நேர்மையை வருவிக்கிறது. ஒரு தலைவர் தெளிவாக திட்டவட்டமாக அவருடைய குழுவிற்கு நேர்மையாக இருந்தால், அவர்களும் பொதுவாக அதே தன்மையான நேர்மையை திரும்ப பதிலளிப்பார்கள். ஒரு தலைவர் வெளிப்படுத்திக் காட்டுகிற நேர்மையின் தரத்திற்கும், குழு வெளிப்படுத்தும் நேர்மையின் தரத்திற்கும் தொடர்பு உண்டு. அவன் விதைத்ததை அவன் அறுப்பான்.

- தேவனுக்கு நேர்மையாக இருத்தல்
- மற்றவர்களுக்கு நேர்மையாக இருத்தல்
- நாம் நிறைவேற்றி முடிக்கிற, முயற்சி செய்கிற தரிசனத்திற்கு அதன் பணிக்கு நேர்மையாய் இருத்தல்

i) கூட்டு குதூகலத்தை உற்சாகப்படுத்துங்கள். குழு ஜெயித்தால் நாம் ஜெயிப்போம்.
அநேக ஜனங்கள் தங்களுடைய சொந்த காரியங்களை தங்களுடைய முக்கியத்துவப் பட்டியலில் முதன்மையாக வைத்திருக்கிறார்கள். அது அப்படி இருக்கக் கூடாது. ஆனால் அடிக்கடி அவ்வாறு இருக்கிறது. தனிப்பட்ட ஆவல் குழுவின் நன்மைக்காக தரிசனம் நிறைவேற்றப் படுவதற்காக திசை திருப்பப்பட வேண்டும். சுய விருப்பம் முழுமையின் நன்மைக்காக தியாகம் செய்யப்பட வேண்டும். "குழு ஜெயித்தால் நான் ஜெயித்தேன் அது தோல்வியடைந்தால் நானும் தோல்வியடைந்தேன் என்று ஒவ்வொரு அங்கத்தினரும் அறிய வேண்டும்". குதுகாலத்தை தோற்றுவிக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். அது கூட்டுத் தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும். கூட்டு வெற்றி ஜெயிக்கும்போது யாவரையும் சந்தோஷபிக்கும் விதத்தில் இருக்க வேண்டும். ஒவ்வொரு அங்கத்தினரும் ஒருவருக்கொருவர் சொந்தமானவர் என்ற உணர்வு உடையவர்களாய் இருக்க வேண்டும் உண்மையான ஆதாயம் ஒருவருக்கொருவர் உரிய ஆதாயமென்ற விழிப்புணர்வு இருக்க வேண்டும்.

j) குடும்ப ஆவியை ஆழமாகப் பதியவை. சகோதரத்துவ உறவு முறையை உற்சாகப்படுத்து.
ஒரு ஊழிக்குழு குழுவைக் காட்டிலும் மேலானது அது ஒரு குடும்பம். உண்மையிலே முழுமையான கிறிஸ்தவின் சரீரம் ஒரு குடும்பம் குறிப்பாக ஸ்தல சபை அவ்வாறு இருக்க வேண்டும். இவ்விதமான மாதிரியின் பயன்பாட்டையும் உண்மையான தன்மையையும் ஊழியக் குழுவானது வெளிப்படுத்தினால் மாத்திரமே இந்த குடும்ப ஆவி செயல்படுத்தப்பட முடியும். அப்போஸ்தலருடைய சேர்க்கை சகோதர குழுவைப் போல இருந்து ஒருவர் மற்றவர்களுக்காக அன்பையும் பராமரிப்பையும் காட்டினார்கள். நாமும் அப்படிப்பட்ட உறவை பெற முயற்சிப்பது அவசியம். இவ்விதமான உறவிலே பாதுகாப்பு வலிமை உற்சாகப் படுத்துதல் திருப்தி உண்டு. அவர்கள் சரியான விதத்திலே போதிக்கப்பட்டு, தலைமை முதல் யாவரும் வெளிப்படுத்தினால், இந்த காரணிகள் முழு சபையிலும் ஊடுருவ முடியும்.

k) நேர்மறையாக ஊழியம் செய்யும் சூழ்நிலையை ஊக்குவியுங்கள்.
வாழ்க்கையானது எதிர்மறையான, நேர்மறையான காரியங்களினால் ஒருங்கிணைக்கப்பட்டு ஐக்கியமாக சரியான ரீதியிலே சமநிலையில் இருந்தாலும் நம்முடைய முக்கியப்பணி குழுத்தலைவர்களாக இருந்து நேர்மையான காரியங்களை வலியுறுத்துவது தான். இது தான் வெற்றி மற்றும் நிறைவேற்றப் படுதலின் அறநெறி மற்றும் சூழ்நிலையாகும். நேர்மறையான எண்ணமில்லாமல், எந்த ஒரு குழுவும், அதனுடைய பொதுவான பணி மற்றும் அதனுடைய வெற்றிகரமான நிறைவேறுதல் ஆகியவற்றை ஆக்கப்பூர்வமாக இணைந்து வேலை செய்ய முடியாது. குழு ஆவியும் ஒழுங்குணர்வும், நேர்மையான சுழலில் செயல்படுத்தப்பட்டு, நம்முடைய குழு

செயல்பாடுகளில், நம்முடைய திட்டமிடும் கூட்டம், ஜெபநேரம், ஐக்கியக் கூடுகைகள், நேர்மறையான எண்ணமுடையவர்களாய் வளரச் செய்ய முயற்சித்து உறுதி செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு குழு அங்கத்தினரும், தன்னுடைய நிகராளரை உறுதி செய்ய வேண்டும்.

l) பொருத்தமான தகவல்களை வழக்கமாக பகிர்ந்து கொள்ள வேண்டும்.
ஒவ்வொரு குழு அங்கத்தினரும், தங்களுடைய குழு ஆக்கப்பூர்வமாய் செயல்படுவதற்கு அவர்கள் உள்ளடங்கிய தேவையான பகுதி என்பதை அறிவது அவசியம். வழக்கமான இடைவெளி காலத்தில் எல்லா அங்கத்தினரிடையே தகவல்களையும், செய்திகளையும், பகிர்ந்து கொள்வது குழு வெற்றிகரமாக செயல்படுவதற்கு முக்கியமானது. இது ஒருவருக்கொருவர் தொடர்புடையவர்கள் என்பதையும், மதிப்புடையவர்கள் என்பதையும் உறுதி செய்து வளரச் செய்கிற காரணியாகும். வழக்கமான கூட்டங்களில் தெரிவிக்கப்பட்ட பொருத்தமான தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டு தன்னுடைய துறைத்தலைவர்களிடம் விவாதிக்கப்பட்டதா என்பதை தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இந்த விதமான செயல்பாடுகள் எப்பொழுதும் ஒன்றிணைக்க உதவுகிறது. பெரிய அளவிலே அர்ப்பணிப்பையும் பங்கு பெறுதலையும் உற்சாகப்படுத்துகிறது. முக்கியமான அர்த்தமுள்ள காரியங்களை பகிர்ந்து கொள்ளும் அனுபவமானது. குழு அங்கத்தினர்களை புரிந்து கொள்வதில் கட்டுவதற்கும், அவர்களுடைய ஆக்கப்பூர்வ தன்மையை அதிகரிப்பதற்கும் தேவையானது.
கற்றுக் கொள்ளுகிற காரியத்தைக் குறித்து ஒருவர் இவ்வாறு சொன்னார்:

நான் கேட்கிறேன் .....நான் மறந்து விடுகிறேன்
நான் பார்க்கிறேன்.....நான் நினைவு கூறுகிறேன்
நான் பங்கு கொள்கிறேன்.....நான் புரிந்து கொள்கிறேன்

தரிசனம் எவ்வளவு ஆக்கப்பூர்வமாய் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை வழக்கமான மதிப்பிடல் மூலம் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். இவைகள் திட்டங்களை யுக்திகளை அல்லது வேலைக்காரர்களின் பணியை சிறந்த ஆக்கப்பூர்வமான விதத்திலே அடைய ஏற்ற ரீதியில் சரி செய்யப்பட தேவையாய் இருக்கிறது.

தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்தை உற்சாகப்படுத்துங்கள்

1. நிலையான தொடர்ந்தேர்ச்சியான வளர்ச்சியின் தேவையை வலியுறுத்துங்கள்.
2. வளர்ச்சிக்குத் தேவையான ஊக்கத்தை கொடுங்கள்.
3. விரிவடைவதற்கான வழிமுறைகளின் காரியங்களையும், அறிவுறுத்துங்கள் அல்லது கொடுங்கள்.
4. முதிர்ச்சியின் அடையாளம் தெரிவதற்கு மாதிரியாக இருக்க முயற்சி செய்யுங்கள்.
5. ஒவ்வொரு குழு அங்கத்தினர்களும், தாங்கள் தேவையானவர்கள் என்பதை உணர பாராட்டப்பட முயற்சி செய்யுங்கள்.
6. அவர்களுக்கு வேலை திருப்தி உண்டாக முயற்சி செய்யுங்கள்.
7. மனித தேவை காரணிகளை அங்கிகரியுங்கள். உயர் மதிப்புடையவர்கள், ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள், உபயோகமானவர்கள் மற்றும் வேலை திருப்தி.

சீஷர்களை பயிற்சி அளிப்பதினுடைய முக்கிய நோக்கம் தகுதியான முறையில் அவர்களை ஆயத்தப்படுத்தி தலைமைத்துவத்தின் பொறுப்புகளையும், பல்வேறு பணிகளையும் ஆக்கப்பூர்வமாய் பொறுப்பெடுக்கச் செய்வதாகும். ஆயத்தப்படுத்துதலில் முக்கியமான காரியம் என்னவென்றால் பணிப்பகர்வு மூலம் குறிப்பிட்ட பணியை சீஷர்களே பொறுப்பெடுக்கச் செய்வது. இதற்கு பணிப்பகர்வின் அடிப்படைத் தத்துவங்களின் அறிவு தேவைப்படுகிறது.

பணிப்பகர்வின் செயல்திறன் (யுக்தி)

1. குறிக்கோளையும், தரிசனத்தையும் தெளிவாக அடையாளம் காண்
அநேக சபைகள் வேகமாக வளருவதில்லை, ஏனெனில் தரிசனத்தை சரியான ரீதியில் அடையாளம் காண மற்றும் தரிசனத்தை அடைவதற்கு நிறைவேற்றப் படவேண்டிய குறிக்கோள்களை திட்டமிட ஒருபோதும் நேரத்தை எடுப்பதில்லை. அவர்களுடைய குறிக்கோள் எப்பொழுதும் புரிந்து கொள்வதற்கு

கடினமானது. தெளிவாக வெளிப்படுப்படாத பரிமாணம் மற்றும் நேரசட்டக அமைப்பு குறைவு படுதலாகும். அவர்களுடைய விருப்பமெல்லாம் ''வளருதல்'', ஆனால் கீழ்கண்டவற்றை ஒருபோதும் விவரிப்பதில்லை:

- எவ்வளவு பெரியது?
- இது எப்படி நடக்கும்?
- இது நடப்பதற்கு எந்த வித நிலையான முயற்சிகளை எடுப்பது அவசியம்?
- எவ்வளவு செலவாகும்?
- அந்த செலவை எப்படி நாம் சந்திக்க போகிறோம்? (அந்த செலவு பொருளாதார ரீதியாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை, ஆனால் மனித வல்லமை, உழைப்பு, தியாகம் மற்றும் பல. நம்முடைய நோக்கங்கள் சரியாக இருக்கும் பொழுது தேவன் பொருளாதாரத்தைப் பொறுப்பெடுத்துக் கொள்வார்).

2. எழுதுவதற்கு ஏதுவாக சுருக்கங்கள்

தெளிவாக எளிமையாக இருக்கட்டும். அதிகார அமைப்பு முறையை எதற்கு பின் எது என்றதான அட்டவணையில் கொடுங்கள். தரிசனத்தை சுருக்கி எழுத்து வடிவில் கொடுக்கும் பணியானது எப்பொழுதும் உதவிகரமான பயிற்சியாகும். இது ஜெபத்துடன் தரிசனத்தின் எல்லாப்பகுதிகளையும், சிந்திக்கச் செய்யும். தரிசனத்தை தெளிவாக, சுருக்கமாக, வெளிப்படுத்த முயற்சி செய்யும் போது திட்டம் முழுவதையும் நமது வழியில் பொறுப்புடன் சிந்திக்க கட்டாயப்படுத்தப் படுகிறோம். நாம் என்ன முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்பதின் தொலை நோக்குப் பார்வையை மெய்யான ரீதியில் பற்றி பிடிக்க நமக்கு உதவுகிறது. அதனுடைய நிறைவேறுதலுக்கும் மிகவும் அடிப்படையான தேவைகளை மெய்யாக கருத்தில் கொள்ள வைக்கிறது. முற்றிலுமான நிறைவேறுதலுக்கு ஒவ்வொரு காரியமும் முக்கியமானதாகும்.

3. குறிப்பிட்ட பொறுப்புகளை பணிப்பகர்வு செய்து வேலை விவரங்களை எழுதிக் கொடுங்கள்

அதிகாரத்தை உறுதி செய்தபின், எப்பொழுதும் பொறுப்புகளை பணிபகர்வு செய்யவேண்டும். எப்பொழுது குறிப்பிட்ட தேவைகள் தெளிவாக படைக்கப்படுகின்றதே அப்பொழுது தான் பொறுப்புள்ள பணிபகர்வு ஏற்பட முடியும். இதை எப்பொழுதும் எழுத்துப்பூர்வமாக முழு வேலை விவரங்களையும் அதனுடைய எதிர்பார்ப்புகளையும் படைப்பது நல்லது.

4. போதுமான அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளுதல்

ஒருவருடைய பொறுப்பின் வரம்புக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளுதல் சரியான செயலாகும். அதாவது முன்னேறிச் செல்லுங்கள், வேலையைச் செய்யுங்கள் என்பது உங்களுக்கு உறுதி செய்யப்பட வேண்டும். கொடுக்கப்பட்ட பணியை ஆக்கப்பூர்வமாய் நிறைவேற்றுவதற்கு தேவையான கருவிகள், ஆட்கள், மூல ஆதாரங்களை முயன்று பெறுவதற்கு அதிகாரம் தேவை.

5. வரையறைகளை தெளிவாக ஏற்படுத்துங்கள்

ஒரு பணி சில நபர்களிடம் அர்ப்பணிக்கும் போது தெளிவான வழிகாட்டி குறிப்புகள் கண்டிப்பாக கொடுக்கப்பட வேண்டும். அந்த நபர் செயல்படும் அதிகாரத்தின் சரியான வரைமுறையும் கொடுக்கப்பட வேண்டும்.. தங்களுடைய பணியில் தங்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகார வரம்புக்குள் மட்டும் செயல்பட வேண்டும் என்பதை அதற்கு அப்பாற்பட்ட நிலையில் அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

6. தகுதியான கணக்கு ஒப்புவித்தல் தேவைப்படுகிறது.

பொறுப்புகளையும், அதிகாரத்தையும் பகிர்ந்து கொண்ட பின் அந்த நபருக்கு ஏற்பட்ட வளர்ச்சியின் கணக்கை ஒப்புவிப்பதற்கு நிலையான வழியை நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இது ஒரு வேளை அலுவலர்கள் கூட்டத்தில் (வாராந்திர) குழுவிலுள்ள ஒவ்வொரு நபரும் தங்களுடைய செயல்பாட்டில் ஏற்பட்டதான தற்போதைய வளர்ச்சியை அறிக்கையாக அளிக்கும் தேவையை ஏற்படுத்தலாம்.

7. வேலை விபரங்களின் வழிகாட்டி குறிப்புகளில் முதலில் தொடங்க உற்சாகப் படுத்த வேண்டும்.

பணியின் வரையறையை தெளிவாக தெரிவித்த பின் பொருத்தமான அதிகாரம் அந்த நபருக்கு கொடுக்கப்பட்டு தனிப்பட்ட விதத்தில் முதலில் தொடங்குவதற்கு பயிற்சி செய்வதற்கான வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். அந்த நபருடைய தாலந்துகளையும், திறமைகளையும், மதிப்பீடு செய்து அந்த திறமைகளை பயிற்சி செய்ய வழி செய்து கொடுக்க வேண்டும்.

8. மிக தகுதி வாய்ந்த மேற்பார்வை செய்யுங்கள்

தகுதி வாய்ந்த மேற்பார்வை செய்யும் பயிற்சியின் திறமையைப் பொருத்தே நல்ல தலைமைத்துவத்தின் அநேக வெற்றிகள் அடங்கியிருக்கிறது. எல்லா நேரங்களிலும் என்ன நிகழ்கிறது என்பது சரியாகத் தெரிய வரும்போது நேரத்திற்கு நேரம் தேவையான சரிசெய்தல் மற்றும் மாற்றங்களை செய்யமுடியும். இந்த விதமான மேற்பார்வை பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்ட நபர் "சுவாசிப்பதற்காக தலையை கீழே போடாமல" விழிப்பாய் நிர்வாகிக்க வேண்டும். இந்த விதமான மேற்பார்வை செய்யும் முறை முழுவதுமாக தகுதி வாய்ந்த விதத்தில் முழுச் சான்றாக, அதே நேரத்தில் மிக எளிதில் ஈர்க்க இயலாத விதத்தில் நிறுவப்பட வேண்டும். இதற்கு வழக்கமாக அறிக்கைகளை பெறும் சில நிறுவப்பட்ட முறைகள் தேவைப்படுகிறது. ஒவ்வொரு குழு அங்கத்தினர்களும், அவர்கள் செய்து முடித்த பணியின் வழக்கமான அறிக்கைகளை தகுந்த கால இடைவெளியில் சமர்ப்பிக்க வேண்டும். அவைகள் ஆராயப்பட்டு நேர்மறையான சரியான குறிப்புரைகள் கொடுக்கப் படவேண்டும்.

9. வழக்கமான பணிவினவல் கூட்டத் தொடரை ஒவ்வொருவருக்கும் தனியாகவும், குழு அங்கத்தினருக்கு கூட்டாகவும் நடத்துங்கள்

வழக்கமான நிலையான தொடர்பு குழுவிலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட நபரிடமும் பராமரிக்கப் பட வேண்டும்.

வழக்கமான குழு கூட்டங்களும் முக்கியமானது. அதிலே குழுவிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினர்களும், தங்களுடைய பணியின் நிலையைக் குறித்தான அறிக்கை சமர்பிக்க தருணம் கிடைக்கும். இப்படிப்பட்ட கூட்டங்கள் ஒவ்வொரு குழு அங்கத்தினர்களும், ஒருவருக்கொருவர் தொடர்புடையவர்கள் என்ற உணர்வை ஊக்குவித்து வளரச் செய்யும்.

10. வெற்றியை பகிர்ந்துக் கொண்டு கொண்டாடுங்கள்.

நல்ல குழு ஆவியை வளரச் செய்யும் காரணிகளில் ஒன்று வெற்றியை இணைந்தே அடைதலாகும். இது ஒவ்வொருவருக்குரிய உயர் மதிப்பை ஊக்குவிக்கும். எனவே வெற்றியை சேர்ந்தே அடைந்து, கொண்டாடுவது பயனுள்ளதாக இருக்கும். இந்த வெற்றிகள் எல்லாம் இணைந்து வேலை செய்வதின் மூலம் கிடைத்தது என்பதை வலியுறுத்த வேண்டும். ஒவ்வொரு குழு அங்கத்தினரும் மதிப்புடையவர்களாக எண்ணப்பட்டு, பாராட்டப் படவேண்டும். ஒவ்வொருவரும் வெற்றியின் இனிமையை அனுபவிக்கட்டும்.

11. செய்து முடிக்காத காரியங்களை குறித்து ஆக்கப்பூர்வமான கருத்தை அங்கீகரியுங்கள், காட்டுங்கள்

வெற்றியை இணைந்து கொண்டாடுகிற அதேவேளையில், நம்முடைய உடனடியான வெற்றியை அடைய தவறிய நேரங்களை அங்கீகரித்து, ஏற்றுக் கொள்ளுங்கள். வெற்றியை அடைய தவறிய காரணங்களை ஆராய்ந்து, எந்த ஒரு பலவீனங்களும் அகற்றப்பட நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்துக் கொள்ள வேண்டும். இந்தவித நடவடிக்கைகள் எப்போதும் நேர்மறையான, ஆக்கப்பூர்வமான முறையில் எடுக்கப்பட வேண்டும். பிரச்சனைகளை, பெலவீனங்களை பெரிதுப்படுத்தல்ல, தீர்வு நோக்கிலே இருக்க வேண்டும்.

12. இளைப்பாறுதல் மற்றும் மனமகிழ்வு விடுமுறை எடுக்க அங்கத்தினரை உற்சாகப் படுத்துங்கள்

வலிமையான அர்ப்பணிப்பையும், ஆரோக்கியமான வேலை செய்ய விருப்பமுள்ளவர்களாக இலக்குகளை அடைய வேண்டுமென்பதையும், வலியுறுத்துவேன். இந்த அதிகாரத்தை முடிப்பதற்கு முன்பாக பணியாளருக்கு சரியான விடுமுறை இளைப்பாறுவதற்கும், இழந்த பெலனை மீண்டும் பெறுவதற்கும் நேரம் கொடுக்கப்படுவது அவசியம் என்பதையும் நான் வலியுறுத்தியாக வேண்டும்.

சில குழு அங்கத்தினர்கள் வேலைக்கு அடிமைகளாகும் சுபாவத்தில் வளர்ந்து, அவர்களுடைய வேலைக்காக மற்ற எல்லா காரியங்களையும் தியாகம் செய்வார்கள். சமநிலையான அணுகு முறையை நாம் உற்சாகப்படுத்த வேண்டும். அது வலிமையான வேலை அர்ப்பணிப்பையும், அதோடு கூட இளைப்பாறுதலும், இழந்த பெலனை பெறும் தேவைகளும் இணைந்தாக வேண்டும்.

குழு தலைவர்கள் இந்த கருத்தை போதிப்பது மட்டுமல்லாமல், தங்களுடைய உடன்ஊழியர்கள் முன்பாக மாதிரியாக நடத்துக் கொள்ள வேண்டும். தங்களை நல்ல முன்மாதிரிகளாக அமைத்துக் கொள்ளுவது மிக முக்கியமான தத்துவமாகும். இயேசுவும் இதை செய்தார். இயேசு அடிக்கடி தம்முடைய சீஷர்களை நோக்கி, ''என்னிடத்தில் வந்து சற்று இளைப்பாறுங்கள்'' என்றார்.

ஒருவர் தன்னுடைய குடும்பத்தின் தரமுள்ள நேரத்தை செலவழித்தலின் அவசியத்தை வலியுறுத்த வேண்டும். சில தலைவர்கள், தன்னுடைய மனைவியுடனும், குடும்பத்துடனும் செலவழிக்கும் நேரத்தை, மதிப்புள்ள நேரத்தை முட்டாள்தனமாக செலவழித்து விட்டோம் என்று தவறாக நினைக்கிறார்கள். ஆனால் அதுவல்ல காரியம். நான் சாட்சியாக அநேக போதகருக்கு சொல்லியிருக்கிறேன், ''உலகத்தை ஆதாயப் படுத்தி, குடும்பத்தை இழத்தல்''. அவர்களுடைய வேலை பளுவிற்கு அதிக நேரத்தை செலவழித்து, தன்னுடைய சொந்த குடும்ப அங்கத்தினர்களுக்கு செலவழிக்க நேரமில்லாமை. இயற்கையாக கசப்புணர்வு குடும்பத்திற்கு ஏற்பட்டு அவர்கள் பராட்டப்படவில்லை, மதிக்கப்படவில்லை என்று உணருகின்றனர். இது குடும்பம் பிளவுப்பட வழி வகுக்கும், இப்படிப்பட்ட துரதிஷ்டமான சம்பவங்கள் நடைபெற கூடாது.

குழு ஊழியம்: கருத்தும் வல்லமையும்

குழு ஊழியத்தின் வேதாகம மாதிரி வடிவம்

இன்றைய சபையிலுள்ள அநேகத் தலைவர்கள் குழு ஊழியத்தின் உண்மையையும், முக்கியத்துவத்தையும் பாராட்டுவதில்லை. குழு ஊழியத்திலே இரண்டு அல்லது அதற்கு அதிகமான தலைவர்கள் இணைந்து வேலை செய்து ஒரு ஆவிக்குரிய பணியை செய்து முடிக்கலாம். ஒரு கூட்ட தேவனுடைய ஆண்கள் அல்லது பெண்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்காக ஆவியிலும் நோக்கத்திலும் ஒன்றாக பிணைக்கப்பட்டுள்ளார்கள்.

துரதிஷ்டவசமாக அநேக தலைவர்கள் மற்றவர்களோடு குழு முயற்சியில் ஒத்துழைப்பதில்லை. அநேக வருடங்களாக சபையானது ஒரு மனித வாத்தியக்குழுவினால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வந்தது. அதிலே ஒரு நபர் எல்லா பொறுப்புகளையும் சுமந்து தன்னில் தானே எல்லா வேலைகளையும் செய்து கொள்கிறார். ஒரு மனிதன் எல்லா அழுத்தங்களையும், பொறுப்புகளையும் ஸ்தல சபை அல்லது பெரிய ஊழியங்களுக்காக சுமப்பது ஒருபோதும் தேவனுடைய நோக்கமல்ல. இப்படிப்பட்ட பளுவினால் அநேக மனிதர்கள் சரீரப்பிரகாரமாக மனநிலையிலும் ஒழுக்க ரீதியிலும் உணர்ச்சிபூர்வமான ரீதியிலும் நிலை குலைந்து இருக்கிறார்கள். இந்த நடைமுறை, அறநெறி, உபதேசம் மற்றும் ஆவிக்குரிய காரணத்திற்காக தேவன் ஊழியங்களை குழுவாக செய்ய வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறார்.

குழு ஊழியம் என்பது வேத வசன மாதிரி வடிவமாகும். கீழேயுள்ள புதிய ஏற்பாட்டில் குழு ஊழியத்திற்கான உதாரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது:

- இயேசுவும், 12 அப்போஸ்தலர்களும் (சுவிசேஷங்களில்)
- பேதுருவும், யோவானும் (அப்போஸ்தலர்)
- பிலிப்பு, பேதுரு மற்றும் யோவான் (அப்போஸ்தலர் 8)
- பேதுருவும், மற்ற ஆறு சகோதரர்களும் (அப்போஸ்தலர் 10,11)
- பவுலும், பர்னபாவும் (அப்போஸ்தலர் 13,14) அப்போஸ்தலர் 13:13 குறிப்பிடுகிறது பவுலும் அவனுடைய குழுவும் இணைந்தே இருந்தார்கள்.
- யூதாவும், சீலாவும் பவுல் மற்றும் பர்னபாவுடன் இணைந்தார்கள் (அப்போஸ்தலர் 15)
- பர்னபாவும், யோவான் மாற்கும் இணைந்தே பிரயாணம் செய்தார்கள் மற்றும் பவுலும், சீலாவும் குழுவாக சென்றார்கள் (அப்போஸ்தலர் 15)
- தீமோத்தேயு, பவுல் மற்றும் சீலாவுடன் இணைந்தான் (அப்போஸ்தலர் 16)
- பவுல், ஆக்கில்லா பிரிஸ்கில்லாவை தன்னுடன் இணைத்துக் கொண்டான் (அப்போஸ்தலர் 18)
- தீமோத்தேயுவும், எரஸ்துவும் மக்கெதோனியாவுக்கு அனுப்பப் பட்டார்கள் (அப்போஸ்தலர் 19:22)
- பவுலுடன் ஆசியாவிற்கு அனுப்பப்பட்ட அப்போஸ்தல குழுவில் சோபத்தரும், அரிஸ்தர்க்கும், செக்குந்தும், காயுவும், தீமோத்தேயும், தீகிக்கும், துரோப்பீமும் இடம்பெற்றார்கள் (அப்போஸ்தலர் 20)

குழு ஊழியத்தின் நோக்கமும், சாதகமும்

- குழு ஊழியம் சரீர ஊழியம் என்ற தத்துவத்தை ஜீவனுள்ள உண்மையென மெய்ப்பிக்கிறது (1 கொரிந்தியர் 12).
- தற்கால உண்மைகளை போதிக்கும் போது ஒன்றுக்கு மேற்பட்ட குரல் அதே காரியத்தை பேசும்போது சிறந்த வெளிப்பாடு சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தும் (உபாகமம் 17:6; மத்தேயு 18:16; 2 கொரிந்தியர் 13:1).
- குழு கூட்டத்திற்கான அல்லது பல கூட்டங்களுக்கான சிறந்த ஆக்கப்பூர்வமான முறையில் தேவனுடைய மனதை அறிந்து தேவனுடைய சித்தம் நிறைவேறத்தக்கதாக ஜெபிக்கிறது (மத்தேயு 18:19).
- குழு ஊழியம் அதிக ஆக்கப்பூர்வமானது, சிறந்த விளைவுகளை விளைவிக்கிறது (பிரசங்கி 4:9-12).

- குழு ஊழியம் ஊழியத்தில் பாதுகாப்பையும், சமநிலையையும் கொடுப்பதற்கான சிறந்த சாத்தியக்கூறுகள் உள்ளது (நீதிமொழிகள் 11:14).
- குழு ஊழியம் சத்துருவினால் வைக்கப்பட்ட ஒழுங்கீனமான கண்ணிகளில் அகப்படாதபடிக்கு பாதுகாக்கப்பட உதவுகிறது. அதிலே அநேக தனிப்பட்ட ஊழியங்கள் கண்ணியிலே அகப்பட்டுக் கொண்டது.
- குழு ஊழியம் ஊழியங்களை தாமாகவே செய்வதற்குரிய வலிமையையும் உற்சாகத்தையும் கொடுக்கிறது (யாத்திராகமம் 17:12). மற்றவர்களுக்கு செய்யும் ஊழியம் உள்உந்துதல் உணர்வையும் ஆவிக்குரிய வளர்ச்சியையும் கொடுக்கிறது. சிறந்த ஐக்கிய ஈடுபாடு சிறந்த வலிமையைக் கொடுக்கிறது.
- எப்போது அனுபவம் குறைந்த ஊழியங்கள் அதிக முதிர்ச்சியடைந்த ஒன்றோடு இணைந்து செல்லும் போது சீஷத்துவத்தின் செயல்பாடுகளும் பயிற்சியும் பலப்படுத்தப்படும்.

குழு ஊழியத்தின் தத்துவமும் நடைமுறையும்

குழு ஊழியத்திற்கான முதலாவது வெற்றியின் திறவுகோல், தேவனுக்குள் குழுவாக இணைக்கப்படுதலாகும் (மாற்கு 16:20). ஆண்டவர் முயற்சி செய்யாவிட்டால், நிச்சயமாக தோல்வியடைந்து விடும் அல்லது சிறிய அளவு வெற்றியோடு சிதறி விடுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக ஒவ்வொரு அங்கத்தினரும், ஆண்டவருடைய மனதை தேட வேண்டும். எல்லாரும் அவருடைய சித்தத்தில் உறுதிபட்டு துணிந்து செயல்படவேண்டும். இதிலே ஊழியத்திற்கான தரிசனமும், இலக்கும் சேர்க்கப்படுகிறது. அப்பொழுது தான் குழுவாக உருவாகுவதற்கு பொருத்தமாக இருக்கும்.

குழு ஊழியத்திற்கான இரண்டாவது வெற்றியின் திறவுகோல், அர்ப்பணிப்பாகும். தனிப்பட்ட ஒவ்வொரு அங்கத்தினருடைய அர்ப்பணிப்பின் அளவைப் பொறுத்து, குழு ஊழியத்தின் வெற்றி தொடர்புடையதாய் இருக்கிறது. குழுவானது தேவனுடைய நோக்கம் நிறைவேறாத படிக்கு, குழுவுக்குள் எந்த ஒரு காரியத்தையும் தடை செய்யவும், திசை திருப்பவும் அனுமதிக்கக் கூடாது. அதே வேளையில் ஒவ்வொரு அங்கத்தினரும் மற்றவர்களிடத்தில் அர்ப்பணிக்கப்பட்டவர்களாய் இருக்க வேண்டும். ஏனெனில் அது தான் மற்றவர்களுக்கான அன்பிலே வளருவதற்கான அடிப்படையாகும்.

ஜெயத்திற்கான மற்றொரு திறவுகோல் குழு அங்கத்தினரிடையே காணப்படும் தனிப்பட்ட மற்றும் கூட்டு தியான வாழ்க்கை. தேவனுக்கு செய்யும் ஊழியம் மனிதனுக்கு என்ன ஊழியம் செய்ய வேண்டும் என்பதை நிர்ணயம் பண்ணும் குழு ஊழியத்திற்கு நிலையான இடைவிடாத ஜீவனுள்ள ஜெபவாழ்க்கை மிக முக்கியமானதாகும். இணைந்து ஜெபிக்கிற குழு இணைந்து ஊழியம் செய்யும்.

குழு ஊழியத்திலே தலைமைத்துவ தத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இருந்தபோதிலும், எந்த ஒரு அங்கத்தினரும் மற்றவர்களைவிட முக்கியமானவர்கள் அல்ல. ஒழுங்கிற்கும் ஆக்கப்பூர்வத்திற்கும் ஒருவர் தலைமைத்துவத்தை அடுத்து முடிவான பொறுப்புள்ளவராய் இருக்க வேண்டும். இந்த தத்துவத்தை அங்கிகரிக்க மற்றும் செயல்படுத்த தவறுதல் அழிவை நோக்கிச் செல்லும் தலை போல் இருக்கும்.

குழுவின் உண்மையான செயல்பாடாய் இருக்கின்ற, முந்தின தத்துவத்தோடு நெருங்கிய தொடர்புடைய மிகப்பெரிய திறவுகோல் என்னவென்றால் பணிவின் தத்துவம் (எபேசியர் 5:21). நேரத்திற்கு நேரம் குழு அங்கத்தினர்களிடையே உண்மையான பணிவு தேவையாய் இருக்கிறது. உண்மையான பணிவின் ஆவி இல்லாவிட்டால் குழுவிலே செயல்படுவதற்கு மிக கஷ்டமாக உணர்கின்றார். ஒரு அங்கத்தினர் மற்ற அங்கத்தினரைக் குறித்து எந்த ஒரு கவலையும் படாமல், தன்னுடைய சொந்த வழியில் செல்ல தீர்மானித்து செல்வாரானால், குழுவின் முயற்சி மற்றும் ஆவிக்கு மிகப்பெரிய பாதிப்பை உண்டாக்கும்.

குழு ஊழியத்தில் வலிமையான தனிப்பட்ட உறவுநிலையில் ஜெயம் எடுப்பது முக்கியமாகும். ஐக்கியம் என்பது கண்டிப்பாக இருக்க வேண்டும். அநேக குழு முயற்சிகள் இந்த காரியத்தில் சலங்கொலி சத்தத்துடன் முறிந்துவிட்டன. இந்தப் பகுதியில் செய்தி தொடர்பின் தத்துவம் மிகப்பெரிய பலனைக் கொண்டு வரும். ஒருவர் விழிப்புடன் பொறாமை, போட்டிகள், கசப்புகள், குழப்பத்தின் ஆவி, குறை கூறுதல் இவற்றை கண்காணிக்க வேண்டும்.

ஒவ்வொரு அங்கத்தினர்களும் தொடர்ந்து தங்களில் தானே நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். தேவனுடைய சித்தத்தினால் தாங்கள் குழுவில் அங்கத்தினர்களாய் இருக்கிறோம் என்பதே. இதற்காக தன்னுடைய சொந்த தனிப்பட்ட உண்மைகளை அர்ப்பணித்து குழுவிலுள்ள ஊழியங்களுக்கு ஆதரவும் உதவியும் செய்யும் விதத்திலே எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.

எல்லா கிறிஸ்தவ தலைவர்களும் ஏதாவது ஒரு ஊழியத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். இந்த உண்மைக்கு வேத வசனம் ஆதரவு தருகிறது. எந்த வித குழு ஊழியத்திலே ஒவ்வொரு தலைவரும் அவர் இப்பொழுது என்ன பங்கை எடுத்துள்ளார் என்பதை சொல்ல முடியுமா?. ஸ்தல சபை மற்றும் பெரிய ஊழியங்களில் குழு ஊழியம் உயிர்பிக்கப்பட்டால் சபையானது மிக பாதுகாப்பாக ஆக்கப்பூர்வமாக செயல்பட்டு தேவனுடைய ஜனங்களின் தேவைகளை சந்திக்கிறது.

இப்பொழுது இருக்கிற ஊழியத்திலிருந்து குழு ஊழியத்திற்கு மாறுதல்

இளம் ஊழியங்களாக இருக்குமானால், குழு ஊழியத்தின் மேல் விசுவாசம் உடையவர்களாய் புதிய ஊழியத்தின் ஆரம்பத்திலிருந்தே ஈடுபடாலாம். சிலவேளைகளில் எப்படி இருந்தாலும், நிறுவப்பட்ட ஒரு ஊழியத்தில் செயல்படுகிற ஒரு தலைவர் குழு ஊழியத்திற்கு செல்ல விரும்பலாம். இந்த இடத்திலிருந்து சக தலைவர்களை தெரிந்து கொள்ளுதல் என்னும் செயல்பாட்டின் வழியில் அவர் கடந்து செல்கிறார். இது ஒரு முக்கியமான மாற்றமாகும். திட்டமிட்ட அளவுகளில் நடைபெற வேண்டும். குழப்பங்களை தவிர்ப்பதற்கும், ஊழியத்திற்கு விரோதமாய் சத்துருவின் தாக்குதலை தவிர்ப்பதற்கும், ஒழுங்கும் கிரமமாய் செயல்பட வேண்டும்.

பின்வரும் கேள்விகள் தலைவருக்கு அவருடைய தகுதிவாய்ந்த இணை ஊழியர்களையும், அவர்களுடைய பங்களிப்பையும், மதிப்பீடு செய்ய உதவும். குழுவின் குழு வேலை செய்கிற உறவுநிலையின் அமைப்பையும் மதிப்பீடு செய்ய உதவும். இந்தக் கேள்விகள் செயல்பாட்டிற்கு ஆரம்ப மூல ஆதாரமாகும். இதற்கு அதிக நேரமும், ஜெபமும் தேவைப்படும். இந்த விதமான ஊழியத்திற்கு செயல்பாட்டுடன் நகர்வதற்கு முன்பாக ஒரு தலைவர் தன்னுடைய ஊழிய குழுவைக் குறித்து விரிவாக புரிந்து கொள்ள வளர வேண்டும்.

எப்படி ஒரு மேய்ப்பர் தன்னுடைய இணை வேலையாட்களை தெரிந்து கொள்ள வேண்டும்?

- குணாதிசயத்தின் மூலம் அந்த நபரின் திறமையைப் பொறுத்து.
- அதிக ஜெபத்திறகும், தேவனைத் தேடிய பின்பாக.
- அந்த தனிப்பட்ட நபரைக் குறித்து மற்றவர்களுடைய உணர்வுகளை ஆய்வு செய்த பின்
- இயேசு கிறிஸ்துவுக்கு அவர்களுடைய அர்ப்பணிப்பின் மூலமாக
- அவர்களுடைய குறிப்பிட்ட ஊழியம் மற்றும் அழைப்பின் மூலமாக
- இழந்து போன ஆத்துமாக்களுக்கு அவர்களுடைய அன்பின் மூலமாக
- கவனிக்காமல் இருக்கும் பொழுது அவருடைய சேவை செய்யும் மனப்பான்மையின் மூலமாக
- அவருடைய ஆவியின் ஐக்கியத்தின் மூலமாக

ஒரு மேய்ப்பர் எப்படிபட்ட இணைவேலையாட்களை தெரிந்து கொள்ளக்கூடாது?

- அவர்களுடைய திறமையை வைத்து குணாதிசயத்தை வைத்து அல்ல.
- சபையிலே ஒரு பதவியை நிரப்ப வேண்டிய கட்டாயத்தின் நிமித்தம்
- தன்னுடைய சொந்த நிலைப்பாட்டை அல்லது தேவனுடைய வசனத்தின் நிலைப்பாட்டை விட்டு கொடுக்க நினைக்கும் போது
- இணைத்தலைவர் அதிகமான பணத்தை சபைக்கு கொடுப்பதினால்
- அவருக்கு அதிகமான கல்வி அறிவு இருப்பதினால்
- இளைஞனாய் இருந்து, அநேக தாலந்துகளும், சக்தியும் உடையவனாய் இருப்பதினால்
- உடனடியாக அவரை உபயோகிக்காவிட்டால் சபையை விட்டு சென்று விடுவேன் என்று மிரட்டுவதினால்
- அவருக்கு மற்ற பகுதிகளில் போட்டி மனப்பான்மை இருப்பதினால்

எப்படி ஒரு மேய்ப்பர் தன்னுடைய வேலையாட்களுக்கு பயிற்சி கொடுப்பது

- அவரைக் குழப்பாமல் வழிகாட்டுதல் மூலமாக
- அவர்களை புறக்கணியாமல் உற்சாகப்படுத்துவதின் மூலமாக
- அடிமை வேலை வாங்காமல் சேவை செய்ய வைப்பதின் மூலமாக
- இல்லாமல் ஆக்காமல், அவர்களை உள்உந்துதல் செய்வதின் மூலமாக
- கவனியாமல் விட்டு விடாமல் அவர்களை ஒழுங்கு படுத்துவதின் மூலமாக
- கடிவாளம் போடாமல், வாய்க்காலாக உபயோகப்பதின் மூலமாக
- கட்டுப்பாட்டிற்குள் அல்ல விடுதலை செய்வதின் மூலமாக
- விரட்டி விடாமல் அவர்களுக்கு நம்பிக்கை கொடுப்பது

ஒரு மேய்ப்பர் எப்படி தன்னுடைய இணை வேலையாட்களுடன் வேலை செய்வது

- தன்னுடைய சொந்த ஊழிய பெலன்களை அங்கிகரிப்பதின் மூலமாக
- தன்னுடைய சொந்த ஊழிய வரையறைகளையும், பெலவீனங்களையும் அங்கிகரிப்பதின் மூலமாக
- வேலைக்காரத்துவ இருதயத்தையும், ஆவியையும் பராமரிப்பதின் மூலமாக
- ஒருவரோடொருவர் தனிப்பட்ட ஈடுபாட்டை கொண்டிருப்பதின் மூலமாக
- குழுவிற்குள் குடும்ப ஆவியை பராமரிப்பதின் மூலமாக
- மன்னிக்கும் ஆவியை உற்சாகப்படுத்தி பராமரிப்பதின் மூலமாக
- நேர்மை மற்றும் குழுவிலே திறந்த நடக்கை உள்ளவர்களாய் இருப்பதற்கு பயிரிடுவதின் மூலமாக
- போதிக்கதக்க ஆவியை பராமரிப்பதின் மூலமாக
- நல்ல செய்தி தொடர்பை பராமரிப்பதின் மூலமாக

ஊழியக்குழு அங்கத்தினரின் குணாதிசயங்கள்

பின்வரும் தகுதிகளில் ஒருவர் முதிர்ச்சியடைய வேண்டும்:

1.	மறுபடியும் பிறத்தல்	யோவான் 3:3-7; ரோமர் 6:23
2.	ஆவியிலே எப்பொழுதும் நிறைந்திருத்தல்	எபேசியர் 5:18
3.	ஆவியின் கனியை உடையவர்களாய் இருத்தல்; தேவ அன்பிலே வேறுன்றி நிலை நிறுத்தப்பட்டு ஆர்வமுட்டப்படுதல்	கலாத்தியர். 5:22-25; எபேசியர். 3:16-19; 1கொரிந்தியர் 13:1-8
4.	ஆவியின் வரங்களை வெளிப்படுத்திக் காட்டுதல்	1கொரிந்தியர். 12:7-11
5.	தேவனுடைய கால அட்டவணையின்படி செயல்படுதல்	1 சாமுவேல்.16:7; யோவான். 5:19
6.	ஊழியத்தை பெறுவதற்கும் கொடுப்பதற்கும் உபதேசிக்கப் படுவதற்கும், திறந்த நிலையில் இருத்தல், தொடர்ந்து வளருவதற்கும், உணர்ச்சிபூர்வமாக முழுமையடைவதற்கும் திறந்த நிலையில் இருத்தல்	நீதிமொழிகள். 15: 5:32; மத்தேயு 7:3-5; பிலிப்பியர். 2:12-13
7.	வேத வசனத்தில் நன்றாக வேறுன்றியவராய் இருத்தல்	1தீமோத்தேயு. 4:6-7; 2தீமோத்தேயு. 2:15;3:16
8.	ஸ்தல சபையின் அங்கத்தினராக செயல்படுதல்	எபிரெயர் 10:25; ரோமர் 12:4-5
9.	பணிவுள்ள, முரட்டாட்டம் இல்லாத இருதயம் உடையவர்களாக இருத்தல், கணக்கு ஒப்புவித்தலைக் குறித்தும் தெய்வீக அதிகாரத்தைக் குறித்தும் புரிந்தவராய் இருத்தல்	எபேசியர். 5:21; எபிரெயர் 13:17 1சாமுவேல் 15:22,23 மத்தேயு 8:9
10.	ஸ்தாபனத்திலே நடுநிலையான ஊழியம்	1கொரிந்தியர் 3:3-11
11.	வேலைக்கார இருதயம், தியாக மனப்பான்மை, எப்பொழுதும் தேவன் பயன்படுத்த ஆயத்தமாய் இருத்தல், தாங்கும் ஆற்றல்	எபிரெயர் 12:1,2; ரோமர் 12:1; 2தீமோத்தேயு 2:3-6
12.	பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலுக்கு உணர்வு உடையவராகவும் கீழ்படிகிறவராகவும் இருக்க வேண்டும். அவருடைய சித்தத்தை செய்வதற்கு அபிஷேகத்திற்காய் அவரை நம்பி மற்றவர்களுக்காய் ஜெபிக்க வேண்டும்.	ரோமர் 12:2; 2தீமோத்தேயு 1:6,7; யோவான் 14:12-14; மாற்கு 16:17-20
13.	நியாயம் தீர்க்கிறவராக புரிந்து கொள்ள முடியாதவராக இல்லாமல் இரக்கமுள்ளவராக இருக்க வேண்டும்.	ஏசாயா 11:2-4 2கொரிந்தியர் 1:4
14.	"ஆராய்ந்து பாரும் தேவனே" என்ற தத்துவத்திலே நடக்க வேண்டும். மன்னித்தல் என்னும் வாழ்க்கை மாதிரியை தெரிந்து கொண்டவராய் இருக்க வேண்டும்.	சங்கீதம் 139:23,24; எபிரெயர் 12:15
15.	தனிப்பட்ட ஜெபவாழ்க்கையில் தேவனோடு நெருங்கிய தொடர்பு உடையவராக இருக்க வேண்டும்.	1தெசலோனி. 5:17; எபேசியர் 6:18
16.	நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்கள் என்பதை அறிய வேண்டும்.	ரோமர் 8:1; 1யோவான் 4:4; எபேசியர் 1:3 – 2:10

புதிய ஏற்பாட்டில் குழு ஊழியம்

புதிய ஏற்பாட்டில் குழு ஊழியம் என்ற கருத்தை காட்டும் வேத வசனங்கள்:

a. இயேசுவும், 12 அப்போஸ்தலர்களும் (மத்தேயு 10). இயேசு அவர்களை இரண்டு இரண்டு பேராக நகரத்திற்குள் அனுப்பினார்.
b. இயேசு 70 பேரை அனுப்பினார், இரண்டு பேரை ஒவ்வொரு நகரத்திற்குள்ளும் அனுப்பினார் (லூக்கா 10:12).
c. பேதுருவும், யோவானும் இணைந்தே வேலை செய்தார்கள் (அப்போஸ்தலர் 3).
d. பிலிப்பு, பேதுரு மற்றும் யோவான் சமாரியாவில் (அப்போஸ்தலர் 8)
e. பேதுருவும், மற்ற ஆறு சகோதரர்களும் (அப்போஸ்தலர் 10,11)
f. பவுலும், பர்னபாவும் இணைந்தே வேலை செய்தார்கள் (அப்போஸ்தலர் 13:13,14) பவுலும் அவனுடைய குழுவும் இணைந்தே இருந்தார்கள்.
g. யூதா, சீலாவும் பவுல் மற்றும் பர்னபவுடன் இணைந்தார்கள் (அப்போஸ்தலர் 15:22)
h. பர்னபாவும், யோவான் மாற்கும் இணைந்தே பிரயாணம் செய்தார்கள் (அப்போஸ்தலர் 15)
i. பவுலும், சீலாவும் குழுவாக இணைந்தார்கள் (அப்போஸ்தலர் 15)
j. தீமோத்தேயு, பவுல் மற்றும் சீலாவுடன் இணைந்தான் (அப்போஸ்தலர் 16)
k. பவுல், ஆக்கில்லா பிரிஸ்கில்லாவை தன்னுடன் வேலையிலே இணைத்துக் கொண்டான் (அப்போஸ்தலர் 18)
l. தீமோத்தேயுவும், எரஸ்துவும் மக்கெதோனியாவுக்கு பவுலினால் அனுப்பப் பட்டார்கள் (அப்போஸ்தலர் 19:22)
m. பவுலுடன் ஆசியாவிற்கு அனுப்பப்பட்ட அப்போஸ்தல குழுவில் சோபத்தரும், அரிஸ்தர்க்கும், செக்குந்தும், காயுவும், தீமோத்தேயும், தீகிக்கும், துரோபமீமும் இடம்பெற்றார்கள்.
n. கண்காணிகளும், உதவிக்காரர்களும் இணைந்தே பிலிப்பு பட்டணத்தில் வேலை செய்தார்கள் (பிலிப்பியர் 1:1)
o. ஆலோசனை சங்கத்தில் அப்போஸ்தலரும், மூப்பரும், சபையாரும் (அப்போஸ்தலர் 15:1,2; 21:17,18).
p. மூப்பர்கள் கிரேத்தா தீவிலே தீத்துவுடன் (தீத்து 1:5)
q. மூப்பர்கள் எபேசுவிலே தீமோத்தேயுடன் (அப்போஸ்தலர் 20:17).
r. அந்தியோகியா பட்டணத்திலிருந்த தீர்க்கதரிசிகளும், போதகர்களும் (அப்போஸ்தலர் 13:1-4)

இதுவரை நாம் அநேக வேத வசனங்களில் இந்தவிதமான ஊழியங்கள் ஆதிசபையில் இணைந்தே செயல்பட்டது என்பதை பார்த்தோம். நல்ல குழு ஆவியும், தத்துவங்களும் சபையிலே இருக்க வேண்டும் என்பது தேவனின் நோக்கமும், விருப்பமுமாகும். சில வேளைகளில், சில ஒத்துழைக்காத தன்மையும், வேற்றுமையும் குழுவிலே காணப்பட்டாலும்.

குழு வேலைக்கான நடைமுறை தத்துவங்கள்

1. தலைமை அல்லது குழு தலைவர்

தலைவர் எப்படியோ அப்படியே குழுவும். அவருக்கு தலைமைப் போதகர், மூப்பர் ஊழியர் அல்லது எந்த விதமான தலைப்பு அவருக்கு கொடுக்கப்பட்டாலும் குழு வேலையில் வெற்றிக்குரிய திறவுகோலில் அவர் ஒருவர். எவ்வாறு இருந்தாலும் ஒரு தலைவரின் முக்கியத்துவம் வேதாகமத் தத்துவங்களின் அடிப்படையிலே வேலை செய்கிறது.

a. குழுவானது பின்பற்றும்படியாக அவர்கள் மாதிரியாய் இருக்க வேண்டும் (1 கொரிந்தியர் 11:1; எபேசியர் 5:2; பிலிப்பியர் 4:9). பவுல் விசுவாசிகளுக்குச் சொல்லுகிறான், அவனிடத்தில் கற்றும் கேட்டும் பெற்றும் பார்த்தும் இருக்கிற காரியங்களை அவர்கள் செய்ய வேண்டும். ஒரு தலைவர் ஆவிக்குரிய ரீதியில், ஒழுக்க ரீதியில், அறிநெறி ரீதியில், சமுதாய ரீதியில்

உபதேச ரீதியில் முன்மாதிரியாய் இருக்க வேண்டும். மற்றும் அவருடைய குடும்பத்திலும் கூட எல்லா நேரமும் வேதவசனத்தின் தகுதியளவுக்கு வாழுகிறார் என்பதை நீருபிக்க வேண்டும்.

1) தத்துவத்தினால் நடத்தப்படு - நீ என்ன விசுவாசிக்கிறாய்.
2) ஒழுக்க விதியினால் நடத்தப்படு - நீ என்ன சொல்லுகிறாய் (சங்கீதம் 119:4, 168). ஒழுக்க நடத்தையினால் ஆளப்படுதல்
3) பயிற்சினால் நடத்தப்படு - நீ என்ன செய்கிறாய் (மத்தேயு 23:1-3). பாசாங்கு செய்யாதே.
4) தனிப்பட்ட மாதிரியான வாழ்க்கையினால் நடத்தப்படு - நீங்கள் யார் (பிலிப்பியர் 3:17; 1பேதுரு 5:3). மற்றவர்கள் பின்பற்றும் படியான மாதிரியாய் இருக்க வேண்டும் (பிலிப்பியர் 4:9; 2தீமோத்தேயு 3:10).

b. சர்வாதிகார ஆவி இருக்க கூடாது (லூக்கா 22:24-27; மாற்கு 10:42-45; 2கொரிந்தியர் 1:24; தானியேல் 5:19). ஜனாதிபதி அல்லது அரசியல் அலுவலகத்தைப் போல் நடத்தப்படக்கூடாது. ஆளுகைத்துவம், அதிகாரத்துவம், ஆணையிடுதல் இவைகளினாலும் அல்ல.

ஒருவர் முதலாளிக்கும், தலைவருக்கும் இடையேயுள்ள வித்தியாசங்களை இவ்வாறு பட்டியலிடுகிறார்:

1) முதலாளி ஆளோட்டியாய் இருக்கிறார் - தலைவர் பயிற்றுவிக்கிறார்.
2) முதலாளி அதிகாரத்தை சார்ந்துள்ளார் - தலைவர் நல்ல சித்தத்தை சார்ந்துள்ளார்.
3) முதலாளி பயத்தை உருவாக்குகிறார் - தலைவர் குதூகலத்தை உண்டாக்குகிறார்.
4) முதலாளி செய்யப்பட வேண்டிய பணியை நியமிக்கிறார் - தலைவர் வளர்ச்சி அளவை நிர்மாணித்து கொடுக்கிறார்.
5) முதலாளி கட்டளைகளை கொடுக்கிறார் - தலைவர் ஆலோசனை கொடுக்கிறார்.
6) முதலாளி தடங்கலுக்கு குற்றம் சுமத்துகிறார் - தலைவர் தடங்கலை சரி செய்கிறார்.
7) முதலாளி ஜனங்களை தள்ளுகிறார் - தலைவர் அறிவுறுத்தி ஜனங்களை இணங்கச் செய்கிறார்.
8) முதலாளி குற்றச்சாட்டுகளை பெறுகிறார் - தலைவர் ஒத்துழைப்பை பெறுகிறார்.
9) முதலாளி கூறுகிறார் "போய் கொண்டே இருங்கள்" - தலைவர் "போவோம் வாருங்கள்" என்கிறார்.
10) முதலாளி இயந்திரமயமாக கட்டுகிறார் - தலைவர் மனிதர்களை கட்டுகிறார்.
11) உலகத்திற்கு தலைவர்கள் தான் தேவை – யாருக்கும் முதலாளி தேவையில்லை.

c. அவருக்கு வேலைக்கார ஆவி இருக்கவேண்டும் (மாற்கு 10:45; 1இராஜாக்கள் 12:7-8). ஒருவன் வேலைக்கார ஆவியுடன் அரசனாக ஆட்சி செய்தால் ஜனங்கள் அவனுக்கு சேவை செய்வார்கள்.

d. ஜனங்கள் அவனோடு இணைந்து வேலை செய்யக்கூடிய நபராக இருக்கவேண்டும். மற்றும் அவனுக்காக அல்ல. அநேக ஊழியர்கள் ஜனங்கள் அவர்களோடு இணைந்து வேலை செய்ய முடியாதவர்களாய் இருக்கிறார்கள், எப்போது தங்களுடைய பதவியில் பாதுகாப்பற்ற தன்மையை உணர்கிறார்களோ அப்பொழுது அவர்களை விட்டு விலகி விடுவார்கள். (யோவான் 13:3; 1தீமோத்தேயு 1:12).

e. இயேசு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களோடு இருந்தது போல குழுவானது வளர்ச்சியடையும் போது குற்றங்களும் வருவதற்கு அனுமதிக்க வேண்டும்.

f. குழுவின் மேல் நம்பிக்கை உடையவராய் இருக்க வேண்டும். அவர்களுடைய நேர்மையைக் குறித்தோ, நோக்கங்களைக் குறித்தோ கேள்வி கேட்க கூடாது.

g. பொறுப்புகளையும் அதனுடைய அதிகாரத்தையும் பகிர்ந்து கொள்ள சித்தமுடையவராய் இருக்க வேண்டும் (மாற்கு 13:34). ஆனாலும் கணக்கு ஒப்புவித்தல் தேவைப்படுகிறது.

h. குழு அங்கத்தினர்களுக்கு கொடுத்த தொடர்தேர்ச்சியான கட்டளையை அவரே மதிக்கிறவராக இருக்க வேண்டும்.

i. தன்னுடைய கனத்தை பகிர்ந்து கொள்ள விருப்பமுடையவராக இருக்க வேண்டும். மற்றவர்கள் வெற்றி பெறும்போது பொறாமை கொள்ளக்கூடாது (எண்ணாகமம் 27:20; 11:14-17).

j. குழு ஊழியத்தை விடுவிக்க வகைதேட வேண்டுமேயொழிய அவர்களை அமுக்கி ஒடுக்கக்கூடாது.

k. அவர் குழு அங்கத்தினரை எதிர்கொள்ள ஆலோசனை சொல்ல விரும்பம் உடையவராய் இருக்க வேண்டும். அந்த பொறுப்புகளை மற்றவர்கள் செய்ய விட்டுவிடக் கூடாது. பிரச்சனை சிறிதாக இருக்கும்போதே இடைப்பட வேண்டும்.

l. அவர் எப்பொழுதும் செய்தி தொடர்பை தெளிவாகவும், திறந்த நிலையிலும் செய்கிறவராக இருக்க வேண்டும். செய்தித் தொடர்பு தடைபடுதல் என்பது குழுவேலையில் மிகப்பெரிய பாதிப்பை உண்டாக்கும் காரணியாகும். மற்றவர்களோடு அவமானத்தையோ எதிர்ப்பையை எடுக்காத வண்ணம் விடுதலையோடு பேசுவது அவசியம்.

m. குழு ஊழியத்தை கவனிக்கும் பொழுது மூன்று பெரிய பிரச்சனைகளை அங்கிகரித்துக் கொள்ள வேண்டும்.
   - தவறாக பயன்படுத்துதல் - தகுதியில்லாத நபர்கள், பயிற்சி அளிக்கப்படாதவர்கள், பொறுப்பிற்காக மற்றவர்களை பயிற்சியளிக்க தவறியவர்கள்.
   - பயன்படாமை – சிறப்பாக செய்யமுடியும் என்ற ஈடுபாட்டின் உணர்வு இல்லாதிருத்தல், மற்றவர்களையும் ஈடுபடவிடாதிருத்தல்
   - செல்வாக்கை தவறாக பயன்படுத்துதல் - அதிக பாரம், அதிக வேலை, அதிக தாலந்துள்ள வரங்களுள்ள ஒருவர்.

n. எல்லாக் குழு அங்கத்தினர்களும் குழுக் கருத்திலே நடத்தை விதியிலே கட்டியெழுப்புபவராக இருக்க வேண்டும் மற்றும் ஒருங்கிணைக்கப் படுதலை பயிற்சி செய்யவேண்டும்.

o. பேச்சிலே மனநிலையில் தீர்ப்பு செய்வதில் தரிசனத்தில் ஐக்கியத்தை பராமரிக்க முயற்சி செய்கிறவராய் இருக்க வேண்டும் (சங்கீதம் 133).

p. குழு அங்கத்தினர்களோடு தொடர்பு நிலையை கட்டியெழுப்புகிறவராக இருக்க வேண்டும். தொடர்பு நிலை தானாக ஏற்படாது. அவைகள் கட்டப்பட வேண்டும். தொடர்பு நிலை சடமாக்கப் படமுடியாது. தொடர்பு கொள்ள முடியாததை தொடர்பு கொள்ளாது.
   - தொடர்பு நிலை – முதலாவது தேவனிலிருந்து ஆரம்பிக்கிறது (1யோவான் 1:7-9).
   - தொடர்பு நிலை – மற்றவர்களை கட்டியெழுப்புகிறது (1யோவான் 1:5,6). கிடைமட்டமாகவும், நேர்மட்டமாகவும்.
   - தொடர்பு நிலை – ஒருவருக்கொருவர் அர்ப்பணிக்க வழி நடத்துகிறது
   - தொடர்பு நிலை – பராமரிக்கப் படவேண்டும் அதேவேளையில் பராமரிப்பு செய்கிற காரியங்களை கொண்டு வரவேண்டும்.
     ஒரு கட்டிடத்திலே ஒரு கல் மற்ற ஆறு கல்லுடன் தான் தொடர்பு கொள்ள முடியும். இப்படியே முழு கட்டிடம் முழுவதும்.
   - தொடர்பு நிலை ஆவியிலே இருக்கிறது. ஆவியிலே ஒருமனப்பாடு, அர்ப்பணிப்பு, "மரணம் பிரிக்கும் வரை சிறந்ததாக இருந்தாலும், மோசமாக இருந்தாலும்"

q. அவர்கள் தவறு செய்தாலும் இவர் குழுவிற்கு உண்மையானவராக இருக்க வேண்டும். தனிமையிலே கடிந்துக் கொள்கிறார். உடன் மூப்பருக்கு ஆதரவு கொடுக்கிறார். ஆனால் மற்றவர்களை தாக்க அனுமதிப்பதில்லை. குழந்தைகள் கூட பெற்றோரை தாக்க அனுமதிப்பதில்லை.

r. அவருடைய பெலவீனத்திலே பெலப்படுத்தும் வலிமையுள்ள மனிதர்கள் அவரைச்சுற்றி இருக்க வேண்டும். 'ஆமா சாமிகள்' குழுவினர் சுற்றிலும் இருக்கக் கூடாது (நீதிமொழிகள் 15:22). அநேகருடைய ஆலோசனையினால் பாதுகாப்பு உண்டு.

s. அவர் தெளிவான தரிசனத்தை பராமரிக்கிறவராய் இருக்க வேண்டும் (நீதிமொழிகள் 29:18), தன்னுடைய சொந்த வாழ்க்கையிலும் ஊழியத்திலும் முழு சபையிலும், தலைமைத்துவத்திலும்

கிறிஸ்துவின் சரீரமாகிய சபை முழுவதிலும் நோக்கம் தரிசனம், இலக்கு, செல்லும் திசை கண்டிப்பாக இருக்க வேண்டும்.

t. அவர் குழு இணைவதற்கும், ஐக்கியப்படுவதற்கும், போதிப்பதற்கும் நேரத்தை உண்டு பண்ணுகிறவராக இருக்க வேண்டும்.

u. அவர்களுக்காக தெய்வீக அன்பை உடையவராக இருக்க வேண்டும் (1கொரிந்தியர் 13).

v. அவர் எப்பொழுதும் பிரச்சனைகளை தாக்க வேண்டும், தனிப்பட்ட நபர்களையல்ல.

w. அவர் வேலை சிறப்பாக செய்யப்படுவதற்கு உற்சாகப்படுத்த வேண்டும் (புகழ்ச்சியான வார்த்தைகள் அல்ல).

x. அவர் வசனத்தின் அடிப்படையிலுள்ள தத்துவ மனிதனாக இருக்க வேண்டும்.

y. அவர் தன்னில்தானே தைரியமுள்ள மனிதனாக மற்றவர்களையும் உற்சாகப்படுத்தக்கூடிய மனிதனாக இருக்க வேண்டும்.

z. அவர் தெய்வீக குணாதிசயங்கள் நிரம்பிய மனிதனாக இருக்க வேண்டும்.

a. அவர் கிருபை பொருந்திய மனிதனாக இருக்க வேண்டும்.

b. அவர் தாழ்மையானவராக இருக்க வேண்டும்.

c. அவர் தன்னுடைய முக்கியமான காரியங்களை வரிசைப்படுத்துபவராக இருக்க வேண்டும்.

d. அவர் நியாயமான நியாயத்தீர்ப்பின் அடிப்படையிலே தீர்மானங்களை எடுக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

e. அவர் ஜனங்களுக்கு உணர்ச்சிபூர்வமாக இருக்க வேண்டும். ஆனால் மிக உணர்ச்சிபூர்வமாக இருக்கக் கூடாது. எளிதில் கோபப்படுகிறவராக இருக்கக் கூடாது.

f. அவர் மற்றவர்களோடுள்ள இடைப்பாட்டிலே நடுநிலைமையை கடைபிடிக்க வேண்டும். ஒருசார்பு நிலை இல்லாதவராக இருக்க வேண்டும்.

g. அவர் உண்மையான ஆர்வமுட்டுகின்றவராக இருக்க வேண்டும்

h. அவர் பாசாங்கு செய்பவராக, மேடை நடிகராக, பல முகங்களைக் கொண்ட மனிதராக இருக்க வேண்டும் (மத்தேயு 23).

i. அவர் உண்மையுள்ள மனிதனாக இருக்க வேண்டும்; அவருடையவர்கள் அவரைப் போல நல்லதாக இருக்க வேண்டும். (லூக்கா 16:10-12).

2. தலைமைத்துவத்தை தெரிந்துக்கொள்ளுதல்

ஆற்றலுள்ள தலைமைத்துவத்தை தெரிந்துக்கொண்டு அதை குழுவாக விரிவாக்குவதில் கவனிக்கப்பட வேண்டிய காரியங்கள் இங்கே பட்டியலிடப்பட்டுள்ளது:

a. வெற்றியடைய வேண்டும் என்கிற ஆவி மற்றும் அரசியல் முன்னேற்றத்திற்கான புத்திசாலியான திட்டம் போன்றவற்றை கவனியுங்கள். உயர்வோ ஆண்டவரால் வரும் (சங்கீதம் 75).

b. தலைமைத்துவ பதவியை விலைக்கு வாங்கப்பட்டதாக இருக்க கூடாது.

c. சிறிய காரியத்திலும் உண்மைத்துவத்தை கவனிக்க வேண்டும். நல்லது செய்தான், உத்தமும் உண்மையும் உள்ள ஊழியக்காரன். ஒருவர் நல்லவராக இருக்கலாம் (உதாரணம்: பியானோ வாசிப்பவர்) ஆனால் உண்மையில்லை (நீதிமொழிகள் 25:19; 1கொரிந்தியர் 4:1,2; லூக்கா 19:17; மத்தேயு 25:14-36).

d. மனிதர்களின் குணாதிசயத்தின் தரத்தை கவனிக்க வேண்டும் (1தீமோத்தேயு 3, தீத்து 1).

e. சுய சித்தத்தை கவனிக்க வேண்டும். மறுஉத்தரவு, எதிர்செயலை கவனிக்க பரீட்சிக்கப் படவேண்டும் (தீத்து1:7; 2பேதுரு 2:10; ஏசாயா 14:12-14; தானியேல் 11:36).

f. போதிக்கும் ஆவியை கவனிக்க வேண்டும் (சங்கீதம் 27:11; 86:11). சாந்தமுள்ள ஆவி தேவை.

g. அவர் வளைந்து கொடுப்பவரா, சரி செய்யப்பட கூடியவரா, எப்பொழுதும் கிடைக்கக் கூடியவரா; ஒழுக்கத்தையும், கண்டிப்பையும் பெற்றுக் கொள்ளும் தன்மையுடையவரா என்பதை கவனிக்க வேண்டும் (யாக்கோபு 4:7; எபிரெயர் 13:17; பிரசங்கி 10:4).

h. ஊழியத்தை விட ஆடுகளின் மீது அதிக அன்பு இருக்கின்றதா என்று கவனிக்க வேண்டும் (1பேதுரு 4:7; ரோமர் 12:10).

i. பணிவிடை ஆவி இருக்கின்றதா என்று கவனிக்க வேண்டும்; அன்பின் அடிமை (மாற்கு 10:43-45).

j. ஜனங்களுக்கும், அவனுக்கும் உள்ள தொடர்பை கவனிக்க வேண்டும். ஜனங்கள் அவனை பின்பற்ற விரும்புகிறார்களா? மக்களோடு உள்ள தொடர்பு அல்லது மக்களை விட்டு அப்புறம் செல்கின்றவரா? அவனுடைய சகோதரரால் ஏற்றுக் கொள்ளப் படுகின்றவரா? (உபாகமம் 33:24).

k. விடாமுயற்சியையும், ஆர்வத்தையும் கவனிக்க வேண்டும். அவன் சோம்பேறியா? அறிவில்லாத ஆர்வமுடையவரா? (2பேதுரு 1:5; ரோமர் 10:1,2).

l. தகுதிகாண் பருவகாலத்தில் வையுங்கள் (1தெசலோனிக்கேயர் 5:21; 1தீமோத்தேயு 3). மக்களுக்கும், தங்களுக்கும் மனஉளைச்சலை கொடுக்காமலிருக்கின்றவரா என்பதை சிறிய பகுதியில் நீருபிக்க வேண்டும், அதை நீருபிக்க காலம் எடுக்கும்.

m. மற்றவர்களை கவர்ந்திழுக்கும் தன்மை குணாதிசயத்தை குருடாக்க அனுமதிக்கக் கூடாது. குணாதிசயம் மாத்திரமே கவர்ந்திழுக்கும் தன்மையை கையாளமுடியும்.

n. அறிநெறியுள்ளவரா: நல்ல நடத்தை உள்ளவரா, நல்ல பண்பு உள்ளவரா என்று கவனிக்க வேண்டும்.

o. நல்ல செய்தி தொடர்பு செய்கின்றவரா என்று கவனிக்க வேண்டும்.

p. மற்றவர்களோடு ஒத்துபோகும் தன்மையும், நல்ல இசைவுநிலையும் உள்ளதா என்று கவனிக்க வேண்டும் (1பேதுரு 2:17; ரோமர் 12:17). 'சிங்கத்தைப்' போல தைரியத்திற்கு முன்பாக 'ஆட்டுக்குட்டியின்' ஆவியை வளர்க்க வேண்டும்.

q. தகுந்த கால இடைவேளையில் மதிப்பீடு செய்து சரிபார்க்க வேண்டும். நேர்மறையான காரியத்தோடு இடைப்பட்டு, எதிர்மறைகளை சரிசெய்யுங்கள்.

r. முதிர்ந்த ஊழியருக்கும், தலைமைத்துவத்திற்கும், குடும்பத்திற்கும், சபைக்கும், சபையின் தரிசனத்திற்கும் விசுவாசமாய் இருக்கின்றாரா என்பதை ஆய்வு செய்து கவனிக்க வேண்டும்.

s. பணிந்துபோகின்ற ஆவி இருக்கின்றதா என்று கவனிக்க வேண்டும்(1பேதுரு 5:1-5), எப்படியிருந்தாலும், அதிகமாக சார்ந்திருக்க கூடாது.

t. தாழ்மையின் ஆவி இருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். பெருமை அல்லது முரட்டாட்டத்திற்கும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

u. ஆவிக்குரிய வாழ்க்கை, ஜெபம், வசனம், ஆராதனை, தேவனோடு நல்ல தொடர்பு உள்ளதா என்று கவனிக்க வேண்டும்.

v. தூய்மையான, வலிமையான ஆர்வமூட்டுதல் இருக்கின்றதா என்று கவனிக்க வேண்டும். அல்லது எப்போதும் ஆர்வமூட்டப்பட வேண்டியவராக இருக்கின்றாரா?

w. சுயநலவாதியா என்பதை கவனிக்க வேண்டும்.

x. உற்சாகமிழந்தவர், நம்பிக்கை இழந்தவர், சிடுசிடுக்கின்றவர், முறுமுறுக்கின்றவர் அல்லது சந்தோஷத்தின் ஆவியுடையவரா என்பதை கவனிக்க வேண்டும்.

குழுவின் வெற்றிகரமான செயல்பாடுகள்

பின்வரும் சில தத்துவ, நடைமுறை வழிகாட்டி குறிப்புகள் குழு ஊழியம் சரியான முறையில் செயல்படுவதற்கு உதவும்.

a. குழுவிற்கு ஒரு தலைவர் மாத்திரம் இருக்க முடியும். சமமானவர்கள் மத்தியில் முதலானவர் என்ற மாதிரியில் பார்க்கிற வண்ணமாக, தலைமைத்துவம் என்கிற தத்துவம் குழு ஊழியத்தில் அங்கிகரிக்கப்பட வேண்டும். இருந்தபோதிலும் ஒருவரும் மற்றவரிலிருந்து அதிக முக்கியமானவரல்ல. ஒழுங்கு முறைக்காகவும், திறமையாக செயல்படுவதற்கு யாராவது ஒருவர் தலைமைத்துவ பொறுப்பையும், இறுதியான பொறுப்பையும் எடுக்க வேண்டும். இதை அங்கீகரிக்க தவறுதல் அழிவிற்கு தலையாக மாறும்.

b. குழுவானது ஆண்டவரால் ஒன்றிணைக்கப்பட வேண்டும் (மாற்கு 16:20). ஆண்டவர் அதிலே இல்லாவிட்டால், குழுவானது தோல்வியடைந்து விடும். ஒவ்வொரு அங்கத்தினரும், ஆண்டவரைத் தேடி இது தான் அவருடைய சித்தம், இதற்காக நாம் இணைந்து வேலை செய்கிறோம் என்ற எண்ணம் வேண்டும். ஒப்பிடுக. 12 மற்றும் 70பேர் இயேசுவினால் இரண்டு இரண்டு பேராக வெளியே அனுப்பப்பட்டார்கள் (லூக்கா 9, 10).

c. குழுவானது தேவனால் தொடப்பட்ட இருதயமுள்ள மனிதர்களால் உருவானதாக இருக்க வேண்டும் (1சாமுவேல் 10:26). உட்புறமாக தலைவரின் இருதயத்தோடு இணைக்கப்பட்டதாய் இருக்க வேண்டும். வெளிப்புறமாக மாத்திரம் அமைந்து இருந்தால் அது நீடித்து நிலைத்து நிற்காது. ஒருங்கே மதிப்பிடபடுவதற்கு ஒரே இருதயமுடையவர்களாக இருக்க வேண்டும். (1நாளாகமம் 12).

d. குழு தங்களுக்குள் ஒரே ஆவியுள்ளவர்களாக இருக்க வேண்டும், தங்களுடைய தலைவரைப் போல (எண்ணாகமம் 11:14-17).

e. குழுவிலுள்ளவர்கள் ஒருவருக்கொருவர் உண்மையாயிருப்பதை பராமரிக்க வேண்டும்.

f. குழுவிலுள்ளவர்கள் எல்லா நேரத்திலும் திறந்த நிலை செய்தி தொடர்பை கடைபிடிக்க வேண்டும். அரைகுறையான, தகுதியில்லாத தகவல்களை தெரிவிப்பதை தவிர்க்க வேண்டும்.

g. குழுவிலுள்ளவர்களுக்கு தெளிவாக செய்யப்பட வேண்டிய வேலை விவரிக்கப்பட வேண்டும். பொறுப்பான பகுதிகளை விவரித்து எழுதி கொடுக்க வேண்டும். இது அவர்களுடைய பொறுப்பின் பகுதி என்று கூற வேண்டும்.

h. குழு தங்களுடைய பொறுப்பிலுள்ள பகுதிகளுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

i. குழுவானது தனிப்பட்ட மற்றும் கூட்டு தியான வாழ்க்கை உடையதாக இருக்க வேண்டும். தேவனுக்கு செய்யும் ஊழியம், மனிதனுக்கு என்ன ஊழியம் செய்ய வேண்டும் என்று நிர்ணயிக்கும். குழுவானது இணைந்து ஜெபிக்க வேண்டும், இணைந்து தங்க வேண்டும்.
   - இணைந்து ஜெபி – ஆவிக்குரிய நேரங்களில்
   - இணைந்து பகிர்ந்து கொள் - நண்பத்துவம், ஐக்கியத்துவம்
   - ஒருவரோடொருவர் இருங்கள்(மாற்கு 3:14).
   - கருத்தாய்வு மற்றும் சம்பாஷனைகளை இணைந்தே செயல்படுத்துங்கள். அமைதியான இடங்களில், மற்றும் பல. குழு ஆவி பராமரிக்கப்பட வேண்டும்.
   - நிர்வாக மற்றும் அலுவலர்கள் கூட்டங்கள் இணைந்து நடத்தப்பட வேண்டும். இதை செய்வதின் மூலம் குழு ஒரேக் காரியத்தைப் பேசும். ஒரே மனநிலையில் ஒன்றாக இணைந்து ஒரே நியாயத்தீர்ப்பைக் கூறும் (1கொரிந்தியர் 1:10).

j. குழுவின் பாதுகாப்பு குழுவில் மாத்திரமே இருக்கிறது என்பதை அங்கீகரிக்க வேண்டும். பெலன், பாதுகாப்பு, ஒப்பிடுதல், சமநிலைப்படுத்துதல் குழுவில் இருக்கிறது. ஒரு நபருக்கு எல்லாக் காரியங்களும் இல்லை. ஒவ்வொருவருக்கும் பெலன் மற்றும் பெலவீனங்கள் உண்டு. ஆனால் இணைந்து இருக்கும்போது ஆண்டவருடைய ஞானத்தின் அநேக பகுதிகள் காணப்படும். ஒவ்வொருவருடைய பலத்தையும் உபயோகியுங்கள். பெலவீனத்தை சமநிலைப்படுத்துங்கள்.

k. குழுவானது பணிவின் தத்துவத்தை அறிய வேண்டும் (எபேசியர் 5:21). அவர்களுடைய பணிவு நேரத்திற்கு நேரம் பரிட்சிக்கப்படும்.

l. குழுவானது அர்ப்பணிப்பின் வலிமையை உணர வேண்டும். ஒவ்வொரு அங்கத்தினர்களும் மற்றவர்களுக்கு அர்ப்பணிக்க வேண்டும். குழுவின் தரிசனத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும்.

m. குழுவானது தனிப்பட்ட உரிமைகளை ஒப்படைத்து விட்டு குழுவிற்கு ஆண்டவர் தந்த தரிசனத்திற்கு ஆதரவு தரும் எல்லாவற்றையும் செய்யுங்கள்.

n. எந்த விலைக்கிரையம் கொடுத்தாவது குழுவானது ஐக்கியத்தின் ஆவியை பராமரிக்க முயற்சி செய்ய வேண்டும். அன்பு மற்றும் சத்தியத்திலே ஐக்கியமானது கட்டாயமாக்கப்பட்ட ஒன்று. பிரிவினை, பிளவு, பிரிவு குழுவிற்குள் உண்டாக்கும் எந்த ஒரு காரியமும் கொண்டு வருகிறதா என்று கவனமாக இருக்க வேண்டும்.

<u>குழு ஊழியத்தை அழிக்கும் சில காரியங்கள் கண்டுபிடிக்கப்பட்டு கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:</u>

1) போட்டி மற்றும் ஒப்பிடும் ஆவி (மத்தேயு 18:1-14).

2) சர்வாதிகார ஆவி அல்லது ஆளுகைத்துவம் (1பேதுரு 5:1-5; மத்தேயு 23:11).

3) பெருமை, தன்னிலை உயர்த்தும் ஆவி (லூக்கா 22:24) அது சண்டையை கொண்டு வரும். பெருமை வேறுபாட்டைக் கொண்டுவரும்.

4) கட்சி ஆவி, கழக ஆவி (1கொரிந்தியர் 1:10).

5) தியோத்திரேப்பு ஆவி, அதாவது முதன்மையானவற்றில் அன்பு கொள்ளும் ஆவி (3யோவான் 9,10). அது தீமையின் நடக்கையினால் வரும் கனி, காழ்ப்புணர்வு ஆவி மற்றவர்களை வெறுக்கும் தன்மை, ஐக்கியத்தை தடை பண்ணுதல், மற்றவர்களை வெளியேற்றுதல்.

6) செய்தித் தொடர்பில் குறைவுபடுதல்.

7) ஒருவருக்கொருவர் வெளிப்படையாக இல்லாமலிருத்தல், ஒருவருக்கொருவர் நேர்மையின்மையைக் காட்டுதல் (எபேசியர் 5:8-14).

8) தெய்வீக அன்பில் குறைவுபடுதல்.
9) ஒருவருக்கொருவர் பொறுத்துக் கொள்ளுதலில் குறைவு படுதல், ஒப்பிடுக. பனிரெண்டு சீஷர்கள்

10) மன்னிக்கும் ஆவி குறைவுபடுதல் (எபேசியர் 4:32; மத்தேயு 18:21-22).

11) ஆவிக்குரிய முதிர்ச்சி இல்லாதிருத்தல், மாம்சீகம் மேன்மைப்படுத்துதல் (1கொரிந்தியர் 3:1-4).

12) உண்மையான தாழ்மை இல்லாதிருத்தல் (மத்தேயு 18:1-4; மாற்கு 9:33-37).

13) ஞானத்தில் குறைவு படுதல், காரியங்களை சரியான நேரத்தில், இடத்தில், வார்த்தையில் செய்ய முடியாமல் போகுதல்.

14) பணிவு, வேலைக்கார ஆவி இல்லாதிருத்தல் (1பேதுரு 5:3; மாற்கு 10:42-45; 1இராஜாக்கள் 12:7-11).

15) ஒருவரிலொருவர் நம்பிக்கை இல்லாதிருத்தல் (பிலிப்பியர் 4:13).

16) பரிசுத்தம் இல்லாதிருத்தல் அல்லது தவறான முக்கியத்துவ படுத்துதலை உடையவராக இருத்தல் (மத்தேயு 6:33).

17) குழு ஒருங்கிணைக்கப்படாமலிருத்தல் மற்றும் தவறான வழியில் திருப்பி விடப்பட்ட முயற்சிகள்.

18) மற்றவர்களை குறித்து ஆவிக்குரிய கரிசனை இல்லாதிருத்தல் (மத்தேயு 23).

19) அறிவிலே குறைவுபடுதல் (ஒசியா 4:6; நீதிமொழிகள் 3).

20) ஒருவருக்கொருவர் மதிப்புக் கொடாமலிருத்தல் (எபேசியர் 5:29-30).

21) கூட்டு முயற்சியில் குறைவுபடுதல்.

22) ஒருவரையொருவர் பாராட்டுதலில் குறைவுபடுதல்; வாதத்திற்காக ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுதல்.

23) தரிசனத்தை பராமரித்தலில் குறைவுபடுதல் (நீதிமொழிகள் 29:18).

24) வேலையின் ஈடுபாட்டில் குறைவுபடுதல் (ஆகாய் 1:4).

25) தூய்மையான நோக்கம் இல்லாதிருத்தல், யூதாஸ் அல்லது சீமோனின் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும் (1தீமோத்தேயு 6).

26) போதனை ஏற்றும் ஆவி இல்லாதிருத்தல், சொந்த புரிந்துக் கொள்ளுதலை சார்ந்திருத்தல்.

குழு ஊழியத்தின் நோக்கமும், ஆசிர்வாதமும்

ஆசிர்வாதம் திராட்சை கொத்தில் காணப்படுகிறது. தனியான ஒரு திராட்சை பழத்தில் மாத்திரமல்ல (ஏசாயா 65:8). குழு ஊழியத்திலுள்ள பின்வரும் குறிப்புகளை தயவு செய்து படியுங்கள்:

1. குழு ஊழியம் சரீர ஊழியத்தின் ஜீவனுள்ள உண்மை மெய்ப்பிக்கிறது (1கொரிந்தியர் 13:1).

2. குழு ஊழியம் தற்கால உண்மையை சிறந்த விதத்தில் பேசச்செய்கிறது. அதிலே அதே காரியத்தை ஒன்றுக்கு மேற்பட்ட குரல்கள் பேசுகின்றார்கள் (உபாகமம் 17:6; மத்தேயு 18:16; 2கொரிந்தியர் 13:1).

3. குழு ஊழியம் காரியங்களில் தேவனுடைய மனதையும், அவருடைய சித்தத்தையும் எளிதாகப் புரிந்துக் கொள்ள உதவுகிறது (மத்தேயு 18:19,20; தானியேல் 2-4. தானியேலும் அவனுடைய நண்பர்களும்).

4. குழு ஊழியம் அதிக ஆக்கப்பூர்வமானது. சிறந்த விளைவுகளை விளைவிக்கிறது (பிரசங்கி 4:9-12).

5. குழு ஊழியம் சிறந்த பாதுகாப்பையும், சரிபார்த்தலையும் சமநிலைப் படுத்துதலையும் அளிக்கிறது (நீதிமொழிகள் 11:14).

6. குழு ஊழியம் ஒழுங்கீனமானவற்றை செய்யாதபடிக்கு பாதுகாக்கப்பட உதவுகிறது அல்லது சத்துருவினால் வைக்கப்பட்ட மற்ற கண்ணிகளிலிருந்து பாதுகாக்கிறது. அதிலே அநேக தனிப்பட்ட ஊழியங்கள் கண்ணியிலே அகப்பட்டுக் கொண்டன.

7. குழு ஊழியம் ஊழியங்களை தாமாகவே செய்வதற்குரிய வலிமையையும், உற்சாகத்தையும் கொடுக்கிறது (யாத்திராகமம் 17:12). அகத்தூண்டுதலை கொடுத்து கரங்களை தூக்கி விடுகிறது. குழு வேலையின் ஐக்கியத்திலே ஆவிக்குரிய வலிமை இருக்கிறது.

8. குழு ஊழியம் சீஷத்துவத்தில் வளருவதற்குரிய தருணத்தை அளிக்கிறது. அவர்களுடைய ஊழியங்களை விடுவிக்க உதவுகிறது, அதாவது தீமோத்தேயு, தீத்து, யோசுவா, எலிசா, இவர்கள் எல்லோரும் மற்ற ஊழியங்களின் மூலமாக பயிற்சி பெற்றவர்கள்.

சகோதரர்கள் ஐக்கியத்திலே ஒருமித்து வாசம் பண்ணும்போது தேவனுடைய ஆசிர்வாதங்கள் இந்த ஜீவனுக்கும், பின்வரும் வாழ்வுக்கும் உரியது. இந்த ஐக்கியம் அங்கத்தினரிடையே வெளிக்காட்டப்பட, ஸ்தல சபையின் தலைமைத்துவத்தில் நிருபிக்கப்பட வேண்டும்.

முடிவுரை:

இந்த படிப்பை முடிக்கும் தருவாயில் தலைவருக்கும், குழுவிற்கும் இடையே நிலைத்து நிற்கும் **தொடர்பு நிலையை** பற்றி சித்தரிக்கலாம்.
இதை காட்டுவதற்கு அநேக சித்திரங்களை உபயோகிக்கலாம். தேவன் அநேக கிறிஸ்துவின் சபையின் மாதிரிகளைக் கொடுத்திருக்கிறார். இதே தத்துவம் தலைமைத்துவத்திலும், சபையிலும் பின் தொடரும்.

- ஒரே தலை உண்டு. ஆனால் கிறிஸ்துவின் சரீரத்தில் அநேக அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். கிறிஸ்துவே அந்த தலை. எல்லா விசுவாசிகளும் அங்கத்தினர்களாக சமமானவர்கள். ஆனால் எல்லோருக்கும் குறிப்பிட்ட இடமும், செயல்பாடும் உண்டு.

- சைக்கிள் சக்கரத்தில் ஒரே நடு அச்சு உண்டு. ஆனால் அநேக இணைப்புக் கம்பிகள் இருக்கிறது. எல்லா இணைப்புக் கம்பிகளும் ஒரே மாதிரியானவைகள். சக்கரத்தின் விளிம்பு மற்றும் நடு அச்சினால் எல்லாம் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் ஒவ்வொன்றிற்கும் அதனுடைய சரியான இடம் உண்டு.

- ஒரு உண்மையான தேவனின் இஸ்ரவேல் உண்டு. ஆனால் எல்லாக் கோத்திரங்களும் தேவனுக்கு முன் சமமானவைகளாக இருந்தபோதிலும், தங்களுடைய தெய்வீகமான குறிப்பிட்ட இடத்தை தேவனுடைய முகாமிலே கொடுத்தார்கள்.

- ஒரு மோசே இருந்தான், ஆனாலும் அநேக நியாயதிபதிகளும், மூப்பர்களும், அவனோடு இணைந்து எத்திரோ தத்துவத்தின் கீழ் ஆயிரக்கணக்கான இஸ்ரவேல் தேச ஜனங்களுக்கு அவனுடைய சார்பில் ஆலோசனை வழங்கினார்கள்.

- ஒரு தேவனுடைய ஆசாரிப்புக்கூடாரம் இருந்தது. ஆனாலும் அநேக பாகங்களையும், பல்வேறு பணிமுட்டுகளையும் உடையதாய் இருந்தது. ஆனாலும் எல்லாம் இணைந்து தேவனுடைய உடன்படிக்கையோடும் அவருடைய மகிமையோடும் தொடர்புடையதாய் இருந்தது.
- ஒரு பிரதான ஆசாரியன் இருந்தான். அவன் பெயர் ஆரோன். ஆனாலும் லேவிக் கோத்திரத்திலே அநேக ஆசாரியர்கள் இருந்தார்கள். இவர்கள் இஸ்ரவேல் தேசத்திலே ஆசாரியத்துவத்தை நிறுவின.

- ஒரு தேவனுடைய ஆலயம் இருந்தது. ஆனாலும் அநேக கற்கள் மற்ற பொருட்களும் இருந்தன. எல்லா கற்களும் சமமானவைகள். ஆனாலும் எல்லாவற்றிக்கும் தேவனுடைய ஆலயத்தில் சரியான இடம் கிடைத்தது.

- ஒரு பிரமிடு உண்டு. ஆனாலும் அநேக கற்கள் இணைந்து பிரமிடை உருவாக்குகிறது. ஆனால் ஒரு தலைக்கல்லும், ஒரு மூலைக்கல்லும் உண்டு. மற்ற எல்லாக் கற்களும் தங்களுடைய இடத்திலிருந்து ஒன்றோடு மற்றொன்று தொடர்புடையதாய் இருக்கிறது.

- தேவனுடைய இராஜ்யத்திலே ஒரு இராஜா உண்டு. ஆனால் எண்ணிக்கையில் அடங்கா பிரஜைகள் உண்டு. அவர்கள் இராஜ்யத்தின் சட்டத்தின் கீழ் சம உரிமை உடையவர்களாக இருக்கிறார்கள்.

- ஒரு தேவனுடைய மற்றும் ஆட்டுக்குட்டியானவருடைய சிங்காசனம் உண்டு. ஆனால் மிக அதிகமான எண்ணிக்கையில் தேவதூதர்களும், பரிசுத்தவான்களும் வட்ட வடிவமாக இணைந்து நின்று சிங்காசனம் அவர்களுடைய மையத்திலிருக்க கூடினார்கள். எல்லாருக்கும் அவர்களுடைய இடம், ஒருவருக்கொருவர் உள்ள தொடர்பு மற்றும் சிங்காசனத்தோடு தொடர்பு இருந்தது.

- ஒரு பிரதான மேய்ப்பர் உண்டு. ஆனால் எண்ணிக்கையில் அடங்காத மேய்ப்பர்களும், ஒரே தொழுவத்திலே உள்ள அதிக எண்ணிக்கையிலான ஆடுகளும், தேவனுடைய மந்தையாகும்.

இந்த சித்தரிப்புகளில் எந்த விதமான வேற்றுமைகளும் இல்லை. எல்லாக் குறிப்புகளும் ஒரே உண்மையை சொல்வதற்கு உபயோகிக்கப் பட்டுள்ளது. அது கிறிஸ்துவும், சபையும் அல்லது தலைவரும் குழுவும்.

- அநேக அங்கத்தினர் உள்ள சரீரத்திற்கு கிறிஸ்துவே தலையாய் இருக்கிறார்.

- அநேக இணைப்பு கம்பிகள் சக்கிரத்திற்கு கிறிஸ்துவே அச்சாக இருக்கிறார்.

- ஆவிக்குரிய இஸ்ரவேல் கோத்திரங்களுக்கு கிறிஸ்துவே இராஜாவாய் இருக்கிறார்.

- மெல்கிசதேக்கின் முறைமையின் படி இராஜா-ஆசாரியராக கிறிஸ்துவே சிறந்த பிரதான ஆசாரியராய் இருக்கிறார்.

- அவருடைய ஆசாரிப்புக் கூடாரம், ஆலயம் அதாவது சபை நடுவிலே கிறிஸ்துவே தேவனுடைய உடன்படிக்கை பெட்டியாக இருக்கிறார்.

- அநேக கற்களுள்ள பிரமிடில் கிறிஸ்துவே தலைக்கல்லாய், மூலைக்கல்லாய் இருக்கிறார். ஆரம்பமும் இறுதியுமாய், முதலும் முடிவுமாக இருக்கிறார்.

- தேவனுடைய சிங்காசனத்திலே கிறிஸ்துவே தேவனுடைய ஆட்டுக்குட்டியானவராய் இருக்கிறார். எல்லா தேவதூதர்களும், பரிசுத்தவான்களும் சிங்காசனத்தை சுற்றி அவரை தொழுதுக் கொண்டார்கள்.

- ஒரே தொழுவத்திலே உள்ள தேவனுடைய மந்தையில் கிறிஸ்துவே பிரதான மேய்ப்பராய் இருக்கிறார்.

குழு ஊழியத்தின் பூமிக்குரிய மற்றும் நடைமுறை வெளிப்பாடு மேலே சொல்லப்பட்ட தத்துவமும், செயல்படுத்த படலாம். குழுவின் தலைவர் மற்றும் கிறிஸ்து ஜனங்களோடு தொடர்புடையவராயிருந்தது போல குழுவும், ஒருவருக்கொருவர் தொடர்புடையவராய் இருக்க வேண்டும். சபையின் அமைப்பு அல்லது குழுவின் அமைப்பு ஒரு சரீரம், ஒரு சக்கரம், ஒரு தேசம், ஒரு ஆலயம், ஒரு பிரமிடு, ஒரு இராஜ்ஜியம், ஒரு மந்தை அல்லது மற்றவைகள் என்று சொல்லப் பட்டாலும், அதனுடைய ஆவி மற்றும் நடக்கை எந்த ஒரு அமைப்பும், நல்லதா அல்லது தீமையானதா என்று நிர்மாணிக்கிறது. ஆனால் அமைப்பின் வடிவத்தில் அல்ல.

குழுவிலுள்ள நபர்கள் எல்லோரும் சமமானவர்கள். ஆனால் ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துவின் வரங்களின் அளவு கொடுக்கப்பட்டுள்ளது. அந்த அளவு அவர்களுடைய செயல்பாட்டையும், குழுவில் அவர்கள் இடத்தையும் தீர்மானிக்கிறது. குழுவிலுள்ள யாவரும் ஒருவரோடொருவர் தொடர்புடையவர்கள் மற்றும் குழுவின் தலைவரும், குழுவிலுள்ள அங்கத்தினர்களோடு தொடர்பு கொள்ள வேண்டும். இந்த உண்மை கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு படங்களிலும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

ஜீவனில்லாமல் அமைப்பை மாத்திரம் கொண்டிருக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு. அமைப்பு இல்லாமல் ஜீவன் மாத்திரம் கொண்டிருக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டு. தேவனுடைய யோசனை என்னவென்றால், அமைப்பிலே ஐக்கியமும், ஜீவனும் உள்ளே இருப்பதுதான். இங்கே தான் ஆண்டவர் ஆசிர்வாதத்தைக் கட்டளையிடுகிறார். பின்வரும் வாழ்க்கை முழுவதற்குமாக கட்டளையிடுகிறார்.

ஆனால் பின்வருகிற பிரமிடு விளக்கப்படங்களில் இங்கே சொல்லப்பட்ட தத்துவங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளது.

எத்திரோ தத்துவம்



ஆசாரியத் தத்துவம்



சபையின் தத்துவம்



மேய்ப்பனின் தத்துவம்



வெற்றிக்கு பன்னிரண்டு அடிப்படை குழு தத்துவங்கள்

பின்வரும் பன்னிரண்டு முக்கியமான அடிப்படை தத்துவங்கள் மேல் எந்த ஒரு ஊழியக்குழுவும் கட்டப்படவேண்டும். அது உண்மையாகவே கர்த்தருக்காக நல்ல கனிகளையும் விளைவுகளையும் கொடுக்கிறதாக இருக்கும்.

(i) மிகச் சிறப்பானவை

ஒருவர் இவ்வாறு சொன்னார், இரண்டாந்தர கண்களுக்கு இரண்டாந்தரம் மிக சிறப்பானதாய் தெரிகிறது. நாம் எல்லோரும் இரண்டாந்தர சிறப்பிற்காக அமர்ந்து விடுகிறோம். ஏனெனில் பொதுவாக மிக சிறப்பானற்றிக்கு சுய தியாகமும், சுய நலமற்ற தன்மையும் தேவைப்படுகிறது. ஏனெனில் அது தகுதியானது கிறிஸ்தவர்கள் அதிலும் விசேஷமாய் கிறிஸ்தவ தலைவர்கள் தேவனுக்காக சிறந்தவற்றை செய்ய வேலை செய்வது அவசியம். தேவனுடைய ஊழியர்களாகிய ஒவ்வொருவரும் தங்களுடைய சிறந்தவற்றை அவருக்கு கொடுக்க வேண்டும். அது நிறைவேறுதலாகவும் மற்றும் வாழ்க்கையின் பரிபூரண வழியாகும் என்பதை நாம் அறிய வேண்டும். எல்லாவற்றிக்கும் மேலாக தேவன் அவருடைய சிறந்தவற்றை நமக்காத் தந்திருக்கிறார். மிக நன்றாய் இருப்பதற்கு நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், நம்முடைய தரத்திலும் (2தீமோத்தேயு 2:20,21; தீத்து 2:15). நம்முடைய ஊழியத்திலும் மிக நன்றாய் இருப்பது நம்முடைய நோக்கமாக வேண்டும். இருந்தபோதிலும் மிக சிறப்பானவைகள் தலையானவைகளாய் அல்ல. மிக சிறப்பாக காரியங்களை செய்கிறோம். ஏனெனில் நாம் நம்பதகுந்த தேவனுடைய வேலைக்காரராக, உக்கிராணக்காரராக இருந்து அவருடைய மகிமைக்காக மாத்திரம் எல்லாவற்றையும் நாம் செய்ய விரும்புகிறோம்.

"மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும், தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்." (பிலிப்பியர் 1:9,10,11).

(ii) அர்ப்பணிப்பு

ஒரு குழுவினுடைய வெற்றி ஒவ்வொரு தனிப்பட்ட குழு அங்கத்தினருடைய அர்ப்பணிப்பின் நிலையைப் பொறுத்தே இருக்கும். ஒவ்வொரு குழு அங்கத்தினரும் குழுவினுடைய தேவநோக்கம் தரிசனம் நிறைவேறுவதற்காக தன்னை கபடமில்லாமல் உறுதியான நோக்கத்துடன் அர்ப்பணிக்க வேண்டும். எதுவும் அதைரியம் ஏற்படுத்த, தடையை உண்டுபண்ண, கவனத்தை திசைதிருப்ப அனுமதிக்க கூடாது. குழுவிலுள்ள அங்கத்தினர்கள் தேவனுக்கு அர்ப்பணிக்கவில்லையென்றால் தேவன் எதற்காக அவருக்காக கிரியை செய்யும்படியாக அழைத்தாரோ அதிலிருந்து அவருக்காக செய்யும் சேவையிலிருந்து தொடர்ந்தேர்ச்சியாக பாதை விலகி ஆக்கப்பூர்வமற்றவர்களாக தங்களை காண்பார்கள். தேவன் அவர்களை அழைத்த காரியத்திற்காக நிலைநின்று குழு அங்கத்தினரின் தரிசனத்திற்காக வேலை செய்ய அர்ப்பணிப்பது அவசியம். மீண்டும் இது விலையேறப் பெற்றதாய் இருக்கலாம். ஆனால் தேவனுடைய இராஜ்ஜியத்தில் இது மாத்திரமே வழி (லூக்கா 9:57-62; 14:25-33; யோவான் 12:23-26). இயேசு நமக்காக தேவனுடைய அர்ப்பணிப்பை காட்டினார், நாம் அந்த மாதிரியைப் பின்பற்ற வேண்டும். எந்த கிறிஸ்தவ குழுவும் ஒருவருக்கொருவர் தங்களை அர்ப்பணிக்க வேண்டும். மற்றும் வேத வசனத்தின் மையப்பாங்கிற்கும், தவறாமைக்கும் அர்ப்பணிக்க வேண்டும். அது இல்லாமல் குறிப்பிட்ட எந்த இறையியலும் இல்லை. குறித்துக் கொள்ளுங்கள், ஒரு குழு அங்கத்தினர் சுத்த மனசாட்சியில் எதை வேண்டுமானாலும் செய்வாரானால் (அதாவது ஒரு குழு அங்கத்தினராய் இல்லாமல்) பிறகு அவர் போவதற்கு விடுவிக்கப்பட்டு செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் (ஏனெனில் அவர்கள் முழு மனதுடன் தங்களை குழுவிற்கு அர்ப்பணிக்க முடியாததினால் அவர்கள் நினைக்கிற வண்ணமாக அல்லது செய்ய நினைக்கிற விதமாக ஏதாவது ஒன்றை)

(iii) முதிர்ச்சி

ஒவ்வொரு குழு அங்கத்தினரும் தொடர்ந்து ஆவிக்குரிய முதிர்ச்சியில் வளர்வதை நோக்கமாக கொள்ள வேண்டும். அதிக முதிர்ச்சியடைந்த குழு அங்கத்தினர் மற்றவர் பின்பற்றும் படியான மாதிரியை அமைக்க வேண்டும் (தீத்து 2:6-8). இந்த முதிர்ச்சி குழு அங்கத்தினருடைய சமநிலைப்படுத்தப்பட்ட போதகத்தில் வாழ்க்கையில் தானே வெளிப்பட வேண்டும் (சங்கீதம் 25:21); மற்றும் அறிவு உணர்ச்சியிலே குழு அங்கத்தினருடைய சுயம் / மற்றவர்கள் / சூழ்நிலையினுடைய உணர்ச்சி மிகுந்த பகுதியிலே வெளிப்பட வேண்டும் (நீதிமொழிகள் 16:21,22).

(iv) விசுவாசம்

விசுவாசம் தேவனையும், பார்க்காத, உணராத காரியத்தையும் நம்புகிறது. இது ஒரு நடக்கை / இருதயத்தின் பெரும்பகுதி சொல்லுகிறது, தேவன் செய்ய முடியும். உண்மையிலே விசுவாசம் எவ்வளவு தூரம் நாம் தேவனை சூழ்ந்துள்ளோம் என்பதாகும். குறிப்பாக நாம் என்ன விசுவாசிக்கிறோம் என்பது சில காலத்திலே நம்மால் அனுபவிக்கப்படும் (எபிரெயர் 11:1), இது மலைகளை பெயர்க்க கூட தேவைப்படுகிறது (மாற்கு 11:22-24). விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாய் இருப்பது கூடாத காரியம் என்பதை நினைவு கூறுங்கள் (எபிரெயர் 11:6). எனவே கிறிஸ்தவர்கள் தொடர்ந்தேர்ச்சியான விசுவாசத்தின் பயிற்சி வாழ்க்கையை வாழ வேண்டும்.

(v) செய்தித் தொடர்பு / திறந்த மனநிலை

குழு அங்கத்தினர்கள் ஆக்கப்பூர்வமாய் எப்படி மற்ற ஒவ்வொருவரோடும், குழுவிற்கு வெளியே இருப்பவர்களோடும், செய்தித் தொடர்பு கொள்ள வேண்டும் என்று கற்றுக் கொள்வது அவசியம் (அதாவது தங்களை புரிய வைக்க வேண்டும்) (விசேஷமாக எங்கே குழு இலக்கு / தரிசனம் நிறைவேறுதலுக்கான ஈடுபாடு இருக்கிறதோ). இந்த செய்தித் தொடர்பு நேர்மறையாக இருப்பது அவசியம் மற்றும் எதிர்மறையாக / கோள் சொல்லுதல் / அவதூறு பண்ணுதல் இருக்ககூடாது. ஏனெனில் பேசப்பட்ட வார்த்தை அதிக அளவு நன்மையை செய்யும் திறமை உடையதாக இருக்கிறது அல்லது மிகப்பெரிய மனக் காயத்திற்கு காரணமாகி விரிவான பாதிப்பை செய்கிறது (யாக்கோபு 3:6). நம்முடைய வார்த்தை நம்முடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது.

(vi) தாழ்மை

தாழ்மை உள்ளவனை தேவன் ஆசீர்வதிக்கிறார் (மத்தேயு 5:5) உயர்த்துகிறார் (1பேதுரு 5:6). தாழ்மையானது மிக நடைமுறைக்குரிய நடக்கையாகும். குழு அங்கத்தினர்கள் பதவிக்காக ஆதாயம் பெற முயற்சிப்பதை தடை செய்கிறது. இது ஒருவருக்கொருவர் / மற்ற ஜனங்களோடு (பிலிப்பியர் 2:3,4) சரியான நடக்கையை கொடுக்கிறது. தாழ்மை நம்முடைய இயற்கையான பெலவீனத்தை / முட்டாள்தனத்தை மற்றும் தேவனுடைய பெலத்தை / ஞானத்தை அங்கிகரிக்கிறது (இயேசுவிலே நம்முடையதாய் இருக்கிற 1கொரிந்தியர் 1:25-31), தாழ்மை மாத்திரமே சொந்த தனிப்பட்ட உரிமைகளையும் முன்னிலைக்கான கட்டாயங்களையும் மற்றவர்களுக்கும் / குழு அங்கத்தினர்களுக்கும் உதவி செய்வதற்காக விட்டு கொடுக்கிறது. ஒருவர் இவ்வாறு சொன்னார், 'தாழ்மையானது நம்முடைய முழு உயரத்தில் நிற்கிறது, மற்றும் தேவன் இன்னும் மிகப்பெரியவராய் இருக்கிறார் என்பதை உணர்ந்து கொள்கிறது'.

(vii) கடும் முயற்சி

கடினமாக முயற்சி செய்யும் ஒரு நபரிடம் அவர்களிடம் உள்ள கர்த்தருடைய அழைப்பில் ஒரு பிடிதாரம் இருக்கும் (யோவான் 4:34); பொறுமையின் இடத்தை புரிந்து கொள்ள வேண்டும். அதே வேளையில் உடனடியாக சிந்திக்க வேண்டும் (யாக்கோபு 1:2-4); கருத்தில் உறுதியாய் இருக்க வேண்டும். மற்றும் அவர்களுடைய இலக்கை அடைவதற்கு தெளிவான சிந்தையும், தீர்மானமும் உடையவர்களாய் இருக்க வேண்டும் (எபிரெயர் 12:1-3; பிலிப்பியர் 4:13), என்ன கிரயம் கொடுத்தாகிலும்.

(viii) ஐக்கியம்

ஒவ்வொரு கிறிஸ்தவ குழுவிற்கும் தேவை இயேசு கிறிஸ்துவாகிய திறவுகோல் நபர் (மாற்கு 16:20). எல்லா குழு நபரும் அவரோடு சரியான ஐக்கியம் உடையவர்களாய் இருப்பது இன்றியமையாதது (குழுவிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் தினமும் அவரை சந்திப்பது அவசியம், அப்போது அவர்கள் முன்னேறவும், அவரை சார்ந்திருக்கவும், அவரோடு உள்ள தொடர்பில் அல்லது ஐக்கியத்தில் மற்றும் அவர்கள் எப்படி தங்களை கர்த்தருக்குள்ளாக உற்சாகப்படுத்த வேண்டும் என்பதை கற்றுக் கொள்ள வேண்டும், மற்றும் விசேஷமாக கடினமான வேளையில் அவருக்குள் ஆழமாக செல்ல வேண்டும்). குழு அங்கத்தினருடைய தியான வாழ்க்கை தனிப்பட்ட விதத்திலும், கூட்டாகவும் கண்டிப்பாக உயர்ந்த தரம் உடையதாய் இருக்க வேண்டும். கர்த்தருக்கு குழு ஊழியத்தின் ஆழம் மற்ற ஜனங்களுக்கு ஊழிய விளைவு அளவு, நீளத்திற்கு தக்கதாய் இருக்கும். உண்மையாகவே கர்த்தர் அந்த வேலையில் இல்லாவிட்டால் அது தோல்வியடையும் அல்லது மெதுவாக பயனற்றதாகி விடும். குழு அங்கத்தினருக்கு இசைவுநிலை இருதயம் அவசியம். அது எப்பொழுதும் சவாலுக்கு தயாராகவும் கர்த்தரால் புத்துணர்ச்சி பெற்றதாகவும் இருக்கும். இது இல்லையென்றால், அவர்களை எதிர் நோக்கியிருக்கும் வேலைகளை வெற்றிகரமாக சந்திக்க முடியாது (அல்லது அவர்களின் தரிசனத்தின் பாகத்தை) அவர்கள் அதை சரீரப்பிரகாரமாக ஆரம்பிக்க வேண்டும் அல்லது அதற்கு மேல் தனிப்பட்ட பாதுகாப்பு இயந்திரத்தினால் இயங்கும் பகுதிகள். குழு அங்கத்தினர்கள் கண்டிப்பாக ஐக்கியத்தை பெலப்படுத்த வேண்டும் மற்றும் ஒருவருக்கொருவர் உள்ள ஒற்றுமையையும். அப்படியானால் நல்ல ஆவியுள்ள குழு வளர்ந்து முன்னேறி தனிப்பட்ட உறவிலும் ஒற்றுமையிலும், எழுச்சி பெற்று ஆக்கப்பூர்வமான எந்த குழுவைப் பார்த்தாலும் தேவன் கொடுத்த இலக்கை நிறைவேற்றும். பொறாமை, போட்டி, மன்னியாமை, குறை காணும் ஆவி, தவறாகப் புரிந்துக் கொள்ளுதல், வம்பு, அவதூறு பண்ணுதல் ஆகிய இவைகளெல்லாம் நல்ல ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் அழிக்காதபடி கண்டிப்பாக விழிப்பான காவலாளராக குழு தலைவர்கள் இருக்க வேண்டும். எல்லா ஐக்கியமும் சுயநலமற்ற அன்பினால் ஊக்கப்படுத்தப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்க. மேலும் ஒவ்வொரு தனிப்பட்டவருடைய வாழ்க்கையில் வைக்கப்பட்டிருக்கிற தேவனுடைய அழைப்பு குழுவிலுள்ள மற்ற தனிப்பட்ட அங்கத்தினருடைய அழைப்போடு குழுவின் முழுமையான அவருடைய அழைப்போடு இசைவாய் இருக்க வேண்டும் (குழுவானது இணைந்து தேவனில் வழிந்தோட வேண்டும்).

(ix) தரிசனம்

ஒவ்வொரு குழுவிற்கும் தேவன் தந்த தரிசனம் அவசியமாகிறது இல்லாவிட்டால் அது நோக்கமில்லாமல் / வழிகாட்டுதல் இல்லாமல் இருக்கும் (அல்லது தவறான திசையில் செல்வதில் மோசமானதாகும்) (ஆமோஸ் 3:3; நீதிமொழிகள் 29:18). குழு அங்கத்தினர்கள் தரிசனத்திற்குள்ளாக வேலை செய்வது அவசியம். ஏனெனில் அதில்தான் தேவனுடைய அபிஷேகம் வழிந்தோடுகிறது. தரிசனத்திற்கு வெளியே செல்லுதல் 'மரணத்தை', ஆக்கபூர்வமற்ற தன்மையை விளைவிக்கும். ஒவ்வொரு குழு அங்கத்தினரும், தரிசனத்தின் வடிவத்திற்குள்ளாக சரியாக பொருந்த வேண்டும். அவர்களுடைய ஊழியம் பொருந்துவதற்கு தொங்க முயற்சிக்கக் கூடாது. உண்மையிலே தனிப்பட்ட குழு அங்கத்தினர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வரங்களை திறமைகளை மற்றும் தரிசனத்திற்கான ஊழியத்தை அர்ப்பணிப்பது அவசியம். எல்லாவற்றிற்கும் மேலாக தனிப்பட்டவர்களைக் காட்டிலும் தரிசனம் மேலானது. குழு அங்கத்தினர்களாகிய நாம் தரிசனத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும். அதன்பின் தனிப்பட்டவர்களாய் இருப்பதைக் காட்டிலும் குழு நபர்களிடத்தில் பெரிய அளவில் அபிஷேகம் வழிந்தோடும். குழு அங்கத்தினர்கள் தேவன் ஏற்படுத்தும் தரிசனத்தின் விரிவாக்கம் மற்றும் எந்த ஒரு மாற்றத்தைக் குறித்து அறிந்திருப்பது அவசியம். அப்பொழுது தான் அவர்கள் தேவன் விரும்புகிற நிறைவில் அவர்கள் தொடர்ந்து வேலை செய்ய முடியும். அவர்கள் அதின் ஒரு பகுதியில் மாத்திரம் வேலை செய்த போதிலும், முழு தரிசனத்தோடு பொருந்தக் கூடியவர்களாய் இருக்க வேண்டும். ஒரு குழு உருவாகுவதற்கு முன்பாக (அல்லது இணைக்கப்படுவதற்கு முன்பாக) ஒவ்வொரு தகுதி வாய்ந்த அங்கத்தினரும் தேவனைத்

தேடி அவருடைய சித்தமாய் தீர்மானித்து அவர்கள் இணைய வேண்டும். அந்த நபரும் தேவனைத் தேடி இது அவருடைய சித்தம் என்று தீர்மானித்து அவர்கள் அதிலே இணைய வேண்டும். அந்த நபரும் தேவனைத் தேடி தாங்கள் தேவனால் தேவன் குழுவிற்கு தந்த தரிசனத்தின் பகுதியை நிறைவேற்ற அழைக்கப்பட்டேன் என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(x) தலைமைத்துவம்

எந்த குழுவின் தலைமைத்துவமும் குழுவிலுள்ள எல்லா அங்கத்தினர்களால் அங்கிகரிக்கப்பட்டு கீழ்படிவது அவசியம். தலைமைத்துவ குழுவின் தலைவர் எந்த ஒரு மற்ற அங்கத்தினரைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவரல்ல. ஆனால் அவர்கள் எந்த குழுவின் செய்கைகளையும், தீர்மானங்களையும் ஆக்கப்பூர்வமாக ஒழுங்கு படுத்த செய்ய தகுதி உள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

எந்த குழுவிற்கும் ஆக்கப்பூர்வமான தலைமைத்துவம் இல்லாவிட்டால் அழிவு காத்திருக்கும். குழு அங்கத்தினர்கள் (தலைவர் உள்பட) கிறிஸ்துவின் மேல் இருக்கும் மரியாதையின் நிமித்தம் ஒருவருக்கொருவர் அர்ப்பணிப்பது அவசியம் (எபேசியர் 5:21). குழுவிலுள்ள ஒரு அங்கத்தினர் தனது சொந்த காரியத்தை செய்ய தீர்மானிக்கும் போது மிகப்பெரிய குழப்பம் ஏற்பட காரணமாகி விடுகிறது. மற்றும் இதர குழுவிற்கும் இடையூறாக மாறிவிடுகிறது (விசேஷமாக அதனுடைய ஒற்றுமைக்கு பிணைப்புக்கு மற்றும் குழு ஆவிக்கு). ஒவ்வொரு குழு அங்கத்தினரும் குழு ஊழியத்தின் ஓடையிலே தங்களுடைய பகுதியில் பாய்ந்தோடுவது அவசியம். அவர்கள் தங்களுடைய சொந்த குறிப்பிட்ட வரங்கள் / திறமைகள் / அபிஷேகம் / வேலையில் செயல்படுவது அவசியம். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக ஊழியத்திற்கு விருப்பத்தோடு அர்ப்பணிக்க வேண்டும் (அதாவது அதனுடைய தலைமைத்துவம் / தரிசனம் / இலக்கு / மற்றும் பல). தலைவர்கள் தேவையைக் காட்டிலும் அதிகமாக கிரியை செய்ய வேண்டும் என்பதை நினைவு கூறுங்கள். ஒவ்வொரு ஆண்டும் செல்லச் செல்ல தேவனுக்காக அதிகமாக கிரியை செய்யக் கூடியவர்களாய் இருக்க வேண்டும். எப்பொழுதும் தங்களுடைய எல்கை / குறிப்பிட்ட அளவை உந்தி பின்பாக தள்ளுகிறவர்களாக இருக்க வேண்டும். அந்த குறிப்பிட்ட பொறுப்பிலே / விருப்பத்தின் வெளியே இருக்கிறவர்களைக் காட்டிலும் அதிகமாக செய்ய விருப்பம் உடைய ஜனங்களாய் இருக்க வேண்டும். தங்களுடைய முழுத்திறமையுடன் சுமக்கிற திறமையுள்ளவர்களாய் இருக்க வேண்டும் (இதற்கு தேவனின் மிகப்பெரிய இருதயம் தேவையாய் இருக்கிறது மற்றும் தங்களுடைய குறிப்பிட்ட அளவை தேவனுக்குள் நீட்டிக்க விருப்பமுடைய நபராய் இருக்க வேண்டும்).

(xi) ஒழுங்குமுறைப்படுத்துதல

குழு அங்கத்தினருடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் (அதாவது குடும்பம், வீடு, வேலை தனிப்பட்ட மற்றும் பல). பரிசுத்த ஆவியானவரின் ஒழுங்கு முறைப்படுத்துதலின் கீழ் இருக்க வேண்டும். மற்றும் பார்த்து பராமரிக்கிற ஒவ்வொருவருக்கும் தெளிவாக இருக்க வேண்டும். ஒழுங்கு முறைப்படுத்துதல் குழு அங்கத்தினர்கள் தேவனோடு நேர்மையான வாழ்க்கை வாழ உதவுகிறது. மற்றும் அவரோடு உள்ள நடக்கையில் நிலைத்து இருப்பதற்கு உதவுகிறது (அவிசுவாசிகள் இப்படிப்பட்ட வாழ்க்கையை கவனிக்கிறவர்கள் தேவனில் ஏமாற்றம் அடைவார்கள்). ஒழுங்குமுறைப்படுத்துதலுக்கு விருப்பதோடு அர்ப்பணித்து தேவனுடைய முயற்சியினால் எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதை நினைவு கூறுங்கள் ஏனெனில் இல்லாவிட்டால் எளிமையாக முடிந்து விடும்.

(xii) வல்லமை / அபிஷேகம்

ஒவ்வொரு குழு அங்கத்தினரும் தேவனுடைய அபிஷேகத்தின் மதிப்பை அறிய வேண்டும். உண்மையிலே அதற்காக அவர்கள் எல்லாவற்றையும் கொடுத்து விட வேண்டும் (எலிசா தீர்க்கதரிசியைப் போல்). தேவனுடைய அபிஷேகம் தாங்கிக் கொள்வதற்கு எப்பொழுதும் எளிதான ஒன்று அல்ல. அடிக்கடி அபிஷேகிக்கப்பட்ட நபர் நல்லதாக உணரமாட்டார். ஏனெனில் அதனுடைய கிரயத்தினிமித்தம். ஆனால் அவர்கள் எதைக் காட்டிலும் அதிகமாக

இன்னும் விரும்புவார்கள். இது எதினால் என்றால் தேவனுடைய அபிஷேகம் / வல்லமை தேவன் அவர்களுக்காக அவர்கள் செய்யும்படி பிரித்து வைத்திருக்கிற வேலையை சுமந்து செல்வதற்கு முழுமையான தேவையை அவர்கள் உணர்கின்றபடியினால். தேவனுடைய வல்லமை இல்லாமல் வெகுதூரம் செல்ல முடியாது என்று அவர்கள் உணர்கிறார்கள். உண்மையிலே எந்த தலைமைத்துவமும் தேவனின் அபிஷேகத்தை சார்ந்து அதன் மூலமாய் தகுதி பெறுகின்றார்கள். குழு அங்கத்தினர்கள் தேவனிடத்திலிருந்து வரும் அபிஷேகம் அவரிடத்திலிருந்து வரும் பரிசு மற்றும் இது ஒரு உணர்வல்ல என்று நினைவு கூறுவது அவசியம். மேலும் தேவனுக்குள் அவருடைய அபிஷேகத்தை எவ்வாறு விடுவிப்பது என்று புரிந்துக் கொள்ளுதல் அவசியம். அந்த அபிஷேகம் எவ்வாறு கிரியை செய்கிறது, வழிந்தோடுகிறது என்பதை அறிவது அவசியம். மற்றும் எந்தப் பகுதியில் எல்லாம் தாங்கள் அபிஷேகிக்கப்பட்டார்கள் என்று அறிய வேண்டும். ஆகவே அவர்கள் மற்ற ஜனங்கள் மூலமாய் வருகிற அழுத்தங்களினால் தேவன் ஒருபோதும் செய்யச் சொல்லாத காரியங்களை எடுக்காதபடிக்கு தடைபண்ணும் (தேவன் அவர்களுக்காக புதிய அபிஷேகத்தை உடையவராய் இருப்பார் என்பது நினைவு கூறவேண்டும். ஆகவே சாக்குபோக்குச் சொல்லி அவரை மட்டுப்படுத்தக் கூடாது).

குழு அமைப்பு

வாழ்கின்ற உயிர் எதிராக ஸ்தாபனம்

ஒரு குழு ஸ்தாபனமாய் இருப்பதற்கு பதிலாக வாழ்கிற உயிராய் இருக்க வேண்டும். வாழ்கின்ற உயிர் வாழ்கிறது. செயல்படும் சரீரத்தை உடையதாய் இருந்து வாழ்க்கை அமைப்பிற்கு முன்பாக வரும் உரிமை உடையதாய் இருக்கிறது. இந்த வாழ்கின்ற உயிர் அதனுடைய வாழ்க்கையை ஆதரவு கொடுக்க ஒரு அமைப்பு தேவையாய் இருக்கிறது. ஆனால் அது இரண்டாந்தர ஒன்று தான். ஸ்தாபனத்தில் அமைப்பு தேவை தான். ஜீவன் இல்லாத அமைப்பு எலும்பு கூடுக்குச் சமானம். மற்றொரு விதத்தில் அமைப்பு அதனுடைய முதன்மையான சிறப்பு பகுதியாகவும், வாழ்க்கையானது அதனுடைய இரண்டாந்தர கவனமாய் இருக்கிறது. எந்த ஒரு குழுவும் ஜீவனுக்கு சேவை செய்கிற அதனுடைய அமைப்பை / ஸ்தாபனத்தை உறுதி செய்துக் கொள்ளுதல் அவசியம். தேவன் மனிதர்களை அபிஷேகிக்கிறார், இயந்திரங்களை அல்ல என்பதை நினைவு கூறுங்கள்.

ஒரு குழு / சபை ஸ்தாபனமாய் இருப்பதற்கு பதிலாக வாழ்கின்ற உயிராய் செயல்பட்டதற்கு ஒரு நல்ல உதாரணம் ஆதித் திருச்சபையில் இருந்தது. (அப்போஸ்தலர் 4:32-35).

எளிமையின் அவசியம்

எளிமையான பரிசுத்தவான்களை முத்தம் செய்யுங்கள்!!

குழு ஊழிய அமைப்பின் இரகசியமானது எளிமையாகும். எளிமையான குழு அமைப்பு என்பது ஊழியம் வளராது என்பது அர்த்தமல்ல அல்லது அமைப்பாக கொண்டு வர அவசியம் அல்ல என்பதல்ல. ஆனால் பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு பகுதி மூலமாகவும் வழிந்தோடுவதற்கு அது அனுமதிக்கிறது. இந்த காரணத்திற்காக பரிசுத்த ஆவியானவரை ஸ்தாபனப்படுத்தி விடக்கூடாது. அல்லது சிக்கலான குழுவினுடைய ஸ்தாபன அமைப்பின் மூலம் செயல்படுவதை தடைபண்ணி விடக்கூடாது. எந்த ஒரு தனிப்பட்ட நபரும் அல்லது குழுவும் கிரியை செய்து தேவனுடைய அபிஷேகத்தை ஒருங்கிணைக்கவோ, அமைப்பு ஆக்கவோ முடியாது. ஒவ்வொரு குழுவும் அதனுடைய அபிஷேகத்துடன் ஒட்டிக் கொண்டிருப்பது அவசியம். அதனுடைய அமைப்பை எளிமையாக வைக்க வேண்டும். மற்றும் எவ்வளவு தூரம் சிக்கல் இல்லாததாய் மாற்ற முடியுமோ அவ்வாறு!

பகிர்ந்தளிக்கும் கலையும், கணக்கொப்புவித்தலும்

கருத்து: ''நான் பத்து மனிதர்கள் வேலையை செய்வதைக் காட்டிலும் பத்து மனிதர்களை வேலையை செய்ய அமைப்பேன்''.

முன்னுரை

ஆக்ஸ்போர்டு அகராதியில் பகிர்ந்தளித்தல் என்பது அதிகாரத்தை (மற்றும் பல) வாக்கு கொடுத்தல் அல்லது நம்பிக்கை கொடுத்தல் முகவராகிய மற்ற ஒருவருக்கு அல்லது அனுப்புதல் பிரதிநிதியாக ஒரு நபரை கட்டளை கொடுத்தல் அல்லது மற்றவர்களுக்காக வல்லமையுடன் செயல்படும் பிரதிநிதி என்று அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளது. பகிர்ந்தளித்தலை விளக்குவதற்கு இன்னொரு வழி மற்ற ஜனங்கள் மூலமாய் காரியங்களை நடப்பிக்கப் பெறுதல். தனிமையான தலைவர் பெலத்திலும், திறமையிலும், நேரத்திலும், வரைமுறைக்குட்பட்டவராய் இருக்கிறார். ஆனால் இந்தக் காரணிகள் தலைவர் தன்னுடைய பொறுப்புகளை மற்ற ஜனங்களோடு பகிர்ந்து கொள்ளும்பொழுது பெருகுகிறது.

நாம் இங்கே இந்த முக்கியமான தலைப்பை வைக்கிறோம். ஏனெனில் பகிர்ந்தளிக்கும் கலை முறையாக பயிற்சிக்கப் படவில்லையென்றால் குழுவானது ஆக்கப்பூர்வமாக / திறனுள்ள விதத்தில் செயல்படமுடியாது. உண்மையிலே அரிதாக ஆக்கப்பூர்வ / கனியுள்ள சிறப்பாக செய்யக்கூடிய ஜனங்களிடத்தில் பகிர்ந்தளித்தல் தேவைப்படுகிறது / அவசியமாகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக அநேக நவீன சபை சூழ்நிலையில் ஒரு தனி மனிதன் அழைக்கப்பட்ட எல்லா வேலைகளையும் செய்ய முடியாது (இருந்தபோதிலும் சில ஜனங்கள் உலர்ந்து விடுகிறார்கள்). தேவனுடைய வழி அவருடைய அநேக வேலைகள் கிறிஸ்தவ குழுக்களை அமைப்பது மூலமாய் எடுத்துச் செல்லப்படுவதாகும். அது தேவனால் அழைக்கப்பட்ட வரங்கள் பெற்ற ஜனங்களிடத்தில் சபையின் அல்லது ஸ்தாபனம் பணி / பொறுப்பு / தலைமைத்துவத்தின் பகுதியை பகிர்ந்து கொண்ட ஜனங்களினால் அமைக்கப்பட்டதாய் இருக்கும்.

எத்திரோவின் அறிவுரை

எத்திரோ மோசேயின் மாமன் மோசேக்கு அவன் பெற்றிராத சிறந்த அறிவுரையை கூறினான். யாத்திராகமம் 18ம் அதிகாரத்தில் மோசே முழு பொறுப்பாகிய இஸ்ரவேல் ஜனங்களையும், இணைந்துக் கொண்டவர்களையும் சேர்த்து வழி நடத்துதல், நியாயந்தீர்த்தல், ஆலோசனைக் கொடுத்தல் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு தன்னையும், ஜனங்களையும் வருத்தப்படுத்தியதாக வாசிக்கிறோம். இந்த பணியின் அர்த்தம் என்னவென்றால், அந்த சபையிலே அடங்கியிருக்கிற பெண்கள் மற்றும் யாவரையும் சேர்த்து இரண்டு மில்லியன் ஜனங்களை குறித்ததான பணியாகும். மோசே தன்னுடைய தலைமைத்துவ பதவியிலே அணுகுமுறையில் மிக ஞானமுள்ளவனாய் இருக்கவில்லை. அவன் எல்லாவற்றையும் தனது சொந்தமாக செய்ய முயற்சித்தான். எனவே காலைத் தொடங்கி மாலை வரை அவன் தனது பொறுப்பில் உட்கார ஜனங்கள் நீண்ட வரிசையில் நின்று அவன் மூலமாக கேட்பதற்கும், நியாயந்தீர்க்கப்படுவதற்கும் நின்றார்கள். மோசே செய்கிற இந்த காரியங்களை எத்திரோ பார்த்தபொழுது அவனிடத்தில் எத்திரோ காரணங்களோடு ஆட்சேபித்தான். அதாவது நிறுத்தும்படி சொன்னான். பின்வரும் அறிவுரைகளைக் கூறினான்:

> *''அதற்கு மோசேயின் மாமன்: நீர் செய்கிற காரியம் நல்லதல்ல; நீரும் உம்மோடே இருக்கிற ஜனங்களும் தொய்ந்துபோவீர்கள்; இது உமக்கு மிகவும் பாரமான காரியம்; நீர் ஒருவராய் அதைச் செய்ய உம்மாலே கூடாது. இப்பொழுது என் சொல்லைக் கேளும், உமக்கு ஒரு ஆலோசனை சொல்லுகிறேன்; தேவனும் உம்மோடுகூடு இருப்பார், நீர் தேவசந்நிதியிலே ஜனங்களுக்காக இரும்; விசேஷித்தவைகளைத் தேவனிடத்தில் கொண்டுபோய்; கட்டளைகளையும், பிரமாணங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தி; அவர்கள் செய்யவேண்டிய காரியத்தையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தும். ஜனங்கள் எல்லாருக்குள்ளும் தேவனுக்குப் பயந்தவர்களும் உண்மையுள்ளவர்களும் பொருளாசையை வெறுக்கிறவர்களுமான திறமையுள்ள மனிதரைத் தெரிந்துக்கொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு*

அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் ஏற்படுத்தும். அவர்கள் எப்பொழுதும் ஜனங்களை நியாயம்விசாரித்து, பெரிய காரியங்கள் யாவையும் உம்மிடத்தில் கொண்டுவரட்டும், சிறிய காரியங்கள் யாவையும் தாங்களே தீர்க்கட்டும்; இப்படி அவர்கள் உம்மோடேகூட இந்தப்பாரத்தை சுமந்தால், உமக்கு இலகுவாயிருக்கும். இந்தப்பிரகாரம் நீர் செய்வதும், இப்படித் தேவன் உமக்குக் கட்டளையிடுவதும் உண்டானால், உம்மாலே தாங்கக்கூடும்; இந்த ஜனங்கள் எல்லாரும் தாங்கள் போகும் இடத்துக்குச் சுகமாய்ப் போய்ச் சேரலாம் என்றான்" (யாத் 18:17-23).

அதிஷ்டவசமாக, மோசே தன் மாமன் வார்த்தைக்கு செவிசாய்த்து அவனுடைய ஆலோசனையின் படி செய்தான். இல்லாவிட்டால் மோசே நீண்ட காலம் உயிர் பிழைத்திருக்க முடியாது (ஒருவேளை வலுவிழந்து நிலைகுலைந்து போய் இருக்கலாம், அழுத்தத்தின் காரணமாக மனநிலை பாதிப்பிற்குள்ளாக கடந்து சென்றிருக்கலாம் மகிழ்ச்சியின்மையினால் / வஞ்சனையினால் / ஏமாற்றத்தினால் / செத்தவனைப் போல இருந்திருக்கலாம்). மோசே மாத்திரமல்ல ஜனங்களும் கூட ஏற்படுத்தப்பட்டிருக்கிற தலைமைத்துவ அமைப்பு முறைக் குறித்து திருப்தியற்றவர்களாய் இருந்திருப்பார்கள் என எத்திரோ உணர்ந்துக் கொண்டான். ஜனங்கள் சந்தோஷமில்லாமல் இருந்தால் மோசேயின் தலைமைத்துவம் ஆபத்தில் இருந்திருக்கும். எத்திரோவின் ஆலோசனை நான்கு பகுதிகளாக பகுக்கப்படுகிறது. அவன் மோசேயிடம் செய்யும்படிச் சொன்ன காரியங்கள்:

- ✓ ஜனங்களோடு அவர்களுடைய பிரச்சனைகளைப் பற்றி பேசுவதைக் காட்டிலும் ஆண்டவரோடு அதிக நேரம் செலவழித்தார். வேதாகமத்தில் முதல் ஐந்து புஸ்தகங்கள் இதன் விளைவாக, மோசே பெரும் சதவீதத்தில் செய்தான். அவன் மோசேயிடம் மேலும் சொன்னான், கடைசி அதிகாரம் வரை அர்ப்பணிக்கும் படி சொன்னான் அதாவது தேவன்.

- ✓ தேவனுடைய சத்தியங்களை சபையாக கூட்டி போதித்தல், ஒருவருக்கொருவர் என்ற அடிப்படையில் எல்லா நேரமும் முயற்சிப்பதற்கு பதிலாக. இது மோசேயினுடைய வேலைப் பளுவை குறைத்தது.

- ✓ சரியான நபரிடம் தலைமைத்துவம் / நியாயம் விசாரித்தல் / பொறுப்புகளை பகிர்ந்துக் கொள்ளுதல் (எந்த நபரிடமும் அல்ல) (அதாவது தலைமைத்துவத்தின் அழுத்தத்தை மற்றும் பாரத்தை மூட்டையாக வெளியேற்றுவது). ஆகவே சுமை அநேக ஜனங்கள் மத்தியில் பரவுகிறது, மோசேயின் மேல் மாத்திரம் வைக்கப்படுவதற்கு பதிலாக. சரியான வகை மனிதர்கள் (எத்திரோவின் படி) திறமையானவர்கள் / செய்து முடிக்கக் கூடியவர்கள் / நம்பக்கூடிய மனிதர்கள் / தேவனுக்கு பயந்தவர்கள் / மற்றும் இழிவான ஆதாயத்தை வெறுக்கிறவர்கள் (இச்சை) இந்த மனிதர்கள் அவர்களுடைய திறமைக்கு தகுந்தவாறு பொறுப்புகளை பகிர்ந்தளிக்க வேண்டும். அதாவது சிலரை ஆயிரம் பேருக்கு மேலாக, அதே வேளையில் மற்றவர்கள் 10 நபருக்கு மேலாக மாத்திரம். எந்த நேரமும் ஜனங்களை நியாயம் விசாரிக்க கூடியவராக இருக்க வேண்டும் என்பதை குறித்துக் கொள்ளுங்கள். இந்த மனிதர்கள் மோசேயினுடைய உடன் வேலையாட்கள் அதாவது இஸ்ரவேல் ஜனங்களை நடத்த / நியாயம் விசாரிக்கும் பொறுப்புகளின் பகுதியை பகிர்ந்துக் கொண்டவர்கள். எனவே அவர்களுடைய தகுதி அங்கிகரிக்கப்பட்டு உணரப்பட்டு விடுவிக்கப்படுகிறது. இது தலைமைத்துவ பளுவை பரவலாக்கி, இஸ்ரவேலர் ஜனங்களின் மத்தியிலிருந்த அசௌரியங்களின் ஏற்ற, இறக்கங்களை நிறுத்துவதற்கு மேலும் உதவியது (ஏனெனில் அவர்கள் தொடர்ந்து பார்த்திருக்கிறார்கள்). இது ஏதோ ஒரு விதத்தில் தலைமைத்துவ மாதிரியை அமைத்து மோசேயின் மரணத்திற்கு பின்பும் இது தொடர்ந்து (அநேக ஸ்தாபனங்கள் தோல்வியடைந்து விட்டது, ஏனெனில் ஆரம்பித்த தலைவர் இறக்கும்போது அல்லது விட்டுச்செல்லும்போது தலைமைத்துவத்தை நிரப்புவதற்கு சரியான ஆள் தயாராக இல்லாதபடியினால்). இன்று தலைவர்கள் மோசே செய்த அதே தவறை செய்யக்கூடாது. அதாவது அதிக வேலைகளை / பணிகளை தாங்கள் தகுதியான முறையில் கையாண்டு திருப்தியான முறையில் முடிக்க முடியாதவற்றை, தன்னுடைய சொந்த வரைமுறையை பகுத்தறிந்து வாழாத தலைவருக்கு எதிர்காலமில்லை (அந்த நேரங்களில் எல்லா தலைவர்களும் எத்திரோவின் மாதிரியை ஞானமுள்ள / தெய்வீக எச்சரிப்பை கொண்டு வந்தவனுக்கு செவி கொடுப்பது அவசியம்).

- ✓ தலைவர்களுக்கு தலைவராய் இருத்தல் (அதிக ஆதாரமான அதிகாரம் மற்றும் ஒர ஆவிக்குரிய பாதுகாப்புள்ள மோசேக்கு முதலாவது நியமிக்கப்பட்ட தலைவர்கள் இருந்தார்கள்). எனவே அந்த ஜனங்கள் அவர்கள் அவர்களை தேர்வு செய்ததை அங்கிகரித்து / அவனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை அறிய வேண்டும். அவன் அந்த தலைவர்களுக்கு உதவி செய்ய தயாராக இருக்கவேண்டும். அவர்கள் கையாள முடியாத பிரச்சனைகளை சந்திப்பார்களேயானால் அதாவது அவன் அவர்களுக்கு தகப்பனாக / போதகராக, ஆலோசனைக்காரராக இருக்க வேண்டும். புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர்களுக்கு உதவி தேவை என்று எத்திரோ அறிந்தான். ஏனெனில் சில வேளைகளில் தங்களுடைய ஆழத்தை விட்டு வெளியே வந்ததாக அவர்கள் உணர்வார்கள்.

தேவன் பகிர்ந்தளித்தலை சிபாரிசு செய்கிறார்

சில ஜனங்கள் எத்திரோவின் ஆலோசனையை கேள்வி கேட்டார்கள். ஏனெனில் அது தேவனில் ஆதாரம் இருந்ததாக இல்லை. ஆனால் எளிமையாக முதிர்ந்த ஞானவானின் ஆதாரம் கொண்டதாய் இருந்தது. இது உண்மையாக இருக்கலாம். ஆனால் இந்த காரியத்தில் தேவன் அங்கிகரிக்கிறாரா என்று உறுதி செய்ய தேவனைத் தேடும்படி மோசே எத்திரோவினால் அறிவுறுத்தப்பட்டான். ஆனால் இந்த யோசனை தேவனால் தள்ளப்பட்டது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. உண்மையிலே பின்பாக, எண்ணாகமம் புஸ்தகம் 11ம் அதிகாரத்திலே மோசே அதிக வேலைப்பளுவினால் ஆகப்பட்டவனாக காணப்பட்டபோது இதைப்போல் ஒத்த கருத்தை தேவன் சிபாரிசு செய்ததாக நாம் வாசிக்கிறோம். இங்கே மோசே எந்த காரணமும் இல்லாமல் தனக்காக வருத்தமான உணர்வு அடைந்தான். அநேக ஜனங்கள் உண்ணுவதற்கு மாமிச உணவு இல்லாததினால் அழுது புலம்பினார்கள். மோசே (வழக்கத்தின்படியே) இந்த காரியத்திற்காக தேவனிடம் சென்றான். மோசே இன்னும் இஸ்ரவேல் ஜனங்களின் தலைமைத்துவத்தின் அநேக பாரங்களை சுமந்து கொண்டிருந்தான். இதற்காக தேவனிடத்தில் அவன் முறையிட்டான் (முதன்மை ஸ்தானத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் மேல் தலைமைத்துவத்தில் மோசேயை வைத்து அவனோடு பேசுகிறவர் தேவன் என்பதை தேவனுக்கு ஞாபகப்படுத்தினான்) மற்றும் வாக்குத்தத்த நாட்டிற்கு போகும் வழியில் இந்த முரட்டாட்ட ஜனங்களை போஷிப்பதற்கும் பாரங்களை அவன் மாத்திரம் சுமக்கவில்லை என்பதை ஒத்துக்கொண்டான் (அதாவது தேவன் அவனை செய்யும்படியாக கேட்டக் காரியத்தை அவன் மாத்திரம் செய்ய முடியாது). பாரமானது மிகப்பெரியதாய் இருந்ததென்று அவன் உணர்ந்தான். எனவே அவனுக்கு உதவி தேவைப்பட்டது. மோசே நம்பிக்கையிழந்தவனாக காணப்படுகிறான். இது அவன் தேவனிடத்தில் ஏறெடுக்கும் ஜெபத்தின் வாயிலாக தெரிய வருகிறது.

"இந்த ஜனங்களெல்லாரையும் நான் ஒருவனாய்த் தாங்கக்கூடாது; எனக்கு இது மிஞ்சின பாரமாயிருக்கிறது. உம்முடைய கண்களிலே எனக்குக் கிருபை கிடைத்ததானால், இப்படி எனக்குச் செய்யாமல், என் உபத்திரவத்தை நான் காணாதபடிக்கு இப்பொழுதே என்னைக் கொன்றுபோடும் என்று வேண்டிக்கொன்டான்" (எண்ணாகமம் 11:14.15).

தேவன் மோசேயின் கூப்பிடுதலுக்கு செவி கொடுத்து மோசேயை இஸ்ரவேலின் 70 மூப்பர்களை கொண்டு வரும்படிச் சொன்னார் (ஒருவேளை சிலர் ஏற்கனவே நியாயந்தீர்க்கும்படியாய் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்கள்). இந்த மனிதர்கள் மோசேயினால் தலைவர்களாக / மூப்பர்களாக மற்றும் அலுவலர்களாக அறியப்பட்டார்கள் (அதாவது அவர்கள் யாராக இருக்கமுடியும்). அவன் காத்திருந்தபோது அவர்கள் வந்து தங்களை மோசேயோடு இணைத்துக் கொண்டார்கள். தேவன் மாத்திரம் மோசேயினுடைய சில அதிகமான தலைமைத்துவ பொறுப்புகளை அவர்களுக்கு பகிர்ந்தளிக்க மாட்டார். ஆனால் மோசேயின் மேல் அமர்ந்திருந்த ஆவி / அபிஷேகத்தை எடுத்து, அந்த எழுபதுபேர் மேல் வைக்க வேண்டும். இந்த மனிதர்கள் மோசேயோடு தலைமைத்துவ பொறுப்பிலே மாத்திரம் வைக்கப்படவில்லை. ஆனால தேவன் மோசேக்கு கொடுத்ததுபோல செய்துமுடிக்கும் / அதிகாரத்தை உடையவர்களாக இருப்பார்கள். தேவன் பகிர்ந்தளிக்கும் போது அவர்களுடைய புதிய பொறுப்புகளை சுமந்து செல்ல தேவையான ஆவிக்குரிய தேவையையும் சந்தித்திருப்பார். இந்த முழு சம்பவத்தையும் மேகத்திலிருந்து மோசேயோடு பேசினார். தெரிந்துக் கொள்ளப்பட்ட அந்த தலைவர்கள் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள் என்பதை உறுதிப்படுத்தினார். அவர்கள் அவருடைய ஆவியை / அபிஷேகத்தைப் பெற்று தீர்க்கதரிசனம் உரைக்கத் தகுதியானார்கள்.

(எனவே இந்த தலைவர்கள் தேவனால் அங்கிகரிக்கப்பட்டவர்கள் என்பதை தெளிவான அடையாளத்தின் மூலமாக ஜனங்கள் அறிந்தார்கள்). மோசே விட்டுவிட்ட இரண்டு நபர்களை தேவன் கண்டுபிடித்து அவர்களை தலைமைத்துவத்திலே உயர்த்தி தன்னுடைய ஆவியை அவர்கள் மேல் தங்கப்பண்ணினார்.

பகிர்ந்தளிக்கப்படுவதற்கான காரணங்கள்

சபை ∴ ஸ்தாபனம் பகிர்ந்தளிக்க வேண்டியதின் சில அடையாளங்கள்:

- குறிக்கப்பட்ட கால அளவு அடிக்கடி தவறி விடுவதினால்
- தலைவர்கள் அதிக நேரம் காத்திருந்து பிரயாணம் செய்து / சிறு பணியை முடிக்கிறார்கள் (உண்மையிலே மற்றவர்கள் செய்ய வேண்டியவைகளை). எனவே அவர்கள் செய்ய வேண்டிய காரியங்களுக்கு போதுமான நேரத்தை செலவழிக்க முடியாமை.
- பெரிய வேலைகள் முடிக்கப்படாமல் விட்டுவிடப்பட்டிருக்கிறது (சில நேரங்களில் ஆரம்பிக்கப்படாமலே இருக்கிறது).
- சில ஜனங்கள் தங்கள் சொந்த நலத்தையும் / நன்மையையும் கருதாது அதிக கடினமாய் உழைக்கிறார்கள். ஆனால் மற்ற ஜனங்கள் சுற்றி அமர்ந்து ஒன்றும் செய்யாமலிருக்கிறார்கள். உதாரணமாக சில ஜனங்கள் அழுத்தத்தின் காரணமாக முறிந்து விடுகிறார்கள். மற்றவர்கள் மனச்சோர்வு அல்லது வெறுப்படைகிறார்கள், ஏனெனில் கீழான நிலைமையில் உபயோகிக்கப்படுவதினால்.
- ஸ்தாபனம் / சபை எந்த வழியில் செல்லவேண்டும் என்று வழி நடத்துவதில்லை. ஏனெனில் தவறான ஜனங்கள் தவறான வேலையில் இருக்கிறார்கள். ஆகவே ஸ்தாபனம் தவறான முக்கியத்துவங்களை உடையவைகளாய் இருக்கிறது. சபை / ஸ்தாபனத்தில் இருக்கிற ஜனங்கள் ஒவ்வொருவரும் / தனிப்பட்ட / சீக்கிரத்தில் போதுமான அளவு கவனிக்கப்படுவதில்லை (அதாவது நான்கு ஐந்து நபர்களை கவனிக்கிற விதமாய் நாற்பது பேரை பராமரிக்க முடியாது. அதை செய்வதற்கு அவர்கள் முயற்சிப்பார்களானால் சீக்கிரமாய் செய்யப்பட வேண்டிய காரியங்கள் மிகவும் பின் தங்கியதாய் காணப்படும். ஏனெனில் அவர்கள் தங்களுடைய தருணத்திற்காக காத்திருக்க வேண்டும்).
- பகிர்ந்தளித்தலை பயிற்சி செய்வதற்காக முக்கிய காரணம், இது வேதாகமப் பூர்வமானது. நாம் பார்க்கிற வண்ணமாக மோசே பகிர்ந்தளித்தலைப் பயிற்சித்தான். ஆகவே அவனுடைய ஊழியத்தை எடுத்துச் செல்ல அவனால் முடிந்தது. இயேசு பகிர்ந்தளித்தலைப் பயிற்சித்து உற்சாகப்படுத்தினார். உதாரணமாக அவருடைய சீஷர்களை குறிப்பிட்ட செயல்களை சுமந்து செல்லும்படி அவர் பணித்தார். பின்பாக, எல்லா கிறிஸ்தவர்களுக்கும் பெரிய கட்டளைளை அவர் கொடுத்தார் (செயல்பாட்டிலிருக்கும் இந்த கட்டளை எல்லா கிறிஸ்தவர்களுக்கும் விசேஷ வேலையாக சுமந்து செல்லும்படியாக கொடுக்கப்பட்டிருக்கிறது). இது இயேசு ஆரம்பித்தது. அவருடைய சபை உண்மையாக அவசியமாக செய்ய வேண்டிய இதைப் பற்றிக் கொள்ள வேண்டும். ஆகவே அவர்கள் இன்று அநேக முன்னோடிகள் ஏற்படுத்தப்பட்டு மூப்பர்களாக அழைக்கப்படுகிறார்கள் (அப்போஸ்தலர் 6:1-7). இவைகள் பகிர்ந்தளித்தலுக்கான அநேக வேதாகம உதாரங்களில் சில.
- சபையிலுள்ள ஒவ்வொரு பதவிகளையும் / பொறுப்புகளையும் தேவன் தனிப்பட்டவராய் நிறைவேற்ற முயற்சிப்பதில்லை. தேவன் எல்லா சபை / ஸ்தாபனம் அவருடைய சரீரமாய் அதிலே ஒவ்வொரு அங்கத்தினரும் அவர்களுடைய பகுதியை செய்ய விரும்புகிறார் (1கொரிந்தியர் 12:12-31). தேவனால் வரம் பெற்ற தலைவர்கள் சபையிலே பொறுப்புகளை பகிர்ந்தளிக்க முடிவதற்கான காரணங்களில் ஒன்று சபை அங்கத்தினர்கள் அவருக்குள் வளர / விரிவாக கூடியவர்களாக மாற (விசேஷமாக வரங்களிலும் திறமைகளிலும்) அவருக்காக கனி நிறைவில் விருத்தியடைய (எபேசியர் 4:11-16). ஒரு சபை / ஸ்தாபனம் எண்ணிக்கையிலே வளர்ந்து இந்த வளர்ச்சியை பராமரிக்ககூடிய உத்தியோஸ்தர்களுக்கு குறைவில்லாமல் தொடர்ந்து செல்லும். சபைத் தலைவர்கள் மற்ற ஜனங்களின் பணியை அவர்ளை தேவன்

அழைத்து செய்யும்படியாக சொன்னவைகளை ஒருபோதும் செய்யக்கூடாது (விசேஷமாய் வேலைக்காரத்துவம் போன்ற ரீதியிலே). இது குழப்பத்தை தான் பிறப்பிக்கும். அவர்களால் நடத்தப்படுகிறவர்கள் புறக்கணிக்கப்பட்ட / தேவையில்லாதவர்கள் என்பதாக உணர காரணமாகி விடும். ஏனெனில் அவர்கள் செய்யும்படியாக ஒருபோதும் கேட்கப்படவில்லை. கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு நபரும் வித்தியாசமான, ஒப்பிட முடியாத, தேவன் அவர்களுக்காக நியமித்த பதவியை உடைய சிறந்த நபர்களாய் இருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்க. இந்த ஜனங்கள் எல்லாம் செயல்பட விடாவிட்டால் (அல்லது தகுதிபடுத்தப்படாவிட்டால்) முழு சரீரமும் பாதிக்கப்படும். ஏனெனில் குறிப்பிட்ட வரங்கள் / ஊழியம் / திறமைகளை தேவனை சேவிக்கும் ஆசிர்வாதத்தின் உரிமையை உள்ள பகுதியில் ஆவிக்குரிய வரங்கள் / ஊழியங்கள் முழு அளவில் செயல்பட வழிவாய்ப்புகளை செய்து கொடுக்கிறவராக / உற்சாகப்படுத்துகிறவராக இருக்க வேண்டும் (செய்து கொடுப்பது தலைவர்களின் பொறுப்பாகும்). எனவே அவர்கள் அது தகுதி வாய்ந்த தலைவர்களை யாருக்கெல்லாம் தேவன் ஆவிக்குரிய வரங்களை அளித்திருக்கிறார்களோ அவர்களை அங்கிகரித்து பயிற்சியளித்து விடுவிக்க வேண்டியது அவசியம். சில வேளைகளில் இந்த பயிற்சியானது இந்த ஜனங்களை கஷ்டமான / தேவைப்படுகிற சூழ்நிலையில் மத்தியில் விட்டுவிட்டு ஈடுபட வைப்பதாகும். இதிலே அந்த நபர் தாங்கள் ஆயத்தப்படவில்லை என்று உணரமாட்டார்கள் (இதை நீங்கள் செய்யும்போது மாத்திரம் அது சரியானது, தேவனை உணர்கிறவர்களாக இருக்கிறீர்கள் அந்த நபரும் தகுதி / திறமையுள்ளவர் என்று நம்பிக்கை கொள்ள முடியும்). உண்மையிலே ஒரு நபர் கிறிஸ்துவிலே வளர்வதற்கும், வரங்களிலே வளர்வதற்கும் முடிவான ஆழத்திலே எழுந்து விடுவது தான் சிறந்த வழியாகும். ஏனெனில் அந்த நபர் தேவனை நோக்கி கூக்குரலிட்டு முழுவதும் அவரை சார்ந்திருப்பார் (அதற்கு முன்னால் தங்கள் சொந்த பெலத்தை சார்ந்து சோம்பேறியாய் இருந்திருக்க வாய்ப்பு உண்டு). விசுவாசத்திலே / வரங்களிலே வளர்வதற்கு ஜனங்களை விடுவிக்க வேண்டும். தலைமைத்துவம் அந்த ஜனங்கள் விரிவடைவதற்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்கி கொடுக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் தேவனை சேவிக்கும்படி அழைக்கப்பட்டவர்கள். அவர்கள் ஒன்றும் செய்யாவிட்டால் அவர்கள் சோம்பல்தனமாய் வெறுத்துப் போய் சந்தோஷமில்லாமல் வஞ்சிக்கப் பட்டவர்களாய் நிறைவேற்றப் படாதவர்களாய் உணர்வார்கள்.

❖ தேவன் தமது சபையானது செத்துக் கொண்டு இருக்கிற உலகத்திற்கு தனது வாழ்க்கையை கொடுத்து ஊழியம் செய்யும் தகுதியிலே வளர விரும்புகிறார். ஸ்தல சபையில் சூழ்நிலையில் கூட இந்தப் பணியானது செய்யப்படுவதற்கு பகிர்ந்தளித்தலைப் பயிற்சி பண்ணுவது அவசியம். எனவே தேவன் அவருடைய தலைவர்களை அவர்கள் நடத்துகிற நம்பக்கூடிய ஜனங்களுக்கு பரிசுத்த ஆவியின் வல்லமையினால் ஊழியம் செய்து தேவராஜ்ஜியத்தின் தத்துவங்களை எளிமையாக தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறார். அப்பொழுது தான் அவர்களும் விசுவாசத்திலே / சத்தியத்திலே வல்லமையிலே ஊழியம் செய்ய முடியும் (2தீமோத்தேயு 2:2). அதிகமான கிறிஸ்தவர்கள் ஆக்கப்பூர்வமாக ஊழியத்திற்காக பயிற்சியளிக்கப்படும்பொழுது அதிகமான ஜனங்கள் சந்திக்கப்படுவார்கள் / உதவி செய்யப்படுவார்கள் / ஆசிர்வதிக்கப்படுவார்கள் / மற்றும் பல. எனவே தேவனுடைய தலைவர்கள் ஆவிக்குரிய நம்பத்தகுந்த இந்த ஜனங்கள் யார் என்பதை எப்படி பகுத்தறிவது என்று கற்றுக் கொள்வது அவசியம். அதன் மூலம் அந்த ஜனங்களுக்கு உபதேசிக்க / சீஷத்துவம் பண்ண தகுதியடைகிறார்கள். அவர்கள் தங்களுடைய தருணத்திலே இந்த தகவல்களை மற்ற ஆவிக்குரிய ஜனங்களுக்கு தெரிவிக்கிறார்கள். இந்த சீரான உயர்வுடன்கூடிய மாற்றம் தான் இந்த பூமியிலே தேவன் தன்னுடைய வேலையை நிறைவேற்றுவதற்கு தெரிந்துக் கொண்ட பிரதான வழியாகும். மற்றும் விளைவாக, அது பகிர்ந்தளிக்கும் கலையை பயிற்சித்தலாகும். இந்த உண்மைகள் / தத்துவங்கள் விசுவாசத்திலே போதிக்கப்படுதல் அவசியம், மற்றும் அவர்களுக்காக ஆக்கப்பூர்வமாய் இருப்பதற்கு விசுவாசத்திலே பெறப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள் (குருட்டுப்பாடமாய் கற்றுக் கொள்வது போதுமானதல்ல). எந்த ஒரு ஸ்தல கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலே ஊழியங்கள் விரிவடைவதற்கு தோல்விகள் ஏற்படுமானால் விளைவானது தேங்கிய நிலை, வெறுப்படைந்த நிலை, மற்றும் இளைப்பாறுதல் அற்ற நிலையாய் இருக்கும். உண்மையிலே சரியாக

பகிர்ந்துக் கொள்ள தவறுகிற சபை தலைமைத்துவம் அந்த தலைமைத்துவ கொள்ளளவுக்குள் மட்டுப்படுத்தப்படும். உதாரணமாக, ஒரு போதகர் (தன்னுடைய சொந்தமாக நடத்துகிறவர்). 60பேரை பராமரிக்க முடியுமென்றால் 60 பேருக்கு அதிகமான நபர்களையுடைய சபையை அவர் ஒருபோதும் உடையவராக இருக்க முடியாது (அவர் அதற்காக விருப்பமுடையவராய் இருந்த போதிலும்). அவர் மற்ற ஊழியங்கள் அங்கிகரிக்கப்படுவதற்கு அனுமதிக்க வில்லையென்றால் / செயல்படுவதற்கு விடவில்லையென்றால் அவர் தன்னுடைய கொள்ளளவில் மாத்திரம் சபை இருப்பதற்கு தடை செய்கிறவராய் இருப்பார். தலைவர்கள் எல்லாவற்றையும் தாங்களாகவே ஒருபோதும் சாதிக்க முயற்சிக்காமல் ஞானமுள்ள பகிர்ந்தளிப்பதின் மூலம் எப்பொழுதும் அதிகமான காரியங்களை நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்பார்கள்.

- தற்போது செயல்படுகிற தலைவர்களைக் காட்டிலும் பயிற்சியளிக்கப்பட்டால் வேலையை செய்யக்கூடிய ஜனங்கள் இருக்கிறார்கள். இப்படியிருக்குமானால், இப்பொழுதிருக்கிற தலைவர்கள் விடுவிக்கப்பட்டு மற்றப் பகுதிகளில் மற்ற வேலைகளை செய்யலாம். அல்லது மற்ற ஜனங்கள் அவர்களுடைய வேலை / ஊழிய பொறுப்புகளை பகிர்ந்துக் கொள்வதற்கு தகுதியாக்கப் படலாம். ஒருபோதும் வைராக்கியம் உள்ள கிறிஸ்தவர்களின் அக்கினியை அவித்துப் போடாதீர்கள். அவர்களை ஊக்கமுட்டுவதின் மூலமாக அவர்கள் அதிகமான காரியங்களை செய்து தங்களை முன்னேற்றிக் கொள்வார்கள். அவர்கள் மேல் மூடியைப் போடுதல் அல்லது அதிகமான காலத்திற்கு அவர்களை பிடித்து வைத்திருத்தல் (தேவையில்லாமல்) அவர்கள் வெறுப்படைய மாத்திரம் காரணமாகிவிடும். பின்பு அவர்கள் சபையை விட்டு / ஸ்தாபனத்தை விட்டு விலகுவார்கள். அல்லது படிப்படியாக தங்களுடைய ஆர்வத்தை இழந்து விடுவார்கள் (எனவே ஏதாவது ஒன்றை செய்வதற்கு நினைத்துவிடுவார்கள். அது அவர்கள் தேவனுக்காக செய்யக்கூடியவற்றில் இருந்து குறைவானதாகவே இருக்கும்). தங்களுக்காகவே எப்பொழுதும் காரியங்ளை செய்கிற ஜனங்கள் ஒருபோதும் தங்களுக்கான காரியங்களை செய்வதற்கு கற்றுக் கொள்ள மாட்டார்கள். அதன் காரணமாக ஒருபோதும் மற்ற ஜனங்களுக்காக எந்நதக் காரியத்தையும் செய்ய மாட்டார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

- தலைவருடைய பளு லகுவாக்கப்பட்டு தங்களுடைய முக்கியமான காரியங்களை செய்யும் முயற்சியில் அவர்கள் கவனம் செலுத்த முடியும். அதற்கு பதிலாக அவசரமான பணிகளை ஒருபோதும் முடிக்க முடியாத பட்டியலை நிறைவேற்றுவதற்கு முயற்சித்துக் கொண்டிருப்பதற்கு பதிலாக.

- யாருக்குப் பணி பகிர்ந்து கொள்ளப்பட்டதோ அந்த ஜனங்கள் தன்னை சிறப்பாக அடையாளப்படுத்த தகுதியாவார்கள். எனவே தங்களுடைய தலைமைத்துவத்தை ஆதாரிப்பார்கள் (ஒருவேளை பகுதியாக). ஏனெனில் தங்களுடைய தலைவருடைய பாரத்தின் பகுதியை தாங்கிக் கொள்வதற்கு / சுமப்பதற்கு உதவியாய் இருப்பார்கள். அவர்கள் ஆவிக்குரிய ரீதியிலும் நம்பிக்கையிலும் வளர முடியும். ஏனெனில் சவால்களை அதிக வேலை ஊக்கமுட்டுதல் பகிர்ந்தளிக்கப்பட்ட வேலையை எடுத்துச் செல்வதில் அடங்கியுள்ளது. அநேக ஜனங்கள் விசுவாசத்தில் / திறமையில் / வல்லமையில் வளருவதில்லை. அல்லது தேவனுக்குள் தங்களுக்குள்ளிருக்கும் திறமைகளை உணர்ந்து கொள்வதில்லை. அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பணி அவர்களை நீட்டிக்கப்பண்ணி அவர்களுடைய சொந்த இயற்கையான திறமைகளை தாண்டி உந்துதல் ஏற்படாவிட்டால். அதாவது இவைகள் ஜனங்களுக்குள்ளிருக்கும் திறமைகளை வெளிகொண்டுவந்து இரண்டாந்தர வாழ்க்கையில் இருந்து அவர்களை காப்பாற்றுகிறது. உதாரணம் பவுல் தீமோத்தேயுவை உற்சாகப்படுத்துகிறான். தலைவர்கள் நீட்டிக்கப்பட வேண்டிய ஜனங்கள் யார் என்பதை சரியாக பகுத்தறிவது அவசியம். ஏனெனில் இந்த விதமான அணுகுமுறையை தவறான ஜனங்களிடத்தில் செயல்படுத்தும்போது ஜனங்கள் நொறுங்கிப் போவதற்கும் விலகிச் செல்வதற்கும் காரணமாகிவிடும்.

- பகிர்ந்துக் கொள்ளுதல் உடைய தலைவர்கள் அநேக வித்தியாசமான வேலைகளை அனுபவிக்கலாம். அல்லது புதிய விதமான வேலையை அனுபவிப்பார்கள். ஏனெனில்

அவர்களுடைய பொறுப்புகளில் சிலவற்றை குறிப்பிட்ட பகுதிகளில் பகிர்ந்து கொண்டதின் மூலம் அதிக நேரமும், தருணமும் உடையவர்களாக இருப்பதினிமித்தமுமாகும். உண்மையிலே பகிர்ந்தளித்தல் ஒரு தலைவர் புதிய பொறுப்புகளை எடுக்கவிரும்பினால் தேவையான திறமைகளில் தன்னை வளர்த்துக் கொள்ள அல்லது புதிய சவால்களை ஏற்றுக் கொள்ளும் பொழுது நடைபெறுகின்ற ஒன்றாக இருக்கிறது. பகிர்ந்தளித்தல் உள்ள தலைவர்கள் அதிக திறமையானவர்களாகவும் / தங்களுடைய தலைமைத்துவத்தில் / தாங்கள் எடுத்துக் கொண்ட வேலையில் ஆக்கப்பூர்வமானவர்களாகவும் இருப்பார்கள்.

❖ சபையினால் / ஸ்தாபனத்தினால் பகிர்ந்தளித்தல் எப்பொழுது பயிற்சிக்கப்படவில்லையோ அப்பொழுது எல்லாமே தேக்கமடையும் நிலைக்கு வந்துவிடலாம். அதாவது வளர்ச்சி ஏற்படாது. சிறந்த சாத்தியமான விளைவு என்னவென்றால் தற்போது உள்ள நிலைமையை பராமரிப்பதாகும். இவைகள் ஏனென்றால் தேவனுடைய பார்வைக்கும், எதிர்காலத்திற்கும் நல்ல விதத்தில் தோற்றமளிக்க வேண்டிய தலைவர்கள் நிர்வாகத்தில் / நடைமுறையில் / மற்றும் பலவற்றில் முன்னேற்றம் நாம் அடைய முடியாத காரணத்தினாலாகும். செய்யப்பட்ட வேலைகள் பரப்பரப்பாக செய்யப்படுவதால் (அநேக நேரங்களில் நன்றாக செய்யப்படுவதில்லை). போதுமான நேரம் அவர்களுக்கு இல்லாமையினால் (விசேஷமான ஆயத்தமாகி கொள்வதற்கு). எல்லாமே உடனடியாக செய்யப்படுகிறது (அல்லது நேற்று). ஏனெனில் மற்றவர்கள் வேலையின் காலக்கெடு முடிவடையும் தருவாயில் வந்துவிட்ட காரணத்தினால் (இதன்விளைவாக முக்கியமான பணிகள் அவசரமான பணிகளினிமித்தம் மறக்கப்பட்டு விடுகின்றன). இதன் விளைவு தகுதியான தலைவர்கள் முன்னேற்றமடைய தவறி விடுகிறார்கள்.

தேவனுடைய தலைவர்கள் ஏன் பகிர்ந்துக் கொள்வதில்லை என்பதற்கான காரணங்கள்

✓ மற்ற நபர்கள் இந்த வேலையை தாங்கள் செய்வதைக் காட்டிலும் சிறப்பாக செய்ய மாட்டார்கள் என்று பயப்படுகிற படியினாலும் மற்றும் தங்களை உயர்வாக காட்டுகிற படியினாலும்.(அதாவது பெருமை). மற்றவர்கள் ஜனங்கள் மத்தியிலுள்ள தயவை இழந்துவிடுவோம் (அதாவது தள்ளிவைக்கபடுதல்) என்று பயப்படுகிற படியினால் அல்லது வேலையை இழந்துவிடுவோம் என்பதினால் தேவைப்படுகிற அளவிற்கு அவர்கள் பகிர்ந்துக் கொள்ளமாட்டார்கள். தலைவர்கள் ஒருபோதும் தங்களுடைய பரபரப்பை குறித்து அதிக பெருமை என்னும் வலையில் விழுந்து விடக்கூடாது. மற்ற ஜனங்களிடத்தில் தங்களுடைய பணிகளில் சிலவற்றை தங்களுடைய வேலையை ஈடுகொடுத்து செல்வதற்கு கொடுத்து அவர்கள் இன்றியமையாதவர்கள் என்பதை ஒருபோதும் விசுவாசிக்க மாட்டார்கள்.

✓ குறிப்பிட்ட வேலைகளை செய்வதில் அவர்கள் மகிழ்ச்சிகரமாக இருப்பதினால் யாராவது ஒருவரிடத்தில் அவர்கள் பகிர்ந்து கொள்வதற்கு விருப்பமில்லாமல் இருக்கிறார்கள். (விசேஷமாக அந்த நபர் அந்த வேலையை வித்தியாசமாக செய்கிறார் என்றால்)

✓ தங்களுடைய சொந்த பெலவீனங்களை / எல்கையை தங்களுக்குத் தானே அல்லது மற்றவர்களிடத்தில் ஒத்துக் கொள்ள விரும்பமின்மையினால் தலைவர்கள் குறிப்பிட்ட பகுதியில் அடிக்கடி தங்களுடைய தகுதியின்மையை மறைக்க முயற்சிக்கிறார்கள். இது மற்ற ஜனங்களுக்கு வலியை ஏற்படுத்தக்கூடியதாய் இருந்தபோதிலும் கூட. மேலும் தங்களுக்கு கீழ் உள்ளவர்கள் சிலவற்றை செய்கிற விதத்தில் அவைகள் தங்களுக்கு தெரியாது என்பதை அவர்கள் அறிய விரும்பமில்லாமல் இருக்கிறார்கள். அநேக ஜனங்கள் தாங்கள் சிலவற்றை செய்ய முடியாது என்பதை ஒத்துக்கொள்ளமாட்டார்கள். அது பயனற்றது தான் என்று கண்டுபிடிப்பதில்லை. அப்படிப்பட்ட ஜனங்களிடத்தில் பகிர்ந்தளிப்பது என்பது சேர்க்கை. சில பகுதிகளில் அவர்கள் செயல்பட முடியாது அல்லது அந்த வேலையின் பிரமாண்டத்துவத்தை அவர்கள் கையாள முடியாது.

✓ மற்ற நபர்கள் வேலையை தவறாக செய்து விடுவார்கள் அல்லது அவர்கள் செய்வதை விட மோசமாக செய்துவிடுவார்கள் என்ற பயம். ஆகவே இலக்கை அடைவதைவதற்கு தடையாய் இருக்கிறது அல்லது குழுவின் ஆக்கப்பூர்வதன்மையை குறைக்கிறது. அல்லது எப்படி ஆக்கப்பூர்வமாய் செய்வது என்று ஒரு நபர் கற்றுக்கொள்ள அவசியமான நீண்ட

காலத்திற்கு அவர்கள் காத்திருக்க முடியாது என்று அவர்கள் விசுவாசிப்பதினால் (அதாவது ஒரு நபர் அனுபவத்திலும், நம்பிக்கையிலும் போதுமான அளவு வளரும்போது வேலையை நன்றாக செய்வார்).

- ✓ சபை / ஸ்தாபன வேலைகள் அனைத்தையும் செய்துமுடிப்பதற்கு தாங்கள் மாத்திரம் அழைக்கப்பட்டவர்கள் என்று அவர்கள் விசுவாசிக்கிறார்கள். இது அவர்களுடைய ஸ்தாபனத்தின் பாரம்பரிய நிலைமையே காரணமாகும். தங்களுடைய பதவியை / பட்டத்தை யாரோடும் பகிர்ந்து கொள்ள அவர்கள் விரும்பமாட்டார்கள். தங்களுடைய சபை / ஸ்தாபனத்தின் கட்டுப்பாட்டை இழக்க அவர்கள் விரும்ப மாட்டார்கள். அவர்கள் தங்களுடைய சபைக்காக / குழுவினருக்காக உண்மையாக உழைக்கிறார்கள் என்று விசுவாசிக்கிறார்கள் அல்லது செய்து முடிக்கப்பட்ட வேலையின் மதிப்பை யாரும் பெற்றுக்கொள்ள விரும்ப மாட்டார்கள் (இது பொதுவாக நடைபெறுவதற்கான காரணம் என்னவென்றால் தலைவர் தன்னுடைய சொந்த முக்கியத்துவத்தை தொடர்ந்து பராமரிக்க அவசியம் இருப்பதால்)

- ✓ அவர்களுடைய வேலையின் சிறப்புத்தன்மைகள் பணிப்பகர்வை பயிற்சிப்பதை இயலாத ஒன்றாக செய்கின்றன என்ற நம்புகிறபடியினால்

- ✓ பகிர்ந்தளிக்கப்பட்ட பணியை அந்த நபர் செய்ய தகுதியாகும்படியாக போதுமான பயிற்சியை கொடுக்கமுடியாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய வழியில் வேலை செய்வதற்கு அந்த நபருக்கு பயிற்சி கொடுப்பதற்கும் அவருடைய திறமையை தலைவர் சந்தேகிப்பதினால் அடிக்கடி இந்த பிரச்சனை எழும்புகிறது. துரதிஷ்டவசமாக அடிக்கடி அந்த வேலை எப்படி செய்து நிறைவேற்றப்பட்டது என்பதுதான் தலைவருக்கு மிக முக்கியமே தவிர வேலை செய்யப்பட்டது என்பதல்ல (சில காரியங்கள் தெய்வீக மற்ற முறையில் செய்யப்படும்போது மாத்திரமே இது மதிப்பு மிக்கதாக கருதப்படும்). மற்ற தலைவர்கள் கூடுதல் பளுவை எடுக்க மிக சோம்பேறிகளாக இருக்கிறார்கள் (அதாவது நேரத்தை செலவிட்டு தங்களையும் கொடுப்பதற்கு). இதிலே மற்றவர்களுக்குத் தேவையான பயிற்சிக் கொடுத்து மற்றொரு வேலையை எடுப்பதும், அவர்களை தகுதியாக்குவதும் அடங்கியிருக்கிறபடியினால். எனவே அவர்கள் நினைக்கிறார்கள் அவர்களாகவே அதைச் செய்துவிடுவது மிக எளிதானது என்று (குறுகிய காலத்தில் வேண்டுமானால் இது சாத்தியமாகலாம்).

- ✓ அவர்கள் ஒழுங்குமுறையற்ற அமைப்பு முறை கொண்டிருக்கிறபடியினால் எந்த பணியை பணிப்பகர்வு செய்ய வேண்டுமென்று உறுதியாக தெரியாது. அல்லது எந்த ஒரு அதிகப் படியான குழு அங்கத்தினரையும் எடுப்பதில்லை. ஏனெனில் அவர்களுக்கு என்ன வேண்டும் அல்லது விருப்பம் என்ன என்பதை அறியாதிருக்கிறபடியினால்.

- ✓ குழுவிலுள்ள ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து தளர்ச்சியான யோசனையை மாத்திரம் உடையவர்களாய் இருக்கிறபடியினால், உண்மையிலே அந்தப்பணி நிறைவேற்றப்படுகிறது என்று எண்ணுகிற படியினால் ஆனால் அப்படியல்ல.

- ✓ சபை / ஸ்தாபனம் பொறுப்பைக் குறித்து இப்படிப்பட்ட பயத்தை / விருப்பமின்மையை உருவாக்கி வைத்திருக்கிறபடியினால் ஒருவரும் அந்த பொறுப்பை எடுக்க மாட்டார்கள். அது அவர்களுக்கு கொடுக்கப்பட்டாலும். அதாவது கிரையம், அர்ப்பணிப்பு, குறைகூறுதல் அதோடு இணைந்து வருகிறபடியினால்.

- ✓ அவர்கள் நடத்துகின்ற ஜனங்களை குறித்து அவர்களுக்கு நம்பிக்கையில்லாதபடியினால், சபையிலே / ஸ்தாபனத்திலே எந்த பொறுப்புள்ள பணிகளையும் நம்பி கொடுக்க மாட்டார்கள். அநேக தலைவர்கள் பணிப்பகர்வை நிறுத்திவிட்டார்கள். ஏனெனில் அவர்கள் அமைத்ததுப்போல பணிகளை மற்ற ஜனங்கள் நிறைவேற்ற / பதிலளிக்க தவறினபடியினால். இந்த தலைவர்கள் சரியாக எப்படி பணிபகர்வு செய்ய வேண்டுமென்று கற்றுக்கொள்ள வேண்டும். அப்போது தான் பகிர்ந்துக் கொள்ளப்பட்ட பணியை ஆக்கப்பூர்வமாக அந்த நபர் செய்ய முடியும். குறிப்பு தலைவர்கள் அதிக பாதுகாப்பின்மை, அவரை சுற்றியிலுள்ள தகுதி வாய்ந்த ஜனங்களை ஏளனத்துடன் பார்க்கச் செய்யும் (இதைச் செய்வதின் மூலம் அவர்களை பெரியவர்களாக, சிறந்தவர்களாக பார்க்கச் செய்யும்). இவ்விதமான தலைவர்கள் தங்களை

சுற்றி 'லேசர் ஒளிக்கற்றை' உருவாக்கி வைத்து பிரகாசமாக தோன்ற விரும்புவார்கள். மற்றொரு விதத்தில் 'தன்முனைப்பு' பிரச்சனையுள்ளவர்கள் அல்லது தான் உயர்ந்தவர் என்ற நடக்கையுள்ளவர், ஒருபோதும் மற்றவர்களை நல்லவர்களாக பார்த்து பணிப்பகர்வு செய்யமாட்டார்கள். அல்லது எப்போதும் எல்லாவற்றிற்கும் மேலாக நிலைத்திருக்க விரும்பி தனக்கு கீழேயிருக்கிறவர்களுக்கு பல தடைகளை விதித்து, திறமைகளை மட்டுப்படுத்தி செயல்படுவதற்கான சுதந்திரத்தை கட்டுப்படுத்துவார்கள்.

- ✓ சரியாக பணிப்பகர்வு செய்ய நேரமில்லாமை என்று அவர்கள் நம்புவார்கள். (துரதிஷ்டவசமாக, பணிபகர்வை நீண்ட காலம், காலம் தாழ்த்தும் போது அவர்கள் குறைவான நேரமே உடையவர்களாக இருப்பார்கள்).
- ✓ பணிப்பகர்வு என்ற கருத்தையை அறியாதவர்களாக இருக்கிறார்கள். (மேலும் முழு நிர்வாக செயல்பாட்டையும்) அல்லது பலதடவை மோசமாக / தவறாக பணிப்பகர்வு செய்யப்பட்டதையும் பார்த்தபடியினால் பணிப்பகர்வு செய்தலை நிறுத்திவிட்டார்கள்.
- ✓ சபை / ஸ்தாபனத்திலே வழிகளை மாற்றியமைப்பதைக் குறித்து அவர்கள் பயப்படுகின்ற படியினால்; அல்லது அறியாத ஒன்றுக்காக பயப்படுகின்றார்கள். மற்றும் புதிய திறமைகளை / கருத்துகளை / மற்றும் பலவற்றை கற்றுக் கொள்ள விருப்பமில்லை.
- ✓ தாங்கள் நடத்துகிற ஜனங்களை பணிப்பகர்வை, வேலையை தவிர்ப்பதற்காக செய்யப்படுகிறது என்று தவறாக நினைத்து விடுவார் என்று பயப்படுதல். உண்மை என்னவென்றால் தலைவருடைய வேலை, சபையிலே / ஸ்தாபனம் நடக்கும் முழுக்காரியத்தையும் பின்பாக நின்று கவனித்து சரியான வேலையை கொடுக்க முயற்சிக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்களுடைய சபை / ஸ்தாபனம் தேவனில் என்ன செய்ய வேண்டுமோ அதை செய்யும்.

தேவன் உங்களை தலைவராக அழைத்திருந்தாரானால் அவர் உங்களுக்கு வேண்டிய தகுதியையும் தந்திருக்கிறார். பணிப்பகர்வை ஆக்கப்பூர்வமாய் செய்யத் தேவையான ஞானத்தை (யாக்கோபு 1:5-8); பணிப்பகர்வை பயிற்சி செய்தலை தடுக்கின்ற பயத்தை / பொறாமையை / நம்பிக்கையின்மையை மேற்கொள்ளுதல் (2தீமோத்தேயு 1:7) என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

<u>எப்படி பணிப்பகர்வு செய்வது:</u>

பணிப்பகர்வு செயல்பாட்டில் அடிப்படையாக நான்கு படிகள் இருக்கின்றன அதாவது திட்டமிடுதல், பகிர்ந்து கொள்ளுதல், பயிற்சியளித்தல், மறுஆய்வு செய்தல்.

(1) திட்டமிடுதல

பணிப்பகர்வில் இந்தப் பகுதியின் செயல்பாடு எந்தக்காரியங்களை / வேலையை பணிப்பகர்வு செய்ய அவசியம் என்று தீர்மானித்தல். இதை கவனத்தோடும், கலந்துரையாடலுக்குப் பின்னும் செய்வது அவசியம். தலைவர்களுடைய சில வேலையை பகிர்ந்து கொள்வது தவறாகிவிடும் என்பதை நினைவில் கொள்க. எனவே எந்த வேலையை பகிர்ந்து கொள்வது, எந்த வேலையை தலைவர் தாங்களாகவே செய்து கொள்ளுதல் என்று முடிவெடுத்தல் முக்கியமானது. (தலைவர்கள் தங்களுடைய பணியை ஒருபோதும் கூட்டவோ, தவிர்க்கவோ கூடாது) பணிப்பகர்வு செய்வதற்கும், விருப்பமில்லாத வேலைகளை மற்றவர்களிடத்திலே கடத்துவதற்கும் மிகப்பெரிய வித்தியாசமுண்டு. தனிப்பட்ட வசதிக்காக நீங்கள் பணிப்பகர்வு செய்கின்றீர்களா அல்லது சபை / ஸ்தாபனம், பணிப்பகர்வு செய்யப்படுகின்ற நன்மைக்காகவா என்பதை உங்களிடம் நீங்களே கேட்டு உறுதி செய்து கொள்ள வேண்டும்.

ஏற்கனவே பார்த்தபடி எந்த ஒரு நீண்டகால பணிக்கும் வேலை விபரப்பட்டியல் எழுதப்பட வேண்டும். (உதாரணமாக, குழுவின் தலைமைத்துவம் மற்றும் பல) உண்மையிலே குறுகிய கால அல்லது ஒருமுறை பணிக்காக கூட பணி வழங்கப்பட்டவர்களிடம் அந்த பணி என்ன? எவ்வாறு இருக்குமென்று தெளிவான எண்ணத்தை கொடுக்க வேண்டும். (உதாரணமாக, இலக்குகள் பணியின் அளவு, நேர அளவு மற்றும் பல) திட்டமிடுதலிலே ஜெபத்துடன்

தீர்மானித்தல் / தேர்ந்தெடுத்தல் பணியை யாரிடத்தில் பகிர்ந்து கொள்வது (அதாவது வேலையோடு அந்த நபரை ஒப்பிட்டுப்பார்த்தல்) அந்த பணியை வேலையை செய்வதற்கு அந்த நபருக்கு எந்த விதமான பயிற்சி அவசியம் / யார் பயிற்சியளிப்பது / உற்சாகப்படுத்துவது / உதவி செய்வது / பணிப்பகர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு யார் நேரடிப் பொறுப்பு / எப்படி பணிப்பகர்வு செய்வது என்பவை உள்ளடங்கியிருக்கிறது. சில நேரங்களில் கணக்கிடுதல் என்னும் ஆபத்தான காரியத்தை பணிப்பகர்வு செய்யும்போது அந்த நபரோடு சேர்ந்து எடுக்க வேண்டியதிருக்கும். ஆனால் இதைச் செய்வதற்கு தவறும்போது சபை / ஸ்தாபனம் ஆக்கப்பூர்வமாய் கனி நிறைந்ததாய் அல்லது தேவனுக்காக முன்னேறுவதற்கு தவறி விடுதலை விளைவிக்கும்.

(2) பகர்வு

ஜெபத்துடன் தெரிந்துக் கொள்ளப்பட்ட நபருக்கு உண்மையாக வேலையைக் கொடுத்தலாகும். பணிப் பகர்வு செய்கிற தலைவர்கள் பணிப்பகர்வு செய்யப்பட்ட நபர் எந்த தலைவருக்கு நேரடியாக பொறுப்போ அவர்களையும் சேர்ந்துக் கொள்ள வேண்டும். இந்த தலைவர்கள் அந்த வேலையில் அடங்கியிருப்பவற்றை தெளிவுபடுத்த வேண்டும். (அதாவது தெளிவான வேலை விபரப்பட்டியலை கொடுக்க வேண்டும். அதிலே அந்த வேலையை செய்வதற்கு தேவையான மிகச்சிறிய விபரங்களும் விளக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் அந்த வேலையில் அடங்கியிருக்கிற காரியங்கள் என்ன என்று தெளிவாக புரிந்துக் கொள்ளாத பட்சத்தில் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் செயல்படுவதற்கு எப்படி எதிர்பார்க்க முடியும்). அந்த நபரை தங்களை அர்ப்பணிக்க சொல்லும் முன்பாக வேலை விபரப்பட்டியல் மிக அகலமானதாய் இல்லை என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும் (ஏனெனில இது குழப்பம் உண்டாவதற்கு காரணமாகி கொடுக்கப்பட்ட பொறுப்பின் எதிர்பார்ப்பு என்ன என்பதைக் குறித்து அதைரியம் அடையச் செய்து எப்படி எடுத்துச் செல்வது என்ற வழி காட்டுதல் இல்லாமல் போய்விடும்). வேலையின் எதிர்பார்ப்பு / விபரங்கள் மற்றும் பல, சுமுகமான சூழ்நிலையில் கொடுக்கப்பட வேண்டியது அவசியம். அவர்கள் செய்ய விரும்பாத ஒன்றை எடுக்கும்படியாக அந்த நபரை கட்டாயப்படுத்தி அழுத்தத்திற்கு உட்படுத்தக் கூடாது. விருப்பம் இல்லாத நபர் வேலையைச் செய்யும்போது அது கடினத்திலோ அல்லது தோல்வியிலோ பொதுவாக முடிவடையும். அந்த நபரும் கூட பொருத்துவதற்கு உதவியாய் இருப்பது அவசியம். அவர்கள் எடுத்திருக்கிற புதிய பணியில் / வேலையில் ஈடுபாடு கொள்ள வேண்டும். (விசேஷமாக சரியானவிதத்தில் ஈடுசெய்கின்ற ஜனங்களை வேலை செய்வதற்கு இணைத்து அமைப்பது மிக முக்கியம்) ஒருமுறை அந்த நபர் அந்த வேலையில் என்ன அடங்கியிருக்கிறது என்பதை அறிந்துவிட்டால் (ஜெபம் பண்ணி தேவன் என்ன செய்ய விரும்புகிறார் என்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும்) அவர் பணியை / வேலையை ஏற்றுக்கொள்வார். அந்த நபரை உற்சாகப்படுத்தி, அந்த நபர் அந்த வேலையை செய்வதற்கு தகுதியுள்ளவர் என்று தங்களுடைய நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும். அதாவது ஆர்வமுட்ட வேண்டும், உற்சாகப்படுத்த வேண்டும். (தலைமைத்துவத்திற்கு தேவன் கொடுத்த தரிசனம் மற்றும் இலக்குகள்) அந்த நபரை உறுதிசெய்து கொள்ள வேண்டும். அந்த நபரை பணிக்கு நேராக இழுத்து அவரை தெய்வீக வழியில் கட்டியெழுப்பவது தலைவருடைய வேலையாகும். அப்போது அவர்கள் பணியை செய்ய விருப்பமுடையவர்களாய் இருப்பார்கள். வேலை நன்றாக செய்வதின் மூலம் என்ன நடக்கிறது என்பதை அவர்களுக்குச் சொல்லி உயர்ந்த ஆனால் செய்யப்படக்கூடிய தேவன் மகிமைப்படுத்தக் கூடிய தரமானவற்றை அமைத்து பணிப்பகரப்பட்ட நபரை தலைவர்கள் உற்சாகப்படுத்த வேண்டும். அவர்களுடைய வேலையில் எதிர் கொள்கின்ற பிரச்சனைகளை கடினங்களை தவிர்ப்பதற்கு / ஆயத்தமாவதற்கு தலைவர்கள் அந்த நபருக்கு உதவி செய்ய வேண்டும்.

(3) பயிற்சி

திட்டமிடும் நிலைமையிலே வேலைக்கு தேவையான பயிற்சி வகைகள் தீர்மானிக்கப்பட வேண்டும். அவர்கள் வேலையை எடுப்பதற்கு முன்பதாக சிலவகை பயிற்சியியாவது பணிப் பகரப்பட்டவருக்கு கொடுக்க வேண்டும். சில ஜனங்கள் ஏற்கனவே தகுதியான பயிற்சியை

பெற்றிருப்பார்கள். (அதாவது அதைப்போல் ஒத்த வேலையை) ஆகவே அவர்களுக்கு வேறெந்த பயிற்சியும் தேவைப்படாது. புதிய பணியின் சூழ்நிலையை குறித்து விளக்குவதும், நோக்கங்களை தெரியப்படுத்துவது மட்டும் தேவைப்படும். அநேக ஜனங்கள் பணியிலே இருக்கும்போது கொடுக்கப்படும் பயிற்சியின் மூலம் பயன் அடைவார்கள். அதாவது வேலையை ஆரம்பித்த பின் கொடுக்கப்படும் பயிற்சி. இது நடைமுறை வேலையோடு இணைந்த மற்றும் முறையான பயிற்சியாய் இருக்கலாம். தலைமைத்துவம் பொறுப்புகள் கொடுக்கப்பட்ட நபருக்கு பயிற்சியை எளிமையாக்கி கொடுக்க வேண்டும். இதிலே பணியின் அளவை குறைப்பதற்கு முயற்சி செய்தல் அடங்கியிருக்கிறது. அல்லது பணிப்பகர்வு செய்யப்பட்டவருடன் இணைந்து வேலை செய்வது. (அல்லது அனுபவம் உள்ள மற்றொரு நபரை இதைச் செய்ய வைப்பது) விசேஷமாக பணிப்பகர்வு செய்யப்பட்டவர் முதல்முதலாக ஆரம்பிக்கும் போது (அதாவது எப்படி அந்த வேலையைச் செய்ய வேண்டும் என்பதை காட்டுவதற்கு) தலைவர்கள் மற்றவர்களுடைய வாழ்க்கையில் கிறிஸ்துவின் வாழ்க்கையை வெளிகாட்ட முயற்சிக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். (எனவே தங்களை கிறிஸ்துவின் மாதிரியாக அமைத்துக் கொள்வது அவசியம். தலைவர்கள் ஒருபோதும் வேலையானது நிலைகுலைந்து விழுந்துவிட அனுமதிக்கக் கூடாது. ஏனெனில் அவர்கள் தங்களைச் சுற்றி கட்டி எழுப்புகிறார்கள். தலைவர்கள் ஒருபோதும் கற்றரிந்த அறிவை தங்களிடம் மாத்திரம் வைத்துக் கொள்ளக்கூடாது. (ஒருவேளை அதைக் கற்றுக் கொள்ளுவதற்கு அநேக வலிமிகுந்த ஆண்டுகள் எடுத்திருந்தாலும்) விசேஷமாக பணிபகரப்பட்ட நபருக்கு அந்த அறிவு உபயோகமாயிருக்கும் பட்சத்தில். அறிவானது எப்பொழுது பகிர்ந்து கொள்ளப்படுமோ அப்பொழுதுதான் ஆக்கப்பூர்வமானது.

(4) மறுஆய்வு செய்தல

ஒரு நபருக்கு பணிப்பகர்வு செய்யப்பட்டபின் தலைமைத்துவம் அவர்களை மறக்கக்கூடாது. அதாவது நன்கு மதிப்பிடக்கூடிய மறுஆய்வு தொடர்ந்து செய்யப்படவேண்டியது அவசியம். பணிப்பகர்வின் ஆரம்பநிலைமையிலே தலைவர்கள் பின்னறித்தகவல் செயல்முறை பெறுவதற்கான திட்டம் வகுக்கப்பட வேண்டும். எழும்புகின்ற வெவ்வெறு விதமான சூழ்நிலையைப் பொறுத்து இது மாறுபடக்கூடியதாக இருக்கலாம். ஆனால் மறுஆய்வு செய்தல் இது மாறுபடக்கூடியதாக இருக்கலாம். ஆனால் மறுஆய்வு செய்தல் என்னும் கருத்து அல்லது பின்னறித்தகவல் பெறுவதற்கு முன்கூட்டியே திட்டமிடப் படவேண்டும். பணிப்பகர்வின் மறுஆய்விலுள்ள சில முக்கியமான தத்துவங்கள் பின்வருமாறு:

- பணிப்பகர்வு செய்யப்பட்ட நபருக்கு பொறுப்புள்ள தலைவர்கள், அவர்கள் சந்திக்கக்கூடிய ரீதியில் இருக்க வேண்டும். அந்த நபரின் தேவைக்கேற்ப அவரை உற்சாகப்படுத்த, சரி செய்ய ஆர்வமூட்ட ஆயத்தமாய் இருக்க வேண்டும். அந்த நபருக்கு என்ன தேவை என்பதை அறிவதற்கான ஒரே வழி அவர்களை கூர்ந்து கவனிப்பது தான். மறுஆய்விலே வெற்றிகரமாக வேலை செய்து முடிக்கப்படும்பொழுது விசேஷமாய் அதற்குரிய மதிப்பும் புகழ்ச்சியும் உள்அடக்கியதாக இருக்க வேண்டும். இதை செய்வதற்கு தவறும்போது பணிப்பகர்வு செய்யப்பட்டவரிடம் கடுமையான ஆர்வம் இழப்பும் தன்னம்பிக்கை இழப்பும் ஏற்பட வழிநடத்துகிறதாய் இருக்கும். உண்மையிலே பணிப்பகர்வு செய்யப்பட்டவர் வெற்றி பெறுவதற்கு தகுதியாகும்படி தலைவர் தன்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.
- சில நேரங்களில் யாவரும் தோல்வியடைவார்கள் அல்லது தவறு செய்வார்கள் என்பதை தலைவர்கள் ஞாபகப்படுத்துவது அவசியம். எனவே அவர்கள் முன்கூட்டியே இப்படிப்பட்ட சூழ்நிலையில் என்ன செய்யவேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும். தலைவர்கள் தவறுக்கு நேராக தங்களுடைய முதுகை ஒருபோதும் காட்டக்கூடாது. ஆனால் எது தவறாக சென்றிருக்கிறது என்று கண்டுபிடித்து ஏன் என்றும் கண்டுபிடித்து தவறிலிருந்து அந்த நபர் கற்றுக் கொள்ளும்படியாக உதவி செய்ய வேண்டும். தலைவர் அந்த நபருடைய

நம்பிக்கையை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு உதவி செய்ய வேண்டும் (அவரைக் கீழாக இழுத்து அவருடைய மூக்கை அதிலே தேய்ப்பதற்கு பதிலாக). தோல்விகள் தவறுகள் ஒரு நபரை கற்றுக் கொள்ள கூடியவராக மாற்றி தலைவருடைய உதவி / திருத்துதலுக்கு திறந்த நிலையிலே வைக்கும். தவறுதலுக்கான முன்னான ஆயத்தம் (எப்போதெல்லாம் முடியுமோ) உதவி செய்கின்றதாக இருக்கும். ஏனெனில் தலைவர்கள் மீண்டும் அந்த தவறை செய்யாதபடிக்கு தடுக்கப்படுவார்கள். ஒரு நபர் திரும்ப திரும்ப தவறு செய்யும் போது அவர் தவறான வேலையை செய்கிறார். அல்லது தலைமைத்துவம் விவரிக்கப்பட்ட பணியை தகுதியான முறையில் பகிர்ந்து கொள்ளாததினால் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். (இது சரி செய்யப்பட வேண்டும்).

- தலைவர்கள்பணிப்பகர்வு செய்யப்பட்ட வேலையானது செய்து முடிக்கப்பட்டதா என்று அறிந்து கொள்ளுதல் அவசியம். சில மறுஆய்வு செயல்பாடுகள் ஏற்படுத்தப்படாத பட்சத்தில் இது அவர்களுக்குத் தெரியாது. பணிப்பகர்வு செய்யப்பட்டவர் முதலாவது வேலையை ஆரம்பித்தவராய் இருந்தால் பணியிலே அவர்கள் என்ன செய்து முடித்திருக்கிறார் என்பதைக் குறித்து அறிக்கை சமர்பிக்கும்படியாக கேட்கலாம் (அறிக்கை சமர்பிக்கும் காலத்தில் தலைவர்களும் சில கேள்விகளுக்கு பதில் அளிக்கலாம், கடினமான சூழ்நிலையை மேற்கொள்வதற்கு உதவி செய்யலாம் / உற்சாகப்படுத்தலாம்.) பணிப்பகர்வு செய்யப்பட்ட நபர் தலைமைத்துவத்துடன் தொடர்பு கொள்ளாமல் இருப்பாரானால் தலைமைத்துவம் அந்த நபரிடம் செல்ல வேண்டும். தலைவர்கள் தங்களுயை பணியை பகிர்ந்து கொண்டாலும் அவர்கள் இன்னமும் தேவனுக்கு முன்பாக பொறுப்புள்ளவர்களாக கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

- பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்ட நபர்களால் செய்யப்படும் எந்த ஒரு நல்லத் தீர்மானத்திற்கும் தலைமைத்துவம் ஆதரவாக துணை நிற்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் (விசேஷமாக அந்த நபர் சமிபத்தில் தான் பொறுப்பில் நியமிக்கப்பட்டிருந்தால்) ஏனெனில் அவர்கள் தான் எப்பொழுதும் எந்த மாறுதலுக்கும் எதிர்த்து குறை கூறுகிறவர்களாக இருப்பார்கள் (விசேஷமாக புதிதாக நியமிக்கப்பட்ட தலைமைத்துவத்தினால் கொண்டு வரப்பட்டால்).

- மறுஆய்வு செயல்பாடுகள் சாத்தானின் தாக்குதலில் இருந்து தடை பண்ணி பாதுகாக்க உதவும். ஏனெனில் அதிக அனுபவம் வாய்ந்த தலைவர் பணி பகரப்பட்ட நபரிடம் எந்த வழியாக சத்துரு பகிர்ந்து கொள்ளப்பட்ட பணியில் உள்ளே நுழைவான் என்பதை காட்ட முடியும் (விசேஷமாக கவனிக்கத்தக்க பொறுப்புள்ள பதவிகள்). அந்த நபருக்கு ஆரம்பத்திலே அதிகமான உதவிகளை செய்வது புத்தியான காரியம். (அந்த நபரோடு இணைந்து வேலையும் செய்யலாம்). பின்பாக அந்த நபருக்கு சுயாதீனத்தை அதிகரித்துக் கொடுப்பது முக்கியமானது. அதாவது படிப்படியாக அந்த வேலையை அவர்களாகவே செய்யட்டும். மறுஆய்வு, பின்னறித்தகவல் மட்டும் பெறப்படட்டும். வேலைகளை செய்வதற்கு நல்ல ஜனங்களை தேர்ந்தெடுப்பதற்கு எந்த குறிப்பும் இல்லை. தலைவர்கள் முயற்சி செய்து செய்வதற்குரிய சுயாதீனத்தை கொடுக்க மறுத்தால். தலைவர்கள் அந்த நபர் வேலையை செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கும் பொழுது தொடர்ந்து குறுக்கிடுதல், தலையிடுதல், அந்த நபர் அந்த வேலையை செய்ய தகுதியானவர் என்பதை ஒருபோதும் அறிய முடியாது.

- பணிப்பகர்வு செய்யப்பட்ட பின் தலைவர்கள் கட்டுப்படுத்தலை எழுப்பிக் கொள்ள வேண்டும். அவைகள் எதிர்பார்க்கிறதான கடினமான பிரச்சனைகளை கண்டுபிடிப்பதற்கும் அவைகள் அதிகமான சேதத்தை உண்டாக்குவதற்கு முன்பதாக இடைபடுவதற்கும் தகுதியுள்ளவர்களாக்கும். இதை செய்வதற்கு ஒழுங்கான அறிக்கை சமர்பிக்கும் பகுதிகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் சிறந்த வழியாகும்.

- இப்படிப்பட்ட மறுஆய்வு தலைமைத்துவம் அவர்கள் மேல்நம்பிக்கை இல்லை என்பதை அர்த்தப்படுத்தவில்லை. ஆனால் இது உதவி செய்வதற்கான முறையும், தேவனுக்காகவும் அந்த குழுவிற்காகவும் சிறப்பானதை செய்ய அவர்களை உற்சாகப்படுத்துவதற்காக என்பதை பணிப்பகரப்பட்டவர் அறிந்து கொள்ளுவதற்கு தலைவர்கள் உறுதி செய்து கொள்ளுதல் அவசியம். தலைவர்கள் அவர்களால் நடத்தப்படுகிறவர்களுக்கு சிறப்பானதை மாத்திரம் விரும்புகிறார்கள் என்பதை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.
- மறுஆய்வு முன்னேற்றத்தை அங்கிகரித்து உறுதி செய்து கொள்ளுவதற்கும் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட கஷ்டங்கள் மதிப்பிடப் படுவதற்கும் மற்றும் தலைவர்கள் எப்படி இலக்கு தொடர்ந்து நிறைவேற்றப்படுகின்றது என்பதை காண உதவி செய்யும்.

பணிப்பகர்வின் தத்துவங்கள்

சபையானது தன்னுடைய செயல்பாட்டில் அநேக உயர்வு தாழ்வுகளை தவிர்ப்பதற்கான ஒரே வழி அதனுடைய வேலைப் பளுவை எவ்வளவு தூரம் அகலமான அடித்தளம் உண்டாக விரித்து விடவேண்டும். (ஒத்துபோய் தேவனுடைய சித்தத்தை விட்டுவிடாமல்) இதன் அர்த்தம் என்னவென்றால் தலைவர்கள் இரண்டாவது நிலை தலைமைத்துவ ஊழியத்தை ஏற்படுத்தி எந்த ஒரு சபையும் ஆக்கப்பூர்வமாய் செயலாற்றுவதற்கு தகுதியான தேவையான முழுமையான வரங்கள் விடுவிக்கப்பட வேண்டும். எந்த ஒரு தலைவரும் வித்தியாசப்படுகிற சபையின் ஆக்கப்பூர்வத் தன்மையை தவிர்க்க நம்பிக்கை கொள்ள முடியாது (அதாவது அடிக்கடி உயர்வு தாழ்வுகள் அவர்களுடைய மனநிலைமை / வேலைப் பளுவை பொறுத்து ஏற்படும்). சபை ஆக்கப்பூர்வமாக செயலாற்றுவதற்கும், வளர்வதற்கும் தேவையான முழுமையான ஊழியங்களை உள்ளடக்கி சபையானது செயல்படுவதற்கு தகுதியான அழைக்கப்பட்ட அபிஷேகிக்கப்பட்ட திறமையான நபர்களிடம் பணிகளை பகிர்ந்து கொண்ட அகலமான அடித்தளம் கொண்ட தலைவர்கள் மூலமாய் ஏற்படுகிறது. ஒரே விதமான (அல்லது சில) ஊழியத்தில் கவனம் செலுத்துதல் (ஏனெனில் இந்தப் பகுதியிலெல்லாம் சபை / ஸ்தாபனத்தில் தலைமைத்துவம் வரம் பெற்றதாய் இருக்கிறது). மற்ற எல்லா ஊழியப் பகுதியின் செலவீனத்திலே செய்தல் சபையானது அதனுடைய அங்கத்தினருடைய தேவைகளை சந்திப்பதற்கு தவறி விட காரணமாகும். எனவே இது முற்றிலுமான ஒரு தோல்வியாகும் (பொதுவாக இப்படிப்பட்ட சபை சிறியதாகவே இருந்து விடும் / ஆக்கப்பூர்வமற்றதாக ஏன் இப்படி என்று விளக்குவதற்கு சாக்குபோக்குகளை தேடிக் கொண்டு இருக்கிறதாகவும் இருக்கும்).

பணிப்பகர்வு தலைமைத்துவத்தில் ஆரம்பிக்கிறது. இது தலைவர் தன்னுடைய பணிகளை பொறுப்புகளை மற்ற ஜனங்களோடு பகிர்ந்து கொள்ளும் போது ஏற்படுகிறது. தலைவர் இதைச் செய்ய தவறும்போது அவர் தன்னுடைய வேலை மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சியின் சுருக்கத்தை ஏற்படுத்துகிறார். பணிப்பகர்வு செய்யும் தலைவர்கள் தங்கள் பொறுப்புகளை பகிர்ந்துக் கொண்ட நபர்களை உயர்த்துவதற்கு ஆவிக்குரிய நிலைமையில் வளர்வது அவசியம். அவர்கள் தங்களுடைய சொந்த சின்ன சாம்ராஜ்யத்திற்காக உழைக்காமல் தேவனுடைய இராஜ்ஜியத்திற்காக உழைக்கின்றபடியினால் வல்லமையிலும் ஆக்கப்பூர்வமான தன்மையிலும், தங்களை விட தங்களால் நடத்தப் படுகின்றவர்கள் அதிகமாக முன்னேற தலைவர்கள் விருப்பமுடையவர்களாய் அனுமதிக்க வேண்டும். பணிப்பகர்வு செய்யாத தலைவர்கள் அவர்கள் வளருவதற்கு தவறி விடுகிறார்கள். ஏனெனில் அதை செய்வதற்கு தேவையில்லாமல் போகிறது. (அதாவது காரியங்கள் தங்கள் சொந்த விதமாக நடைபெறுகின்ற படியினால்) எப்படியிருந்தாலும் அவர்கள் தனியாக தேவனுக்காக அதிகமாக செய்ய முடியாது. இப்படிப்பட்ட தலைவர்கள் பார்க்க விரும்புகிற சபை / ஸ்தாபன வளர்ச்சியை மட்டுப்படுத்தும் முக்கிய காரணியாக இருக்கிறார்கள். (இது ஏனென்றால் இந்த தலைவர்கள் தங்களுடைய கொள்ளளவிலே செயல்படுகிறார்கள் மற்றும் மற்ற ஜனங்கள் வந்து சபை / ஸ்தாபன கொள்ளளவை பெரிதாக்குவதற்கு அனுமதிக்க மறுக்கிறார்கள்). தனிப்பட்டவர்கள் போஷாக்கு

/ உற்சாகமூட்டுதல் / தலைமைத்துவ பயிற்சியளித்தல் ஆகியவற்றின் மூலம் தேவனுக்குள் வளரும்போது சபையிலே / ஸ்தாபனத்திலே எதிர்கால வளர்ச்சி ஏற்படும். அது அந்த நபர் வரம் பெற்ற பகுதிகளில் எல்லாம் முழு சரீரமும் ஆசிர்வதிக்கப்பட்டு தகுதியடைந்து வளர்வதற்கு உதவி செய்கின்றது.

பணிப்பகர்வு எதிர்காலத்திற்காக செய்யப்படும் முதலிடாக காண வேண்டும். பணியை பணிப்பகர்வு செய்தவுடன் தலைவர்கள் தங்களுடைய முழு கவனத்தையும் தங்களை விரிவாக்கிக் கொள்வதிலும் பணியைப் பெற்றவர் வெற்றி பெறுவதற்கு தகுதியாகும் படி தன்னுடைய நேரத்தை கொடுக்கவும் மற்றும் தாங்களாகவே வேலைகளை செய்வதற்கு சுலபமாகவும் இருக்கும். எப்படியாயினும் நீண்ட கால திட்டத்தில் சரிபார்த்து / மறுஆய்வு செய்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு எடுத்து செல்லப்பட்டு அதன் விளைவு அந்த நபர் அதிக மேற்பார்வை இல்லாமல் வேலையை செய்ய முடியும் என்பது தலைவர் மற்றவர்களை விடுவித்து ஒரு வேளை முக்கியமான வேலையை விடுவிப்பார். இந்த முதலீடு சில நேரங்களில் சில நபரிடத்தில் செய்யப்படலாம். (இது அதைரியப்படுத்தவும், வெறுப்பை ஏற்படுத்துவும் செய்யலாம்). ஆனால் பணிப்பகர்வு ஒருபோதும் இந்தக் காரணத்திற்காக தடைபட்டு போகக்கூடாது. (காலப்போக்கில் பணிப்பகர்வு என்னும் கலை சரியாக பயிற்சிக்கப்படும் வரைக்கும் இது கனிகளை விளைவிக்கும்).

பணிகளை பணிபகரப்பட்ட நபர் அதை சுமக்க முடியாமல் இருக்கும்போது பணியை / அதிகாரத்தை ஒருபோதும் அவரிடத்தில் இருந்து எடுத்துவீடாதிர்கள். குறைந்த தாலந்துள்ள நபரை அவருடைய தகுதிக்கு அதிகமாக இழுப்பது மோசமானதாகும். அதே போல் தாலந்துள்ள நபரை நசுக்க முயற்சி செய்வது மோசமானதாகும். தலைவர்கள் குறிக்கப்பட்ட அளவு / திறமைகள் / பெலன்கள் ஆகியவற்றை பகுத்தறியும் திறமை பெற்றவர்களாய் இருப்பது அவசியம்.

மற்றவர்களிடம் ஏற்கனவே பகிர்ந்தளிக்கப்பட்ட பணியை ஒருபோதும் மற்ற நபருக்கு கொடுக்கக்கூடாது. (ஒருவேளை அவர்களுடைய வேலை விபரப்பட்டியலில்) அப்படியே அது தேவையானால், யாருக்கு முதலாவது அந்த வேலையானது கொடுக்கப்பட்டதோ அவரை அவருடைய அனுமதியுடனும், ஆதரவுடனும் இதை செய்வதற்கு உறுதி செய்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அந்த நபருடைய நம்பிக்கை / பதவி கடுமையான பாதிப்பிற்குள்ளாகும்.

எப்போது அதிகாரம் அல்லது பணி மற்றொரு நபருக்கு பகிர்ந்தளிக்கப்படும்பொழுது அந்த நபர் ஆக்கப்பூர்வமாய் செயல்படுவதற்கு தேவையான பயிற்சியை கொடுப்பது அவசியம். எந்த ஒரு தலைவரும் தகுதியான பயிற்சி (எப்பொழுது தேவையோ) கொடுக்காமல், ஒரு நபர் உயர்ந்த அளவு செயல்பாட்டை செய்து முடிக்கும்படியாக எதிர்பார்க்க முடியாது. எப்படியாயினும் ஒருமுறை அந்த நபர் தகுதியாக தகுதிபடுத்த / பயிற்சிக்கப்பட்ட பின் தலைவர்கள் நல்ல ஒரு செயல்பாட்டை பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்ட நபரிடம் இருந்து எதிர்பார்க்கலாம்.

நீங்கள் அடைய விரும்புகிற முடிவுகளைப் பொறுத்து பணிப்பகர்வு செய்யுங்கள். அந்த விளைவுகளை அடையும்படி முறைமையியலை உபயோகிக்கும்படி அந்த நபரை வற்புறுத்தக் கூடாது. பொதுவாக பணிப்பகர்வு செய்யப்பட்டவர் தலைவர் செய்யும் விதத்திலிருந்து சற்று வித்தியாசமான ரீதியில் காரியங்களை செய்யக்கூடும். ஆனால் முடிவிலே அதே விளைவை அவர்களும் அடைவார்கள். முடிவு தான் காரியங்களை தேவனுடைய இராஜ்ஜியத்தில் நியாயப்படுத்த முடியாது என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

பணிப்பகர்வு செய்ய முயற்சிக்கிற நபர் அதை செய்வதற்கு தேவையான அதிகாரத்தை உடையவராய் இருக்கிறார் என்பதை தெளிவாக அறிய வேண்டும். இதை செய்வதற்கு குழுவினுடைய ஸ்தாபன அதிகார அமைப்பு முறையை குழுவிலுள்ள எல்லா அங்கத்தினரும் அறிய வேண்டும். அதிலே அந்த அதிகார அமைப்பு முறையிலே தாங்கள் யாருக்கு பொறுப்பானவர்கள் என்பதையும் அறிய வேண்டும்.

தலைவர்கள் எப்பொழுதும் தங்களுடைய பொறுப்புகளை பணிப்பகர்வு செய்வதற்கான முறையான காரணத்தை ஜனங்களிடம் தெரியப்படுத்த வேண்டும். இதைச் செய்யவில்லை என்றால் மற்றொரு நிறுவனம் / பாரம்பரியம் அவர்களுடைய நம்பிக்கையின் அடிப்படையில் ஆரம்பித்தல் என்னும் ஆபத்து உண்டு.

எப்பொழுது பணியானது தேவையான பகிர்மானத்துடன், நம்பிக்கையுடன் சரியான அளவு அதிகாரத்தோடு பணிப்பகர்வு செய்து கொள்ளப்படுகிறதோ, அப்பொழுது அந்த நபர் அந்தப்பணியை ஆக்கப்பூர்வமாக எடுத்துச் செல்ல தகுதியாகுவார். அதாவது வல்லமை அதிகாரம் ஆரம்பிப்பதற்கு மற்றும் எடுத்துச் செல்வதற்கு மற்றும் வெற்றிகரமாக பணி நிறைவேற்றி முடிப்பதற்கு தேவையானவற்றை கொடுக்க வேண்டும். தலைமைத்துவம் இப்பொழுதும் சில கட்டுப்பாடுகளை / வழி நடத்துதலை பயிற்சிக்க வேண்டும். ஆனால் அதிகாரிகளை இடையூறு செய்யக்கூடாது. அந்த நபர் தன்னிடம் பகிர்ந்தளிக்கப்பட்ட பணியை ஆக்கப்பூர்வமாய் நிறைவேற்றி முடிப்பதற்கு தேவையான முறைமையியலை / தேவனுடைய அபிஷேகத்தை தேட அனுமதிக்கப் படவேண்டும்.

முடிவாக தேவன் தான் அவருடைய சபையை செயல்படுத்துகிறார். அவர் தன்னுடைய ஜனங்களை ஆயத்தப்படுத்தி தலைமைத்துவத்தை எடுக்கச் செய்கிறார். மற்றும் பகிர்ந்தளிக்கப்பட தேவையான எந்த ஒரு பணியையும் எடுத்துச் செல்கிறார். (சபை ஸ்தாபனத்தினுடைய வேலை முடிக்கப்படாவிட்டால்). எனவே தலைவர்கள் ஒருபோதும் தேவனுடைய கனத்தை தங்களுக்காக எடுத்துக் கொள்ளக் கூடாது. சபைகள் / ஸ்தாபனங்கள் மனித தலைமைத்துவம் மாறும்போது அசைக்கப்படவோ, சிதறவோ ஒருபோதும் கூடாது. இயேசுக்கிறிஸ்து தான் சபையினுடைய பிரதான தலைவர் மற்றும் முடிவாக அதிகாரம் அவரிடத்தில் தான் இருக்கிறது என்பது நினைவு கூறப்படவேண்டும்.

சரியாக நிர்வகிக்கப்பட்ட பணிப்பகர்வு தங்களுடைய கவனத்தை குழுவினுடைய இலக்குகளை நிறைவேற்றுவதில் செலுத்த வேண்டும். தலைமைத்தின் வல்லமையை அதிகாரத்தை பராமரிப்பதற்கு கரிசனை உள்ளவர்களாய் இருப்பதற்கு பதிலாக வல்லவனைப் போல் நடிப்பது அல்லது ஆதிக்கம் செலுத்தும் தலைவர்கள் பணிப்பகர்விலே குறைவுள்ளவர்களாகவே இருப்பார்கள்.

எப்பொழுது பணிப்பகர்வு செய்யப்பட்டதோ அப்பொழுதெல்லாம் தலைமைத்துவம் அந்த வேலையை அந்த ஜனங்கள் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும். தொடர்ந்தேர்ச்சியாக இடையூறு செய்யக் கூடாது. அந்த நபர் செயல்படுவதற்கு மூச்சுவிடுவதற்கு இடம் கொடுக்க வேண்டும். (தவறு செய்த போதிலும் கூட). பணிப்பகர்வு செய்யப்பட்ட நபரிடம் தலைமைத்துவம் சில வழிகாட்டுதலை கொடுக்க வேண்டும். சில கட்டுப்பாடுகளை பயிற்சிக்க வேண்டும். ஆனால் அந்த நபருக்காக வேலை செய்ய ஒருபோதும் முயற்சிக்கக் கூடாது. (ஒருவேளை அந்த நபர் பயிற்சியில் இருந்தால்)

பணிப்பகர்வு கொள்ளப்பட்ட நபர் தங்களுடைய தலைவர்களைப் போல ஒத்த மனது உடையவர்களாக இருக்க வேண்டும். அதாவது தலைவர்களுடைய அடிப்படை இலக்குகள் மற்றும் நோக்கங்களை ஏற்றுக் கொள்ளுகிறவராய் இருக்க வேண்டும். எந்த ஒரு தேவனுடைய மனிதனைப் போல பரிசுத்தமானவர்களாய், நீதியானவர்களாய் அவர்கள் தேவனுக்காக எதையெல்லாம் செய்கின்றார்களோ அவற்றில் தங்களை நூறு சதவீதம் கொடுக்க விரும்பம் உடையவர்களாய் இருக்க வேண்டும். தங்களுடைய தலைவர்களுக்கு உண்மையுள்ளவர்களாய் விசுவாசமுடையவர்களாய் இருக்க வேண்டும்.

சில நேரங்களில் அந்த நபர் செய்ய தகுதியில்லாதவர் என்று உணர்கின்றதான வேளையில் தலைவர்கள் பணியை பகிர்ந்து கொள்வது மூலமாய் அந்த நபரின் மேல் தங்களுக்கு இருக்கும் நம்பிக்கையையும், உறுதியையும் வெளிப்படுத்துவது அவசியம். (அதாவது அவர்கள் தங்களில் தானே நம்பிக்கையில்லாமல் இருப்பார்கள்). அந்த நேரங்களில் இப்படிப்பட்ட தீர்மானங்களை உண்மையான அடையாளம் இல்லாவிட்டாலும் எடுத்து அந்த நபர் வேலையை செய்ய வைக்க வேண்டும். அதாவது அவர்கள் தேவனில் சரியானது தான் என்று அறிய வேண்டும். மற்றும் அந்த நபருடைய வெளிப்படுத்தப்படாத திறமையை அறிய வேண்டும்.

எந்த ஒரு நபரும் குறிப்பிட்ட பகுதியிலே சுயாதீனமாய் ஊழியம் செய்வதற்கு அனுமதிக்கப் படுவதில்லை. அந்த நபர் அந்த பகுதியிலே ஏற்கனவே ஊழியம் செய்தால் நிறுத்துக அல்லது போதுமான வசதிகளை செய்து கொடுங்கள்.

தலைவர் இல்லாத நேரம், பகிர்ந்தளிக்கப்பட்ட வேலை ஞானத்தோடும், ஆக்கப்பூர்வ தன்மையோடும் எப்படி அந்த தலைவரால் எடுத்து செல்லப்படுகிறது என்பதற்கான சிறந்த அடையாள காட்டியாகும்.

தகுதி வாய்ந்த தலைவரிடம் தலைமைத்துவ பொறுப்புகளை தகுதிகாணும் முறையில் தற்காலிமாக பகிர்ந்து கொள்ளுதல் அந்த நபர் தலைமைத்துவத்திற்கு தகுதியானவரா என்பதை மதிப்பீடு செய்வதற்கு மிகச் சிறந்த வழியாகும். தலைமைத்துவம் அந்த நபர் ஆயத்தம் என்பதை உணர்ந்த பின்பு தான் இதைச் செய்ய வேண்டும். (சில ஜனங்கள் ஆழத்திலே தூக்கி எறியப்படும் போது தான் நீந்துவார்கள் மற்றவர்கள் முழ்குவார்கள்). எந்த ஒரு தலைமைத்துவமும் தங்களுடைய ஜனங்களை சூழ்நிலையை உருவாக்கி கொடுப்பது அவசியம். தலைவர் தொடர்ந்தேர்ச்சியாக வற்புறுத்துகிற சூழ்நிலைகள் எல்லாம் அவரே எடுத்துக் கொள்வாரானால் அவனுடைய ஜனங்கள் தற்போதைய அனுபவத்திற்கு மேலாக விசுவாசத்திலும், அதிகாரத்திலும் வளர்ச்சியடையவும் / விரிவடையவும் மாட்டார்கள். உண்மையிலே விசுவாசமும், அதிகாரமும் பயிற்சி செய்யும் போது தான் வளர்ச்சியடையும். அநேக ஜனங்கள் அநேக வித்தியாசமான காரியங்களுக்கு செல்லாத பட்சத்தில் தங்களுடைய ஊழியம் என்ன என்பதை அறிந்துக் கொள்ள மாட்டார்கள் என்பதை நினைவு கூறுக. எப்பொழுது ஒரு நபர் ஊழியத்தில் தன்னுடைய இடத்தை கண்டுபிடிக்கிறாரோ அப்பொழுது தலைவர்கள் அவர்கள் அதிலே நிலைத்திருக்கும்படியாக உற்சாகப்படுத்த வேண்டும். தேவன் வேறு ஏதாவது வித்தியாசமான ஊழியத்திற்கு அவர்களை நடத்தும் வரைக்கும்.

தலைவர்கள் பொறுப்புகளை பகிர்ந்து கொண்டவர்களை உற்சாகப்படுத்தி உறுதி செய்ய வேண்டும். (எப்பொழுதெல்லாம் முடியுமோ) அந்த வேலையில் அவைகள் விசுவாசத்திலே செய்யப்படவேண்டும். சரியான நேரத்தல் கொடுக்கப்படும் ஊக்கப்படுத்துதல் அந்த நபர் தேவையான எந்த ஒரு சரி செய்தலும் பெற்றுக் கொள்வதற்கு எளிதாக மாற்றும். ஊக்குவித்தல் பொதுவாக அதிக ஆக்கப்பூர்வமான சேவைக்கு நடத்தி செல்லும். பெருமைக்கு அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

பகிர்ந்தளிக்கப்பட்டவர் சில தவறுகளை செய்வதற்கு சுயாதீனமாக்கப்படுவது அவசியம். (அவ்வாறு செய்யமாலிருக்க அவர்களுக்கு உதவி செய்வதற்கு மாத்திரம் தலைமைத்துவம் முயற்சி செய்ய வேண்டும்). விசேஷமாக அந்த நபர் முதலாவதாக வேலையை ஆரம்பிக்கும் பொழுது தலைமைத்துவம் அந்த நபர் வெற்றியடைவதற்கு ஒருபோதும் அதிக அழுத்தத்தை கொடுக்கக் கூடாது. (ஏனெனில் அவர்கள் இன்னும் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்). எப்படியாயினும் தலைமைத்துவம் ஒழுங்காக தங்களுடைய பணிப்பகர்வு செய்யப்பட்ட நபரை மறுஆய்வு செய்ய வேண்டும். விசேஷமாக அந்த வேலைக்கு புதிதானவர்களை ஜனங்கள் தங்களுடைய தவறிலிருந்து கற்றுக் கொள்கிறார்கள். விசேஷமாக யாராவது ஒருவர் எங்கே அவர்கள் தவறுதலாக சென்றார்கள் மற்றும் எப்படி முன்னேற முடியும் என்று சொல்லும் போது (அநேக ஜனங்கள் அன்போடு உதவி செய்யும் போது சரி செய்தலுக்கு சீக்கிரமாய் பதிலளிக்கிறார்கள்).

ஒரு நபரிடம் தலைமைத்துவம் ஒரு பொறுப்பை பணிப்பகர்வு செய்யும்போது காரியங்கள் தவறுதலாக செல்லும்போது தலைமைத்துவம் அந்த நபரோடு ஒட்டிக்கொண்டு எந்த ஒரு கடினத்தையும் காணவேண்டும். உண்மையிலே தங்களுடைய தலைவருடைய ஆதரவான எந்த செய்கையையும் உண்மையாக உறுதிசெய்து கொண்டபின் அந்தப் பணியை ஆக்கப்பூர்வமாக நிறைவேற்றி முடிப்பது தேவை என்று உணருவார்கள். வேலை விபரப்படி அந்த நபர் செயல்பட்டு இருந்தால் முடிவுகள் எவ்வாறு இருந்தாலும் பரவாயில்லை. (அவர்களுடைய பொறுப்பின் பகுதி தெளிவாக விளக்கப்பட்டுள்ளது எடுத்துக் கொள்ளப்படவேண்டும் - எழுத்துவடிவில் - அது எவ்வாறு இருக்க வேண்டுமோ அவ்வாறே, ஆகவே எந்த ஒரு தவறான புரிந்துக் கொள்ளுதலும் ஏற்படாது). எல்லாவற்றிற்கு பிறகும்

ஏதாவது தவறுதலாக சென்றால், அந்த நபரைப் போலவே இது தலைவருடைய தவறுதலுமாகும். (அதாவது தவறான நபர் தவறான வேலையில் நியமிக்கப்பட்டிருக்கிறார். தகுதியில்லாத பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது, ஊக்கப்படுத்துதல் சரிசெய்தல் போதுமான அளவு இல்லை, மற்றும் பல).

எப்பொழுது பொறுப்புகளை பகிர்ந்து கொள்கிறோமோ அப்பொழுது நீங்கள் வேலையைக் குறித்து தெளிவாக விவரித்து / செய்தி தொடர்பு கொண்டு / தேவைப்படுகிறவைகளை விளக்கி / இலக்குகள் ஆகியவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும். அதாவது தெளிவான வேலை விபரப்பட்டியல் கொடுக்க வேண்டும். பகிர்ந்தளிக்கப்பட்ட பணியை ஆக்கப்பூர்வமாக செய்து முடிப்பதற்கு தேவையான எல்லாவற்றையும் அந்த நபருக்கு விவரிக்க வேண்டும். இது தவறான புரிந்து கொள்ளுதலை தவிர்ப்பதற்கு உதவி செய்யும். இல்லாவிட்டால் தவறாக புரிந்துக் கொள்ளுதல் குழுவினுடைய ஐக்கியத்திற்கும், ஆக்கப்பூர்வமான தன்மைக்கும் மிகப்பெரிய பாதிப்பை உண்டாக்கும். பொதுவிதியாக்குதல் பணிப்பகர்வு பயிற்சியை ஆக்கப்பூர்வமற்றதாக மாற்ற காரணமாகிவிடும். வேலையில் தேவைப்படுகிற எல்லாப் பகுதியிலும் அந்த நபர் தகுதியாக பயிற்சிக்கப் பட்டுள்ளாரா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். ஸதாபன அமைப்பிலே அவர்கள் எவ்வாறு பொறுந்தியுள்ளார்கள் என்பதை காட்ட வேண்டும். ஆரம்பிப்பதற்கு உதவி செய்ய வேண்டும். (விசேஷமாய் உங்களுடைய அந்த நபரின் மேலுள்ள நம்பிக்கையை விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டும். ஏனெனில் அவர்கள் தங்களுடைய திறமையில் மற்றும் தங்களில் நம்பமாட்டார்கள். எனவே இதை செய்வது அவசியம்).

ஆக்கப்பூர்வமான தலைவர் அந்த நபர் தேவனுக்காக என்ன செய்ய முடியும் என்பதுடன் ஆரம்பிக்க வேண்டுமென்று அறிவார்கள். நிறைவேற்றப்படாத வேலையின் தேவைகள் என்ன என்பதிலிருந்து ஆரம்பிப்பதற்கு பதிலாக. சரியான வேலைக்கு சரியான நபரை நியமித்துள்ளோமா என்பதை தலைவர்கள் உறுதி செய்து கொள்வது அவசியம்.

பணிப்பகர்ந்து கொள்ளப்பட்ட நபர் தங்களுடைய தலைமைத்துவத்திற்கு பொறுப்புள்ளவர்கள் / கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்கள் என்பதை உணர்ந்துள்ளார்களா என்பதை தலைமைத்துவம் உறுதி செய்து கொள்ளுதல் அவசியம். உண்மையிலே பணிப்பகர்வு கணக்கொப்புவித்தலோடு கட்டப்பட வேண்டும். ஏனெனில் தலைவர்கள் தான் அந்த வேலை செய்து முடிக்கப்பட்டதா என்பதற்கு முடிவான பொறுப்புள்ளவர்கள். பணிப்பகர்வு என்பது பொறுப்புகளை துறத்தலாகாது. இது பளுவை பகிர்ந்துக் கொள்ளுதல் என்பதை விட அதிக அர்த்தம் கொண்டது. எனவே இது தலைவர்களை அதிகமாக செய்ய தகுதியாக்குகிறது. ஒரு வேலை அந்த நபரினால் செய்யப்படாவிட்டால் தலைவர்கள் அதிகமாக செயலாற்ற வேண்டியது இருக்கும். தலைவரால் பணிப்பகரப்பட்ட நபரால் ஒரு வேலை செய்து முடிக்கப்படவில்லையென்றால் முடிவாக இது தலைமைத்துவத்தினுடைய தவறு. ஒரு ஜனாதிபதி இவ்வாறு கூறியிருக்கிறார், பொறுப்பை ஒப்படைப்பது இங்கே நின்று விடுகிறது. அதாவது தலைமைத்துவத்துடன் ஒரு தலைவர் தன்னுடைய பணியை, பொறுப்பை பகிர்ந்து கொள்ளலாம். ஆனால் அவரை தங்களுக்கு கீழாக இருக்கிறவர்களுக்காக, தனக்கு மேலாக இருக்கிறவர்களுக்கு முடிவான கணக்கு ஒப்புவிக்கிறவர்களாக இருக்கிறார்கள். எந்த ஒரு வேலையும் பணிப்பகர்வு செய்யப்படும்பொழுது கவனித்து பார்த்தலும், கணக்கு ஒப்புவித்தலில் எல்லை ஏற்படுத்துவதும் மிக முக்கியமானது. பொதுவாக, ஜனங்கள் தாங்கள் எதற்கு என்னதிற்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்களோ, அதை மாத்திரம் செய்வார்கள். எனவே தலைவர்கள் பணி பகிர்ந்து கொள்ளப்பட்ட நபரை தொடர்ந்து சரிசெய்வது அவசியம். மற்றும் தேவையான சரிசெய்தல் / உதவி செய்தல் / உற்சாகப்படுத்துதல் / கரிசனை / வழிகாட்டுதல் கொடுக்கப்பட வேண்டும். துரதிஷ்டவசமாக ஜனங்கள் எதிர்பார்க்கிறதை செய்ய மாட்டார்கள். ஆய்வு செய்கின்றவற்றை செய்வார்கள்.

பணியை பகிர்ந்து கொள்ளும்போது தலைவர்கள் அந்த நபருடைய குணாதிசயத்தை மற்றும் தனிப்பட்ட விதத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு சரியான விதத்தில் உற்சாகப்படுத்தவும் / சரி செய்யவும் / உறுதி செய்யவும் வேண்டியது முக்கியமானதாகும். குறிப்பிட்ட நபர்கள் மென்மையான தன்மையுடன் வேலை செய்வார்கள். ஆனால் மற்றவர்களுக்கோ அவர்களில் இருந்து சிறந்தவற்றை வெளிகொண்டு வர அதிக உறுதிப்பாடு தேவைப்படுகிறது.

அநேக கிறிஸ்தவர்கள் தங்களுடைய திறமைகளைக் குறித்து மிக விவரிக்கப்பட்ட எண்ணத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். அந்த நபரின் வரங்கள் / திறமைகள் எவ்வளவு என்பதை நீங்கள் கண்ட அளவுக்கு மேலாக ஒருபோதும் அந்த நபர் எடுப்பதற்கு அனுமதிக்காதிருங்கள். அவர்கள் என்ன செய்ய முடியும் என்பதற்கும், அவர்கள் என்ன செய்ய நினைக்கிறார்கள் என்பதற்கும் இடையே வித்தியாசம் உண்டு. சில உதவிக்கரமான கேள்விகள் உங்களுக்குள்ளாகவே நீங்கள் கேட்டுக் கொண்டு பகிர்ந்தளிக்கப்பட்ட வேலையை செய்வதற்கு அந்த நபர் தகுதியானவரா என்பதை உறுதி செய்துக் கொள்ளுங்கள். இந்த நபர் போதுமான அளவு பயிற்சிக்கப்பட்டு அந்த வேலையை புரிந்துக்கொள்ள தகுதியானவரா, உண்மையிலே அந்த நபர் அந்த வேலையை விரும்புகிறாரா (அநேக ஜனங்கள் அந்த வேலையை ஏற்றுக் கொள்ளாததினால் வரும் விளைவுகளுக்கு பயந்து ஏற்றுக் கொள்ளுகிறார்கள். அந்த நபர் அந்த வேலையில் இருப்பதற்கு குழுவில் உள்ள மற்றவர்கள் / தலைமைத்துவம் / சபையார் ஏற்றுக் கொள்கிறார்களா?

ஸ்தல சபையில் பணிப்பகர்வு

அநேக சபைகள் கால்பந்தாட்ட குழுவைப் போல செயல்படுகிறார்கள் - பதினொறு களைத்துப் போன அலுவலக அங்கத்தினர்கள், விளையாட்டு மைதானத்திலே பெருங்காட்சி மேடை குதூகலப்படுத்துகிறவரால் நிரம்பிருக்கிறது. ஆனால் பயிற்சி பெறாத சபை அங்கத்தினர்கள்.

ஸ்தல சபையில் உள்ள முக்கியமாக தன்னார்வ / கூலியில்லாத வேலையில் இருக்கின்ற படியினால் அநேக பகுதி தலைவர்கள் தேவையான செயல்பாடுகளை / செயல்களை எடுத்துச் செல்ல வேண்டியதிருக்கிறது. இந்தத் தலைவர்கள் ஆக்கப்பூர்வமான செயல்பாடு நடைபெறுவதற்கு தங்களுடைய அதிகாரத்தை பணிப்பகர்வு செய்ய வேண்டும். எனவே அவர்கள் தாங்கள் நடத்துகிறவர்களிடத்தில் தங்களுடைய செயல்பாடுகளில் சிலவற்றை பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்த விதத்தில் சபையினுடைய தேவையான அனைத்து பணிகளும் / செயல்பாடுகளும் பரப்பி விரிக்கப்பட்டு பாரம் / அழுத்தம் அநேக ஜனங்களிடத்திலே பகிர்ந்து கொள்ளப்படும். ஒரு சிலர் மாத்திரம் அதை செய்வதற்கு பதிலாக.

கிருபை, அபிஷேகம் - இரண்டும் தேவை

தேவனுடைய கிருபை வழியைத் திறந்து தேவனுடைய அபிஷேகம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கான திறமையைக் கொடுக்கிறது.

இந்தப் பாடத்தில் தேவனுடைய கிருபையும் அபிஷேகமும் விசுவாசிகளாகிய நமக்கு என்ன அர்த்தத்தை கொடுக்கிறது என்று படிப்போம். இங்கே இந்த கருத்துக்களைக் குறித்தான நிறைவான படிப்பு அல்ல. ஆனால் தலைவர்களுக்கு இந்த கருத்தைக் குறித்ததான உள்பார்வையையும், முக்கியத்துவத்தையும் கொடுக்கிறோம். தேவனுடைய கிருபையை அனுபவித்து அவருடைய அபிஷேகத்தை அறிந்து அதில் செயல்படாவிட்டால் நாம் தேவனுக்காக எதையும் செய்ய முடியாது. உண்மையிலே கிருபையும், அபிஷேகமும் கையோடு கைகோர்த்துச் செல்லும். ஏனெனில் இந்த இரண்டு காரியங்களும் தேவ ஆதாரத்தில் உள்ளது. நம்முடைய முயற்சியினால் சிறிய பகுதியை செய்ய முடியும். இந்த இரண்டு கருத்துக்களும் எவ்வளவு தூரம் கிறிஸ்தவர்களாகிய நாம் குறிப்பாக கிறிஸ்தவ தலைவர்கள் தேவனை சார்ந்துள்ளார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது.

தேவனுடைய கிருபை என்றால் என்ன?

தேவனுடைய கிருபை என்பது சற்றேறக்குறைய முழுவதுமாக புதிய ஏற்பாட்டிலே இந்த வார்த்தை கிருபை என்பது கிரேக்க வார்த்தையான சரிஸ் என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. பொதுவான வார்த்தையிலே இந்த வார்த்தையின் அர்த்தம் சூழ்நிலையை இன்பத்தை, மகிழ்ச்சியை அல்லது தயவுள்ள மதிப்பிற்கு காரணத்தை அளித்து இந்தக் கனிவான செயலைத் தொடர்ந்து நண்பத்துவ மனநிலையில் தயவுள்ள உணர்வு உருவாகுகிறது அல்லது நன்றியுள்ள உணர்ச்சி உருவாகுகிறது.

தேவனுடைய கிருபை என்பதின் அர்த்தம் இதைக் காட்டிலும் அதிகமானது. இது தேவனுடையது. இது தேவனால் அளிக்கப்படுகிறது. பிதாவாகிய தேவன் தம்முடைய இரக்கத்தினால் தயவை நம்முடைய வாழ்வில் அளிக்கிறார். நேர்மையற்றவருக்கு தேவன் உதவுகிறார், மன்னிக்க முடியாத நபருக்கு மன்னிப்பை கொடுக்கிறார். தேவனுடைய கிருபை தேவனுடைய வல்லமையின் செயல்பாட்டில் பார்க்கக்கூடிய வெளிப்பாடாகும். தேவன் இரக்கமுள்ளவர், தயவுள்ளவர், அன்புள்ளவர், நம்முடைய கதறுதலுக்கு பதலளிக்கிறார். நம்முடைய தகுதியின் அடிப்படையில் அல்ல. ஏனெனில் நம்முடைய நம்பிக்கை இழந்த நிலையின் தேவையை அங்கிகரித்து, அவருடைய அன்பு, அவருடைய வல்லமையை வெளிப்படச் செய்து நம்முடைய தேவையை சந்திக்கிறது. இது கிறிஸ்துவின் செலவிலே தேவனுடைய ஜசுவரியம். ஏனெனில் இது தேவனுடைய இலவச செயல் இயேசுவின் தியாகத்தின் அடிப்படையில் அமைந்தது. அன்பினால் ஆர்வம் ஊட்டப்பட்டு அவரை நம்புகிற யாவரையும் விடுவித்து நீதிமான்களாக்குகிறார்.

தேவனுடைய கிருபை பிதாவாகிய தேவனிடத்திலும், குமாரானாகிய இயேசுவினிடத்திலும் ஆதாரமாய் உள்ளது (ரோமர் 5:15; 2கொரிந்தியர் 1:12; கலாத்தியர் 1:3,6; 2தெசலோனிக்கேயர் 1:12). தேவனுடைய தயவைப் பெற மனிதனுடைய முயற்சிக்கும், தேவனோடு தனிப்பட்ட உறவு, மெய்யாகவே நிறுவப்பட்டு விரிவாக்கப் படுகிற வழிக்கும் வித்தியாசமுண்டு. இது நம்மிடத்தில் உள்ள எந்த ஒரு நம்பிக்கையையும் தள்ளி விடுகிறது. நம்முடைய சொந்தத்திலே நாம் பாவிகளாகவும், தேவனைப் பிரியப்படுத்த தகுதியற்றவர்களாகவும் இருக்கிறோம். நம்மை முழுவதுமாக தேவனுக்கு ஒப்படைக்கும் பொழுது அதாவது இயேசுகிறிஸ்துவின் உண்மையான நீதியுள்ள ஜனங்களாய் மாற நமக்கு உதவி செய்து தேவனுடைய அளவற்ற வல்லமையை அனுபவிக்க உதவி செய்கிறார் (1கொரிந்தியர் 15:10).

தேவனுடைய கிருபையின் அடையாளங்கள்

தேவனுடைய கிருபை:

- பாவம் சாத்தான் நியாயப்பிரமாணம் இவற்றின் அதிகாரத்திலிருந்து நம்மை விடுதலை செய்கிறார் (ரோமர் 6:1-14; எபேசியர் 2:1-5).
- நம்முடைய இரட்சிப்பிற்கான வழியை ஏற்படுத்திக் கொடுக்கிறது. ஏனெனில் தேவன் இயேசுவில் கிரியை செய்து நமக்கு மீட்பை, மன்னிப்பை கொண்டு

வந்தார் மற்றும் சிலுவையில் செலுத்திய தியாக பலியின் மூலம் புதுவாழ்க்கையை தகுதியில்லாத பாவிகளாக நாம் இருந்த போதிலும் கொடுத்தார் (ரோமர் 3:21-26; 5:15-21).

- இது எல்லாரிடத்திலும் சமமாய் காண்பிக்கப் படுகிறது (மத்தேயு 20:1-16).
- நாம் இரக்கமுள்ளவர்களாய் செயல்பட எதிர்பாக்கப்படுகிறது (மத்தேயு 18:21-35).
- எப்பொழுதெல்லாம் நாம் தேவனுக்கு பதிலளிக்கிறமோ அப்பொழுதெல்லாம் கிடைக்ககூடிய இடத்தில் இருக்கிறது (லூக்கா 15:11-32)
- நம்முடைய கிரியை, வாழ்க்கை முறை, சமயம், போராட்டம் சுய தியாகம் அல்லது நன்மை இவற்றை சார்ந்து இருப்பதில்லை (கலாத்தியர் 5:4; ரோமர் 11:5,6).
- தேவனிடத்தில் நம்பிக்கையுடன் வருவதற்கு அனுமதித்து, நம்முடைய தேவையின் நேரங்களிலெல்லாம் நமக்கு தேவையான உதவி கண்டு பிடிக்க முடியும் (எபிரெயர் 4:16).
- இது எப்பொழுதும் போதுமானது (2கொரிந்தியர் 12:9).
- இது நம்மிடத்தில் தொடங்குவது கிடையாது. தேவனிடத்தில் தொடங்கிய ஒன்று இது நாம் சம்பாதித்தது அல்ல. அல்லது தகுதியின் அடிப்படையில் ஆனதல்ல. இது இலவசமானது அன்பின் மூலமாய் தேவனால் நமக்கு கொடுக்கப்பட்டது (எபேசியர் 2:8-10).
- வெவ்வேறு வரங்களையும், தேவனுடைய அழைப்புகளையும் செயல்படுத்த நம்மை தகுதி உள்ளவர்களாக்குகிறது. (ரோமர் 12:6-8; எபேசியர் 4:7-13; 1 கொரிந்தியர் 12:7-11).

கிருபையும் ஈவும்

நாம் கிருபையினால் இரட்சிக்கப்பட்ட பொழுது தேவனுடைய கிருபைக்கும், அழைப்பிற்கும் தகுதி உள்ளவர்களானோம். உண்மையென்ன வென்றால் மனந்திரும்புதலின் போது தேவன் நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற விதை நம்மிடத்தில் ஊன்றப்பட்டு விட்டது. அதாவது நம்முடைய விசுவாசம் மற்றும் இரட்சிப்பிற்கான கிருபை நம்முடைய வாழ்விற்காக தேவனுடைய அழைப்பு என்னும் கருவிலே எழுதப்பட்டு விட்டது. அவர் பரிசுத்த ஆவியின் வரங்களை பகிர்ந்தளிக்கும் பொழுது தேவன் சமமாக நடத்துகிறார் (எபிரெயர் 2:4).

"நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியினாலே..." (ரோமர் 12:6).

"கிறிஸ்துவினுடைய ஈவின் அளவிற்குத் தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது" (எபேசியர் 4:7).

கிருபை என்ற வார்த்தையின் கிரேக்க வார்த்தை கரிஷ்மா. அதன் அர்த்தம் கிருபை 'மா' என்றால் காரியம். எனவே புதிய ஏற்பாட்டு வார்த்தையான ஈவின் உண்மையான அர்த்தம் கிருபையின் காரியம். மற்ற வார்த்தைகளில் ஆவிக்குரிய வரங்களைப் பற்றி பேசும்பொழுது தேவனுடைய கிருபையை நம்முடைய வாழ்க்கையில் வெளிகாட்டுதல் அல்லது வெளிப்படுத்துதல் ஆகியவற்றைக் குறித்து பேசுகிறது. கரிஷ்மாட்டா (கரிஷ்மாவின் பன்மை சொல்) கிறிஸ்துவின் முழு சரீரத்திற்கும் உரிய பரிசுத்த ஆவியானவருடைய வரங்கள் சரீரத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும் கிடைக்க கூடியதாய் இருக்கிறது. இந்த சரீர வரங்கள் குறிப்பிட்ட தனிப்பட்டவர்களின் வாழ்க்கை மூலமாய் வெளிப்படுத்தப்பட்டு, கிறிஸ்துவின் சரீரம் சீரான விதத்திலே கட்டி எழுப்ப படுவதற்கு கொடுக்கப்படுகிறது. இந்த வரங்கள் பரிசுத்த ஆவியானவர் மூலமாய் சரீரத்தின் தேவையைப் பொறுத்துக் கிடைக்கக்கூடிய விதத்தில் இருக்கிறது. அவர் விரும்புகிற விதமாய் பொதுவான நன்மைக்காக கொடுக்கப்படுகிறது (1கொரிந்தியர் 12:7, 11). அவர்கள் சமயத்திற்கேற்றாற் போல் செயல்படுத்தி தங்களுடைய அதிகாரத்தை அதோடு கூட சுமந்து செல்கிறார்கள். அதாவது வரங்களை வெளிப்படுத்த உபயோகப்படுத்தப் படும் நபர் செயல்படுத்துவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே உடனடியாக சிறது காலமேயுள்ள வழியில் செயல்படுகிறது.

“அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்” (1பேதுரு 4:10).

ஒவ்வொரு கிறிஸ்தவனும் பரிசுத்த ஆவியின் வரங்களுக்கு தங்களுடைய வாழ்விலே திறந்தவர்களாய் இருப்பது அவசியம். அந்த வரங்களின் வல்லமை மற்றும் அதிகாரத்தை எவ்வாறு செயல்படுத்துவது என்று கற்றுக் கொள்ள வேண்டும். ஆவிக்குரிய வரம் மிகப்பெரிய அளவிலான அதிகாரத்தை சுமந்து மற்றவர்களுடைய வாழ்க்கைக்குள் கடந்து செல்கிறது. ஏனெனில் இந்த வரங்களில் தேவனுடைய கிருபையை அவர்கள் காண்கிறார்கள். அந்த கிருபைக்கு தங்களை அர்ப்பணிக்கிறார்கள்.

கிருபையின் வெளிப்புற செயல்பாடுகள்

தேவனுடைய கிருபை அவருக்காக செய்யும் சேவையில் நம்முடைய வாழ்வில் ஊற்றாய் இருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய பிதாவின் விருப்பத்தின் மூலமாக குறிப்பிட்ட அழைப்பையும், வரங்களையும் நாம் யாவரும் உடையவர்களாய் இருக்கிறோம். இது விசேஷமாக நமக்கான தேவ கிருபையாகும். நம்முடைய தேவனுடைய அழைப்பும் நம்முடைய வேலையும் சேவையும் அவருக்கென்று இருக்க வேண்டும். தேவனுடைய இருதயத்தின் வெளிப்பாடு இவ்விதமாக பரலோகத்தின் முத்திரையை அதனோடு சேர்ந்து சுமக்கிறது. இதை பரிசாக மதிப்புமிக்க ஒன்றாக நாம் கருதி முடிந்த அளவு மிக ஆக்கப்பூர்வமான வழியில் செயல்படுத்த வேண்டும்.

தேவனுடைய அழைப்பையும், வரங்களையும் தொடர்ந்து மெருகூட்ட வேண்டும். மற்றவர்களுடைய நன்மைக்காக மிகப்பெரிய தகுதி வாய்ந்த முறையிலே உபயோகிக்க வேண்டும் (2 தீமோத்தேயு 1:6).

இந்த தேவனுடைய கிருபை (அழைப்பு அல்லது ஈவு), நம்முடைய வாழ்க்கை வேலைக்காக வல்லமையை ஆர்வமுட்டுகிறது. நாம் கிருபையினால் இரட்சிக்கப்பட்டு, இந்த கிருபைக்கு அழைக்கப்பட்டோம். கிருபை என்பது ஆவியானவரின் குறிப்பிட்ட வரங்களை விட மேலானது. இது தேவனுடைய கரம் ஒருவருடைய வாழ்க்கையில் குறிப்பிட் வேலைக்காக, மற்றும் ஊழியத்தின் பகுதிக்காக இறங்கி வருவது போலானது. வரங்களும், சந்தேகமில்லாமல் கொடுக்கப்படும் போது தேவனுடைய கிருபையோடு வருகிறது. ஆனால் இந்த கிருபை ஆழமானது வல்லமையானது. இதன் அழைப்பை அறிந்தவர்களின் வாழ்க்கையில் உண்மையானது.

கிறிஸ்தவர்களாகிய நாம், தேவன் நமக்கு தந்த கிருபையினால் கட்டுப்படுத்தப்பட்டு, வழிநடத்தப்பட வேண்டும். அவருடைய சித்தத்தில் வாழ தேவகிருபையை பெற்றோம். இந்த கிருபை தேவனுடைய சித்தத்தை நம்முடைய வாழ்வில் சுமந்து செல்ல தகுதிப்படுத்துகிறது. தேவனுடைய கிருபை எப்படியிருந்தாலும், நாம் எப்போது விசுவாசத்திலே முன்னேறி செல்லுகிறோமோ, தகுதியான விதத்திலே உண்மையிலே தேவனுடைய சித்தத்திற்கு பதில் அளிக்கிறோமோ, அப்போது மாத்திரம் பயனுள்ள விதத்தில் அமைகிறது. மற்ற வார்த்தைகளில் நாம் முதலாவது தேவனுடைய சித்தத்தை அறிய வேண்டும். பிறகு அந்த சித்தம் நிறைவேற்றப்படுவதற்கு தேவையான தேவனுடைய கிருபையை பெற்றுக் கொள்ள வேண்டும். கடைசியாக அநத தேவனுடைய சித்தம் நிறைவேற்றப்பட நடைமுறை வழியில் இறங்கி செயலாற்ற வேண்டும். இதை சித்தரிப்பதற்கு கீழே கொடுக்கப்பட்ட பட விளக்கத்தை பாருங்கள்



தேவனிடத்தில் ஆரம்பித்த ஒன்று இப்பொழுது வெளிப்புறமாய் வேலை செய்கிறது. ஏனென்றால் தேவ கிருபையினால் தேவனுடைய கிருபை சற்றேறக்குறைய தொட்டு உணரக்கூடிய ஒன்று. அது பணிக்குழுவோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு தேவனுடைய சித்தத்திற்கு உயர்த்தப்பட முடியும்.

நம்முடைய வாழ்க்கையை நாம் வாழும்பொழுது தேவ கிருபையின் விளைவை நாம் காணமுடியும். இது அப்போஸ்தலனாகிய பவுலுக்கு உரியது. அவன் செய்த எல்லாவற்றிற்கும் தேவகிருபை பிரதான ஆர்வமூட்டும் வல்லமையாய் இருந்தது. தேவனுடைய கிருபை என்னவென்று அவனுக்குத் தெரியும். அவனும் மற்றவர்களும் தங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய கிருபையை அடையாளப்படுத்திக் கொண்டார்கள் (ரோமர் 15:15,16; கலாத்தியர் 2:9).

"ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது" (1கொரிந்தியர் 15:10).

"தேவனுடைய பலத்த சத்துவத்தால் எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே இந்தச் சுவிசேஷத்துக்கு ஊழியக்காரனானேன். பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (எபேசியர் 3:7,8).

நாம் தேவனுடைய கிருபையில் வாழ்கிறோம் என்பதற்கு கனி நிறைந்த தன்மையும், ஆக்கப்பூர்வமான தன்மையும் உண்மையான அடையாளமாகும். தேவனுடைய கிருபை எப்பொழுதும் ஆக்கப்பூர்வமானது, அது நம்முடைய வாழ்க்கையிலும், நாம் யாருக்கெல்லாம் ஊழியம் செய்கின்றோமோ அவர்களுடைய வாழ்க்கையிலும் கனியை விளைவிக்கிறது.(யோவான் 15:1-16). இதுதான் நாம் தேவனால் அழைக்கப்பட்டு வரங்களைப் பெற்றோம் என்பதற்கு அடையாளமாகும்.

தேவனுடைய அபிஷேகம் என்றால் என்ன?

அபிஷேகம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள முக்கிய எபிரெய வார்த்தை வேதாகமத்தில் '*மாஷா*' (அல்லது 'மஷக்') அதற்கு அர்த்தம் 'எண்ணெயை தடவுதல், ஊற்றுதல், பரப்புதலாகும". எபிரெய வார்த்தை '*மசியா*' என்பது 'மேசியா' என்று எழுத்துபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. அதற்கு அர்த்தம் 'அபிஷேகம் பண்ணப்பட்டவர்'. இந்த வார்த்தை மேலே சொல்லப்பட்ட வார்த்தையிலிருந்து வந்தது.

பழைய ஏற்பாட்டு காலங்களில் தேவனுடைய அபிஷேகம் என்பது அடிக்கடி நபரின் மேல் எண்ணெயை ஊற்றுவதற்கு அடையாளப்படுத்தப்பட்டது. பொருள்களை அல்லது ஜனங்களை தேவனுக்கென்று பிரித்தெடுப்பதற்கு எண்ணெயானது பரிசுத்த விதத்திலே உபயோகப்படுத்தப்பட்டது (ஆதியாகமம் 28:18; யாத்திராகமம் 29:1-9). இது ஜனங்களை பிரித்தெடுத்து (அதவாது

பரிசுத்தமாக்குதல்) தெய்வீக தகுதியை அளித்து ஆசாரியர்களாக்குவதற்கும் (யாத்திராகமம் 29:1-9; 28:41); இராஜக்களாக்குவதற்கும் (1சாமுவேல்10:1); தீர்க்கதரிசிகளாக்குவதற்கும் (1இராஜாக்கள் 19:16) அடையாளமாகும். ஒருமுறை எண்ணெயினால் அபிஷேகம் பண்ணப்பட்டுவிட்டால் அந்த ஜனங்கள் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்கள் மற்றும் பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்று கருதப்பட்டு தேவனால் விசேஷ மரியாதை கொடுக்கப்பட்டு அவருடைய நியமிக்கப்பட்ட சேவைகளை அவருடைய தலைவர்களாக சுமந்து செல்வதற்கு இந்த அபிஷேகம் விசேஷமான செயல்பாட்டிற்காக அல்லது காரணத்திற்காக செய்யப்பட்டது. ஆனால் இது தாவீது ராஜாவின் வாழ்க்கையில் நடந்த மூன்று அபிஷேகத்தைப் போல மாற முடியும். (1சாமுவேல் 16:13; 2சாமுவேல் 2:4; 5:3).

'அபிஷேகம்' என்று மொழிபெயர்க்கப் பட்ட இரண்டு கிரேக்க வார்த்தை வேதத்தில் புதிய ஏற்பாட்டிலே '*அலிபோ*' இது எந்தவிதமான அபிஷேகத்திற்கான பொதுவான வார்த்தையாகும். '*செரியோ*' (அல்லது '*செரிஸ்மா*' – தொடர்புடைய பெயர்ச்சொல்) இந்த வார்த்தையின் உபயோகம் அதிக வரைமுறைக்குட்பட்டது. ஏனெனில் இது பரிசுத்த அல்லது அடையாள அபிஷேக வரையறைக்குள் நிற்கிறது. இரண்டு வார்த்தைகளும் எண்ணெயை, பரிமளதைலம், மருந்து தைலம், களிம்பு தடவுதல் அல்லது பரப்புதல் என்று எளிமையாக அர்த்தம் கொடுக்கிறது. 'கிறிஸ்து' என்ற தலைப்பு இரண்டாவது வார்த்தையை உபயோகிக்கிறது. அதின் அர்த்தம் அபிஷேகிக்கப்பட்டவர்.

ஆராதனையிலோ, ஜனங்களை தலைமைத்துவத்திற்காக பரிசுத்தப்படுத்தும்போதோ எண்ணெயினால் சரீரப்பிரகாரமாக அபிஷேகம் பண்ணுதலைக் குறித்து புதிய ஏற்பாடு பேசவில்லை. இருந்தபோதிலும் மூப்பர்கள் வியாதிப்பட்டவர்களுக்காக இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்கும்படி உற்சாகப் படுத்தப்படுகிறார்கள் (யாக்கோபு 5:14). எப்படியிருந்தாலும், புதிய ஏற்பாடு ஆவிக்குரிய அபிஷேகத்தைப் பேசுகிறது. அதன்மூலமாக தேவன் எல்லா விசுவாசிகளையும் தேவன் தனக்காக பரிசுத்தம் பண்ணி அவருக்காக சேவை செய்ய பரிசுத்த ஆவியானவர் மூலமாய் வல்லமைப்படுத்துகிறார் (2கொரிந்தியர் 1:21,22; 1யோவான் 2:20,27).

ஆதிசபையிலே சபையின் வித்தியாசமான தலைமைத்துவ பொறுப்புகளுக்காக சரீரப் பிரகாரமாய் எண்ணெயினால் ஜனங்கள் அபிஷேகிக்கப்பட்டு பிரித்தெடுக்கப் படவில்லை. ஆனால் இதை செய்வதற்கு தலையின் மேல் கைகளை வைத்தார்கள். புதிய ஏற்பாட்டில் கரங்களை வைக்குதல் என்பது பழைய ஏற்பாட்டின் எண்ணெயினால் அபிஷேகித்தல் என்ற உபயோகத்தின் இடத்தை பிடிக்கிறது. ஏனெனில், இரண்டும் தேவனுடைய அபிஷேகத்தையும் மற்றும் ஜனங்களையும் அவருக்காக பரிசுத்தம் பண்ணுதலையும் அடையாளமாக தெரிவிக்கிறது.

இந்த உண்மைகள் எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு தேவனுடைய அபிஷேகம் என்பது தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியானவரை நம்முடைய வாழ்க்கையில் உள்ளும், புறமும் ஊற்றி அவருக்காக நம்மை பரிசுத்தம் பண்ணி அவருடைய வல்லமையினால் அவரை சேவிக்க நம்மை தகுதிப்படுத்தி நாம் தொடர்பு கொள்கின்ற எல்லா நபர்களுடைய வாழ்க்கையிலும் அவருடைய வாழ்க்கையை தெரிவிக்கிறோம்.

அபிஷேகத்தின் முக்கியத்துவம்

தேவ சபையில் தலைவர் அபிஷேகம் இல்லாவிட்டால் அவருடைய இராஜ்ஜியத்திற்காக நிலைத்து நிற்கும் கனியை விளைவிக்க முடியாது. தேவனுடைய அபிஷேகத்தினால் மாத்திரம் உண்மையான வாழ்க்கையை விளைவிக்க முடியும். அவரிடத்திலிருந்து பெற்ற அபிஷேகத்தினால் மாத்திரம் தேவனுடைய தலைவர்கள் செயல்பட்டு அவர் கேட்டதான காரியங்களை செய்யமுடியும். எல்லாவற்றிற்கும் மேலாக பரிசுத்த ஆவியானவர் ஏற்படுத்துகிற மாற்றங்கள் மாத்திரமே நாம் நடத்துகிற நபருடைய வாழ்க்கையில் கிரியை செய்யும். அவை நிலைத்து நிற்கும். எனவே எந்த ஒரு தலைவருடைய ஊழியத்தில் மிக முக்கியமான காரியம் என்னவென்றால் அவர்கள் எப்படி பார்க்கிறார்கள் அல்லது என்ன அறிந்து வைத்துள்ளார்கள் எனபது அல்ல. மாறாக, அவர்களுடைய வாழ்க்கையில் ஆவியானவருடைய அபிஷேகம் வழிந்தோடுவது நல்லது.

"உங்களோடே கூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே. அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்" (2கொரிந்தியர் 1:21,22).

பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகம் இயற்கையின் ஆளுமைத்துவம் திறமை, பேச்சாற்றல் பயிற்சி அல்லது தேவனுக்காக உண்மையான ஆக்கப்பூர்வமான செயல்படும் திறமை என்பதைக் காட்டிலும் மேலானது. இந்த தேவனுடைய அபிஷேகம் நம்முடைய வேலையில் வல்லமையை கொடுக்கிறது. வார்த்தையில் அதிகாரத்தை கொடுக்கிறது. படைப்புகளில் புத்துணர்ச்சியைத் தருகிறது. நம்முடைய செயல்களில் பொருத்தத்தை கொடுக்கிறது. இந்த அபிஷேகம் தேவையானது எல்லா தேவனுடைய தலைவர்களுக்கும் இன்றியமையாத ஒரு தேவையாகும். ஆதி திருச்சபையிலே பந்தி விசாரிப்பதற்கு ஆட்கள் தேவைப்பட்ட போது, தேவைகள் சந்திக்கப்படுவதற்காக முழுவதும் பரிசுத்தாவியின் அபிஷேகமும், ஞானமும் நிறைந்த நபர்களை தேடினார்கள் (அப்போஸ்தலர்கள் 6:1-6). இப்படிப்பட்ட தலைவர்கள் நிறைவுள்ளவர்களாய் இருந்து மூலஆதாரமாய் விளங்கி மற்ற ஜனங்களுக்கு பகிர்ந்து கொடுக்க முடியும்.

தேவனுடைய அபிஷேகத்தின் மூல ஆதாரம்

தேவனுடைய அபிஷேகம் தாழ்மையில் பிறக்கிறது. நொறுங்குண்ட இதயத்தின் மூலமாக விடுவிக்கப் படுகிறது. தேவன் தம்முடைய தலைவர்களோடு ஆழமாய் இடைபட விரும்புகிறார். இது நம்மை பரிட்சிக்கும் மற்றும் கஷ்டமான நேரத்தின் வழியாகச் செல்ல வைக்கிறது. ஆனால் முடிவின் விளைவு உண்மையான தாழ்மை மற்றும் தேவனுக்கு முன்பாக உடைக்கப்பட்ட வாழ்வைத் தரும். இந்த விதமான வாழ்க்கையில் இயேசுக் கிறிஸ்து எல்லாப் பகுதியிலும் ஆண்டவராக இருப்பார். தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணுவார். இப்படிப்பட்ட வாழ்க்கையில் நாம் குறைந்தும், அவர் அதிகமாகவும் இருப்பார். இந்த ஜனங்கள் தேவனுக்கு முன்பாக பரிசுத்த வாழ்க்கை வாழ்வார்கள். ஏனெனில் அவரை அவமதிக்கிற எந்தக் காரியத்திலேயும் அவர்கள் செய்ய விரும்ப மாட்டார்கள். அவர் அவர்களுக்காக அதிக காரியம் செய்திருக்கிற படியினால் அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படிவார்கள். ஏனெனில் அவர்கள் அவரை அறிந்துள்ளார்கள். எவ்வளவு அன்பினால் அவர் அவர்களை நேசித்தார் என்று அறிவார்கள். அவர் சிறந்ததையே விரும்புவார் என்று புரிந்து வைத்துள்ளார்கள். இப்படிப்பட்ட ஜனங்களின் மேல் தேவன் தம்முடைய அபிஷேகத்தை ஊற்றுகிறார். ஏனெனில் அபிஷேகம் அவர்களோடு இருந்து விடாமல் தேவனுடைய சித்தத்தை அடைவதற்கு வல்லமைப்படுத்தி தகுதியுள்ளவர்களாக்கும். இந்த ஜனங்கள் தேவனுடைய அபிஷேகத்தை சார்ந்திருக்கிறார்கள். இழப்பை உண்டாக்குகிற எந்தக் காரியத்தையும் உள்நோக்கத்துடன் செய்யமாட்டார்கள். தேவனுடைய சித்தத்தை செய்வதற்காகவே அவர்கள் வாழ்வார்கள். உலகத்திலே அவருடைய சாட்சிகளாய் இருப்பார்கள். அபிஷேகத்தை இழந்து விட்டால் இது சாத்தியமல்ல என்பதையும் அறிவார்கள் (அப்போஸ்தலர் 1:8).

தேவன் தெரிந்து கொண்ட நபர்களை மாத்திரம் பரிசுத்த ஆவியானவர் தன்னுடைய நேரத்தில் அபிஷேகம் பண்ணுவார். எந்தவிதமான ஊழியத்திற்குள்ளாய் பிரவேசிப்பதற்கு முன்னும் தேவனுடைய அபிஷேகத்திற்காய் காத்திருப்பது அவசியம். அதனுடைய உணர்வு என்னவென்றால் அபிஷேகம் நம்மை நடத்ததட்டும். நாம் தேவனுடைய நேரத்தில் ஊழியத்தில் செயல்படுவோம். சூழ்நிலையின் அழுத்தத்தினாலோ அல்லது மற்ற ஜனங்களின் அழுத்தத்தினாலோ நடத்தப்படாமல் அவர் நம்மை நடத்த இடம் கொடுப்போம். நாம் இதை செய்வோமானால் நாம் ஆயத்தம் பண்ணின அல்லது திட்டமிட்ட காரியத்தின் வரையறைக்குள் நிற்க அவசியம் இல்லை. ஏனெனில் தேவனுக்கு திறந்த மனதுடன் இருந்து அவருடைய அபிஷேகம் வழி நடத்துகிற திசையில் செல்ல ஆயத்தமாய் இருப்போம்.

தேவனுடைய அதிகாரத்திற்கு முற்றிலும் அர்பணித்த நபர்கள் மேல் தேவனுடைய அபிஷேகம் வந்து இறங்குகிறது. உண்மையென்ன வென்றால், நாம் தேவனோடு கொண்டிருக்கும் உறவு மற்றும் அவர் நம்முடைய வாழ்க்கையில் வைத்ததான அழைப்பிலே நம்முடைய அபிஷேகம் வழிந்தோடுகிறது. தேவன் ஆரம்பிக்காத ஒன்றை அவர் அபிஷேகம் பண்ணமாட்டார். எனவே நாம் தேவனுடைய அபிஷேகத்தை அறிய வேண்டுமானால் நம்முடைய வாழ்வில் அவருடைய அழைப்பிற்குள்ளாக நிலைத்து நிற்க வேண்டும். நம்முடைய அழைப்பின் பொதுவான உணர்விலே

இது உண்மையானது. அவைகள் அந்த அழைப்பை எப்படி செயல்படுத்துவது என்ற விசேஷ விபரங்களைத் தருகிறது. அவருக்காக நாம் செய்கிற வேலையின் ஒவ்வொரு காரியத்திலும் தேவனுடைய விசேஷ அபிஷேகம் தேவையாய் இருக்கிறது.

ஒரு தலைவருடைய அபிஷேகம் தொடர்ந்து புதுப்பிக்கப் படவேண்டும் (எபேசியர் 5:18). ஞானமான பயிற்சி என்னவென்றால், தினந்தோறும் அவருடைய அபிஷேகத்திற்காய் ஆண்டவரைத் தேடுவதாகும். தேவனுடைய தலைவர்களாகிய நாம் தேவன் நம்மை பிரித்தெடுத்த வேலையை செய்வதற்கு பக்திவிருத்தியடையவும், வல்லமையைப் பெறவும், ஒவ்வொரு நாளும் புதிய பரிசுத்தாவின் அபிஷேகத்தினால் நிரப்பப்படுவது அவசியம்.

தேவனுடைய அபிஷேகத்தை விடுவித்தல்

பரிசுத்தாவியானவருடைய அபிஷேகத்தை எப்பொழுது நாம் அறிகிறோமோ, அப்போது எவ்வாறு அது செயல்படுகிறது என்பதை அங்கிகரித்துக் கொள்ளுதல் அவசியம். ஒருபோதும் முயற்சிக்காமல் கட்டாயப்படுத்தாமல், பயிற்சிக்காமல் எப்படி அதனுடன் வழிந்தோடுவது என்று நாம் கற்றுக் கொள்வது அவசியம். நம்முடைய அபிஷேகத்தை எப்படி மீண்டும் பெற்றுக் கொள்வது என்பதையும் அறிய வேண்டும். நமது வாழ்வில் அநேக நேரங்களில் நமது அபிஷேகத்தில் சுறுசுறுப்பாக நாம் செயல்பட வேண்டும். உணர்வுப் பூர்வமாக அது செயல்படாமல் படுத்திருப்பதை நம்மோடு வைத்திருந்து இன்னும் இளைப்பாறுதலுக்கான நேரத்திற்காக (உதா. நாம் தூங்கும்போது இளைப்பாறும்போது, சாப்பிடும்போது மற்றும் பல) காத்திருப்பது போன்றதாகும். எப்படியிருந்தாலும் எப்பொழுதும் அவருக்கு திறந்த நிலையில் தேவன் உபயோகிக்கும் இடத்தில் நிலைத்திருக்க வேண்டும். எப்பொழுது தேவைப் படுகிறதோ அப்போது நமது அபிஷேகத்தை எப்படி திறப்பது என்று நாம் அறிவது அவசியம். இது சிறிய அளவு விழித்தெழுதலாகும். ஏனெனில் சரியான நேரத்தில் தேவன் நமக்கு கிடைக்கும் படி செய்வார். ஆனால் அதற்குப் பதிலாக நம்மை அதற்கு எழுப்பி நம்மை அதற்கு தயாராக மாற்றுவது போலாகும். இதை செய்வதற்கு சிறந்த வழி தேவனுக்கு காத்திருந்து நமக்குள் பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தை விடுவிக்க வேண்டும். நமக்குள் இருக்கும் திறவுகோலை கற்றுக் கொள்ள ஆரம்பிக்க வேண்டும். இந்த திறவுகோல்கள் நபருக்கு நபர் வித்தியாசப்படும். ஒருவேளை அதே நபருக்குக் கூட வித்தியாசப்படலாம். அதாவது இது ஒரு சூத்திரமல்ல. எந்த குறிப்பிட்ட நேரத்திலும் தேவனுக்கும், அவருடைய வழிக்கும் உணர்வுள்ளவர்களாய் இருப்பதாகும்.

<u>ஆக்கப்பூர்வமானது என்று ஜனங்கள் கண்டுகொண்ட சில திறவுகோல்கள்:-</u> துதி ஆராதனை (விசேஷமாக குறிப்பிட்ட பாடல்களின் மூலமாக தேவன் உங்களுக்குள் உந்துதல் ஏற்படுத்துதல்), தேவனிடத்தில் ஜெபித்தல், தேவனை தியானித்தல் (விசேஷமாக அவருடைய கடந்த கால உண்மைத்துவங்களை), நீங்கள் நம்புகிற ஜனங்கள் உங்களுக்காக ஜெபித்தல், நீங்கள் ஊழியம் செய்யப்போகிற சூழ்நிலை அல்லது உங்களுக்காக விசேஷ வார்த்தையை தேவனிடத்தில் இருந்துப் பெறுதல், அவரிடத்தில் காத்திருத்தல் (விசேஷமாக எப்பொழது அவருடைய பிரசன்னத்தின் உண்மையான உணர்வு ஏற்படுகிறதோ அப்பொழுது), தேவ வார்த்தையில் பொருந்தமான பகுதிகளை வாசித்தல் மற்றும் பல. ஒருவேளை அநேக மற்ற வழிகள் நம்மை தேவனுடைய அபிஷேகம் கிடைக்கக்கூடிய இடத்தில் வைக்கும். சரியான காரியம் இது என்றால் உங்களிடத்தில் எது கிரியை செய்ய முடியம் என்பதை கண்டு பிடித்தல். ஒருபோதும் கடுமையான சூத்திரத்திற்கு மாற்றாக எதையும் நாடாதபடிக்கு உறுதி செய்து கொள்ளுங்கள். ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் பிட்கப்படுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை.

எந்த விதமான ஊழியத்தின் நேரத்திற்கு முன்பதாக தேவனுடைய சமுகத்தில் காத்திருப்பது மிகவும் முக்கியம். இது தேவனோடு நீங்கள் ஒத்திசைவாகி தேவனுடைய அபிஷேகத்தில் நீங்கள் வழிந்தோடுவதற்கும், தகுதியாக்குவதற்கும் உதவும். எப்படியிருந்தாலும் தேவனுடைய தலைவர்களாகிய நாம் இந்த விதமான திறவுகோல்களை நம்முடைய வாழ்க்கை முறையாக மாற்றிக் கொண்டு எப்பொழுதும் திறந்த நிலையில் அவர் உபயோகப்படுத்தும் விதத்தில் வாழ வேண்டும் என்பதை குறித்துக் கொள்ளுங்கள். அநேக நேரங்களில் சுயநல வாழ்க்கை வாழ்ந்து விட்டு பின்பு தேவனிடத்தில் வந்து தலைவர் என்ற ரீதியில் நாம் செய்ய வேண்டிய பகுதியை செய்வதற்கு தேவைப்படும் போது மாத்திரம் அவருடைய அபிஷேகத்தை கேட்பது சரியான காரியமல்ல.

நம்முடைய அபிஷேகத்தில் பெருகுதல்

ஒரு தலைவருடைய அபிஷேகம் இவைகளால் பெருகுகிறது:

- தேவன் அவருக்காக செய்யச் சொன்ன சின்ன காரியங்களிலும் உண்மையை நிருபித்தல். அதாவது தேவன் என்ன செய்ய சொன்னார் என்பதை கண்டு பிடித்து அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும்.
- தங்களையும் தங்கள் ஸ்தானத்தையும், தேவனுக்காக தியாகமாய் கொடுத்தல். தேவனுடைய அபிஷேகம் ஒவ்வொரு தலைவருக்கும் விலைக்கிரயம் உடையது தான். அவருக்குள் எவ்வளவு ஆழமாக செல்லுகிறோமோ அவ்வளவு அதிகமாய் அவர் விட்டுவிடச் சொல்லுவார்.
- அடிக்கடி அவருடைய பிரசன்னத்தில் பிரவேசிப்பதின் மூலம் தேவனைக் குறித்து அதிகமாய் அறிந்து கொண்டு தேவனுடைய ஜெபம் மற்றும் ஆராதனை ஊழியத்தில் அதிக ஆழமாய் பிரவேசியுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுடைய அபிஷேகம் தேவனிடத்தில உள்ளது.
- தேவனுக்கு முன்பாக நொறுங்குண்ட நிலையில் இருக்கிறோமா அவைகள் அதிகமான அவருடையவைகளை அனுமதிக்கும்.
- ஏற்கனவே தேவன் நமக்கு கிடைக்கப் பண்ணி இருக்கிற பரிசுத்தாவியின் அபிஷேகத்தை பாராட்ட வேண்டும், பாதுகாக்க வேண்டும், காவல் காக்க வேண்டும். இது அவரிடத்தில் இருந்து வந்த விலை மதிப்பிட முடியாத ஈவின் மதிப்பை நாம் அறிந்திருக்கிறோம் என்பதை காட்டுகிறது.

இன்னும் நாம் ஆயத்தப்படுவது அவசியம்

தேவனுடைய அபிஷேகம் நமது வாழ்க்கையிலும், இன்றியமையாத பொருள்களிலும் ஆயத்தப்படுவதின் தேவையை மறுப்பதற்கில்லை. வேத வசனத்தில் விற்பன்னர்களாய் மாறுவதற்கு எந்த விதமான குறுக்கு வழியும் இல்லை. இதற்கு ஒழுங்கு முறையான படிப்பு, விடாமுயற்சியான கடின உழைப்பு, அதிக கவனம் தேவனின் அபிஷேகத்துடன் செயல்படும் திறமை ஆகியவை தேவைப்படுகிறது. இன்று அநேக பிரசங்கிமார்கள், சிறந்த பிரசங்கிமார்கள் கூட்டத்திற்கு முன்பதாக தான் செய்தி கிடைத்தது அல்லது அதைப் போல் ஒத்த காரியங்களை சொல்லக் கேட்டிருப்பீர்கள். இது ஒரு வேளை உண்மையாய் இருக்கலாம். ஆனால் அநேக ஜனங்கள் அவர்களுடைய பல மணி நேர வாழ்க்கை ஆயத்த காரியங்களில் இவற்றை மறந்து விடுகிறார்கள். தேவனுடைய அபிஷேகம் தேவ சபையில் தலைவனுடைய ஆக்கப்பூர்வமான தன்மையில் ஒரு பகுதியை சபையிலே பிரசங்கிக்கிற அநேக பிரசங்கிமார்கள் தேவனின் அபிஷேகத்தை சார்ந்திராமல் தங்களுடைய ஆயத்தப்படுதலிலே சார்ந்திருக்கிறார்கள். இதுவும் தவறானது. கிறிஸ்தவ ஊழியத்தின் இரண்டு முக்கிய காரியத்தின் இடையே சரியான சமநிலையில் இருப்பது நமக்கு அவசியம். இந்த சமநிலை சூழ்நிலைக்கு தகுந்தவாறு, கிறிஸ்துவில் நம்முடைய முதிர்ச்சியைப் பொறுத்து நம்முடைய அறிவின் நிலையைப் பொறுத்து மாறுபடலாம். எந்தவிதமான தலைவர் நாம் என்பதை கற்றுக் கொள்ளுதல், நம்முடைய அனுபவம், தேவன் இந்த சூழ்நிலையில் என்ன செய்வார் என்பதைப் பொறுத்து மாறுபடும்.

உபவாசமும் ஊழியத்திற்கான நமது ஆயத்தத்தின் ஒரு பகுதியே நாம் ஊழிய செய்கிறதற்கு முன்பு உள்ள உணவை தவிர்த்து உபவாசம் இருப்போமானால் தேவனுடைய நடத்துதல் மற்றும் அபிஷேகத்திற்கு அதிக உணர்வுள்ளவர்களாய் இருப்பதற்கு உதவும். ஏனெனில் நம்முடைய ஆவிக்குரிய விழிப்புணர்வை கூர்மையாக்கும் எந்த ஊழியத்திற்கு முன்பதாக பெரிய விருந்தை உண்ணுவது எதிர்மறையான விளைவுகளை உண்டாக்கும்.

தேவனுடைய அபிஷேகத்தை பெறுவதற்கு கைகளை வைக்குதல்

எல்லா தேவனுடைய தலைவர்களும் தங்களை அவருக்கும் சபைக்கு கைகளை வைப்பதற்கும் அர்ப்பணிக்க வேண்டும். இது ஆவிக்குரிய வரங்களை அளிப்பதற்கும், ஊழியங்களில் அவர்களை விடுவிப்பதற்கும்மான அடையாளமாகும். இந்த ஜனங்களை ஆண்டவருக்காக, தேவனுடைய வேலைக்காக பரிசுத்தம் பண்ண வேண்டும். அவர்கள் தேவனுடைய அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் (அப்போஸ்தலர் 6:6; 13:2,3; 1தீமோத்தேயு 4:14; 2தீமோத்தேயு 1:6). தலைவர்கள்

கரங்களை அவர்கள் மேல் வைத்து தேவனுடைய குறிப்பிட்ட வேலைக்காக அவர்களைப பிரித்தெடுக்க வேண்டும். அதிலே அவர்கள் தீர்க்க தரிசன வார்த்தையைப் பெற்றுக்கொள்வது அவர்களுடைய வேலைக்கு அடிப்படையாக மாறும்.

கைகளை வைக்குதல் என்பது போன போக்கில் தேர்வு செய்வதற்கான அடிப்படையாக செய்யக்கூடாது. ஆனால் தேவனுடைய கரம் அந்த நபருடைய வாழ்க்கையில் குறிப்பிட்ட வழியில் செயல்படுவதை கண்டு அதற்கு பதிலளிக்கும் விதமாய் அமைய வேண்டும். அதாவது குறிப்பிட்ட வேலைக்காக ஒரு நபரை தேவன் தனியாக பிரிப்பதை காணும்பொழுது மற்ற காரியங்களோடு, கைகளை வைக்குதல் வெளிப்படையாக உறுதிபடுத்தலின் வழியாகும்.

சபையிலே அபிஷேகம் பெற்ற தலைவர்கள் மாத்திரம் தலைமைத்துவத்திற்கு உயர்ந்து வருகிறவர்கள் மேல் கரங்களை வைக்க வேண்டும் என்பதை கண்டிப்பாக நினைவு கூறப்பட வேண்டும். அபிஷேகம் தலைவர்களிடத்தில இருந்து வருவதில்லை. ஆனால் தேவனிடத்திலிருந்து வருகிறது. கைகள் வைக்கப்பட்டதான நபர்கள் தானாகவே தேவனுடைய அபிஷேகத்தைப் பெறுவதில்லை. ஆனால் அவர்கள் ஆண்டவரை நோக்கிப் பார்த்து விசுவாசத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும். நன்மையான எந்த ஒரு காரியத்தையும் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு விசுவாசம் அவசியம்.

வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது கைகளை வைப்பதற்கு அவசரப்பட வேண்டாம் என்று, ஏனெனில் இந்த செய்கையின் மூலமாய் முதிர்ச்சியடையாத ஒருவரை தலைவராக்குவது சபைக்கும், அந்த நபருக்கும் ஆபத்தானதாய் மாறிவிடும் (1தீமோத்தேயு 5:22). இதனால் தான் முதலாவது தேவன் ஒரு நபரை நடத்தி தலைமைத்துவ இடத்திற்கு கொண்டு வருகிறார் என்பதற்கான அடையாளத்தை பார்த்தபின் அந்த வேலைக்காக பிரித்து எடுப்பது சிறந்தது. தேவனுடைய நேரத்தில் மாத்திரம் தான் ஒரு நபரை உயர்த்த வேண்டும என்பதும் முக்கியமானது (1தீமோத்தேயு 3:6). தேவன் அழைக்காத நபரை சபையின் தலைமைத்துவ பதவியில் அமர்த்துவது என்பதும் ஆபத்தான ஒரு காரியம்.

தேவனுடைய அபிஷேகத்தின் விளைவுகள்

தேவனுக்காக செய்யும் நம்முடைய வேலையில் நம்மை தகுதிப்படுத்தி வல்லமைப் படுத்துகிறது (அப்போஸ்தலர் 1:8; 10:38; மத்தேயு 3:16,17). உண்மையிலே அது இல்லாமல் அவருடைய தலைவர்களாய் தேவன் விரும்புகிற காரியத்தை நம்மால் செய்ய முடியாது (2கொரிந்தியர் 3:4-6). அப்படியே செய்ய முயற்சித்தாலும் நாம் முகம் குப்புற விழுவோம். இது இயேசு இல்லாமல் தண்ணீரில் நடக்க முயற்சிப்பது போலாகும். அது எப்படியிருந்தாலும் பரிசுத்தாவியானவர் ஒரு போதும் முயற்சி செய்யாதபோது தலைவர்கள் அந்த நேரத்தில் ஆச்சரியப்பட்டு அவர்களுடைய அபிஷேகத்தில் செயல்பட்டு தேவனுக்காக செய்து முடிக்க முடியும். அது இல்லாமல் தேவன் என்ன விரும்புகிறாரோ அதை அவர்களால் செய்ய முடியாது. அவர்களுடைய கவனத்தில் கொண்டு வந்த தேவைக்கு முன்பதாக அவர்கள் தகுதியற்றவர்களாகிறார்கள். சிறியதாய் இருந்தாலும், அதிகமாய் ஊக்கமிழக்கச் செய்து, தேவையை பார்க்கும் பொழுது நம்மால் செய்து முடிக்க முடியாது என்ற நிலை வருகிறது. எனவே தேவனுடைய தலைவர்கள் அபிஷேகத்தை தடைபண்ணுகிற எந்தக் காரியத்தையும் செய்யமலிருக்க மிக கவனமாய் இருக்க வேண்டும். அவர்கள் குறிப்பாக செய்வதற்கு எதுவும் இல்லை. அது திரும்ப பெற காரணமாகி விடும். தேவன் தந்த அபிஷேகத்தை இழக்கிறோம் என்ற எண்ணம் அவருக்கு கீழ்படிந்து நீதியுள்ள வாழ்க்கை வாழ்ந்து அவரை பிரியப்படுத்த நம்மை ஆர்வமுட்டுகிறது.

தேவனுடைய அபிஷேகத்தை அழிக்கும் காரணங்கள்

அபிஷேகத்தை குறித்து தவறாக எண்ணுதல் (1இராஜாக்கள் 22:24). அவருடைய ஜனங்கள் அவரை தொடர்ந்து நோக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். கடந்த காலத்தில் செய்தது போல இப்போதும் செய்வார் என்று ஒருபோதும் எண்ணிவிடக்கூடாது. நாம் தேவனுக்காக காத்திருந்து அதை நம்முடைய வாழ்க்கை முறையாக ஆக்கிக் கொள்ள வேண்டும். தேவ குமாரனாகிய இயேசுவும் இதை செய்தபடியால் நாமும் அவருடைய மாதிரியைப் பின்பற்ற வேண்டும் (1யோவான் 2:6).

பாவம். நாம் பாவம் செய்யும்போது நம்மை இந்த உலகத்தின் காரியங்களுக்கு கொடுத்து விடுகிறோம். அதை தொடர்ந்து சிலகாலம் நம்மூலமாய் கிரியை செய்கிறார். ஆனால் நாம் முழு ஆசிர்வாதத்திலும் தேவனுடைய அபிஷேகத்திலும் வாழ முடியாது.

ஐக்கியமில்லாமை, விசேஷமாக சபைத்தலைவர்கள் மத்தியில். எங்கே ஐக்கியம் இருக்கிறதோ அங்கே மாத்திரம் தேவன் தம்முடைய ஆசீர்வாதத்தை கட்டளையிட முடியும் (சங்கீதம் 133:1-3).

அவிசுவாசம். இது தேவனுடைய அபிஷேகத்தை பயனற்றதாக்குகிறது. ஏனெனில் இது விசுவாசத்திற்கு எதிரானது. விசுவாசத்திற்கு பதிலளிக்கும் விதமாகவே தேவன் செயல்பட முடியும் (மத்தேயு 6:4-6).

பயம். பயம் நம்முடைய தைரியத்தை அழித்து விடுகிறது. நம்மை பயனற்றவர்களாக ஆக்குகிறது. அது நம்முடைய வாழ்வை அதிகாரம் செலுத்த விடுவோமானால் அது செய்ய நினைக்கிற காரியத்தை செய்யும் நாம் தேவனுக்குப் பயப்பட வேண்டும். மற்ற எதற்கும் அல்ல. விசேஷமாக மற்ற ஜனங்களுடைய கருத்துகளுக்கு (2தீமோத்தேயு 1:7; 1யோவான் 4:18).

நம்முடைய அபிஷேகத்தில் வாழாமலிருத்தல். நம்முடைய அபிஷேகத்தை மறுதலிப்பது மூலம் இதை செய்ய முடியும் மற்றும் அபிஷேகம் அங்கு இல்லை என்று வாழும் நிலை. இங்கே, புத்தி இல்லாத கலாத்தியர் போல நம்முடைய இலக்குகளை மனித முயற்சியினால் அடைய நினைப்பது (கலாத்தியர் 3:3). அவருக்காக செய்யும்படி தேவன் குறிப்பிட்ட வேலையை நமக்கு நியமித்திருக்கிறார். அவருடைய அபிஷேகம் இல்லாமல் அவர் விரும்புகிற வண்ணமாய் நாம் செய்ய முடியாது. உண்மையிலே நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் பரிசுத்தாவியின் அபிஷேகத்தின் கீழ் இருப்பது அவசியம். ஏனென்றால் அப்படி இல்லாவிட்டால் நம்முடைய மனித பெலத்திலே நாம் வாழ்ந்து விடுவோம். உங்களுடைய குறிப்பிட்ட வேலையின் பகுதியில் தேவனின் அபிஷேகத்தை உணர முடியாவிட்டால் உறுதியாக நீங்கள் செய்யக்கூடாது. நம்முடைய வரங்களிலும், அபிஷேகத்திலும் பற்றி எரிகிறவர்களாய் இருப்பது அவசியம். அவற்றில் நன்மையாக வாழவேண்டும். திறந்த நிலையில் எப்பொழுதும் தேவன் உபயோகிக்கும் இடத்தில் இருக்க வேண்டும் (2தீமோத்தேயு 1:6).

நம்முடைய அபிஷேகத்திலிருந்து காரியங்களை வெளியே எடுத்தல், இதை அவர்கள் செய்தால் வேலையோடு செல்லுங்கள். தேவனுடைய அபிஷேகம் அவர்களை நடத்துவதற்கு பதிலாக இந்த ஜனங்கள் காரியங்களை செய்கிறார்கள். அவர் அவர்களை ஒருபோதும் செய்யச் சொல்லாத காரியங்களை அவருக்காக செய்து கூட்டத்தை கூட்டுகிறார்கள். அதாவது அவர் அபிஷேகிக்கும் காரியங்களை. தவறான காரியங்களை பரபரப்பாய் செய்யும் பொழுது பரபரப்பு நம்முடைய அபிஷேகத்தை பழுதாக்கி விடும். நம்மை ஆண்டவர் என்ன செய்ய விரும்புகிறார் என்பதை கண்டுபிடித்து அந்த காரியங்களுக்கு நேராக ஒரே நோக்கத்துடன் முழுவதுமாக ஈடுபாடு கொண்டிருப்பது அவசியம்.

சபையின் தலைமைத்துவத்திற்கு உயர்பட்டறிவுள்ள அல்லது உலக பிரகாரமான அணுகுமுறையை உபயோகிப்பது, ஆவிக்குரிய வேதாகம தத்துவங்களின் அடிப்படையில் சபையை நடத்தி செல்வதற்குப் பதிலாக அவருடைய வழியில் அவருடைய சித்தத்தை எப்பொழுது நாம் செய்கிறோமோ அப்பொழுது தான் தேவன் தம்முடைய வல்லமையில் செயல்படுவார். உலக வழியிலோ அல்லது தொழில் திறபண்புடமையிலோ (அவைகள் இயற்கையான திறமைகளை மகிமை படுத்தும்) காரியங்களை செய்ய முயற்சிப்பது. அல்லது வியப்பூட்டும் காரியங்களை தேவனுடைய அபிஷேகத்திற்கு பதிலாக்குவது சாவுக்கேதுவாக தோல்வியடைந்து விடும்.

புஸ்தகங்களிலிருந்து அல்லது வேதாகம கல்லூரியில் கற்றுக் கொண்ட சூத்திரங்களை பின்பற்றி அதனால் வழிநடத்தப்பட தேவனுடைய அபிஷேகத்தை சார்ந்து இருப்பதற்கு பதிலாக. நாம் தேவனை சார்ந்திருப்பது அவசியம் கொள்கைகளை அல்ல.

ஆவிக்குரிய செயலின்மை (2தெசலோனிக்கேயர் 3:6-15). தேவனுக்குள் என்ன செய்கிறோம் என்பதை அறிந்த பின்பும் கற்பனை செய்து கொண்டு எதை செய்வதற்கும் கவலை இல்லாமல் இருப்பது. இதற்கு சில காரணங்கள் ஏமாற்றம், ஊக்கமிழத்தல், வருத்தம், தோல்வி, சோம்பேறித்தனம்.

எல்லா பேச்சுகளும் மற்றும் வல்லமை இல்லாமை (1கொரிந்தியர் 2:4,5; 1கொரிந்தியர் 4:20). தேவனுடைய பரிசுத்த ஆவியானவரினால் நிரம்பி அந்த ஆவியினால் நடத்தாமல் தங்களுடைய அறிவுப்பூர்வமான தன்மையினால் நடத்தும் தலைவர்கள், தேவனுடைய அபிஷேகத்தையும், வல்லமையும் அறியார்கள். மூளை அறிவுள்ள அநேக கிறிஸ்தவர்களை உருவாக்குவார்கள். ஆனால் அவர்களுடைய வாழ்க்கையில் தேவ வல்லமை சிறிதளவே இருக்கும்.

அதிகாரத்தையும், பதவியையும் குழப்பி அதை அபிஷேகத்துடன் சுமந்து செல்லுதல். வலிமையான தலைவர்கள அவர்களுடைய ஏற்றுக் கொள்ளும் ஆளுமைத்துவத்தை ஜனங்கள் பின்பற்றுவதற்கு எளிதாக காரணமாகிறார்கள். அநேக ஜனங்களில் யாராவது ஒருவர் எளிதாக காரணமாகிறார்கள். அநேக ஜனங்களில் யாராவது ஒருவர் தங்களுக்கான எல்லா சிந்தனைகளையும் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்பதை அறிவார்கள். அப்படிப்பட்ட தலைவர்கள் தேவனுக்கு முன்பாக நொறுக்கப்பட்ட நிலைமையிலே தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆக்கப்பூர்வமான தன்மை பின்பற்றுகிற ஜனங்களின் எண்ணிக்கையை வைத்தல்ல. ஆனால் தேவனுக்கு எப்படி கீழ்படிகிறோம், எப்படி அவர் சித்தத்தை செய்கிறோம் என்பதை கற்றுக் கொள்ளுதல் அவசியம். தேவன் ஜனங்கள் தன்னுடைய வாழ்வுக்கு நேராய் நடத்தப்படவேண்டுமென்று விரும்புகிறார். இது தலைவர்கள் தங்களுக்கு அபிஷேகத்தை தந்தவரை பின்பற்றும் போது மாத்திரமே நடைபெறும்.

உள்எழுச்சியான தன்மைகளை அபிஷேகத்துடன் குழப்புதல். நல்ல செய்தி தொடர்பாளர்கள் மிகப்பெரிய உணர்ச்சிப்பூர்வமான மறுவுத்தரவை ஜனங்களிடத்தில் இருந்து வருவிக்கக் கூடிய திறமையுள்ளவர்களாய் இருப்பார்கள். குறிப்பாக, அவர்கள் எப்பொழுது மிகப் பெரிய கூட்டத்தில் உரையாற்றுகிறார்களோ. எப்படியிருந்தாலும் உணர்ச்சி கலைந்து போகும். உணர்ச்சிப்பூர்வமான காரியத்திற்கு மறுவுத்தரவை கொடுத்ததான ஜனங்கள் சீக்கிரத்திலே தாங்களிருந்த பழைய நிலைமைக்கு மாறி விடுவார்கள். இந்த விதமான தலைமைத்துவம் தேவனுடைய அபிஷேகத்திற்கு பதிலிடானதல்ல. அவ்வகையிலே அவருடைய விசுவாசத்தை உயிருடன் இருக்கச் செய்வதற்கு உணர்ச்சிப்பூர்வமான புத்துயிர் ஊட்டும் கூட்டங்கள் தேவைப்படும் ஜனங்கள் உருவாக்கும். எப்பொழுது ஜனங்கள் தேவனுடைய அபிஷேகத்தை சந்திக்கிறார்களோ, அப்பொழுது அவர்கள் தேவனை சந்திக்கிறார்கள். இது அவர்களுடைய வாழ்க்கையில் நீண்ட காலம் தாக்கத்தை ஏற்படுத்தும். எல்லா தலைவர்களும் தாங்கள் நடத்துகிறவர்கள் இதை உடையவர்களாக இருக்க விரும்ப வேண்டும்.

தேவனுக்குப் பதிலாக இயற்கையான திறமைகளையும் தாலந்துகளையும் சார்ந்திருப்பது. இது ஆவியிலே வாழ்வதற்குப் பதிலாக மாம்சத்திலே வாழ்தல். தேவன் தம்முடைய அபிஷேகத்தை மாம்சத்திலே தங்கியிருக்க அனுமதிக்க மாட்டார். நம்முடைய இயற்கையான திறமைகளும், தாலந்துகளும் அவைகள் தன்னில் தானே தவறானவைகள் அல்ல. ஆனால் அவைகள் தேவனுக்காக பரிசுத்தமாக்கப் பட வேண்டும். அப்பொழுது தான் தேவன் அவைகளை அபிஷேகிக்க முடியும். அதன்பின்பு அவர்கள் அவருடைய சேவையில் மிக ஆக்கப்பூர்வமான கருவியாய் இருப்பார்கள்.

களைப்பு. இது மனதை சோர்வாக்கி நம்முடைய அபிஷேகம் வழிந்தோட காரணமான தேவனுக்கு காத்திருப்பதில் தவறச் செய்கிறது. அவரே நம்மை புதுப்பிப்பதற்கும், பெலப்படுத்துவதற்கும் ஆதாரமானவர்.

தெய்வீகமற்ற சூழ்நிலை. எங்கே அவிசுவாசமும், ஒடுக்கப் படுதலுமான சூழ்நிலை இருக்கிறதோ அங்கே ஜனங்கள் அவரிடத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு கவனச்சிதறல் அடைந்து தேவனுடைய அபிஷேகத்திற்கு தடையாக மாறிவிடுகிறது. இப்படிப்பட்ட நேரங்களில் இந்த சத்துருவை எதிர்த்து நின்று தேவன் நம்மை நடத்துகிற விதத்தில் அவிசுவாசத்தின் மத்தியில் விசுவாசத்தின் வார்த்தைகளைப் பேசவேண்டும்.

சுகவீனம். நாம் தேவனிடத்தில் வந்து வியாதியை எதிர்ப்பது அவசியம். அதாவது ஒரு கூட்ட ஜனங்களுக்கு வேதவசனத்தை பிரசங்கிப்பதற்கு தடையாய் இருக்கும் வேளையில் சுகவீனமும், பெலவீனமும் ஒரே காரியமல்ல என்பதை நினைவில் கொள்க. ஏனெனில் தேவன் நம்முடைய பெலவீனத்தின் மூலமாக கிரியை செய்ய முடியும். (2கொரிந்தியர் 12:9,10).

கோபமூட்டல். நாம் கோபமாய் இருக்கும்பொழுது ஆக்கப்பூர்வமாய் மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய முடியாததை நாம் காண முடியும். இந்த எதிரியை நாம் எதிர்க்க வேண்டும். இதை உற்சாகப்படுத்தும் பொழுது நம்முடைய வாழ்க்கையில் ஜெய ஜீவியம் வாழாதபடிக்கு தடையை உண்டாக்கிக் கொண்டே வரும். நமது பக்கம் எவ்வளவு நியாயம் இருந்தாலும் பரவாயில்லை, நமக்கு விரோதமாய் தவறு செய்தவர்களை மன்னிப்பது அவசியம். (மத்தேயு 6:14,15).

மனக்காயம், ஏமாற்றம், தோல்வி, ஊக்கமிழத்தல். இந்த காரியங்கள் எல்லாம் நம்மிலும், நம் மூலமாய் தேவன் செய்யும் காரியங்களிலேயும் நம்பிக்கை இழக்கச் செய்யும். நாம் தேவனிடத்திற்கு வந்து அவரை சந்திப்பதின் மூலம் அவருடைய வார்த்தையை கேட்பதின் மூலம் விசுவாசத்திலே பெருகுவது அவசியம். இந்த கஷ்டங்களை எப்படி மேற்கொள்ளுவது என்று கற்றுக் கொண்டு எப்பொழுதும் ஜெயத்தில் வாழ வேண்டும். அப்பொழுது தான் நாம் தேவனுக்கு ஒரு நாளில் 24 மணி நேரமும் பயன்பட முடியும்.

நம்முடைய சொந்த முடிவுகளுக்காக அபிஷேகத்தை உபயோகித்தல். நம்முடைய அபிஷேகத்தின் மூலமாய் புகழ் அடைய அதிகாரம் பெற, சொத்து சேர்க்க, பதவியடைய, மதிப்பைப் பெற மற்றும் பலவற்றை நாம் தேடினால், தேவனுக்கு எல்லா மகிமையையும் கொடுப்பதற்கு பதிலாக நம்முடைய அபிஷேகத்தை இழக்கும் அபாயத்தில் மாத்திரமல்லாமல், தேவகோபக்கினைக்கும் கடுமையான நியாயத்தீர்ப்புக்கும் ஆழாகி விடுவோம். நாம் ஒருபொழுதும் அபிஷேகத்தை கொள்ளையடிப்பதின் மூலமாக தேவனை அவமானப் படுத்தக் கூடாது. நமக்கு இந்த வழியாக கொடுத்திருக்கிறார். தேவனை மகிமைப் படுத்துவதைக் காட்டிலும் அபிஷேகம் செய்து முடிக்க உதவிய காரியங்களை ஒருபோதும் மகிமைப் படுத்தக் கூடாது.

இது தேவையில்லாதது என்று விசுவாசிப்பது. அநேக கிறிஸ்தவர்கள் தேவன் ஆதிசபையில் மாத்திரம் வல்லமையாய் கிரியை செய்தார் என்று நம்புகிறார்கள். பரிசுத்த ஆவியானவருடைய கிரியைகளில் அதிகமானவற்றை கடந்த காலத்திற்கு சம்பந்தப்படுத்துகிறார்கள். எனவே இந்த நாட்களில் தேவ வேலைக்காய் பரிசுத்த ஆவியானவரை வல்லமைப்படுத்துகிறவராய் திறமைப் படுத்துகிறவராய் காண்பதில்லை. அதற்குப் பதிலாய் சொந்த பெலத்தில் காரணத்தில், எதிர்பார்ப்பில், அறிவில், திறமையில், போராடி தங்களால் முடிந்த சிறந்தவற்றை செய்கிறார்கள். தேவனில் விசுவாசம் வைப்பதை அதிகமான அளவு தவிர்த்து விடுகிறார்கள். சில வேளைகளில் தேவனை நம்புவதைக் காட்டிலும் அதற்குப் பதிலாய் மதவாதிகளாய் மாறி இயேசுவின் நாட்களில் இருந்த பரிசேயரைப் போல் இருக்கிறார்கள்.

பரிசுத்தாவியின் அபிஷேகத்தின் கனியும், விளைவும்

நம்முடைய மனித திறமைகளை ஒடுக்குவது தேவனின் நோக்கமல்ல. ஆனால் அவர் அதன் முழுத்திறமையையும் நாம் உணர்ந்து கொள்ள முயற்சி செய்கிறார். நம்முடைய ஆற்றலையும், திறமையையும் அவருக்கென்று பரிசுத்தம் பண்ணுவோமானால் தேவனுடைய அபிஷேகம் அதை மேம்படுத்தி விரிவுபடுத்தி மனித தேவ வேலைக்காரனாய் நம்மால் செய்ய முடிவதைக் காட்டிலும் அதிகமாய் அடைவதற்கு நம்மை தகுதிபடுத்துகிறார்.

= நம்மை கனி கொடுக்கிறவர்களாய் மாற்றுகிறது. அது தேவனுக்காய் நிலைத்து நிற்கிறது. ஏனெனில் நாம் அவருடைய ஜீவனை நாம் நடத்துகிறவர்களுக்குள்ளே அளிக்க வல்லமைப் பெற்றுள்ளோம் (யோவான் 15:16). தேவ அபிஷேகம் கிறிஸ்தவன் ஆக்கப்பூர்வமாய் சாட்சியாய் இருக்க வியாதியஸ்தர்களை சுகமாக்க, மரித்தோர்களை உயிரோடு எழுப்பி பிசாசுகளை துரத்த உதவுகிறது.

= நம்முடைய ஊழியத்தை செய்வதற்கு தேவ அதிகாரமுடையவர்களாய் இருக்கிறோம் என்பதை உறுதிப் படுத்துகிறது. மற்றவர்களும் நாமும் அபிஷேகத்தின் அடையாளத்தை நம்முடைய வாழ்க்கையில் காணும்பொழுது அவருடைய அதிகாரத்தை நமக்கு பகிர்ந்தளித்து இருக்கிறார் என்று அறிகிறோம். அது அந்த சூழ்நிலையில் நமது ஊழியத்தை உறுதிப்படுத்துகிறதாய் அமைகிறது. நம்முடைய அதிகாரத்தின் இந்த உறுதிப் படுத்துதல் வேலை செய்வதினாலோ, மனித முயற்சியின் ஆதாரத்திலோ வருவதில்லை. தேவனிடத்திலிருந்து மாத்திரமே வருகிறது. உண்மையிலே அதிகாரம் என்பது அபிஷேகத்தின் இரட்டை சகோதரர்களில் ஒருவர் என்று எண்ணப்படலாம். ஒன்று இல்லாமல் மற்றொன்று முற்றிலும் அழிந்துபோம் எப்பொழுது ஜனங்கள் தேவ அபிஷேகத்தின் வழிந்தோடுதலை உணருகிறார்களோ அப்போது நமது அதிகாரத்திற்கு கீழ்படிவதற்கு அதிக சித்தமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். தேவ அபிஷேகத்தை பெறவில்லை யென்றால் அதிகாரத்தின் இடத்திலிருந்து செயல்பட முயற்சிப்பதை விட்டு விடு. அதாவது எந்தவித சபை தலைமைத்துவ பொறுப்பிலிருந்தும்.

= தேவனின் மாறாத இரக்கத்தையும், உண்மையையும் அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு வெளிப்படுத்துகிறது (சங்கீதம் 18:50). தேவன் தம்முடைய ஜனங்களை ஏதாவது செய்ய சொல்லிவிட்டு, அதன்பின் அதை நிறைவேற்றுவதற்கு தேவையானவற்றை கிடைக்கச் செய்யாமலிருப்பவர் அல்ல.

= இது இயற்கையையும், தேவனுடைய இருதயத்தையும் வெளிப்படுத்துகிறது. ஏனெனில் அவருடைய குணாதிசயத்திற்கு ஒத்துப்போகிற காரியங்களை மாத்திரம் அவர் செய்கிறார். எதை அவருடைய வார்த்தையில் அவர் வெளிப்படுத்தியிருக்கிறாரோ அதை மாத்திரம்.

= தேவனுக்கும் மற்ற ஜனங்களுக்கும் திறந்தவர்களாய் நம்மை மாற்றி தேவனுடைய கரத்தில் உபயோகம் உள்ள கருவியாய் அவருடைய இராஜ்ஜியத்தில் வேலைகளை அதிக ஆக்கப்பூர்வமாய் செய்வதற்கு நம்மை தகுதிப் படுத்துகிறார்.

= இது தேவனுக்குள் நம்மை இளைப்பாறச் செய்து உண்மையான சுயாதீனமாய் அவருடைய சமாதானத்தை அறியச் செய்கிறது. ஏனெனில் அவருடைய வேலையை அவருடைய பெலத்தினாலும், வல்லமையினாலும் செய்கிறோம். நம்முடைய சொந்த பெலத்தினால் அல்ல. இது அதிக இனிமையான இடர்களையும், விடா முயற்சிகளையும் தேவனுக்கு சேவை செய்வதிலிருந்து எடுத்து விடுகிறது. என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது. (மத்தேயு 11:28-30). தேவ அபிஷேகத்தினால் அவருடைய தலைவர்களாகிய நாம் சந்தோஷத்துடன் அவர் நமக்கு தந்த பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளலாம்.

= இது உணர்வின் தன்மையை கொண்டுவருகிறது. எப்பொழுது தேவனுடைய அபிஷேகிக்கப்பட்ட தலைவர்கள் அபிஷேகத்தில் நிறைந்து இருக்கிறார்களோ அப்பொழுது ஜனங்களுடைய தேவைகளுக்கு அதிக உணர்வுள்ளவர்களாய் இருந்து, அதிக பாரமான கரத்தை அவர்கள் மேல் வைக்காதபடிக்கு அல்லது அவர்களோடு சம்பாஷிக்கும் போது அவர்களை நொறுக்கிப் போடாமல் இருக்க உதவி செய்கிறது. அவர்கள் தேவ பிரசன்னத்தை அதிகமாக உணர்ந்து அவர் ஜனங்கள் மத்தியிலே அசைவாடும் வழியை அறிந்து அந்த சூழ்நிலையில் இயேசு என்ன செய்ய முடியுமோ அதைப் பார்த்து செய்கிறார்கள். இது தீர்க்கதரிசன பிரசங்கத்திற்கு வழிவகுத்து சபையினுடைய அங்கத்தினர் தேவைகளுக்கு நேரடியாக பேசுகிறது. அல்லது ஜனங்களுடைய விடுதலைக்காக, சுகத்திற்காக ஜெபிக்க வழி நடத்துகிறது. தேவன் அவருக்கும் அவருடைய வழி நடத்துதலுக்கும் நாம் உணர்வுள்ளவர்களாய் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். அவருடைய தலைவர்களாகிய நமக்கோவென்றால் பரிசுத்த ஆவியானவர் உயர்த்துகிற விதமாய் அவருக்கு கீழ்படிவதாகும்.

= இது தேவனுடைய ஜனங்களை வழி நடத்தக் கூடியவர்களாய் மாற்றுகிறது. ஏனெனில் தேவன் நம்மை அங்கிகரித்து இருக்கிறார் என்ற முத்திரையாய் இருக்கிறது. அதாவது தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆக்கப்பூர்வான தலைமைத்துவத்திற்காய் அந்த நபரை தகுதிப்படுத்துகிறது, பயிற்சியளிக்கிறது.

= எல்லாக் காரியங்களைப் பற்றிய உண்மையையும் உபதேசிக்கிறது. இயேசுக் கிறிஸ்துவில் நிலைத்திருக்கும்படி போதிக்கிறது (1யோவான் 2:20,27).

= தேவன் பார்க்கிற விதமாய் அவருடைய உள்நோக்கத்தோடு ஞானத்தோடு புரிந்துக் கொள்ளுதலோடு, மதிப்பீடு செய்கிற விதமாய் நாம் பார்க்க உதவிச் செய்கிறது. நம்முடைய சொந்த நலனுக்காய் இந்தக் காரியங்கள் கொடுக்கப்படுவதில்லை. மாறாக, அதிக ஆக்கப்பூர்வமாய் நாம் தேவனுக்கு சேவை செய்ய நமக்கு உதவுவதற்காய் கொடுக்கப்பட்டிருக்கிறது.

= தேவனுடைய சந்தோஷத்தை கொண்டு வருகிறது (எபிரெயர் 1:9).

= தலைவர்களாகிய நாம் நம்முடைய அபிஷேகத்திலே செயல்படும்பொழுது நாம் நடத்துகிறவர்களும் அவருடைய அபிஷேகத்திலே வருவதற்கு இது உதவுகிறது.

= தேவனுடைய அபிஷேகம் எந்த சூழ்நிலையிலும் தேவபிரசன்னத்தையும், வல்லமையையும் கொண்டு வருகிறது. இம்மைக்குரிய காரியத்திலும் தேவனுடைய அபிஷேகத்தை நாம் உணரலாம் அல்லது தினசரிப் பணிகளான சாப்பிடுதல் அல்லது நண்பர்களோடு மனித காரியங்களுக்கு சம்பந்தப்பட்ட செயல்பாடுகளை பேசும்பொழுது மற்றும் தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் சம்பந்தப்பட்ட காரியங்களை பேசும் போதும் உணரலாம்.

= எப்பொழுது நாம் உண்மையாக தேவனுடைய அபிஷேகத்தில் இருக்கிறோமோ, அப்பொழுது நம்மை தேவனிடத்தில் கொண்டு வந்து அவருடைய சித்தத்தை செய்ய நமக்கு உள்ளுந்தல் கொடுக்கிறது. ஆவியோடும், உண்மையோடும் அவரை துதி ஆராதனை செய்வதற்கு நம்மை உற்சாகப் படுத்துகிறது (யோவான் 4:23,24). நாம் செய்ய வேண்டிய ஒரே காரியம் நாம் செய்கிற எல்லாவற்றிலும் தேவனை மகிமைப்படுத்துவது எந்த ஒரு காரியத்திலும் எல்லாவற்றிலும் அவரை முதன்மையாக வைப்பது.

ஒருவருடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம்

ஒரு தலைவருடைய ஊழியத்தில் வெற்றி என்பது அவருடைய வாழ்வில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை முற்றிலும் சார்ந்திருக்கிறது. ஒரு தலைவருடைய ஊழியத்தில் தேவனுடைய அபிஷேகம் இல்லாவிட்டால் அவர் தேவனுடைய இராஜ்ஜியத்திற்காக நிலைத்து நிற்கும் எந்த கனியையும் உருவாக்கமாட்டார். தேவன் மாத்திரமே கொடுக்கக்கூடிய ஆவிக்குரிய அசைவு இல்லாவிட்டால் ஒரு தலைவருடைய ஊழியம் செத்ததும், வாழ்க்கை இல்லாததுமாய் இருக்கும். வெளிப்புறமாக ஒரு தலைவருடைய தொழில்துறை திறமை தோற்றம் முக்கியமான காரியமல்ல. ஆனால் ஆவிக்குரிய திறமையை தன்னுடைய வாழ்வில் உபயோகித்து மற்றவர்களுடைய வாழ்வில் குணாசதிசயத்தில் மாற்றத்தை கொண்டுவருவது தான் முக்கியமான காரியமாகும். பவுல் சொன்னது போல "தேவனுடைய இராஜ்ஜியம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது" 1கொரிந்தியர் 4:20; ஒப்பிடு 1கொரிந்தியர் 2:4,5).

இன்றுள்ள சபை பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் கீழ் செயல்படுவது இன்றியமையாத தேவையாய் இருக்கிறது. இந்தத் தேவை சபையினால் உயரத்தில் வைத்துவிட்டு மற்ற வழியில் போகும் வாய்ப்பினால் தொழில்துறையின் நடைமுறையைப் போல் செயல்படுவதை சார்ந்திருக்கிறது. சபையின் தெளிவான தேவை வெற்றியை உருவாக்கும் தெய்வீகமான ஒன்று. ஆவிக்குரிய செயலின்மை இன்று சபைகளின் மேல் வந்திருக்கிறது. அது இந்த தேவையை வெளிப்படுத்திக் காட்டுகிறது. ஏனெனில் தேவனுடைய இராஜ்ஜியம் ஒரு ஆவிக்குரிய இராஜ்ஜியம். அது ஆவிக்குரிய தத்துவங்கள் மற்றும் ஆவிக்குரிய வல்லமையினால் கண்டிப்பாக செயல்பட வேண்டும்.

அபிஷேகத்தின் பொருத்தமில்லாத ஆதாரம்

துரதிஷ்டவசமாக இன்றைய சபைத் தலைவர்கள் உலகப் பிரகாரமான கல்வி நிறுவனங்களில் பயிற்சி எடுத்தவர்கள் அல்லது உயர்கல்வி கலாசாலையில் பயிற்சி எடுத்த அவர்களுக்கு தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட அபிஷேகத்தில் வல்லமையைக் குறித்து ஒன்றுமறியார்கள். ஆனாலும் சில கலாசாலை பட்டதாரிகள் ஸ்தல சபை வெற்றிக்கு எப்படியெல்லாம் செய்யவேண்டுமென்ற அநேக காரியத்தை கற்றிருக்கிறார்கள் என்பதை உணருகிறார்கள். பட்டதாரிகள் நம்பிக்கையுடன் இப்படிபட்ட பகுதிகளை படித்திருக்கிறார்கள். அவை பிரசங்கத்தை எப்படி ஆயத்தம் செய்வது, எப்படி பிரசங்கிப்பது, எப்படி ஞானஸ்நானம் கொடுப்பது, கர்த்தருடைய பந்தியை எப்படி நடத்துவது, சபை ஆராதனையை எப்படி நடத்துவது, எழுப்புதல் கூட்டங்கள் எப்படி நடத்துவது, சபையை எப்படி வளரச் செய்வது. தெளிவாக இவைகளெல்லாம் சபையின் ஊழியத்திற்கு முக்கியமானவைகள். ஆனால் அவைகள் ஆவியின் வாழ்க்கையை உடையவைகளாக இருக்க வேண்டும்.

எப்போது பட்டதாரி ஊழியங்களில் பிரவேசிக்கின்றானோ, அப்போது சில நேருக்கு நேர் சந்திக்கும் காரியங்கள், எப்படியெல்லாம் செய்யவேண்டும் என்ற காரியம் கிரியை செய்ய அதிக குழப்பங்கள் உண்டாகிறது. சிறிய கற்று தேர்ந்த போதக உபகரணங்கள் இன்று அநேக ஆரம்ப தலைவர்களுக்கு தேவையான சராசரி உபகரணமாய் இருக்கிறது. எப்பொழுது இந்த உபகரணங்கள் வேலை செய்யவில்லையோ அப்போது அந்த தலைவர்கள் மிக அதிகமான சோர்வை அனுபவிக்கிறார்கள்.

உடனடியாக தோன்றுகிற பிரச்சனை என்னவென்றால் உலகப்பிரகாரமான கல்லூரிகள் மற்றும் சில வேத கலாசாலைகளில் கற்றுக்கொண்ட அநேக தத்துவங்கள் வேதவசனத்தின் அடிப்படையினால் ஆனவைகளல்ல. ஆனால் ஆழமாக வேதவசனத்திற்கு அர்ப்பணித்து இருக்கின்ற வேத கலாசாலைகளுக்காய் நான் தேவனைத் துதிக்கிறேன். அவைகள் தங்களுடைய பட்டதாரிகளுக்குள் உறுதியான வேதாகம நம்பிக்கையை உருவாக்குகிறார்கள்.

துரதிஷ்டவசமாக சில வேத கலாசாலை இவைகளை அளிப்பதில்லை. அதற்குப் பதிலாக வெறுமையான உலர்ந்த கல்விப் படிப்புகளை மாத்திரம் அளிக்கிறார்கள் (பொதுவாக மனித நல கொள்கை உள்ளடக்கங்களால் நிரம்பியது மற்றும் உயர்விமர்சன படிப்புகள்) அவைகள் ஆவியை

அவிழ்த்துப் போடுகிறது. எப்படி மூன்று முதல் எட்டு வருடங்கள் இந்த விதமான சூழ்நிலையில் தங்குவது ஒரு ஆண் அல்லது பெண்ணின் ஆவிக்குரிய வாழ்க்கையை பாதிக்காமல் இருக்குமா?. அநேக கலாசாலைகள் வேதத்தை இரண்டாந்தர குறிப்பாக உபயோகிக்கிறார்கள். சபையின் தேவைகளுக்கு பதிலளிப்பதற்காக அவர்கள் முக்கியமாக உளவியல், மெய்யறிவியல், சமுதாய வாழ்வியல், மனித இயல், சமூகஉழவியல், உலக வரலாறு, தொழில் நிர்வாகம் மற்றும் பலவற்றைப் பார்க்கிறார்கள். எப்பொழுது இவைகள் எல்லாம் ஒரு தலைவருடைய படிப்பு வாழ்க்கையில் மையமாக மாறுகிறதோ அப்பொழுது அவருடைய ஆவியின் அபிஷேகத்தை உலரச் செய்து விடுகிறது.

ஏன்? ஏனெனில் தேவன் எந்த மாமிச மகிமையையும் அவருடைய பிரசன்னத்திற்குள் வர அனுமதிக்க மாட்டார் (1 கொரிந்தியர் 1:2). பரிசுத்த அபிஷேக எண்ணெய் மாமிச காரியங்கள் மேல் தங்க முடியாது. இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் இரத்த சுத்திகரிப்பை அனுபவித்த காரியங்களில் மாத்திரம் தங்க முடியும். அதற்கு பதிலாக அவருடைய ஆவியில் தேவனுடைய கரத்தின் கீழ் எப்பொழுது ஒரு தலைவர் தனது சிந்தனையில் அறிவுப்பூர்வமாக ஊழியம் செய்ய வற்புறுத்தும்போது அவர் முழு தலையுடன் வெறுமையான கரத்தையுடைய கிறிஸ்தவர்களை உருவாக்குவார். அதிக அறிவு ஆனால் எந்த வல்லமையும் இல்லை. ஒவ்வொரு கடந்த கால பரிசுத்த ஆவியானவரின் ஆவிக்குரிய சந்திப்பில் தேவன் அவருடைய இராஜ்ஜியத்தை கட்டுவதற்கு அவர் உபயோகப்படுத்தும் மீண்டும் வலியுறுத்தி கூறுகின்ற காரியங்களான ஜெபம், வேதவசன பரிசுத்தம், உபவாசம், கீழ்படிதல், பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தை சார்ந்திருத்தலாகும்.

எது அபிஷேகம் அல்ல

எவை பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்று வரையறுப்படுதற்கு முன், எவை பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அல்ல என்பதை வரையறை செய்வோம். இவைகள் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அல்ல:

- வெறும் இயற்கையான திறமை அல்லது தாலந்து
- தொழில் திறபண்புடமை
- வெளிப்புறமான வெளிக்காட்டுதல்
- வெறும் அலங்காரமான பேச்சு
- புகழ்பெற்ற பிரசங்க முறையைப் போல் நடித்தல்
- முறையான பிரசங்க இலக்கிய பயிற்சி
- சபைப் பதவி அல்லது அதிகாரம்
- ஸ்தாபனத்தினால் அங்கிகரிக்கப்படுதல்
- நன்றாக பேசும் நுணுக்கங்கள்
- நல்ல கல்வியினால் ஏற்படும் நேரடி விளைவுகள்
- வெளிப்புறமான மதசம்பந்த அமைப்புகள்
- இனிமையான ஒளி, அழகிய இசை
- வெறுமையான உணர்ச்சி வசப்படுதல்
- சதாரணமாக எப்படி செய்வது என்ற பட்டியலைப் பின்பற்றுதல்
- அமைதியான மதக்கூட்டம்

மேலே சொல்லப்பட்ட எதுவும் தேவனுடைய அபிஷேகத்தின் பிரசன்னத்தை வாழ்க்கையிலோ, தலைவரிலோ, சபை ஆராதனையிலோ உறுதி செய்யாது. அபிஷேகம் தேவனுக்கு முன்பாக தாழ்மையுள்ள நொறுங்கிய இருதயத்திலிருந்து பிறக்கிறது.

அபிஷேகம் வரையறுக்கப்படுகிறது

ஊழியத்திலே தேவனுடைய அபிஷேகத்தை பொதுவான கருத்துடைய வரைமுறையை உருவாக்க முதலாவது அடிப்படை எபிரெய மற்றும் கிரேக்க வார்த்தைகளை வேதம் மொழி பெயர்ப்பது ‘‘அபிஷேகம’’ மற்றும் ‘‘அபிஷேகி’’.

எபிரெய வார்த்தைகள்:

"*பாலால்*": ஒரு முதன்மை வார்த்தை அர்த்தம் பொங்கி வழிகிறது (விசேஷமாக எண்ணெயுடன், பயன்பாட்டில் கலப்பது என்று அர்த்தம்)

"*தாசன்*": முதன்மை வார்த்தை, அர்த்த வார்த்தை, கொழுத்தவராய் இருத்தல், செயல்பாட்டு பொருளிலே கொழுத்தவர் அல்லது கொழுத்தவராக கருதப்படுதல். அதின் அர்த்தம் விசேஷமாக அபிஷேகி அல்லது உருவகம் சார்ந்த பொருள் திருப்திபடுத்துதல்.

"*இஸ்ஸர்": எண்ணெய்க்கான பெயர்ச்சொல், வெளிச்சத்தை கொண்டுவர உபயோகப் படுத்தப்பட்டது அல்லது உருவகம் சார்ந்த பொருள், அபிஷேகிக்க.

"*மின்ஸா*": முதன்மை வார்த்தையிலிருந்து வருகிறது. இதன் அர்த்தம் எண்ணெயை தடவுதல், விரிவாக்க சுற்றிலும் பரவிச் செல்ல என்ற உணர்வில் சொல்லப் பட்டுள்ளது (விரிவாக்கத்தின் மூலம், வெளியே விரிவாக்கப்பட்ட இறக்கைகள் மூலமாய் இதை செய்)

"*மாஜா*": முதன்மை வார்த்தையின் அர்த்தம் எண்ணெயை தடவுதல், அபிஷேகிக்க. உட்பொருளிலே இதன் அர்த்தம் பரிசுத்தம் பண்ண. அதோடு சாயம் பூச.

"*மாசியா*": பொதுவாக பரிசுத்தம் பண்ணப்பட்ட நபரைக் குறிக்கிறது (ஆசாரியர் அல்லது பரிசுத்தவான்) விசேஷமாக மேசியாவிற்கு.

"*குவிக்*": முதன்மை வார்த்தையின் அர்த்தம் எண்ணெயினால் பூசுதல், அபிஷேகித்தல்.

"*சிமன்*": மசகு நிலையில், விசேஷமாக தண்ணீர் வடிவில் (ஆலிவ் எண்ணெயிலிருந்து பெறப்பட்டது), அடிக்கடி நறுமணப் பொருளில். உருவகம் சார்ந்த பொருள், இந்த வார்த்தையின் அர்த்தம் செறிவு நிறைந்தது.

புதிய ஏற்பாட்டு கிரேக்க வார்த்தை:

"*அலிப்பியோ*" : எண்ணெயில் (பொதுவாக நறுமணத்தில்)

"*எக்சோரியோ*" : தடவுதல் (எண்ணெயினால்), முற்றிலும் தடவு

"*எப்சோரியயோ*" : மேலும் கீழுமாக தடவுதல்.

"*முரிசோ*" : தடவு (நறுமணப் பொருள்), காயத்திற்கு போடப்படும் மசகுப்பொருள் (உவனாயம்).

"*சேரியோ*" : எண்ணெயில் தடவுதல், உட்பொருள் கருத்து, பரிசுத்தம் செய்தல் குறிப்பிட்ட வேலைக்காக, அல்லது சமய சேவைக்காக.

தொடர்புடைய ஆங்கில வார்த்தைகள்:

"*அபிஷேகி*" : எண்ணெயினால் தடவுதல் அல்லது எண்ணெய் பசையுள்ள பொருளினால்: பரிசுத்தசமய சடங்கின் ஒரு பகுதியாக எண்ணெயை தடவுதல். விசேஷமாக பாதுகாக்கும் நோக்கத்தோடு.

"*அபிஷேகிக்கப்பட்ட*" : தேவனுக்காக அபிஷேகிக்கப்பட்ட நபர்.

"*மசகுள்ள தடவு மருந்து*" : புண்ணாற்று மருந்து, அல்லது தோலில் தடவப்படுகிற காயத்திற்கு போடப்படும் மசகுப்பொருள் (உவனாயம்), அடிக்கடி சில மருந்து வகைகள் கலந்து குணப்படுத்துவதின், அழகுப்படுத்துவதின் நோக்கில்.

"*விரைவுப்படுத்து*": உயிரோடு இருப்பதற்கு, உயிர் வருவதற்கு, ஆவிக்குரிய உயிர்மீட்சி ஏற்பட, ஆவிக்குரிய தூண்டுதலுக்கு காரணமாக அல்லது பற்ற வைக்க, கடுமையாக எரிய காரணமாக, விரைவாக செயல்பட, முடுக்கி விட, செயல்பட்டு வளர்ச்சி, விரிவாக்கம் ஏற்படும் நிலையில் நுழைய, அதிக வெளிச்சத்துடன் பிரகாசிக்க.

"*பரிசுத்தமாக்குதல்*": அவருடைய நோக்கித்திற்காக தேவனுக்கு அர்ப்பணித்தல் குணாதிசயத்தில் பரிசுத்தமாக்கப்பட, அதன் மூலம் ஆவிக்குரிய உபயோகித்திற்கு பொருத்தமாக மாற, தேவனுடைய சேவைக்காக பிரித்தெடுத்தல்.

அபிஷேகத்தின் பொதுவான வரையறை: இப்போது நாம் எபிரெய, கிரேக்க, ஆங்கில வார்த்தையின் அர்த்தங்களை ஒன்றிணைத்து ஒரு பொதுவான கருத்துடைய அபிஷேகத்தின் வரையறையை உருவாக்குவோம். இது தேவ ஆவியின் அபிஷேகத்தின் சில ஆவிக்குரிய புரிந்துக் கொள்ளுதலை கொடுக்கும்:

தேவ ஆவியின் அபிஷேகம் என்பது மனித வாழ்க்கையில் மேசியாவின் தெய்வீக பரிசுத்த ஜீவன் வழிந்தோடுதல், அது தனிப்பட்ட கிறிஸ்துவின் சிலுவை அனுபவத்தின் மூலம் தேவனுக்காக பரிசுத்தம் பண்ணப்பட்டு அது ஆவிக்குரிய செறிவை ஏற்படுத்தி, ஆழமான ஆவிக்குரிய திருப்தியை மற்றும் தெளிவான கிறிஸ்தவ கனி நிறைவை உருவாக்குதலாகும்.

அபிஷேகத்தின் விளக்கங்கள்

இந்த வேளையில் அதிக நடைமுறையிலான நன்கு பொருந்திய வரையறையை உருவாக்க பின்வரும் காரியங்களான, ஒரு ஆசிரியர் வாழ்க்கையில் தேவனுடைய அபிஷேகத்தின் வரையறைகளையும், விளக்கங்களையுமாகிய இரண்டையும் கொடுக்கிறோம். ஆவியின் அபிஷேகத்தின் சான்றுகள்:

- ஒரு தலைவரின் இயற்கையான திறமைகளை தாண்டி தேவன் செல்லும்போது பிரசங்கம் செய்ய, போதிக்க, ஆலோசனை கொடுக்க இயற்கைக்கு மேற்பட்ட திறமைகளை கொடுக்கிறார்.

- முழு செய்தியையும் மடை திறந்த வெள்ளம்போல ஒரு தலைவர் பிரசங்கிக்கும் போது, ஆவியினாலே விரைவாக முழுவதுமாக அவருடைய திட்டம் பண்ணிய செய்தியை பயன்படுத்துவதை நிறுத்துகிறார். சபையார் ஆவிக்குரிய ரீதியில் விசேஷமான வழியில் அசைக்கப்படுகிறது. (பரிசுத்த அபிஷேகத்தின் அசைவாடுதல் இல்லாமல் இந்த முயற்சி நடை பெறுவதை நீங்கள் எப்பொழுதாவது கண்டால் அது தெளிவாக உற்பத்தி திறன் இல்லாமல் இருப்பதை நீங்கள் நினைவு கூறலாம்).

- விழிப்பான நிலையில் இருக்கும்போது தேவனின் நிலையான அசைவாடுகிற பிரசன்னம் தோன்றுதல்.

- தலைவருடைய செய்தி ஆவிக்குரிய விளைவுகளை கேட்பவர்களின் வாழ்விலே கொண்டுவரும்போது செய்தி இலக்கணம், பிரசங்க இலக்கியம், ஸதாபன, உயிர்கல்வி முறைப்படி, படைப்பு விதிகளை பின்பற்றாமல் இருந்தாலும் (இது பேசும் திறமைகளான இவைகளை தேவையில்லை என ஒதுக்கவில்லை, எப்படியிருந்தாலும் அவைகள் அதிகமாக தேவையானவைகள்).

- சிலர் பாவங்களில் இருந்து மனந்திரும்பிய பின் அல்லது உடைக்கப்பட்ட நிலைமைக்குப் பிறகு ஒரு தலைவர் தேவன் அவருக்கு மிக அருகில் இருப்பதாக உணர்கிறார். அதன்பிறகு தன்னுடைய ஜனங்களுக்கு அதே ஆவியில் ஊழியம் செய்கிறார்.

- தேவன் எப்பொழுது வியாதியஸ்தர்களை சுகமாக்குகிறாரோ, பாவிகளை விடுவிக்கிறாரோ, எப்பொழுது தம்முடைய வல்லமையை தான் உருவாக்கிய பாத்திரத்தின் மூலம் வெளிப்படுத்துகிறாரோ அப்பொழுது தலைவருடைய ஊழியத்தில் ஆவியின் வல்லமை இருக்கிறது.

- எல்லா பாடகர்களும், இசையமைப்பாளர்களும் தேறியவர்களாய் இல்லாதிருந்தாலும், எப்பொழுது சில கிறிஸ்தவர்களின் பாடல் அல்லது இசை தேவபிரசன்னத்தை தொட்டு வல்லமை அதின்மேல் இறங்கும் போது.

- எப்பொழுது ஒரு தலைவர் ஆவியிலே உயர்த்தப்பட்டு தீர்க்கதரிசன உள்ளுந்தல் மூலமாக வேத வசன ஊழியம் செய்கிறாரோ மற்றும் அங்கே கூடி இருக்கிற ஜனங்களின் தேவைகளை நேரடியாக பேசும்பொழுது.

- எப்பொழுது ஜெபத்தின் ஆவி பரிந்து பேசுதலின் ஆவி சபையார் மேல் வந்திறங்கி எல்லாரும் ஜெபித்து அவர்களுடைய தருணத்திலே தானாகவே தேவன் வெவ்வெறு தனிப்பட்ட நபர்களுக்கு இருதயத்திலே கொடுத்த குறிப்பிட்ட பாரங்களுக்காக ஜெபித்தல்.

- எப்பொழுது தேவன் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக ஆவிக்குரிய அதிகாரத்தை கொடுத்து ஒரு தலைவரின் குணாதிசயத்தை வரங்களை வெளிப்படுத்திக் காட்டும்போது.

- எப்பொழுது நடைமுறை ஊழியமாகிய உண்மையான சுகமாக்குதல், அன்பு, புரிந்துக் கொள்ளுதல், ஜெபம், உதவி இவற்றின் மூலமாக நொறுக்கப்பட்ட அல்லது காயப்பட்ட இருதயமுள்ளவர்களுக்கு ஏற்படுகிறதோ அப்போது.

- எப்பொழுது ஒரு நபரின் முழுமையும் (ஆவி, மனது, சித்தம், உணர்ச்சி, சரீரம்) நேர்மறையாக பரிசுத்த ஆவியானவரின் ஆதரவைப் பெற வேண்டி நிற்கும் பொழுது.

- எப்பொழுது ஒரு நபர் உணர்வுள்ளவராக கீழ்படிதல் உள்ளவராக உட்புறமாக நடத்தும் பரிசுத்த ஆவியானவருக்குள் இருக்கிறாரோ, அது வேத வசனத்திற்கு முரண்பாடாக இல்லாதிருக்கும் பொழுது.

- எப்பொழுது தலைவருடைய உட்புறமான உணர்வு ஆவியானவர் மூலமாக குறிப்பிட்ட ஆவிக்குரிய அல்லது சரீர தேவைகள் சபை ஆராதனையில் சபையாருக்கு ஊழியம் செய்யும் பொழுது.

நாம் இப்படிப்பட்ட அநேக விளக்க உரைகளைக் கொடுக்கலாம். ஏனெனில் தேவன் வல்லமையாக பல வழிகளில் கிரியை செய்கிறார். எல்லா விளக்க உரைகளின் சராம்சமும் தானாகவே பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதலை பின்பற்றுவதை நோக்கியே இருக்க வேண்டும். ஆவிக்குரிய நிலைமையை (சுகப்படுத்துவதற்காக) வெளிக்காட்டுகிறது. ஒரு தலைவர் அபிஷேகத்திலே செயல்பட்டு ஏற்கனவே போடப்பட்ட திட்டம், ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பிரசங்கத்தை பின்பற்றுவதையும் இங்கே நாம் சேர்த்துக் கொள்ளலாம். அந்த சூழ்நிலைக்காக பரிசுத்த ஆவியானவர் மூலமாய் அவைகள் தொடங்கப்பட்டவைகளாய் அல்லது விரைவுபடுத்தப்பட்டவைகளாய், அளிக்கப்படலாம். அபிஷேகம் மனிதனுடைய மனதை வெறுமையாக்குவதில்லை. அது தலைவருடைய மனதை தேவனுடைய ஆவி மற்றும் இருதயத்தை ஒவ்வொரு குறிப்பிட்ட ஒவ்வொரு சூழ்நிலைக்கும் கடத்தும் பாத்திரமாய் உபயோகப்படுத்தப் படுகிறது. தலைவர் ஆவியின் அசைவாடுதலில் வழிந்தோடும் போது இது நடைபெறுகிறது.

உண்மையிலே பெரிய முயற்சி மற்றும் ஒழுக்கத்தின் மூலம் ஆவியின் வரங்களை பயிற்சி பண்ணுவதற்கு அபிஷேகம் தேவைப்படுகிறது. அதற்கு ஒழுக்கத்துடன் செயல்பட ஆழமான ஜெபவாழ்க்கை மற்றும் உண்மையான ஆவிக்குரிய வேதவசன தியானம் தேவையாய் இருக்கிறது. மேலும் தலைவர் மென்மையாக தன்னுடைய ஆவிக்குரிய செவியை ஒவ்வொரு ஆராதனையிலும் அல்லது நிகழ்ச்சியிலும் தேவனை மையப்படுத்துவது தேவையாய் இருக்கிறது. அந்த குறிப்பிட்ட நேரத்திலே ஜனங்களை விடுவிக்க தேவனுடைய ஏற்படாகிய மற்றொரு வழிக்கு தன்னுடைய திட்டத்தை மாற்றி அமைக்க ஆயத்தமாய் இருக்க வேண்டும். ஆவியானவர் மேலும் தலைவருக்கு புரிந்துக் கொள்ளுதலின் அபிஷேகத்தை விடுவித்து யார் இந்த காரியங்களை செய்ய வேண்டுமென்று சொல்லுவார்.

அபிஷேகிக்கப்படுதல் என்கின்ற பாடம் உண்மையிலே அர்ப்பணிக்கப்பட்ட ஒன்று. இது மிகவும் ஆவிக்குரிய ஒன்று. ஆனாலும் குறிப்பிட்ட சூழ்நிலையில் நடைமுறை பயன்பாட்டை நேரடியாக தொடர்புபடுத்துகிறது. அபிஷேகத்திலே அசைவாட ஒரு முக்கியமான திறவுகோல் தாழ்மையான இருதயத்தை உடையவர்களாய் இருத்தல். நம்மில் யாரும் தேவன் விரும்புகிற வண்ணமாய் அவரால் இன்னும் உபயோகிக்கப்படவில்லை என்பதை உணர வேண்டும். மற்றொரு திறவுகோல் ஆத்துமாக்களை இரட்சிக்கப்பட சபை பக்தி விருத்தியடைய கூட்டத்தில் இயேசுகிறிஸ்துவின்

பிரசன்னத்தையும், வல்லமையும் விடுவிக்கபட ஆவியானவர் நம்மை நடத்துவதற்கு குறிப்பிட்ட மற்றும் வித்தியாசமான வழியில் ஆவியானவர் நம்மை நடத்த திறந்த நிலை உடையவர்களாய் இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தை சமநிலையை "பாதுகாப்பான சரிபார்த்தலை" வழங்குகிறது. மேலும் வேத தத்துவங்களை ஆவியானவருடைய வழிநடத்துதலை புரிந்துக் கொள்ள உதவி செய்கிறது.

அபிஷேகத்தின் உபயோகங்கள்

பழைய ஏற்பாட்டிலே அபிஷேகத்தின் எண்ணெய் பொருளாதார ஆசிர்வாதத்தின் அடையாளம் (உபாகமம் 32:13), ஆவிக்குரிய தசமபாகம் (12:17), மற்றும் பணம் செலுத்துதல் என்று அர்த்தம் (1இராஜாக்கள் 5:11). மேலும் கூடுதலாக அபிஷேக எண்ணெயின் ஒரு முக்கிய பயன்பாடு என்னவென்றால் இஸ்ரவேலரின் பலவிதமான தியாக பலிகளிலும் காணிக்கையிலும்.

புளிப்பில்லாத அப்பத்தின் துண்டுகள் ஆரோனையும் அவனுடைய குமாரனையும், எண்ணெயை பரவ விடுதலின் மூலமாய் பரிசுத்தம் பண்ண பயன்பட்டது (யாத்திராகமம் 29:1,2). இது இந்த நாள் தலைவர்களுக்கு முக்கிய பயன்பாட்டை கொண்டிருப்பதற்கான இரண்டு காரணங்கள், முதலாவது பரிசுத்த ஆவியானவரினால் அபிஷேகம்பெற தலைவருடைய வாழ்க்கையிலிருந்து பாவம் நீக்கப்பட (புளிப்பு) மற்றும் அவனுடைய ஆர்வத்திலும், நடக்கையிலும், நேர்மையும், உண்மையும் வருவதற்கு (1கொரிந்தியர் 5:1-13 யை பார்). இரண்டாவதாக, எல்லா தலைவர்களும் அபிஷேகிக்கப்பட்டு தேவனுடைய சேவைக்காக ஆரோனும் அவனுடைய குமாரனைப் போல் பரிசுத்தம் பண்ணப்பட வேண்டும் (யாத்திராகமம் 29:1,23; லேவியாரகமம் 6:20-22; எண்ணாகமம் 6:13-15).

உண்மை என்னவென்றால், மெல்லிய மாவு ஆட்டுக்குட்டியுடன் காணிக்கையாக காலையிலும், மாலையிலும் எண்ணெயுடன் கலந்து படைக்க வேண்டும் (யாத்திராகமம் 29:2,7,40). இது இரண்டு ஆவிக்குரிய பயன்பாட்டை உடையதாய் இருக்கிறது. தலைவர் அவருடைய அபிஷேகம் தொடர்ந்து புதுபிக்கப்பட வேண்டும் என்பதைக் குறித்து விழிப்பாய் இருக்க வேண்டும் (காலையிலும், இரவிலும்). எப்பொழுது ஒரு தலைவர் தேவனுக்குப் பலியை செலுத்துகிறாரோ (பழைய ஏற்பாட்டில் ஆட்டுக்குட்டி), அபிஷேகம் (எண்ணெய்) அதோடு இணைந்து வருகிறதென்பதை அறிய வேண்டும். இது சொல்லுகிற காரியம் ஒவ்வொரு தலைவரும் தேவனுக்கு பலி செலுத்த வேண்டும். தலைவருடைய பலிக்கு பதிலளிக்கும் விதமாக தேவன் நிறைவான அபிஷேகத்தை தலைவருடைய வாழ்க்கையிலும், ஊழியத்திலும் தேவன் கொடுக்கிறார்.

தானிய காணிக்கைகள், எண்ணெயிலே பிசைந்து அடுப்பிலே பாகம் பண்ணப்பட வேண்டும் அல்லது நெருப்பிலே வாட்டப்பட வேண்டும் (லேவியராகமம் 2:4,5; இதையும் பார் 2:1,2,6,7; மற்றும் 7:10,12 மற்றும் 9:4 மற்றும் 14:10,21 மற்றும் 23:10-13). பயன்பாட்டிலே குறிப்பிடுகிற காரியம் என்னவென்றால் தேவன் தலைவருக்கு அவருடைய ஆவியின் அபிஷேகத்தை கொடுக்கிறார் எந்த விதமான சோதனைகள், பரீட்சைகள் (அடுப்பிலே சுடப்பட்டாலும், வாட்டப்பட்டாலும்) வந்தாலும் அதை தலைவர் கடந்து செல்லும்படியாக உதவி செய்கிறார். ஒவ்வொரு தலைவரும் நம்பிக்கையுடன் அறிக்கையிட முடியும், எல்லா காரியங்களும் என்னுடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்திற்கு நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது. ஏனெனில் நான் தேவனை நேசிக்கிறேன். அவருடைய நோக்கத்தின் அடிப்படையில் ஊழியத்திற்கு அழைக்கப் பட்டேன் (ரோமர் 8:28 யிலிருந்து எடுக்கப்பட்டது).

சமாதான பலிகள் ஸ்தோத்திரத்தோடு கூட எண்ணெய் கலந்து படைக்கப்பட வேண்டும் (லேவியாரகமம் 7:12). இது வெளிப்படுத்துகிற ஆவிக்குரிய உண்மையென்னவென்றால் தேவன் தன்னுடைய அபிஷேகத்தை சமாதானம் பண்ணுகிற தலைவர்மேல் ஊற்றுகிறார். எல்லா அவனுடைய குழப்பமான சூழ்நிலையிலும் (அவர்களை நண்பர்களாக வரவேற்றல் யாக்கோபு 1:1-3ல் இருப்பது போல), ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஆவிக்குரிய நன்மைக்காக தலைவர் தேவனுக்கு நன்றி செலுத்துகிறார். பரிசுத்த ஆவியானவருடைய மிகப்பெரிய விடுதலையை தன்னுடைய வாழ்க்கையில் அவர் அனுபவிக்கிறார்.

இஸ்ரவேல் தேசத்திற்குள் பிரவேசித்தவுடன் முதல் பலனின் கதிர்கட்டை கொண்டு வருகிற அதே நாளில் தகனபலியாக ஆண் ஆட்டுக்குட்டியை எண்ணெயோடு கூட படைக்க வேண்டும் (லேவியராகமம் 23:10-13). இது குறிப்பிடுவது என்னவென்றால் தேவனிடத்திலிருந்து வந்த புதிய உண்மையில்

தலைவர் பிரவேசிக்கும் பொழுது ஆண்டவர் அவருடைய ஆவியினால் அதிகமாய் அபிஷேகிப்பார் (தேசத்தின் புதிய பகுதி, தலைவரிடத்தில் இருந்து தேவையான பலிகளோடு இணைந்து (குடும்பம் தவறாக புரிந்துக் கொள்ளுதல், சபையால் வெறுக்கப்படுதல், நண்பர்களை இழத்தல்) தேவன் இவ்விதமான பலியை கனம் பண்ணுவார்.

நசரேய விரதத்தின் ஒரு பகுதியான பலியில் எண்ணெய் தடவப்பட்ட புளிப்பில்லாத அடைகள் (எண்ணாகமம் 6:15). உண்மையாகவே தங்களை தேவனுக்காக பிரித்து (நசரேயர்கள் செய்தது போல்) முழுமையாக தேவனுக்கு கொடுப்பவரை தேவன் தம்முடைய அபிஷேகத்தினால் எப்பொழுதும் அபிஷேகிக்கிறார் என்பதை இது குறிக்கிறது. தேவன் தலைவரை தம்முடைய பரிசுத்த தைலத்தினால் அபிஷேகிக்கிறார். உலக பிரகாரமான காரியங்களில் ஈடுபடுவதில் இருந்து ஒவ்வொரு முறையும் தலைவர் தன்னை பிரித்துக் கொள்ளும்பொழுது ஒவ்வொரு முறையும் மிகச் சிறந்த வழியில் தம்முடைய பரிசுத்த தைலத்தினால் தலைவரை அபிஷேகிக்கிறார் (மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை, கசப்பு, வெறுப்பு, கோபம்). ஒவ்வொரு தலைவரும் மனந்திரும்புதலை வாழ்க்கை முறையாக தழுவிக் கொள்ள வேண்டும் (ஒரு தடவை நடக்கும் நிகழ்ச்சியாக அல்ல), அவனுக்கும் அவனுடைய குடும்பத்திற்கும் அவர்களுடைய ஜனங்களுக்கு முன்பாக மாதிரியாய் இருப்பது.

வெள்ளித்தட்டில் செலுத்தியதான தலைவரின் எண்ணெயோடு கூட மெல்லிய மாவினால் நிறைந்திருந்தது (எண்ணாகமம் 7). இது குறிக்கிற காரியம் என்னவென்றால் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் மூலம் மாத்திரமே தலைவர் முழுவதுமாக எல்லா வாக்குதத்தங்களையும், வழிமுறைகளையும், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் முழு இரட்சிப்பிற்குள்ளாக சுதந்தரித்துக் கொள்ள முடியும் (யாருடைய நிறம் வெள்ளியாக இருக்கிறதோ அவர்கள்). பரிசுத்த ஆவியானவர் மாத்திரமே தேவனுடைய இரட்சிப்பின் வேலையின் உண்மையை இயேசுகிறிஸ்துவுக்குள் உண்மையாக நடைமுறைக்கேற்ற விதத்தில் தலைவர்கள் அனுபவிக்கும் விதத்தில் உருவாக்க முடியும்.

ஆசாரிய வேலைக்காக லேவியரை பிரித்தெடுக்கும் பலியிலும் எண்ணெய் சேர்க்கப்பட்டது (எண்ணாகமம் 8:6,8). ஒரு புதிய ஏற்பாட்டு ஆசாரியன் (1பேதுரு 2:5,9) பரிசுத்த ஆவியானவரினால் சுத்திகரிக்கப்பட வேண்டும். அவனுடைய வாழ்க்கையில் இருக்கிற அசுத்தம் யாவும் அவனுக்குள் கிரியை செய்து வெளிப்படுத்தப்படுகிறது. இது எல்லா கிறிஸ்தவர்களுக்கும் உண்மையாக உள்ளது. விசுவாசிகள் (புதிய உடன்படிக்கையின் ஆசாரியர்கள்). ஆனால் குறிப்பாக தேவஜனங்கள் சத்தியத்திற்குள்ளாய் நடத்தும் யாவருக்குள்ளும் இது பொருந்தும்.

அசைவாட்டும் பலி போல் மார்கண்டத்தையும், ஏறெடுத்துப்படைக்கும் பலியில் முன்னந்தொடையையும் (ஆரோனும், அவனுடைய குமரனுக்குமான சமாதான பலியிலிருந்து) அவர்களுடைய அபிஷேகிக்கப்பட்ட பகுதியாக கருதப்பட்டு (லேவியராகமம் 7:34,35). இது முக்கியத்துவப் படுத்தும் காரியம் ஒவ்வொரு தலைவரும் இந்த இரண்டு முக்கியமான அவர்களுடைய வாழ்க்கையின் பகுதியை அவருடைய இருதயத்தின் விருப்பங்களை (மார்கண்டம்), அவருடைய பெலத்தையும் (பெலனான தொடை) முழுவதுமாக தேவனுக்கு கொடுக்கப்பட்டு அவருடைய வாழ்க்கையின் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள. தலைவருடைய இருதய விருப்பத்தின் பகுதியிலோ, பெலத்திலோ செய்யப்படுகிற காரியங்கள் ஒருவேளை முழு வெற்றியைத் தரும் அல்லது அவருடைய ஊழியத்தின் முழுமையான தோல்வியைக் கொடுக்கும். ஒவ்வொரு தலைவரும் தன்னுடைய ஆவிக்குரிய ‘‘மார்பை, தொடையை’’ தேவனுக்குக் கொடுக்க வேண்டும்.

அதிபதியும் ஜனங்களும் ஒய்வுநாள் மற்றும் மாதப்பிறப்புகளிலும் படைக்கும் பலிகளில் எண்ணெய் கலந்து இருந்தது (எசேக்கியேல் 46:1-12). இது குறிப்பிடுகிற உண்மை என்னவென்றால்: சபை தலைவர்கள் (அதிபதி), ஜனங்களும் (சபையார்) முழுவதும் பரிசுத்த ஆவியானவரை ஒருவரோடொருவர் சமாதானமாய் இருக்க (ஒய்வு நாள்) தேவன் சபைக்கு எல்லா புதிய உண்மைகளுக்குள்ளாய் பிரவேசிக்க (மாதப்பிறப்பு) சார்ந்திருப்பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அபிஷேகத்தின் எண்ணெய் மோசேயின் ஆசாரிப்புக் கூடாரத்தில் சாலமோனின் ஆலயத்தை அதனுடைய எல்லாப் பகுதிகளோடும் சேர்த்து பரிசுத்தம் பண்ண உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. ஆசாரிப்புக் கூடாரத்தில் இருந்ததான வெவ்வெறு பொருள்களின் பட்டியல் பரிசுத்த எண்ணெயினால்

அபிஷேகிக்கப்பட்டது. அவருடைய சேவைக்காக இவை தலைவரின் ஆவிக்குரிய பயன்பாட்டை உள்ளடக்கியதாய் இருக்கிறது.

- வெண்கல பலிபீடத்தை அபிஷேகித்தல் (யாத்திராகமம் 29:36; 30:25,28; 40:11) ஆவியானவர் அபிஷேகிக்கும் இடத்தில் தேவனுக்கு பலிசெலுத்த ஒவ்வொரு தலைவரும் உற்சாகப்படுத்த படுகின்றன.

- வெண்கலத் தொட்டியை அபிஷேகித்தல் (30:25,28; 40:11) ஆவியானவர் அபிஷேகிக்கும் இடத்தில் ஒவ்வொரு தலைவரும் வசனத்தினால் சுத்திகரிக்கப்பட உற்சாகப் படுத்தப்படுகின்றன (எபேசியர் 5:25-27).

- பொன்குத்து விளக்கு மற்றும் அதனுடைய உபகரணங்கள் தினமும் அபிஷேகிக்கப் பட்டது (30:25,27). சொல்லுகிற காரியம் தலைவர் ஒவ்வொரு நாளும் அவருடைய வாழ்க்கை பாத்திரத்தை தேவ ஆவியினால் நிரப்புவது முக்கியமானது.

- சமுகத்தப்ப மேஜையும் அவருடைய பிரசன்னத்தின் மேஜை மற்றும் அதனுடைய உபகரணங்களும் (30:25,27) அபிஷேகித்தல், தலைவர் அதிக உள்ளுந்தல் மற்றும் தேவனுடைய இராபோஜனத்தை புரிந்துக் கொள்ள ஜெபிப்பதற்கு சவால் விடுகிறது. அதனால் சபையானது அதிகமான தேவ ஆவியை இங்கே அனுபவிக்க முடியும்.

- பொன் தூபபீடத்தை அபிஷேகித்தல் (30:25,27) குறிப்பிடுகிற காரியம் தலைவர் அதிக ஆழமாக ஜெப ஊழியத்தில் பிரவேசித்தலை குறிக்கிறது (வெளிப்படுத்துதல் 5:8; 8:4). தேவனுக்கு ஆராதனை செய்தல் தேவனுடைய அபிஷேகத்தை அவர் அதிகமாக அனுபவிக்கிறார்.

- பொன் உடன்படிக்கைப் பெட்டியை அபிஷேகித்தல் (30:25,26) இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக அதிகமாக தேவபிரசன்னத்தில் பிரவேசித்து அவர் ஆண்டவருடைய அபிஷேகத்தை அதிகமாக அனுபவித்தலைக் குறித்து பேசுகிறது. இரண்டு அபிஷேகிக்கப்பட்ட கேருபீன்கள் உடன்படிக்கையின் பெட்டியின் மேலே மற்றும் சாலமோன் ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலத்தின் வாசலில் இருந்தவைகள் ஒலிவ மரத்தினால் செய்யப்பட்டவைகள்.(1இராஜாக்கள் 6:23, 31-35).

தீர்க்கதரிசனம் சொல்ல அபிஷேகிக்கப்படல

இந்த எல்லா ஆவிக்குரிய அபிஷேகத்தின் பயன்பாடுகள் ஒரே இறுதியான தேவனுடைய அபிஷேகத்தின் தீர்க்கதரிசன பயன்பாட்டை குறிக்கிறது. அது இயேசுகிறிஸ்துவின் சபையை அபிஷேகித்து வெளியே சென்று வல்லமையினால் கிறிஸ்துவுக்கு சாட்சியாய் இருப்பது (அப்போஸ்தலர் 1:8; 2கொரிந்தியர் 1:21,22). பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மாதிரிகளில் ஒன்று. சபையின் மேல் இறங்கி வருதல் யாக்கோபுடையது (மூன்று முக்கிய முற்பிதாக்களில் மூன்றாவது நபர்)

யாக்கோபு:

எண்ணெயும், பானபலியும் வார்த்தல்
(பரிசுத்த ஆவி)
கல்தூண் மேல்
(சபை – 1தீமோத்தேயு 3:15)
பரலோக ஒளியைக் குறித்தான வெளிப்பாட்டை எங்கே உடையவனாய் இருந்தானோ
(இயேசு கிறிஸ்து, யோவான் 1:51; ஆதியாகமம் 28:18; 31:13 35:14)

எண்ணெய் கல்தூண் மேல் இறங்கியதுபோல ஆவியானவரும் சபையின்மேல் இறங்கினார். அது தூண் மற்றும் சத்தியத்தின் பூமி புதிய ஏற்பாட்டிலே இயேசுகிறிஸ்துவின் பௌதீக சரீரத்திலே இருந்ததான அபிஷேகம் அவருடைய சரீரமாகிய சபையிலே வரப்போகிற அபிஷேகத்தின் தீர்க்கதரிசனமாய் மாறியது (1கொரிந்தியர் 12:12-27).

அதிக விசேஷமாக புதிய ஏற்பாடு மிகத்தெளிவாக பரிசுத்த ஆவியின் உள்பார்வை மற்றும் உள்ளுந்தல் பெறுவதின் முக்கியத்துவத்தைப் போதிக்கிறது. லவோதிக்கேயா சபைக்கு யோவான்

இந்த அபிஷேகத்தின் தேவையைக் குறித்து எழுதுகிறார். ''...என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு...'' (வெளி 3:18) இன்று சபையின் தலைவர்கள் பரிசுத்த ஆவியானவருடைய உதவியுடன் தேவனுடைய முக்கிய நோக்கம் அவருடைய மகிமை மற்றும் வல்லமையை உபயோகித்தலைக் குறித்து பார்ப்பது அவசியம். ஏனெனில் இயேசுகிறிஸ்து தாமே தேவனால் அபிஷேகிக்கப்பட்டார் (அப்போஸ்தலர் 4:27; எபிரெயர் 1:9), எனவே அவருடைய சபையும் உன்னத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படவேண்டும் (லூக்கா 24:49).

தேவனுடைய அபிஷேகம் அவருடைய சரீரத்தின் மேல்வந்திறங்குகிற பகுதியோடு தொடர்புடையவற்றில் மற்றொரு தலைவர்களுக்கான ஆவிக்குரிய உண்மையை நாம் குறிக்கலாம். பழங்கால இஸ்ரவேலில் ஆசாரியர்களும், இராஜாக்களும் அபிஷேகத்தை தங்கள் தலையின் மேலும் வஸ்திரங்கள் மேலும் பெற்றார்கள் (1சாமுவேல் 9:16; 10:1; 12:3,5; 15:17; 16:3,12,13). அபிஷேகத்தின் எண்ணெய் தலையிலிருந்து சொட்டுவிட்டு வஸ்திரங்களில் வடிந்தது. எப்பொழுது ஆரோனும் அவனுடைய குமாரர்களும் அபிஷேகிக்கப்பட்டார்களோ யாத்திராகம் 28:41 கூறுகிறது, ''உன் சகோதரனாகிய ஆரோனும் அவனோடேகூட அவன் குமாரரும் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ அந்த வஸ்திரங்களை அவர்களுக்கு உடுத்தி, அவர்களை அபிஷேகஞ்செய்து, அவர்களைப் பரிசுத்தப்படுத்துவாயாக'' இங்கே அபிஷேகத்தின் எண்ணெய் தூய ஆசாரிய வஸ்திரங்களில் ஊற்றப்படுவதோடு தொடர்புடையது (லேவியராகமம் 8:30). இன்னும் அதிகமாக யாத்திராகமம் 29:7 சொல்லுகிறது, அபிஷேக தைலத்தையும் எடுத்து, அவன் தலையின்மேல் வார்த்து, அவனை அபிஷேகஞ்செய்வாயாக'' (யாத்திராகமம் 30:30; 40:13,15; லேவியராகமம் 8:12; 21:10; எண்ணாகமம் 3:3; 32:25).

ஏன் இஸ்ரவேலின் இரண்டு முக்கியமான அலுவல்களை வைத்திருந்தவர்கள் அபிஷேகத்தின் எண்ணெயை தங்களுடைய தலையில் பெற்றார்கள்?. இது குறிப்பாக சபை தலைவர்களின் மனதிலே பரிசுத்த ஆவியானவரின் பார்வை, உள்பார்வை மற்றும் உள்ளுந்தல் படுதலின் தீர்க்கதரிசன தேவைக்காக.

இந்த எல்லா தேவனுடைய தலைவர்களின் மனதும் சிந்தனை (தலை) முழுவதுமாக தேவனுக்காக பரிசுத்தம் பண்ணப்பட்டு அவர்கள் எதற்காக தலைவராக்கப்பட்டார்களோ அந்த நோக்கம் நிறைவேற தாவீது மேய்ப்பனாய் இருக்கும் பொழுது இதை உணர்ந்து அவன் எழுதுகிறான் ''என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறார்'' (சங்கீதம் 23:5). தாவீது இங்கே குறிப்பிடும் எண்ணெய் மேய்ப்பனாகிய அவன் ஆடுகளின் தலையில் இளவேனிற் கால ஈக்களினால் உண்டாகும் கொள்ளை நோயிலிருந்து பாதுகாக்க எண்ணெயை தடவினான். ஆனால் அவன் அதைபோல் குறிப்பிடுவது அவனுடைய தலை ஆண்டவரின் முழுகட்டுப்பாட்டின் இடத்தில் இருக்க விரும்புவதாக குறிப்பிடுகிறான். அதாவது அவனுடைய முழுவாழ்க்கையும் தேவனுக்காக பரிசுத்தம் பண்ணப்பட்டு இருக்க வேண்டுமென்று விரும்பினான். அதே போல் ஒரு ஸ்தீரி விலையேறப்பெற்ற பரிமளதைலத்தை இயேசுவின் தலையின் மேல் ஊற்றி அவரை ஆண்டவராக அங்கீகரித்து கொள்கிறார் (மாற்கு 14:3). ஒவ்வொரு தலைவர்களும் தேவன் தன்னுடைய அபிஷேகத்தை உபயோகித்து தன்னுடைய ஆவி மற்றும் தன்னுடைய வார்த்தை மூலமாக தன்னுடைய தலைவர்களை முழுக்கட்டுபாட்டிற்குள் வைக்கிறார் என்பதை உணர்வார்கள்.

அபிஷேகம் குணாதிசயத்தோடு இணைக்கப்பட்டுள்ளது

தேவனுடைய ஆசிர்வாதங்களைப் பெறும் அபிஷேகத்தின் எண்ணெய் வேதாகமத்திலும் உருவக மொழியில் வித்தியாசமான குணாதிசயங்களை சித்தரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்தவ தலைவர்கள் தேவன் ஆவிக்குரிய வரங்களில் வளர்வதை காட்டிலும் அதிக விருப்பம் கொண்டிருக்கிற காரியத்தை காணவேண்டும். மேலும் அதிக சிறப்புள்ள தேவன் விரும்புகிற ஆவியின் கனியில் அவர்கள் வளர வேண்டும். முன்சொன்னது போல தேவனின் விருப்பம் குணாதிசயம் (நேர்மை), மற்றும் திறமை (வல்லமை), ஒவ்வொரு தலைவருடைய ஊழியத்திலும் இரண்டுமே சமநிலையில் இருக்க வேண்டும்.

சிலர் முக்கியமான ஆவியின் அபிஷேகத்தை பெறுவதற்கு வேதம் தொடர்பு படுத்துகிற குணாதிசய தரங்களாவன:

கரிசனை: என் தலையை எண்ணெயினால் அபிஷேகம் பண்ணுகிறீர் (தாவீது ஆடுகளின் நலனுக்காய் கரிசனை கொண்டான்) (சங்கீதம் 23:5).

கொடுத்தல்: உதாரகுணமுள்ள (கொடுத்தல்) நபர் செழிக்கும் (எண்ணெயினால் நிரப்பப்பட்ட) (நீதிமொழிகள் 11:25).

விடாமுயற்சி: ஜாக்கிரதை உள்ளவர்களுடைய ஆத்துமா புஷ்டியாகும் (எண்ணெயினால் நிரப்பபடல்) (நீதிமொழிகள் 28:25).

நம்பிக்கை: கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான் (எண்ணெயோடு கூட கொழுப்பு உண்டாகுதல்) நீதிமொழிகள் 28:25).

பொறுப்பு: "நாளை இந்நேரத்திற்கு ... ஒரு மனுஷனை (சவுல்) உன்னிடத்தில் (சாமுவேல்) அனுப்புவேன்; அவனை என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாக அபிஷேகம் பண்ணக்கடவாய்" (1சாமுவேல் 9:16).

நீதி: "நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறீர்; ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்ததைலத்தினால் அபிஷேகம்பண்ணினார்" (சங்கீதம் 45:7).

தூய்மை: "நீ குளித்து, எண்ணெய் பூசி, உன் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, அந்தக் களத்திற்குப் போ" (ரூத் 3:3).

தைரியம்: "பந்தியை ஆயத்தப்படுத்துங்கள், ஜாமக்காரரை வையுங்கள், புசியுங்கள், குடியுங்கள்; பிரபுக்களே, எழுந்து பரிசைகளுக்கு எண்ணெய் பூசுங்கள். ஆண்டவர் என்னை நோக்கி: நீ போய், காண்பதைத் தெரிவிக்கும்படி ஜாமக்காரனை வை என்றார்" (ஏசாயர் 21:5,6).

கீழ்ப்படிதல்: "கில்போவா மலைகளே, உங்கள்மேல் பனியும் மழையும் பெய்யாமலும், காணிக்கைக்கு ஏற்ற பலன்தரும் வயல்கள் இராமலும் போவதாக; அங்கே பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப்பட்டது; சவுல் தைலத்தால் அபிஷேகம் பண்ணப்படாதவர்போல அவர் கேடகமும் அவமதிக்கப்பட்டதே". (2சாமுவேல் 1:21; 1சாமுவேல் 15:22).

பணிவு: "குஷ்டரோகியினுடைய சுத்திகரிப்பின் நாளில் அவனுக்கடுத்த பிரமாணம் என்னவென்றால்: அவன் ஆசாரியனிடத்தில் கொண்டுவரப்பட வேண்டும்...பின்பு ஆசாரியன் ...ஆழாக்கு எண்ணெயையும் குற்றநிவாரணபலியாகக் கொண்டுவந்து, கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டி..." (லேவியராகமம் 14:2,12); மேலும் எண்ணெய் வசனம் 10, 14-18, 21,24, 26-29 யில் பார்க்க.

ஐக்கியம்: "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு" (சங்கீதம் 133:1,2).

சந்தோஷம்: "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும் ... ஆனந்த தைலத்தையும் கொடுக்க என்னை அனுப்பினார்" (ஏசாயா 61:1,3).

தாழ்மையும் நொறுக்கப்படுதலும்: "அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்தீரி...அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளதைலத்தைப் பூசினாள்" (லூக்கா 7:36-50).

தலைவருடைய வாழ்க்கையிலே இவைகள் மிக தேவையான குணாதிசய தரங்களாகும். இதிலே வளரும் போது தலைவர் சிறப்பான அபிஷேகத்திற்காக தேவனை நம்பமுடியும்.

முடிவாக, எண்ணெயின் மற்ற பல உபயோகங்கள் தேவனுடைய ஜனங்களின் தலைவருக்கு குறிப்பிட்ட ஆவிக்குரிய உண்மைகளை உடையதாய் இருக்கிறது. இவைகள் பொதுவாக சமுதாய உபயோகங்களுக்காக தரவரிசைப்படுத்தப்படுகிறது.

- எண்ணெய் உணவு தயாரிக்க உபயோகிக்கப்பட்டது (1இராஜாக்கள் 17:12-16). ஆவிக்குரிய ஆகாரம் தலைவர் தன்னுடைய ஜனங்களுக்கு போதனை மற்றும் பிரசங்கத்தின் மூலமாய் ஊட்டும் வேதவசனம், பரிசுத்த ஆவியானவரால் செறிப்பதற்கு ஏதுவாக விரைவுபடுத்தப் பட்டதாய் இருக்க வேண்டும்.

- எண்ணெய் வீட்டு மற்றும் பலதரப்பட்ட விளக்குகளில் எரிபொருளாய் உபயோகிக்கப்பட்டது (மத்தேயு 25:1-13). மேலும் திரியை பார் (ஏசாயா 42:3). ஒவ்வொரு தலைவரும் விளக்குகளாகிய தங்களுடைய ஜனங்களை நிரப்புவது தங்களுடைய பொறுப்பின் பகுதி என்று ஏற்றுக் கொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்து தாமே சொன்ன விதமாய் அவர்கள் உண்மையாகவே உலகத்தின் வெளிச்சமாய் இருக்க வேண்டும் (மத்தேயு 5:14).

- எண்ணெய் பல்வேறு மருந்துகளில் உபயோகிக்கப்பட்டது (ஏசாயா 1:6; மாற்கு 6:13; லூக்கா 10:34). ஒவ்வொரு தலைவரும் பரிசுத்த ஆவியானவரின் தெளிவான வாய்க்காலாய் ஆவிக்குரிய ரீதியில் காயப்பட்ட வாழ்க்கையும், மனதையும் சுகப்படுத்த வேண்டும்.

- எண்ணெய் அழகு சாதன தைலத்திலே சேர்க்கப்பட்டது (2சாமுவேல்14:2; ரூத் 3:3; சங்கீதம் 104:15). ஒவ்வொரு தலைவரும் ஆவிக்குரிய அபிஷேகத்தை சபையின் மேல் உபயோகப்படுத்த வேண்டும். அப்பொழுது தான் அவன் இயேசுகிறிஸ்துவினுடைய மதிப்பையும் முகத்தோற்றத்தையும் வெளியே காட்ட முடியும்.

- எண்ணெய் வீட்டுக்கு வரும் விருந்தாளியை புத்துணர்ச்சி படுத்துவதற்கும் அபிஷேகிப்பதற்கும் வழக்கமாக உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு தலைவர்களும், விரும்தோம்பலின் ஆவி உடையவர்களாய் இருந்து (1தீமோத்தேயு 3:2) அவருடைய வீட்டுக்குள் பிரவேசிக்கும் யாவரும் ஆவிக்குரிய புத்துணர்ச்சியை பெரும்விதத்திலே ஊழியம் செய்ய வேண்டும்.

- எண்ணெய் இறந்தவர்களை அபிஷேகம் பண்ண நறுமணப் பிசினுடன் சேர்த்து உபயோகிக்கப்பட்டது (மாற்கு 14:8; லூக்கா 23:55,56). தேவ ஆவியானவரின் அபிஷேகம் தலைவருடைய இயேசு கிறிஸ்துவின் சிலுவை அனுபவத்தோடு (வாசனைப்பிசின்) நன்றாக கலக்கப்பட்டு இணைக்கப்படவேண்டும். அப்பொழுது தான் அவர்கள் மீறுதலினால் பாவங்களினால் இறந்தவர்களை ஆவிக்குரிய வாழ்க்கைக்கு கொண்டு வரமுடியும்.

அபிஷேகத்தின் நோக்கங்கள்

எண்ணெய் அபிஷேகம் அதனுடைய உபயோகத்தைப் போல் மிக ஒத்த நோக்கங்களை உடையது. ஆனால் நாங்கள் இங்கே நம்முடைய புரிந்து கொள்ளுதலை சேர்க்கும் வண்ணமாக பலவற்றைப் பட்டியலிட்டுள்ளோம். ஒவ்வொன்றும் புதிய ஏற்பாட்டு தலைவருக்கும் பொருந்தும். அபிஷேகத்தின் சில பெரிய நோக்கங்களாவன:

1. தேவனுடைய தலைவர் அவர்களுடைய சத்துருவை தோற்கடிக்க தகுதிபடுத்துகிறது (இஸ்ரவேலின் நியாயதிபதிகளின் மேல் ஆண்டவருடைய ஆவியானவர் எப்பொழுதும் இறங்கினாரோ அப்பொழுது இந்த நோக்கத்திற்காக: நியாயதிபதிகள் 11:29; 13:25; 14:6,19; 29:29).

2. பொருட்களையும், ஜனங்களையும் ஆண்டவருக்காக அவருடைய சேவைக்காக பரிசுத்தம் பண்ண (யாத்திராகமம் 28:41 மற்றும் 29:29).

3. ஜனங்கள் தங்களுடைய ஊழியங்களை தேவனுக்கு செய்ய தகுதிப்படுத்துகிறது.

4. நற்செய்தியை வேதனையில் இருப்பவர்களுக்கு கொண்டுவருகிறது (ஏசாயா 61:1).

5. இருதயம் நொறுங்குண்டவர்களை காயம் கட்ட (ஏசாயா 61:1).

6. சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையை அறிவிக்க (ஏசாயா 61:1).
7. கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலை அறிவிக்க (ஏசாயா 61:1).
8. கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தை அறிவிக்க (ஏசாயா 61:1,2).
9. தேவன் நீதியை சரிக்கட்டும் நாளை கூற (ஏசாயா 61:1,2).
10. துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்ய (ஏசாயா 61:1,2).
11. சீயோனிலே துயரப்பட்டவர்களுக்கு சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும் (ஏசாயா 61:1,3).
12. துயரத்திற்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும் கொடுக்கவும் (ஏசாயா 61:1,3).
13. ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும் (ஏசாயா 61:1,3).
14. கர்த்தரால் நாட்டப்பட்ட நீதியின் விருட்சங்கள் என்னப்படுவார்கள் (ஏசாயா 61:1,3).
15. கர்த்தரை மகிமைப்படுத்த மனிதனையல்ல (ஏசாயா 61:1,3).
16. ஆரோனுடைய குமாரரை ஆசாரிய ஊழியத்திற்கு தகுதிப்படுத்த (யாத்திராகம் 40:15).
17. ஆரோனை பலியின் ஊழியத்திற்கு தகுதிப்படுத்த (எண்ணாகமம் 18:8).
18. பலியில் படைக்கப்பட்ட மெல்லிய மாவை ஈரப்படுத்த (எசேக்கியேல் 46:13-15).
19. தினந்தோறும் செலுத்தப்படும் தகனபலியில் இன்றியமையாத பங்காய் இருக்க (எசேக்கியேல் 46:13-15).
20. குருட்டு கண்களை பார்வையடைய செய்ய (யோவான் 9:6).
21. கிறிஸ்தவர்களை ஆண்டவருடைய வரங்களினால் ஊழியங்களினால் வல்லமைப்படுத்த (1கொரிந்தியர் 12; எபேசியர் 4:11,12).

இந்த நோக்கங்கள் எல்லாம் தலைவருடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் ஆவிக்குரிய ரீதியில் நிறைவேற முயற்சி செய்யவேண்டும். இந்த எல்லா நோக்கங்களிலும் மிக முக்கியமான நோக்கங்களான வாய்ப்பு பட்டியலில் 3,16,17. இவை தலைவருடைய அபிஷேகத்தின் செயல்பாட்டில் உதவும். நோக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. வெற்றிகரமாக இந்த நோக்கங்களை தேவனுக்கு செய்யும் ஊழியங்களில் நிறைவேற்ற ஜனங்களுக்கு உதவுகிறது. இந்த அலுவல்களுக்காக அவர்களை தகுதிப்படுத்துகிறது.

ஏற்கனவே சொன்ன விதமாக கிறிஸ்தவத்திலே இருக்கிற மிகப்பெரிய கருத்து வேறுபாடுகளில் ஒன்று எப்பொழுதும் இதுவாக இருந்திருக்கும். யார் ஊழியத்திற்கு தகுதியானவர், யார் அதிகாரத்தோடு ஆண்டவருடைய நாமத்தை பேசமுடியும். குறிப்பிட்ட ஊழியத்திறகாக அந்த நபரை தகுதிப்படுத்தும் காரியங்கள் எவை? இந்தக் கேள்விகள் இன்னும் விவாதிக்கப் படுகின்றன. அபிஷேகத்தின் நோக்கங்கள் நாம் முக்கியமென்று குறித்தவைகள் (3:16,17). இந்த கேள்விகளுக்கான பதிலின் பகுதியை அளிப்பதற்கு நம்மை நடத்துகிறது.

ஊழியத்திற்கான தகுதியின் ஒருபகுதி குணாதிசயமும், நேர்மையும் (1தீமோத்தேயு 3:2-7), ஒருவரும் இதை மறுப்பதற்கில்லை. எப்பொழுது ஒரு நபர் ஒழுக்க குணாதிசயத்திலும் நடத்தையிலும் வசன வழிகாட்டுதலுக்கு தூரமாய் செல்லுகிறாரோ அப்போது அவர் ஊழியத்திற்கான குணாதிசயத்தை விட மேலான தன்மை தேவைப்படுகிறது. ஒரு மனிதன் மிகவும் நேர்மையானவராய் திறமை வாய்ந்த குழாய் சரிபண்ணும் வேலை செய்பவராய் இருக்கலாம். ஆனால் ஒழுகுகிற தொட்டியை சரிசெய்ய முடியாவிட்டால், அவர் எவ்வளவு நல்லவராய் இருந்தாலும் அவர் ஒழுகுகிற தொட்டியுள்ள நபரல்லவா?. அதே போல் ஒரு நபருக்கு தேவனுடைய அபிஷேகமும் தேவையாய் இருக்கிறது. அவருடைய குணாதிசயத்தோடு குறிப்பிட்ட ஊழியத்தை நிறைவேற்ற ஒரு நபர் வல்லமையும், திறமையும் கர்த்தருக்குள் உடையவராக இருக்க வேண்டும், ஊழியத்தை ஆக்கப்பூர்வமாய் செய்வதற்கு.

தேவன் பெசலெயேலையும், அகோலியாவையும் (யாத்திராகமம் 31:2; 35:30; 36:1,2,37; 38:22 மற்றும் 2நாளாகமம் 2:14) வனாந்திரத்திலே ஆசாரிப்புக் கூடாரத்தின் பணிமுட்டுகளை எல்லாம் செய்ய தெரிந்துக்கொண்டார். தேவன் அவர்களை நேர்மையும், சரியான ஒழுக்க நடக்கையும் உடையவர்களாய் இருப்பதினால் தெரிந்து கொள்ளவில்லை. அவர்களை தெரிந்து கொண்டார், ஏனெனில் அவர்களை தம்முடைய ஆவியினால் அபிஷேகித்து தம்முடைய திறமையின் ஆவியை அவர்களுக்குள் வைத்து இயற்கையாக திறமைகளை விரிவடையச் செய்து குறிப்பிட்ட நோக்கத்திற்காக விசேஷ தகுதியானவர்களாய் அவர்களை மாற்றினார்.

தாவீது பாடகர்களையும் இசை வாசிப்பவர்களையும் தேவனுடைய உடன்படிக்கைக்கு முன் ஊழியம் செய்ய தெரிந்து கொண்டபொழுது, அவர்களுக்கு குறிப்பிட்ட ஆவிக்குரிய பண்பு இருப்பதினால் தெரிந்து கொள்ளவில்லை. அவர்கள் பாடவும், ஆண்டவருக்கு முன்பாக திறமையாய் இசை வாசிக்கவும் தெரிந்தவர்கள் என்பதை அவன் அறிந்தபடியினால் தெரிந்துக் கொண்டான் (1நாளாகமம் 15:22; 28:21; 2நாளாகமம் 34:12; சங்கீதம் 78:72). தேவன் புதிய ஏற்பாட்டின் பதிமூன்று புஸ்தகங்களை எழுத தெரிந்து கொள்ளும்பொழுது மீன்பிடிக்கிறவரான பேதுருவை தெரிந்து கொள்ளவில்லை. மிக திறமையான மோசேயின் நியாயப்பிரமாண பரிசேயனை அவர் தெரிந்துக் கொண்டார் - அவர் தான் பவுல்.

எனவே குணாதிசயம் மாத்திரம் ஜனங்களை ஊழியத்திற்கு தகுதிபடுத்தவில்லை. தேவன் அவர்களுக்கு கொடுத்த பரிசுத்த ஆவியின் அபிஷேகமும் கூட, எப்பொழுதும் இயற்கையான திறமைகளும் தாலந்துகளும் தேவனால் உபயோகப்படுத்தப்படவில்லை என்பது உண்மையே. குறிப்பிட்ட திறமைகள் சிலுவையை அனுபவித்தபின் அவைகள் உயிர்த்தெழுந்த தேவனுக்கு மகிமை செலுத்தலாம். ஆனால் இங்கு காரியம் என்னவென்றால் தேவன் ஒவ்வொரு நபருக்கும் ஒரு குறிப்பிட்ட அபிஷேகத்தை கொடுக்கிறார். அது அவர்களை தேவனுடைய ஊழியத்தை ஆக்கப்பூர்வமாய் செய்வதற்கு தகுதியாக்குகிறது. தலைவர்கள் எப்படியிருந்தாலும், மனிதனுடைய திறமைகளை மகிமைப்படுத்தும் நிபுணத்துவ ஆவி உள்ளே நுழையாதபடி கவனமாய் இருக்க வேண்டும். இயற்கை தாலந்தின் மேல் அபிஷேகம் இறங்கவோ, இறங்காமலிருக்கவோ முடியும். இங்கே திறமையல்ல முக்கியம். அபிஷேகம் தாலந்து திறமையில்லாதவர்களை ஜனங்களின் தேவைகளை சந்திக்க முடியாதவர்களை எடுத்து இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்திலே அந்த பணிக்காக அவர்களை அபிஷேகிக்கிறார்.

பரிசுத்த அபிஷேகத்தின் எண்ணெயில் அடங்கி இருக்கின்ற பொருள்களை குறித்து படிப்பது விருப்பமான ஒன்று. பரிசுத்த அபிஷேகத்தின் எண்ணெய் நேர்த்தியான நறுமணப் பொருள்களின் கலவையாகும் (யாத்திராகமம் 30:23-25). இந்த நேர்த்தியான நறுமணப்பொருட்கள் வெள்ளைப்போளம், கருவப்பட்டை, வசம்பு, லவங்கப்பட்டை மற்றும் ஒலிவ எண்ணெய். அபிஷேக எண்ணெயில் கலந்திருக்கிறவைகள் தகுதியில் தாழ்ந்தவைகளோ, சீர்குலைக்கிறவைகளோ அல்ல, இந்த உண்மை பேசுகிற காரியம் தேவனுடைய விருப்பம் தன்னுடைய தலைவர்களுக்கு அவருடைய குறிப்பிட்ட ஊழியத்தின் சிறந்த கிருபைகளை மாத்திரம் கொடுப்பது. இந்த அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள எப்படியிருந்தாலும் தலைவர்கள் அவர்களுடைய நேரத்தையும், தேவ ஆவியானவரின் நல்ல காரியங்களுக்காக கொடுக்க வேண்டும். இந்த உலகத்தின் காரியங்களுக்காக அல்ல. தேவன் தன்னுடைய தலைவர்கள் ஒவ்வொருவரையும் அபிஷேகிப்பார். ஆனால் அவருடைய நோக்கம் தலைவருடைய சிறந்த வரங்களையும், திறமைகளையும் அபிஷேகிப்பது. பிசாசின் இராஜ்ஜியத்திற்குரிய ஒன்றையும் அவர் அபிஷேகிக்க மாட்டார்.

அபிஷேக எண்ணெயின் இயல்புகள்

அபிஷேகத்தின் எண்ணெயை விளக்குவதற்கு வேதம் கீழ்கண்ட வார்த்தைகளை உபயோகிக்கிறது:

- **இடித்துப்பிழிதல்** (யாத்திராகமம் 29:40)
  பழைய ஏற்பாட்டில் அபிஷேகத்தின் எண்ணெய் ஒலிவ மரத்திலிருந்து இடித்து பிழித்தெடுக்கப்பட்டன. தேவனுடைய தலைவர்களுடைய வாழ்க்கையில் பரிசுத்தாவியானவருடைய அபிஷேகம் தேவனோடு கடினமாக ஆழமான இடைபாட்டின் மூலமாக வருகிறது (அது பரிசுத்தாவியின் வாழ்க்கையை அவனுக்குள்ளாக விடுவிக்கிறது).

❖ **புதியது** (சங்கீதம் 92:10)
பரிசுத்த அபிஷேக எண்ணெய் புத்துணர்வுடன் புதிதாக உபயோகத்திற்கு இருப்பது அவசியம். எந்த ஒரு தலைவரும் கடந்த கால அபிஷேகத்தை சார்ந்து இன்று அவருக்கு ஊழியம் செய்ய முடியாது. ஒவ்வொரு தலைவரும் தினமும் ஆண்டவருக்குள் புதிய அபிஷேகத்தில் நிலைத்து இருக்க வேண்டும்.

❖ **பரிசுத்தம்** (யாத்திராகமம் 30:25,31,32; சங்கீதம் 89:20)
அபிஷேகத்தின் எண்ணெய் பரிசுத்தமானது. பரிசுத்த ஆவியானவர் தலைவருடைய வாழ்க்கையில் பிரவேசித்து அவரை பரிசுத்தமாக்குகிறார். ஆனால் தலைவர் தானாக இந்த பரிசுத்தத்தை தழுவிக் கொண்டால் மாத்திரமே மற்றவர்களுக்குள்ளாய் வழிந்தோட முடியும்.

❖ **நறுமணம்** (யாத்திராகமம் 30:25)
பரிசுத்த அபிஷேகத்தின் எண்ணெய் பரிமளங்களின் கலவை பரிசுத்த ஆவியானவர் தலைவருடைய வாழ்க்கையில் செயல்படுகிற காரியங்கள் தேவனுக்கு பிரியமான சுகந்த வாசனையை விடுவிக்கிறது.

❖ **கலவை** (யாத்திராகமம் 30:25)
பரிசுத்த அபிஷேக எண்ணெய் நறுமணப் பொருட்களின் கலவை. தலைவருடைய ஊழியத்தில் பரிசுத்த ஆவியானவருடைய வாழ்க்கை, பல்வேறு ஆவிக்குரிய தத்துவங்களும் அனுபவங்களும் அடங்கியிருக்கிற கலவையில் உள்ளும் புறமும் வளர்ந்து வெளிப்படுத்தப்பட வேண்டும்.

❖ **கைவினையானது** (யாத்திராகமம் 30:25)
பரிசுத்த அபிஷேக எண்ணெய் கைவினையான வேலையினால் செய்யப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் தலைவருடைய வாழ்க்கையில் வேலை மற்றும் கிரியை செய்து தேவனுடைய பரிபூரண சித்தத்தை அவருக்குள் உருவாக்குகிறார்.

❖ **ஒலிவ மரம்** (யாத்திராகமம் 27:20; 30:24)
பரிசுத்த அபிஷேக எண்ணெய் ஒலிவத்தை இடித்துப் பிழிவதின் மூலமாய் வருகிறது. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தலைவர் தன்னுடைய வாழ்க்கையில் ஆவியின் கனியில் வளருவதற்கு இறங்கி வருகிறார் (கலாத்தியர் 5:21,22), மற்றும் அந்த கனிகளின் முன்னனிலையில் பதிலளிப்பதற்கு.

❖ **தூய்மையானது** (யாத்திராகமம் 27:20; 1இராஜாக்கள் 5:11)
பரிசுத்த ஆவியின் எண்ணெய் தூய்மையானது. பரிசுத்த ஆவியானவர் தலைவருடைய வாழ்க்கை தேவனுக்கு முன்பாக தூய்மையாய் இருக்கும் போது மாத்திரமே அவருக்குள் வழிந்தோடுவார் (ஒழுக்க ரீதியாய், உணர்ச்சிபூர்வமாய், ஆவிக்குரிய ரீதியில்)

❖ **அபிஷேகிக்கப்பட்டது** (யாத்திராகமம் 37:29)
பரிசுத்த எண்ணெய் குறிப்பிட்ட ஊழியங்களை அபிஷேகிக்கும்படியாய் பிரிந்தெடுக்கப்பட்டது. ஒவ்வொரு தலைவரும் பகுத்தறிகிற ஆவியின் வல்லமையோடு ஒத்துழைக்க அழைக்கப்பட்டுள்ளார்கள். அப்பொழுது அவர் குறிப்பிட்ட ஊழியங்களை கிறிஸ்துவின் சரீரத்தில் பிரித்து அபிஷேகிக்க உபயோகம் உள்ளவராய் இருப்பார்.

❖ **பெருமதிப்புள்ளது** (நீதிமொழிகள் 21:20)
அபிஷேகத்தின் எண்ணெய் பெருமதிப்புள்ளது. ஒவ்வொரு தலைவர்களும் தன்னுடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் பெருமதிப்புள்ள அபிஷேகத்தை காவல்காத்து பாதுகாக்க வேண்டும். தன்னுடைய ஊழியத்திலே மிக பெருமதிப்புள்ள சொத்து என்று அவர் கருத வேண்டும்.

❖ **குறிப்பிடப்பட்டது** (எசேக்கியேல் 45:13,14)
அபிஷேகத்தின் எண்ணெய் தேவனால் விஷேசமாக்கப்பட்டு இஸ்ரவேலருடைய வழியிலே குறிப்பிட்ட அளவு உபயோகப்படுத்தப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் அவர் கொடுக்கிற அபிஷேகத்தின் அளவுக்குதக்கதாய் வெவ்வேறு அளவுகளிலே தியாகம் செய்வது அவசியமாகிறது.

❖ **தரமானது** (ஆமோஸ் 6:6; யாத்திராகமம் 30:23; எண்ணாகமம் 18:12)
இஸ்ரவேலிலே முதல் தரமுள்ள எண்ணெய் மாத்திரமே அபிஷேக எண்ணெயாக உபயோகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு தலைவருடைய வாழ்க்கையிலும் உள்ளும் புறமுமாக நடைபெறுகின்ற பரிசுத்த ஆவியானவரின் முதல் தரமான வேலையை உணர்ந்து கொள்ள வேண்டும். இது வேலையின் அளவைக் காட்டிலும் மிக முக்கியமானது.

❖ **விலையேறப்பட்டது** (மாற்கு 14:3)
அபிஷேகத்தின் எண்ணெயை தயாரிக்க அதிக விலையுள்ள பொருட்கள் தேவைப்படுகிறது. ஒவ்வொரு தலைவரும் அவர் விரும்புகிற ஒவ்வொரு புதிய ஆழ ஆவிக்குரிய அபிஷேகத்தை அனுபவிக்க, அவர் பெருமதிப்புள்ள, விலையேறப்பெற்ற காரியங்களை தேவனுக்கு கொடுக்க வேண்டும். தலைவருக்கு அபிஷேகம் விலையேறப்பெற்ற ஒன்று. அது இயேசுகிறிஸ்துவின் முழு வாழ்க்கையும் விலைகிரையமாக்கியது.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு தேவையானவைகள்

இயற்கையான இஸ்ரவேலில் எண்ணெய், மழை, ஆலயம் ஆவிக்குரிய இஸ்ரவேலாகிய சபையில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு தீர்க்கதரிசனமாய் மாறியது. இயற்கை குறிப்புகள் ஆவிக்குரியவைகளானது.

<u>கிறிஸ்தவ தலைவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் பயன்பாடு இதை சார்ந்துள்ளது:</u>

ஒரு தலைவர் கீழ்ப்படிந்து போதித்து தன்னுடைய ஜனங்களை வேத வசனத்திற்கு கீழ்ப்படிய வைக்கிறார் (உபாகமம் 7:12:13; 11:13,14; 28:1-68).

ஒரு தலைவர் பரிசுத்த ஆவியின் ஊற்றப்படுதலுக்குள்ளாய் பிரவேசிக்கும்பொழுது (உபாகமம் 11:13,14; 28:1-68).

ஒரு தலைவர் சுறுசுறுப்புடன் தேவனுடைய வீட்டை அதாவது சபையை கட்டும் பொழுது (ஆகாய் 1:7-11).

ஒரு தலைவர் அவருடைய ஆவிக்குரிய அபிஷேகம் மற்றும் பொருளாதார ஆசீர்வாதத்தை கொடுப்பதற்கு தேவன் மாத்திரமே மூல ஆதாரம், தான் அல்ல என்பதை அங்கீகரித்துக் கொள்ள வேண்டும் (ஒசியா 2:8,9).

ஒரு தலைவர் ஆவிக்குரிய அபிஷேகத்தையும், பொருளாதார ஆசீர்வாதத்தையும் தேவனுக்காக உபயோகிக்க வேண்டும், பிசாசுக்காக அல்ல (ஒசியா 2:8,9).

ஒரு தலைவர் தேவனைக் காட்டிலும் தன்னுடைய ஆவிக்குரிய அபிஷேகத்தை பொருளாதார ஆசீர்வாதத்தை மகிமைப்படுத்தக் கூடாது (ஒசியா 2:8,9).

ஒரு தலைவர் தேவனுடைய வீடாகிய சபையை கட்டுவதற்கு தன்னார்வமாகவோ, இலவசமாகவோ ஜனங்களுக்கு உபதேசிக்க தன்னை கொடுப்பதின் மூலமாக கட்டலாம் (யாத்திராகமம் 35:20 -29).

ஒரு தலைவர் தன்னுடைய வாழ்க்கையிலும் தன்னுடைய ஜனங்களுடைய வாழ்க்கையிலும் அபிஷேகத்தைப் பாராட்டி பாதுகாக்க வேண்டும் (எண்ணாகமம் 4:9,16; நீதிமொழிகள் 21:20).

அபிஷேகத்தின் மூலமாய் வரும் கனிகள்

தம்முடைய ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டவர்களுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் என்ன? ஆவிக்குரிய அபிஷேகத்தைப் பின்பற்றுவதினால் வரும் சில நல்ல விளைவுகள் என்ன? கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வசன குறிப்புகள் மேல் படிப்பினைக்காக தலைவரால் விரிவாக்கம் செய்யப்படலாம்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் ஏற்படும் சில முக்கிய விளைவுகள்:

- ⇨ தேவனுடைய உதவி (சங்கீதம் 89:19).
- ⇨ உயர்த்தப்படுதலும் அதிகாரமும் (சங்கீதம் 89:19,24,27,29).
- ⇨ ஆண்டவருடைய ஊழியக்காரன் என்று அழைக்கப்படல் (சங்கீதம் 89:20).
- ⇨ தேவனுடைய கரம் உங்களோடு இருத்தல் (சங்கீதம் 89:21).
- ⇨ தேவனுடைய பெலன் (சங்கீதம் 89:21).
- ⇨ ஏமாற்றப்படுதலில் இருந்து விடுதலை (சங்கீதம் 89:22).
- ⇨ துன்மார்கனின் ஒடுக்குதலில் இருந்து விடுதலை (சங்கீதம் 89:22).
- ⇨ அவனுடைய சத்துருக்கள் மேல் தேவனுடைய வெற்றி (சங்கீதம் 89:23).
- ⇨ தேவனுடைய உண்மையும், அன்பின் தயவும் (சங்கீதம் 89:24-28).
- ⇨ மற்ற தேசங்கள் மேலுள்ள ஆளுகை (சங்கீதம் 89:25ல் சமுத்திரம்).
- ⇨ பிதா, மகன் உறவு (சங்கீதம் 89:26).
- ⇨ தேவனுடைய இரட்சிக்கும் வல்லமை (சங்கீதம் 89:26).
- ⇨ தேவனுடைய நித்திய உடன்படிக்கையில் பங்கெடுத்தல் (சங்கீதம் 89:28,30-37).
- ⇨ முதல் பேரானவனாய் சபையில் அங்கத்துவம் வகித்தல் (சங்கீதம் 89:27).
- ⇨ அவனுடைய சந்ததியை நித்தியமாக நிலைநிறுத்துதல் (சங்கீதம் 89:27).
- ⇨ முகக்களையை உண்டுபண்ணுதல் (சங் 104:15).
- ⇨ அடிமைத்தனத்தின் நுகத்தை முறித்தல் (ஏசாயா 10:27).
- ⇨ சரீரத்திலே சரீர சுகம் (மாற்கு 6:13).
- ⇨ முழு வீடாகிய சபையும் தைலத்தின் வாசனையினால் நிரம்புதல் (யோவான் 12:1-13).
- ⇨ ஆவிக்குரிய பார்வை உள்பார்வை (வெளிப்படுத்தல் 3:18).
- ⇨ தேவனுடைய வல்லமை (அப்போஸ்தலர் 10:38).
- ⇨ முன்சென்று நன்மை செய்யும் திறமை (அப்போஸ்தலர் 10:38).
- ⇨ பிசாசினால் ஒடுக்கப்பட்ட யாவரையும் சுகமாக்கும் திறமை (அப்போஸ்தலர் 10:38).
- ⇨ தேவனுடைய பிரசன்னம் (அப்போஸ்தலர் 10:38).
- ⇨ ஆனந்தம் (எபிரெயர் 1:9).
- ⇨ வஞ்சிக்கப்படாதபடிக்கு சத்தியத்திலே நிலைத்திருத்தல் (1யோவான் 2:26-29).
- ⇨ பெற்றுக் கொண்ட நேர முதல் வல்லமையிலும், பெலத்திலும் நிலைத்திருத்தல் (1சாமுவேல் 16:13).
- ⇨ ஒருவருடைய குடும்பத்தின் மத்தியிலே அங்கிகரித்தல் (1சாமுவேல் 16:13).
- ⇨ தீர்க்கதரிசனத்தின் ஆவி (2சாமுவேல் 19:18-24).
- ⇨ தீர்க்கதரிசன அலுவல் (2சாமுவேல் 23:17-27).
- ⇨ ஆவிக்குரிய கனி கொடுத்தல் (எண்ணாகமம் 17:1-11).

அபிஷேகத்தின் வல்லமையும், பிரசன்னமும் இன்றைய சபைகளின் மத்தியில் மிகப்பெரிய தேவையாய் இருக்கிறது. அநேக தலைவர்களும், சபைகளும் தங்களுடைய செயல்களிலே அபிஷேகத்தை இழந்து காணப்படுகிறார்கள். அதன் விளைவாக, தலைவர்கள் தேவனுடைய வல்லமையின் அபிஷேகத்திற்குள்ளாய் நடத்தும் வாழ்க்கை முறைக்குள்ளாய் பிரவேசிக்க வேண்டும். அதையே ஜனங்களுக்குப் போதிக்க வேண்டும். இந்த வழியாகத் தான் நம்முடைய நாட்களில் தேவன் விரும்புகிற வண்ணமாய் ஆத்துமாக்களின் அறுவடையை நாம் காண முடியும்.

வேலைக்காரத்துவம்; தலைவர்கள் வாழ்நாள் முழுவதும் பின்பற்றக்கூடிய மாதிரி

வேலைக்காரத்துவம் என்றதான கருத்தை சிறந்த முறையில் புரிந்து கொள்ள அதனுடைய மூலவடிவ அமைப்பிலே அதைப்படிப்பது பொருத்தமானது. குறிப்பாக, புதிய ஏற்பாட்டிலே உபயோகப்படுத்தப்பட்ட வழிமுறைகள் அதனுடைய மூலவடிவ கிரேக்க அர்த்தத்தைக் கற்றுக் கொள்வது. கிரேக்க வார்த்தை "டயக்கினோ" ஒரு அடிமை தன்னுடைய வாழ்க்கையை மற்றவர்களுக்கு கொடுப்பதை குறிக்கிறது. உருவமாக, சேவையிலோ மற்றவர்களுடைய சிறிய தேவைக்காக கூட அல்லது எழுத்துப்பூர்வமாக, உதாரணத்திற்காக யாரோ ஒருவர் சிறைக்கப்பலில் துடுப்பு போடும் மனிதனாக சாகும்வரை வேலை செய்ய வேண்டும்.

கிரேக்க சிந்தனையிலே, இந்தவிதமான சேவை வெட்கத்துக்குரியது. கிரேக்க பிரஜையின் முதல் கடமை தன்னை சிறப்பு வாய்ந்த காரியத்திற்கு தகுதி வாய்ந்தவர் என்பதை அடைவது தான் (இன்றைய கலாச்சாரத்தில் இந்தவித வார்த்தைகள் பிரபல்யமானவைகளா?). கிரேக்கனுக்கு, காரியத்திற்காக தன்னுடைய சித்த சுயாதீனத்தை மற்றவர்களுக்காக கட்டாயப்படுத்தி அல்லது தன்னுடைய நேரத்தையும், முயற்சியையும் மற்றவர்களுக்கு அர்ப்பணித்து கசப்பான மற்றும் அவமதிப்பு உண்டாகும் ரீதியில் செய்தல் என்பது அர்த்தமாகும்.

புதிய ஏற்பாடு சேவை என்னும் கிறிஸ்துவின் செய்தி சேவைக்கான இந்த வார்த்தைகளை உபயோகித்து பெறப்பட்டது. இது கிரேக்கர்களுக்கு மிகவும் கசப்பானது. கிறிஸ்தவ சேவை என்னும் நிலையில் இயேசு தாமே மறுரூபமாக்கப்பட்டு மதிப்புமிக்க முறையை மாதிரியாக உருவாக்கி இருக்கிறார். கிறிஸ்துவுக்குள் சேவை என்பது சிறப்புக்குரிய நெடுஞ்சாலைப் போன்றது. நாம் நம்முடைய முழுத்திறனையும் அடைவதற்கு நம்மை கிறிஸ்துவுக்கு அவருடைய சபைக்கும் கொடுக்க வேண்டும். ஆனால் பற்றிபிடிப்பதின் மூலமாக அல்ல.

ஒரு அன்பின் அடிமை என்பவன் மற்றொரு நபருக்கு வாழ்க்கை முழுவதும் சேவை செய்ய தெரிந்து கொண்டு, கட்டாயத்தின் பெயரில் அல்ல, ஆனால் சேவை செய்ய வேண்டும் என்ற விருப்பத்தின் பெயரில் தெரிந்தெடுப்பவன். அன்பின் அடிமை என்பவன் தன்னுடைய காது மடலில் ஓட்டை குத்தப்பட்டு, அதுதான் அவனுடைய நிலைப்பாட்டின் அடையாளமாயிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் அதிகமான தன்னுடைய நிருபங்களில் அன்பின் அடிமையாக அல்லது கிறிஸ்துவுக்குள் அடிமை வேலைக்காரனாக சித்தரிக்கிறார்.

கிறிஸ்துவுக்குள் வேலைக்காரன் / கொடுப்பவர் அடிப்படையான வேலைக்காரத்துவம் என்பது ஒருவர் நம்முடைய நலனுக்காய் அவருடைய வாழ்க்கையை அர்ப்பணிப்பது. சுயாதீனமாக கட்டாயத்தின் பேரில் அல்லாமல் தெரிந்தெடுத்து நம்முடைய நன்மையை அவருடைய சொந்த நன்மைக்கு மேலாக வைப்பது என்பதாக நாம் பார்க்கிறோம். நம்மை மீட்கும்பொருளாக கிறிஸ்து தன்னார்வமாக முழுமையுமாக தியாகத்துடன் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்வதற்கு தேவையான அனைத்தையும் கொடுத்தார். கிறிஸ்து நமக்காக தன்னுடைய உபதேசங்களை அவருடைய சொந்த வாழ்க்கையின் மூலமாக சித்தரிக்கிறார். அந்த சிறப்புக்குரியவற்றை அடையும்படி முயற்சிக்காமல், மற்றவர்களுக்கு சேவை செய்ய கற்றுக் கொள்வதின் மூலம் வரும் காரியங்களினால் அடையமுடியும் என்று நீருபித்தார். உண்மையான சிறப்புத்தன்மை அடைவதற்கு நாம் முதலாவது அது என்ன என்று அறியும் நம்முடைய சொந்த யோசனைகளை பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும்.

உண்மையான சேவை செய்தலுக்கு வரும் தடைகள்

1) **தேவனுடைய வழிகளை மனிதனுடைய வழிகளோடு இணைத்து குழப்புவது.** வேதாகமம் தெளிவாக நமக்கு போதிக்கிறது என்னவென்றால், தேவனுக்கும் அவருடைய சபைக்கும் எப்படி சேவை செய்வது என்றால் அதற்கு இயற்கையான மனிதனில் உண்டாகிறதான இயல்பான காரியங்களை மேற்கொள்வது அவசியமாகிறது. அது நமக்குச் சொல்லுகிறது என்னவென்றால், கோதுமை மணி பலன் கொடுப்பதற்கு முன்பதாக நிலத்தில் விழுந்து சாவதைப் போல் சாகுவதற்கு

திட்டமிட வேண்டும் (யோவான் 12:24,25). அது நமக்குச் சொல்கிறது தேவனுடைய சிந்தனைகளும் அவருடைய வழிகளும் மிகவும் உயரமானது இயற்கையாக புரிந்து கொள்வதற்கு (ஏசாயா 55:10,11). அவர் நினைப்பது போல் நாம் தேவனுக்கு சேவை செய்யவேண்டுமானால் உலகத்தோடு ஒத்து இருப்பதற்கு நாம் எதிர்ப்பு தெரிவித்து, தேவனுடைய மறுரூபமாக்குதல் நம்முடைய சிந்தனா சக்தியிலே ஏற்பட தேடவேண்டும் என்று சொல்லுகிறது (ரோமர் 12:1,2). கீழேயுள்ள அட்டவணை சேவை செய்தல் என்று வரும்பொழுது இயற்கையான மனிதனுக்கும், ஆவிக்குரிய மனிதனுக்கும் இடையே நடைபெறும் முரண்பாடுகளை சித்தரிக்கிறது.

சிறந்தவற்றை அடைய மனிதனுடைய வழி	**சிறந்தவற்றை அடைய தேவனுடைய வழி**
வல்லமையை மையப்படுத்துகிறது.	பணிவை மையப்படுத்துகிறது.
விடுதலையை வலியுறுத்துகிறது.	பொறுப்பை வலியுறுத்துகிறது.
ஆதாயத்தை கருத்தில் கொள்கிறது.	கொடுத்தலை கருத்தில் கொள்கிறது.
உடனடி நிறைவேற்றுதலை விரும்புகிறது.	நிலைத்து நிற்கும் சாதனையை விரும்புகிறது.
மனிதனுடைய புகழ்ச்சியை பெரிதும் விரும்புகிறது	தேவனுடைய அங்கீகாரத்தை பெரிதும் விரும்புகிறது.
தனக்கு மற்றவர்கள் சேவை செய்ய ஆவல் கொள்கிறது.	மற்றவர்களுக்கு சேவை செய்ய ஆவல் கொள்கிறது.
சுயமகிழ்ச்சிக்காக ஏங்குகிறது.	சுயக்கட்டுப்பாட்டிற்காக ஏங்குகிறது.
முன்னேறி செல்லுவதற்கு தள்ளிவிடப்படவேண்டும்	பொறுமையுடன் காத்திருக்க அவசியம்.
மனிதனை நடத்த விடாமுயற்சி செய்கிறது.	தேவனைப் பின்பற்ற விடாமுயற்சி செய்கிறது.
போட்டியிட விரும்புகிறது.	ஒத்துழைக்க விரும்புகிறது.

2) **தன்னிலைப் படுத்தும் வாழ்க்கை**. ''ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக'' (பிலிப்பியர் 2:3-4). மற்றொரு ஆங்கில மொழிபெயர்ப்பில் சுயநல மாறுபாடு அல்லது சிறிய ஆவலினால் எழும் நோக்கங்களில் இருந்து செயல்படுவதை நிறுத்து என்ற வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

''எனக்கு என்ற தலைமுறை'' எவ்வளவு வித்தியாசமாய் ஒலிக்கிறது. இன்றுள்ள நமது கலாச்சாரத்தின் மிகவும் பிரபல்லியமாய் இருக்கிற ஞானத்தில் சில காரியங்கள் இவ்வாறு சொல்லுகிறது. உன் சொந்தக் கூட்டைக் கட்டி அதை எல்லாவற்றிற்கும் மேலாக சிறந்ததாக பராமரி. விளப்பரப் படுத்துதல், பழிவாங்குதல் என்னும் ஆவியோடு தாளிட்டுள்ளது. நீங்கள் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கலாம் ''உங்களால் முடியும'', ''உங்களுடைய வழியில்'', ''நீங்கள் செய்ய வேண்டும்'', ''உங்களுக்கு ஒரு தயவு செய்யுங்கள்'', ''நீங்கள் உங்களுக்காக கடன்பட்டுள்ளீர்கள்'' ''ஒரு விடுதலையை விரும்புங்கள்'' மற்றும் ''நீங்கள் செய்ய வேண்டியது உங்களுக்காக'' போன்ற வாக்கியங்களாகும்.

உண்மையிலே இது ஒன்றும் புதிதானதல்ல, வித்தியாசமான கலாச்சாரத்தில் உள்ள வலிமையான கலாச்சார ஊடுருவலே இவைகள் என்பதை பின்வரும் பட்டியல் காட்டுகிறது:

கலாச்சாரம்	**வாக்கியங்கள்**
கிரேக்கம்	ஞானவானாய் இரு உன்னை அறி
ரோம்	பெலவானாய் இரு உன்னை ஒழுங்குபடுத்து
எப்பிக்கூரிய தத்துவம்	புலன் இன்பம் பெறுபவராய் இரு, உன்னை அனுபவி
கல்வி	உழைப்பாற்றல் உடையவனாய் இரு, உன்னை விரிவாக்கு
உளவியல்	தைரியமாய் இரு, உன் அதிகாரத்தை வலியுறுத்து
பௌதீகவாதம்	திருப்திபடு, உன்னை தயவு செய்துக்கொள்
மானுடத்துவம்	தகுதி வாய்ந்தவனாய் இரு, உன்னை நம்பு

ஆனால் இயேசு முற்றிலும் வித்தியாசமான கொள்கையோடு வந்தார். இயேசு சொன்னார் "வேலைக்காரனாய் இரு, உன்னை விட்டுக் கொடு, உன்னை மறுதலி". உண்மையான கிறிஸ்தவன் ஒருபோதும் பிரபல்லியமாவதை விரும்பவில்லை, இருந்தபோதிலும் உண்மையான கிறிஸ்தவன் சில நேரங்களில் பொதுமக்களுடைய தயவை அனுபவித்திருக்கிறான் (எப்படியிருந்தாலும் இதுவும் வழக்கமாக நீண்ட நாட்கள் நிலைப்பதில்லை). புதிய ஏற்பாட்டிலே மறுதலித்தல் என்ற கிரேக்க வார்த்தை "அப்ரோனமை" 13 இடத்திலே உபயோகப்படுத்தப் பட்டுள்ளது. இந்த வார்த்தையின் அர்த்தம் முற்றிலுமாக மறுதலித்து விடுதல், தனது அல்ல என்று விட்டுவிடும் வரை.

இயேசு சொன்னார், "ஒருவன் என்னைப் பினபற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்". (மத்தேயு 16:24) .அவர் குறிப்பிட்ட காரியம் தேவனுடைய சித்தத்தின்படி சேவை செய்ய வேண்டுமானால் நாம் நமது சொந்த சித்தத்திற்கு சாக வேண்டும். இது சுயத்திற்கு சாகுதலாகும். "நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" (கொலோசெயர் 3:3). "நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே" (1 கொரிந்தியர் 6:19,20).

தெளிவாக கிறிஸ்தவ சேவையின் வழியானது நவீன ஐரோப்பிய கலாச்சாரம் சொல்லுகிற சுதந்திரம் என்னும் வழியிலிருந்து முற்றிலும் வித்தியாசப்பட்டு செயல்படுகிறது. உண்மையான கிறிஸ்தவ சேவை என்பது விரும்ப தகுந்த ஒன்று அல்ல என்பது மாத்திரமல்ல, உண்மையாகவே 'எனக்கு என்ற தலைமுறையினரால்' கடைபிடிக்க முடியாத ஒன்றாகும். உண்மையான சேவைக்கு வலிமையான சுயரூபமும், உண்மையான சுயஅறிவும் தேவைப்படுகிறது. ஆனால் பொதுவாக, இந்த இரண்டும் குறைவு படுகிறது. கடைசி பஸ்கா பண்டிகைக்கு பின் இயேசு சீஷர்களுடைய கால்களை கழுவினபொழுது (யோவான் 13:1-16) எப்படி உறுதியாக விடாமுயற்சியுடன் தன்னிலே முக்கியத்துவப் படுத்துவதை மேற்கொண்டு எவ்வாறு உண்மையான வேலைக்காரனாவது என்று காட்டினார்.

3) **உடனடியாக நிலைநிறுத்தும் மனநிலை**. இந்த உடனடி நிலைநிறுத்தும் நடக்கை ஆவிக்குரிய யுத்தத்தில் சாத்தானுக்கும், சபைக்கும் இடையே நடக்கும் போராட்டத்தில் தீமையை விளைவிக்கக் கூடியது. ஏனெனில் இந்த யுத்தத்தினால் வெளிப்படும் காரியங்கள் நித்தியமானவைகள். இயேசு தம்முடைய சீஷர்களுக்கு சொன்னார், "மனுஷகுமாரனும், ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மாற்கு 10:45).

தியாகத்தின் தத்துவம் எப்பொழுதுமே அது தேவனுடைய வழி அது மனிதனுடையதாகாது.

பிரச்சனைகள் மற்றும் அழுத்தங்களை கையாளுதல்

கிறிஸ்தவர்களாகிய நாம் எப்படி பிரச்சனைகளை வரையறுப்பது?

பிரச்சனை என்ற வார்த்தையின் பாரம்பரியத்தின் படி ஏற்றுக் கொள்ளப்பட்ட வரையறை ஆக்ஸ்போர்டு அகராதியில் உபயோகிக்கப்பட்டுள்ளது. அது பிரச்சனையை இவ்வாறு வரையறுக்கிறது: சந்தேகம், கடினக் கேள்வி, புரிந்து கொள்வதற்கு கடினமான காரியங்கள். பிரச்சனை என்ற வார்த்தையின் கிரேக்க பதம் '*புரோபல்லியன்*' ('*புரோ*' என்றால் முன்பாக, 'பல்லியன்' என்றால் எறிந்து விட) நமக்கு விருப்பதற்குரிய வரையறையைக் கொடுக்கிறது. இதன் எழுத்துப்பூர்வமான அர்த்தம் பொருள்களை எறிந்து விடுதல் அல்லது முன்பாக போடுதல். கிறிஸ்தவர்களாகிய நாம் கிரேக்க வரையறையின் வெளிச்சத்திலே பிரச்சனையை பார்க்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நாம் அவைகளை நேர்மறையான காரியங்களாக பார்க்க அவர் விரும்புகிறார். பதிலுக்கான கதவுகள் இருக்கிறது. நாம் இருக்கிற இடத்திலே தங்கிவிடாமல் நம்மை முன்பாக நகரச் செய்யும் காரியங்கள் இருக்கிறது. அவைகள் ஒருவேளை கடினமாக இருக்கலாம். அவைகளினால், நாம் கஷ்டப்படலாம். ஆனால் அவைகளினால் கற்றுக்கொண்டு மேற்கொண்டு நாம் தேவனில் நகர்கிறோம். உண்மையிலே பிரச்சனை இல்லாமல் நாம் தேவனில் இருக்க முடியாது.

கிறிஸ்தவர்களுக்கு பிரச்சனைகளில் மூன்று ஆதாரங்கள்

(i) தேவன்

கிறிஸ்தவர்கள் அடிக்கடி பிரச்சனைகளுக்கு காரணமாக சத்துருவை கூறுகிறார்கள். ஆனால் உண்மையிலே பிரச்சனை தேவன் மூலமாக வருகிறது. அவர் அவருக்குள் வளர நமக்கு தருணத்தை தருகிறார். அவருடைய குமாரனாகிய இயேசுவைப் போல் மாற தருணம் தருகிறார். தேவன் அவருடைய மகிமைக்கென்று நம்மை தெரிந்து கொண்டார். நம்முடைய சுகபோகத்திற்காக அல்ல. எந்த விதமான பிரச்சனைகளை அல்லது கஷ்டங்களை நாம் சந்தித்தாலும் பரவாயில்லை, நாம் தேவனை நம்பி நம்முடைய நம்பிக்கையை அவர் மேல் வைக்க வேண்டும் (ரோமர் 8:28-30).

(ii) சரீரமும், ஆத்துமாவும்

விசுவாசிகளாகிய நமக்குள் ஒரு போராட்டம் நடந்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய பழைய வழி சிந்தனைகள் மற்றும் செயல்களை தேவன் செய்ததான காரியம் தொடர்ந்து நம்முடைய வாழ்க்கையில் செய்யும் காரியங்களுக்கு இடையே இந்தப் பகுதியை மேற்கொள்ள நம்முடைய சரீரத்தையும், மனதையும் தேவனுடைய கரத்திலே ஒப்புக் கொடுப்பது அவசியம். இதற்கு சுய ஒழுக்கம், சுய விழிப்புணர்ச்சி தேவன் தம்முடைய சிங்காசனத்தில் இருக்கிறார் என்ற சிந்தனை(1கொரிந்தியர் 9:24-27; ரோமர் 12:1,2; எபேசியர் 4:22-24). இந்தப் பகுதியில் வெற்றியாய் வாழ நாம் செய்ய வேண்டியது:

- என்ன செய்ய வேண்டுமென்று தேவனிடத்தில் ஒருபோதும் சொல்லாதிருங்கள். ஆனால் அதற்கு பதிலாக கீழ்ப்படியுங்கள்.
- வேதவசனத்தின் தவறாமையை மாத்திரம் விசுவாசிக்காமல், அதின் நன்மையிலே வாழ வேண்டும். வேதாகமத்திலே வெளிப்படுத்தப்பட்டது போல, நாம் தேவனிடத்திலிருந்து பெறுகிற ஒவ்வொரு உடனடி வார்த்தைகளையும், ஏற்கனவே நிறுவப்பட்ட தேவனுடைய வார்த்தைக்கு நாம் மாற்ற வேண்டும்.
- நாம் கிறிஸ்துவில் இருக்கிறோம் என்று அறிந்து நன்மையில் வாழ வேண்டும். ஆனால் பிரச்சனை மற்றும் கிறிஸ்தவர்களுக்கான பாடுகளை மறுதலிக்கிற தவறான வெற்றிக்களிப்பு கொள்கையிலே வாழக்கூடாது.
- மற்ற ஜனங்கள் நமக்காக சிந்திப்பதற்கும், நமக்காக தீர்மானம் எடுப்பதற்கும் ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது. அவைகளை நாமாகவே செய்ய வேண்டும். நம்முடைய மனதை செயல்படாமல் வைத்து ஆபத்தான ஜனங்களுக்குப் பின்பாக நம்மை இணைத்து நம்மை முதிராதவர்களாக வைத்து பெலவீனக் கிறிஸ்தவர்களாய் மாற்றிவிடும்.

(iii) எதிர்ப்பு

சில பிரச்சனைகளுக்கு சத்துருவே காரணம் ஆகிறான். இங்கே நாம் எதிர்த்து நிற்க வேண்டும். சில நேரங்களில் தேவனுடைய சித்தத்தை சுமந்து செல்வதற்கு நம்மை தடை பண்ணுகிற காரியங்களுக்கு எதிராக போரிடவும் வேண்டும். இந்த யுத்தத்தில் சாத்தானும் அவனுடைய சர்வ சேனையும், நம்முடைய போராட்டத்தின் முக்கிய இலக்கு. அவன் நம்மிடத்தில் விருப்பமாய் இல்லை என்று நம்புவது முட்டாள்தனமானது (யோபு 1,2ம் அதி. லூக்கா 22:31-34). பிரச்சனைகளினால் சாத்தான் நம்மை நொறுக்க முயற்சிக்கிறான். எப்படியிருந்தாலும், நாம் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறோம் என்பதை நாம் நினைவு கூறவேண்டும். தேவன் நம்மை அதிகம் பாரப்படுத்த மாட்டார். நம்மை அர்ப்பணித்தால் நாம் தொடர்ந்து அவரை நோக்குவோமானால் நாம் உயிரோடு வாழும் நாட்களெல்லாம் எதிரிகளிடத்திலிருந்து வரும் பயத்திற்கு நாம் ஒன்றும் செய்ய வேண்டாமென்று தேவன் விரும்புகிறார் (யாக்கோபு 4:7; 1பேதுரு 5:8-10).

பிரச்சனைகள் எல்லாம் நேர்மறையான காரியங்களாய் இருக்கின்றன என்பதற்கான பனிரெண்டு காரணங்கள்:

- அவைகள் தேவனுக்குள் நம்முடைய முதிர்ச்சியின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றன. அவைகள் தேவனோடு நாம் எங்கே இருக்கிறோம் என்பதை காட்டுகிறது.

- அவைகள் வாழ்க்கையின் உண்மையான மதிப்புகளை காட்டுகிறது. எப்பொழுது உபத்திரவங்கள் கஷ்டங்கள் வருகின்றதோ அதற்கு முன்னால் எது உண்மையிலே முக்கியமானது எது முக்கியமற்றது என்பதை அதற்கு முன்பாக அறியமாலிருந்தோம்.

- சுய விழிப்புணர்ச்சியை உருவாக்குகிறது (அதாவது உண்மையிலே நாம் யார் என்பதை காட்டுகிறது. நம்முடைய குணாதிசயத்தின் பெலத்தையும், பெலவீனத்தையும் கோடிட்டு காட்டுகிறது. தகர பரிசோதனையைப் போல)

- ஆவிக்குரிய விடாமுயற்சியை விரிவாக்குகிறது. நாம் பிரச்சனைகளை மேற்கொள்ள வேண்டுமானால் அல்லது தீர்க்க வேண்டுமானால் விட்டுக் கொடுக்காமல் தொடர்ந்து நிலைத்து நிற்க வேண்டும். அநேக கிறிஸ்தவர்கள் மேற்கொள்வதற்கு முன்பாக விட்டுக் கொடுத்து விடுகிறார்கள்.

- நம்முடைய உணர்வை கட்டி எழுப்புகிறது. மற்ற ஜனங்களை பரிவுடன் அவர்களுடைய தேவைகளை பார்க்க உதவுகிறது. ஏனெனில் அவர்களுடைய இடத்தில் இருந்தால் எவ்வாறு இருக்கும் என்பதை நாம் அனுபவத்தின் மூலமாக கற்றுக் கொண்டிருக்கிறபடியால்

- நம்முடைய வரங்களையும், திறமைகளையும சுத்திகரித்து மெருகுட்டுகிறது. பிரச்சனையின் அழுத்தம் நம்முடைய சொரசொரப்பான முனைகள் செயல்படுவதை நிறுத்துகிறது. நம்முடைய வாழ்வில் வேண்டாதவற்றை வெளியேற்றுகிறது. நாம் எப்பொழுது பிரச்சனைகளை தேவனுடைய வல்லமையில் கையாளுகிறோமோ அப்பொழுது.

- நம்பிக்கையை நம்மேல் வளர்ப்பதற்கு பதிலாக தேவன் மேல் விரிவடையச் செய்கிறது. எப்பொழுதும் தன்னுடைய உண்மையை நிருபிக்கிற தேவனை நாம் நம்ப ஆரம்பிக்கிறோம்.

- நம்முடைய கொள்ளளவை தேவனுக்குள் பெரிதாக்கி அவருக்குள் இருக்கும் நம்முடைய விசுவாசத்தை வளரச் செய்கிறது. ஏனெனில் நம்முடைய விசுவாசம் வளர அவைகள் நமக்குள் நிடிக்கச் செய்து, நமக்கு தேவையை உண்டாக்குகிறது.

- நம்முடைய பாதுகாப்பை சோதிக்கிறது. நாம் தேவனை சார்ந்திருப்பது அவசியம் என்பதை அவைகள் நமக்கு போதிக்கிறது. வேறே எந்தக் காரியத்தையும் சார்ந்திராமல் தேவனை மட்டும் சார்ந்திருக்க வேண்டும். அவர் மாத்திரமே அசைக்கப்படாதவர், உண்மையாக நிலையாக நிலைத்து நிற்பவர், நித்தியமானவர்.

- நம்மை கிளர்ச்சியுட்டுகிறது. சுயதிருப்தியை தடை பண்ணுகிறது. பிரச்சனை நமக்கு பின்னால் இருக்கும் செஞ்சுடுள்ள கிளரி போன்றது.

- அவைகள் உருவாக்கும் தன்மையுள்ளவர்களாய் மாற்றுகிறது. சிந்திக்க நமக்கு உதவுகிறது. புதிய யோசனைகளை உருவாக்குகிறது. அவைகள் நாம் எப்பொழுதும் செய்து வந்த வழிகள் இன்னும் நிலையைக் காட்டி சவால் விட்டு புதிய மற்றும் அதிக ஆக்கப்பூர்வமான வழியில் காரியங்களை செய்யும் விதத்தில் வர அடிக்கடி நம்மை உந்தி தள்ளுகிறது.

- அவைகள் ஞானத்தைப் பெருக்குகிறது. ஏனெனில் நாம் அவருக்கு காத்திருந்தால் தேவன் நம்முடைய சூழ்நிலையில் என்ன செய்திருப்பார் என்று கற்றுக் கொள்ள உதவுகிறது. உடனடியாக நம்முடைய பிரச்சனைகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு பதிலாக.

தேவன் நம்மை வளர்ந்து வரும்படியாக விரும்புகிறார்

தேவன் நம்முடைய பிதா, நாம் அவருடைய பிள்ளைகள். அவர் நமக்கு அவசியம் என்று அறிந்து நம்மை பாதுகாத்து உணவை ஊட்டினார். எப்படியிருந்தாலும், அவருக்குள் முதிராத இந்த நிலையிலே இருக்க தேவன் விரும்பவில்லை (எபிரெயர் 5:11-14). அவர் நம்மை வளர்ந்து வரும்படி விரும்புகிறார். எனவே நாம் அவருக்குள் இருக்கும் இடத்தைப் பொறுத்து நமக்கு சவால்களையும், பிரச்சனைகளையும் அறிமுகப்படுத்துகிறார். அனுபவத்தினால் கற்றுக்கொள்ளும் வசதியை நமக்கு அளிக்கிறார். நாம் தவறும் போதுகூட தீர்மானம் எடுக்க நம்மை அனுமதிக்கிறார். இருந்தபோதிலும், பாதுகாப்பின் எல்லையில் சரியான பாதையில் நம்மை நிலைநிறுத்தும் வழியில் நாம் இருப்பதற்கு அறிவுறுத்தவோ, சரி செய்யவோ நம்மை ஒழுக்கப்படுத்தவோ, போதிக்கவோ அவர் முயற்சி செய்கிறார். மற்றும் தவறான காரியங்களை செய்வதற்கு தடுக்கிறார். சில நேரங்களில் அவைகள் நமக்கு பாதிப்பை உண்டாக்குகின்றன. ஆனால் நம்மை பிரச்சனையிலிருந்து பாதுகாப்பதில்லை.

"இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும். ஆகையினால், நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி, முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்". (எபிரெயர் 12 :11 -13).

தேவன் நம்மை ஒருபோதும் பிரச்சனைகளினால் பாடுப்படுத்த மாட்டார் என்பதை நம்மை நாம் அறிந்திருக்கிறதை விட நம்மைக் குறித்து சிறப்பாகவே அறிந்திருக்கிறார். நம்மால் நன்கு சமாளிக்க முடியும் என்கிறதான பிரச்சனைகளை மாத்திரம் நம்முடைய வழியில் வரும்படியாக அவர் அனுமதிக்கிறார். அவர் நமக்கு கொடுக்கிற பெரிய அளவிலான பிரச்சனை, அவர் நம்மில் இருக்கிறார் என்ற தைரியத்தையும், நம்பிக்கையையும் கொடுக்கிறது. தேவன் நம்மை முதிர்ந்த கிறிஸ்தவர்களாய் இருக்க விரும்புகிறார். எந்த சூழ்நிலையிலும் தேவன் என்ன செய்யமுடியும் என்பதை மாத்திரம் அறியாமல் அவர் என்ன செய்கிறார் என்பதை அறிய அவர் ஒவ்வொரு பிரச்சனையிலிருந்தும் நம்மை பாதுகாத்து எந்த கடினமான சூழ்நிலையிலும், நாம் சந்திப்பதற்கு முன்பு குறுக்கீடு செய்தால், நாம் ஒருபோதும் அவருக்குள் முதிர்ச்சியில் வளர முடியாது. அவர் இந்த உண்மையை மாத்திரம் நாம் அறிய விரும்பாமல் இதன் நன்மையில் வாழ விரும்புகிறார். எனவே நாம் அந்த உண்மை, அனுபவத்தோடு கிரியை செய்கிறது என்பதை அறிவது அவசியம். தேவன் அவரால் வடிவமைக்கப்பட்ட பிரச்சனைகளை நமக்கு அளித்து இந்த தருணத்தை நமக்கு தருகிறார். பின்பு அனுபவத்தின் மூலமாய் கற்றுக் கொள்ள வழிவகைச் செய்கிறார்.

தேவனுடைய பிரச்சனையிலிருந்து விலகியோடினால், முதிராத கிறிஸ்தவர்களை விளைவிக்கும்

அநேக கிறிஸ்தவர்கள் இன்று தேவனுக்குள் முதிராத தன்மையில் நிலைத்திருக்கிறார்கள், ஏனெனில் அவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட அவருக்குள் முதிர்ச்சியில் வளருவதற்கேதுவான பிரச்சனைகளையும், சோதனைகளையம், சந்திக்க மறுப்பதினால் இந்த ஜனங்கள் பிரச்சனையை எதிர்கொள்ளும்போது செய்கிற காரியங்கள்:

- தேவனிடத்தில கோபப்பட்டு பிரச்சனையை அவர்களிலிருந்து நீக்கும்படியாக அவரை கட்டாயப்படுத்துகிறார்கள். இந்த ஜனங்கள் எப்பொழுதும் குறைகூறிக்கொண்டே இருக்கிறார்கள்.

- பிரச்சனையை மேற்கொள்ளுவதற்குப் பதிலாக பிரச்சனையோடு இருக்கிறார்கள். இந்த ஜனங்கள் இது தங்கள் விதி என்று நினைத்து எந்த பாடுகளையும் அனுபவிக்கிறார்கள். ஏனெனில் இதுதான் அவர்களுக்கான தேவசித்தம் என்று விசுவாசிக்கிறார்கள்.

- சோர்ந்துபோய் கெட்ட கோபங்கள் வெடித்தெழும்பி பிரச்சனைகளை தங்களை விட்டு நீக்கும்படியாக தேவனை நோக்கி கதறுகிறார்கள். இந்த ஜனங்கள் எப்பொழுதும் ஒப்பாரி வைத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

- சாத்தானை குற்றம்சாட்டி பிரச்சனையை கையாண்டு மேற்கொள்வதற்கு பதில் அவனுக்கு எதிராக போராட்டத்தில் குதிக்கிறார்கள். இந்த ஜனங்கள் குழப்பம் அடைந்து ஏமாற்றம் அடைகிறார்கள். ஏனெனில் அவர்களுடைய போராட்டம் கிரியை செய்வதில்லை.

உண்மையென்னவென்றால், அடிக்கடி பிரச்சனையானது தேவன் தம்முடைய ஜனங்களின் ஜெபத்தினை கேட்பதின் விளைவாகும். அவர்கள் தேவனிடத்தில் தங்களை மாற்றும்படியாக கேட்கிறார்கள் அல்லது அவருக்குள் பெரிய முதிர்ச்சியில் அவர்களை எடுத்து செல்லும்படி கேட்கிறார்கள். ஆனாலும் அவர் பதிலளிக்கும் போது பிரச்சனையை கொடுக்கிறார். அது அவர்கள் கேட்டதை நிறைவேற்றுகிறது. ஆனால் அதை அவர்கள் விரும்பவில்லை. இது பொதுவாக அவர்களுக்குள் ஏற்கனவே முன்தோன்றிய யோசனையினால், எப்படி தேவன் கிரியை செய்கிறார் அல்லது அற்புதமாய் தங்களை மாற்றிவிட எதிர்பார்க்கிறார். தேவன் அன்பின் தேவன் அவர் அடிக்கடி பிரச்சனையானது அந்த நபர்களுக்காக வடிவமைத்து குறிப்பிட்ட காலத்திற்கு நிலைக்கும்படி அனுமதிக்கிறார். அந்த நபர் எதிர்மறையாக பதிலளித்தாலும், அவர்களுக்கு இதுவே சிறந்த காரியம் என்று அவர் பார்க்கிறார். எப்படியிருந்தாலும், அவரை விடாப்பிடியாக தேவனிடத்தில் பிரச்சனையை நீக்கும்படி கேட்டால் அல்லது அதற்கு தவறான வழியில் செயல்படுவார்களானால், அவர்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் பாதிப்பு ஏற்பட ஆரம்பிக்கும். தேவன் அதை நீக்கி விடுகிறார். அவர் அதற்கு பின்பு அந்த ஜனங்கள் தங்களுடைய சொந்த நேரத்தை உடையவர்களாய் இருக்க அனுமதிக்கிறார். ஆனால் முடிவில் அவர்களை அதே பிரச்சனைக்கு மீண்டும் எடுத்து செல்கிறார். அல்லது அவர்கள் இந்த முறை அடைந்து விடுவார்கள் என்ற நம்பிக்கையின் விருப்ப இலக்கோடு அதேபோல் இன்னொன்றை கொடுக்கிறார். கொடுமை என்னவென்றால், அநேக கிறிஸ்தவர்கள் தேவனோடு செல்ல தவறிவிடுகிறார்கள். ஏனெனில் தேவன் அவர்களுக்கென்று வடிவமைத்த பிரச்சனையை எதிர்கொண்டு, அதை தீர்ப்பதற்கு மறுக்கிறார்கள்.

கிறிஸ்தவ தவைர்கள் மிக கடினமான பிரச்சனைகளை கையாளும்படியாய் தேவனால் தெரிந்து கொள்ளப் படுகிறார்கள். அவர் மாத்திரமே இந்தப் பிரச்சனைகளை அவர்களுக்கு கொடுக்கிறார். ஏனெனில் அவர் அறிவார் அதைத் தொடர்ந்து தன்னைப் பார்த்தால் அவைகளை அவர்கள் சமாளிக்க முடியும் அழுத்தத்தின் கீழ் தலைவரின் தரமுள்ள தேவனோடு உள்ள உறவு கடந்து செல்வதை காண்பிக்க வேண்டும். கடந்து செல்லும் பொழுது உங்களுடைய செய்கைகள் உங்களுடைய நம்பிக்கையையும், அன்பையும் உண்மையாக எங்கே வைத்திருக்கிறது என்பதை வெளிப்படுத்தும்.

கிறிஸ்தவர்களுக்கு பிரச்சனைக்குரிய பத்து பொதுவான பகுதிகள்

தேவன் அநேக விதமான பிரச்சனைகளை நமக்கு கொடுத்து அவருக்குள் முதிர்ச்சியில் வளரும்படியாக செய்கிறார். கீழ்வரும் கேள்விகளுக்கு ஜெபத்துடன் பதிலளியுங்கள். பலதரப்பட்ட பகுதியில் தேவனுக்குள் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதை கண்டுபிடிக்க அவைகள் உதவும்.

(i) பணம்

- தேவன் உங்கள் பொறுப்பிலே கொடுத்த பொருளாதரத்திற்கு நல்ல உக்கிராணக்காரர்களாய் நீங்கள் இருக்கிறீர்களா?

- பொருளாதார பகுதியிலே நீங்கள் விசுவாசத்தில் வாழ்கின்றீர்களா?
- தேவனை உங்கள் பணத்தின் மூல ஆதாரமாய் பார்க்கிறீர்களா? அல்லது உலகத்தை உங்களுடைய தேவைகளை சந்திக்கும் விதமாக பார்க்கிறீர்களா?
- உங்களுடைய பொருளாதாரத்திலே அல்லது சபையின் பொருளாதாரத்திலே நேர்மை உடையவர்களாக இருக்கிறீர்களா?
- உங்களுடைய பணத்தை வைத்து தேவன் விரும்புகிறதான காரியத்தை செய்கிறீர்களா?
- அவர்கள் பணம் கொடுப்பார்கள் என்பதற்காக பிரசங்க அழைப்புகளை ஏற்றுக் கொள்ளுகிறீர்களா? அல்லது தேவன் சொன்னதற்காக செய்கிறீர்களா?
- தேவனை சேவிப்பதில் பணத்தின் மேல் உங்கள் ஆர்வம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றதா?

(ii) பாலுணர்வு

- தேவன் எதிர்பார்க்கிற விதமாய் எதிர்பாலர் அங்கத்தினர்களை நடத்துகிறீர்களா? (1 தீமோத்தேயு 5:1,2)
- எதிர்பாலரான அங்கத்தினர்களோடு இருக்கும்பொழுது சரியான கவனத்துடன் இருக்கிறீர்களா? விசேஷமாக அவர்களோடு தனியாய் இருக்கும்பொழுது?
- டி.வி, ரேடியோ, புத்தகம், வாராந்திர இதழ் இவைகளை வாசிக்கும்பொழுது உங்கள் மனதில் என்னவிதமாய் உணர்கிறீர்கள், உதவியாகவா அல்லது தீமையாகவா?

(iii) அதிகாரம்

- தலைமைத்துவத்தை சரியாக அல்லது சிலாக்கியமாக கருதுகிறீர்களா?
- தலைவரான உங்களை முதலாளியாக பார்க்கிறீர்களா அல்லது வேலைக்காரனாக பார்க்கிறீர்களா?
- உங்களை பெருமையாக அல்லது தாழ்மையாக பார்க்கிறீர்களா?

(iv) பயம், கவலை, எதிர்பார்ப்பு

- உங்களுடைய வாழ்க்கையை பாதிக்கிற ஏதாவது பயம் உங்களுக்கு உண்டா; அவைகளை மேற்கொள்ள முடியும் என்ற விதத்தில் பார்க்கிறீர்களா?
- கவலை பாவம் என்பதை அறியீர்களா, ஏனெனில் நீங்கள் தேவனை நம்பவில்லை, உங்களுடைய விசுவாசத்தை அவர் மேல் வைக்கவில்லை? மத்தேயு 6:25-34).
- பயம் என்பது பிசாசின் பயனுள்ள ஆயுதமாய் கிறிஸ்தவர்களுக்கு எதிராக இருக்கிறது என்பதை உணர்கிறீர்களா?
- உங்களை சில காரியம் செய்யச் சொல்லும்பொழுது "முடியாது" என்று சொல்ல முடியாமல் மற்ற ஜனங்களை விருப்பப் படுத்த செய்கிறீர்களா, அவைகள் அந்த நேரத்தில் தேவன் உங்களை செய்ய விரும்பவில்லை என்பதை நீங்கள் அறிந்த போதிலும்?

(v) ஏமாற்றம், அதைரியம், வஞ்சனை

- ஏமாற்றம், அதைரியம், வஞ்சனை ஆகியவைகளின் அழுத்தங்கள் வரும்பொழுது விட்டு விட நினைத்து ஓடி விட நினைக்கிறீர்களா?
- கிறிஸ்தவர்கள் தேவனை அறிந்தவர்கள் அந்தகாரத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு நித்திய வாழ்வை உடையவர்கள் இப்படிப்பட்ட காரியங்களுக்கு எப்படி அடிமையாக முடியும்?
- இந்தக் காரியங்கள் எல்லாம் அடிக்கடி சத்துருவினால் உற்சாகப்படுத்தப்படுகிறது. ஆகவே இதைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?

(vi) போட்டி

- உங்களை மற்ற ஜனங்களோடு ஒப்பிடுகிறீர்களா, தேவன் எதை செய்யும்படியாய் அழைத்திருக்கிறாரோ அதை மாத்திரம் செய்கிறீர்களா, அவரை மாத்திரம் பார்க்கிறீர்களா?
- சபையிலே மற்ற ஜனங்களுடைய வெற்றியை உங்களுடையதாக கருதுகிறீர்களா?
- மற்ற ஜனங்கள் தேவனுக்காக செய்யும் காரியங்களின் வெற்றியில் சந்தோஷப்படுகிறீர்களா?

(vii) விசுவாசம், குறைவுபடுதல்

- உங்களுக்கு அவர் தந்த வார்த்தையின் வாக்குத்தத்தங்களில் தேவனை நம்புகிறீர்களா அல்லது சரீர சூழ்நிலைகளைப் பார்த்து அதிலே அதிக நம்பிக்கை வைக்கிறீர்களா, விசேஷமாய் தேவன் சொன்ன வழியில் இல்லாதது போல் காணப்படும்போது?
- உங்களுடைய சந்தேகங்களை முழுவதுமாக மேற்கொள்ள முடியாது என்பதை கண்டுபிடித்தீர்களா?

(viii) தொடர்பு நிலை

- கோள்சொல்வதில் அவதூறு பண்ணுதலில் தவறாக புரிந்து கொள்ளுதலில் ஆனந்தம் அடைகிறீர்களா?
- மற்றவர்களுக்கு விரோதமாக கோபத்தை உங்கள் இருதயத்தில் மறைத்து வைத்திருக்கிறீர்களா?
- தாழ்மை உள்ளவர்களாய் மன்னிக்கிறவர்களாய் இருக்கிறீர்களா?
- மற்றவர்களோடு எப்படி இடைபடுகிறீர்கள் - வாக்குவாதம் மற்றும் பூசலுடனா, - அன்புடனா அல்லது எதிர்ப்பை புதைத்தா?
- குடும்ப பிரச்சனைகளை மேற்கொள்வதற்கான சவால்களாக பார்க்கிறீர்களா, உங்களுடைய சொந்த குடும்ப வளர்ச்சி தேவனுக்குள் முதிர்ச்சி ஏற்படுத்தும் விதத்திலா?
- உறவுமுறை பிரச்சனைகளை நீங்கள் சகிக்க வேண்டிய கடினமான காரியங்களால் பார்க்கிறீர்களா, அல்லது இயேசு பார்த்தது போல தேவனுடைய ராஜ்ஜியத்தின் பொதுவான தத்துவங்களை ஆவிக்குரிய கனிகளை வெளிகாட்டும் தருணங்களாகப் பார்க்கிறீர்களா?

(ix) பழக்கவழக்கங்கள்

- நீங்கள் அதை அரசாளுகிறீர்களா அல்லது அது உங்களை அரசாளுகிறதா?
- தேவனுக்கு வெளியே விடமுடியாத காரியம் ஏதாவது உண்டா?

(x) சூழ்நிலை

- தேவனுடைய வல்லமையினால் அதை நீங்கள் கட்டுப் படுத்துகிறீர்களா, அல்லது அது உங்களையும், உங்கள் வாழ்க்கையையும் கட்டுப்படுத்துகிறதா?
- உங்களுடைய சூழ்நிலையில் நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறார் என்று நீங்கள் கேட்கிறீர்களா?
- அந்த காரியத்தில் தேவன் உங்களுக்கு போதுமானவராக உணர்கிறீர்களா? மிக கஷ்டமான சூழ்நிலையில் அவருடைய சித்தத்தின் வாய்க்காலாய் உங்களை உபயோகிக்கும் பொழுது?

மேற்கொள்ளுதல்

தேவனுடைய வழியில் கிறிஸ்தவ தலைவர்களாகிய நாம் கடினங்களுக்கும் சவால்களுக்கும் எப்படி பதில் அளிப்பது என்று கற்றுக் கொள்வது அவசியம். வாழ்க்கையை எவ்வாறு கையாளுவது என்று நாம் அறிவது அவசியம். உற்பத்தி திறன்மிக்க ரீதியிலே காரியங்களை நடக்க வைத்து தேவனை மகிமைப் படுத்த வேண்டும். நம்முடைய சொந்த எல்கைகளை மேற்கொண்டு கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சியில் வளர்வது அவசியம். வெற்றியையும், தோல்வியையும் எப்படி கையாளுவது என்று கற்றுக் கொள்வது அவசியம். எனவே அதன் மூலமாய் சாத்தான் நம்முடைய வாழ்க்கையில் பெருமையடைய தருணம் இல்லாமல் போகும். <u>பெருமை நம்முடைய விசுவாசத்தை கற்பனைக்கு மாற்றி நம்முடைய உரிமைகளை கட்டாயப்படுத்தி பெற காரணமாகிறது.</u> பெருமையின் வாழ்க்கை மற்றும் பதவி நம்முடைய வேலை மற்றும் சேவையில் ஆர்வமுட்டுதலாய் மாறி விடுகிறது. நம்முடைய வெற்றியைக் கூட இயேசுவின் சிலுவை பாதத்தில் மரிக்க வேண்டியது அவசியம்.

"இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே" ரோமர் 8:37).

தேவனுடைய தலைவர்களாகிய நாம் நம்மிடத்திலே எங்கே நிற்கிறோம் என்பதை அறிவது அவசியம். என்ன பகுதிகளில் எது நம்மை பாதிக்கிறது என்பதை அங்கரீத்துக் கொள்ளுதல் அவசியம்.

கிறிஸ்துவின் மேற்கொள்ளும் வல்லமையை அறிவது அவசியம். நம்முடைய எதிர்க் கிரியையில் எங்கே சரிசெய்வது என்பதை அறிவது அவசியம். எதிர்மறையின் பதில்களை நேர்மறையாக மாற்றி பயமில்லாமல் செயல்பட நம்மை தகுதியாக்குகிறது. அல்லது அந்தப் பகுதியிலே தேவன் எதற்காக அழைத்தாரோ அதிலே தயவு பெற செய்கிறது. இது ஒரு நேர்மறையான அறிக்கை அல்ல. இது அதோடு இடைபடுவதற்கு பதிலாக முகத்திரையை மூடி நம்முடைய வாழ்க்கையில் உண்மையாக என்ன இருக்கிறது என்பதை அறியும். ஓர் எளிய முயற்சியாகும். நீங்கள் வெற்றி பெற்றதாய் உங்களை நீங்களே அறிக்கையிட முடியாது. அநேக கிறிஸ்தவர்கள் உண்மையை நேருக்கு நேர் சந்திக்க விரும்பவில்லை. ஆகவே, பெரிய ஆவிக்குரிய பொய்மையில் வாழ்கிறார்கள். அது பெரிய அளவில் தேவனுக்கு பயனற்றவர்களாய் நம்மை பரிமாறுகிறது. மேற்கொள்வதற்குப் பதிலாக இந்த ஜனங்கள் பிரச்சனை அங்கே இல்லாதது போல் நடிக்கிறார்கள். இதன் விளைவு கடுமையான சுய நியாயத்தீர்ப்பு காரியங்கள் கிரியை செய்வதில்லை. அவர்களுடைய வாழ்க்கை முழு சுயாதீனத்தையும், இணைப்பு தன்மையையும் தொடர்ந்து இழந்து காணப்படுகிறது.

"நீங்கள் விசுவாசியாவிட்டால் நிலைபெற மாட்டீர்கள் என்று சொல் என்றார்" (ஏசாயா 7:9).

கிறிஸ்தவ தலைவர்களாகிய நாம் நம்மை பின்பற்றுகிறவர்களுக்கு மாதிரியாய் இருப்பது அவசியம். எந்தக் காரியத்தை நாம் எதிர்கொண்டாலும் தேவனை அறிந்து அவருடைய வழிகளில், அவருடைய வல்லமையிலும் நிலைத்து நிற்பது அவசியம். அப்பொழுது ஒன்றும் நம்முடைய தலையின் மேல் ஏறமுடியாது. நாம் தலையாய் இருப்பது அவசியம். வாலாய் அல்ல. நம்முடைய பெலத்தில் அல்ல, தேவனுடைய பெலத்தில் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது சாத்தியம் என்று மற்ற ஜனங்களுக்கு காட்டுவது அவசியம்.

மேற்கொள்ளுதல் என்று மொழி பெயர்க்கப்பட்ட முக்கிய கிரேக்க வார்த்தை 'நிக்காயோ' அதன் அர்த்தம். 'வெற்றியை ஜெயித்தல்' அல்லது 'வெற்றி கொள்ள'. கிறிஸ்தவர்களாகிய நாம் மேற்கொள்ளுவது அவசியம்.

தலைமைத்துவத்தில் முன்னேற்றமும் ஏற்படும் தடைகளும்

தலைவர்களுடைய வழியில் அவருடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும் பொழுது அதோடு கூட அநேக கேள்விகளும் எழும்புகிறது. ஒரு தலைவர் அவருடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தில் வித்தியாசமான நேரங்களை வித்தியாசமான கேள்விகளை உடையவராக இருக்கலாம். அதிக தேவனுடைய ஆண்களும், பெண்களும் எப்படியிருந்தாலும் சில காரியத்தில் பின்வரும் கேள்விகளில் சில சவாலாக அமைந்திருக்கலாம்.

- சபையிலே என்னுடைய முடிவான இடமென்ன?
- ஊழியத்திற்கான தருணத்தை நான் எப்படி கண்டுபிடிப்பது?
- நான் சரியான விதத்தில் ஆயத்தமாகி விட்டேன் என்று எப்படி அறிவது?
- மற்றவருடைய வெற்றியில் நான் பொறாமையாக உணரும் பொழுது நான் என்ன செய்ய வேண்டும்?
- ஊழியத்தை நான் எப்படி ஆரம்பிப்பது?
- என்னுடைய தலைமைப் போதகருடைய தீர்க்க தரிசனம் நிறைவேறுமா?
- என்னுடைய ஊழிய விரிவாக்கத்திற்கும், இக்காலத்திற்கும் தகுந்த விதத்தில் என்ன செய்ய வேண்டும்?
- ஏன் ஒருவரும் என்னுடைய ஊழியத்தை அங்கிகரிக்கவில்லை?
- ஊழியம் வெற்றிகரமாக மாற நான் என்ன செய்ய வேண்டும்?

முடிவான தேவனுடைய அழைப்பிலே ஊழியம் எப்படி முன்னேற முடியும் அல்லது விலக முடியும் என்பதை இங்கே சில வேத வசன அடிப்படைகளை விளக்குவதற்கு கொடுக்கிறோம். இதைச் செய்யும் போது மேலேயுள்ள அநேக கேள்விகளுக்கு இது பதிலளிக்கும். சில தலைவர்கள் நன்றாக ஆரம்பிப்பார்கள். ஆனால் வழியருகே விழுந்து விடுவார்கள் (சிம்சோன், சவுல், சாலமோன்). மற்றவர்கள் ஆரம்பிக்க மாட்டார்கள் அல்லது முடிக்கமாட்டார்கள். எந்த ஒரு காரியத்திலும் ஒவ்வொரு தலைவரும் அவர்களுடைய வாழ்க்கைக்கான தேவ சித்தத்தை அறிவதில் மாத்திரம்

விருப்பம் கொள்ளாமல், அவருடைய வாழ்க்கை முழுவதும் சாவின் மையத்தில் எப்படி தாங்குவது என்பதை அறிய வேண்டும். இன்று சபை தலைமைத்துவம் தேவனுடைய வழிப்பாதையிலிருந்து உள்ளும் புறமாக அதிகமாக சட்டென்று திசைமாறி விட்டது. இங்கே நாம் குறிப்பிடுகிற காரியம் வழியிலே வரும் முக்கிய வீழ்ச்சிகளை மாத்திரமல்ல, ஆனால் அதோடு தேவனுடைய ஆணுக்கும், பெண்ணுக்கும் உதவுகிற நேர்மறையான படிகளை தந்து ஆண்டவருக்குள் அவர்களுடைய இலக்கை அடைய உதவுகிறது. கீழே வரும் படச்சித்திரத்தை கவனியுங்கள்.



அழுத்தத்தின் மூலமாய் நடக்கை பரிசோதனை

இந்தப் படத்திலே முக்கிய கிடைமட்டக்கோடு தலைவர்களுடைய வாழ்க்கை காலத்தை குறிக்கிறது. இடதுபுறம் படத்தின் ஆரம்பத்திலே தேவனுடைய ஆணும், பெண்ணும் பெறுகின்ற அழைப்பு மற்றும் ஊழியத்திற்கான தரிசனத்தைக் குறிக்கிறது. வலது ஓரம் படத்தின் முடிவிலே தலைவருடைய அழைப்பும், ஊழியத்திற்கான தரிசனமும் நிறைவேற்றப் படுதலைக் குறிக்கிறது. இந்த இரண்டுக்கும் இடையேயுள்ள இடைவெளி தலைவருடைய நடக்கையையும், தேவனின் இறையாண்மை பரீட்சை காலத்தையும் குறிக்கிறது.

ஒரு தலைவருடைய நடக்கை (அவருடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தைக் குறித்து அவருடைய மனநிலை மற்றும் உள்புறமான நாட்டம்) அவருடைய வெற்றியை ஊழியத்தின் தோல்வியை தீர்மானிக்க உதவுகிறது. ஒரு தலைவர் தேவனோடு அவருடைய வாழ்க்கையின் தெய்வீக நடக்கையை விரிவாக்குவதில் ஒத்துழைப்பாரானால், அவர் வெற்றி பெறுவார் எப்படியாயினும் ஒரு தலைவர் தெய்வீகமற்ற நடக்கையின் வேறுகளை தனக்குள் வளரவிட்டால் தேவன் அவரை செய்யும்படியாகச் சொன்ன காரியங்களை செய்வதிலிருந்து விழுந்து விடுவார். படத்திலே உதாரணமாக, தவறான புரிந்துக் கொள்ளுதல் என்னும் நடக்கையைப் பார்க்கலாம். அது தலைவருடைய வாழ்க்கையை தேவனுடைய பரிபூரண சித்தத்திலிருந்து விலகி விடுவதற்கு காரணமாகி விடும். எப்படியாயினும், தலைவர் நம்பிக்கையை தன்னுடைய உள்ளான நடக்கையில் அனுமதிப்பாரானால் அவருடைய முன்னேற்றம் தொடரும். மீதியுள்ள படம் முழுவதும் இந்த மாதிரியை பின்பற்றுவது விலகுவதற்கு காரணமாகிறது. ஆனால் கரிசனை வளர்ச்சியை விடுவிக்கிறது. ஆகவே இது ஒவ்வொரு தலைவருடைய வாழ்க்கையிலும் நடைபெறுகிறது. எப்பொழுது தேவன் ஒரு தலைவருடைய பாவ நடக்கையை உணர்த்துவரானால் அவருடைய சிறந்த பதிலளிப்பானது உடனடியாக மனந்திரும்புதல் மற்றும் சுத்திகரிப்பதற்கான ஜெபமாகும்.

மேலே குறிப்பிட்ட காரியங்களை குறித்ததான படிப்புகளை படிப்பதற்கு, தொடர்ந்து வரும் அதிகாரங்களை தயவு செய்து தொடர்ந்து படியுங்கள்.

எதிர்மறைகளை வேதாகம நோக்கில் கையாளுதல்

கிறிஸ்தவர்களுக்கு மேற்கொள்ளவும், அந்த எதிர்மறைகளை தவிர்க்கவும், தங்களை இந்த உலகத்தில் வாதிக்கிற எதிர்மறைகளை தவிர்க்கவும் சாத்தியக்கூறுகள் உண்டு!.

தேவன் விரும்புகிற வாழ்க்கை வாழ எந்த ஒரு கிறிஸ்தவனும் மேற்கொள்ள வேண்டிய அநேக எதிர்மறைகள் உண்டு. இதில் சில எதிர்மறைகள் கிறிஸ்தவ தலைவர்களுக்கு குறிப்பான ஒரு பிரச்சனையாய் உள்ளது. இந்த அதிகாரம் அந்த எதிர்மறைகளின் முழுபட்டியலையும் கொடுப்பதற்காக வடிவமைக்கப்படவில்லை. ஆனால் தேவனுடைய தலைவர்கள் கவனத்தில் கொள்ளவும், மேற்கொள்ளவும், உதவி செய்வதற்காக இதில் சிலவைகள் அதிக அழிவை உண்டுபண்ணக்கூடியவைகள் உற்சாகத்தை இழக்கச் செய்யக்கூடியவைகள்.

போட்டி

கிறிஸ்தவர்கள் இன்று கடுமையான போட்டி உலகில் வாழ்கிறார்கள். இந்த போட்டி ஆவி சபை வாழ்க்கையிலும் நுழைந்து விட்டது. தேவன் தம்முடைய ஜனங்களை அகில உலக கிறிஸ்துவின் சரீரத்திலே ஒரு பகுதியாக இணைந்து வேலை செய்ய தம்முடைய ஜனங்களை அழைத்திருக்கிறார். துரதிஷ்டவசமாக சில கிறிஸ்தவர்கள் மற்ற ஜனங்களை தேவனுடைய இராஜ்ஜியத்தில் அவருடைய பங்காளிகளாகவும், உடன் வேலையாட்களாகவும் பார்க்க வேண்டியவர்களை இடையூறு உண்டாக்கும் ஆட்களாக பார்க்கிறார்கள். போதகர்கள் கெட்ட உணர்வுடன் பெரிய சபை வைத்திருக்கும் மற்றவர்களுடன் சண்டையிடுகிறார்கள். பிரசங்கிமார்கள் மற்றவர்களுடைய பொதுஜன அங்கிகரிப்பை தங்களுடையதுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். சபை அங்கத்தினர் அவர்களுடைய சபையிலே சிறந்த தலைமைத்துவப் பதவியை பெறும்படி யாவரும் போட்டியிடுகிறார்கள். எப்பொழுது போட்டியின் ஆவி வேர் கொள்ளுகிறதோ, ஒவ்வொருவருடைய வெற்றியும், அவர்களுடைய சொந்தத்திற்கே இடையூறாய் மாறிவிடுகிறது. இது உள்ளே இருப்பது ஆபத்தான நிலையாகும். ஏனெனில் நாம் எப்பொழுதும் மற்றவர்கள் எடுக்கிற பாதையான பக்கவழியே பார்க்கிறோம். நம்முடைய கண்களை தேவனில் வைத்து நாம் நடக்கும்படி அவர் தெரிந்துக்கொண்ட பாதையை பின்பற்றி நடப்பதற்குப் பதிலாக, போட்டியின் ஆவி மற்ற ஜனங்கள் மேல் அவ நம்பிக்கையை உற்பத்தி செய்கிறது. விசேஷமாக, நம்மை ஒத்த பதவியில் இருப்பவர்களுடன் இது இந்த ஜனங்களுடன் ஆழமற்ற தொடர்புநிலையை உண்டாக்குவதற்கு காரணமாகிவிடுகிறது. போட்டி சபையிலே பெரிய பாதுகாப்பின்மையும், கருத்து திரிபு நோயையும் அறிமுகப்படுத்துகிறது. எப்பொழுது இது வேர் கொள்ள ஆரம்பிக்கிறதோ, அப்போது தேவனுடைய சமாதானத்தை எதிர்த்து ஐக்கியத்தை அழிக்கிறது. இந்த எல்லாக் காரியங்களும் கிறிஸ்தவர்களை மிகவும் ஆர்வம் இழக்கச் செய்து நீதியாய் பரிசுத்த வாழ்க்கை வாழ முயற்சிக்கிற மற்றும் தேவனுக்கு முழு மனதுடன் கீழ்படிய விரும்புகிறவர்களை இவ்வாறு செய்கிறது.

விமர்சனம்

சபையிலே பிரச்சனைகளும் கஷ்டங்களும் வரும்பொழுது இதை காண்பது எளிது (நாம் எதிர்கொள்கிற எல்லாவற்றிலும்) நாம் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும்பொழுது ஆனந்தம் அடைகிறோம். ஒவ்வொரு சூழ்நிலையிலும் எதிர்மறைகளை வலியுறுத்துவதற்கான வாய்ப்புகள் உண்டு. கருத்துக்கள் சம்பந்தமான அல்லது உபதேச சம்பந்தமான காரியங்களை பெரிதுப் படுத்தி என்ன விலைக்கிரையம் கொடுத்தாவது சொன்ன காரியத்திற்காக குணாதிசய குற்றவாளிகளாக காண்பதற்காக அந்த நபரில் உள்ள மற்ற காரியங்களைப் பார்ப்பதில்லை. நிகழ்ச்சி நிரலில் உள்ள பலவீனங்களை கண்டுபிடித்து அதிலே கவனம் செலுத்துவதற்கு பதிலாக தலைவர்கள் மற்ற தலைவர்களை பார்க்கும் பொழுது அவர்கள் சரியில்லையென்று நினைக்கிற காரியங்களில் சிலவற்றை செய்யும்பொழுது அடிக்கடி இவ்விதமான வலையில் விழுகிறார்கள். குறைகூறுகிற ஜனங்கள் அநேக நேரங்களை விமர்சிப்பதற்கு செலவழித்து உண்மையாக பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நேரமும் பெலனும் இல்லாமல் வந்த வேலையை செய்யாமல் போய்விடுகிறார்கள். இந்த ஜனங்கள் எல்லாவற்றையும் குற்ற கண்களோடு பார்க்கிறார்கள். அவர்கள் அடிக்கடி நேர்மறையாக பார்ப்பதில்லை. இப்படிப்பட்ட விமர்சனங்கள் தேவனை சேவிப்பதற்கு எந்த ஒரு ஆர்வத்தையும்

செல்லாததாக்கி ஏற்கனவே உடையவர்களாய் இருந்த அதை முக்கியமாய் நாம் பார்ப்பதில்லை, எப்படி ஒரு பணி மற்ற அநேக குற்றங்களுடன் நிறைவேற்றப்பட்டதென்று.

கிறிஸ்தவர்கள் மற்றவர்களுடைய குற்றச்சாட்டுகளுடன் தேவவழியில் எப்படி இணைந்து செல்வது என்று கற்றுக்கொள்வது அவசியம். ஆனால் கசப்புடனும், அல்லது கடும் கசப்புடனும் எதிர்செயல்புரிய அல்ல. ஆனால் இயேசு நாம் செய்யும்படி போதித்தபடி மன்னிக்க வேண்டும். விமர்சனம் மனக்காயத்தை உண்டுபண்ணும். ஆனால் முதுகுக்குப்பின்னால் சொல்லாமல் முன்னடியில் சொல்வது சிறந்தது. தலைமைத்துவ ஸ்தானத்தில் இருந்துக் கொண்டு நம்முடைய வேலைகளை சரியாக செய்யும் பொழுது சில விமர்சனங்களைக்கூட பெறாமலிருப்பது என்பது சாத்தியமில்லாத ஒன்றாகும். நாம் எந்த வடிவத்திலாவது விமர்சனங்களை பெறும்போது நாம் அல்லல்படும் அளவிற்கு மிகுதியாக செயல்படக்கூடாது. குறிப்பாக, நாம் பெலவீனம் என்று அறிந்த பகுதிகளில். நாம் அமைதியாக இருந்து பின்பு நேர்மையாக சொன்னக் காரியத்தின் மதிப்பை உறுதிப்படுத்தி நம்முடைய இருதயத்தில் ஏற்படும் விதத்தில் அது உண்மையாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் பிறகு நாம் பிரச்சனையை தேவனிடத்தில் அர்ப்பணிப்பது அவசியம். நாம் ஒருபோதும் நம்முடைய இருதயத்தில் பழிவாங்கும் எந்த சிந்தனையும் ஏற்க இசைவாய் இருக்கவில்லை என்பதை உறுதி செய்துக்கொள்ள வேண்டும் (நீதிமொழிகள் 20:22). பொதுவாக ஒவ்வொரு விமர்சனத்திலும் சிறிய அளவு உண்மையிருக்கும். நாம் இந்த உண்மைகளை கண்டுபிடித்தால் நாம் அதிலிருந்து கற்றுக்கொள்ள முடியும். நாம் அதற்கு சிறந்த மனிதர்களாய் மாற முடியும் என்பதை நினைவில் கொள்க (சங்கீதம் 141:5; நீதிமொழிகள் 25:15).

வீண்பகட்டு

ஜனங்கள் நம்மை முக்கியத்துவப்படுத்தும்போது அல்லது விரும்பும்போது இது நடைபெறுகிறது. எதையும் செய்வதற்கு நாம் துணிவு கொள்வதில்லை. இது கஷ்டத்திற்கு உள்ளாக்கும் பொதுவாக நம்முடைய சொந்த ஸ்திரமற்ற தன்மையிலிருந்து எழும்பி இந்த உள்ளானத் தேவை பாராட்டப்பட விரும்புகிறது. இங்கே பதிய செய்யும் விருப்பமானது மற்ற ஜனங்களை மேற்கொள்கிறது. சேவிப்பதற்கு நமது ஆர்வமுட்டுதலை சிறப்பாக ஒத்துப்போகச் செய்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனால் அங்கிகரிக்கப்பட முயற்சிப்பது அவசியம், மற்ற ஜனங்களினால் அல்ல.

பேராவல்

இது நாம் முன்னேறுவதற்கு உந்துகிறது. நம்மை வல்லமையாக பாதுகாப்பாக நிறுவுகிறது. மேலே நம்மை ஏறச்செய்யும் சக்தி முதன்மையாக வருவதற்காக மற்ற ஜனங்களை சாதுரியமாக கையாளுகிறது. இதனால் மற்ற ஜனங்களுக்கு என்ன விளைவுகள் ஏற்பட்டாலும் பரவாயில்லை, ஒவ்வொரு சூழ்நிலையும் தரம் நிறுத்துப் பார்த்து அந்த முடிவுகளை அடைவதற்காக பேராவல், புகழ், நற்பெயர், வெற்றி, வல்லமை, பரிசு இவைகளுடன் செல்ல விரும்புகிறது. ஒருமுறை பேராவல் வலையில் விழுந்துவிட்டால், நம்மையும் நம்முடைய பரிசுகளையும் உறுதி செய்யும் ஒவ்வொரு சூழ்நிலைகளையும் நாம் சிறைபிடிக்கிறோம். பேராவல் உள்ள ஜனங்கள் மற்ற ஜனங்களிடத்தில் தங்களுடைய பேரைப் பதிக்க முயற்சி செய்வார்கள். பதவியைக் குறித்து மிகவும் கரிசனையாய் இருப்பார்கள். மற்ற ஜனங்களோடு இருப்பதைக் காட்டிலும் அல்லது வேலைக்காரத்துவத்தைக் காட்டிலும் பேராவல் உள்ள ஜனங்களுடைய வாழ்விலே ஒரு மதிப்பை பயிர்செய்து அதுவே அவர்களுடைய முக்கியத்துவமாய் மாறிவிடுகிறது. இதுவே அவர் தங்களுக்கு நேராக மாத்திரம் சேவை செய்யும் கால்வாயில் இருக்கிறது. ஜனங்கள் அறிந்துக் கொள்ள பயப்படுவார்கள். ஏனெனில் அந்த ஜனங்கள் வித்தியாசமாய் பார்ப்பதற்கு இவர்கள் முயற்சி செய்து கொண்டிருப்பார்கள். இந்த மதிப்பை பராமரிப்பதற்கும் தங்களுடைய சதவீதத்தில் தொடர்ந்து இருப்பதற்கும் இந்த ஜனங்கள் அதிகமாய் உழைக்க வேண்டும். வழக்கமான அடிப்படையில் பொய் சொல்லுவதற்கும், மற்றவர்களை ஏமாற்றுவதற்கும் அவசியமாகி விடுகிறது. உண்மையிலே இந்த ஜனங்கள் நீருபிக்க தொடர்ந்து முயற்சி செய்துக் கொண்டிருப்பார்கள் (உதாரணம் அவர்கள் நடத்துகிறவர்களை விட ஒரு சிறந்த காரியம் தங்களுக்கு இருக்கிறதென்று பெருமைப்பாராட்டுவார்கள்).

ஆண்டவருக்காக நம்முடைய சேவை திரும்பப்பட்ட நோக்கத்தில் நம்மை எடுத்துச் செல்லும். பேராவல் இருக்கிறதா என்பதை சரிபார்த்துக் கொள்ள வேண்டும். உண்மையிலே, தேவனை சேவிக்கும் ஆர்வத்தை பேராவல் வற்றிப் போகச் செய்துவிடும். ஏனெனில், நாம் எங்கே இருக்கிறோம், நாம் என்ன உடையவர்களாய் இருக்கிறோம், நாம் என்ன செய்கிறோம் என்பதில் ஒருபோதும் திருப்தி அடையாது (பிலிப்பியர் 2:3,4). நம்மை முன்னேற்றுவிக்க விருப்பம் கொள்வது அல்லது தலைமைத்துவத்தை ஆசை கொள்வது சரியானது தான். ஆனால் சரியான காரணங்களுக்காக மாத்திரமே நாம் அதைச் செய்ய வேண்டும். அதாவது தேவனுக்கு மகிமை கொண்டுவர, அவருடைய வேலை செய்யப்பட மாத்திரமே. நாம் யாராக மாற வேண்டும் என்ற பொங்கி வழிகின்ற பேராவல் இருக்குமானால், நாம் அந்த காரியத்திலேயே அதிகமாக முழுநோக்கத்தையும் செலுத்தி மற்ற ஜனங்களுக்கு சேவை செய்ய முடிகிறதில்லை (அவர்களையும் யாராவது இருப்பதற்கு உதவுதல்).

பெருமை

கிறிஸ்தவ வார்த்தையிலே, இது இவ்வாறு வரையறுக்கப்படுகிறது. பிரபல்யம், வெற்றி, பதவி, அல்லது வரங்கள் இவைகளை கையாள திறமையில்லாதவர். அவைகள் தேவனால் நம்பி கொடுக்கப்பட்டவைகள்(1கொரிந்தியர்4:7; 2கொரிந்தியர் 10:12,13). நம்மை முன்ணணிபடுத்தும்நிலை, நாம் எந்த முக்கியமான காரியத்தில் இருந்தாலும் சரி இங்கே கைதட்டிப் பாராட்டுதல் மற்றும் வீண்புகழ்ச்சி கட்டுப்பாட்டை இழந்து தவறுச் செய்ய ஊக்குவித்து, நம்மை குருடாக்குகிறது. பின்பு இவைகள் நம்முடைய ஆர்வமுட்டுதலாய் மாறி நாம் செய்ய வேண்டியவைகளை விட்டுவிட்டு இவைகளைச் செய்வோம். நம்முடைய நோக்கம் சேவை செய்து தேவனுக்குப் பதிலாக நம்மை சிங்காசனப் படுத்துவது. இந்த சூழ்ச்சி கண்ணி லூசிபர் விழுவதற்கு காரணமாகியது. உண்மையென்னவென்றால், நாம் தலைமைத்துவ பதவிக்கு உயர்த்தப் படும்பொழுது இரகசியமான சுயபாராட்டுதலும், பெருமையும் உற்பத்தியாகக் கூடும். இந்த விழுகையின் குழிக்குள் இருந்து தப்பிப்பதற்கு கர்த்தருடைய பலத்த கரத்தின்கீழ் நம்மை தாழ்த்துவது மாத்திரமே வழியாகும் (1பேதுரு 5:6). அவர் அவருடைய வேளையில் நம்மை உயர்த்தட்டும். தலைவர்கள் மற்ற ஜனங்கள் கொடுக்கின்ற மிகைப்படுத்தப்படுதலைக் கவனித்து நிறுத்த வேண்டும். இந்த துதியும், வீண்புகழ்ச்சியும், நமது மனத்திற்குள் செல்ல அனுமதித்து பெருமையை விளைவிக்கும் (பிரசங்கி 7:5). தலைவர்களை உயர்வாக, மதிப்பாக கருதவேண்டும். ஆனால் நாம் ஒருபோதும் அளவு மீறிப்புகழ், உருவ வழிபாடு செய்யும் இடத்தில் வைக்கக்கூடாது. அதற்கு பதிலாக, தலைவர்கள், துதியையும், அளவு மீறிப்புகழையும் விலக்க வேண்டும். அவைகள் தேவனுக்கு செல்ல வேண்டும் (யாக்கோபு 4:1-10). ஜனங்கள் நம்மை அளவுக்கு மீறியப்புகழ்ச்சியில் வைக்கும் போது அவர்களுடைய எதிர்பார்ப்பும் மிக உயர்வாக இருக்கும். அதை பராமரிப்பதும் எந்த தலைவருக்கும், மிகக் கடினம். இது மிகப் பெரிய இருக்கத்தையும் கட்டுப்பாட்டையும், தலைவர்களுடைய வாழ்க்கையில் அறிமுகப்படுத்துகிறது. ஏனெனில் அழிவுக்குமீறிய புகழ்ச்சியில் வைத்தவர்கள் எப்பொழுது பரிபூரண மற்ற தன்மையை காண்கிறார்களோ, அப்பொழுது புறக்கணித்து விடுவார்கள் என்று தலைவர்கள் அறிவார்கள். தலைவர்கள் எந்தக் கிரையம் கொடுத்தாவது இதை தவிர்ப்பது அவசியம்.

தோல்வி

தேவன் அழைத்த, ஆவியில் நிரம்பிய, ஆவியினால் நடத்தப்படுகிற, அதிகாரப்படுத்தப்பட்ட தலைவர்கள் சில நேரங்களில் தோல்வியை அடைகிறார்கள். தவறு செய்கிறார்கள். நாம் மற்ற எல்லாரைக் காட்டிலும் அதிகமாய் ஜெபம் பண்ணினாலும், அல்லது வழக்கமாக சரியாக இருக்கும்போது நாம் விழுவதற்கு சாத்தியமற்றவர்கள் என்று நம்மைக் குறித்து எண்ணக்கூடாது. மற்றொரு விதத்தில் தோல்விகள் நம்மை ஒருபோதும் விட்டுவிட காரணமாய் அமையவிடாமல் இருந்தாலும், நீண்ட காலத்திற்கு ஆர்வம் இழக்காமல் இருந்தாலும் அவ்வாறு எண்ணக்கூடாது. நாம் விழுந்து தோல்வியடைந்தால் நாம் அறிக்கையிட்டு தேவனோடு ஒப்புறவாக வேண்டும் (1யோவான் 1:9). நம்மை நாமே மன்னித்து சுயபரிதாபத்திற்கு அல்லது சுயநியாயத்தீர்ப்புக்கு இடம் கொடுத்து நம்முடைய தோல்வி நம்முடைய தலைமைத்துவம் அல்லது ஊழியத்தோடு தொடர்புடையதாய் இருந்தால் அதாவது இலக்கை அடையாதிருத்தல், ஊழியம் செய்யும்போது தவறான பகுத்தறிதல், மற்றும் பல. நாம் தேவனிடத்தில் சென்று பிரச்சனையை அவரிடத்தில் ஒப்படைக்க வேண்டும். அவர் நமக்கு சிலவற்றை வெளிப்படுத்துவார். அவைகள் நம்முடைய தோல்வியை எளிதாக

ஏற்றுக் கொள்ள உதவி செய்யும் அல்லது எடுத்து என்ன செய்யவேண்டும் என்று அவர் சொல்லுவார். நம்முடைய தோல்விகள் மனக்காயங்களை உண்டுபண்ணலாம். ஆனால் நம்முடைய மனதை எல்லா செய்கைகளிலும் வெடித்து சிதறவிடக்கூடாது. இல்லாவிட்டால் நம்முடைய சிந்தனையையும், உணர்ச்சிகளையும் ஆளுகை செய்யும் தோல்வியிலிருந்து அதன் கொடுக்கு ஒருமுறை போய்விட்டால் அந்த சூழ்நிலையில் முன்னேற்றுவிப்பதற்கான எந்தக் காரியங்களாவது இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் அதை அனுபவத்திலிருந்து நாம் கற்றுக் கொள்வது அவசியம். பின்பு அவைகளைப் பின்னாக எறிந்துவிட்டு வாழ்க்கைக்குள்ளாக கடந்து செல்ல வேண்டும். தோல்வி மீண்டும் நாம் ஆரம்பத்திலிருந்து தொடங்குவதற்கு காரணமாகலாம். ஆனால் நம்முடைய அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ளவாவது செய்யலாம். தேவனுக்கு சித்தமானால் அடுத்த தடவையில் சிறந்த முறையில் அவருக்காக அந்த வேலையை செய்யலாம்.

அநேக தலைவர்கள் கடந்தகால தவறுகள் மற்றும் தோல்விகளிலிருந்து தங்களை தூரப்படுத்திக் கொண்டு குற்றங்களை கண்டுபிடிக்கிறவர்களாக மாறுகிறார்கள். இது நம்முடைய வாழ்க்கையில் வேறுபடும்பொழுது இது நம்முடைய நம்பிக்கை தைரியம், தேவனை சேவிப்பதற்கு ஆர்வமுட்டுதலை பாழ்படுத்திவிடும். கிறிஸ்தவர்கள் தோல்வியை விரும்பக்கூடாது. ஆனால் அதற்கு பயப்படவும் கூடாது. நாம் தோல்விக்குப் பயந்தால், நாம் உண்மையாக தேவனுக்கு கனி கொடுக்கிறவர்களாக இருக்க முடியாது. ஏனெனில் நாம் அபாயத்திற்கு ஏதுவானவர்களை ஒருபோதும் எடுக்க மாட்டோம். சவால்களை எதிர்கொள்ள மாட்டோம். தேவையான வழியில் உண்டாக்கும் திறமைகள் இல்லாமல் போய்விடும் (விசுவாசத்தில் நடப்பது என்பது ஆபத்துக்கேதுவானவைகளை செய்வது) உண்மையென்னவென்றால் தவறுகளும், தோல்விகளும் தடைகள் அல்ல. ஆனால் அவைகளைக் குறித்த பயம்தான் தடையாகும். தவறுகளிலும், தோல்விகளிலிருந்தும் எழுந்திருப்பது இன்றியமையாதது. தேவனுக்காக செய்யும் சேவையில் ஆர்வத்தோடு நிலைத்திருப்பதற்கு. நம்முடைய தோல்விகளுக்காக நம்மை மன்னிக்க கற்றுக் கொள்வது அவசியம். அப்பொழுது தான் புதிய இலக்குகளை தெளிவான மனசாட்சியுடன் அணுக முடியும்.

வெற்றி

சிலவழிகளில் வெற்றியானது தோல்வியைக் காட்டிலும் கையாளுவதற்கு மிகக் கடினம். ஏனெனில் அது மதிமயங்கச் செய்து பெருமையை உற்சாகப்படுத்துகிறது. அது எளிதாக நம்மை அழித்துவிடும். தேவனுடைய வேலையில் வெற்றி என்பது தேவனால் வந்தது என்பதை நினைவுகூறுவது அவசியம். எனவே, எல்லா மகிமையும் அவருக்கு செல்ல வேண்டியது அவசியம். தலைமைத்துவம் தேவனுடைய இராஜ்ஜியத்தில் அவருடைய வேண்டுகோளின் படியே கையில் எடுக்கப்பட வேண்டும். அவருக்கு மகிமை கொண்டுவரும் விதத்திலே அவைகள் செயல்படுத்தப் படவேண்டும். கிறிஸ்தவ தலைமைத்துவத்தை நம்முடைய சொந்த பேராவல்களை அடைய நம்முடைய மதிப்பைக் கூட்ட நம்மை விளம்பரப்படுத்தும் கருவியாக உபயோகிப்பது தவறு. நம்முடைய மனதில் தேவநோக்கங்களும், அவருடைய மகிமையும் மாத்திரம் இருப்பது அவசியம். தேவனுடைய தலைவர்களில் ஒருவராய் மாறும்பொழுது நம்முடைய வாழ்க்கையின் ஆரம்பம் முதலே இது நம்முடைய வாழ்க்கையின் இலக்காக இருக்க வேண்டும். ஏனெனில் தேவன் நமக்குள் ஆழமாக இடமளிக்கக்கூடிய அநேக நடக்கை சம்பந்தமான பிரச்சனைகளை இன்னும் திறக்கவில்லை.

பொறாமை

பொறாமையுள்ள ஜனங்கள் வெற்றியை வரங்களை மற்றவர்களுடைய ஸ்தானங்களை மிக அதிகமாக பேராசைக் கொள்கிறார்கள். அது அவர்களை பாதிக்க ஆரம்பிக்கிறது. அவர்களுடைய செயல்களை அவர்களுடைய நோக்கங்களை மற்ற ஜனங்களிடத்தில் இருக்கிறதை இவர்கள் விரும்புகிறார்கள். கிறிஸ்தவ தலைவர்களாகிய நாம் தேவனுக்காக மாத்திரம் பொறாமைப்பட வேண்டும். அப்பொழுது எல்லா மகிமையையும் எப்பொழுதும் தேவனுக்கு கொடுக்கிறோம். இவைகள் மற்ற ஜனங்களின் மேல் பொறாமை கொள்வதற்கு வழி வாழவும் ஊழியம் செய்யவும் கற்றுக் கொள்ளவேண்டும். அவரால் வரம் பெற்ற மற்றவர்களையும் ஆசிர்வதிக்க வேண்டும்.

இன்றியமையாதவைகள்

நம்மைவிட்டால் இந்த வேலைக்கு ஆளில்லை என்று நினைப்பது மிகப்பெரிய தவறு. அல்லது இந்த வேலைக்காக தேவன் தங்களை மாத்திரம் உபயோகிக்க முடியும் என்று நினைப்பது மிகப்பெரிய தவறு (ரோமர் 12:3). உண்மையென்னவென்றால் நாம் இல்லாமலே தேவன் கிரியை செய்து வேலையை நிறைவேற்றி முடிக்க முடியும். அநேக வயதான தலைவர்கள் குறிப்பாக இந்தப்பகுதியில் அவர்கள் பிரச்சனைஉடையவர்களாக இருக்கிறார்கள். எனவே மற்றொரு இளைஞனுக்கு அந்த பதவியை கொடுத்தபின்பும் தங்களுடைய அலுவலப் பணியிலே தொடர்ந்து நீடிப்பார்கள் (இந்த வேலைக்காக பயிற்சியளித்த நபர்). இது அநேக ஸ்தாபனங்கள் நன்றாக ஆரம்பித்து அழிவுக்கு நேராய் விழுந்து விடுவதற்கு காரணமாகி விடுகிறது. தலைவர்கள் தங்களை சார்ந்திருக்கும்படியாக அப்படிப்பட்ட வழியில் நடத்துகிறார்கள் (பொதுவாக இது பாதுகாப்பின்மை, பெருமை, தேவை உள்ளவர்களாய் பாராட்டப்பட வேண்டியவர்கள், ஆர்வமுட்டப்படுகிறார்கள்). அல்லது ஜனங்கள் தேவன்மேல் ஆண்டவரை சார்ந்திருக்கும் விதத்தில் வழிநடத்தி, அதே நேரத்தில் மற்றொரு நபருக்கு பயிற்சியளித்து எதிர்காலத்தில் தலைவராக தங்கள் ஸ்தானத்தில் இருக்கும்படியாக செய்வார்கள். இதுவே தேவனுக்கான எந்த ஒரு வேலையும் நீண்ட காலம் வெற்றி பெறுவதற்கான வழியாகும். வேலையை தங்களுக்குரியது என்றே நினைத்து தலைமைத்துவத்தில் அந்த இடத்தில் வரக்கூடிய தகுதிவாய்ந்த ஒருவரை அணைத்துப் போடுதல் தேவனுடைய வேலையை தடைசெய்வதாகும். நாம் அந்த வேலையை ஆரம்பித்திருக்கலாம். அந்த வேலையை நடத்தி செல்வதற்கு சிறந்த நபராய் நாம் இருக்கலாம். ஆனால் உண்மையென்னவென்றால் அது தேவனுடைய வேலை அவரை கிரியை செய்யவிட்டால் அவர் தம்முடைய இடத்தில் ஒரு தலைவரை எழும்பப் பண்ணுவார். நம்மை எப்படி எழும்பப் பண்ணினாரோ அவ்வாறே.

தாழ்வு மனப்பான்மை மற்றும் தனிமை

தாழ்வு மனப்பான்மை என்பது நாம் யார் என்பதைக்குறித்தும், நாம் என்ன செய்ய முடியும் என்பதைக்குறித்தும் நம்மை நாமே சந்தேகிப்பது. சத்துரு ஜெயித்து நம்மை தாழ்வாக நினைக்கச் செய்தால், மற்ற ஜனங்கள் நம்மை எப்படி இருக்க விரும்புகிறார்களோ அப்படி நம்மை அதிலே பொருத்தி உறுதிச் செய்துக் கொண்டால், அவர்கள் நம்மை நேசிப்பார்கள், நம்மை ஏற்றுக்கொள்வார்கள். பயமும், வெறுக்கப்படுதலும் அப்படிப்பட்ட ஜனங்களுக்கு வல்லமையான ஆர்வமுட்டுதலாய் மாறுகிறது. தாழ்வு மனப்பான்மை ஜனங்களை தங்களில் தானே ஒரு முடிவுக்கு வரகாரணமாகிறது. பின்பு தங்களை மற்ற ஜனங்களில் இருந்து தனிமைப்படுத்திக் கொள்வார்கள். இந்தக் காரியத்தினால் பாதிக்கப்பட்டதான நபர் மற்ற ஜனங்களை ஆக்கப்பூர்வமாய் நடத்த முடியாது.

இப்படிப்பட்ட தலைவர்கள் மிக தனிமையை உணர்ந்து சிலநேரங்களில் மிகப்பெரிய பாதிப்பு உண்டாவதற்கு காரணமாகி விடுவார்கள். தனிமையான தலைவர்கள் தங்களை ஜனங்களை வைத்துப் பாதுகாத்துக் கொள்வார்கள். பிரபல்யமில்லாத ஒன்றையும் சொல்லுவதை தவிப்பார்கள். தேவையானவர்களை கடிந்து கொள்வதை தவிர்ப்பார்கள். மற்ற ஜனங்கள் அவரிடத்தில் இருந்து எதிர்பார்க்கிற காரியங்களை உறுதி செய்வார்கள். மற்ற ஜனங்கள் அவர்களிடத்திலிருந்து விரும்புகிறதை கொடுப்பார்கள். அடிக்கடி ஏழை நான் தந்திரத்தை உபயோகித்து மற்ற ஜனங்களின் கவனத்தையும், இரக்கத்தையும், ஒப்புதலையும் சம்பாதித்துக் கொள்வார்கள். உண்மையிலே தாழ்வு மனப்பான்மையினால் பாதுகாப்பு இன்மையினால் அநேக தலைவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அல்லது தனிமை உணர்வு எப்பொழுதும் அவரை ஆதரிக்கிற எல்லா நேரங்களிலும் ஒத்துப்போகிற நபர்களை தங்களைச் சுற்றி வைத்துக் கொள்கிறார்கள் (அதாவது "ஆமாச்சாமிகளை"). **தலைவர்கள்** தேவையில்லாத அவமானம் உண்டாவதை தவிர்க்க வேண்டும். **தாங்கள் தேவனுடைய சித்தத்தை செய்யும் வேலையில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதையும் ஜனங்களை கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சியில் கொண்டுவரும் வேலையில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதையும் நினைவு கூறுவது அவசியம்.** குறிக்கோள் என்ன வென்றால் ஜனங்களை நல்லபடியாக உணரச்செய்வதும் நம்முடைய தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளச் செய்வதுமாகும். (அதாவது நம்முடைய தேவைகள் விரும்பப்படுதலும், ஏற்றுக்கொள்ளப்படுதலும்). அவருடைய தலைவர்களாய் நம்மை செய்யும் படியாய் அழைத்தக் காரியத்தை தவறவிடுதலாகும். பிரபல்லியமாவதை அடைவதற்கு ஒத்துப்போகுதல்

என்பது எளிதானதாக இருக்கலாம். ஆனால் நம்முடைய ஆவிக்குரிய ஊழியங்களை அழித்துவிடும். தலைவர் என்னும் நம்முடைய மதிப்பு மற்ற ஜனங்கள் என்ன விரும்புகிறார்கள் என்பதை சார்ந்து இருக்கிறது. மற்றும் நம்மை நோக்கும் விதத்தில் இருக்கிறது. உண்மை என்னவென்றால் அவர் நம்மை நேசிக்கிறார். நம்முடைய சிறந்தவை மாத்திரம் அவருக்கு வேண்டும். தேவனுடைய பார்வையில் நம்முடைய மதிப்பு என்பது நிலையானது. நாம் அதிலே பாதுகாப்பாக இளைப்பாறலாம். நம்மை நிருபீக்கவேண்டிய அவசியமில்லை. அல்லது மற்றவர்களுக்கு நல்லவர்களாக நடிக்க வேண்டியதில்லை. தேவனுக்கு கீழ்ப்படிந்து சரியானதை மாத்திரம் செய்வது அவசியமானது. அன்புடன் முழு மனதுடன் அவருக்கு சேவை செய்ய வேண்டும்.

குற்றம்

குற்றம் உண்மையானதோ யூகிக்கப்பட்டதோ அது நம்முடைய இரட்சிப்பிற்காக கிரியை செய்ய நம்மை ஆர்வம் ஊட்டுகிறது. ஏனெனில் மனிதனுக்கு அல்லது தேவனுக்கு கடன்பட்டிருக்கிற படியினால் நமக்கு ஐயோ என்று உணர்கிறோம். நாம் அதிலிருந்து வெளியே வருவதற்கு கிரியை செய்வது அவசியம். இது நாம் கடினமாக வேலை செய்ய காரணமாகும். ஏன் என்ற உண்மையான நிலையை அறியாமல் குழப்ப நிலையை உருவாக்கும். குற்றத்தினால் ஆர்வமுட்டப்படுதல் மிகவும் துக்ககரமான வாழ்க்கைக்கு நேராய் நடத்தும் அது ஒருபோதும் நிறைவேறுதலை கண்டுபிடியாது. ஏனெனில் குற்றம் ஒருபோதும் திருப்தியாவதில்லை. தேவன் அவருடைய மன்னிப்பை ஏற்றுக் கொள்ளுதலை அன்பை அறிந்து குற்றத்திலிருந்து விடுதலையான வாழ்க்கை வாழ விரும்புகிறார்.

பயம்

இதுவும் மிகவும் வல்லமையாக ஆர்வமுட்டும் சக்தி. நாம் சரியென்று அறிந்த காரியத்தை மறப்பதற்கு காரணமாகி விடும். நாம் வருந்தும்படியான காரியங்களை செய்யச் செய்யும் பயம் எளிதாக நாம் சிந்திக்கிற விதத்திலே எழும்பக்கூடும். உதாரணமாக தெரியாத வெறுக்கப்படுதல் அல்லது தோல்வியைக் குறித்து சிந்தத்தில். தலைவர்களாகிய நாம் இந்தப் பயம் நாம் நடத்தும் ஜனங்களிலிருந்து நம்மை பாதுகாக்க, மனக் காயங்களை வெறுப்புகளை தவிர்க்க, இடைவெளி தூரத்தில் வாழ்வதற்கு காரணமாகி விடும். பயந்த தலைவர்கள் தங்களைக் குறித்து மற்ற ஜனங்களுக்கு திறப்பதற்கு மறுத்து விடுகிறார்கள். ஏனெனில் மற்றவர்களோடு நெருங்கி பழகும்போது அது அதிகமான வழிக்கு காரணமாகி விடுகிறது என்று அவர்கள் தீர்மானிக்கிற படியினால் இந்த தலைவர்கள் ஜனங்களை கையளவு நீளத்திற்கு அப்பால் வைத்து செய்யவேண்டிய பணிகளை செய்வதற்குப் பதிலாக அவர்களுடைய கவனத்திற்கும், அர்ப்பணிப்பிற்கும் ஏதாவது கொடுத்தல். துரதிஷ்டவசமாக இந்த தலைவர்கள் தலைமைத்துவம் என்பது விசேஷமாக தேவனுடைய சபையில் வேலையைக் காட்டிலும் ஜனங்கள் மிக முக்கியம் என்பதை மறந்து விடுகிறார்கள். தலைவர்கள் தங்களுடைய ஜனங்களை நேசிக்க வேண்டியது அவசியம். மற்றும் சுயநலமற்ற ரீதியில் அவர்களுக்கு கொடுக்க வேண்டும். இந்த பிரச்சனையினால் பொதுவாக பாதிக்கப்பட்டிருக்கிற தீர்க்கதரிசிகள், போதகர்கள், நிர்வாகிகளுக்கு இது உண்மையாகும். நாம் ஆக்கப்பூர்வமான தலைவர்களாய் இருக்க வேண்டுமானால் நம்மை நடத்துகிற ஜனங்களோடு நெருங்கிப் பழகுவது முக்கியம். இதன் அர்த்தம் என்னவென்றால் மற்ற ஜனங்கள் நம்முடைய குற்றங்களைப் பார்ப்பார்கள். ஆனால் நாம் நடத்துகிறவர்களிடத்தில் இருந்து நம்மை தேவனுடைய இராஜ்ஜியத்தில் மற்ற ஜனங்களை சேவை செய்வதற்கு தகுதிபடுத்த தொடர்புநிலையினால் சாத்தியமாகிறது. தன்னைத் தூரப்படுத்திக் கொண்ட தலைவரினால் விரிவான விதிமுறைகளை கையில் எழுதிக் கொடுத்துவிட்டு தன்னை தூரப்படுத்துகிற தலைவராய் இது முடியாது.

மிக அதிகமான எச்சரிக்கை என்பதின் விளைவாக பயம் நிறைந்த வாழ்க்கை வருகிறது. மிக அதிகமான எச்சரிக்கை, பயமுள்ள ஜனங்கள் மற்றும் ஆரோக்கிய பிரச்சனைகளை தவிர அவர்களுக்கு எதுவும் சரியாக மிகவும் பயப்படுகிறபடியினால். ஆபத்தான எதையும் செய்வதற்கு அவர்கள் தவிர்த்து விடுவார்கள். 'எனவே அவர்கள் மிக அரிதாக உண்டாக்கும் குறிப்போடு புஸ்தகம் நீங்கள் வெற்றியடைந்தீர்கள் அல்லது விளையாட்டை விளையாட தவறிவீட்டிர்கள் என்பதை காட்டி விடவேண்டாம்!'. கிறிஸ்தவர்களாகிய நமக்கு தேவன் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் என்பதை நினைவு கூறுவது அவசியம் (2தீமோத்தேயு 1:7).

சந்தேகமும், தீமையே நடக்கும் என்று எதிர்பார்க்கும் சுபாவமும்

நாம் தொடர்ந்து எதிர்மறையான சிந்தனைகளை சிந்திப்போமானால் சந்தேகத்தை விசுவாசத்திற்கு பதிலாக அவிசுவாசமாய் மாற அனுமதிக்கும். நாம் நம்மை முழுவதும் கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒழுக்கத்தை கெடுத்தவர்களாய், ஆர்வத்தை இழந்தவர்களாய் அதோடு சம்பந்தப்பட்ட காரியங்களும் இப்படிப்பட்ட தீமையே நடக்கும் என்ற எண்ணத்தினுடைய முடிவான விளைவு இது மாத்திரமே. இது நீண்ட காலம் செல்வதற்கும் போதுமானது.

சோம்போறித்தனமும், மெத்தனமும்

இவை இரண்டும் நம்முடைய ஆர்வமுட்டுதலைக் கொள்ளையடித்து விடும். மற்றும் நம்முடைய தேவனுக்குள் கீழ்படிய வேண்டுமென்கிற நம்முடைய உந்துச் சக்தையையும் அவருடைய சித்தம் நிறைவேற்றப்படுதலைக் காண்பதையும் கொள்ளையடித்து விடும். விசேஷமாக நம்முடைய நேரங்களை நாம் தேவனிலும் அவருடைய வார்த்தையிலும் நாம் சோம்பேறித்தனமாய் இருப்போமானால் (பிரசங்கி 18:9; 2தெசலோனிக்கேயர் 3:6-15). தேவனுடைய இராஜ்ஜியத்தில் சோம்பேறித்தனத்திற்கும், மெத்தனத்திற்கும் எந்த ஒரு இடமும் இல்லை. தேவன் செய்கிற விதமாய் நம்முடைய வேலையையும், நம்முடைய வாழ்க்கையையும் பார்த்து இந்தக் காரியங்களுக்கு எதிராக நம்மை பாதுகாப்பது அவசியம். அவர் நேசிக்கிற அவருடைய மகன்களான அவருடைய சித்தத்தை நம்பி கொடுத்தவர்களாக நம்மை அவர் பார்க்கிறார். அப்போஸ்தலனாகிய பவுலைப் போல தேவன் நமக்கு முன்பாக நியமித்திருக்கிறவைகளை, நாம் அந்த வேலையை முடிக்கும் வரைக்கும் தொடர்வது அவசியம்.

அக்கரையின்மையும், தயக்கமும்

அக்கரையின்மை விதிவழிக்கொள்கையை உற்பத்தி செய்கிறது. என்ன நடந்தாலும் கவனிக்காத தன்மை ஏற்பட காரணமாகிறது. இது எந்தவிதமான வெற்றியடைதலில் இருந்து கொள்ளையடிப்பதில் மாத்திரம் வெற்றியடைந்துள்ளது. இதுமேலும் தயக்கத்தை விளைவிக்கிறது. அது தருணத்தின் திருடனாய் இருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொரு தருணத்தையும் பயன்படுத்திக் கொள்வது அவசியம் (கலாத்தியர் 6:10; எபேசியர் 5:15,16; கொலோசெயர் 4:5). இயேசு வாக்குப் பண்ணின பரிபூரண வாழ்க்கையை அறிவதற்கு இது மாத்திரமே வழியாகும் (யோவான் 10:10).

முடிவுரை

விசுவாசியை கிறிஸ்துவுக்குள் ஆர்வழிக்கச் செய்கிற அவைகள் தேவனுக்கு செய்யும் சேவையில் ஆக்கப்பூர்வமான தன்மைக்கு தடையாய் இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிற அநேக மற்ற எதிர்மறைகள் நிச்சயமாக உண்டு. எப்படியாயினும் மேலே குறிப்பிடப் பட்டுள்ள எதிர்மறைகள் படிப்பதற்கு நல்ல ஒரு ஆரம்பமாகும். அதன்மூலமாக நீங்கள் படுகுழிக்குள் விழாமல் அநேக மற்ற கிறிஸ்தவ தலைவர்கள் ஏற்கனவே விழுந்ததுபோல் விழாமல் இருக்கச் செய்யும். நம்முடைய கிறிஸ்தவ நடக்கையிலே இன்றியமையாத பகுதிகளை தொடர்ந்து ஆர்வமூட்டும். அநேக கிறிஸ்தவர்கள் ஆரம்பிப்பதற்கு கடினம் என்று நினைத்த மாத்திரத்திலே காரியங்களை செய்வதிலிருந்து வெளியேறி விட்டுவிடுகிறார்கள். எது நம்மை ஆர்வமுட்டுகிறது மற்றும் எது நம்மை தொடர்ந்து ஆர்வமுட்கிறது என்பதை தீர்மானிப்பது இன்றியமையாத அவசியமாகும். அதன்மூலமாய் நாம் எந்த சூழ்நிலைக்கும் நாம் ஆயத்தமாகி எவ்வளவு கடினமாய் விலைக்கிரையமிக்கதாய் இருந்தாலும் தேவனுடைய சித்தத்தை செய்வோம்.

"நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்". (பிலிப்பியர் 3:12-14).

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு மறப்பதற்கு அநேக காரியங்கள் இருந்தது கடந்த காலத்திலே விசுவாசத்திற்கு விரோதமாய் பயங்கரமாய் நடத்துக் கொண்ட விதங்களை இப்பொழுது அறிக்கையிட்டான் இப்பொழுது அவனுடைய ஆண்டவராய் இருப்போருக்காக தன்னுடைய மதிப்புகளை எல்லாம் விட்டு எல்லாருக்காகவும் போராடினான். பின்பாக எப்படியாயினும் பவுல் என்றும் அறிந்திருக்கிற விதத்தில் அதிக ஆர்வமுட்டும் கிறிஸ்தவர்களில் ஒருவனாய் மாறினான். அவருடைய ஆரம்ப வாழ்க்கையில் அவன் தோல்வியடைந்தாலும் அவைகளை பின்னாகப் போடுவதற்கு தீர்மானித்து சேவை செய்வதற்கு சாத்தியமான எல்லாவற்றையும் அவன் செய்தான்.

மன்னிக்கும் ஆவி தலைமைத்துவத்தில் தேவைப்படுகிறது.

இங்கே நாம் மற்றொரு முக்கியமான காரியமான நேர்மையைக் குறித்து படிக்க போகிறோம். நம்முடைய இருதயம் தாக்கப்படுவதில்லை. ஆனால் நம்முடைய இருதயம் கறைபடுத்தப் படுகிறது. இது தலைவர்களோடு சம்பந்தப்பட்ட காரியம் மற்றும் மன்னிக்கும் ஆவியாகும்.

மன்னிப்பதின் பிரதான கருத்து என்னவென்றால் விடுதலை செய்தல் அல்லது போக விடுதலாகும். நாம் ஆண்டவரால் மன்னிக்கப்படும்போது, பாவத்தின் வல்லமையிலிருந்து போக விடப்படுகிறோம். நித்திய மரணம் என்னும் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப் படுகிறோம். எனவே, நாம் மன்னித்தல் விடுதலையாக்கப் படுதலோடு தொடர்புடையது என்று புரிந்துள்ளோம். ஆனால் வேதாகமம் மன்னிக்கும் ஆவியைக் குறித்து போதிக்கிறது. இது விடுதலையின் ஆவியோடு வாழும் வாழ்க்கையின் அனுபவமாகும். எப்போது நம்முடைய இருதயமும், கைகளும், விடுதலையின் நடக்கையுடன் தேவனை, மற்றும் மற்றவர்களை நோக்கி திறந்த நிலையில் இருக்கும்போது அப்போது அவைகள் கோபமும், கசப்பும் நிறைந்தவைகளாக இருக்காது.

<u>சுதந்திர ஊழியத்தின் விடுவித்தல் என்பது தலைவர்களின் இருதயத்தை ஆளுகைச் செய்கிற விடுதலை செய்யும் ஆவியை சார்ந்தே அமைகிறது.</u>

பின்வரும் பகுதியை படிப்போம்: மத்தேயு 18:21-35

= இங்கே நாம் நேர்மையான விசாரித்தலைக் காண்கிறோம்

1. பேதுருவின் கேள்வி, அவனுடைய நாட்களில் இருந்த போதனைகளை காட்டிலும் வளர்ந்த நிலையிலுள்ள காரியத்தை விசுவாசித்த நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது.
2. இப்படிபட்ட பகுதியின் அடிப்படையில்: ஆமோஸ் 1:3,6,9,11,18 (மற்றும் பல ஆமோஸ் 2ம் அதிகாரத்தில்), இயேசுவின் காலத்திலிருந்த ரபீமார்கள் தேவன் தன்னில் தானேகூட மூன்று முறைக்கு மேல் மன்னிக்கமாட்டார்கள் என்று நினைத்துக் கொண்டார்கள்.
3. ஆனால் ஆண்டவர் பேதுருவிடம் தயவாய் சொன்னார், இல்லை பேதுருவே ஏழு எழுபது முறை.
4. இயேசு சொன்ன காரியம் 490 முறையல்ல. ஆனால் <u>கணக்கிலடங்காத</u> முறை மன்னிக்க வேண்டும். (1 கொரிந்தியர் 13:4-7); கிரேக்கத்தில்: ''அன்பு கொடுக்கப்பட வேண்டியவற்றை கணக்கில் வைக்காது''

<u>புதிய கண்ணோட்டம் (மத்தேயு 18:22,23a)</u>

1. இயேசு இந்த கண்ணோட்டத்தை இங்கு மாத்திரம் விவரிக்கவில்லை. ஆனால் இந்த உபதேசத்தை ராஜ்ஜியத்தின் தத்துவத்தில் முக்கியத்துவத்தோடு அவர் இணைத்தார்.
2. இயேசு ராஜ்ஜியத்தைக் குறித்து பேசும்போது இரண்டு காரியங்கள் உண்மையானது:
   a. தேவன் நம்மை அழைத்த மீட்பின் சூழ்நிலையில் இயேசு இந்தக் காரியத்தைப் பேசினார். இது நாமாகவே செய்ய முடியாத ஒன்றைக் குறித்து கூறுகிறது. ஆனால் அவருடைய ராஜ்ஜியத்தில் மறுபடியும் பிறக்க வேண்டும். அவர் நமக்கு வல்லமையைத் தருவார்.
   b. ராஜ்ஜியத்தில் கட்டளை உண்டு.
      மிக தெளிவாக ஒரு பாடம் இங்கே காட்டப்பட்டுள்ளது. அது நாம் பதிலளிக்காவிட்டால் பயப்படத்தக்க விளைவுகளை உண்டாக்குமென்று இயேசு காட்டினார் (மத்தேயு 18:34,35).
3. சித்திரவதை செய்யப்படுவதற்கு விடுதலை செய்தல் என்றால் என்ன அர்த்தம்?
   a. மன்னிக்கப்படாத வேலைக்காரன் அவனுடைய முந்திய சூழ்நிலைக்கு திரும்ப முடியாது (மத்தேயு 18:25 cf 34).
   b. வரிவசூலிக்கிறவர்கள் வழக்கமாக அவனிடத்திலிருந்து பணத்தை வசூலிப்பதற்காக தொல்லைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள் (மத்தேயு 18:34).

பாடம்:

1. எல்லாவற்றையும் மன்னிக்க சாத்தியக்கூறுகள் உண்டு மற்றும் இரட்சிப்பு என்ன கருதுகிறது என்று அறிந்து கொள்.
2. எவ்வளவு பெரிய மன்னிப்பு நமக்கு கொடுக்கப்பட்டது என்பதை மறந்துவிட்டு மற்றவர்களிடத்தில் முற்றிலும் விடுதலை செய்யும் அதே ஆவியோடு வாழாவிட்டால் நம்முடைய மன்னிக்க முடியாத தன்மையினால் நமது ஆத்துமாவிற்கு வழக்கமாக வேதனைகளும், சித்திரவதை செய்யப்படுதலும் வரும்.
3. மன்னிக்க முடியாத ஆவி சந்தோஷத்தையும், ஆவிக்குரிய வல்லமையையும், சரீர சுகத்தையும் எடுத்து விடும். மன்னிக்க முடியாத நடக்கை ஆசிர்வாதங்களையும், காரியங்களையும் உன்னில் இருந்து எடுத்துப் போடும்.
4. மருத்துவ ஆராய்ச்சி படிப்புகள் வெளிப்படுத்துகிற சான்று என்னவென்றால் 70சதவீதமான மனித நோய்கள் மனிதனுக்குள் இருக்கும் கசப்பினால், கடும் கசப்பு தன்மையினாலும், மன்னிக்க முடியாத தன்மையின் விளைவாக வருகிறது.

மன்னிக்காத வேலைக்காரன் (மத்தேயு 18:24-34)

1. வியப்படையதக்க கடன் (மத்தேயு 18:25)

a. மத்தேயு 18:25. அழிவு ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் குடும்பத்தில், எதிர்காலத்தில், ஏற்படப் போகிறது என்பதைக் குறித்துக் கொள்ளவும். அவனுடைய கடன் அவனுடைய உடனடியான அழிவை முன்னறிவித்தது. கிறிஸ்துவின் மன்னிப்பு, தேவனுடைய கிருபைக்கு வெளியே அவனுடைய முற்றிலும் இழந்து போன சூழ்நிலையை படம் பிடித்துக் காட்டுகிறது.

b. மத்தேயு 18:26. வேலைக்காரனுடைய வேண்டுகோளை கவனியுங்கள். அது செலுத்த முடியாத அவனுடைய நிலைமையைக் காட்டியது. கொடுக்கப்பட்ட காலநிர்ணயத்திற்குள் பலகோடி ரூபாய் கடன் ஒருபோதும் செலுத்தப்பட முடியாமல் போகலாம். அதனுடைய வட்டியைக் கூட கொடுக்க முடியாமல் போகலாம். அசலில் மிகமிக குறைந்த அளவே திரும்ப செலுத்த முடியலாம்.

c. மத்தேயு 18:27. அந்த மனிதனுடைய முதலாளியின் மிகப்பெரிய இரக்கத்தை கவனியுங்கள். அவனுடைய குணாதிசயம் அந்த நாள் சமுதாயத்திலிருந்த (அல்லது இந்நாட்களில்) பழக்க வழக்கங்களுக்கு முற்றிலும் முரண்பட்டதாக இருக்கிறது. கடன்பட்டவரிடத்திலே காட்டப்படும் பொதுவான பரிவு இதுவல்ல. இயேசு நம்முடைய பாரம் மற்றும் பாவக்கடன், குற்றவுணர்வு குறித்ததான காரியத்தில் பிதாவின் இருதயத்தை படம் பிடித்துக் காட்டுகிறார்.

2. வியப்படையதக்க பதில் (மத்தேயு 18:28,29)

விசுவாசிக்க முடியாத உணரமுடியாத வழியில், வேலைக்காரன் மன்னிக்கப்பட்டது மிகப்பெரிய காரியம். கடன்பட்டவர் தன்னுடைய உடன்-வேலைக்காரனிடம் சென்று, இருவருக்குமிடையே நிலுவையிலுள்ள கொடுக்க வேண்டிய பணத்தொகையை கட்டாயப்படுத்திக் கேட்கிறான் (இந்த கடன் முதலாளிக்கும் வேலைக்காரனுக்கும் இடையே உள்ள பிரச்சனையல்ல. இது முழுவதும் இருவருக்குமிடையே உள்ள பிரச்சினை என்பதை தயவு செய்து கவனித்தில் கொள்க. இது இந்த படிப்பினையில் முக்கியமானது)

a. மத்தேயு 18:28. இரண்டு கடன்களும் எந்தவிதத்திலும் ஒப்பிடப்பட முடியாது. முதலாவது உள்ளது வாழ்க்கை முழுவதையும் கொடுத்தாலும் செலுத்த முடியாத தொகை. ஆனால் இந்தக் கடனோ மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குரிய சம்பள பணத்திற்கு மாத்திரமே இணையானது.

b. மத்தேயு 18:28. மன்னிக்கப்பட்ட வேலைக்காரனின் அணுகுமுறையை கவனியுங்கள். அவன் உடனடியாக முழங்காலில் நின்று மன்றாடுகிற அவனுடைய உடன்-வேலையாளின் கழுத்தைப் பிடிக்கிறான். அவனுக்கு காட்டப்பட்ட மன்னிப்பை

மறந்தது மாத்திரமல்ல மற்ற வேலைக்காரனுக்குரிய அவனுடைய அணுகு முறையில் அவன் மிக கொடூர இருதயமுள்ளவனாய் இருந்தான்.

c. மத்தேயு 18:29. இரண்டாவது வேலைக்காரன் பேசிய வார்த்தைகளை கவனியுங்கள். அவைகள் முதலாவது நபர் தன்னுடைய ஆண்டவனை சந்தித்த போது பேசிய அதே வார்த்தைகள். ஆச்சரியப்படும் விதமாக அவனுடைய உடன்-வேலையாள் உதட்டிலிருந்து வரும் அவனுடைய சொந்த அபயமிடுதலின் தொனியைக் கூட கேட்கவில்லை.

d. மத்தேயு 18:30. இரண்டாவது வேண்டுகோளான ''நான் செலுத்தி விடுவேன்'' என்பதே ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணமாய் இருந்தது என்பதை நினைவில் கொள்க. இந்த இரண்டு சூழ்நிலையிலும் இது ஒரு மிகக் கடுமையான வேறுபாடாகும். குறைந்த தொகை கடனாளிக்கு மன்னிப்பு காட்டப்படவில்லை. இதற்கு சற்று பொறுமை காட்டப்பட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

மன்னிக்க முடியாத ஆவி தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர விரும்புகிறது. ஒருமுறை கொண்டு வந்துவிட்டால் மீண்டும் மீள முடியாது.

எப்படி ஒரு தலைவரின் இருதயத்தில் மன்னிக்க முடியாத தன்மை பிரவேசிக்கிறது?

மன்னிக்க முடியாத ஆவி ஒருவருடைய வாழ்க்கையிலும் இருதயத்திலும் இவ்வாறு நுழைகிறது:

- பொறாமை
- மனக்காயங்கள்
- விமர்சனங்கள்
- கடும் கசப்பு (நம்முடைய கோபத்திலே கடும் கசப்பினால் ஜனங்கனை சிறையில் வைத்தல்)
- நியாயத்தீர்ப்பு கூறுதல்
  - என்னுடைய கருத்து என்னவென்றால் அந்த நபர் தவறு நான் சரி என்றால் நாம் மற்றவர்களை நம்முடைய கருத்து என்னும் சிறையில் போடுகிறோம். இது மற்றவர்களுடைய ஊழிய முறைமைகளை நியாத்தீர்ப்பு செய்வதிலும் பொருந்தும்.
  - கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை இப்படிபட்ட நடக்கை துயரமான முறையில் நிரப்புகிறது. இது வாழுகின்ற சபையின் பயன்பாட்டை முடமாக்கி விடும். தலைவர்களின் ஆவிக்குரிய வலிமையை வலுவிழக்கச் செய்யும். கிறிஸ்துவின் சரீரத்தின் பகுதிகளுக்குள் பிரிவினை சுவரை எழுப்பி விடும்.

தொடர்ந்து மன்னிப்பில் வாழ்ந்து, ஆனால் தன்னுடைய இருதயத்தில் மன்னிக்க முடியாத ஆவியை உடைய தலைவருக்கு இவை சம்பவிக்கும்:

= அவருடைய ஊழியத்தை முடமாக்கும்.
= அந்த தலைவரை கட்டிப்போடும்.
= அந்த ஜனங்களைக் கூட கட்டிப் போட்டுவிடும்.

எனவே, உங்களைப் பார்த்து கேளுங்கள்: எப்படி மற்ற ஊழியர்களோடு நான் சரியான ரீதியில் தொடர்பு வைக்க முடியும்.

முரண்பாடுகளை தீர்க்க கூடிய சில வேதவசன திறவுகோல்கள்

எந்த குழுவும் ஊழியக் குழுவை உள்ளடக்கிய சில முரண்பாடுகளுக்காக வாய்ப்புகள் உண்டு. அநேகமாக எல்லாக் குழுக்களும், அநேக திறமையுள்ள தனிப்பட்டவர்களை தொடக்க முதலே உள்ளடக்கியதாய் இருக்கிறது. ஒரு பயிற்சியாளரின் பணி பல்வேறு தாலந்துகளை ஒன்றாக கலந்து முழுமையின் நன்மைக்காக பயன்படுத்துதல்.

1. சில ஆரம்ப முரண்பாடுகள் சற்று ஏறக்குறைய தவிர்க்க முடியாதவைகள்.

விதவிதமான தாலந்துகளும், திறமை படைத்தவர்களும் கொடுக்கப்பட்ட வேலைக்கு தேவையாய் இருக்கிறது. உண்மையென்னவென்றால், இப்படிப்பட்ட திறமைகள் வித்தியாசமான குணாதிசயம், தனிப்பட்ட, மற்றும் உளப்பாங்கு உள்ளதான நபர்களிடத்திலே காணப்படுகிறது. மேல்புறமாக ஆரம்ப பகுதிகளில் தவறாக புரிந்து கொள்ளுதலும், முரண்பாடுகளும் வருவது சற்று ஏறக்குறைய தவிர்க்க முடியாதவைகள். இது மெய்யாகவே இயேசு தன்னிடமாய் அழைத்த சீஷர்கள் நடுவே உண்மையாக இருந்தது. அவர்களுடைய பின்னணியம், வாழ்க்கை, அனுபவம், உளப்பாங்குகள் தெளிவாக அகலமாக விரிந்து செல்கிறது. முதலாவது அவரோடு சேர்ந்த பொழுது அவர்கள் மட்டமாக கூச்சலிட்டு பதவிக்காகவும், பொறுப்புகளுக்காகவும் ஒருவருக்கொருவர் நெருக்கித் தள்ளினார்கள். முரண்பாடுகள் மற்றும் போட்டிக்கான தெளிவான அடையாளங்கள் காணப்பட்டன. ஆனால் இயேசு தன்னை பின்பற்றுகிறவர்களின் ஆரம்ப முதிர்ச்சியற்ற வாழ்க்கையை உருவாக்கி மற்றும் வடிவமைக்கப்பட்டு அவர்கள் சிறப்பான முதிர்ச்சியிலும், மிக தகுதி வாய்ந்தவர்களுமாக வெளிவந்தார்கள்.

2. அவர்கள் அங்கிகரிக்கப்பட, உடனடியாக நேர்மையாக தீர்க்கப்பட வேண்டும்.

முரண்பாடுகளை அங்கிகரித்தலும் உறுதிபாடு பண்ணுதலும், அல்லது முரண்பாட்டின் வளர்ச்சியில் குழு ஊழியத்தின் அமைப்பிலே தேவையாய் இருக்கிறது. எந்த ஒரு குழுவிலும், தீர்க்கபடாத பிரச்சனை தொடர்ந்து இருக்குமானால், சிறப்பாக செயல்பட முடியாது. எந்த ஒரு கூட்டு குடும்பத்தின் ஆக்கப்பூர்வ தன்மையும், அதனுடைய அங்கத்தினருடைய நோக்கத்தின் பெரிய அளவிலான இசைவுநிலை ஐக்கியத்தை சார்ந்து இருக்கிறது. எப்படியாயினும், விசேஷமாக கிறிஸ்தவ ஊழியக்குழுவிற்கு இது மெய்யானது. தேவன் விசேஷ மதிப்பை ஐக்கியத்தில் இணைத்து இருக்கிறார். ஒப்பிட முடியாத தரமான ''ஆசீர்வாதங்களை சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுதலுக்கு'' பதிவு பண்ணி வைத்து இருக்கிறார் (சங் 133). எனவே ஐக்கியமின்மை நடுநிலையான முறையில் எல்லாருடைய கரிசனைக்காக விரைவாக தீர்க்கப்படுவதும் முக்கியமானது. தேவன் இவ்விதமான செயல்களை எப்போதும் ஆசீர்வதிக்கிறார்.

3. நேர்மறையாக பயன்தரும் ரீதியில் குழுவில் தீர்த்தல்.

தெளிவாக தெரிகிற எந்த ஒரு முரண்பாட்டின் பகுதிகளையும் தலைவர் பொறுமையுடன் தீர்ப்பதற்கு முயற்சி செய்ய ஆயத்தமாய் இருக்க வேண்டும். இது அடிக்கடி இப்படிப்பட்ட பிரச்சனைகளின் உறுதிப்பாட்டின் மூலமாக ஆழமான ரீதியில் உண்மையான தொடர்பு நிலை விரிவாக்குவதின் மூலமாக செய்ய முடியும். ஒரு ஊழியக்குழு இந்த விதமான பிரச்சனைகளுக்கு சரியான விதத்தில் இடைபடுவதற்கு தேவையான திறந்த நிலையையும், நேர்மையையும் அடையாவிட்டால் உறுதியாக ஒருபோதும் உண்மையான தொடர்பு நிலையின் பெலத்தை அடைய முடியாது. இப்படிப்பட்ட பிரச்சனையை தீர்ப்பது அன்பிலே சத்தியத்தைப் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதை ஆக்கப்பூர்வமாக கட்டாயப்படுத்துகிறது. இந்த விதமான தரத்தில் மாத்திரம் குழுவானது மேற்பரப்பானவற்றில் இருந்து ஆழமான அளவிலான தொடர்பு நிலை முதிர்ச்சிக்கு முன்னேறிச் செல்வதை அடைய முடியும். அப்போஸ்தலனாகிய பவுல் ஆரம்ப நிலையில் அவனுடைய தொடர்பு நிலையில் யோவான் மாற்குவைக் குறித்து கடுமையான பதிவுகளை கொண்டிருந்தான். பின்பு விசேஷமான வேண்டுகோளாய் அவனுடைய பிரசன்னம் ''அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்'' என்று சொல்லுகிறது.

4. வழக்கமாக மற்றும் அடிக்கடி குழு கூட்டத்தை நடத்துங்கள்

வழக்கமாக ஒன்றிணைக்கப்பட்டு கூட்டு தரிசனத்திற்கு சம்பந்தப்பட்ட காரியங்களை பகிர்ந்து கொள்வதற்கான தருணங்களை கொடுப்பது இன்றியமையாததாகும். இப்படிப்பட்ட கூட்டங்கள் வழக்கமாக அடிக்கடி நிகழ வேண்டும். தெளிவாக இந்த விதமான குழு கூட்டங்கள், பணிவினவல் அறிக்கை சமர்பித்தல், விவாதித்தல், மற்றும் ஜெபம் தரிசனத்தின் வளர்ச்சியைக் குறித்து இருக்க வேண்டும். முன்னேறுகிற திட்டங்களும் ஒருங்கிணைத்தலும் இன்றியமையாதவைகள் அவைகள் இல்லாவிட்டால் பொதுவான கவனிப்பை இழந்து முனை இழந்து ஆக்கப்பூர்வமான தன்மையை இழந்து காணப்படுகிறது.

எப்படியாயினும் குழு அங்கத்தினர்கள் முறைசாரா விதத்தில் ஐக்கியம் மற்றும் இளைப்பாறுதல் நேரத்திற்குள்ளாய் அடிக்கடி இணைந்து வரவேண்டும். வாழ்க்கையின் இந்த சாதாரணமான காரியங்களை பகிர்ந்து கொள்வதின் மூலமாக மாத்திரமே அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் உண்மையாக கண்டுபிடித்து குழுவானது மெய்யான உண்மையான நபரை அறியும். தொடர்புநிலையும் ஐக்கியமும், இந்த நிலையில் மெய்யான சகோதரத்துவத்தை விரிவாக்குவதற்கும் ஆழப்படுத்துவதற்கும் இன்றியமையாதது.

5. திறந்த நிலையையும், நேர்மையையும் உற்சாகப்படுத்துங்கள்

ஊழியக்குழுவின் ஆக்கப்பூர்வமான செயல்பாட்டிற்கு எல்லா அங்கத்தினர்களும் ஒருவரோடொருவர் வெளிப்படையாக திறந்தநிலையில் நேர்மையாக தொடர்பு கொள்வது இன்றியமையாதது. ஆக்கப்பூர்வமான செயல்பாட்டிற்கு தேவையானது என்னவென்றால் தரமுள்ள ஐக்கியம் முக்கியமானது. இந்த தரமுள்ள தொடர்பு நிலை எல்லா குழு அங்கத்தினர்களையும் பாதுகாப்பதற்கு இன்றியமையாத பொருளாகும். இப்படிப்பட்ட தொடர்பு நிலை அநேக தலைவர்கள் நேரத்திற்கு நேரம் ஆளாகுகிற சோதனைப் பிரச்சனைக்கு தீர்வாகும்.

6. தங்களுடைய தனித்தன்மையை வெளிப்படுத்த ஜனங்களுக்கு வழிவகை செய்து கொடுங்கள்

குழு அங்கத்தினரிடையே உறுதிசெய்தலை கட்டாயப்படுத்துவது கடும் குற்றமாகும். தேவன் தேடுகிற, விரும்புகிற ஐக்கியம் வேற்றுமையில் ஒற்றுமை, அநேக பலக் கோணங்களைக் கொண்ட பணியை நிறைவேற்றுவதற்கு விரிவான பலதரப்பட்ட வரங்கள் தேவையாய் இருக்கிறது. கணிசமான பலதரப்பட்ட திறமைகளும், தனித்தன்மையும் இன்றியமையாத தேவையாகும். இப்படிப்பட்ட பலதரப்பட்ட நபர்களை தெரிந்து கொண்டபின் ஒரு குறிப்பிட்ட தனித்தன்மை மாதிரி இருப்பதற்கும், உறுதி செய்வதற்கும் எல்லோரையும் எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது. தலைமைத்துவத்தில் உள்ள முக்கிய காரியம் என்னவென்றால் விரித்த வித்தியாசமான நபர்கள் அடங்கிய குழுவிலிருந்து இசைவுநிலை ஒத்துழைப்பை பெரும்திறமைதான்.

7. உன்னுடைய குழு அங்கத்தினர்களை நம்பு அவர்களிடத்தில் வைத்து உள்ளதை வெளிப்படுத்திக் காட்டு

ஏன் சில தலைவர்கள் தாங்கள் பகிர்ந்து கொள்ள வேண்டிய பணியை பகிர்ந்து கொள்ளதாதற்கு உள்ள காரணங்களில் ஒன்று உடன் வேலையாளை முழுவதுமாக நம்புவதில்லை. ஆக்கபூர்வத்திற்கும், வளர்ச்சிக்கும் இன்றியமையாதது. ஆனால் அதைச் செய்வதற்கு உங்களுடைய உடன்வேலையாளை நம்ப நீங்கள் படிக்கவேண்டும். பணிப்பகர்வில் உள்ள மூன்று முக்கிய காரணிகள்.

- சரியான நபர்களை தேர்ந்தெடுங்கள்
- பொருத்தமான நபரிடம் நன்கு வரையறுக்கப்பட்ட பணியை பகிர்ந்து கொள்ளுங்கள்
- அதிலே செயல்படுவதற்கு நம்புங்கள்

8. அவர்களுடைய கழுத்தை இறுக்காதீர்கள்

பணியையும், பதவியையும் பகிர்ந்து கொண்டு அர்ப்பணித்த பின் சொந்த தவிர்க்க முடியாத வழியில் செயல்படுவதற்கு, அந்த நபருக்கு வழி வகை செய்து கொடுக்க வேண்டும். வேலையாட்கள் பொதுவாக போட்டியிடும் அளவிற்கு எழும்புவார்கள். நீங்கள் அதற்கு அவர்களை நம்ப வேண்டும். இந்த செயல்பாட்டிலே திட்ட வட்டமாக அவர்கள் சில தவறுகளை செய்வார்கள். நீங்கள் அதற்கு ஆயத்தமாய் இருக்க வேண்டும். தவறு செய்யாத நபர் ஒருபோதும் ஒன்றையும் செய்வதில்லை.

9. ஜனங்களுக்கு செவி கொடுக்க கற்றுக் கொள்ளுங்கள்

வெற்றிகரமான தலைவர் நல்ல செய்தித் தொடர்பாளராய் இருக்க வேண்டும். எப்படியாயினும் தாழ்மையுடன் செவிகொடுத்து, கேட்பதும் கற்றுக் கொள்வதும் மிக முக்கியமானது. ஆக்கப்பூர்வமான செய்தித் தொடர்பிற்கு இருவழி செயல்பாடு அவசியம். ஒரு போதும் செவி கொடுக்காத தலைவர் ஒருபோதும் கற்றுக் கொள்வதில்லை. அவர்களுக்கு செவி கொடுப்பதற்கு சார்ந்திராத தலைவர் அவர்களை கவனிக்காதவர் ஒருபோதும் மெய்யாகவே அவருடைய குழு அங்கத்தினர்களை புரிந்துக் கொள்ளவோ அறிந்து கொள்ளவோ முடியாது.

10. அவர்களோடு பேசுவதற்கு தருணத்தை ஏற்படுத்துங்கள்

சிறிய சபையில் பொதுவாக உங்கள் குழுவினர்களிடையே, நிலையான மற்றும் வழக்கமான அடிப்படையில் சந்திக்க வேண்டும். பெரிய ஸ்தாபனத்தில் ஒவ்வொரு அங்கத்தினரோடும் நெருங்கிய தனிப்பட்ட தொடர்பில் நிலைத்திருப்பதின் அவசியம் மிகப் பெரிய சவாலாகும். பேசுவதற்கு ஒரு வழிமுறையை பின்பற்றுதல் இதை அடைவதற்கு உதவியாய் இருக்கும். நீங்கள் நீண்ட, ஆழ்ந்த உரையாடலை உடையவர்களாய் இருப்பது அவசியமில்லை. நண்பர்த்துவ முறையில் வார்த்தை தொடர்பு, வழக்கமான இடைவெளியில் தனிப்பட்ட தொடர்பில் இணைக்கப்பட்டிருக்கிறோம். ஒருவருக்கொருவர் தேவையானவர்கள் என்ற உணர்வை பராமரிக்க உதவுகிறது. ஐக்கியத்தையும், நேர்மையையும் குழு அர்ப்பணிப்பையும் முன்னேற்றுவிக்கிறது.

11. மெய்யான பாராட்டுகளை வெளிப்படுத்துங்கள்

அநேக தலைவர்கள் பாராட்டப்பட விரும்புகிறார்கள். ஆனால் பாராட்ட தவறிவிடுகிறார்கள். அடிக்கடி மற்ற ஜனங்கள் பாராட்டப்படவில்லை என்றும் வெறுக்கப் படுவதாகவும் உணர்கிறார்கள். எப்பொழுதெல்லாம் விழிப்புணர்வு அடைகிறீர்களோ ஒப்பிடும்பொழுது எளிய காரியமான சுருக்கமாக பாராட்டுதலை வெளிப்படுத்தும் பழக்கவழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். வார்த்தையினால் நேர்மையுடன் இதைச் செய்யலாம். நன்றி இந்தப்பணியை நிறைவேற்றின விதத்திற்காக நான் உண்மையாகவே உன்னைப் பாராட்டுகிறேன். உன்னை உடன்வேலையாளாகப் பெற்றதில் மிக மதிப்படைகிறேன். அவ்வப்போது நீங்கள் குறிப்பெழுதலாம் அல்லது வாழ்த்து அட்டை அனுப்பலாம். ஒருவேளை உணவுக்காக ஒரு நபரை வெளியே அழைத்து செல்லலாம். அல்லது எளிமையான வெகுமதியை வாங்கிக் கொடுக்கலாம். பாராட்டுதலை வெளிப்படுத்துவதற்கு அநேக வழிகள் உண்டு. ஒவ்வொன்றும் பெறுகிறவரால் மதிப்பு மிக்கதாய் கருதப்படுகிறது.

12. தனிப்பட்ட முறையில் நிர்வாகம் சரி செய்யும் அளவிடுகள்

பாராட்டுதலும் நன்றி சொல்லுதலும் அடிக்கடி யாவர் முன்னிலையிலும் வெளிப்படுத்தப்படலாம். சரி செய்யும் அளவிடுகள் எப்பொழுதும் நம்பிக்கைக்கு பாத்திரமாக தனிப்பட்ட முறையில் செய்யப்பட வேண்டும். வழக்கத்திற்கு மாறான சூழ்நிலை மற்றும் இயல்பு மாறிய சூழ்நிலைத் தவிர, யாரும் விமர்சிக்கப்படவோ, கடிந்து கொள்ளப்படவோ, சரி செய்யப்படவோ, தங்களுடைய உடனாளிகள் மத்தியில் விரும்புவதில்லை. இது நம்பிக்கையை குறைத்து மதிப்பிட்டு தொடர்புநிலையை அழித்து விடுகிறது. ஒருவருடைய குணாதிசயத்தை, நடக்கையை செயல்பாட்டை சரி செய்ய தேவை ஏற்படும்பொழுது அந்த நபரை தனியாக அழைத்து பேச முயற்சி செய்யுங்கள்.

13. போட்டிகள் மட்டத்திலே ஜனங்களுடைய நம்பிக்கையை கட்ட முயற்சியுங்கள்

ஆக்கப்பூர்வமான தலைமைத்துவத்தில் இன்றியமையாத காரியம் என்னவென்றால் மற்ற தலைவர்களை உருவாக்குவது தான். ஒவ்வொரு பவுலும் தங்களுடைய தீமோத்தேயுக்களை உடையவர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தலைவரும் அநேக தொழில் பழகுகிறவர்களுக்கு நல்லறிவுரையாளராக இருக்க வேண்டும். ஒவ்வொரு நிர்வாகமும், சில நேரங்களை முயற்சிகளை செலவழித்து எதிர்காலத்திற்காக அதனுடைய தலைவர்களை உருவாக்க வேண்டும். இதுவே குறிப்பாக சபையின் காரியங்களிலும் அடிப்படை நோக்கமான மேய்ப்பன் போதக ஊழியங்களுக்காக பரிசுத்தவான்களை ஆயத்தம் செய்தல் (எபேசியர் 4:11).

14. நேர்மறையை அழுத்தமாய் கூறு, எதிர்மறையில் அல்ல

வாழ்க்கை எதிர்மறை மற்றும் நேர்மறை இணைக்கப்பட்ட தொகுப்பாகும். உண்மை உலகத்தில் வாழ்க்கை செயல்படுவதற்கு இவை இரண்டும் தவிர்க்க முடியாத தேவையாகும். எப்படியாயினும் தவிர்க்க முடியாத உண்மையான எதிர்மறையான ஆற்றல்களை அங்கிகரிக்கும் வேளையில் தலைவர்களும், அவர்களுடைய குழுக்களும் எதிர்மறைக்குப் பதிலாக நேர்மறையான நடக்கையிலும் சிந்தையிலும் உணர்வுடன் கவனம் செலுத்த வேண்டும். நேர்மறையான காரியங்களில் முக்கியமாக கவனம் செலுத்துதல் ஒருவரை வாழ்க்கையின் நேர்மறையான மற்றும் எதிர்மறையான காரியங்கள் இரண்டையும் எதிர்கொள்ள தயார்படுத்தும். இருந்த போதிலும் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் சரியான நடக்கை என்பது இரண்டிலும் ஆரோக்கியமான சமநிலையில் இருத்தலாகும். பிறகு நேர்மறைக்கு நேராக கற்றுக் கொள்வது சிறந்தது.

15. தரமான நேரத்தை இணைந்து செலவு செய்வதற்கு உற்சாகப்படுத்துங்கள்

வாழ்க்கையின் ஒவ்வொரு சாத்தியமான பகுதிகளிலும் குழுவானது ஐக்கியத்தில் அல்லது தொடர்பு நிலையில் விரிவடைய முடியாது. இயேசு தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் 12 நபர்களோடு செலவழித்தார். மூன்று வருடத்திற்கு அதிகமாக இரவும், பகலும் ஏறக்குறைய ஒவ்வொரு சாத்தியமான சூழ்நிலைகளின் கீழ் பார்த்து அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள அவர்கள் இணைந்தே நடந்தார்கள், வேலை செய்தார்கள், பேசினார்கள்.

16. தனிப்பட்டவர்களுக்கு மற்றும் கூட்டாக அவர்களுக்கு கிடைக்கக்கூடிய விதத்தில் இருங்கள்.

ஒரு உண்மையான தலைவர் அவருடைய குழுவிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டவராய் வாழக்கூடாது. அவர் சந்திக்கக் கூடியவராய் அணுகுவதற்கு எளிதானவராய் அவர்களுக்கு கிடைக்கக்கூடியவராய் இருக்க வேண்டும். அவர்களை நிலையாக தனிப்பட்ட முறையில் கூட்டாக சந்திப்பதற்கு ஆயத்தமும் சித்தமும் உடையவராய் இருக்க வேண்டும்.

17. எல்லா நேரங்களிலும், மாதிரியான தலைமைத்துவமாய் இருக்க முயற்சி செய்யுங்கள்

உணர்வின் நிலையிலோ, உணர்வு இல்லாமலோ உண்மையென்னவென்றால், தலைவர் எல்லா நேரங்களிலும் பின்பற்றுகிற மாதிரியாய் இருக்கிறார். தலைமைத்துவத்தின் நன்மதிப்பை பெற்று தக்க வைத்துக் கொள்ள நல்ல தலைவர் என்றதான மதிப்பின் வருணனையை நிலையாக பெறவேண்டும். அவர்களுடைய குழு அங்கத்தினர்கள் அவர்களுடைய தலைவரைக் குறித்து தோய்ந்துபோன நடக்கைகளைக் குறித்து அவரைக் குறித்த தொலைநோக்கை தொடர்ந்து விழிப்பாய் இருக்கிறார்கள். அவருடைய சிறப்பான முக்கியமான காரியம் நல்ல தலைமைத்துவத்தின் குணாதிசயத்தை செயல்படுத்தி காட்டுவது தான்.

18. குறிப்பிட்ட ஆக்கப்பூர்வமான பணிகளை ஒவ்வொருவருக்கும் நியமியுங்கள்

ஒவ்வொரு குழு அங்கத்தினர்களுக்கும் குறிப்பிட்ட ஆக்கப்பூர்வமான பணி அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருப்பது அவசியம். அவர்களுடைய பங்கு மற்றும் வேலைகள் என்ன என்பதை அறிந்து தெளிவாக புரிந்து கொள்வது அவசியம். அதனுடன் ஆக்கப்பூர்வமாய் இருக்கக்கூடிய சில காரியங்களை எப்பொழுதும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவர்களுடைய வேலை வெற்றியின் செயல்பாட்டிலே உள்ளடங்கியது என்பதை அறிவது அவசியம்.

19. அவர்களுடைய தகுதிக்கு சவால் விடுங்கள். கட்டியெழுப்புவதற்கு சிலவற்றை கொடுங்கள்

அநேக ஜனங்கள் கொடுக்கப்பட்டு தயவுள்ள தருணங்களில் போட்டியிடும் அளவிற்கு எழும்பி விடுவார்கள். அப்படியே செய்வதற்கு உதவியாக அவர்களுக்கு நிலையான சவால்களை கொடுப்பது அவசியம். அப்படிப்பட்ட சவால்களை முன்னேற்றும் விதமாய் உள்எழுர்ச்சியில் வளருவதற்கு ஏதுவாய் இருக்க வேண்டும். அதாவது அவர்கள் அதிகதிகமாய் சவால் விடப்பட்டு தாலந்துகளிலும் போட்டி இடுகின்ற நபராக வளருவதற்கு தூண்டுதல் ஏற்படுத்தப்பட வேண்டும்.

20. பணியானது அந்த நபருக்கு பொருந்தும் விதத்தில் சரி செய்யப்படவேண்டும்

பணியை மற்றும் பொறுப்புகளை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுப்பவருடைய முக்கிய பயங்களில் ஒன்று பரிந்துரை செய்யப்பட்டவர் தலைவராகிய தான் செய்யும் முறையில் அந்தப் பணியை செய்வாரா என்பது. அதே பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஜனங்கள் வித்தியாசமான அணுகுமுறைகளையும், செய்யும் முறைகளையும் உடையவர்களாய் இருப்பார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். சில வேளைகளில் குறிப்பிட்ட நபரின் அணுகு முறைக்கு எப்படியாவது பொருந்தக் கூடிய விதத்தில் பணியானது சரி செய்யப்பட வேண்டும். முடிவான செயல்பாட்டின் தரத்தை தியாகம் செய்யாமல் இக்காரியம் செய்யப்படலாம்.

சபை ஒழுங்குமுறைப்படுத்துதல்: ஏன்? எப்போது? எப்படி?

எங்கெல்லாம் ஒரு கூட்ட ஜனங்கள் இருக்கிறார்களோ அங்கே ஒழுங்கு அறநெறி விதிமுறைகள் இருக்க வேண்டும். ஒருவர் தனியாக இருப்பாரானால் அங்கே ஒருவருக்கொருவர் தொடர்புநிலைகளை நிர்வகிக்கும் சட்டங்கள் தேவையில்லை. சட்டங்கள் நபர்களுக்கு இடையே ஒழுங்கையும், சந்தோஷத்தையும், நல்ல உறவுகளையும் பாதுகாக்க தேவைப்படுகிறது. சட்டமிருக்குமானால், அங்கே பணிவு தேவைப்படுகிறது. இசைவுநிலை சட்டங்கள் பராமரிக்கப் படவேண்டும். ஜனங்கள் சட்டங்களை மீறுவார்களானால் அங்கே ஒழுங்குமுறைப்படுத்தலின் தேவையும் வருகிறது (ரோமர் 13:2; மத்தேயு 5:25,26). தேவனுக்கு முன்பாக தெளிவான மனசாட்சி உடையவர்களாய் இருக்க, இந்த சட்டங்கள் வெளிப்புறமாக மாத்திரம் கீழ்படியாமல் உள்புறமாகவும் கடைபிடிக்கப் படவேண்டும் (ரோமர் 13:5). எனவே ஒவ்வொரு நபருடைய "நானே" என்ற தன்மை உயர்வான சித்தத்திற்கும், தேவனுடைய சித்தத்திற்கும் அர்ப்பணிக்கப்படுதல் அவசியம். தேவனுடைய சித்தம் தேவனுடைய சட்டதிட்டங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வேதம் காட்டுகிறது அவருடைய சித்தம் சட்டம். அவருடைய சட்டமே சித்தமாகும். தேவன் சட்டத்தின் இராஜா. ஏனெனில் மனிதனுடைய பாவத்தின் தன்மை விசுவாசிகளின் பரிபூரணமாகாத நிலைக்கு அதிக ஒழுங்குமுறைப் படுத்துதல் தேவையாய் இருக்கிறது.

இந்த ஒழுங்குமுறைப் படுத்துதல் தெய்வீக இறையாண்மையின் கீழ் நேரடியாக தேவன் மூலமாய் அல்லது மனித பொறுப்பின் மூலமாய் வேதவசன தத்துவங்களின் அடிப்படையில் செயல்படுத்தப் படுகிறது. இயற்கையான குடும்பத்தில் ஒழுங்குமுறை இல்லாவிட்டால் ஒழுங்கீனங்களும், குழப்பமும் இருக்கும். தேவனுடைய குடும்பமாகிய சபையிலும் அதே காரியம் உண்மையானது.

சபையைக் குறித்தான ஆண்டவரின் இரண்டாவது குறிப்பு மத்தேயு சுவிசேஷத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. சபை ஒழுங்குமுறைப் படுத்துதலின் தேவையை உள்ளடக்கி இருக்கிறது. மத்தேயு 16:15-20 யை 18:15-20 உடன் வாசியுங்கள். சபை ஒழுங்குமுறைப்படுத்துதல் என்பது சபை வாழ்க்கையில் கடின பகுதிகள் ஒன்றும் மிக கவனமாக செய்யப்பட வேண்டிய பகுதிகள். ஒழுங்குமுறைப் படுத்துதலின் நோக்கத்தையும், தன்மையையும் குறித்து தவறாகப் புரிந்து கொள்ளுவதினால் இது வருகிறது அல்லது ஆவிக்குரிய நிர்வாகங்களுக்கு எதிரிடையாக நிற்கிற மனித இரக்கங்களினால் வருகிறது. எப்படியிருந்தாலும் சபை ஒழுங்குமுறைப் படுத்துதல் வலுவான ஆரோக்கியமான பரிசுத்தமான சபையைப் பராமரிப்பதற்கு முற்றிலும் தேவையாய் இருக்கிறது.

ஒழுங்குமுறைப் படுத்துதல் என்ற வார்த்தையின் வரையறை

ஒழுங்குமுறைப் படுத்துதல் என்றால் அர்த்தம்

1. போதித்தல், கற்றுக்கொள்ளுதல், சீஷத்துவப்படுத்துதல்.
2. போதனை சரி செய்கிறது, வளைகிறது அல்லது ஆற்றலை பூரணப்படுத்துகிறது அல்லது அறநெறிப் படுத்துகிறது.
3. தண்டனை, விருப்பமில்லாத வழி அபராதம்.
4. விதி முறைகள் அவை நடக்கையையும், செயல்பாட்டையும் ஆளுகிறது.

ஒழுங்குமுறைப் படுத்துதலின் பொருள்

எந்தக் கேள்வியும் இல்லாமல் புதிய ஏற்பாடு ஒழுங்கு படுத்துதலைக் குறித்துப் போதிக்கிறது. இது இல்லாமல் சீஷத்தவம் என்பது கூடாத காரியம். இது சுய ஒழுங்குப் படுத்துதலிருந்து சபையின் ஒழுங்குப் படுத்துதலுக்கு செல்கிறது. அறிவுரை கூறுதலிருந்து சபையை விட்டு வெளியேற்றுதலுக்கு செல்கிறது.

தேவைப்படும் போது வேதம் போதிக்கிற சபை தன்னுடைய அங்கத்தினர்களை ஒழுங்கு படுத்துதலின் பொறுப்பின் உண்மையின் உட்பொருள் என்ன?

1. இதன் அர்த்தம் நான் என் சகோதரனின் காவலாளி. "...ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்; ...ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து...". (கலாத்தியர் 6:1,2).

2. இது வெளிப்படுத்தி காட்டுகிற காரியம் ''நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதில்லை'' (ரோமர் 14:7). சில நேரங்களில் யாராவது உங்கள் சொந்த வேலையை கவனியுங்கள். அடுத்தவர் காரியத்தில் தலையிடாதிருங்கள் என்று சொல்லலாம். ஆனால் உண்மை என்னவென்றால் உங்கள் வேலையே தேவனுடைய குடும்பத்தில் இருக்கிற உங்கள் சகோதரன் தான்.

3. தேவன் பரிசுத்தர் என்று இது வெளிப்படையாக சொல்லுகிறது. பாவம் முக்கியமில்லாத காரியம். ஆதிசபை பரிசுத்தமும், வல்லமையும் உடையதாய் இருந்தது. இன்றைய சபைகள் அதை இழந்து காணப்படுகிறது.

4. பாவம் என்பது தொற்று வியாதி என்று இது போதிக்கிறது,. ஒழுங்குமுறைப் படுத்துதல் என்பது நல்லது கெட்டதை பிரிப்பதற்காக அல்ல. ஆனால் இது பாவம் மற்றவர்களை தொற்றிவிடாதபடிக்கு தொற்று தடுப்பு செய்ய வேண்டும். நாம் போதுமான அளவு எந்தவிதமான சந்தேகத்திற்கிடமில்லாமல், அதே போல, அதே தீமைகள் செய்ய வைக்கிறது. இது கடுமையானது என்பதை விட உயிர்ப்பிக்கப்பட கூடியது.

5. வெளிப்படுத்தப்பட்ட உண்மை என்ன வென்றால் கிறிஸ்தவ வாழ்க்கை கூட்டு வாழ்க்கை. எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, மற்றும் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும். தனியுரிமைக் கொள்கை என்பது பிரிவினை பாவமாகும். (1கொரிந்தியர் 12:13,26).

6. புதிய ஏற்பாட்டிலே ஆவிக்குரிய அங்கத்துவ மனது இருந்தது என்பதை காட்டுகிறது. ஜனங்கள் புதிய ஏற்பாட்டு சபையின் பகுதிகளாய் மாறினார்கள் அல்லது அவர்கள் ஒருபோதும் அதிலிருந்து வெளியேற்றப் பட்டிருக்க முடியாது (மத்தேயு 18:17). ஜனங்கள் இரகசியமான, அதரிசனமான, அகில உலக சபையில் பெரிய அளவில் அங்கத்துவம் உடையவர்களாய் இருந்தவர்கள் வேதத்தில் காணப்பட்ட மாதிரியை ஒருபோதும் நிறைவேற்றவில்லை.

7. ஸ்தல சபையின் இறையாண்மையை உறுதி செய்கிறது. ஒழுங்குமுறைப் படுத்தப்பட்ட ஜனங்கள் மத்தேயு 18:17,18ல் காணப்படும் ஸ்தல சபை பூமியிலே இருக்கும் உயர்நீதி மன்றமாகும். எந்த வித சபை அமைப்போ, மாவட்டத் தலைவர்களோ, தலைமைப் போதகரோ, போராயரோ, போப்பாண்டவரோ இவர்களிடம் தாங்கள் முறையிட எந்த அமைப்பும் இல்லை. ஸ்தல சபையே பரலோகத்தின் தலைமையில் இருந்தது.

ஒழுங்கு முறைப்படுத்துதலின் அவசியம்

இயற்கையான குடும்பத்தில் இருப்பதுபோல ஆவிக்குரிய குடும்பத்திலும் கீழ்கண்ட காரணங்களுக்காய் ஒழுங்கு முறைப்படுத்துதல் தேவை.

1. ஒழுங்கு முறைப்படுத்துதல் ஒழுங்குகளை உருவாக்கவும், நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகளை உருவாக்க வடிவமைக்கப் பட்டுள்ளது. அது இல்லாமல் சட்டம் இன்மையும், அரசு இல்லாத நிலையும் உருவாகும் (நியாயதிபதிகள் 18:1; 19:1; 21:25).
2. ஒழுங்குமுறைப் படுத்துதல் பணியின் தத்துவத்தை அறிமுகப் படுத்துகிறது. தேவனுடைய சித்தம் கடந்து செல்வதற்கு என்னுடைய சித்தம் அர்ப்பணிக்கப்படுகிறது.
3. சுயநலமும், சுயசித்தமும் அழிவையும் துன்பத்தையும் வீட்டிலே கொண்டு வருகிறது (ஏசாயா 14:12-14).
4. அன்பினால் ஒழுங்கு முறைப்படுத்துதல் பயிற்சிக்கப்பட்டால் தனிப்பட்டவர்களுக்கும், அங்கத்தினர்களுக்கும் பாதுகாப்பின் உணர்வை கொடுத்து நரகத்திற்கு பின்மாறிப் போவதிலிருந்து இரட்சிக்கிறது. மோசமான பிரச்சனைகளை தடைபண்ணுகிறது.
5. ஒழுங்கு முறைப்படுத்துதல் தேவனுடைய வார்த்தையின் அறநெறி நிலைப்பாட்டை நிலைநிறுத்த தேவைப்படுகிறது. தேவனுடைய பரிசுத்தத்தை சபையில் பராமரிக்கிறது.
6. ஒழுங்கு முறைப்படுத்துதல் முதிர்ச்சியடையாதவர்களை வழிநடத்துகிறது. பெலவீனரை தாங்குகிறது. தேவனுக்குள் முதிர்ச்சி பெற ஜனங்களை எச்சரிக்கிறது.

ஒழுங்கு முறைப்படுத்துதலின் இரண்டு வித நோக்கங்கள்

வேதத்தில் காண்பதுபோல ஒழுங்கு முறைப்படுத்துதலில் இரண்டு முக்கிய காரியங்கள் இருக்கிறது. அவைகள் பின்வருமாறு:

1. உயிர்பிக்கப்படுதலுக்காக ஒழுங்குமுறைப்படுத்துதல் (கலாத்தியர் 6:1; வெளிப்படுத்துதல் 3:19; எபிரெயர் 12:5-11).
   சரிசெய்தல் மனந்திரும்புதலை கொண்டு வந்து உயிர்பிக்கிறது. இது தவறு செய்த நபரை வெறுப்பதல்ல. உயிர்பிக்கும் நோக்கில் அந்த நபரை ஏற்றுக் கொள்ளுதல். உயிர்ப்பிக்கப்பட்ட நபரை ஏற்றுக் கொள்ளாவிட்டால் ஒருவர் உயிர்ப்பிக்கப்பட முடியாது. எதையும் எதிர்பார்க்காத அன்பு, முற்றிலுமாக அந்த நபரை ஏற்றுக்கொள்ளுதல் அவசியம். ஆனால் அவருடைய தீமையான நடக்கையல்ல.
   உயிர்பிக்கப்படுதல் கலாத்தியர் 6:1ல் குறிப்பிட்ட நிலையில் வைத்தல், விலகிய எலும்பை பழுது பார்த்தல், முழுவதுமாக உட்புறமாக பழுது பார்த்தல் என்பதை குறிப்பது தகுதியாக இருக்கும். இது காயம் ஆற்றப்படல். கொரிந்திய சபையின் பிரச்சனையிலும், சபையை விட்டு வெளியேற்றுதல், மனந்திரும்புதலுக்கும், உயிர்பித்தலுக்கும் நேராக வழி நடத்துகிறது (2கொரிந்தியர் 2:6-8; யாக்கோபு 5:19,20; 1யோவான் 5:16; நீதிமொழிகள் 10:12; சங்கீதம் 51:12; ஏரேமியா 3:22; 20:16,17; ஓசியா 14:4; மீகா 7:18,19). தேவனுடைய விருப்பம் ஒரு ஆத்துமாவை மரணத்திலிருந்து இரட்சித்து வாழ்க்கையை கொடுப்பது, இது ஆவிக்குரிய ஒழுங்குபடுத்துதலின் நோக்கமாகும்.

2. நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாக ஒழுங்குபடுத்தல் (1கொரிந்தியர் 11:29-32; 2கொரிந்தியர் 2:6-8,11). கொரிந்திய சபையின் பிரச்சனை இங்கே பார்வையின் நோக்கமாகும். அவன் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டான். ஆனால் மனந்திரும்புதல் மூலமாய் உயிர்பிக்கப்படுதல் என்ற பார்வையில் மாத்திரம்.

தேவன் நியாயந்தீர்ப்பார், தண்டனை கொடுப்பார், கடுமையாக தண்டிப்பார், மீண்டும் உயிர்க்கப்பட்டு தம்முடனும், விசுவாசிகளுடனும் ஐக்கியம் கொள்வதற்காக ஒரு மனிதன் கல்வாரியிலே பாவத்திற்கான தேவ நியாயத்தீர்ப்பை ஏற்றுக் கொள்ள மறுத்தால் பிறகு தேவன் நித்திய நியாயத்தீர்ப்பினால் நியாயந்தீர்ப்பார் (யோவான் 5:24-29; 3:36; 1பேதுரு 4:17; 1கொரிந்தியர் 5:1-5, 12,13; 6:1-11; ஏசாயா 4:4).

ஒழுங்கு முறைப்படுத்துதலின் மாதிரிகள்

A. பழைய ஏற்பாட்டு ஒழுங்கு முறைப்படுத்துதல்

பழைய ஏற்பாட்டு காலத்திலே தெய்வீக ஒழுங்குப் படுத்துதலின் கீழ் பல மாதிரிகள் உண்டு. அதில் அநேகவற்றை இங்கே பட்டியலிடுகிறோம்.

a. ஆதாமும், ஏவாளும் தெய்வீக ஒழுங்குப் படுத்துதலைப் பெற்று பாவத்திற்காக நியாயத்தீர்க்கப் பட்டார்கள் (ஆதியாகமம் 3).
   அவர்கள் ஏதேனிலிருந்து தூரத்தப்பட்டார்கள், பாவத்திற்காக மரணம் என்னும் தண்டனையின் கீழ் வைக்கப்பட்டார்கள். 'பாவத்தின் சம்பளம் மரணம்' (ரோமர் 6:23).
b. ஆபிரகாம் அவனுடைய "சூழ்நிலை அறநெறிக்காக" பார்வோனினால் மீண்டும் கண்டிக்கப்பட்டான் (ஆதியாகமம் 20).
c. கொலை பாதகத்திற்காகவும், ஆட்டுக் குட்டியை ஏற்றுக் கொள்ளாததினால் காயீன் தேவனால் நியாயந்தீர்க்கப்பட்டான். (ஆதியாகமம் 4).
d. ஆரோன் பொன் கன்றுக்குட்டி விக்கிரக ஆராதனை பாவத்திற்காக கடிந்து கொள்ளப்பட்டான் (யாத்திராகமம் 32:20,21).
e. மீரியாம் தலைமைத்துவத்தை விமர்சித்த பாவத்திற்காக குஷ்டரோகத்தினால் தீடிரென பிடிக்கப்பட்டாள் (எண்ணாகமம் 12). ஏழுநாட்களுக்குப் பின்பு உயிர்பிக்கப்பட்டாள்.
f. கோராகு, தாத்தான், அபிராம் தேவனுக்கு விரோதமாய் அவருடைய தலைமைத்துவத்திற்கு விரோதமாக கலகம் பண்ணினபடியால் மரணத்தினால் நியாயந் தீர்க்கப் பட்டார்கள் (எண்ணாகமம் 16).

g. இச்சையின் பாவத்திற்காக ஆகானும், அவனுடைய குடும்பமும் மரணத்தினால் நியாயந்தீர்க்கப் பட்டார்கள் (யோசுவா 7).
h. சவுல் அவனுடைய பாவத்திற்காக யாவர் முன்னிலையிலும் கடிந்துக் கொள்ளப்பட்டு நியாயந்தீர்க்கப் பட்டான் (1சாமுவேல் 13:13; 15:14).
i. அடங்காத கீழ்படியாத மகன் மூப்பர்களால் கல்லெறிந்து கொல்லப்பட்டான் (2நாளாகமம் 26).
j. ஓப்னி, பினெகாஸ்-ம் அவர்களுடைய ஒழுங்கினத்திற்காக, அகந்தைக்காக மரணத்தினால் நியாயந்தீர்க்கப் பட்டார்கள்(1சாமுவேல் 2:25).
k. ஆகாப் இராஜா அவனுடைய தீமையான நடத்தைகளுக்காக எலியா தீர்க்க தரிசியினால் கடிந்து கொள்ளப்பட்டான் (1இராஜாக்கள் 18:18).
l. உசியா இராஜா பெருமை மற்றும் அகந்தைக்காக குஷ்டரோகத்தினால் உடனே பிடிக்கப்பட்டு மரணமடைந்தான் (2நாளாகமம் 26).
m. எஸ்றா அந்நிய மனைவிகளை உடையவர்களை கண்டித்தான் (எஸ்றா 10:18-23).
n. நெகேமியா, ஒய்வு நாளை மீறியதற்காகவும், தேவனுடைய வீட்டை கைவிட்டபடியினாலும் ஆட்சியாளர்களுடனும், உயர் குடும்பத்தை சேர்ந்தவர்களுடனும் வாதிட்டான் (நெகேமியா 13:11,17).
o. தானியேல் இராஜாவைக் கடிந்துக் கொண்டான் அவனுடைய பெருமை மற்றும் அகந்தைக்காக (தானியேல் 5:22,23).
p. நோவாவின் நாட்கள் நியாயந்தீர்ப்பின் நாட்கள் (ஆதியாகமம் 6-8; லூக்கா 17:26,27).
q. சோதோம் கொமோராவின் நாட்கள் நியாயந்தீர்ப்பின் நாட்கள் (ஆதியாகமம் 18, 19; யூதா 7; மத்தேயு 11:20-24). லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்.
r. எகிப்து தேசம் தேவனால் நியாயந் தீர்க்கப்பட்டது (ஆதியாகமம் 15:14; யாத்திராகமம் 5-14).
s. பாபேல் கோபுரம் தெய்வீக நியாயந் தீர்ப்பு அடைந்தது (ஆதியாகமம் 10,11).
t. இஸ்ரவேல் தேசமும், யூதா தேசமும் அவர்கள் தேவனுடைய ஜனங்களாக இருந்தபோதிலும் நியாயந் தீர்க்கப்பட்டார்கள் (யாத்திராகமம் 31-33; உபாகமம் 27-28).

இஸ்ரவேலில் சில தெய்வீக ஒழுங்கு முறைப்படுத்துதலில் வெளியேற்றுதல் மற்றும் சில சமயங்களில் தண்டனையும் அடங்கி இருந்தது. இவைகள் எல்லாம் நமக்கும் வரப்போகிற காலத்தில் உள்ளவர்களுக்கும் மாதிரிகளும் எடுத்துக் காட்டுகளுமாய் உள்ளது (1கொரிந்தியர் 10:6,11).

வெளியேற்றுதல்

பழைய ஏற்பாட்டு எடுத்துக் காட்டுகளைப் பின்பற்றி ஒருநபர் இஸ்ரவேலரின் முகாமில் இருந்து வெளியேற்றப்பட்டதற்காக தெய்வீக காரணத்தை நாம் பார்க்கலாம். பொதுவாக குறிப்பிடுகிற படி "ஜனத்தில் இல்லாதபடி அறுப்புண்டு போவான". இந்த காரணங்களில் சில:

☹ விருத்த சேதனம் என்னும் முத்திரையின் உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ள தவறிய போது (ஆதியாகமம் 17:4).
☹ புளிப்பில்லாத அப்பப் பண்டிகையின் நாள்களில் புளித்த அப்பத்தை சாப்பிடுதல் (யாத்திராகமம் 12:15).
☹ அபிஷேக தைலம் அல்லது தூபவர்க்கம் போலியாக தயார் செய்கிறவன் (யாத்திராகமம் 30:33,37).
☹ இரத்தம் சாப்பிடுகிறவன் (லேவியராகமம் 7:27).
☹ சர்வாங்க தகனபலியை ஆசாரிப்புக் கூடார வாசலுக்கு வெளியே செலுத்துகிறவன் (லேவியராகமம் 17:8,9).
☹ சமாதான பலி படைக்கப்பட்ட மூன்றாவது நாளிலே அதைப் புசிக்கிறவன் (லேவியராகமம் 19:7).
☹ சூதக ஸ்தீரியோடு சயனிக்கிறவன் (லேவியராகமம் 20:18).
☹ தீட்டுப்பட்டு இருக்கையில் பரிசுத்தமானவைகள் அண்டையில் வருகிறவன் (லேவியராகமம் 22:3).
☹ பஸ்காவை ஆசரிக்காதவன் (எண்ணாகமம் 9:13).

- ☹ குஷ்டரோகிகள் பிரமியம் உள்ளவர்கள், சவத்தினால் தீட்டுப்பட்டவர்கள் (எண்ணாகமம் 5:2-4).
- ☹ கர்த்தருடைய வார்த்தையை அசட்டைப் பண்ணி அவருடைய கற்பனையை மீறியவன், துணிகரமாய் யாதொன்றையும் செய்கிறவன் (எண்ணாகமம் 15:31).
- ☹ செத்தவனுடைய பிரேதத்தை தொட்டும் தன்னை சுத்திகரித்து கொள்ளாதவன் (எண்ணாகமம் 19:13).

மரண தண்டனை

தேவனுடைய பிரமாணத்தை கடுமையாக மீறுபவர்கள் சில முக்கிய காரணங்களினால் அவர்கள் இரண்டு, மூன்று சாட்சிகளின் கீழ் மரண தண்டனையினால் தண்டிக்கப்பட்டார்கள். அவற்றில் சில இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

- ☠ விக்கிரக ஆராதனை (உபாகமம் 17:2-6).
- ☠ குறிப்பிட்ட காரியங்களில் ஆசாரிய நியாயத்தீர்ப்புக்கு விரோதமாய் கலகம் பண்ணி அவமதிக்கிறவன் (உபாகமம் 17:8-13).
- ☠ பொய்ச்சாட்சி சொல்லுகிறவன் (உபாகமம் 19:18).
- ☠ அடங்கா துஷ்டபிள்ளை (உபாகமம் 21:18).
- ☠ பெண்ணின் கன்னிமை காணப்படவில்லையென்ற சங்கதி கணவனால் மெய்பிக்கப்பட்டால் (உபாகமம் 22:13-21).
- ☠ விபச்சாரம் (உபாகமம் 22:22).
- ☠ ஒருவனுக்கு நியமிக்கப்பட்ட கன்னியோடு சயனித்தவன் (உபாகமம் 22:23-24).
- ☠ ஆணோடு சம்யோகம் பண்ணுகிறவன் (லேவியராகமம் 18:22; 20:13), மிருகத்தோடு புணருகிறவன் (லேவியராகமம் 18:23-30; 20:15,16)

B. புதிய ஏற்பாட்டு ஒழுங்கு முறைப்படுத்துதல்

புதிய ஏற்பாடு பல்வேறு ஒழுங்குகளைக் காட்டுகிறது. அவைகள் எல்லாம் சபையில் ஒழுங்குமுறைப் படுத்துதலிலன் கீழ் வருகிறது. தலைமைத்துவம் அந்த தவறுகளை சரிசெய்யும் விதத்தில் சமாளிக்காவிட்டால் அது முழு சபையாரையும் மாசுபடுத்திவிடும். கொரிந்து சபை இந்த உணமையை உதாரணம் காட்டி விளக்குகிறது. சபையிலே ஒழுங்கு முறைப்படுத்த அவசியமான அநேக காரியங்களை நாங்கள் குறித்துள்ளோம்.

பாவம் நியாயந்தீர்க்கப்படாமல் விட்டுவிடப் படுமானால் ஒரு சபையும் செழிக்காது. தேவன் தமது ஆசிர்வாதங்களை எடுத்துக் கொள்வார் (வெளிப்படுத்துதல் 1,2,3).

பாவம் என்பது தொற்று வியாதி, சரீரத்தின் ஆவிக்குரிய ஆரோக்கியத்தை பெற்றுக் கொள். ஒரு நபரிலுள்ள பாவம் என்பது புளித்தமா போன்றது (1கொரிந்தியர் 5:6,7). பாவம் முழு சரீரத்தையும் பாதிக்கும் (யோசுவா7 –ஆகான்; 1கொரிந்தியர் 5 – வேசித்தனக்காரன்; வெளிப்படுத்தல் 2:14-16, 20-23; விக்கிரக ஆராதனை, ஒழுங்கின்மை, துர்உபதேசம்).

எந்தக் குற்றங்களுக்கு சபையின் ஒழுங்கு முறைப்படுத்துதல் தேவைப்படுகிறது?

A. உபதேச குற்றம்

- ❖ பவுல் உயிர்த்தெழுதலின் உபதேசத்தைக் குறித்து இம்னேயுடனும், அலெக்சாந்தருடனும் இடைபட்டான் (1தீமோத்தேயு 1:20; 2தீமோத்தேயு 2:17-26). மேலும் இம்னேயுடனும், பிலேத்துடனும்.
- ☠ தேவபக்திக்கு ஏதுவாய் இராத உபதேசங்கள் (1தீமோத்தேயு 6:3-5).
- ☠ விக்கிரக ஆராதனையும், வேசித்தன உபதேசங்களும் (வெளிப்படுத்தல் 2:12-17).
- ☠ பிரிவினைகளையும், இடறுதல்களையும் உண்டாக்குகிற உபதேசங்கள். அப்போஸ்தல உபதேசத்திற்கு எதிரானவைகள் (ரோமர் 16:17,18).
- ☠ சாத்தானின் உபதேசங்கள், துர்உபதேசங்கள் (1தீமோத்தேயு 4:1-3; தீத்து 3:9,11; 1யோவான் 4:1; மத்தேயு 7:15; கலாத்தியர் 1:7-10; 2பேதுரு 2:1-4; யூதா 4)

- அவைகள் எல்லாம் தவிர்க்க வேண்டும் (1தீமோத்தேயு 2:16), விலகி இருக்க வேண்டும் (1தீமோத்தேயு 2:23), விவாதிப்பதை தவிர்க்க வேண்டும் (1தீமோத்தேயு 2:25), விட்டுவிலகு (1தீமோத்தேயு 6:3-5), சாத்தானுக்கு ஒப்புக்கொடு (1தீமோத்தேயு 1:20), வீட்டில் ஏற்றுக் கொள்ளாமலிருத்தல், வாழ்த்தாமல் இருங்கள் (2 யோவான் 10), வேற்றுமையின் உபதேசங்களை மற்றவர்களுக்கு போதிக்காத படி கட்டளை (1தீமோத்தேயு 1:7).

- அவைகள் எல்லாம் கண்டனம் பண்ணி, கடிந்துக் கொண்டு புத்தி சொல்ல வேண்டும். ஆரோக்கியமான உபதேசத்தில் தொடர்ந்து இருப்பதற்கு (2தீமோத்தேயு 4:1,2; தீத்து 1:1; 2பேதுரு 1:3).

- மேலும் வாசியுங்கள் (மத்தேயு 5:9; யோவான் 15:9; மத்தேயு 24:11-13; ரோமர் 16:17,18; தீத்து 3:10; கலாத்தியர் 1:7-9).

- கள்ள உபதேசம் ஜனங்கள் விசுவாசத்தை விட்டு விடவும், கப்பல் சேதமடையவும் காரணமாகி விடும் (1தீமோத்தேயு 1:19). சபை ஒழுங்கு முறைப்படுத்துதலில் தேவனுடைய பாதுகாப்பு என்பது இவைகளை விட்டு விலகி அவர்களுடைய துர்உபதேசங்களைப் பெற்றவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக் கொடுப்பது தான்.

B. நடக்கை குற்றம்

கிறிஸ்துவின் சரீரமாகிய அங்கத்தினருக்கு எதிராக செய்யப்படும் குற்றங்கள் இடைப்பட்டு சரிசெய்யப்பட வேண்டும். அங்கத்தினர்கள் ஒருவருக்காக மற்றவர்கள், ஒருவரும் தனக்காக வாழக்கூடாது (மத்தேயு 25:40; 1கொரிந்தியர் 8:2; மத்தேயு 10:40; 18:5; லூக்கா 10:16; அப்போஸ்தலர் 9:4).
இது சகோதரனுடைய அல்லது சகோதரி உடைய நிலையான வாழ்க்கை முறையில் செய்யப்படவேண்டும். ஒரு தவறிலோ, சம்பவத்திலோ மாத்திரமல்ல. இது தேவனுடைய குடும்பத்தில் உள்ள சகோதர, சகோதரிகளோடு உள்ள இடைபாடு - வெளியே உள்ளவர்களோடு அல்ல. தேவன் அவர்களை நியாயந்தீர்ப்பார் - சபையிலே அல்ல (1கொரிந்தியர் 5:12,13).

- **வேசித்தனக்காரன்** - 1கொரிந்தியர் 5:1
  பொதுவாக பேசும்போது இது திருமணமாகதவர்களுக்கிடையே நடக்கும் ஒழுங்கீனம். மத்தேயு 19:5; 5:32ல் இங்கே விபச்சாரத்தையும் சேர்த்துக் கொள்கிறது (திருமணமானவர்களுக்கு இடையே நடக்கும் ஒழுக்கக்கேடு). இது ஒழுக்க பரிசுத்த இன்மையோடு இடைபடுகிறது. முழுமையிலே, ஒருபால் புணர்ச்சிக்காரனையும், புணர்ச்சிக்காரியையும் சேர்த்துக் கொள்ளலாம் (ஆணோடு ஆண் புணருதல், பெண்ணோடு பெண் புணருதல், ஒழுக்க திரிபுகள்). 1கொரிந்தியர் 5:1-5ல் தகாத புணர்ச்சி உள்ளடங்கி இருக்கிறது. ஒரு மனிதன் தன்னுடைய சொந்த தாயுடன் (தகப்பனின் இரண்டாவது மனைவி).
  விரிவான விதத்திலே, எல்லா விதமான தகாத பால் உறவுகளை உள்ளடக்கி உள்ளது. இதில் சபையிலே சரி செய்யப்படாவிட்டால் புளித்தமாவோடு செயல்படும் ஒழுங்கீனமான நபரோடு புசிக்கவோ கலந்திருக்கவோ வேண்டாம். ஒழுங்கீனமான நபர்கள் சபையின் குடையின் கீழே ஒழிந்துக் கொள்வார்கள். தேவ சபையில் இருந்து வெளிற்றேப்படும் பொழுது ஆண்டவர் அவனோடு இடைபடுவார்.

- **பேராசை** - 1கொரிந்தியர் 5:11
  அசாதாரணமான அளவுக்கு மீறிய ஆவல், சட்ட விரோதமான இச்சை
  அனனியா சப்பிராள் (அப்போஸ்தலர் 5:1-11)
  கேயாசி (2இராஜாக்கள் 5:20-27). பேராசை ஆதாரத்துடன்
  மாயவித்தைக்காரனான சீமோன் (அப்போஸ்தலர் 8:18-23)
  பிலேயாம் முன்னறிவிக்கும் தீர்க்கதரிசி (எண்ணாகமம் 22; யூதா 11).

பேராசை அநேக காரியங்களை உள்ளடக்கியதாய் இருக்கிறது. ஆனால் ஆதாரப்பூர்வமாக பண ஆசையைக் குறிக்கிறது (1பேதுரு 5:2). பல தரப்பட்ட சம்பவங்களில் பேராசை விக்கிரக ஆராதனையாகும் (எபேசியர் 5:3).
மேலும் வாசியுங்கள் பிலிப்பியர் 3:15-19; லூக்கா 12:15,34; யோவான் 6:26; ரோமர் 1:29; 13:9; கொலேசெயர் 3:2-6; 1தெசலோனிக்கேயர் 2:5; 1தீமோத்தேயு 3:3; 6:5-17; 2தீமோத்தேயு 3:2; எபிரெயர் 13:5; யாக்கோபு 4:2; 2பேதுரு 2:3; 1யோவான் 2:15.
யூதாஸ்காரியோத்தை நினைத்துக் கொள்ளுங்கள்

- **விக்கிரக ஆராதனைக்காரன்** 1கொரிந்தியர் 5:11
  ஒரு நபரையோ, பொருளையோ அளவுக்கு அதிகமாய் நேசித்தல். விசுவாசிக்கும், ஆண்டவருக்கும் இடையில் எதுவும் வருமானால் அதுதான் விக்கிரக ஆராதனை:

  1. **எழுத்துப்பூர்வமான விக்கிரகம்** - 1கொரிந்தியர் 6:9; 10:14,20; வெளிப்படுத்தல் 21:8. படங்கள், சிலை, பரிசுத்தவான்களை தொழுதல், மற்றும் பல. உலக, பௌதீக, ஆவிக்குரிய பொருள்கள் மற்றும் சுயநலம் எல்லாம் விக்கிரக ஆராதனைக்கு சமம். தேவனுக்கு முன்பாக அல்லது பக்கத்திலோ எந்த தேவர்களையும் உடையவர்களாக இருக்கக் கூடாது.

  2. **ஆவிக்குரிய விக்கிரகம்** - எபேசியர் 5:5; கொலோசெயர் 3:5. பேராசை என்பது விக்கிரக ஆராதனை. ரோமர் 1:23. விசுவாசிக்கும் தேவனுக்கும் இடையிலே எது வந்தாலும் அது விக்கிரகம்.

- **பிரிவினைக்காரன்** 1கொரிந்தியர் 5:11; 1பேதுரு 3:9; நீதிமொழிகள் 26:4.
  "வாய் சண்டைக்காரன், தீமையை பேசுகிறவன், சிக்கலுக்குரியவர், அதிகமாக வாக்குவாதம் செய்கிறவர்". அவர் கெட்ட வார்த்தைகளைப் பேசுகிறவர், ஏளனம் பேசுகிறவர், எல்லாவற்றிற்கும் எதிரானவர், தீமையை பேசுகிறவர், தலைவர்களை சகோதரை துஷிக்கிறவர். யாருடனும் சேர்ந்து போக முடியாத நபர்.
  1தீமோத்தேயு 6:4; கொலோசெயர் 3:8; எபேசியர் 4:31. தீமையை பேசுதல் கண்டிக்கப்பட்டுள்ளது. சிலர் மதிப்புமிக்கவர்களை தீமையாகப் பேசுவதற்கு பயப்படுவதில்லை (2பேதுரு 2:10). யோவான், திரோதிரிபுடனும் அவனுடைய செருக்கோடும் இடைபட வேண்டியதாய் இருந்தது (2யோவான் 9,10).

- **குடிகாரன்** - 1கொரிந்தியர் 5:11.
  பழக்க தோசத்திலே குடிப்பவர், நிலையாக அதன் செயல்பாட்டின் கீழே இருப்பவர். மொடாகுடியன். பழக்கமாக மது அருந்துதல், ஒழுக்க பெலவீனமாய் இருக்கிறது.
  கலாத்தியர் 5:19. குடிப்பது மாம்சத்தின் செயலாய் இருக்கிறது.
  எபேசியர் 5:18. மதுபான வெறிகொள்ளாமல்.
  மேலும் வாசியுங்கள் ரோமர் 13:13; 1தெசலோனிக்கேயர் 5:7; நீதிமொழிகள் 20:1; 23:20,21,29,35; ஏசாயா 5:11; உபாகமம் 21:20,21.

- **பலவந்தப்படுத்தி பணம்பறிப்பவர்** - 1கொரிந்தியர் 5:11.
  "ஒரு நபரை ஒடுக்கியோ, தவறாக பயன்படுத்தியோ, அதிகாரத்தினால் தவறாக உபயோகப்படுத்தியோ அடைவது". இதன் ஆழமான விருப்பம் இலாபகரமாய் இருப்பது, அவர்களிடத்தில் இருந்து பரித்து கொள்ளும் விதத்தில் பேசுகிறவர் மற்றும் பலவந்தமாய் எடுத்துக் கொள்கிறவர் அல்லது பயமுறுத்தலினால், கட்டாயப்படுத்தி, ஏமாற்றி, அதிகாரத்தை தவறாக உபயோகித்து பணத்தை (அல்லது அவர் விரும்புகிற காரியத்தை) பெற்றுக் கொள்கிறவர். இது பேராசைக்கு ஒத்தது.

  இது ஒருவருடைய அலுவலக பதவியைப் பயன்படுத்தி பணத்தைப் பெற்றுக் கொள்ளுதல் அல்லது மதிப்புமிக்க காரியங்களை சட்டவிரோதமாக பெற்றுக் கொள்ளுதல் என்னும் குற்றமாகும் (அதாவது தவறான விதத்தில் காசோலையை எழுதுதல், மற்றும் பல).

  பணத்தை பலவந்தப்படுத்தி பறிப்பவன் ஒரு திருடன் (1கொரிந்தியர் 6:10. மேலும் வாசியுங்கள் சங்கீதம் 109:11; ஏசாயா 16:4; எசேக்கியேல் 22:12; மீகா 3:2,3; மத்தேயு 23:25; லூக்கா 18:11.

➢ **ஒழுங்கின்மையான நடக்கை** – 2தெசலோனிக்கேயர் 3:6-15.
"ஒழுங்கை கடைபிடிக்காதவர்". ராணுவ குழு கிரமமாய் காலடிகள் போட்டுக் கொண்டு நடந்துச் செல்கையில் ஒருவர் நடை விலகுதல். வேண்டுமென்றே மேல் அதிகாரியின் அதிகாரத்தை எதிர்க்கிறவர். நடக்கையிலே வீண் பிடிவாதம் பிடிக்கிறவர்; வழக்கமான வேலையின் தத்துவத்தை மீறுகிறவர் மற்றும் அதை ஆதரிக்கிறவர். சம்பந்தம் இல்லாமல் பிறர் வேலையில் அநாவசியமாக அக்கரைக் கொள்பவர்! இந்த நபரை விட்டு விலக வேண்டும் (2தெசலோனிக்கேயர் 3:6,14), ஆனால் சத்துருவாக நடத்தக் கூடாது. ஒழுங்குமுறைப் படுத்துதலின் கீழ் இருக்கும் சகோதரனாக நடத்த வேண்டும் (2தெசலோனிக்கேயர் 3:5). மத்தேயு 18:17ல் சொல்லப்பட்டது போல இது சபையை விட்டு வெளியேற்றும் சம்பவமல்ல.

இந்த கட்டுக்கு அடங்காத நபர் அமைதியாய் இருந்து வேலைசெய்து சொந்த சாப்பாட்டை சாப்பிட வேண்டும் (1தெசலோனிக்கேயர் 5:11,12,14; 2தெசலோனிக்கேயர் 3:11). வேலை செய்யவில்லை என்றால் அன்றாட ரேசன் இல்லை = சாப்பாடு இல்லை.

ஒழுக்கீனம் = சுறுசுறுப்பில்லாத தன்மை, சோம்பேறித்தனம், பரபரப்பு இல்லாதவன், மற்றவர் வேலையில் தலையிடுகிறவன். இதில் பொறுப்பின்மை அடங்கி இருக்கிறது (லூக்கா 16:11; 1தீமோத்தேயு 5:8,13; 2தெசலோனிக்கேயர் 3:7-9; நீதிமொழிகள் 6:6-11; 18:9; 19:15; மத்தேயு 25:26; ரோமர் 12:11).

அவர் வேலை செய்வதற்கு உற்சாகப்படுத்தப் படவேண்டும். சபையிலுள்ள பரிசுத்தவான்களின் விருந்தோம்பலில் சுயநலத்திற்காக அவரை அண்டிபிழைப்பவராக மாறிவிடக் கூடாது. அவர் தன் சொந்த தேவையையும், சந்தித்து பிறருக்கும் உதவக்கூடிய நிலைமையில் வரவேண்டும்.

➢ **பிரிவினை உண்டாக்குகிறவர்** ரோமர் 16:16-18.
ஆரோக்கியமான உபதேசத்திற்கு விரோதமாக பிரிவினையை கொண்டு வருகிறவர் ஒழுங்குமுறைப் படுத்தப்படவேண்டும். இப்படிப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டு தவிர்க்கப் படவேண்டும். வேண்டுமென்றே இருந்து விடுபடுதல். தலைமைத்துவம் கூட சீஷர்களை தன்பக்கமாய் இழுத்துக் கொண்டு சபையைப் பிரிப்பார்கள் (அப்போஸ்தலர்கள் 20:28-32).

விசேஷமாக வேதத்தின் இரட்சிப்பின் திட்டத்தின் உண்மைகளுக்கு விரோதமான உபதேசங்களை தவிர்த்து விடவேண்டும்.

➢ **ஒரு பிரிவை ஆதரிப்பவர்** 1கொரிந்தியர் 3:1; எபேசியர் 5:12; 2கொரிந்தியர் 7:11,12.
பிரிவினை மாம்சத்தின் அடையாளம். இதற்கு ஒழுங்குமுறைப் படுத்துதல் அவசியம். பவுலின் நிருபங்கள் இப்படிப்பட்ட காரியங்களை சரிசெய்யவும், ஒழுங்குமுறைப் படுத்தும் விதத்தில் இடைபடுகிறது.

➢ **மன்னிக்க முடியாத தன்மை** மத்தேயு 5:25; 18:15-35; லூக்கா 12:58.
இந்த நபர் மன்னிக்க தவறியதினால் தெய்வீக ஒழுங்குமுறைப்படுத்துதலை தன்மேல் கொண்டு வருகிறார்.

➢ **சரீரத்தை நிதானித்து அறியாதவன்** 1கொரிந்தியர் 11:23-32.
இது முந்திய குறிப்புடன் சேர்ந்து விவாதிக்கப் படுகிறது. ஆனால், பலவீனம், வியாதி, மரணம் எல்லாம் தெய்வீக ஒழுங்குமுறைப் படுத்துதலாகும். "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நீயாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு சிட்சிக்கப் படுகிறோம்".

- இந்த மாயவித்தைக்காரன் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை எதிர்த்த படியினால் நியாயந்தீர்க்கப்பட்டான் (அப்போஸ்தலர் 13:6-12).

- தன்னுடைய சகோதரனுடன் ஒப்புரவாக மறுக்கிறவன், சாட்சிகளுக்கு, முழுசபைக்கும் செவிகொடமற் போகிறவன் வெளியேற்றப்பட வேண்டும் (மத்தேயு 18:15-20; 5:21-26).

- பரிசுத்த ஆவியிடம் பொய் சொல்லுகிறவன் தெய்வீக நியாயத்தீர்ப்பை கொண்டு வருகிறான் (அப்போஸ்தலர் 5:1:11).

இந்த காரியங்கள் இடைபடாவிட்டால் புளித்தமா அல்லது குஷ்டரோகம் போல் முழு சரீரத்திலும் பரவி விடும். சபை தேவனுடைய வீடாகும், அவருடைய ஜனங்களுக்கு அவருடைய பாதுகாப்பு போன்றது. அவருடன் பாதுகாப்பின் கீழ், சில சமயங்களில் ஒழுங்குமுறைப் படுத்துதலுக்கு தப்பித்து விடுகிறார்கள். தேவன் அவர்களுடன் இடைபட சிலவற்றை அவர்களிடம் செய்கிறார் (1சாமுவேல் 2:25).

அறியாமையின் பாவங்கள் வனாந்திரத்தில் சபையில் சரிசெய்யப்பட்டது (லேவியராகமம் 4; எண்ணாகமம் 15:24-31), அகந்தையின் பாவங்கள், நபரிலிருக்கிற குஷ்டரோகம், ஆடை அல்லது வீடு சுத்திகரிக்கப் படவேண்டும். (லேவியராகமம் 13,14).

யார் ஒழுங்குமுறைப் படுத்துதலை நிர்ணயம் செய்வது?

யார் யாரெல்லாம் ஒழுங்குமுறைப்படுத்துதலை நிர்வகிப்பது, விசேஷமாக ஸ்தல சபையில் காரியம் வரும்போது

1. **தெய்வீக ஒழுங்குமுறைப் படுத்துதல்**
   சில நேரங்களில் தேவன் தம்முடைய சர்வ வல்லமையில் ஒழுங்குமுறைப் படுத்துதலை நிர்வகிக்கிறார். தன் சொந்த ஜனங்களை சிட்சிக்கிறார் (எபிரெயர் 12:5; நீதிமொழிகள் 3:11,12; 1கொரிந்தியர் 11:29-32; யாக்கோபு 5:14,15; 1யோவான் 5:16,17). சில நேரங்களில் மரணத்திற்கு (சரீர) ஏதுவான பாவம்.

2. **ஆவிக்குரிய அங்கத்தினர்கள்** (கலாத்தியர் 6:1)
   "ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்." மாம்ச பிரகாரமாய் பிரச்சனைகளை கையாழுதல் காரியங்களை மோசமாக்கும் (1கொரிந்தியர் 6:4). ஆவிக்குரிய முதிர்ச்சியடைந்தவர்கள் மாத்திரம் ஒழுங்குமுறைப் படுத்த வேண்டும். அது மூப்பர் குழுவினால் செய்யப்படவேண்டும். பொதுவாக, பெற்றோர்கள் குழந்தைகளை ஒழுங்குமுறைப் படுத்துகிறார்கள். பிள்ளைகள் பெற்றோர்களையல்ல. ஆகவே சபையிலுள்ள ஆவிக்குரிய பெற்றோர்கள் இதேக் காரியத்தை செய்யவேண்டும். பவுல் ஆண்டவருக்குள் தகப்பனைப் போன்றவன். கொரிந்தியரைப் பார்த்து கேட்கிறான், சரிசெய்தலில் பிரம்போடு வர வேண்டுமா அல்லது அன்போடும், சாந்தமுள்ள ஆவியோடும் வரவேண்டுமா? (1கொரிந்தியர் 4:15-21).

3. **முழு சபையும்**
   சில வேளைகளில் ஒரு நபரை ஒழுங்குப் படுத்துவதில் முழுசபையும் இணைக்கப்பட்டுள்ளது. இது மத்தேயு 18:15-20 வரை படிப்பதின் மூலம் உறுதிப்படுத்தப் படுகிறது.

   "...அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவி கொடாதிருப்பானானால் ..." "நீங்களும், என்னுடைய ஆவியும் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தோடே கூடிவந்திருக்கையில், அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புச் செய்கிறேன்." (1கொரிந்தியர் 5:4,5).

   "அப்படிப்பட்டவனுக்கு அநேகரால் உண்டான இந்த தண்டனையே போதும்." (2கொரிந்தியர் 2:6).

   அதாவது, அந்த மனிதன் ஐக்கியத்திலிருந்து விலக வேண்டும் அல்லது வெளியேற்றப்படவேண்டும். இது முழு சபையால் செய்யப்படவேண்டும். மனந்திரும்பி உயிர்பிக்கப்பட்டு வந்தால் மாத்திரமே அவர்களோடு தொடர்பு கொள்ளவேண்டும் இல்லாவிட்டால் ஒருபோதும் அவனோடு சாப்பிடக்கூடாது.

ஒழுங்குமுறைப் படுத்துதலில் நியாயத்தீர்ப்பின் தத்துவங்கள்

சபை ஒழுங்குமுறைப் படுத்துதலின் எந்த ஒருக் காரியத்திலும் குறிப்பிட்ட தத்துவங்களை சான்றாக இருக்கவேண்டும். ஒழுங்குமுறைப் படுத்துதலின் முழு நோக்கமே சீர்பொருந்தப்பண்ணுதலாகும் என்பது நினைவு கூறப்படவேண்டும்.

ஒழுங்குமுறைப் படுத்தல் நிர்வகிக்கப்படவேண்டும்:

1. வேத வசனத்தினால் மற்றும் அதன் அடிப்படையில் (யோவான் 12:47,48: 2கொரிந்தியர் 11:3; வெளிப்படுத்துதல் 2:2; மத்தேயு 24:11; 2பேதுரு 2:1).
2. தேவனுடைய இரக்கத்தினால் சமநிலைப் படுத்தப்படவேண்டும் (யாக்கோபு 2:12,13; லூக்கா 17:2-4; லேவியராகமம் 19:17).
3. சத்தியத்திலும், நீதியிலும் இருக்க வேண்டும் (சகாரியா 7:9,10; எசேக்கியேல் 44;17-24; ஏசாயா 32:1,16; 16:5; சங்கீதம் 122:5; 101:1). தெய்வீக் சமநிலையில் கிருபையும், சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும்; நீதியும், சமாதானமும் ஒன்றையொன்று முத்தமிடும்.
4. தெய்வீக அன்பில் (1கொரிந்தியர் 13; வெளிப்படுத்துதல் 3:19).
5. தாழ்மையும், சாந்தமுள்ள ஆவியோடு ஒருவருடைய சொந்த மனிதத் தன்மையை உணர்ந்து கொள்ளுதல் (2தீமோத்தேயு 2:25; கலாத்தியர்6:1; எபேசியர் 6:4).

அன்பும், சாந்தமும் இல்லாத ஒழுங்குமுறைப் படுத்துதல் கலகத்தை உண்டுபண்ணும். தண்டனை இல்லாத ஒழுங்கு முறைப்படுத்துதல் பொதுவாகப் பயனற்றது அல்லது சிறிய விளைவுகளை உண்டாக்கும்.

ஒழுங்கு முறைப்படுத்துதலில் ஆவிக்குரிய நடவடிக்கை முறைகள்

தலைமைத்துவம் சபை ஒழுங்குமுறைப் படுத்துதலை யோசனையற்ற முறையில் செயல்படுத்தக்கூடாது. தேவனைத் தவிர அவருடைய ஒழுங்குமுறைப் படுத்துதலை மற்றவர்கள் செயல்படுத்தக் கூடாது.

a: அந்தரங்க ஒழுங்குமுறைப் படுத்துதல்

அநேக ஒழுங்குமுறைப் படுத்துதல் அந்தரங்கத்தில் செய்யப்பட வேண்டும். ஒருவரும் தங்கள் குற்றங்களை அண்டைவீட்டுக்காரருக்கு பகிரங்கப் படுத்தப்படுவதை பொதுவாக விரும்புவதில்லை. மீறுதல் அல்லது குற்றம் அந்தரங்கமானால் சரி செய்தலும் அந்தரங்கத்திலே செய்யப்படவேண்டும்.

மத்தேயு 18:15-20ல் உள்ள வசனங்களின் முதலாவது அடிப்படை தத்துவம் பின்பற்றினால் சபையின் அங்கத்தினருக்கு இடையே எவ்வளவு குழப்பங்கள் தடுக்கப்படும். ''உன் சகோதரனிடத்திற்குப் போ…'', அந்த வசனத்திலே வரும் வலியுறுத்தலை ''அவனிடத்திற்கு போ'' என்பதை குறித்துக்கொள்ளுங்கள் (மத்தேயு 5:24; 18:15; லூக்கா 17:3,4; லேவியராகமம் 19:17).

b: பகிரங்கமான ஒழுங்குமுறைப் படுத்துதல்

சபை அங்கத்தினர்களிடையே ஒப்புறவாகுதலின் தெளிவான ஒழுங்கை மத்தேயு 18:5-20 கொடுக்கிறது. பிடிவாதத்துடன் தன்னிச்சையாக ஒப்புறவாகுதலை வேண்டாமென்று சொல்லிவிட்டால் சபைக்கு செவிகொடுக்காவிட்டால் அவரை வெளியேற்ற வேண்டும். இயேசு இதற்கு அமைத்த படிகளை குறித்துக் கொள்ளுங்கள்.

a. முதல்படியும், கண்டித்து கூறுதலும்

சகோதர்களுக்கு (அல்லது சகோதரி) நடுவே பிரச்சனை இருக்குமானால் ''தனியாக அவனிடத்தில் போங்கள்''. இதிலே அடங்கியிருப்பது:

- அணுகுமுறையில் சரியான நடக்கையும், முறையும்
- சரியான வார்த்தைகளை சரியான ஆவியில் சொல்லுதல்
- சகோதரனோடு ஒப்புரவாக உண்மையான விருப்பம்
- நீங்கள் ஒப்புரவாக நினைக்கிற நபரை ஏற்றுக் கொள்ளுதல்

(மத்தேயு 18:15; கலாத்தியர் 6:1; நீதிமொழிகள் 25:9; 16:28; மத்தேயு 5:24; லூக்கா 17:3-5). நீங்கள் அவனிடம் **தனியாக** செல்ல வேண்டும். அவருடைய சரீரத்திலே சபையின் தலையாகிய கிறிஸ்துவின் அறிவுரையின் படி ஒப்புரவாகுதலுக்கு இதுவே **முதலாவது** மற்றும் அடிப்படையான படி.

b. இரண்டாவது படியும், கண்டித்து கூறுதலும்

தேவனுக்கு முன்பு உண்மையாக, நேர்மையாக, தாழ்மையாக உங்கள் சகோதரனிடத்தில் போவதற்கு முயற்சிகளை எடுத்து போகும்போது ஒப்புரவாக அவர் மறுத்தால் வேதவசனம் இரண்டு அல்லது மூன்று பேரை அழைத்து செல்லும்படி கூறுகிறது (மத்தேயு 18:16). இதிலே அடங்கியிருக்கிறவைகள்:

- ஒருவேளை சில நபர்கள் அவருடைய நெருங்கிய நண்பர்களாய் இருப்பார்கள்
- அவன் அலலது அவள் நம்பிக்கை வைக்கிற அல்லது நம்புகிற ஜனங்கள்
- ஆவிக்குரிய ரீதியில் முதிர்ந்த நபர்கள் பகுத்தறிதல் உள்ள நபர்கள்
- ஒப்புரவாகுதல் நடைபெற வேண்டும் என்பதைப் பார்க்க விருப்பமுள்ள நபர்கள்

மீண்டும் வாசியுங்கள் (கலாத்தியர் 6:1; ரோமர் 15:14; 1கொரிந்தியர் 4:14; கொலோசெயர் 3:16).

ஒப்புரவாகுதல் ஏற்படும் நோக்கில் இரண்டு, மூன்று சாட்சிகள் முழு சம்பவத்தையும் கேட்டு இடைபட்டு அன்பின் பகுத்தறிதலை சாந்தத்தோடு நியாயத்தீர்ப்பை பயிற்சி செய்ய வேண்டும்.

இரண்டாவது கண்டித்து கூறுதல் குற்றவாளியை உலுக்கி, அவர்களுடைய தவறின் கடுமையை பார்க்க உதவி செய்து சரிசெய்தலின் அவசியத்தை காண வடிவமைக்கப் பட்டுள்ளது. இது ஆவிக்குரிய அங்கத்தினரின் செல்வாக்கை கொண்டு வந்து அவர்களின் கண்டித்து கூறுதல் தாங்கி கொள்ளப்பட்டு இதன்மூலமாய் குற்றவாளி ஒப்புரவாகுதலுக்கு அவனுடைய தடையை உடைத்துப் போடும். அவர் இந்த இரண்டுப் படிகளுக்கும் பதிலளிக்க தவறிவிட்டார். சபைக்கு போவதற்கு முன்பதாக குற்றவாளிகளுக்கு அடுத்த படியை காண்பிப்பதும் இதிலே அடங்கி இருக்கிறது (நீதிமொழிகள் 25:9-12; 27:5,6; 16:28).

c. முடிவான படியும் கண்டித்து கூறுதலும்

மத்தேயு 18:17; 1தீமோத்தேயு 5:20; 1கொரிந்தியர் 5:13; யோவான் 20:23. முடிவான படியும், கண்டித்து கூறுதலும் ஒப்புரவாக மறுத்த நபரை சபைக்கு முன்பாக கொண்டு வரவேண்டும். இதில் முழு ஸ்தலசபையும் எழும்ப வேண்டும் என்பது போல் தோற்றமளிக்கிறது அல்லது பல்வேறு நபர்கள், சபையாரின் பிரதிநிதிகள் அந்த நபர் ஒப்புரவாகும்படி வேண்டிக்கொள்ளுதலாகும். அதன்பின் குற்றவாளி தனிநபருக்கு செவிகொடுக்காவிட்டால் இரண்டு மூன்று சாட்சிகளுக்கு செவிகொடுக்காவிட்டால் அவனை சபைக்கு முன்பாக கொண்டு வரவேண்டும், நிச்சயமாக அவன் சபைக்கு செவி கொடுப்பான்.

இந்த சூழ்நிலை சபையாருக்கு இரண்டு மூன்று சாட்சிகளுடன், சந்தேகத்திற்கு இடமில்லாமல் இதிலே சபையின் ஊழியம் அடங்கி இருக்க வாய்ப்பு அளிக்கிறது. இந்தப் படி கூட ஒப்புரவாகுதலின் ஏற்பாடாகும். நோக்கம் என்னவென்றால், நியாயந்தீர்ப்பதோ குற்றவாளி என தீர்ப்பதோ அல்ல, நீதிமன்றத்தில் செய்யப்படுவதுபோல, ஆனால் அவரை ஆதாயப்படுத்திக் கொள்வதற்காக, அவமானப்படுத்துவதற்காக அல்ல, ஒப்புரவாகுவதற்காக. இந்த ஒப்புரவாகுதலின் மூன்று படிகளை வேண்டாம் என்று ஒதுக்கி தள்ளுகிற இருதயம் எவ்வளவு கடினமாக இருக்க வேண்டும்.

"அவர் செவி கொடுப்பதற்கு மறுப்பாரானால்"... அது முடிவான பாவம். அது ஒருவருடைய குற்றமல்ல இடைபடுவதற்கு. அவனுடைய சகோதரனுக்கு செவிகொடுக்க மறுப்பாரானால் இரண்டு அல்லது மூன்று நபர்களை அதன்பின் அவர் சபைக்கு செவிகொடுக்க மறுத்துவிட்டால், இதற்கு மாற்றுவழி எதுவும் இல்லை. ஆனால் நாலாவது படி இருக்கிறது.

d. நாலாவது படி - வெளியேற்றுதல்

இந்த படி கடைசி அடைக்கலமாய் உள்ளது, மற்ற எல்லாம் தோல்வியடையும் போது அவர் எல்லார் முன்னிலையிலும் கடிந்து கொள்ளப்பட வேண்டும் (1தீமோத்தேயு 5:19-21).

இப்பொழுது வெளியேற்றுதல் நடைபெறுகிறது. அவர் ஸ்தல சபையில் இருந்து துண்டிக்கப் படுகிறார். பழைய ஏற்பாட்டிலும் ஜனங்கள் ''அறுப்புண்டு போனார்கள்'' (யாத்திராகமம் 12:15-19; லேவியராகமம் 17:4-9; எண்ணாகமம் 19:20).

மற்றவர்கள் கூட ஜெபாலயத்தில் இருந்து நீக்கப்பட்டார்கள். எனவே இந்த நபர் சபையிலிருந்து நீக்கப்படவேண்டும் (லூக்கா 6:22; யோவான் 9:22; 12:42; 16:2). ஒரு யூதன் ஸ்தல ஜெபஆலயத்தில் இருந்து வெளியேற்றப் படுதல் பெரிய அளவில் உள்ள சமுதாயத்தில் இருந்து வெளியேற்றப் படுவது போலாகும். இது தேவ சமுகத்தில் இருந்து துரத்தலின் சாபமாகும். யூதர்கள் இயேசுவை சாபமாக்கினார்கள் (1கொரிந்தியர் 12:3). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவில் அன்பு கூறாதவனெவனும் கிறிஸ்துவின் வருகையில் சபிக்கப்பட்டவனாயிருப்பான் (1கொரிந்தியர் 16:22).

சபையில் இருந்து துரத்தப்பட்டதான நபர் புறஜாதியினால் பொதுவான நபராய் பாவியாய் மாறிவிடுகிறான். முழுசபையின் அதிகாரத்தினால் தேவன் மீண்டும் கட்டுகிறார். வாசியுங்கள் 1கொரிந்தியர் 5:4; 2கொரிந்தியர் 2:6; 1சாமுவேல் 2:25).

இங்கே சபையானது துன்மார்க்கமான நபரை வெளியே தள்ளுகிறது. சபையிலே ஐக்கியம் இருக்க வேண்டும். எல்லா அங்கத்தினரும் கரிசனை உடையவராய் மற்றும் எல்லாரும் இந்த செய்கைக்கு சம்மதிக்க வேண்டும். சிலர் இதை நம்பாவிட்டால் கருத்து வேற்றுமை வந்து விடும். வேத வசனத்திற்கு விரோதமாய் பரிதாபம் எழும்பி விடும் (1கொரிந்தியர் 1:10).

சபையின் ஒழுங்கு முறைப்படுத்தும் காரியத்தில் இது ''கட்டுவதும், விடுவிப்பதும்'' ஆகும். அந்த நபர் ''இணைக்கப்பட்டு'' அவர் மனந்திரும்புதலுக்குள்ளாய் வரும் வரை ''விடுவிக்கப்பட முடியாது''.

e. ஐந்தாவது படி – மனந்திரும்புதல் / ஒப்புரவாகுதல்

விரும்பிய ஒழுங்கு முறைப்படுத்துதல் கிரியை செய்தால் அந்த நபர் மெய்யான மனந்திரும்புதல், பாவ அறிக்கையிடுதல், பாதிக்கப்பட்ட நபருடன் ஒப்புரவாகுதல் மற்றும் பகிரங்க பாவ அறிக்கையிடுதல் மற்றும் சபையோடு ஒப்புரவாகுதலாகும். அவர் ''விடுவிக்கப்பட்டு'' முன்பு இருந்தது போல் தயவிற்கு உயிர்பிக்கப் படுதலாகும்.

ஒழுங்குமுறைப் படுத்துதலின் வேதாக விளைவுகள்

ஒழுங்குமுறைப் படுத்துதலின் முழுப்பகுதியையும் படித்தபின், ஒழுங்குமுறைப் படுத்துதலில் சில காரியங்கள் சம்பவிக்கிறது என்பதை நாம் குறிக்கிறோம்.

1) மனந்திரும்பாத நபர் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டு புறஜாதியானாய், பொதுஜனமாய், அவிசுவாசியாய், பாவியாய் நடத்தப்படுகிறான். அவர்கள் கட்டப்படுகிறார்கள் சபையால் விடுவிக்கப்படும்வரை (மத்தேயு 18:15-20).
2) விபச்சாரக்காரனின் மாம்சத்தின் அழிவிற்காக சாத்தானிடம் ஒப்புக் கொடுக்கப்பட்டான் (1கொரிந்தியா 5:3-5).
3) அனனியாவும், சப்பிராளும் பரிசுத்த ஆவியினடத்தில் பொய் சொன்ன குற்றத்திற்காக மரித்தார்கள், பேதுரு மாத்திரமே இதை அறிவிக்க முடிந்தது (அப்போஸ்தலர் 5:1-11).
4) மாயவித்தைக்காரன் பவுலின் மூலம் கூறப்பட்ட கிறிஸ்துவின் சுவிசேஷத்தை எதிர்த்தபடியினால் சில காலம் குருட்டாட்டத்தினால் வாதிக்கப்பட்டான் (அப்போஸ்தலர் 13:6-13).
5) பிரிவினைக் காரர்கள் அடையாளம் காணப்பட்டு தவிர்க்கப்பட்டார்கள் (ரோமர் 16:16-18).

6) 1கொரிந்தியர் 5:1-3 வரையுள்ள வசனங்களில் வரும் சகோதரர்கள், பரிசுத்தவான்களால் ஐக்கியத்திலிருந்து விலக்கப்பட்டார்கள்.
7) ஒழுங்கீனமான நடந்த சகோதரனை விட்டுவிலக வேண்டும். ஆனால் சத்துருவாக எண்ணக்கூடாது (2தெசலோனிக்கேயர் 3:6-15).
8) அவர்கள் மனந்திரும்பி ஒப்புரவாகும் வரை பாவம் பத்திரப்படுத்தி வைக்கப்படுகிறது (மாற்கு 2:7; யோவான் 20:23; மத்தேயு 18:18; 2கொரிந்தியர் 5:19).

ஒழுங்குமுறைப் படுத்துதலின் ஊழியம்

வேதம் காட்டுகிற காரியம் ஊழியம்கூட ஒழுங்குமுறைப் படுத்துதலின் கீழ்வருகிறது. தலைமைத்துவத்தில் இருக்கிறவர்கள் தவறும்போது சரிசெய்யப்படாவிட்டால், அவர்களுடைய பொறுப்பின்கீழ் இருப்பவர்களும், அவர்களுடைய தலைமைத்துவத்தை பின்பற்றுவதின் மூலம் பாதிக்கப் படுவார்கள்.

மூப்பர்களின் குற்றத்தைக் குறித்து பொதுஜனங்கள் அறிவார்களானால், பின் அவர்களோடு இடைபட்டு அங்கத்தினரிடையே சரிசெய்யப் படவேண்டும்.

தலைமைத்துவ ஊழியங்களை ஒழுங்குமுறைப் படுத்துகிறவர் தேவன் என்பதை எந்த ஒரு சபையாரும் உணர்ந்து கொள்வது முக்கியம். தலைமைத்துவ ஊழியங்களை ஒழுங்குமுறைப் படுத்துவது ஜனங்களல்ல!

இதை செய்வதற்கு ஜனங்கள் தங்களுடைய கையில் எடுத்துக் கொள்வார்களானால் பின்பு தேவன் ஜனங்களின் ஒழுங்குமுறைப் படுத்துதலின் ஊழியம் தேவைப் பட்டாலும் அவர்களை நியாயந்தீர்ப்பார். "நான் அபிஷேகம்பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்குசெய்யாமலும் இருங்கள் என்றார்" (சங்கீதம் 105:15).

சவுல் இராஜா தவறிலே இருந்த போதிலும், தேவன் அபிஷேகம் பண்ணினவரை தாவீது தொடவில்லை (1சாமுவேல் 26:9). சவுல் அபிஷேகத்தையும், தேவனுடைய ஆவியையும் தண்டனையால் இழந்து விட்டபோதிலும் தாவீது அபிஷேகத்தை கனம்பண்ணினான். அவனுடைய மனிதர்களால் தாவீது சவுலை கொலை செய்யும்படி ஏவப்பட்ட பொழுதிலும். தேவன் இந்த சூழ்நிலைகளை தாவீதின் இருதயத்தைப் பரிசோதிக்கப் பயன்படுத்தினார்.

வெளிப்படுத்தல் 1,2,3 அதிகாரங்கள் தேவகரத்தில் இருக்கும் "தூதர்கள" சபையின் தலையாகிய கிறிஸ்துவினால் ஒழுங்குமுறைப் படுத்துதலை தாங்குவதற்கும், ஆதரிப்பதற்கும் உள்ளனர் என்பதைக் காட்டுகிறது.

1. தேவன் அபிஷேகித்ததை தொடாதே

a) அவருடைய கரத்திலிருக்கும் நட்சத்திரங்கள் ஒழுங்குமுறைப் படுத்துதலுக்காக (வெளிப்படுத்துதல் 1:20).
b) அவரால் அபிஷேகிக்கப்பட்ட தலைமைத்துவம், அவரால் ஒழுங்கு முறைப்படுத்தப்படும் (1நாளாகமம் 16:22).
c) மீரியாமும், ஆரோனும் மோசேயை தொட்ட பொழுது நியாயந்தீர்க்கப் பட்டார்கள் (நாளாகமம் 12).
d) கோராகும் அவனுடைய கூட்டமும், மோசேயையும், ஆரோனையும் தொட்ட பொழுது நியாயந்தீர்க்கப்பட்டார்கள் (எண்ணாகமம் 16). வாசியுங்கள் யூதா 11.
e) நாதாபும், அபியும் ஊழியம் செய்யும்போது நியாயந்தீர்க்கப்பட்டு மரிந்தார்கள் (லேவியராகமம் 10:1-3).
f) சரியான நேரத்திலே தேவன் சவுலை நியாயந்தீர்த்தார், தாவீதினால் அல்ல (1சாமுவேல் 26:9-11).
g) இரண்டு அல்லது மூன்று சாட்சிகளில்லாமல் மூப்பனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் குற்றச்சாட்டுகளை ஏற்றக் கொள்ளக்கூடாது (1தீமோத்தேயு 5:1,19-21).
h) தேவன் நம்முடைய ஜனங்களின் மேய்ப்பர்களை நியாயந்தீர்ப்பார் (ஏரேமியா 23:1-3; எசேக்கியேல் 34:1-10).

2. தெய்வீக இறையாண்மை

- ⊡ சில நேரங்களில் தேவன் தன்னுடைய சர்வ வல்லமையினால் தன்னுடைய தலைவர்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு இடைபடுகிறார். இதை ஜனங்கள் செய்வதற்கு விட்டுவிடுவதில்லை.
- ⊡ ஆரோனின் குமாரர்களான நாதாபும், அபியும் தெய்வீகமாக நியாயந்தீர்க்கப் பட்டார்கள் (லேவியராகமம் 10:1-3).
- ⊡ மீரியாம் குஷ்டரோகத்தினால் தாக்கப்பட்டாள், ஆரோன் தேவனால் கடிந்துக் கொள்ளப்பட்டான் (நாளாகமம் 12).
- ⊡ சவுல் யுத்தத்திலே சாகும்படி தேவன் அனுமதித்தார், சாமுவேலின் வார்த்தையை உறுதிப்படுத்த (1சாமுவேல் 2).
- ⊡ ஆரோனின் ஆசாரியத்துவத்தை தொட்ட ஆயிரக்கணக்கானோர் மேல் தேவன் வாதையை அனுப்பினார் (1நாளாகமம் 16,17).
- ⊡ தெய்வீக நியாயத்தீர்ப்பின் கீழ் தலைமைத்துவத்தில் இருந்த மோசேயும், ஆரோனும் வாக்குத்தத்த நாட்டை இழந்தார்கள் (1நாளாகமம் 20; 12; சங்கீதம் 106:30-33).
- ⊡ அனனியாவும், சப்பிராளும் தெய்வீகமான முறையில் நியாயந்தீர்க்கப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 5:1-11).

3. மனித பொறுப்புகள்

சில வேளைகளில் தேவன் ஊழியங்களோடு இடைபட இன்னொரு ஊழியத்தை உபயோகிப்பார். ஆனால் இங்கு கூட ஜனங்கள் அல்ல.

a. நாத்தான் தாவீதினுடைய பாவத்திற்காக அவனை கடிந்துக் கொண்டான் (2சாமுவேல் 12:7).
b. தீர்க்கதரிசியாகிய சாமுவேல் சவுல் இராஜாவை கடிந்துக் கொண்டான், அவனுடைய பாவத்திற்காக (1சாமுவேல் 13:13).
c. ஆசாரியனாகிய ஏலியை தேவமனிதன் கடிந்துக் கொண்டான் (1சாமுவேல் 12:27-29).
d. பவுல் அப்போஸ்தலனாகிய பேதுருவை கடிந்துக் கொண்டார் (கலாத்தியர் 2:11-14).
e. அப்போஸ்தலனாகிய பேதுரு மூப்பர்களைப் பார்த்து பேசுகிறார் (1பேதுரு 5:1-5).
f. மோசே, கோராகையும் அவனுடைய கூட்டத்தாரையும் கடிந்துக் கொண்டான் (எண்ணாகமம் 16).
g. அப்போஸ்தலர்களும், மூப்பர்களும் யூத மற்றும் புறஜாதிய உபதேச காரியங்களை விவாதித்தார்கள் (அப்போஸ்தலர் 15).
h. பழைய ஏற்பாட்டு காலங்களில் தீர்க்கதரிசிகள் இராஜாக்களை அவர்களுடைய தீமைகளுக்காக கண்டித்து கடிந்துக் கொள்ள அனுப்பப்பட்டார்கள்.
i. யோவான் அப்போஸ்தலன் தியோத்திரேப்பு இடைபட்டான் (3யோவான் 9,10).
j. சந்தேகத்திற்கு இடமில்லாமல் மூப்பர்கள் பொய் அப்போஸ்தலர்களை சோதித்தறிந்தார்கள் (வெளிப்படுத்துதல் 2:2).
k. மூப்பர்கள் மற்றவாகள் தவறும்போது, கடிந்துக் கொள்ளுதல் தேவைப்படும்போது இடைப்பட்டார்கள் (1தீமோத்தேயு 5:19-21). மூப்பர்கள் பெரிய தாக்குதல், விமர்சனங்கள் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகிறார்கள், எப்படியிருந்தாலும் அதிகார மீறுதல் இருக்குமானால் அது சரிசெய்யப் படவேண்டும். இல்லாவிட்டால் சபையிலே மதிப்பும் அதிகாரமும் இழந்து போய்விடும். மூப்பர்கள் முன்பாக கடிந்து கொள்ளப்படவேண்டும். இதுவே பொது ஜனமானால் சபையிலே விசாரிக்கப் படவேண்டும். இராணுவ தலைவர்கள் அவர்களுடைய முகாமிற்கு முன்பதாக "சட்டையைக் கழற்றுதல்" என்ற பெரிய கடுமையான அவமானத்தை அனுபவிக்கிறார்கள். மூப்பர்கள் தேவனுடைய மந்தையைக் குறித்து பொறுப்பும் உக்கிராணத்துவமும் இருக்கிறபடியினால் அவர்களுக்கு மரியாதை செய்யப்படவேண்டும், அன்பு கூறப்படவேண்டும், அவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும் (எபிரெயர் 13:7,17,24).

4. ஊழியமும், அறிநெறியும்

ஊழியம் நொடிந்துப்போகுதல் மிகப்பெரிய அதிர்ச்சிக்குள்ளாகும் பகுதிகளில் ஒன்று. இது அறநெறியோடு தொடர்புடையதாய் இருக்கிறது. ஒழுக்கயின்மை அந்த நபரை பாதிக்கிறது. விசேஷமாய் ஊழியத்தை பின்வரும் வாழ்க்கையின் பகுதிகள் வேதவசன தத்துவங்களின்படி சரி செய்யப்பட வேண்டும். இல்லாவிட்டால் மீட்கப்படுதலும், உயிர்பிக்கப்படுதலும் சரியான விளைவுகளை உண்டாக்குகிறது.

ஒழுங்குமுறைப் படுத்துதலின் ஊழியத்தோடு தொடர்புடைய முக்கியமான காரியங்களில் சிலவற்றில் நாம் குறித்துள்ள ஒழுக்க காரியங்கள்:

a. ஒழுக்க ரீதியாக – விசேஷமாக ஒழுக்க ரீதியில் நொடிந்து போன ஊழியர் தன் தகுதியை இழக்கிறார். மனைவியும் ஒழுங்கீனமான தொடர்பினால் தன் கணவனை ஊழியத்திலிருந்து

b. வீட்டுக்குரிய ரீதியாக – ஒரு மூப்பர் (ஊழியர்) தன் வீட்டை சரியாக நடத்தாவிட்டால் அவர் தேவனுடைய வீட்டை நடத்த முடியாது. இந்த ஒழுங்கு மற்றும் நடத்துதல் கணவன் / மனைவி உறவு மற்றும் பிள்ளைகளோடு உள்ள தொடர்பு அடங்கி உள்ளது. கணவன் / மனைவி உறவு திரும்பக் கட்டப்பட்டு புதுப்பிக்கப் படவேண்டும்.

c. மனநிலையில் உணர்ச்சி பூர்வமான ரீதியில் - ஒழுக்க ரீதியாக நொடிந்து போகுதல் ஒருவருடைய மனதையும், உணர்ச்சியையும் பாதிக்கிறது. நிகழ்ந்த பெரிய பாதிப்பு மற்றும் குற்றத்தின் வேதனை தேவனுடைய வழியில் சரி செய்யப்படவேண்டும். இது மெய்யான மனந்திரும்புதல் அறிக்கையிடுதல், சுத்திகரிக்கப்படுதல், புதுப்பிக்கப்படுதல் மூலமாக நடைபெறுகிறது. பாவத்தை நியாயப்படுத்துவது அங்கிகரிக்க முடியாது அல்லது சகித்துக் கொள்ள முடியாது இல்லாவிட்டால் ஒருவர் தன்னை பெரிய ஏமாற்றத்திற்குள்ளாக்கி விடுவார்.

d. அறநெறியில் - ஒழுக்க ரீதியில் விழுந்துபோன எந்த ஊழியரும் வேத அறநெறியின்படி ஆளுகை செய்யப் படுவாரானால் சில காலம் பொது ஜன ஊழியத்தில் இருந்து இறங்கி விடவேண்டும்.

e. ஆவிக்குரிய ரீதியில் - ஒழுக்க ரீதியாக நொடிந்து போகுதல் விசேஷமாக ஊழியத்தில் அநேக பாதிப்புகளையும், மிகப்பெரிய அதிர்ச்சியையும் உண்டாக்குகிறதாக காணப்படுகிறது. ஏனெனில் அதிகமான பொது ஜனப்பார்வை தெய்வீக வாழ்க்கை முறை எடுத்துக்காட்டுகளில் இருந்து கைக்கொள்ளப் படுவதினால் ஆகும். எனவே ஆவிக்குரிய உயிர்பிக்கப்படுதல் செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

f. சபை ரீதியாக – ஏனெனில் ஊழியர்களுடைய செயல்பாடுகள் சபைக்கு முன்பாக இருக்கிறது. அதிலே அவருடைய அதிகார வரம்பு பெரியது. ஏனெனில் நாம் யாரும் நமக்காக வாழ்வதில்லை. ஆனால் நாம் மற்றவர்களைப் பாதிக்கிறோம். எனவே சரியான வேதாகம ஒழுங்கு முறைப்படுத்துதல் தேவையாய் இருக்கிறது. இல்லாவிட்டால் சபை துன்பப்படும். எல்லாருக்கும் திருஷ்டாந்தத்தை நாம் ஏற்படுத்தி அல்லது மற்ற எந்த ஒழுக்க நொடித்து போகுதலை அமைப்பாக்கி விடுவோம். பாவம் செய்யும் மூப்பர் மற்ற எல்லாருக்கும் பயம் உண்டாகும் ரீதியில் கடிந்து கொள்ளப்படவேண்டும். இந்தக் காரியங்கள் பொதுவாக சபை மற்றும் பொதுஜன அறிவாக மாறுகிறது. எனவே இது வேதாகம ரீதியில் சரி செய்யப் படவேண்டும். இவைகள் கோள் சொல்வதற்கும் காரணமாகிறது. கற்பனை செய்வதை தடை செய்கிறது. எனவே பாவமானது வேதாகம ரீதியில் சரி செய்யப்படவேண்டும்.

g. நடைமுறையில் - மீண்டும் உயிர்பிக்கப் படுவதற்கான பொதுவான மற்றும் நடைமுறை வழிகாட்டி குறிப்புகள் பின்வருமாறு:

1. மெய்யான மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் குற்றப்பகுதியிலே அதிலே ஈடுபட்டுள்ள நபர்களைச் சார்ந்து தனிப்பட்ட மற்றும் பொது அறிவைச் சார்ந்தது.

2. தேவனுடைய மன்னிப்பு மற்றும் சபையிலே அடங்கியிருக்கிற குழுக்கள் அல்லது மற்றவர்கள் பாவத்திற்காக மறுபடியும் அணுகுதல், தேவனுடைய நாமத்தில் கணவன் மற்றும் மனைவி, குடும்பம், தலைமைத்துவம் மற்றும் சபையினிடத்தில் கொண்டுவரப்படுகிறது.
3. ஒழுங்குமுறைப் படுத்துதலின் அளவு பொதுஜன ஊழியத்தில் இருந்து விடுபடுபவதின் மூலமாக எடுக்கப்படுகிறது.
4. கண்காணிப்பு காலம் திட்டம் பண்ணப்பட வேண்டும். ஒழுக்க இன்மையினால் உடைத்துப் போடப்பட்ட சுவர்கள் திரும்பவும் கட்டப்படுவதற்கான நேரம் கொடுக்கப்பட வேண்டும். மேலே சொல்லப்பட்ட பகுதிகளில் பாதிப்புகளை அகற்றிவிட்டு திருமண உறவை மீண்டும் கட்டுவதற்கு நேரம் எடுக்கும். ஆனால் அதுவே தலையான முக்கியத்துவம் வாய்ந்தது. தேவனுடைய கட்டளை என்னவென்றால் கண்காணிக்கப்படுகிறவரை மன்னிப்பது, பின்பு உயிர்பிக்கப்படுதல், மீட்பின் திட்டமாய் முழு வேதாகமம் காட்டுவது போல் இருக்கலாம்.
5. ஆலோசனை தொடர்புநிலை மூலமாக தொடர்ந்து நடைபெறும் முறையில் யார் மீட்பின் ஊழியத்தை திரும்ப உயிர்பிக்கும் முறையில்.
6. பொருத்தமான கண்காணிப்பு கால ஊழியத்திற்கு பின் மீண்டும் உயிர்பிக்கப் படுதல் நடைபெற வேண்டும். இது எந்த ஒரு சட்டப்பூர்வமாக அல்லது பரிசேய முறையில் அல்லது ஆவியில் செய்யக்கூடாது. இதுவும் ஒருவரை உயிர்பிக்கும் நோக்கத்துடன் சாந்தமுள்ள ஆவியுடன் அதே காரியத்தின் தானும் சோதிக்கப்படக் கூடும் என்பதை கருத்தில் கொண்டு செய்ய வேண்டும்.

இந்த வழிகாட்டி குறிப்புகள் மூப்பருடைய தகுதி அடிப்படையில் போதக நிருபங்களில் சொல்லி இருக்கிறபடி உள்ளது (1தீமோத்தேயு 3:1-7; தீத்து 1:5-9 உடன் 1தீமோத்தேயு 5:17-25).

நித்திய நியாயத்தீர்ப்பு

அநேக காரியங்கள் சபை ஒழுங்குமுறைப் படுத்துதலுக்கும் நியாயத்தீர்ப்புக்கும் தப்பித்துவிடும். இவைகள் எல்லாம் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன் அல்லது பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பில் நியாயந்தீர்க்கப்படும்.
குறிப்பு (1தீமோத்தேயு 5:24,25).

1. வேதவசனம் எதிர்கால நியாயத்தீர்ப்பை உத்தேசிக்கிறது (2கொரிந்தியர் 5:10,11; 1யோவான் 4:17; ரோமர் 14:10-12; யோவான் 12:47,48; வெளிப்படுத்துதல் 11:18).

2. நித்திய நியாயத்தீர்ப்பில் வேத வசனத்தின்படி இரண்டு நியாயத்தீர்ப்புகள் உண்டு:

   a. விசுவாசிகளின் நியாயத்தீர்ப்பு:
   இது விசுவாசிகளின் கிரியைகளின் அடிப்படையில் (1கொரிந்தியர் 3:11-15; 2கொரிந்தியர் 5:10; 1யோவான் 4:17; ரோமர் 14:10-12; யோவான் 12:47,48).

   1) விசுவாசிகளின் நியாயத்தீர்ப்பில் மூன்று விதமான காரியங்கள்
      - கடந்த கால நியாயத்தீர்ப்பு – பாவியாக சிலுவையில்.
      - நிகழ்கால நியாயத்தீர்ப்பு – மகனாக கர்த்தருடைய பந்தியில் (1கொரிந்தியர் 11:23–34).
      - எதிர்கால நியாயத்தீர்ப்பு – வேலைக்காரனாக கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்.

   2) பரிசாக விசுவாசிகளுக்கு ஐந்து விதமான காரியங்கள்
      - ஜீவ கீரிடம் (யாக்கோபு 1:12; வெளிப்படுத்துதல் 2:10).
      - நீதியின் கீரிடம் (2தீமோத்தேயு 4:8).
      - மகிமையின் கீரிடம் (1பேதுரு 5:2-4).
      - மகிழ்ச்சியின் கீரிடம் (1தெசலோனிக்கேயர் 2:19,20).
      - அழிவில்லாத கீரிடம் (1கொரிந்தியர் 9:25-27; 1யோவான் 2:28).

b. அவிசுவாசிகளின் நியாயத்தீர்ப்பு:

இதுவும் கிரியைகளுக்காக இந்த நியாயத்தீர்ப்பு பெரிய வெள்ளை சிங்காசன நித்திய நியாயத்தீர்ப்பாகும்.

1. தேவன் பரிபூரண நியாயதிபதி. நியாயத்தீர்ப்பில் எந்த தவறுமே செய்ய முடியாதவர். ஏனெனில் அவருடைய இன்றியமையாத தன்மைகளின் மூலமாக எல்லா உண்மைகளும் அவருக்கு முன்பாக நிற்கும் (ஆதியாகமம் 18:25; எபிரெயர் 12:23; சங்கீதம் 89:14; 19:7,8; 94:2; 96:13; 98:9; ஏரேமியா 11:20; 1பேதுரு 1:17).
2. துன்மார்க்க தேவதூதர்கள் நியாயந்தீர்க்கப் படுவார்கள் (2பேதுரு 2:1-9; 3:7; யூதா 6).
3. சாத்தான் அக்கினி ஜுவாலையிலே நித்தியமாக நியாயந்தீர்க்கப் படுவான் (வெளிப்படுத்தல் 20:1-15).
4. தேவபக்தியற்ற யாவரும் நியாயந்தீர்க்கப் படுவார்கள். வேத வசனத்தை கிறிஸ்து இயேசுவை நிராகரித்த யாவரும் நியாயந்தீர்க்கப் படுவார்கள். அவர்கள் வசனத்தின்படி நியாயந்தீர்க்கப்படுவார்கள் (சங்கீதம் 149:1-9; 1:5; 9:7, 16; வெளிப்படுத்தல் 14:7; 1தீமோத்தேயு 5:24; எபிரெயர் 9:27; 10:27; ரோமர் 2:5).

இது நித்திய நியாயத்தீர்ப்பு நித்திய ஒழுங்குமுறைப் படுத்துதல் தேவனுடைய கிறிஸ்துவுக்குள் உயிர்பிப்பதற்கு ஏதுவான ஒழுங்குமுறைப் படுத்துதலை ஏற்றுக் கொள்ள மனிதன் நிராகரிக்கும் போது, அதற்கு மாற்றாக ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் தேவனுடைய ஒழுங்குமுறைப் படுத்துதல் முழு நித்தியத்திற்குமாக கண்டிப்பானது என்பதை அறிய வேண்டும்.

மாறுதல் என்னும் சவாலை எதிர்கொள்ளுதல்

ஏசாயா 43:18,19 சொல்லுகிறது, ''முந்தினவைகளை நினைக்கவேண்டாம்; பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம். இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்.''

இன்றைய சபைகளை எதிர்கொண்டிருக்கும் மிகப்பெரிய சவால்களில் ஒன்று மாறுதல் என்னும் சவால். உலகத்தின் காட்சி ஒவ்வொரு கோணத்திலும் விரைவாக மாறிக்கொண்டிருக்கிறது. அநேக மாற்றங்கள் நல்லவைகள், சிலவைகள் மோசமானவைகள். நம்மை எதிர் நோக்கி இருக்கிற மிகப்பெரிய சவால் என்னவென்றால், சபையானது இந்த சவால்களை தொடர்பு கொள்ளும் முறையை கண்டுபிடிப்பது தான். அநேக சபைத் தலைவர்கள் மற்றும் ஸ்தானபங்கள் எந்த ஒரு மற்றும் எல்லா மாறுதல்களுக்கும் தடையாய் இருக்கிறார்கள். இருந்தபோதிலும் முறைப்படியான அநேக மாற்றங்கள் இந்தப் புதிய நூற்றாண்டில் நாம் விரைவாக முன்னேறும்பொழுது அவைகள் நீண்ட நிலுவைத் தொகையாய் உள்ளது. சபையானது நம்பும் திறனை தொடர்ந்து வைத்திருக்க வேண்டும். இந்தக் காலத்திற்கு பொருத்தமாய் இருப்பதற்கான தேவையை விருப்பத்துடன் அங்கிகரித்துக் கொள்ள வேண்டும். தேவனுடைய தற்போதைய நோக்கத்துடன் இசைவுநிலையில் இருப்பது அவசியம். தேவன் பழைய நாகரிகத்திற்கு உரியவர் அல்ல. காலத்திற்கு ஒவ்வாதவர் அல்ல. காலத்திற்கு பின்னானவரும் அல்ல. அவர் நித்தியமாய் வெளிப்பட்டிருக்கும் தேவன்.

ஒப்புநோக்குகையில் சில ஜனங்கள் மாறுதலை சவுரிகமாக உணர்கிறார்கள். ஏற்கனவே நாம் அறிந்த காரியங்களில் ஒரு குறிப்பிட்ட பாதுகாப்பை உணர்கிறோம். வேகமாக மாறுகிற உலகம் திகைக்கச் செய்கிறது. மாறுதல் நம்முடைய பாதுகாப்பின் உணர்வு மற்றும் நலமுடன் இருத்தலாகும். உண்மையென்னவென்றால், மாறுதல் நிகழ்கின்றன மற்றும் நாம் மறுக்கவோ மாற்றவோ முடியாது. நம்முடைய நவீன உலகத்திற்கு பொருத்தமான முறையை பராமரிப்பதற்காக சபையிலே குறிப்பிட்ட அடிப்படை மாற்றங்கள் நிகழ வேண்டும்.

நேர்மறையின் உற்பத்தி திறன்மிக்க மாற்றங்கள் தலைமைத்துவத்தினால் மேலிருந்தே ஆரம்பிக்கப் படவேண்டும். நம்முடைய மாறுகிற உலகத்தில் தற்போது இருக்கிற தருணங்களை மாறுதலுக்கு விருப்பமில்லாத தலைவர்கள் ஆர்வத்தை தூண்டும் தருணங்களை இழந்தவர்களாய் தங்களை காணுவார்கள்.

ஏரேமியாவின் மூலம் கர்த்தர் சொல்லுகிற காரியம் என்னவென்றால், ''பழையவைகளை பற்றிக்கொண்டு இருக்கவேண்டாம், ஏனெனில் இதோ, நான் புதிய காரியத்தை செய்கிறேன் மற்றும் பழையவைகளை பற்றிக்கொண்டு இருப்பீர்களானால் நீங்கள் வருங்காலத்தை பற்றிக்கொள்ள முடியாது''. இது ஒரு எளிய ஒப்புமை ஊஞ்சலாகும். கலைஞனுக்கு உரியது. ஒரு ஊஞ்சலிருந்து ஆடி மற்றொரு வேதபகுதிக்கு செல்லுகிறான். அவன் முதல் ஊஞ்சலுக்குப் போக விருப்பம் இல்லாமல் இருப்பாரானால் அவன் இரண்டாவதை பற்றி பிடிக்க முடியாது. எனவே அவர் எல்லா இறங்குகிற வட்டத்தின் பகுதியிலும் தொடர்ந்து ஆடிக்கொண்டே இருக்க வேண்டும். அவன் முடிவாக, எல்லா உந்துதல்களையும் இழக்கும் வரை, நாம் நம்முடைய கடந்தவற்றைக் குறித்ததான இருகப்பிடித்துள்ளப் பிடிகளை விட வேண்டும். தேவன் வெளிப்படுத்தின எதிர்காலத்தைப் பிடிப்பதற்கு முன்னேறிச் செல்ல வேண்டும். ''சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி'' பிலிப்பியர் 3:13.

தலைமைத்துவம் கடந்தவற்றை விட்டுவிட விருப்பம் இல்லாமல் இருக்கும்போது எதிர்காலத்திலே தேவன் நம்மேல் வைத்திருக்கிற எல்லா காரியங்களையும் தொடர்ந்து செல்ல முடியாது. பிறகு ஜனங்களும் தங்களுடைய சுதந்திரத்தை சொந்தமாக்கிக் கொள்ள முடியாது. அதிகமான வேத வசனங்கள் மாறுதல் என்னும் சவாலை எதிர்கொள்வது அவசியம் என்று குறிப்பிடுகிறது. அவற்றில் சிலவற்றை நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

ஏரேமியா 12:5, ''நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப் பண்ணினார்களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்னசெய்வாய்?''.

1நாளாகமம் 12:32, "....இசக்கார் புத்திரரில், இஸ்ரவேலர் செய்யவேண்டியது இன்னதென்று அறிந்து காலாகாலங்களுக்குத் தகுந்த யோசனை சொல்லத்தக்க தலைவர்கள் இருநூறுபேரும், இவர்கள் வாக்குக்குச் செவிகொடுத்த இவர்களுடைய எல்லாச் சகோதரருமே".

எண்ணாகமம் 10:14, "யூதா சந்ததியாருடைய பாளயத்தின் கொடி அவர்கள் சேனைகளோடே முதல் புறப்பட்டது" வச.15, "இசக்கார் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு ஏலோனின் குமாரன் எலியாப் தலைவனாயிருந்தான்".

ஆகாய் 2:6,7, "சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; கொஞ்சக்காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் அசையப் பண்ணுவேன்".

எபிரெயர் 12:26,27, "அவருடைய சத்தம் அப்பொழுது பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையபண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறார். இன்னும் ஒருதரம் என்கிற சொல்லானது அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக, அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள் போல் மாறிப்போம் என்பதைக் குறிக்கிறது".

இந்த புதிய நூற்றாண்டில் விரைவாக நாம் முன்னேறும் பொழுது, நாம் தீடிரென்று ஏற்பட்ட, துரிதமான செயல்திறனுள்ள மாற்றங்களின் காலத்திற்குள்ளாய் நாம் பிரவேசிக்கிறோம். மீண்டும் மாறா நிகழ்ச்சி பெரிய மாற்றங்களை மனித வாழ்க்கையில் ஒவ்வொரு பகுதியிலும், குறிப்பாக சபையிலும் நடைபெறுகிறது. நாம் இந்த மிகப்பெரிய பயன்பாட்டை தகுதியான முறையில் நிகழ்ச்சிகளுடன் ஈடுகொடுப்பதை அங்கிகரிக்காவிட்டால், சபையானது அதனுடைய அநேக முடிவுகளை தியாகம் செய்ய வேண்டியது வரும்.

வெற்றிக்கு திறமையும் அல்லது திறமையின்மையும், நேர்மறையான மாற்றங்களை ஆரம்பிப்பது ஒருதலைவருடைய ஆக்கப்பூர்வமான தன்மையும், முடிவான பரீட்சையும் உறுதி செய்வதாய் இருக்கும்

மாற்றங்களின் வரையறை:

- வித்தியாசமாய் மாறுவது அல்லது உருவாக்குவது
- மாற்றி அமைப்பது அல்லது திருத்துவது
- ஒரு காரியத்திற்கு பதிலாக இன்னொரு காரியத்தை வைப்பது
- அடையக்கூடிய முன்னேற்றங்களை இன்றைய தேதிக்கு நிலை உயர்த்துதல்

நாம் ஏன் காரியங்களை மாற்ற வேண்டும்? அதனுடைய செயல்பாடுகளை அல்லது நிகழ்வுகளை முன்னேற்றுவிப்பதற்கு

மனம் மாறுதலும், பரிசுத்தமாகுதலும் அதிதீவிரமாற்றமாகும்

a) 2கொரிந்தியர் 5:17, "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின".

b) 2கொரிந்தியர் 3:18, "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்".

ராஜ்ஜியத்தின் வருகை எல்லாவற்றிற்கும் மேலாக அநேக அதிதீவிர மாற்றங்கள் உடையதாய் இருக்கும்.

c) 1கொரிந்தியர் 15:51,52, "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்".

மாற்றம் வாழ்க்கையின் நிறைவு பெற இன்றியமையாத தவிர்க்க இயலாத காரியமாகும்

- உலகம் மற்றும் வேதாகம வரலாறு இதை நிருபிக்கிறது
- இயற்கை இதை உறுதி செய்கிறது. உயிர் வாழ்கிற ஒவ்வொன்றும் வளர வளர மாற்றமடையும்
- தேவன் சிருஷ்டித்த உயிர் வாழ்கின்ற ஒவ்வொன்றிலும், மாற்றங்களின் செயல்பாடுகள் உட்படையானது. மாற்றங்களின் செயல்பாடுகளின் ஒழுங்கிலே, முழுவதுமாக மாறுவதின் மூலம் தவிர வளர்ச்சியும், விரிவாக்கமும் இல்லை.
- தொடக்கத்தில் இருந்து உலகமானது பல்வேறு மாற்றங்களின் செயல்பாடு வழியாக கடந்து செல்கிறது. இது தவிர்க்க இயலாத தப்பிக்க இயலாத வாழ்க்கையின் காரணியாகும். இதை மறைப்பதற்கோ, இதை விட்டு ஓடுவதற்கோ எந்தக் காரியமும் இல்லை. இது உங்களைப் பிடித்துக் கொண்டே உள்ளது.
- **மாற்றங்களின் செயல்பாடுகள் நமது நாட்களில் விரைவாக இருக்கிறது**
- வேதாகமத்தின் தீர்க்கதரிசனம் இதை முன்னறிவித்தது இது கடைசிநாட்கள் என்று - துரிதப்பட்ட மாற்றங்கள்
- (மத்தேயு 24:22 ''அந்த நாட்கள் குறைக்கப்படாதிருத்தல்'' – 'துரிதப்படுத்தப்பட்ட')
- தானியேல் 12:4 ''...முடிவுகாலத்தில் அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம்''.
- (*ரா.ஃபா* = அளவுகடந்த விகிதத்தில் அதிகரிக்கும்)
- உலகத்திலுள்ள ஒவ்வொரு பகுதியும் பாதிக்கப்படும்
- ஒவ்வொரு ஸ்தாபனமும், நிறுவனமும் கம்பெனியும் பாதிக்கப்படும்

மாற்றங்கள் வாழ்க்கையின் எல்லாப் பகுதியையும் பாதிக்கும், இவைகளும் உள்ளடங்கும்:

A. அரசியல்

உதா. மார்க்ஸ் கொள்கையின் வீழ்ச்சி முழு உலகத்தையும் அதிகாரம் செலுத்த வேண்டுமென்ற கம்னியுஸ்டுகளின் கனவு சிதைந்தது

B. தொழில்நுட்ப இயல்

மிகப்பெரிய மாற்றங்கள் கணணியுகத்தின் நெருக்கடி நிலையில் ஆரம்பிக்கப்பட்டது மற்றும் இதன்மூலமாய் பெருமளவில் எல்லாம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. வழி மண்டலப் பயணம் உண்மையாகியது. தகவல் தொழில்நுட்ப புரட்சி மாறும்படியாக அச்சுறுத்துகிறது. வாழ்க்கை முறையையே நிரந்தரமாக மாற்றிவிடுகிறது.

C. பொருளாதாரம்

உலக பொருளாதாரத்திலே மிகப்பெரிய மாற்றங்கள் உண்டாயிருக்கிற பொருளாதார சக்தியின் மையங்கள். மேற்கிலிருந்து கிழக்கிற்கு மாற்றப்பட்டு விட்டன. இந்த மாற்றங்களின் முழு முக்கியத்துவங்கள் இன்னும் அங்கிகரிக்கப்படவில்லை.

D. சமுதாயம்

உடனடியான சமுதாய மாற்றங்கள் உலகத்தை மாற்றிக்கொண்டு இருக்கின்றன. கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு மிகப்பெரிய அளவில் நகருகின்ற ஜனத்தொகை மிகப்பெரிய அளவில் நடைபெறுகின்ற சமுதாய ஆய்வின் சிறிய பகுதியாய் மாத்திரம் அமைகிறது.

E. மதம் சம்பந்தப்பட்ட

அநேக உலக மதங்கள் மும்முரமடைதலுக்குள்ளாக மற்றும் விரக்தி தன்மைக்குள்ளாக கடந்து செல்கிறது. (அடிப்படைவாத கொள்கை) மதஉலக காட்சியிலே மிகப்பெரிய வெற்றிடம் விரிவடைந்து வருகிறது.

F. ஆவிக்குரிய. மாம்சமான யாவர் மேலும் ஆவியானவர் ஊற்றப்படவேண்டும்

பின்னோக்கிப் பார்க்கையில் தெளிவாய் தெரிகிறது மிகப்பெரிய மாற்றங்கள் மிகச் சிறப்பான காலத்திலே நிகழ்கிறது. அவைகள் எல்லாம் தேவனுடைய தீர்க்கதரிசன நோக்கங்களின் நிறைவேறுதலோடு இணைக்கப்பட்டதாய் உள்ளது. தேவனுடைய திட்டம் முழு உலகத்தின் ஒவ்வொரு

பகுதியிலும் தனது முத்திரையை பதித்துள்ளது. இந்தக் காரியங்களை அவர் இவ்வாறு சொல்லுகிறார். கடைசி நாட்களில் நடக்கும் சம்பவங்களான என்பது நமது நாட்களோடு தொடர்புடையதாய் இருக்கிறது.

சபையை போல் மாற்றங்களை ஒருவரும் வெறுப்பதில்லை, எதிர்த்து நின்றதில்லை

சபையானது அநேக பகுதிகளில் நிலையாக இருப்பதற்கு தீர்மானித்து எல்லா தகுதியான மாற்றங்களையும் எதிர்க்கிறது.
நாம் பழையவைகளை பரிசுத்தமானதாய் பார்க்கிறோம். நவீன காரியங்களை புனித கேடாக பார்க்கிறோம்.
மேற்கத்திய சபை கடந்த காலத்தில் அதில் சிக்கிக்கொண்டது. (கட்டங்கள், கீர்த்தனைகள், பொதுவழிபாட்டு முறை, தரிசனம்).

இந்த தேக்கநிலைக்கும், மாறுதலுக்கான விருப்பம் இன்மைக்கும் காரணமாய் இருக்கக்கூடிய சில காரியங்கள் ஏதுவாய் இருக்கும்.

A. நமது விசுவாசம் வரலாற்று பூர்வமானது
கிறிஸ்தவம் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக ஸ்தாபிக்கப்பட்டது. நமது வரலாற்று விசுவாசத்தை நாம் படிக்கும்போது நமது மனது 2000 ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த சம்பவங்களில் நிலையாக தங்கி விடுகிறது. எனவே நமது சிந்தனையில் கடந்து சென்ற காலத்தின் தொன்மையில் வாழ்கிறோம். ஆரம்ப கால சபையை வாழ்க்கைக்கும் நடைமுறைக்கும் பின்பற்றக்கூடிய மாதிரி சபையாய் காண்கிறோம். ஆனால் நாம் அடிக்கடி சபையினுடைய முக்கிய காரியங்களை மறந்து விடுகிறோம். அவை இந்த நாட்களுக்கும், அதன் அமைப்பிற்கும் பொருத்தமானதும், சமக்காலத்திற்கும் உரியதாக இருக்க வேண்டும்.

B. நமது வேதம் தொன்மையானது
நமது வேதத்தின் அநேக பகுதிகள் உண்மையாக பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்டது. புதிய ஏற்பாடு கூட ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாக எழுதப்பட்டது. எனவே நமது வேதவசன வாசிப்பும், படிப்பும் நிலையாக நமது மனதை கடந்த கால வரலாற்றுக்குள்ளாக பின்னோக்கி எடுத்துச் செல்கிறது. வேதவசனத்தின் அநேக மொழிபெயர்ப்புகளும் பல நூறு வருடங்கள் பழமையானது. ஆங்கிலத்திலே கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பிலே அநேக போதகர்களால் விரும்பப் படுகிற அந்த மொழிபெயர்ப்பு 1611ல் மொழிபெயர்க்கப்பட்டது. அதனுடைய வெளிப்படுத்தல்கள் அந்த நாள் மொழியில் இருந்தது. அதன் விளைவாக, கிங் ஜேம்ஸ் ஆங்கிலம் பரிசுத்த மொழியாக மதிக்கப்பட்டது. அது இன்றும் அநேக சபைகளில் உபயோகிக்கப்படுகிறது. உண்மையாக நவீன ஆங்கிலத்தைக் காட்டிலும் அது எந்த விதத்திலும் பரிசுத்தமானதில்லை. ஆனாலும் நம்முடைய உபயோகம் பழைய ஆங்கிலத்தை அதிக பரிசுத்தமாய் மற்றும் ஆவிக்குரியதாய் நம்முடைய நவீன நாவைக் காட்டிலும் காண்பிக்கிறது. எனவே அநேகர் கிங் ஜேம்ஸ் ஆங்கிலத்தில் ஜெபம் பண்ணவும், தீர்க்கதரிசனம் உரைக்கவும் வாய்ப்பு உள்ளது. இதை அதிக "ஆவிக்குரியதாய்" நினைக்கிறார்கள். ஆனால் அது உண்மையல்ல.

C. நாம் மத பாரம்பரியங்களை தொற்றிக் கொண்டிருக்கும் சாத்தியக் கூறுகள்
நம்முடைய அநேக கிறிஸ்தவ கலாச்சாரம் வேத கருத்தின்படி இல்லாமல் மனித பாரம்பரியங்கள் அடங்கியதாக இருக்கிறது. நாம் கிறிஸ்துவின் நாட்களில் இருந்த பரிசேயர்களைப் போல் மாறி "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" (மத்தேயு 15:3; மாற்கு 7:5).

D. எந்தவிதமான மாறுதலையும், சந்தேகப்படவும் தடை செய்யவும் விளைகிறது.
பண்டைய கால கலாச்சாரங்களையும், பாரம்பரியங்களையும் அகழி தோண்டி அரண் செய்த அநேக சபைத்தலைவர்கள் தற்கால பார்வையை விசுவாச துரோகமாக பார்க்கிறார்கள். நவீனம் எதையுமே சந்தேகிக்கிறார்கள். இயேசு கிறிஸ்தவின் சபையானது பழைய நாகரிகத்தின்படியிருந்து ஜனங்களுக்கு தடையாய் இருக்க ஏற்படுத்தப்படவில்லை. நாம் தீர்க்கதரிசன ஜனங்களாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம். நாம் எதிர்காலத்தின் ஜனங்கள் தேவன் தமது ஜனங்கள் பின்பாக

இழுத்துச் சென்று நிலையாக இருக்க விரும்பவில்லை. மாற்றங்களை ஏற்படுத்துகிற எல்லா மாற்றங்களிலும் மாறத்தடை செய்வதில்லை. தேசங்கள் செய்ய வேண்டிய பாதையை காட்ட சரியாக முன்னணியில் செல்ல அவர் விரும்புகிறார்.

E. விசுவாசயின்மையினால் மாற அதிக விருப்பமில்லாமை

எப்பொழுதும் ஆபத்து ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் மாறுதலுக்காக எடுக்கும் விசுவாசத்திலே உண்டு. அநேக கிறிஸ்தவர்கள் ஆபத்து ஏற்படக்கூடிய நிலையை விரும்புவதில்லை. தற்காலத்தில் அறிந்தவைகளை வைத்து நாம் சவுரியமாகவும், பாதுகாப்பாகவும் உணர்கிறோம். எதிர்காலம் தெரியாதவைகளை வீணாக நினைத்து, நாம் பயப்படுகிறோம். எப்படியாயினும் நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. நாம் பயத்தோடு எதிர்கொள்ளாமல் விசுவாசத்தோடு எதிர்கொள்ள வேண்டும்.

தேவன் மாறுதலுக்கு எதிரானவர் அல்ல.

தேவன் மாறுகிறவர் அல்ல. மல்கியா 3:6, ''நான் கர்த்தர், நான் மாறாதவர்''.
''இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்''. எபிரெயர் 13:8.
அவருடைய தன்மை குணாதிசயம் அவருடைய மனநிலை சட்டதிட்டங்கள் நோக்கங்கள் மாறுவதில்லை.
தேவ பிரமாணங்கள் ஒருபோதும் மாறுவதில்லை. உதாரணம் இயற்கையின் பிரமாணம், புவிஈர்ப்பு விசையின் பிரமாணம், வளி இயற்கைவியல்.
எப்படியிருந்தாலும், அவருடைய செயல்படும் விதமும், யுக்தியும் செயல்படுகிறது.
யாத்திராகம் 3:16, ''ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களின் தேவன்''.
வம்சா வழிகளையும் மாறுகிற சூழ்நிலைகளிலும், ஜெயம் பெற்ற தேவன்.
தேவன் தாவீதைப் பாராட்டி மதிப்பாக கருதினார். ஏனெனில் அவன் தன்னுடைய சந்நிதியில் தேவனுடைய சித்தத்தை செய்தான் (அப். 13:36).
அவருடைய செயல்முறை யுத்தம் பண்ணுவதிலும், வாக்குதத்த தேசத்தை சுதந்தரிப்பதிலும் இடத்திற்கு இடம் மாறுபட்டது. உதாரணம், கானான், எரிகோ, ஆயி இவற்றில் நடந்த யுத்தங்கள்.
கிறிஸ்துவன் வருகைக்கு முன்பாக மற்றும் தேவனுடைய இராஜ்ஜியம் வெளிப்படுவதற்கு முன்பாக அநேக காரியங்களில் தீடிரென்று மாற்றம் ஏற்படும் என்று தீர்க்கதரிசனம் வெளிப்படுத்துகிறது.
எபிரெயர் 12:25-29 ''...அப்பொழுது பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையபண்ணுவேன் ... அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக, அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள் போல் மாறிப்போம் ...ஆகையால் அசைவில்லாத இராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம்...''.

ஏன் ஜனங்கள் மாற்றத்தை எதிர்க்கிறார்கள்

a. தவறான நம்பிக்கை

அநேக கிறிஸ்தவர்கள் ''பழையவைகளே சிறந்தது'' என்று தவறானதை நம்புகிறார்கள். இந்த நடத்தைப்பாங்கை இயேசு குறிப்பிடும்போது, அன்றியும் ஒருவனும் பழைய ரசத்தைக் குடித்தவுடனே புது ரசத்தை விரும்பமாட்டான், பழைய ரசமே நல்லதென்று சொல்லுவான் என்றார்''. லூக்கா 5:39. இயேசு இது அமைந்ததான இடத்தின் விளக்கத்தை குறிப்பிடும்பொழுது புதிய திராட்சை ரசத்தை பழைய துருத்தியில் ஊற்றுவது புத்தியீனமான செயல், ஏனெனில் பழைய துருத்தி சந்தேகத்திற்கு இடமில்லாமல் கிழிந்து திராட்ச ரசமும் வீணாகிப்போம். அவர் மேலும் சொன்னது புதிய திராட்ச ரசத்தை புதிய துருத்தியில் ஊற்றினால் இரண்டும் பாதுகாப்பாக இருக்கும்.

புதிய என்ற வார்த்தைக்கு அவர் உபயோகிக்கும் வார்த்தை ''ஹெய்னோஸ்'' அதன் அர்த்தம் புதிப்பிக்கப்படுதல் அல்லது பழைய நிலைக்கு புதியது போல் கொண்டு வருதல், இயேசு குறிப்பிடுகிற செயல்பாடு பழைய துருத்தி புதுப்பிக்கப்பட்டு புதிய துருத்தியை பாதுகாப்பதற்காக பயன்படுத்தப்படும். இதில் அடங்கியிருக்கிற செயல்பாடு என்னவென்றால், பழைய துருத்தியை அநேக நாட்கள் தண்ணீரில் ஊற வைத்து முழுவதுமாக மீண்டும் ஈரப்பதமாக்கப்படும் வரை, தண்ணீரிலிருந்து வெளியே எடுத்தபின்பு ஒலிவ எண்ணெயினால் தாக்கமுள்ள தடவுதலுக்கு உட்படுத்தப் படுகிறது. துருத்தி மீண்டும் பலப்படுத்தப்பட்டு உபயோகப் படுத்தக்கூடிய விதத்தில் முழுவதுமாக நிறைவாகும் வரை எண்ணெயினால் பிடித்து விடப்படும்.

இந்த செயல்பாடுகள் ஆவிக்குரிய சரிநிகரான காரியங்களை கொண்டுள்ளது. அவை பழைய தோல் துருத்தி செய்யப்படுவதற்கு அநேக காலம் புகைமூட்ட கூடாரத்திற்குள் தொங்க விடப்படும். பின்பு முதலாவது தண்ணீரில் குறிப்பிட்ட காலத்திற்கு மூழ்க்கப்படும் (வேதவசனம்) பின்பு புதிய அபிஷேக எண்ணெய் தடவுதலுக்கு உட்படுத்தப்படும் (பரிசுத்த ஆவி). இந்த செயல்பாட்டின் விளைவாக புதுப்பிக்கப்பட்ட துருத்தி அதிகமான அளவு புதிய எண்ணெயை நிரப்பி வைக்கப்படுவதற்கு தகுதிக்குரிய நிலைக்கு வருகிறது.

அநேக கிறிஸ்தவர்கள் மாறுதலின் சவாரிகளை ஆக்கப்பூர்வமாய் சந்திப்பதற்கு இப்படிப்பட்ட அனுபவங்களை உடையவர்களாய் இருப்பது அவசியம். அவர்களுடைய பழைய சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் பழைய துருத்தி பெற்றுக் கொள்வதற்கு வளைந்து கொடுக்காதவைகள். எளிதில் சிதறக்கூடியவைகள் மற்றும் மாறுதலுக்கு நிலையில்லாத தன்மையை உடையதாய் இருக்கிறது. எனவே தோல் மாற்றங்களை தழுவிக் கொள்ள தகுதியாகும்படி தேவனுடைய நோக்கத்தின் விரிவாக்கத்தில் முன்னேறும் படியாக சில ஆவிக்குரிய புதுப்பித்தலுக்குள் கடந்து செல்ல வேண்டும்.

b. அவர்களுடைய பாதுகாப்பின் வளையத்தை விட்டு வெளிவருவதற்கு விரும்புவதில்லை

அநேக ஜனங்கள் சொகுசான மண்டலத்திலே வாழ்வதையே நாகரிகமாய் கொண்டுள்ளார்கள். அதாவது வாழ்க்கை முறை எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் சொகுசாகவும், வசதியாகவும் இருக்க நினைக்கிறார்கள். மாறுதலின் தகவல் எப்பொழுதும் சொகுசு நிலைக்கு பயமுறுத்துதலாய் இருக்கிறது. ஜனங்கள் அடிக்கடி மாறுதல் கொண்டுவரும் வசதியற்ற நிலைமையில் இருந்து தப்பிக்க முயற்சிக்கிறார்கள்.

c. இருக்கிற நிலைமையில் திருப்தியடைதல்

முன்னேற்றம் அடையவதற்கும் நிறைவேற்றப்படுதலுக்குமான தாகம் ஜனங்களை மாற்றங்களின் செயல்பாடுகளுக்குள்ளாக நடத்துகிறது. எப்படி இருந்தாலும், எப்பொழுதும் சந்தோஷமாகவும், இருக்கின்ற காரியங்களில் திருப்தியாக இருந்து, மாறுதலுக்கான தேவையை அவர்கள் காண்பதில்லை. காரியங்களை முன்னேற்றுவித்தல் என்பதின் அர்த்தம் மாற்றங்களை ஏற்படுத்துதல், அநேக ஜனங்கள் முன்னேற்றுவிக்கப்படுதலுக்கான தேவையையும், மாற்றங்களுக்கான தேவையையும் அங்கிகரிப்பதற்கு விருப்பமில்லாமல் இருக்கிறார்கள்.

d. பாரம்பரியத்தில் சிக்கிக் கொள்ளுதல்

"தத்துவங்களின் காரியங்களில் பாறைப்போல் நில். சுவையின் காரியங்களில் நடைமுறையோடு நீந்திச் செல்" என்ற வாக்கியத்திலிருந்து ஞானத்தைப் பெற்றுக் கொள் அல்லது ஒருவர் வலியுறுத்தியதுப் போல நீடிய பொறுமையும், மாற்றமும் ஆகிய இரண்டும் அவசியம். பாறையிலே நங்கூரமீடு, சரியான நேரத்திலே வேகத்தை கூட்டு. இது நல்ல கருத்து. ஒவ்வொரு கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் இதை கருத்தில் கொள்ள வேண்டும்.

e. பரிசுத்த பசுவையும், வெள்ளை யானையையும் ஆராதனை செய்தல்

பரிசுத்த பசுக்கள் செல்லப்பிராணி பாரம்பரியமாகும். அது நம்முடைய சமுதாயத்தில் ஆழமாக வேர் ஊன்றுகின்றது. சபை அங்கங்கள் அடிக்கடி அவற்றில் அநேகவற்றை உடையவைகளாய் இருக்கின்றன. மனிதனின் பழக்கவழக்கமாகவும், பாரம்பரியமும் ஆழமாக வலுவாக நிறுவப்பட்டிருக்கிறது. பொதுவாக, அவைகளுக்கு எந்த வேதாகம அடிப்படையும் இல்லை. அவைகள் மனித பாரம்பரியங்கள் இயேசு சொன்னபடி, வேத வசனத்தை ஒன்றுமில்லாமல் ஆக்குகிறது.

வெள்ளை யானை புனிதம் என்று கருதும் பொருட்கள் அல்லது திட்டங்கள். அவைகள் பராமரிப்பதற்கு அதிக செலவு பிடிக்கும், ஆனால் ஒப்புநோக்கும்போது உற்பத்தி திறன் அற்றவைகள். சயாமின் இராஜா தவறாக நம்பி வெள்ளை யானையை தனது சபையின் அங்கத்தினருக்கு அவர்கள் பாழடைந்து போகும்படி கொடுத்தான். அந்த சிருஷ்டி பரிசுத்தமானது, அவைகள் வேலை செய்ய அனுமதிப்பதில்லை – ஆனாலும் அவர்கள் அதை போஷிக்கவும், பராமரிக்கவும் வேண்டியதிருந்தது.

f. ஆபத்தான காரியங்களை எடுப்பதற்கு விருப்பமில்லாதிருத்தல்

மாறுதலை ஆரம்பிப்பதில் ஆபத்தான சில காரியங்களை எடுப்பதும் அடங்கியிருக்கிறது. பொதுவாக, இதிலே அறியாத காரணிகள் அடங்கியிருக்கிறது. நாம் அடிக்கடி அறிந்தவற்றின் பாதுகாப்பின்

படியிலிருந்து கொண்டு நிச்சயமற்ற மாறுதலின் சூழ்நிலைக்குள்ளாக கடந்து செல்ல வேண்டும். சில தலைவர்கள் பல்வேறு காரியங்களுக்காக ஆபத்தான காரியங்களை எடுப்பதற்கு விரும்புவதில்லை. ஆனால் விசுவாசத்தை பயிற்சி பண்ணுதல் நிலையான உள்ளடக்கம் இதை செய்கிறது.

மாற்றங்களின் செயல்பாடுகள் மாறுதல் மூலமாக ஒரு ஊஞ்சலின் குறுக்கிலிருந்து மற்றொன்றிற்கு ஊஞ்சல் ஆடுவது போலாகும். சந்தேகமில்லாமல் அந்த உடற்பயிற்சியை எங்காவது நீங்கள் பார்த்திருப்பீர்கள். கலைஞன் ஒரு ஊஞ்சல் குறுக்கிலிருந்து அடுத்ததிற்கு மாறும் எண்ணத்துடன் ஊஞ்சல் ஆடுகிறான். இதற்கு நேர கணக்கீடு சரியாக இருக்க வேண்டும். அவர் இரண்டாவதை பற்றிக் கொள்ளும் படியாக, முதலாவது ஊஞ்சலின் குறுக்கிலிருந்து தனது பிடியை விடுவிக்க வேண்டும். எந்த தடுமாற்றமும், காலம் தாழ்த்துதலும், உடற்பயிற்சியை பாளடித்து அவனை அடுத்த கீழான நிலைமைக்கு சட்டென்று வருமாறு செய்து விடும். ஆபத்தை எதிர்கொள்ள எந்த ஒரு பயமும் அடங்கியிருந்தாலும், தேவையான காரியம் தடையின்றி நடைபெறுவதை கொடுத்து விடும். கலைஞன் முதலாவது ஊஞ்சல் குறுக்கை கைவிடவில்லை என்றால் கஷ்டமான சூழ்நிலையில் இடம் இன்றி மாறுதலுக்கான சாத்தியக்கூறுகள் இழந்துப் போய்விடும். அநேக தலைவர்கள் ஆக்கப்பூர்வமான எதிர்காலத்தைப் பற்றிக் கொள்வதற்கு பகுதியில் தங்களுடைய பிடிதாரத்தை விடுவதற்கு பயப்படுகிறார்கள்.

g. விசுவாசம் பயிற்சிக்கப் படவேண்டும்

பவுல் சொல்லுகிறான், விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது'' (எபிரெயர் 11:1).

பொதுவாக மாறுதலை ஆரம்பிக்கும்போது விசுவாசத்தை பயிற்சிப்பதில் ஆபத்துக்கான காரணிகள் அடங்கியிருக்கிறது. நமக்கு எந்த உத்திரவாதமும் இல்லை. ஆனால் நம்முடைய விசுவாசம், நமது நம்பிக்கை தேவ வார்த்தையை காண்பதின் அடிப்படையில் அமைந்திருக்கிறது.

மாறுதலை எப்படி நன்கு சமாளிப்பது

a. இதன் தவிர்க்க முடியாத தன்மையை அங்கிகரித்து ஏற்றுக் கொள்ளுதல், இனங்கண்டு கொள்ளுதல்

அநேக ஜனங்கள் கசப்புணர்வுடன் மாற்றங்கள் ஏற்பட வேண்டிய தேவையை எதிர்க்கிறார்கள். வாழ்க்கையில் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவைகள் என்பதை அங்கிகரித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் தப்பிக்கவோ, எதிர்க்கவோ செய்யாமல் விசுவாசத்துடன் தேவன் மேல் நம்பிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டும்.

b. தேவன் இதைக் குறித்து ஆச்சரியப்படவோ, மிகப் பெரிய அளவில் உணர்ச்சி வசப்படுவதோ இல்லை என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்

அநேக கிறிஸ்தவர்கள் துணை நினைவில் தேவனைக் குறித்த எண்ணத்தில் இயற்கையாக பழைய நாகரிகத்தையுடைய வயதான மதிப்பிற்குரியவரைப் போல் எண்ணுகிறார்கள். இது உண்மைக்கு புறம்பானது. தேவன் பழைய நாகரிகத்தில் உள்ளவர் அல்ல. பண்டைய கால பழக்க வழக்கங்கள் நடைமுறையில் இல்லாத. அவர் கடந்த கால நிகழ்கால எதிர்கால தேவன். தேவன் தன்னை இன்றைய நாளுக்குரியவர் மாத்திரமல்ல. அவர் நிச்சயமாகவே எதிர்காலத்திற்குரியவர். நடைபெறுகிற எந்த மாற்றங்களைக் குறித்தும் தேவன் ஆச்சரியப்படுவதோ அல்லது நிலை தடுமாறுவதோ இல்லை. அநேக உண்மையான கிறிஸ்தவர்கள் நவ நாகரிகத்திற்குரிய காரியங்களை தேவன் அங்கிகரிக்க வாய்ப்பில்லை என்ற எண்ணத்தை உடையவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் நினைப்பது விந்தை வாழ்க்கையைக் குறித்ததான பார்வை பழைய நாகரிகத்திற்குரியவைகளாய் இருக்கின்றன. மற்றவர்களைவிட எவ்விதத்திலாவது தாங்கள் ஆவிக்குரியவர்கள் என்று நினைத்திட.

c. எல்லா மாற்றங்களும், எதிர்மறையானதும் மாம்சத்திற்குரியவைகளும், பாவமானது அல்ல என்பதை புரிந்துகொள்ள வேண்டும்

அநேக மாற்றங்கள் உலகத்தை மாற்றுகிறவைகளின் பகுதி அழிவிற்குரியதாய் இருக்கின்றன. அவைகள் இந்த உலகம் வீழ்ச்சிக்குரியதாய் இருக்கிற படியால், எல்லா மாற்றங்களும் எதிர் மறையானது அல்ல. அநேக நல்ல மாற்றங்கள் உலகத்தில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

சில மாற்றங்கள் மோசமானது, சிலவைகள் சிறந்தவைகள் சுவிசேஷம் பரவுதற்கும் மேன்படவும் சிறந்த தருணங்களை ஏற்படுத்தி தருகிறார். மாற்றங்கள் எவைகள் என்று ஜெபத்துடன் கண்டுபிடிப்பது அவசியம்.

d. எதிர்கால மாற்றங்கள், தேவன் மேலேயுள்ள விசுவாசத்தினால், அவருடைய வார்த்தையினால், அவருடைய நோக்கத்தினால், அவருடைய தவிர்க்க முடியாத வெற்றிபூரிகையினால் மற்றும் அவருடைய இராஜ்ஜியத்தின் வெளிப்படுத்தல்களினால் சந்திக்க வேண்டும். (ரோமர் 8:28)

ஒருவர் தேவனைக் குறித்து இவ்வாறு சொல்லுகிறார், வரலாறு என்பது அவருடைய வரலாறு (His – Story) உலகத்தின் சர்வ வல்லமையுள்ள தேவன், மனித வரலாற்றின் வெளிப்படுத்தாத வீரக் காவியத்தை தனது முழு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார். வேதம் முன்னறிவிக்கிறது. கடைசி நாட்களிலில் உலகத்தில் அநேக பயப்படதக்க மாற்றங்கள் ஏற்படும். பொதுவாக வாழ்க்கையின் ஒழுக்கத்தை நிலைப்பாட்டை சீர்குலைக்கிற காரியங்கள் பொதுவாக ஏற்படும். எப்படியிருந்தாலும் வெளிப்படப்போகிற தேவனுடைய மகிமையுள்ள இராஜ்ஜியம் முடிவாக கிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக உலகத்தை நிரப்புகிற எல்லா இருட்டுக்கு மறைவு உண்டாக்கி அவைகளை நீங்கச் செய்யும். எதிர்காலத்தில் வருகிற எந்த விதமான கெடுதியும் தேவனுடைய நித்தியமான மகிமையுள்ள இராஜ்ஜியம் வெளிப்படுவதே முடிவான உண்மையாக இருக்கும்.

e. நாம் நீடிய பொறுமையாய் இருக்க வேண்டும். அதே நேரத்தில் மரத்தைப் போல் வளைந்து கொடுக்கிறவர்களாய் இருக்க வேண்டும். சங்கீதம் 1:3.

"அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிறுப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்".

தண்ணீரின் அருகே நடப்பட்டிருக்கிறதான மரமானது ஆழமான சக்தியான வேர்அமைப்பை விரிவாக்குகிறது. அது மரத்தை அசைக்க முடியாததாய் செய்கிறது. எப்படியிருந்தாலும் தண்டும் கிளைகளும் வளைந்து கொடுக்கக் கூடியவைகளாய், நெகிழக் கூடியவைகளாய் வலிமையான காற்று அதற்கு எதிராக வீசும்போது வளையக் கூடியதாய் இருக்கிறது. நாமும் இவ்வாறே இருக்க வேண்டும். நமக்கு எதிராக வீசுகிற மாற்றங்களின் காற்றை நம்பிக்கையோடு எதிர்கொள்ள வேண்டும். தீடமாக தேவனுடைய வார்த்தையில் நங்கூரம் பாய்ச்சி சக்தியின் வேர் அமைப்பை உடையவர்களாய், ஆனால் கிளைகள் எப்பொழுதும் வளையக்கூடியதும் நெகிழக் கூடியதுமாய் இருக்க வேண்டும்.

தலைமைத்துவமும், மாற்றமும்

a. முறையான மாற்றங்களின் தவிர்க்க முடியாத தேவையை தலைவர்கள் அங்கிகரித்துக் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தைக் குறித்து குறைந்த அளவாவது தீர்க்க தரிசன உள்பார்வை உடையவர்களாய் இருப்பதற்கு தலைவர்களே பொறுப்பு. இன்றியமையாத எல்லா ஆக்கப்பூர்வமான தலைமைத்துவத்திலும், எதிர்கால போக்கை முன்னறியும் திறமையுடையவர்களாய் இருப்பதற்கு மற்றும் அதற்கு பொருத்தமான யுக்திகளை வகுப்பது. அநேக வியாபாரிகள் இந்த விதமான திறமையை இழந்து காணப்படுகிறதினால் தோல்வியடைகிறார்கள். எதிர்காலத்தை முன்னறியும் திறமையின்மையினால் அல்லது தீர்க்கதரிசன உள்பார்வையின் படி செயல்பட விருப்பம் இன்மையினால், அநேக சபைகளும், ஊழியங்களும் அநேக தருணங்களை இழந்து பெரிய காரியங்களை சாதிப்பதை இழந்து விட்டார்கள்.

இசக்காரின் குமாரர்கள் எண்ணிக்கையிலே சிலராக இருந்தாலும், வாழ்க்கையை வழி நடத்துகிற காரியத்திலும் தேசத்தை வழி நடத்துகிற காரியத்திலும் செயல்பட்டார்கள். ஏனெனில் அவர்கள் "அவர்களுடைய நேரத்தின் முக்கியத்துவத்தை அறிந்திருந்தார்கள் மற்றும் இஸ்ரவேலர்கள் என்ன செய்ய வேண்டுமென்பதை அறிந்திருந்தார்கள்". 1நாளாகமம் 12: 32, "....இசக்கார் புத்திரரில், இஸ்ரவேலர் செய்யவேண்டியது இன்னதென்று அறிந்து காலாகாலங்களுக்குத் தகுந்த யோசனை சொல்லத்தக்க தலைவர்கள் இருநூறுபேரும், இவர்கள் வாக்குக்குச் செவிகொடுத்த இவர்களுடைய எல்லாச் சகோதரருமே".

எண்ணாகமம் 10:14,15ல் நாம் விருப்பமான சில காரியங்களைப் பார்க்கிறோம். அதில் இசக்காரின் குமாரர்கள் இஸ்ரவேலின் பிள்ளைகளின் யாத்திரையில் அவர்கள் பிடித்த இடத்தைப் பற்றியது. எப்பொழுதெல்லாம் தேசம் தேவனுடைய கட்டளையின் படி அப்படி செய்தார்கள் யூதா கோத்திரம் (துதியின் ஜனங்கள்). எப்பொழுதும் முதலாவது சென்றார்கள். வழி நடத்தும் விதமாய் உடனடியாக அவர்களுக்குப் பின்பாக இசக்கார் கோத்திரத்தின் பிள்ளைகள் கடந்து வந்தார்கள். இந்த அமைப்பு நமக்கு ஏசாயா 30:21 ஐ ஞாபகப்படுத்துகிறது. அது சொல்லுகிறது, ''நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும் போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்''. யூதா தேசத்தை நான் கற்பனை செய்துபார்க்கிறேன், , தேவனை தங்களுடைய வாயினால் துதித்து, துதியினால் தேசத்தை வழி நடத்தினார்கள். ஆனால் உடனே அதைத் தொடர்ந்து உடனடியாக இசக்காரின் தீர்க்கதரிசன குமாரர்கள் கடந்து வந்தார்கள். அவர்கள் யூதாவிற்கு செல்ல வேண்டிய வழியைக் குறித்ததான கட்டளையில் தேவன் அவர்களை எந்த வழியாக போக விரும்பினாரோ, அதின் அடிப்படையில் கொடுத்தார்கள்.

நாம் வாழுகிற இந்த இக்கட்டான காலத்தில் சபையானது தீர்க்கதரிசன வழிநடத்துதல் உடையவர்களாய் எந்த வழியாய் செல்ல வேண்டும். செய்யப்பட வேண்டிய திசைமாற்றங்களை செய்வது அவசியமாகிறது. இந்த வழி நடத்துதல் தலைமைத்துவத்தின் மூலமாய் வரவேண்டும். அவர்கள் இஸ்ரவேல் ஜனங்களை காட்டிலும் 2000 கனஅடி முன்நடக்கிறவர்களாய் இருக்க வேண்டும்

b. மாற்றம் செய்ய வேண்டும் என்பதற்காக மாற்றக்கூடாது

மாற்றங்களைக் குறித்து அநேக காரியங்களை பேசும்பொழுது அவைகள் தவிர்க்க முடியாதவைகள் நான் பரிபூரணமாக தெளிவாக்க விரும்புகிறேன். மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பதற்காக, மாற்றங்களுக்காக வழக்காடுகிறவன் நானல்ல. நான் குறிப்பாக சொல்லுகிறேன் எல்லா மாற்றங்களும் விரும்பத்தக்கவைகள் அல்ல. அல்லது ஆதாயமானதல்ல. எல்லா சபைகளும் எல்லாவற்றையும், எந்த ஒரு காரியத்தையும் முற்றிலுமாக மாற்றிவிட வேண்டுமென்று நான் தெரிவிக்கவில்லை. மாற்றங்கள் எப்பொழுதும் தேவனால் ஆரம்பிக்கப்பட வேண்டும். எப்படியிருந்தாலும் அவர் குறிப்பிட்ட மாற்றங்களின் அவசியத்தை தெளிவாக காட்டும்பொழுது நாம் பெலத்துடனும், தைரியத்துடனும் அந்த மாற்றங்களை செய்தாக வேண்டும்.

c. சில மாற்றங்கள் சிறந்தவைகள், மோசமானவைகள்

மாற்றம் என்பது அளவுக்கதிகமான வல்லமையுள்ள சக்தியாகும். மாற்றங்களில் அநேகமானவைகள் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. நஷ்டத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். அநேக மற்ற மாற்றங்கள் நேர்மறையாகவும், பயன்தரக்கூடியதாகவும் இருக்கிறது. மாற்றங்கள் சிறந்தவைகளாக இருந்தாலும், மோசமானவைகளாக இருந்தாலும் தவிர்க்க முடியாதவைகள். மாற்றங்களின் காலத்தை தவிர ஒருவரும் நிறுத்த முடியாது. நம்முடைய வாழ்க்கை காலத்தில் அநேக மாற்றங்கள் நிகழும். நாம் தேவனோடு இசைவு நிலையுள்ளவர்களாய் நிலைத்திருந்து நாம் ஈடுபட்டிருக்கும் மாற்றங்கள் மோசத்திற்கு ஏதுவானதாய் இராதபடி நன்மைக்கு ஏதுவானதாய் இருக்கும்படி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

d. எந்த மாற்றங்களுக்கு முன்பாகவும், ஜெபத்துடன் ஆழ்ந்த யோசனை செய்ய வேண்டும்

ஜெபத்தின் சிந்தனையும், ஆழ்ந்த யோசனையும் இல்லாமல் நாம் மாற்றங்களுக்கு ஒருபோதும் அவசரப்படக்கூடாது. எந்த ஒரு தொலைநோக்க மாற்றங்களும் வழிகாட்டுதலுக்கான ஊக்கமான ஜெபம் முதலாவது காரியமாய் வரவேண்டும். ஆண்டவர் அதிக ஜெபத்தின் பதிலாக பச்சை விளக்கை ஒருமுறை காட்டிவிட்டால் நாம் ஜெபத்துடன் தொடர்ந்து அவர் தெளிவாக காட்டிய அந்த மாற்றங்களை மாத்திரம் ஆரம்பிக்க வேண்டும்.

e. ஐக்கியமான மனதும், இருதயமும் முன்செல்ல வேண்டும்

ஆரம்ப கால சபை அநேக மாற்றங்கள் என்னும் சவாலை சந்தித்தது, அவைகள் எல்லாம் முதலாவது ஆழ்ந்த ஜெபத்தை ஏற்படுத்தியது. அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களை அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், ஆசாரியர்களுக்கு முன்பாக கொண்டு வந்தார்கள். அவர்களுடைய ஒருமித்த உடன்பாட்டை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படியாக இப்படிப்பட்ட சூழ்நிலை அப்போஸ்தலர் 15ம் அதிகாரத்தில் எழும்பியது. அது மிகப்பெரிய பிரச்சனையான விருத்தசேதனம் பண்ணுவதை, விருத்தசேதனம் பண்ணக்கூடாது என்பதைக் குறித்தான காரியம்.

வசனம் 25 சொல்லுகிறது, ''ஒருமனப்பட்டுக் கூடின எங்களுக்கு நலமாய்க் கண்டது''.

வசனம் 29 சொல்லுகிறது, ''அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது''.

முதலாவது ஆவியானவருடைய மனதை தேட வேண்டும். அதன்பின் அந்த நோக்கத்திற்காக கூடிவந்திக்கிறவர்களின் ஒருமித்த உடன்பாட்டை தேட வேண்டும். எந்த ஒரு முயற்சியும் எடுக்க அவர்கள் விரும்பாவிட்டால் அல்லது எந்த ஒரு மாற்றத்தையும் செய்வதற்கு, அவர்களுடைய மனதும் இருதயமும், அந்தக் காரியத்தில் ஒருமைப் படும்வரை.

f. போதனையும், விளக்கமும் கண்டிப்பாக கொடுக்கப்பட வேண்டும்
எல்லாம் உள்ளடங்கி இருக்கிற விளைவுகளைக் குறித்து முழுவதுமாக தெரிவிக்க போதிக்க நேரத்தை எடுத்துக் கொள்ளாமல் அதி தீவிரமான மாற்றங்களை ஜனங்களிடத்தில் இருந்து எதிர் பார்க்க முடியாது, மாற்றங்களை ஒருபோதும் நீங்கள் எளிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. எந்த ஒரு தனிப்பட்டவருடைய தீர்மானத்தின் அடிப்படையில் மாற்றங்களை ஆரம்பிக்கக்கூடாது. மிக செல்வாக்குள்ள மாற்றங்கள் அநேக ஆலோசனைக்காரரைக் கொண்ட கூட்டுத் தீர்மானமாய் இருக்க வேண்டும்.

g. தேவையான மாற்றங்கள், ஞானத்தினாலும் தைரியத்தினாலும் செயல்படுத்தப்பட வேண்டும்
உறுதியான தீர்மானத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்களில் தீர்மானமானது மிகப்பெரிய ஞானத்தோடும், தைரியத்தோடும் செயல்படுத்தப்பட வேண்டும். பொதுவாக, மாற்றங்களை ஆரம்பிப்பதற்கு அதிக அளவு தைரியமும் ஞானமும் தேவை.

h. ஆரோக்கியமான மாற்றங்கள் பொதுவாக பகுதி பகுதியான மாறுதலினால் வருகிறது
எப்போதாவது மாற்றங்கள் சூறாவளியைப் போல் ஏற்படுகின்றன. ஆனால் இது பொதுவாக ஏற்படும் மாற்றங்கள் அல்ல. ஆனால் அதிக அளவு படிப்படியான முன்னேற்றங்கள் மூலமாய் நிறைவேற்றப் படுகிறது. ஆரோக்கியமான வளர்ச்சியில் மாறுதலில் மாற்றங்கள் அடங்கியுள்ளது. உதாரணம் ஆரோக்கியமான குழந்தைகள் நிலையாக மற்றும் தொடர்ந்து வளர்கின்றது.

சபை வளர்ச்சியும் தேவையான மாற்றங்களும்

a. சபை வளர்ச்சியில் தவிர்க்க முடியாத மாற்றங்கள் அடங்கியிருக்கிறது அப். 6:1-7; 15.
வளர்ச்சியில் எப்பொழுதும் மாற்றங்களின் செயல்பாடு அடங்கியுள்ளது. இதை செய்யாமல் அது ஏற்படுவதில்லை. வாழுகிற சிருஷ்டி அல்லது வளருகிறவை மாற்றம் அடைகின்றன. சில வழிகளில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை குழந்தை பருவத்திலிருந்து வளருவதைக் குறித்து பார்ப்பதற்கு வருத்தமாக தோன்றுகிறது. உண்மையாக பெற்றோர்கள் இயற்கையான மாற்றங்கள் மாறுதலை ஏற்படுத்தாவிட்டால் எச்சரிக்கை அடைகிறார்கள். வளர்ச்சியும் மாற்றங்களும் இயற்கையானது. அவைகள் இல்லாதவைகள் இயற்கைக்கு மாறானவைகள்.

b. உங்கள் சபை வளரவில்லை என்றால் சில காரியங்கள் மாற்றப்பட வேண்டியது அவசியமாகும்.
வளர்ச்சி என்பது எந்த ஒரு ஜீவராசியின் இயற்கையான செயல்பாடு ஆகும். வளர்ச்சி ஏற்படவில்லையென்றால், ஏதாவது ஒன்று நிச்சயமாக தவறாக இருக்கும். இந்த நிலை இயல்பு நிலைக்கும் கீழானது. வளர்ச்சியை ஊக்குவிக்கிற பொருத்தமான மாற்றங்களுக்கு திறந்த நிலையில் இருப்பது அவசியம். வளர்ச்சியின்மைக்கு எல்லாவிதமான சாக்குபோக்குகளையும், அநேக காரணங்களையும் கூறுகிறோம். அதிலே சில காரணங்கள் முறையாக ஏற்றுக் கொள்ளக் கூடியதாய் இருக்கும். ஆனால் அவர்களுடைய உண்மையான சாக்குபோக்குகள், உண்மையை எதிர்நோக்க விருப்பமின்மையும், தேவையான வளர்ச்சியின் தூண்டிவிடுகின்ற தேவைகளை காரியங்களை செய்யாமல் இருப்பதையும் காட்டுகிறது.
இதை போன்ற ஆராய்கின்ற கேள்விகளை நமக்குள்ளே கேட்க நாம் விரும்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

- சபையின் செயல்பாடுகளும், வளர்ச்சியும் இருக்கவேண்டிய அளவில் இருக்கின்றதா?
- சபையின் ஆக்கப்பூர்வமான தன்மை முன்னேற்றமடைவதற்கு ஏதாவது வழிவகை உண்டா?
- வளர்ச்சியை தடை பண்ணுகிற தாமதப்படுத்துகிற சில காரியங்கள் என்ன?

- அந்தப் பிரச்சனைகளை எப்படி சரி செய்வது?
- எந்த விதமான மாற்றங்கள் நம்முடைய ஆக்கப்பூர்வமான தன்மையை முன்னேற்றுவிக்கும்?
- அந்த மாற்றங்களை நாம் ஏன் ஏற்கனவே செய்யவில்லை?
- நம்முடைய நடக்கையை எப்படி திருத்தம் செய்யமுடியும்?
- தேவையான மாற்றங்களை எப்படி உண்டாக்க முடியும்?

c. சில மாற்றங்கள், வளர்ச்சியை தூண்டி விடும்
அடிக்கடி அதிக எண்ணிக்கையிலான மாற்றங்கள் உடனடியாக வளர்ச்சியை தூண்டிவிடுகிறவைகள். அதி தீவிரமானதாய் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. உதாரணத்திற்கு கூட்டம் நடைபெறும் இடத்தை மாற்றுதல் அணுகுவதற்கு அதிக எளிதான வசதியான இடத்திற்கு செல்லுதல் வளர்ச்சியை ஆரம்பிக்கும். நமது பிரசங்கத்தில் வலியுறுத்தலில் செய்யும் மாற்றம் சில நேரங்களில் வளர்ச்சியைக் கொண்டு வரும்.

d. வளர்ச்சியை தாங்கிப் பிடிப்பதற்கு சில மாற்றங்கள் அடிக்கடி தேவைப்படுகிறது
தகுதியான பின்தொடர் ஊழிய நிகழ்ச்சிகள் நடைபெறாதபடியினால் அநேக சபைகள் பிரச்சனையுடையவைகளாய் இருக்கிறது. பொத்தலான வலையை உடைய மீனவர்கள் போல அவர்கள் இருக்கிறார்கள். வலையினால் பிடிக்கப்படும். அதிக எண்ணிக்கையிலான மீன்கள் சீக்கிரத்தில் மீண்டுமாய் அந்த ஒட்டை வழியாய் தப்பித்து விடுகிறது. இதற்கு தீர்வு என்னவென்றால் ஆக்கப்பூர்வமான பின்தொடர் ஊழிய முறைகளின் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள ஜனங்களை பயிற்றுவித்து அதன் மூலம் சபைக்கு வருகிற ஒவ்வொரு புதிய நபரையும், திட்டவட்டமாக யாவரும் தேவனுக்கு அர்ப்பணிக்க செய்வது விசுவாசமுள்ள ஆக்கப்பூர்வமான பின்தொடர் ஊழியமாகும். புதிய விசுவாசிகளுக்கு போதிக்கும் நிகழ்ச்சி நிரல்கள் நடத்தப்பட வேண்டும்.

e. மாற்றங்கள் வளர்ச்சியின் விளைவு என்ற மாற்றத்தை உருவாக்கும்
ஆதி திருச்சபையில் மாற்றியதான மிகப்பெரிய மாற்றங்களில் ஒன்று அப்போஸ்தலர் 6:1-7ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது விரைவான வளர்ச்சியின் விளைவாக ஏற்பட்டதாகும். சில புதிய விசுவாசிகள் சபைகள் உதவி கிடைக்காத படிக்கு புறக்கணிக்கப்பட்டனர். மூப்பர்களை ஏற்படுத்தியதின் மூலமாய் பணிகளை பகிர்ந்து கொடுத்தலை ஆரம்பித்ததின் மூலமாக தீர்வு ஏற்படுத்தப்பட்டது. சபையானது தேவனுடைய நோக்கத்தோடு களமிறங்க வேண்டும். ஆரோக்கியமான வளர்ச்சியை முன்னேற்றுவிக்கிறதான மாற்றங்கள் தேவனுடைய தற்கால நோக்கங்களோடு நம்மை களமிறக்கும் விதத்தில் இருப்பது அவசியம். தேவன் நாம் என்ன செய்ய விரும்புகிறார் என்பதை கண்டுபிடித்து மற்றும் அவரோடு இணைந்து செய்ய வேண்டும்.

ஆக்கப்பூர்வமான மாற்றங்கள் தேவனால் ஆரம்பிக்கப்பட வேண்டும்

a. தேவனால் தெளிவாக அடையாளப்படுத்தப்பட்டதாய் இருக்க வேண்டும்
தேவனுடைய வேலையில் எல்லா சட்டப்படியான மாற்றங்களும், தேவனால் மாத்திரமே ஆரம்பிக்கபட வேண்டும். உண்மையிலே தேவனுக்காக நாம் செய்யும் எல்லாக் காரியங்களும் அவரோடு நமக்கு இருக்கும் உறவின் மூலமாய் பிறப்பிக்கப்பட வேண்டும். அநேக தலைவர்கள் தேவன் ஒருபோதும் பின்பற்றாத திட்டங்களில் தேவனுக்காக வேலை செய்கிறார்கள் என்பதைக் குறித்து நான் உறுதியாக உள்ளேன். எனவே நம்முடைய பணிகளும் ஊழியங்களும் தேவனால் பிறப்பிக்கப் பட்டவைகளாய் இருக்க வேண்டும். எனவே அவைகள் உண்மையில் மாற்றங்களை ஊழியங்களின் செயல்பாட்டில் ஏற்படுத்தும்.

b. தேவ வார்த்தையினால் உறுதி செய்து கொள்ளுங்கள் - தத்துவங்களினால்
நாம் மாற்றங்களின் பாதையை துவங்குவதற்கு முன் திடமான உறுதிப்பாட்டை தேவ வார்த்தையாகிய வேதாகமத்தின் மூலம் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். நாம் விருப்பங் கொண்டிருக்கிற காரியங்களைக் குறித்து வேதாகமம் விசேஷமாய் குறிப்பிடாததை நாம் அடிக்கடி காண்கிறோம். எப்படியிருந்தாலும், வேதாகமம் அதற்கு இணையான அல்லது ஒத்த காரியத்திலே இடைபடுகிறது. எனவே நாம் கையில் எடுத்துக் கொண்ட காரியத்தில் செயல்படுத்தும் படியான குறிப்பிட்ட தத்துவங்களை நமக்குத் தருகிறது. இதைச் செய்யும்போது நாம் வேதத்தை நேர்மையாகவும்,

திறந்த மனதுடனும் அணுக வேண்டும். நாம் சொல்ல விரும்புகிறதை அது சொல்லும்படியாக முயற்சிக்கக் கூடாது. அவை ''தேவ வார்த்தையை வஞ்சகத்தனமாய் கையாளுவது'' என்று அழைக்கப்படுகிறது. (2கொரி 4:2).

c. அநேக முதிர்ந்த தலைவர்கள் குழுவினால் உறுதி செய்யப்பட வேண்டும்
(தெய்வீக வழி நடத்துதல் எப்பொழுதும் உங்கள் சகோதரரால் உறுதி செய்யப்பட வேண்டும்)
ஆவிக்குரிய முதிர்ந்தவர்களின் வழிநடத்துதலை நாம் எப்பொழுதும் தேட வேண்டும் என்று வேதம் நமக்கு சொல்லுகிறது.

d. சூழ்நிலை சான்றின் மூலம் அடையாளம் காட்டப்படுதல்
மாற்றங்களின் செயல்பாட்டில் நாம் செயல்பட துவங்கும்போது சூழ்நிலைகள் மாறத் தொடங்குவதை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள். அவை சூழ்நிலைச் சான்றாகும். அதாவது நீங்கள் அடுத்துப் பதையில் இசைவுநிலையை ஏற்படுத்துகிறதாய் அமையும். தேவன் குறிப்பிட்ட தேவைகளை கொடுக்க ஆரம்பிப்பார். அவர் கூடவே சரியான நபர்களையும் கொண்டுவருவார். இணையான காரியங்கள் சம்பவிக்க துவங்குவதை காண்பீர்கள். அவைகள் உண்மையாகவே தேவ காரியங்களாய் இருக்கும். நீங்கள் துவங்கிய திட்டத்தோடு இசைந்து செல்லும் சூழ்நிலையை தேவன் கட்டளையிடுவார்.

மாற்றங்களின் செயல்பாடுகள்

பொதுவாக தேவனால் ஆரம்பிக்கப்பட்ட மாற்றங்கள், மாற்றங்களின் செயல்பாடு வழியாக ஏற்படுகிறது. ''நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்''. (2கொரிந்தியர் 3:18).

ஏசாயா 28:10, ''கற்பனையின்மேல் கற்பனையும், கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம் என்கிறார்கள்''.

பரபரப்பினால் ஒன்றையும் பெற்றுக் கொள்ள முடியாது. ஜெபத்துடனும் கவனமான பரிசிலனை இல்லாமல் ஒருபோதும் மாற்றங்களை ஏற்படுத்த நாம் துரிதப்படக் கூடாது ஒருமுறை மாற்றங்களின் தேவையைக் குறித்து உறுதியாக உணர்ந்த பின் அவைகளை தைரியத்துடனும், பலத்துடனும் செய்ய வேண்டும்.

a. மாற்றங்கள் எப்பொழுது சவால் நிறைந்தவைகள்
மாற்றங்களின் நமது பாதுகாப்பு பாரம்பரியம் மற்றும் நம்முடைய சொகுசான பகுதிகள். நம்முடைய விசுவாசம் மற்றும் தரிசனத்திற்கு சவால் விடுகிறது. சில ஜனங்கள் இயற்கையாகவே பாதுகாப்பாகவும், கவனத்துடனும் இருப்பார்கள். இயற்கையாகவே துணிச்சலாக செயல்படுகிறார்கள் மற்றும் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறவர்களுக்கும் இது மற்றவர்களைக் காட்டிலும் மிகப்பெரிய சவாலாகும்.
இருந்த போதிலும் மாற்றங்கள் எப்பொழுதும் சவால் நிறைந்தவைகள். நாம் இதைக் குறித்து ஆச்சரியப்படவோ, கவலையீனமாகவோ இருக்கக்கூடாது. நாம் தைரியத்துடன் சவால்களை எதிர்கொள்ள வேண்டும்.

b. வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவைகள், ஏற்றுக் கொள்ள வேண்டும்
ஏசாயா 43:18,19, ''முந்தினவைகளை நினைக்கவேண்டாம்; பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம். இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்.''

தவிர்க்க முடியாத மாற்றங்களிலிருந்து நாம் தப்பிக்க முடியாது. இவை நம்மை சுற்றியுள்ள வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் மாற்றுகிறது. இது தன்னுடைய செயல்பாட்டில் தொடர்கிறது. அநேக மாற்றங்களை நாம் விரும்புவதில்லை. ஆனால் அவைகள் எப்படியாவது நடைபெறும். அதின் சவால்களை எப்படி சந்திக்க வேண்டுமென்று நாம் தீர்மானிக்க வேண்டும். நம்மை சுற்றிலும் நடக்கிறதான மிகப்பெரிய மாற்றங்களில் நாம் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

குறிப்பாக, அவைகள் நடைபெறவில்லை என்பது போல் நாம் நடிக்க அவர் விரும்பவில்லை. உண்மைத்துவத்தை நாம் சந்திக்க வேண்டும். ஆனால் ஞானத்துடனும் விசுவாசத்துடனும் தேவ வல்லமையுடனும் சந்திக்க வேண்டும்.

மாற்றங்களினால் தேவன் ஆச்சரியப்படுவதும் பாதக நிலை அடைவதும் கிடையாது. அதைக்குறித்து விழிப்பில்லாதவருமாய் இருப்பதும் இல்லை. எல்லாக் காரியங்களையும், அவருடைய இராஜ்ஜியத்தின் மேன்மையின் நோக்கத்திற்காக உபயோகிப்பார். "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:28)

c. மாற்றங்களின் சவால் நெருக்கடியை உண்டாக்குகிறது

நெருக்கடி என்ற சீன வார்த்தை இரண்டு சொற்களால் உருவானது. முதல் சொல் "அபாயம்" இரண்டாவது சொல் "தருணம்". நெருக்கடி என்ற வார்த்தைக்கு இதுதான் மிக சரியான அர்த்தத்தை காண்பிக்கிறது என்று நான் நம்புகிறேன். முதலாவது ஆபத்து எதிர்நோக்கி உள்ளது அதை நாம் ஒருபோதும் குறைந்து மதிப்பிடக்கூடாது. எப்படியிருந்தாலும், சரியான நோக்கில் நாம் நெருக்கடியை சந்தித்தால் அது பொதுவாக சில மிகப்பெரிய தருணத்திற்கான வாய்ப்புகளை கொடுக்கும். இது அடிக்கடி தகுதியான நெருக்கடியை தீர்க்கும் போது நடை பெறுகிறது. நாம் மிகப்பெரிய சாதனை செய்ததை அனுபவிக்கிறோம்.

d. மாற்றங்களுக்கு சரியான சூழ்நிலையை வளரச் செய்

- தரிசனமானது தெளிவாக இருக்க வேண்டும். மங்கலாக இருக்கக் கூடாது.
- தெளிவாக முழுவதுமாக பகுக்கப்படவேண்டும்.
- அதன் பயன்பாடு ஜெபத்துடன் பரிசீலிக்கப்பட்டு பயத்தை போக்குகிறதாய் இருக்க வேண்டும்.
- ஊழியக் குழுவானது உண்மையாக மாற்றத்தைக் குறித்து உறுதி செய்தவர்களாகவும், உணர்ச்சி தூண்டுதல் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்.
- முதிர்ச்சியடைந்த நபர்கள் தரிசனத்தை உறுதி செய்ய வேண்டும்.
- முழு அர்ப்பணிப்புக்கு முன்பாக சோதிக்கப் படவேண்டும்.
- எங்கெல்லாம் எப்பொழுதெல்லாம் தேவைப்படுகிறதே அங்கே சரி செய்து கொள்ளவும்.

e. சரியான நபர்களை படையில் பதிவுச்செய்

முடிவில் மற்றும் குறிக்கோளில் ஒவ்வொருவரும் சுறுசுறுப்பாக செயல்பட வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். ஆனால் பொதுவாக அது நடப்பதில்லை.

- தரிசனக்காரரோடு ஆரம்பியுங்கள்.
- எளிதாக்குகிறவர்களை தெளிவுப்படுத்துங்கள்.
- செயல்படுகிறவர்களை ஊக்கப்படுத்தி தெரிந்து கொள்ளுங்கள்.
- பங்கு பெறுகிறவர்களை சேர்த்துக் கொள்ளுங்கள்.

f. தரிசனத்தை சொந்தமாக்குதலைக் குறித்து இடைவிடாமல் உற்சாகப்படுத்துதல்

- நோக்கத்தையும் குறிக்கோளையும் முழுமையாக விவரியுங்கள்.
- ஒவ்வொருவருக்கும் நன்றாக தெரிவிக்கப்பட்ட நிலையில் வைத்திருத்தல்.
- விவாதிப்பதிலும், திட்டமிடுவதிலும் அங்கத்தினர்களாகிய ஜனங்களை ஈடுபடுத்துதல்.
- மாற்றங்களின் தேவையின் சாத்தியக் கூறுகளுக்கு திறந்த நிலையுள்ளவர்களாயும், ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாகவும் இருங்கள்.
- அவர்களுடைய ஸ்தானத்தையும், ஈடுபாட்டையும் நிலையாக அவர்களுக்கு முன்பாக வைத்திருங்கள்.
- பொருத்தமான இடங்களில் அங்கிகரிப்பையும், பாராட்டையும் கொடுங்கள்.

g. மாற்றங்கள் படிப்படியாக ஏற்படுகிறது. படிப்படியாக உள்ளே, படிப்படியாக வெளியே. ஏசாயா 30:21, "வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்". ஏசாயா 28:10, "கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம் என்கிறார்கள்". மாற்றத்தின் யாத்திரை மற்றும் மாற்றங்கள் விசுவாசத்தில் நடப்பதாகும். மாற்றம் நிலையற்றத்

தன்மையை அறிமுகப்படுத்தி புதிய பாதையின் மேற்பகுதிகளுக்குள்ளாய் நம்மை நடத்துகிறது. விசுவாசமும் அதைப் போன்றது. பவுல் சொல்லுகிறார், ''நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்''. (2கொரி 5:7). விசுவாசத்தில் நடப்பது என்பது படிப்படியான அனுபவம். நாம் ஒருப்படியில் கீழ்ப்படிந்து அடியெடுத்து வைத்து நிறைவேற்றும் பொழுது இரண்டாவது படி நமக்கு முன்பாக திறக்கிறது. மாற்றங்களின் செயல்பாடு விசுவாசத்தின் பயிற்சியினால் அதைப் போல் ஒத்த முறையை பின்பிற்றுகிறது.

h. மாற்றங்களின் விளைவுகளை கண்காணியுங்கள்

மாற்றங்கள் ஆக்கப்பூர்வமான தன்மைகளையும் உற்பத்தி திறனையும் அதிகரிக்க வேண்டும். நேர்மறையான விளைவுகளை நிறைவேற்ற வேண்டும். எனவே இவைகள் நடக்கிறதா என்பதை உறுதி செய்யும் விதத்தில் நிலையாக விளைவுகளை கண்காணிக்க வேண்டும். விரும்புகிற விளைவுகளையும், உற்பத்தி செய்யாத மாற்றங்களையும் உருமாற்றி அமைக்க வேண்டும்.

i. செயல்படுத்துதலை சரிசெய்தல்

மாற்றங்களை செயல்படுத்தும் பொழுது தேவையான உருமாற்றங்களை செய்வதற்கு ஒருபோதும் பயப்படக்கூடாது. இது திட்டவட்டமாக தோல்வியின் அடையாளமல்ல, தேவையான சரி செய்தலை உண்டாக்கும் முன்பாக திட்டங்களையும், மாற்றங்களையும் இயக்கத்தில் வைப்பது அவசியம். வானப்பயணவியல் வார்த்தையில் பறக்கும்போது செய்யப்படும் உருமாற்றங்கள் எனப்படும். ஒருமுறை சரிசெய்தலை உடையவர்களாய் இருப்பது அவசியம். எப்படியிருந்தாலும், நீங்கள் திட்டத்தை செயல்பட வைக்கவில்லை என்றால் நீங்கள் எங்கும் செல்ல முடியாது.

j. குறிக்கோளை அடைதல்

விரும்புகிற விளைவை அடைந்தால் மாத்திரமே மாற்றமானது மதிப்புடையது. சில குறிப்பிட்ட மாற்றங்கள் நம்மேல் திணிக்கப்படும் பொழுது தடைபண்ணுவதற்கோ அல்லது நிறுத்துவதற்கோ நம்மிடத்தில் வல்லமையில்லை. எப்படியிருந்தாலும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட மாற்றங்களின் தன்மையைக் குறித்து நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். நேர்மறையான விளைவுகளையும் உற்பத்தி திறன் நோக்கங்களை நிறைவேற்றுகிற இப்படிபட்ட மாற்றங்களை மாத்திரம் நாம் தழுவிக் கொள்ள வேண்டும். மாற்றங்களுக்காக மாற்றுவது அல்லது வித்தியாசமாய் இருப்பதற்காக மாற்றுவது தீய விளைவுகளையே உண்டாக்கும்.

நான் பரிந்துரை செய்கிற காரியம் முன்னோக்கிப் பார்த்து தொடங்குவதற்கான முயற்சி எடுக்க வேண்டும்.. கனி நிறைந்த தேவையான மாற்றங்களை தைரியத்துடன் செயல்படுத்த வேண்டும். நல்ல மதிப்புமிக்க காரணங்களுக்காக நாம் சில காரியங்களை மாற்ற வேண்டும். நாம் மிக ஆக்கப்பூர்வமானவர்களாக மாற வேண்டும்.. நம் முடைய சமுதாயத்திற்கு அதிக பொருத்தமானவர்களாய் இருப்பதற்கு விரும்ப வேண்டும்.. மிகப்பெரிய அளவில் தேவனால் உபயோகப்படுத்தப் பட விரும்ப வேண்டும்.. நமக்காக வாழ்க்கையில் தேவன் முன்குறித்திருக்கிற காரியங்களை அடைய விரும்ப வேண்டும்.. . . . . .

. . . . . .

உண்மை என்னவென்றால் மாற்றப்பட வேண்டிய சில காரியங்கள் உடனடியாக நடப்பதில்லை. தேவன் நாம் எவ்வாறு இருக்க வேண்டுமென்று உண்மையாக திட்டம் பண்ணியிருக்கிறாரோ அப்படிபட்ட நபராய் மாறுவதற்கு நம்மில் அநேகர் மாறுவது அவசியம். ஆனால் நாம் எல்லா மாற்றங்களுக்கும் அடைத்துக் கொண்டால் இவை ஒருபோதும் நடப்பதில்லை. குறிப்பிட்ட வழியில் காரியங்களை தொடர்ந்து செய்வதற்கு எந்த அறமும் இல்லை. ஏனெனில் இந்த வழியில் தான் நாம் எப்போதும் செய்கிறோம். நாம் இருக்கிற நிலையை பராமரிப்பதிலே நாம் ஒருபோதும் திருப்தியடைந்து விடக்கூடாது. மிகப் பெரிய காரியங்களுக்கு உருவாக்கப்படவும், விடுவிக்கப்படவும் வேண்டும். இந்த வித மாற்றங்களை கொண்டுவரும் மாறுதலின் செயல்பாடுகளுக்குள்ளாக நாம் கடந்து செல்வோமாக.

இராஜ்ஜியத்தின் மாற்றம்

பூலோக வரலாற்றில் நடந்த எந்தொரு சம்பவத்தைக் காட்டிலும் வந்து நிறுவப்படப்போகிற இராஜ்ஜியத்தின் ஆட்சி அதிக மாற்றங்களையும், மறுரூபப்படுத்துதலையும் கொண்டுவரும்.

மனித வரலாற்றிலே இதுவரை எந்த காலத்திலும் அனுபவித்திராத அதிக மாற்றங்கள் மிகமிக சிறப்பான சம்பவங்களுக்கு காரணமாகி அதற்கு நம்மை நடத்தும் என்பது உண்மையாகும். தேவன் ஏற்கனவே முன்னறிவித்திருக்கிறபடி உலகம் முழுவதிலும் அசைவு ஏற்படப்போகிறது. *"...அப்பொழுது பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையபண்ணுவேன் ... அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக, அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள் போல் மாறிப்போம் ...ஆகையால் அசைவில்லாத இராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம்...". (எபிரெயர் 12:25 -28).*

தேவன் முன்னறிவித்திருக்கிற அசைவு இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. ஆண்டவருடைய நாள் நெருங்க நெருங்க இது மிகக் கடுமையாக மாறிக் கொண்டே போகும்.

உலகத்தில் உள்ளதெல்லாம் அசைக்கப்படும். வானத்தில் உள்ள எல்லாம் கூட அசைக்கப்படும். இந்த அசைவின் காரியத்திற்குள்ளாக தேவ ஆவியானவர் மிகப்பெரிய அளவிலே பூமியிலே அசைவாடி தேவன் வழக்கத்திற்கு மாறான வல்லமையான காரியங்களை தம்முடைய ஜனங்களுடைய வாழ்விலே நிறைவேற்றுவார். நம்முடைய கவனம் தேவனால் அசைக்கப்படும். அந்த காரியங்களுக்கு நேராக திசை திருப்பப்பட அனுமதிக்காமல் நம்முடைய கவனம் ஆண்டவருக்கு நேராக திசை திருப்பப்படும். அவருடைய ஜனங்களிலும், சபைகளிலும் ஏற்படுகிற மாற்றங்களின் தூண்டுதலின் ஆதாரமாய் அவர் இருக்கிறார். நாம் பொறுமையோடு நமது கண்களை நம்முடைய கவனத்தை, நம்முடைய விசுவாசத்தை அவர் மேல் வைக்க வேண்டும். அந்த நாள் மற்றும் அந்த நேரத்திற்காக தம்முடைய விசேஷ ஜனங்களாய் மாற அவருடைய ஆவியினால் நம்மை மறுரூபப்படுத்துவார்.

"நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்". 2கொரிந்தியர் 3:18.

தற்காலத்தில் தேவனையும் தங்களுடைய வாழ்விற்காக தேவனுடைய நோக்கங்களையும் விருமபி ஏற்றுக் கொள்கிறவர்கள் கர்த்தருடைய ஆவியானவரால் அவருடைய சாயலாக மாற்றப்படுகிறோம். இந்த மாற்றங்களின் செயல்பாடுகள் கொஞ்சம் கொஞ்சமாய் மாற்றமடைந்து கண்ணாடியிலே நிலையாக நாமெல்லோரும் தேவனை காணுகிறபடியினால். இந்தப் படிப்படியான மறுரூபமாக்குதலின் உச்ச கட்டம் நாம் முடிவாக எப்பொழுது கர்த்தரை முக முகமாய் பார்க்கிறோமோ அப்பொழுது ஏற்படுகிறது.

"அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்." 1யோவான் 3:2.

கிரேக்க புதிய ஏற்பாடு ஆங்கில மொழிபெயர்ப்பிலே "நீயூ" (புதிய) என்று மொழியாக்கம் பண்ணப்பட்டுள்ள வார்த்தைக்கு, கிரேக்க புதிய ஏற்பாட்டில் பல வார்த்தைகள் உள்ளன. அதில் இரண்டு அடிக்கடி உபயோகிக்கப் பட்டுள்ளன. ஒன்று "*நீயோஸ்" (neos)* மற்றொன்று "*கைநோஸ்" (kainos).* இந்த இரண்டும் "*நீயூ*" என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் குறிப்பிடத்தக்க விதத்தில் வித்தியாசமானது.

"*நீயோஸ்*" என்றால் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதிய ஒன்று. ஆரம்பநிலைபாட்டில் ஒருபோதும் உபயோகிக்காத அல்லது அணியாத ஒன்று. இதற்கு சரியான உதாரணம் புதியாக இணைக்கப்பட்ட மோட்டார் வாகனம். ஒருவரும் இதுவரை ஒட்டியிராதது, ஒருவரும் அதிலே அமர்ந்திராதது, முற்றிலும் புதிய ஒன்று.

"*கைநோஸ்*" என்கிற வார்த்தை விவரிக்கிற அர்த்தம் என்னவென்றால் புதிய நிலைக்கு மீண்டும் புதுபிக்கப்பட்ட ஒன்று. இதற்குரிய சரியான உதாரணம் என்னவென்றால் பழைய ஒன்றை கவனத்துடனும், அன்புடனும் கவனமாய் மீண்டும் புதுபித்து புதியது போல் நல்லநிலைக்கு கொண்டுவருதல். பார்ப்பதற்கு புதிதாக இருக்கிறது. செயல்பாட்டிலே புதியது போல் நல்ல நிலையில் இருக்கிறது. எப்படியிருந்தாலும் புதிய நிலைக்கு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வார்த்தைகள் புதிய ஏற்பாட்டில் அடிக்கடி உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக பேதுரு சொல்லுகிறார், "அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்" (2பேதுரு 3:13). இங்கு கையாளப்பட்ட வார்த்தை இது குறிப்பிடுகிற தேவன் சொன்ன வானமும், பூமியும் புதிய மற்றொரு வித்தியாசமான என்ற வானமும், பூமியும் என்ற அர்த்தத்தில் அல்ல. அதே தொடக்கத்தில் இருந்த வானமும், பூமியும் சாபங்கள் எல்லாம் நீக்கப்பட்டு அன்பாக மீண்டும் புதுபிக்கப்பட்டு புதிய நிலைக்கு கொண்டுவருதல்.

இருந்தபோதிலும் இது நடக்கும்பொழுது மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்படும். மனித குலம் இதுவரை சாட்சியிட்டதாக மிகப்பெரிய காட்சி மற்றும் ஆச்சரியமுட்டும் மாற்றங்கள் ஏற்படும்.

உணர்வுப்பூர்வமான மறுரூபமாக்குதலின் மாற்றங்கள் மனித கற்பனை சக்திக்கு ஒன்று சேராதவாறு அமையும் நிகழ்ச்சியில் இருக்குமென்று ஆண்டவர் சூழலுக்கிறார். "இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார்" (வெளி 21:5).

என்னுடைய நண்பர்களே, மிகப்பெரிய மாற்றங்கள் நமக்கு முன்பாக இருக்கிறது. அவைகளில் அநேக மாற்றங்கள் ஏற்றுக் கொள்வதற்கு மிகவும் கடினம். ஆனால் அநேக மற்ற மாற்றங்கள் நமக்கு முன்பாக இருக்கிறது. அவைகள் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய கரத்தினால் மகிமையாக நிறைவேற்றப்படும். இயேசு கிறிஸ்து இராஜாவாக நேரடியாக ஆட்சி செய்வதற்கு ஏதுவாக அண்டசாரத்தை தேவன் பரதீசாக மாற்றுவார். மறுரூபப் படுத்த மாற்றுவார். எனவே நாம் நமது இடைக் கச்சையைக் கட்டிக் கொண்டு மாறுகிற எதிர்காலத்தை தைரியமாக எதிர் கொள்ள வேண்டும். அவை நம்முடைய தேவனுடைய இராஜ்ஜியம் மற்றும் அவருடைய மேசியா தொடங்குகிற பூமி குலுங்குகிற மாற்றங்கள் ஆகும்.

மாறுதலுக்கு இவை ஒருபோதும் மிகவும் பிந்தியதல்ல

இருந்த போதிலும் அநேக தலைவர்கள் பல்வேறு காரணங்களுக்காக, நிலையாக மாற்றங்களை எதிர்த்தாலும், மாறுதலுக்கு இவை ஒருபோதும் மிகவும் பிந்தியதல்ல.

- மாற்றங்கள் தவிர்க்க முடியாதவைகள்.
- மாற்றங்கள் உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் மாறுதலை ஏற்படுத்துகிறது.
- அநேக மாற்றங்கள் நல்லவைகள், அவைகள் உற்பத்தியை ஊக்குவிக்குகிறது.
- மாறுதலுக்கு எதிர்ப்பது என்பது சுயநல பெறுமையின் வெளிப்பாடாய் இருக்கிறது.
- மாறுதலில் குறைவுப்படுதல் சில நேரங்களில் மரண வாடையை தெரியப்படுத்துகிறது.
- மாற்றங்கள் இல்லாமல் முன்னேற்றமும், வளர்ச்சியும் மிக அரிதாக ஏற்படும்.

மாற்றம் தலைமைத்துவத்தலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்.

எழுந்து மாற்றங்களின் சவால்களை சொகுசாக்கி கொள்ளுங்கள்!!!

மாறுதலை சரிபார்க்கும் பட்டியல்

- எப்பொழுது மாற்றம் விரும்பத்தக்கது?
  எப்பொழுது நேர்மையான ஆய்வு பயன்தரக்கூடிய பகுதிகள் முன்னேற்றுவிக்கப்பட வேண்டுமென்று வெளிப்படுத்துகிறதோ அப்போது.

- எப்பொழுது மாற்றங்கள் தேவைப்படுகிறது?
  எப்போது உண்மையான வளர்ச்சி முன்னேற்றம் நடைபெறவில்லையோ, அப்போது சில அடிப்படையான காரியங்கள் மாற்றப்பட வேண்டியது அவசியம்.

- எப்பொழுதும் மாற்றங்கள் அவசியம்தானா?
  வழக்கமான இடைவெளி காலங்களில் மாற்றங்கள் பொதுவாக அவசியப்படுகிறது. ஏனெனில் நாம் மாறுகிற உலகத்தில் வாழ்கிறோம் அதற்கு ஈடுகொடுத்து செல்லவேண்டியது அவசியமாய் இருக்கிறது. ஜனங்கள் குறிப்பிட்ட காரியங்களில் குறிப்பிட்ட நிலையைக் கொண்டுள்ளார்கள். நாம் பொருத்தமான மொழியிலும் முறையிலும் செய்தித்தொடர்பு கொண்டால் மாத்திரம் அவர்கள் நமக்கு செவி கொடுப்பார்கள்.

- எப்பொழுது மாற்றங்கள் யோசனையற்றது?
  ஒரு காரியம் சிறந்த முறையில் அதனுடைய திறமை முழுவதும் பயன்படுத்தி பயனுள்ள முறையில் செயல்படுகிறது என்றால் மற்றும் நேர்மையான ஆய்வு எந்த ஒரு முன்னேற்றத்திற்காகவும் மாற்றம் செய்யப்பட வேண்டியதில்லை என்று வெளிப்படுத்தபடும்போது அங்கே மாற்றங்களை செய்வது யோசனையற்றது.

- எந்தவிதமான மாற்றங்கள் யோசனையுள்ளது?
  - பயனையும் திறனையும் அதிகப்படுத்தும் மாற்றங்கள்
  - நம்முடைய செயல்பாடுகள், நம்முடைய சூழ்நிலைக்கேற்ப அந்த காலத்திற்கு ஏற்றவாறு கொண்டு வருகின்ற மாற்றங்கள்
  - ஐக்கியமுள்ள உறவுமுறையை வலுப்படுத்தும் மாற்றங்கள்
  - வளர்ச்சியையும், உற்பத்தி திறனையும் அதிகப்படுத்தும் மாற்றங்கள்

- மாற்றங்களின் செயல்முறை என்றால் என்ன?
  மாற்றங்களின் செயல்முறை பொதுவாக குறிப்பிட்ட அடிப்படை காரணிகளை உள்ளடக்கியதாய் இருக்கும்:
  - நேர்மையாக தற்போது உள்ள சூழ்நிலையை ஆய்வு செய்யுங்கள்.
  - முன்னேற்றம் அடையக்கூடியவற்றை அங்கிகரித்து ஏற்றுக்கொள்ளுங்கள்.
  - முன்னேற்றமடைகிற காரியங்களில் ஜெபத்துடன் நேர்மறையான கவனம் செலுத்துங்கள்
  - புதிதாக உருவாக்கும் சிந்தனை கருத்துகளை அறிமுகப்படுத்துங்கள்
  - நேர்மறையான மாற்றங்களை ஆரம்பித்து வையுங்கள்
  - புதிய திருப்பங்களை உறுதி செய்து வலுவாக்குங்கள்.

- மாற்றங்கள் எப்பொழுதும் வலியை உண்டாக்க கூடியவைகளா?
  - மாற்றங்கள் நிலையானது. ஆனால் தவிர்க்க முடியாத வலியை உடையதல்ல. அநேக ஜனங்கள் பாதுகாப்பானவற்றிற்கும் தெரிந்தவற்றிற்கும் பழகியவற்றிற்கும் முன்னுரிமை அளிக்கிறார்கள்.
  - மாற்றங்கள் தெரியாதவற்றிலும், இன்னும் முயன்று பார்க்காத காரியங்களை நம்பச் செய்கிறது.
  - மாற்றங்கள் ஜனங்களை சார்ந்திருக்கச் செய்கிறது
  - மாற்றங்கள் ஆபத்துகான மூலக்கூறுகளை அறிமுகப்படுத்துகிறது
  - நேர்மறையான மாற்றங்களை அறிமுகப்படுத்துவது பொதுவாக நம்முடைய வேலைப்பளுவை அதிகரிக்கச் செய்கிறது

- மாற்றங்களின் வலியை நாம் எப்படி குறைப்பது?
    - மாற்றங்களின் பலன்களில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் உண்மையாக புரிந்துள்ளார்களா என்று உறுதி செய்து கொள்ளுவதின் மூலமாக
    - பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரோடும் சிந்திக்கிற மற்றும் திட்டமிடுகிற நிலைகளின் மூலமாய் கலந்துரையாடல் செய்வதின் மூலமாக
    - ''எண்ணித் துணிக கருமம்''. ஏற்படக்கூடிய விளைவுகளை பொறுப்புடன் கவனத்தில் கொள்ளுவதின் மூலமாக
    - ஒவ்வொருவரும் மாற்றத்தின் ஒருபகுதி என்பதை உணர முயற்சியுடன் உதவி செய்வதின் மூலமாக
    - மற்ற பொறுப்புள்ள நபர்களோடு மாற்றங்களின் விளைவுகளை ஒருங்கிணைத்து பெறுவதின் மூலமாக
    - மாற்றங்களின் விளைவுகளை கவனத்துடனும், நம்பிக்கையுடனும் ஏற்றுக்கொள்வதின் மூலமாக
    - மாற்றங்களில் சிறிய உருமாற்றங்கள் செய்வதற்கான வழிமுறைகளை உற்று நோக்குவதின் மூலமாக
    - மாற்றங்களின் விளைவுகளினால் ஏற்பட்ட முன்னேற்ற செயல்பாடுகளை குறித்து ஒவ்வொருவருக்கும் தொடர்ந்து தெரிவித்துக் கொண்டிருப்பதின் மூலமாக மாற்றங்களின் வலியை நாம் குறைக்கலாம்.